தென்னிந்தியத் திருச்சபை - கன்னியாகுமரிப்பேராயம்

# அருளுரைக் கையேடு

## 2014



வெளியீடு
தொடர்புத்துறை,
கன்னியாகுமரிப் பேராயம்

தன்னைச் சுரண்டிக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தார்''. நானும் சாம்பலும் ஒன்று தான் என்பதை வெளிப்படுத்தினார். அதே யோபு, தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன் (யோபு 42:2) என்றார். சாம்பலோடு இணைந்திருந்த யோபுவின் வாழ்வில் துயரங்கள் மாற்றப்பெற்று சிங்காரமும் களிப்பும் உண்டாயிற்று ''......... கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்'' (யோபு 42:10) ஜார்ஜ் முல்லர் மிகுந்த இறைபக்தியோடு ஊழியம் செய்து வந்தார். அவரது பராமரிப்பில் இருந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஒருநாள் காலை உணவு இல்லை. ஆனால் காலை ஜெபத்தில் முல்லர் விசுவாசத்தோடு, ''ஆண்டவரே நீர் சகலத்தையும் அறிபவர். நீர் இன்று தந்துள்ள காலை உணவிற்காக உமக்கு ஸ்தோத்திரம்'' என்று ஜெபித்தார். விடுதி கதவு தட்டப்பட்டது. ரொட்டிக் கடைக்காரர் ரொட்டிகளோடு நின்றார். சற்று நேரத்திற்கு பின்பு பால் வண்டிக்காரர் தனது வண்டி பழுதானதால் பால் அனைத்தையும் விடுதிக்கே கொடுத்தார். ஜார்ஜ் முல்லரின் விடுதியில் மட்டுமல்ல இப்புதிய ஆண்டில் நமது வாழ்விலும் துயரம் களிப்பாக மாற்றப்படும்

### 2. பாக்கிய வாழ்வு பெருகும். (மத் 5:11)
### (Flourishment in Blessed Life)

உலக பார்வையில் பாக்கிய வாழ்வு, செல்வமும் செழிப்பும் நிரம்பப் பெற்ற நிலை. ஆனால் இறைவனின் பார்வையில் அது நீதி செய்தல், சமாதானம் பண்ணுதல், துன்பம் ஏற்கும் நிலைக்கு ஒப்பானது. இதனைத் தான் இயேசுநாதர் மலைப்பொழிவின் (மத் 5: 1 12) திருவாக்கியங்களின் வழி குறிப்பிட்டுள்ளார். பரலோக ராஜ்யத்தின் வாழ்வு பெற ஆவியில் எளிமை தேவை, இறை ஆறுதல் பெற துயரம் ஏற்கவேண்டும், பூமியைச் சுதந்தரிக்க சாந்த குணம் தேவை, திருப்தி அடைய நீதியின் மேல் பசியும் தாகமும் அவசியம், இறை இரக்கம் பெற இரக்க குணம் வேண்டும், தேவனைத் தரிசிக்க இருதய சுத்தம் தேவை, தேவ புத்திரராக சமாதானம் பண்ண வேண்டும், பரலோக ராஜ்யம் சுதந்தரிக்க நீதி செய்து துன்பம் ஏற்க வேண்டும் என்று பாக்கிய வாழ்வு பெருகுவதற்கான படிநிலைகளை மிக அழகாக இறைமகனார் இயேசு குறிப்பிட்டுள்ளார். இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் நிந்தை அனுபவிப்பது மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாக்கியமாகும். ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது (பிலி 1:29) இது பவுலடியாரின் கூற்று. பாடனுபவிப்பது



**01-01-2014** *உடன்படிக்கை நாள் & புத்தாண்டு நாள்*

# புதிய உடன்படிக்கை
## A NEW COVENANT

எரே. 31 : 31-34 II கொரி. 2 : 14-17
திபா. 145 மத். 14 : 22-33

*''உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகிறேன்.''* தொநூ. 9 : 11

**இறைவேண்டல் :** நித்திய கடவுளே, அல்பாவும் ஓமேகாவுமானவரே உமது அருளும், அன்பும், ஆதரவும், இம்மட்டும் எங்களை நடத்தி இருக்கிறது. மற்றுமொரு வருடத்திற்குள் எங்களை கொண்டு வந்ததற்காக நன்றி செலுத்துகிறோம். எங்களை உமது அன்பின் உடன்படிக்கையால் புதுப்பித்து மறு உருவாக்கியருளும். உம்மோடு அன்பின் உடன்படிக்கையில் ஒவ்வொரு நாளும் வாழவும், அந்த அன்பை உடனிருப்போருக்கும், படைப்புகளுக்கும் வழங்கவும் அருள் புரிய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

வெள்ளப்பெருக்கு கடவுளின் மனதை மாற்றியது. இனி உலகை வெள்ளப்பெருக்கால் அழிக்கக்கூடாது என பிரகடனம் செய்தார். எனவே, எல்லா உயிரினங்களோடும் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். வானவில் உடன்படிக்கையின் சின்னமாக நிற்கின்றது. கடவுள் அழிவில்லாத விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் படைக்க விரும்புகிறார். ஆனால் மனிதன் வேறுபாடுகள் வாயிலாய் சமூகச் சீர்குலைவுகளை ஏற்படுத்துகிறான். கடவுள் இப்பணியில் எல்லாருடைய ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறார். அவர், உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகிறேன் என்கிறார். கடவுளே உடன்படிக்கையின் பிரதானியாகவும் படைப்பாளராகவும் இருக்கிறார். முந்தைய மனிதனுக்கு உடன்படிக்கையில் சம உரிமை வழங்கப்பட்டபோது மனிதன் அதில் தவறினான். ஆனால் இப்போதோ இரண்டாம் நிலையினராகிய மனிதர்கள் உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிய மட்டுமே முடியும். மனிதர்கள் உடன்படிக்கையை விட்டு அகன்றாலும், கடவுள் விலகுவதில்லை. திருப்பாடலாசிரியரின் 145-வது பாடல் கடவுளின் உடன்படிக்கையின் மக்களுக்கான அவருடைய ஏற்பாட்டை விவரிக்கிறது.

### 1. ஆண்டவர் அண்மையிலிருக்கிறார் : (The Lord is near)

(திபா. 145 : 1)

கடவுள் நம் அண்மையிலிருக்க இயேசு கிறிஸ்துவாக அவதரித்தார். இதையே தூய பவுல் ஏதென்சில், கடவுளுக்கு அஞ்சுகின்ற கிரேக்கர்களோடும், உணவுப் பிரியர்களோடும், தத்துவ மேதைகளோடும் உரையாடும்போது கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் வெகு தொலைவிலில்லை என்பதை உறுதி செய்தார் (திப. 17 : 27). மனிதர்களுக்கும் கடவுளுக்கும் இடையே காணப்பட்ட இடைவெளியை இயேசு கிறிஸ்து குறைத்தது மட்டுமல்லாமல் கடவுளை ஒவ்வொருவருக்கும் சொந்தமாக்கினார். சில வேளைகளில் நெருக்கடிகளிலும் கடினமான சூழ்நிலைகள் நம்மைச் சூழும்போதும் கடவுள் நம்மை விட்டுத் தொலைவிலிருக்கிறார் என்று எண்ணுகிறோம். ஆனால் அவர் நம் வாசற்கதவைத் தட்டி நமக்காகக் காத்திருப்பதை நாம் அவ்வேளையில் மறந்துவிடுகிறோம் 1அர. 19:4-இல் வல்லமை பொருந்திய இறைவாக்கினர் எலியா தான் ஒருவேளை இறக்க நேரிடும் என்றெண்ணி. ஆண்டவரே நான் வாழ்ந்தது போதும் என் உயிரை எடுத்துக்கொள்ளும் என்கிறார். இவ்வாண்டிலும் கூட நம் வாழ்வின் சவால்கள் அப்பேர்பட்ட ஒரு நிலைக்கு நம்மைத் தள்ள நேரிடலாம். ஆயினும் எலியாவுக்கு ஒரு குரல் வெளிப்பட்டது. எலியா, நீ இங்கே என்ன செய்கிறாய் ? கடவுளுடைய திட்டங்களையும், நோக்கங்களையும் எவ்வாறு செயல்படுத்துவது என்பதையும் காட்டுகிறார். எலியா வெளியே சென்று மலையின் மீது ஆண்டவருடைய சமூகத்திலே போய் நிற்க அறிவுறுத்தப்படுகிறார். அங்கே அவருக்கு பூமி அதிர்ச்சியும், பெருங்காற்றும், தீயும் உலகின் கொந்தளிப்பான நிகழ்வுகளுக்கு அடையாளங்களாகக் காண்பிக்கப்படுகிறது. பின்பு ஒரு மெல்லிய ஒலி எலியாவுக்கு கடவுளின் வழிகாட்டுதலையும் செயல்பாட்டையும் விளக்கியது.

நாம் கூப்பிடும்போது கடவுள் எப்போதும் நம் அருகிலிருக்கிறார். நவீனத் தொழில் நுட்பம் தொலை தொடர்பு சாதனங்கள் வாயிலாக வெகு தொலைவிலிருப்போரையும் அருகில் கொண்டு வந்து விடுகின்றது. ஆனால் அச்சாதனங்கள் இல்லாத பட்சத்தில் அவர்கள் அருகாமையில் இருப்பதில்லை. தொலைவில் தான் இருப்பார்கள். ஆனால் கடவுளுடைய நெருக்கம் மாறாதது. நம் கடவுள் நாம் எதிர்பார்ப்பது போல் செயல்படுவதில்லை, மாறாக நம் எண்ணங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் மேலாகச் செயல்படுகின்றவர்.





நிலையையும் கொண்டு வரும். இப்புதிய ஆண்டில் கர்த்தரிடமிருந்து புதிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள விரும்பி நம்மை அவர் திருக்கரங்களில் அர்பணித்துள்ள நாம் நம்மை திசை திருப்பும் உலகச் சலுகைகளுக்கு இடம் கொடாது இலக்கை நோக்கி நம் வாழ்வின் பயணத்தைத் தொடரத் தீர்மானிப்போம். இந்தத் தீர்மானத்தோடு இப்புத்தாண்டில் நம் ஆண்டவர் அருளும் மூன்று புதிய ஆசீர்வாதங்கள் எவை எனப் பார்ப்போம்.

### 1. துயரம் களிப்பாக மாற்றப்படும். (எசா. 61 : 3) (Sorrow transformed to Joy)

துயரங்களும் மனவேதனைகளும் மனித வாழ்வை இன்று பாழ்ப்படுத்தி வருகின்றன. காரணமில்லாமல் பகைக்கப்படும் நிலைகள். குழியில் விழச் செய்யும் கண்ணிகள் வைக்கப்படல், பொறாமை, எரிச்சல், பழிவாங்கல் போன்ற நிலைகளால் மனித வாழ்வு பல உபாதைகளுக்குள்ளும் துயரங்களுக்குள்ளும் சிக்கி அல்லலபடுகின்றது. துன்ப துயரங்களால் ஏற்படும் 'கவலை' நமதுவாழ்விலிருந்து பிரிக்க முடியாத நிலையில் பின்னிப் பிணைந்துள்ளது. எப்பொழுதும் கவலை, எதற்கும் கவலை என்று நமது வாழ்வு இன்று க+வலை என்ற மாபெரும் வலைக்குள் சிக்கி சின்னாபின்னமாகி வருகிறது. "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்" (Iபேதுரு 5:7). நாம் சந்திக்கும் விசாரங்களை விசாரிக்கும் ஆண்டவர் நம்மோடு உண்டு. ஏனென்றால் "மெய்யாகவே அவர் நமது பாடுகளை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்......" எசாயா 53:4. பலவேளைகளில் நாம் சஞ்சலத்தோடும், கலக்கத்தோடும், 'யார் எனக்கு உதவி செய்வார்கள்?' 'யாரோடு என் பாடுகளைப் பகிர முடியும்'? என்று புலம்புகின்றோம். I பேதுரு 2:24 சொல்லுகிறது "நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" என்கிறது. இப்புதிய ஆண்டின் ஆரம்பத்திலேயே நாம் பெற்றுக் கொள்ளும் வாக்குதத்தம், "சாம்பலுக்குப் பதிலாக சிங்காரம்" கிடைக்கும் என்பதாகும். சாம்பல் இழப்பையும் அந்த இழப்பினால் ஏற்படும் வேதனையையும் குறிக்கிறது. துயர நிலையில் இருப்பவர்கள் இரட்டுடுத்தி சாம்பலிலே உட்காருவது வழக்கம், யோபு பக்தன் தன் வாழ்வில் எல்லாவற்றையும் இழந்து வெறுமையாய் தனித்து இருந்த நிலை யோபு 2:8-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. "யோபு ஒரு ஓட்டை எடுத்துக் கொண்டு

**05-01-2014**

***கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு***

***ஐக்கியத் திருவிருந்து***

# புதிய ஆசீர்வாதம்

## NEW BLESSEDNESS

| | |
|---|---|
| எசா. 61 : 1-4 | IIகொரி. 6 : 3-10 |
| திபா. 103 : 1-5, 19-22 | மத். 5 : 1-12 |

*"நெடுங்காலமாய் இடிந்து கிடந்தவற்றை அவர்கள் கட்டி எழுப்புவார்கள்."*

*எசா. 61 : 4*

**இறைவேண்டல் :** எல்லா நன்மைகளும் இரக்கங்களும் மிகுந்த கடவுளே, உமது திருக்குமாரன் மூலமாக வாழ்வை உறுதிப்படுத்தும் விழுமியங்களைத் தந்தவரே! எங்கள் வாழ்க்கையில் இவ்விழுமியங்களைப் புசித்து, தடம் பதிக்கப் போதியும் எங்களைத் தூய்மைப்படுத்தி, உமது கருவிகளாக இரக்கத்தையும், நீதியையும், அமைதியையும் உணரவும் அருள்தாரும். கடவுளோடும், தூய ஆவியாரோடும் வீற்றிருந்து அரசாளுகிற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

புதிய ஆண்டு புத்தம் புது ஆசீர்வாதங்களால் நிரப்பப்பட நாம் விரும்புகிறோம். பழைய ஆண்டினிலே பெற்ற கசப்பான அனுபவங்கள் களையப்பட்டு புதிய நன்மைகளும் புதிய ஆசிகளும் நம் வாழ்வினிலே பெருக நாம் ஆசிக்கின்றோம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், புதிய ஆசீர்வாதங்களை இறைவன் ஒருவரே நமக்கு அருள முடியும். இப்புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற எதிர்பார்ப்போடு அடியெடுத்து வைத்துள்ள நமக்குப் புதிய ஆசீர்வாதங்களைத் தருவதாக நமதாண்டவர் திருமறையின் வாயிலாக உறுதிமொழிந்துள்ளார். நாம் சுதந்தரிக்கும் ஆசீர்வாதம் கர்த்தரிடமிருந்து வந்ததா அல்லது உலகம் சார்ந்து வந்ததா என்பதைக் கண்டறிய வேண்டும். சாலமேன் ஞானி நீதி 10:22ல் கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார் என்று கூறியுள்ளார். கர்த்தர் தரும் ஆசீர்வாதத்தில் வேதனை இருக்காது. அது நீதி நிறைந்ததாயும் மனநிறைவும் ஆறுதலும் சமாதானமும் நிறைந்ததாயும் இருக்கும், மட்டுமின்றி அது என்றென்றைக்கும் நிறைவானதாயும் இருக்கும். அதே வேளையில் உலக சார்ந்து பெறும் ஆசீர்வாதங்கள் ஆரம்பத்தில் இனிமையாக நமக்குத் தோன்றினாலும் பிற்பாடு வேதனைகளையும், மனபாரங்களையும் வாழ்வில் அமைதியற்ற





### 2. ஆண்டவர் காண்கிறார் : (The Lord Watches)

"ஆண்டவர் தம்மிடம் பற்றுக்கொள்ளும் அனைவரையும் பாதுகாக்கின்றார்." (திபா. 145 : 20)

"ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரை அவர்தம் தூதர் சூழ்ந்து நின்று காத்திடுவர்" (திபா. 34 : 7)

கடவுள் அவருடைய படைப்புகளை அவருடைய தூதர்களைக் கொண்டு பாதுகாவல் செய்கிறார். அப்பாதுகாவல் அவரை நம்புவோர் எல்லோருக்கும் கிடைக்கப்பெறுகின்றது. நாம் நன்மையும் தீமையும் முரணாக நிற்கும் சூழமைவுகளில் வாழ்கிறோம். தீமைகள் சக்தி வாய்ந்தனவாகவும், திட்டமிடப்பட்டவைகளாகவும் காணப்படுகின்றன. இது விசுவாசமுள்ளோரை "ஆண்டவரே, எத்தனை நாள் என்னை மறந்திருப்பீர்." (திபா. 13 : 1) என்று புலம்ப வைக்கிறது. யோபு பிசாசால் சோதிக்கப்பட அனுமதிக்கப்படுகிறார். பிசாசானவன் அவரை கசப்பான அனுபவங்களாலும், குடும்பத்தில் இழப்பை ஏற்படுத்தியும், (யோபு 19 : 25). மரண பரியந்தம் சோதித்தான். ஏனெனில் என் மீட்பர் வாழ்கின்றார் என்கின்ற அவருடைய விசுவாசம் கடவுள் அவர் மீது வைத்த பாதுகாவலைக் காணச் செய்தது. பிசாசானவன் உன் முன்பாக முறியடிக்கப்பட்டு போவான் என்றும் கடவுள் உறுதியளிக்கிறார். அவர்கள் ஒரு வழியாய் உனக்கு எதிராக வருவர், ஆனால் ஏழு வழியாய் உன் கண்களுக்கு முன்னே ஓடிப்போவர் (இச. 28 : 7).

இயேசு தம்முடைய சீடர்களோடு கலிலேயாக் கடலைக் கடக்கும் முன்பாக அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள் என்றார். ஒரு பெரும்புயல் அவர்களைத் தாக்கி படகை நிலைகுலையச் செய்தது. படகுக்குள் தண்ணீர் நிரம்ப ஆரம்பித்தது. ஆனால் ஆண்டவரோ படகின் பிற்பகுதியில் தலையணை வைத்து தூங்கிக் கொண்டிருக்கிறார். எந்த ஒரு நிகழ்வும் அவருடைய அனுமதியின்றியோ அல்லது அவரைத் தாண்டியோ நடைபெறுவதில்லை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. அவர் இரையாதே, அமைதியாயிரு என்ற போது காற்று அடங்கி அமைதி உண்டானது. கடவுள் நம்முடைய ஒவ்வொரு அசைவுகளையும் உற்று நோக்குகிறார். நீங்கள் வலப்புறமோ, இடப்புறமோ எப்பக்கம் சென்றாலும் இதுதான் வழி, இதில் நடந்து செல்லுங்கள் (எசா. 30 : 21) என்கிறார்.

ஆண்டவருடைய அதிசயங்களை நாம் காண நம் கண்கள் திறக்கப்பட வேண்டும். உம் திருச்சட்டத்தில் வியப்பானவற்றை நான் கண்டுணருமாறு என் கண்களைத் திறந்தருளும் (திபா. 119 : 18). இப்புத்தாண்டு நம்மைக் கண்காணிக்கின்ற கடவுளாலே அவருடைய அன்பைச் சார்ந்திருக்கும் ஆண்டாக அமையட்டும்.

### 3. ஆண்டவர் தாங்குகிறார் : (The Lord upholds)

"தடுக்கி விழும் யாவரையும் ஆண்டவர் தாங்குகின்றார்" (திபா. 145 : 14)

பின்னடைவுகளும் வீழ்ச்சிகளும் மனித வாழ்க்கையின் ஒரு பகுதி. அவை நிகழும்போது நாம் பிறருடைய உதவியை நாடுகிறோம். திருமறை, கடவுளே நம்முடைய ஒரே காப்பாளராகவும், தாங்குகின்றவராகவும் இருப்பதாகக் கூறுகின்றது. இச. 32 : 11-இல் கழுகு தன் கூட்டின்மேல் அசைந்தாடித் தன் குஞ்சுகளின்மேல் படர்ந்து அணைத்து சிறகுகளை விரித்து அவற்றைச் சுமந்து தன்னுடைய குஞ்சு தானாகப் பறக்கும் வரை அவைகளைப் பாதுகாக்கின்றது. தாய்ப்பறவை குஞ்சுப் பறவைகளைச் சுதந்தரமாகப் பறக்க வைப்பதற்குக் கூட்டைப் பிரித்து ஊக்கமளிக்கின்றது. குஞ்சுப்பறவைகள் பறப்பதற்கு திணறும் பட்சத்தில் தாய்ப்பறவை அவைகளுக்கு மேலாக வட்டமிட்டுக் கொண்டேயிருக்கும் குஞ்சுப் பறவைகள் கீழே விழ நேரிட்டால் அவைகளைத் தன் சிறகுகளால் தாங்கிப் பிடித்துக் காப்பாற்றும். குஞ்சுப் பறவைகள் தானாகப் பறக்கும் வரை இது தொடர்கிறது. மனிதர்களுக்கு ஓர் இலக்கு உண்டு. இலக்கை அடைவதற்கு முன்னர் வீழ்ச்சிகள் ஏற்படும். ஆனால் நம் வாழ்வின் சோதனைகளில் கலங்காது, ஆண்டவர் நம்மோடு தாய்க் கழுகைப் போன்று இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தில் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

1953-ல் Sir எட்மன்ட் ஹிலாரி-யும் அவருடைய நேபாளிய வழிகாட்டி டென்சிங் நார்கே-யும் எவரெஸ்ட் சிகரத்திலிருந்து இறங்கும்போது ஹிலாரி தன்னுடைய கால் பிடிமானத்தை இழந்தார். ஆனால் அவர் பின்னால் வந்து கொண்டிருந்த டென்சிங் அவருடைய கோடாரியைப் பனிக்கட்டியில் நட்டு வைத்ததினால் விபத்து தவிர்க்கப்பட்டது. 2014 - இல் பெரிய வீழ்ச்சியோ, சிறு வீழ்ச்சியோ, நமக்காக இவ்வாண்டை ஆயத்தப்படுத்தின ஆண்டவர் நம் பின் நின்று நம்மைத் தாங்கி உதவி செய்வார் என்பதில் உறுதியாய் இருக்க வேண்டும்.

### 4. ஆண்டவர் நல்லவர் : (The Lord is Good)

"ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர்." (திபா. 145 : 9)

மனிதர்கள் ஒருவேளை நடத்தைகளிலும், குணத்திலும், மனப்பான்மையிலும், ஒழுக்கத்திலும், உறவுகளிலும், வேறுபட்டவர்களாக இருக்கலாம். தொநூ. 1 : 31 "கடவுள் தாம் உருவாக்கின அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன." என்று கூறுகிறது. கடவுள் நன்மை செய்பவராகவே இருக்கிறார். 1திமொ. 4 : 4-இல் தூய பவுலடிகளார் "கடவுள் படைத்தது அனைத்தும் நல்லதே" என்றும் திபா. 34 : 8 இல்





திருப்பாடலாசிரியர் ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள் என்றும் கூறுகின்றார். இயேசு கிறிஸ்து மத். 5:45-இல் ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார் என்றும் கூறுகிறார். உலகில் நன்மையும் தீமையும் இரண்டறக் கலந்து காணக்கிடக்கின்றன. மனிதர்களாகிய நாம் நன்மை செய்கின்ற ஆண்டவரில் சார்ந்திருந்து நன்மை செய்ய வேண்டும். நன்மை செய்பவர்கள் கடவுளின் அருள் மாரியையும், கதிரொளியையும் பெற்று அதைப் பகிர்ந்தளித்து ஆனந்தம் கொள்கின்றனர். கதிரொளியும், மழையும் வாழ்வாதாரங்களாகத் திகழ்கின்றன. கதிரொளி ஒளிச்சேர்க்கை (Photo-synthesis - கதிரவனின் ஒளியில் செடிகள் தங்களுக்குத் தேவையான கரிநீரகியை (கார்போ ஹைட்ரேட்) உண்டாக்கிக் கொள்ளும் முறை) என்கின்ற முறைக்கு இன்றியமையாததாக இருக்கின்றது. இம்முறையில் Chlorophyll (இலைத் தண்டுகளுக்குப் பசுமையூட்டும் பொருள்) சூரியக் கதிர்களை உள்ளிழுக்கிறது. இந்த முறை செடி, கொடி தாவரங்களைப் பச்சையாக வைப்பதோடு, வேருக்கு போஷாக்கும் அளிக்கிறது. மரம், செடிகள் அதன் வேரில் தண்ணீரைச் சேமித்து, பிறரின் தாகத்தையும் போக்குகின்றது. நல்லோர் மரங்களை நட்டு, உரமிட்டு, தண்ணீர் பாய்ச்சிப் பாதுகாக்கின்றனர். ஆனால் தீயோரோ அவைகளை அழிக்கின்றனர். நம்மை இவ்வாண்டில் ஐ.நா. சபையின் நோக்கமான International year of small Islands Developing States என்ற நோக்கத்துடன் வாழ அர்ப்பணித்து நிற்போம்.

தென்னிந்தியத் திருச்சபை 2014 - ஆம் ஆண்டை "நீதியின் இறைவா, உமது அமைதியைத் தாரும்" என்ற மையப்பொருளோடு கொண்டாடுகின்றது.

இயேசு கிறிஸ்து கூறிய காய்க்காத அத்திமர உவமையில், தொழிலாளி சொன்னதாவது ஐயா, இந்த ஆண்டும் இதை விட்டு வையும், நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருபோடுவேன் என்கிறார்.

நன்மை செய்கின்ற ஆண்டவருக்கு ஏமாற்றம் அளிக்காது காணப்படுவோம். நம்முடைய நன்மைகளால் கடவுள் மகிழ்ந்திருப்பாராக.

**பிரதமப் பேராயர்**
**&**
**பேராயர்**

### 1) அன்பு நிறைந்த வாழ்வு (உரோ 13:9)

அன்பு தான் இந்த உலகிலேயே மிகச் சிறந்த பண்பு அதைவிடச் சிறந்தது வேறெதுவுமில்லை என்ற கருத்தமைவுடைய தூய பவுலார் அன்பின் பரிமாணங்களை 1 கொரி 13-ல் கோடிட்டுக் காட்டும்போது, அன்பு பொறுமையுள்ளது. நன்மை செய்யும், பொறாமைப்படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்பு அடையாது.... எனக் கூறி வரிசைப்படுத்துகிறார். இந்த அன்புக்கு இலக்கணம் கிறிஸ்துதான். மறையுரையாளர் ஒருவர் கூறும்போது,

அன்பே கிறிஸ்துவின் நாதம்
அன்பே கிறிஸ்தவ வேதம்
அன்பிற்கு இல்லை தாழ்வு
அன்பிற்கு இல்லை வாழ்வு.

இவ்வுண்மையை உரோமைத் திருச்சபையாரும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற உணர்வோடு தூய பவுலார் இயேசுகிறிஸ்துவைப் போலவே உரோ 13:9-ல் உன் மீது அன்பு கூர்வதுபோல், உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என ஆலோசனை வழங்குகிறார். மேலும் எல்லா அறிவுரைகளும் அறவுரைகளும் அன்புக்கட்டளைகளில் அடங்கி இருக்கிறது என்றும், அன்பே அனைத்துக் கட்டளைகளுக்கும் தலையாயது, அன்பே சமூக உறவிற்கான ஆற்றல் எனவே உங்கள் அன்பு கள்ளமற்றதாய் இருப்பதாக என அத்திருச்சபையாருக்கு அறிவுரை வழங்கினார். இன்றைய நற்செய்திப் பாடத்தில் இயேசுவைப் பின்பற்றவிரும்பிய செல்வரான இளைஞரைப் பார்த்து இயேசு, உன் மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக (மத். 19:19) எனக் கூறினார். இப்படி அன்பு கூர்ந்தால் தான் நாம் கிறிஸ்துவின் சீடர்கள் என்றும் கிறிஸ்துவினால் செறிவூட்டபட்ட வாழ்வு வாழ்கிறோம் என்றும் எல்லாரும் அறிவர். அன்பின் சிகரமாய் வாழ்ந்து புகழின் உச்சிக்குச் சென்றவர் அன்னை தெரசா. அவர்கள் தன்னோடு இணைந்து நற்செயலைச் செய்துவந்தவர்களிடம்,

"It is not how much we do, but how
much love we put into what we do"-

நாம் எந்த அளவு அதிகமான செயல்களைச் செய்கிறோம் என்பது முக்கியமல்ல மாறாக, நாம் செய்யும் செயல்களை எந்த அளவு அன்புடன் செய்கிறோம் என்பதுதான் முக்கியம் என அடிக்கடி கூறினார்கள். கிறிஸ்துவினால் செறிவூட்டப்பட்ட வாழ்வு அன்பு நிறைந்த வாழ்வாக இருக்கும், அப்படிப் பட்ட அன்புள்ள இறைமக்கள் தான் இந்த இகத்திற்கு உப்பாகவும், வெளிச்சமாகவும் மலைமீதுள்ள பட்டணமாகவும் வாழ முடியும்.





தற்செயலாக ஏற்படும் ஒரு அனுபவமாக உலகப் பார்வையில் தோன்றலாம், ஆனால், திருமறையோ அவ்வனுபவம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு அழைப்பு மட்டுமின்றி பாக்கியமான அனுபவம் என்று கூறுகிறது. அருள்திரு V.D. சகாயம் அவர்களின் பாக்கிய வாழ்வின் அனுபவ வரிகள் இவ்வாறு அமைகின்றது.

"ஆனந்தமே பரமானந்தமே யேசு
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே
துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லிமுடியாத ஆறுதல் கிருபையைத்
துன்பத்தினூடே யனுப்பிடுவார்"

எசாயா 53-ஆம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்து முன்னறிவிக்கப்பட்டுள்ளது. பாக்கிய வாழ்விற்கு கிறிஸ்தேசுவின் வாழ்வு முன் மாதிரி, அவர் உண்மைக்கும், நீதிக்கும், மீட்பிற்குமாகப் பாடுகளைப் பொறுமையாய் சகித்தார். உலக மக்களின் மீட்பிற்காக மனிதர்களால் புறக்கணிக்கப்பட்ட சிலுவையைத் தெரிந்தெடுத்துப் பாடுகளைப் பொறுமையாய் சகித்த இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பாக்கிய வாழ்வு பெற மாதிரியாய்ப் பின்பற்றுவோம். நாசரேத்தில் அருள்திரு ஜெபமணி குருவானவராக திருப்பணி செய்து வந்தார். பெயருக்கேற்றார் போல் ஜெபவீரராய், பரிசுத்தவானாய், நற்சாட்சி பெற்றவராய், பாக்கிய வாழ்விற்கு சான்றாய் மட்டுமின்றி தான் பிரசங்கிப்பதை அப்படியே செயல்படுத்தும் செயல்வீரராய் வாழ்ந்தார். மூன்று வருடங்கள் தொடர்ந்து மழை இல்லாது போகவே குளங்கள் வறண்டு பஞ்சம் தலைவிரித்தாடியது, ஒரு ஞாயிறுக்கிழமை அறிவிப்பு வேளையில் குருவானவர் அன்று மாலை ஆலயத்திற்கு முன்பு சபையோர் கூடி வரும்படியும் அதோடு பாதுகாப்பிற்காக குடையும், அரிக்கன் விளக்கும் கொண்டு வரவும் கூறினார். மாலையில் மக்கள் கூடியதும் வறண்டு போயிருந்த குளத்தில் அனைவரும் முழங்காற்படியிட்டு ஒருமித்து ஜெபித்தனர். வாரும், எமது வறுமை நீக்க வாரும் தேவனே மழை தாரும் ஜீவனே என்ற பாடலை மீண்டும் மீண்டும் பாடினர். இரவு 9 மணிக்கு மழை கொட்ட ஆரம்பித்தது. ஸ்தோத்திர ஜெபத்தோடு மக்கள் வீடு திரும்பினர். ஜெபமணி ஐயா போன்று தேவ பயத்தோடு வாழ்பவர் பாக்கிய வாழ்வு பெறுவர்.

### 3. நன்மையினால் திருப்தி பெறுவோம் (சங். 103 : 5)
### (Cententment through goodness)

"நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்........"

‘இறைவன் கொடுப்பதை எவரும் தடுக்க முடியாது, இறைவன் தடுப்பதை எவரும் கொடுக்க முடியாது’. இது நம்முடைய கிறிஸ்தவ வாழ்வியலில் நாம் கண்டு கொள்ளும் உண்மை. கர்த்தரை நம்பினோர்க்கு அவர் அருளும் ஆசீர்வாதங்களை எவரும் தடுக்கவே முடியாது. பல வேளைகளில் நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய வேலை வாய்ப்பு அல்லது பணி உயர்வு இதனை அடுத்தவர் பறித்துக் கொண்டது போன்று நமக்குத் தோன்றலாம். ஆனால் அப்படி மாறி போனாலும் அது இறை சித்தத்திற்கு உட்பட்டதே என்பதை நாம் மறந்து போக வேண்டாம். சங்கீதம் 103இல் தாவீதரசன் கர்த்தரிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஆசிகளுக்காய் முழு உள்ளத்தோடு துதி ஸ்தோத்திரம் செலுத்துகிறார். தாவீதரசன் கர்த்தரிடமிருந்து பெற்ற நன்மைகள் ஏராளம் ஏராளம். தகப்பன் ஈசாயினால் இளையவன் இடையனாய் பணி செய்யவே தகுதியானவன் என்று தாவீது கருதப்பட்டார். (I சாமு. 16:11). கோலியாத் என்ற இராட்சசனை இறை பெலத்தால் வீழ்த்தி வெற்றி பெற்று நாட்டுமக்களால் புகழப்பட்டதும், சவுலால் பகைக்கப்பட்டார் (I சாமு. 18:10,11; 19: 9,10). இப்படி பல பாடுகளையும சவால்களையும் அனுபவித்தாலும் ஒரு சாதாரண ஆடு மேய்ப்பவன் என்ற நிலையிலிருந்து இஸ்ரவேலின் இரண்டாம் அரசனாய் உயர்த்தப்பட்டதுமின்றி தனது அரசியல் அறிவால் இஸ்ரவேல் முழுவதையும் ஒருங்கிணைத்தார். கர்த்தரை நம்பினதால் தான் பெற்ற நன்மைகளை எண்ணி தாவீதால், கர்த்தர் நன்மையானதையே தருவார் (சங் 85:12) என அறுதியிட்டுச் சொல்ல முடிந்தது. திருப்தியற்ற இவ்வுலகில் நாம் கர்த்தர் அருளும் நன்மையினால் மட்டுமே திருப்தி பெற முடியும் (எரே. 31:14). அமெரிக்காவில் 1880 ஜீன் 27ம் நாள் ஹெலன் கெல்லர் பிறந்தார். 19மாத குழந்தையாக இருந்த போது கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டு பார்வை, பேசும் சக்தி மற்றும் கேட்கும் திறனை இழந்தார். வாழ்க்கை பெரிய கேள்விக் குறியான போது பார்வையற்றோர் பள்ளியில் அன்னி சலிவன் என்ற சிறப்பு ஆசிரியையின் உதட்டசைவைக் கையினால் தொட்டு உணர்ந்து கற்றுக் கொண்டார். 1968 ஜீன் 1ஆம் நாள் இந்த இருபதாம் நூற்றாண்டு சாதனைப் பெண்மணி 88-ஆம் வயதில் தனது வாழ்வில் தான் பெற்றது எல்லாம் நன்மைக்கே என்ற உணர்வுடன் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்தார்.

இப்புதிய ஆண்டில் துயரம் களிப்பாக மாற்றப்படும், பாக்கிய வாழ்வு பெருகும், நன்மையினால் திருப்தி பெறுவோம் என்ற நம்பிக்கையோடு வாழ்வின் பயணத்தைத் தொடருவோம்.

அருள்திரு. **பா. சேம் பிளஸிங்**





அகிலம் போற்றும் அளவிற்கு அவரது வாழ்வு கிறிஸ்துவினால் செறிவூட்டப்பட்ட வாழ்வாக அவரில் வெளிப்பட்டது. இங்ஙனம் கிறிஸ்துவினால் வாழ்வு செறிவூட்டபடுதல் அவசியம் என உணர்ந்த தூய பவுலார் உரோமைக்கு எழுதிய திருமுகத்தில் ஓர் அவசர வேண்டுகோளை (An urgent appeal) வைக்கிறார். உரோமை 13-ல் பிற மக்கள் நடுவில் கடவுளின் திருப்பெயருக்கு இகழ்ச்சி ஏற்படாமலிருக்கவும், தூக்கத்தை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்று என்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய் சீராய் நடந்து இயேசுகிறிஸ்துவை அணிந்து கொள்ள அறிவுறுத்தினார். இவ்வாண்டின் ஆரம்பத்தில் வைக்கப்பட்டிருக்கும் நாம், வாழ்க்கை என்பதற்கு ஒரு வரைபடத்தைச் சபைஉரையாளர் வரைவதை பார்க்கும்போது, மனிதனுடைய வாழ்நாள் குறுகியது. பயனற்றது, நிழலைப்போல மறைவது, அதில் நமக்கு நலமானது எது என்பதை யாரால் அறியக் கூடும்? தம் மறைவிற்குப் பிறகு உலகில் என்ன நடக்கும் என்பதை யாரால் தெரிந்து கொள்ள இயலும்? (ச.உரை.6:12) என அறிய முடிகிறது. இவ்வுண்மையின் அடிப்படையில் வாழ்க்கை என்ற மிகக் குறுகியப் பயணத்தில், இவ்வாழ்வு கடவுளால் அருளப்பட்டிருக்கும் அருட்கொடை என்கிற உணர்வோடு வாழ்வில் கிறிஸ்துவின் சாயலை அணிந்து வாழ கடவுள் நம்மை அழைக்கிறார்.

இவ்வாண்டில் சமுதாயத்தில் வாழும் சக மக்கள், பிறசமய நண்பர்கள் கிறிஸ்தவர்களாகிய நம்மிடத்தில் கிறிஸ்துவினால் செறிவூட்டபட்ட வாழ்வு வெளிப்படும் என எதிர்பார்க்கிறார்கள். ஆனால் பிற சமய நண்பர்களிடமிருந்து இத்தகைய பண்பைச் சமுதாயம் எதிர்பார்ப்பது இல்லை. எனவே பவுலார் கூறுவதுபோல, “உறக்கத்தினின்று விழித்தெழும் நேரம் ஏற்கெனவே வந்துவிட்டது... இரவு முடியப்போகிறது. பகல் நெருங்கி உள்ளது. ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்து கொள்வோமாக” என்னும் (உரோ 13:11,12) பேருண்மையின் அடிப்படையிலே, நமது சமுதாயத்தில் இருக்கும் இம்மணிநேர அவசரத் தேவையை அறிந்து கிறிஸ்துவினால் செறிவூட்டப்பட்ட வாழ்வு வாழ நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டியது கட்டாயமே. ஆகவே, கிறிஸ்துவினால் செறிவூட்டபட்ட வாழ்வு எத்தகையது எனத் தியானித்து அத்தகைய வாழ்வு வாழ முயற்சி செய்வோமாக.

**12-01-2014**

***திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் முதல் ஞாயிறு***

# கிறிஸ்துவினால் வாழ்வு செறிவூட்டப்படுதல்

**ENRICHMENT OF LIFE THROUGH CHRIST**

| | |
|---|---|
| ச.உரை. 6 : 1-12 | உரோ. 13 : 8-14 |
| திபா. 63 : 1-8 | மத். 19 : 16-26 |

***"....இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள்."*** *உரோ. 13 : 14*

**இறைவேண்டல் : கிருபையுள்ள கடவுளே, இரக்கமுடன் உம் கையை நீட்டி எங்களுக்கு உதவி செய்து பெலப்படுத்தும். எங்கள் விசுவாசப் பெலவீனங்களையும், முடிவெடுப்பதிலுள்ள பெலவீனங்களையும், எங்கள் யுக்தியிலுள்ள பெலவீனங்களையும், உண்மையோடிருப்பதிலுள்ள பெலவீனங்களையும், அன்பு கூருவதிலுள்ள பெலவீனங்களையும் பார்த்து, தேவையான கிருபையைத் தந்து எங்களை செறிவூட்டும் உமது வல்லமை மட்டுமே எங்கள் வறிய நிலையைத் பூரணமாக்கும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம், ஆமென்.**

புனித அகஸ்டின் மாபெரும் பாவியாக வாழ்ந்த காலம் அது. திருவிவிலியத்தின் மீது ஆழ்ந்த பற்றுக்கொண்டிருந்த தனது நண்பன் ஆலிபியஸ் என்பவருடன் அகஸ்டின் நெருங்கிய உறவுகொண்டிருந்தார். இருப்பினும் திருவிவிலியத்தைப் பற்றிய அவரது நண்பரின் கூற்றை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒரு நாள் தன் நண்பரோடு உரையாடிக்கொண்டிருந்த அவர், தன் நண்பரை விட்டுப் பிரிந்து சென்று ஓர் அத்திமரத்தடியில் தனியாக அமர்ந்து அழுது கொண்டிருந்தார். அவர் அன்று மனம் திரும்ப விரும்பிய ஒரு பாவி. அப்பொழுது திடீரென ஒரு குரலொலியைக் கேட்டார். அக்குரல் எடுத்துப்படி, எடுத்துப்படி என்றது. அக்குரல் அகஸ்டினின் இதயத்தைத் தொட்டது. உடனே திருவிவிலியத்தை எடுத்துப் படித்தார். திருவிவிலியத்தைத் திறந்ததும் அவருடைய கண்களில் பட்ட திருவாக்கியங்கள்; 'பகலில் நடப்பதுபோல மதிப்போடு நடந்துகொள்வோமாக, களியாட்டம், குடிவெறி, கூடா ஒழுக்கம், காமவெறி, சண்டை சச்சரவு ஆகியவற்றைத் தவிர்ப்போமாக; தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள் (உரோ.13:13,14) என்பதாகும். அந்நாள் மட்டும் சிற்றின்பத்திலும், மனிக்கேயம் என்ற தப்பறையான கொள்கையிலும் ஊறிப்போயிருந்த அகஸ்டினின் வாழ்வு சீர்பெற்றது. பின்பு



**06-01-2014**

***கீழ்த்திசை ஞானிகளின் வருகைக் காலம்***

***திருத்தோற்றத் திருநாள்***

# கிறிஸ்துவின் திருவெளிப்பாடு

**MANIFESTATION OF CHRIST**

| | |
|---|---|
| எசா. 45 : 22 - 25 | தி.வெ 21:22 - 27 |
| திபா. 67 | மத் 2: 1 - 12 |

***"...இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார்."***

*மத். 2 : 6*

**இறைவேண்டல் : தேசங்களின் ஆண்டவரே, நாங்கள் உதிக்கிற நட்சத்திரத்தைப் போன்ற உம்முடைய மகிமையின் ஒளியைக் கண்டோம். மனித ரூபமடைந்த வார்த்தையின் ஒளி, இருளை ஊடுருவிச் சென்று பூமியை மூடுகிறது; நீதி அமைதிக்கான சமிக்ஞையையும் காட்டுகிறது. இந்த ஒளி எங்கள் வாழ்க்கையை ஒளியூட்டி, எல்லா மக்களும் உம் ஒளியின் வழியில் நடக்க போதிக்கட்டும். இதை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம், ஆமென்.**

விடுமுறை திருமறைப் பள்ளி ஒன்றில் இயக்குநர்கள் இணைந்து பிள்ளைகளை நோக்கி கேள்வி ஒன்றைத் தொடுத்தனர். உங்களுக்கு கிறிஸ்து யார்? என்பது தான் கேள்வி. ஒரு வெள்ளைத் தாளில் பதிலை எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டனர். பதில்களைப் பார்த்த இயக்குநர்களுக்கோ மிக்க மகிழ்ச்சி. கிறிஸ்துவை மீட்பர், உலகை ஆளுபவர், உன்னத வாழ்வு தருபவர் என்றெல்லாம் எழுதியிருந்தனர். தாளில் எழுதி இருந்த வார்த்தை உள்ளத்தைக் கவர்ந்தது. இயேசு தந்தையற்ற எனக்குத் தேவையைச் சந்தித்து தந்தையாய் இருப்பவர். இவ்வரிகள் இயக்குநரின் மனதை மட்டுமல்ல இன்று நம் உள்ளத்தையும் தொடுகின்றது அல்லவா!

கிறிஸ்து இயேசு உலக மீட்பராய், உன்னத தெய்வமாய், நம்மோடு வாழ்பவராய், மண்ணின் மைந்தராய் உலகில் வந்தார். அவர் பால் நம் புரிந்து கொள்ளல் எப்படி உள்ளது. இறைத் தன்மை இன்றி இயேசுவைப் புரிவதும் மனித தன்மை உணராது கிறிஸ்துவைச் சந்திப்பதும் முழுமையான புரிந்து கொள்ளுதலுக்கு வழிவகை செய்யாது. எனவே கிறிஸ்துவின் திரு வெளிப்பாட்டை உணர்ந்து சிந்திப்போம்!

### 1. மீட்கும் மீட்பர் : எசா 45 : 22

பூமியின் எல்லை எங்கும் உள்ளவர்களே என்னை நோக்கிப் பாருங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். இரட்சிக்கப் படுவதற்கு இரட்சகரை நோக்கிப் பார்க்க வேண்டும். அந்த இரட்சகர் யார்? மத். 1:21-ல் மீட்பராக இயேசுவாக, தமது ஜனங்களின் பாவங்களை நீக்குபவராகப் பிறந்தவர்.

இயேசு அருளும் மீட்பு தனிமனித மீட்பு மட்டுமல்ல அது இல்லத்தானாரயும் இணைக்குமென்று லூக். 19:9 இயேசு சகேயுவை நோக்கி இந்த வீட்டிற்கு மீட்பு வந்தது என்று கூறுகிறார். இங்கே சகேயு மட்டுமல்ல அவரைச் சார்ந்தவர்களும் மீட்கப்படுகின்றனர்.

உரோ. 1 : 6-ல் விசுவாசத்தினால் மீட்பு சுட்டிக்காட்டப்படுகிறது. கிறிஸ்துவை இரட்சகராகப் புரிந்து கொண்டு விசுவாசித்து மீட்பு பெறவேண்டும். எனவே பிலிப்பியர் 2 : 12-ல் காண்கிறபடி அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் இரட்சிப்பு நிறைவேற நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவை திருத்தூர் பணிகள் 4:12-ல் காண்கிறபடியே ஒரே இரட்சகராக தம்மை வெளிப்படுத்தினார் என்பதை உணர்ந்து புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

### 2. வார்த்தையில் வல்லமையானவர் : எசா. 45 : 23

"இந்த நீதியான வார்த்தை என் வாயில் இருந்து புறப்பட்டது. இது மாறுவதில்லை" வாக்கு மாறா வல்ல தேவன் வார்த்தையில் வல்லமையுள்ளவர். யோவான் 1:1-ல் ஆதியில் வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. வார்த்தையானவர் வல்லமையாய் வெளிப்பட்டார்.

மத். 7:24-ல் இறைஇயேசுவின் வார்த்தையைக் கேட்டு செய்கிறவர்கள் கன்மலையின் மீது வீட்டைக் கட்டிய மனிதர்களுக்கு ஒப்பிடப்படுகிறார். மத். 7 : 28-ல் இயேசுவின் போதனையில் இருந்த வார்த்தையின் அதிகாரத்தைக் காணமுடிகிறது. இதைக் கேள்விப்பட்ட நூற்றுக்கதிபதி மத். 8:8-ல் ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்று கூறுகிறார். மத். 8 : 16-ல் கிறிஸ்துவின் வார்த்தை பிணியாளிகளைச் சுகப்படுத்தியது, பிசாசுகளைத் துரத்தியது எனக் காண்கிறோம். லூக். 5 : 5-ல் இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்த சீடர்கள் வலைகிழிய மீன்களைப் பிடித்தார்கள். இயேசுவின் வார்த்தையின் வல்லமையை உணர்வோம்.





### 3. மாட்சிமிகு மன்னர் மத். 2 : 2

யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிறிஸ்துவின் திரு வெளிப்பாடு நட்சத்திரச் செய்தியினூடாய் மன்னராகப் புரிந்து கொள்ளப்பட்டது. இது மத். 2 : 6-ல் காண்கிறபடி பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனம் பெத்லகேமே யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல இஸ்ரயேலை ஆளும் பிரபு உன்னிடம் தோன்றுவார்.

குருத்தோலை பவனியின் போது எருசலேமுக்குள் நுழையும் இயேசுநாதர் சாந்தகுணமுள்ள ராஜாவாக சுட்டிக்காட்ட படுவதை மத். 21 : 4-ல் காண்கிறோம்.

### 4. நித்திய ஒளியானவர் : வெளி. 21 : 23

தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது. ஆட்டுக் குட்டியானவரே அதற்கு விளக்கு. கிறிஸ்து விளக்குக்கும் வெளிச்சத்துக்கும் ஒப்புமைப்படுத்தப்படுகிறார். கிறிஸ்துவின் பிறப்பு குறித்து சிமியோன் லூக். 2:30ல் கூறும் போது புற ஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளி என்கிறார். யோவான் நற்செய்தியாளர் கூறும்போது 1:4-ல் கிறிஸ்துவுக்குள் இருந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருந்தது அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது என்கிறார்.

அருள் நாதர் இயேசு தம்மைக் குறித்து வெளிப்படுத்தும் போது யோவான் 8:12-ல் நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன் என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பானென்கிறார். இந்த ஒளி அப். 9:3-ல் சவுலைச் சந்தித்து மாற்றுகிறது. எனவே Iபேதுரு 2:9-ல் கூறியபடி ஒளியினிடத்தில் அழைக்கப்படுகிறோம். யோவான் 1:5, 1:7 இவைகளின்படி ஒளியாயிருக்கிற கிறிஸ்துவின் திருவெளிப்பாட்டை உணர்ந்து நடந்து மகிழ்வோம்.

கிறிஸ்துவின் திருவெளிப்பாடு திருமறை மூலமாகவும், திருத்தொண்டர் மூலமாகவும், அருட்பணியாளர் மூலமாகவும் பல்வேறு சூழல்களில் புரிந்து கொள்ளப்பட்டு நமக்கு அறிவிக்கப்பட்டாலும், நாம் கிறிஸ்துவை நம்முடைய வாழ்வில் எப்படி புரிந்து கொண்டிருக்கிறோம், தெரிந்து கொண்டிருக்கிறோம், உணர்ந்து கொண்டிருக்கிறோம். எப்படி வெளிப்படுத்துகிறோம்? சிந்திப்போம், செயல்படுவோம்.

திரு. **N. ஜெசின்**

முன்னேற நம்மை நாமே ஒப்படைப்பது ஏற்புடையதாகும். இத்தகைய கருத்தினில் கடவுள் நம்மை எவ்வாறு ஒன்றிக்கிறார் என்பதையும் சிந்திப்போம்.

### 1. அழுக்கினை அகற்றி ஒன்றிக்கிறார் (எசே. 36 : 25)

நான் தூய நீரை உங்கள் மேல் தெளிப்பேன் நீங்கள் உங்கள் எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மையாவீர்கள்.

கடவுள் மானுடத்தோடு கொண்டுள்ள ஒருமைப்பாட்டிற்கும், மானுடம் தன்னிலும், பிறபடைப்புகளிலும் கொண்டுள்ள ஒருமைப்பாட்டிற்கும் ஆதாரமாக இருப்பது கடவுள் மானுடத்தோடு கொண்டுள்ள உடன்படிக்கையின் உறவேயாகும். ஆகவே தான் இஸ்ரயேலர் உறவின் ஒன்றிப்பிலிருந்து விலகி சிலை வழிபாட்டில் இணைத்து தங்களைத் தாங்களே தீட்டாக்கிக் கொண்டாலும், கடவுள் அவர்களின் பின் வாங்குதலை மறந்து, மன்னித்து, அவர்களைப் புத்தாக்கம் செய்து, வாகுறுதிகளைக் கொடுத்து மீண்டும் ஒருமைப்பாட்டின் பிணைப்பில் செயல்பட ஆக்கம் வழங்குகிறார். கடவுள் எவரையும் இழக்க விரும்பாதவர். ஆகவே தான் இயேசு கிறிஸ்துவைத் தந்து அன்பின் ஒன்றிணைப்பில் மானுடத்தை வலுப்படுத்தியிருக்கிறார் (யோவா 3 : 16). அனைத்திற்கும் ஆதாரமான கடவுள் அமைப்பு முறையினில் ஏற்படும் உட்குறைகளைக் களைந்து அன்பு மட்டுமே ஆளுகை செய்ய வேண்டுமென்ற அழைப்பையும் திருமைந்தர் இறைவேண்டலின் வழியாக கற்றுத் தருகிறார் (யோவா 17 21). பவுலார் ஒன்றிப்புக்கு எதிரானவை உளனியல்பின் செயல்கள் எனக் குறிப்பிட்டு (கலா. 5: 19 21) அவைகள் களையப்பட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறார். மேலும் இப்படிப்பட்டவர்கள் ஒருமைப்பாட்டின் அடையாளமான இறையாட்சிக்குரியவரல்ல என்றும் கூறுகிறார். ஒருமைப்பாட்டுக்கு எதிரான ஊனியல்பின் செயல்கள் எவையெனக் கண்டறியப்பட்டு அவைகள் இயேசு கிறிஸ்துவின் உதிரத்தால் கழுவப்படவேண்டும். அப்படியெனில் மட்டுமே இறைத்திட்டத்தினை நிறைவேற்ற பயன்படுத்தப்படும் ஊடகங்களாக நாம் திருநிலைப்படுத்தப்படுவோம். ஆகவே அழுக்கினை அகற்ற அறிக்கை செய்வதோடு (லூக் 15: 18, 21) தவறிய நிலைகளிலிருந்து திரும்பி திருந்தி உயிராற்றலோடு ஒப்படைப்போம் (உரோ 12:1).

### 2. அருட்பணி வழியாக ஒன்றிக்கிறார் திப. 16 : 14-15





### 2. அப்பட்டமான வாழ்வு (உரோ.13:12,13)

ஒவ்வொரு மனிதனின் வாழ்வில் காணப்படும் இரண்டு பகுதிகளிலும் அதாவது a) Public life - பொதுவாழ்க்கையிலும் b) Private life - தனி வாழ்க்கையிலும் ஒளிவுமறைவில்லாதவர்களாக இருப்பதை கடவுள் விரும்புகிறார். எனவே தான் கடவுள் இஸ்ரயேலரை எசாயா இறைவாக்கினர் வழியாக எச்சரிக்கும்போது, "ஆண்டவரிடமிருந்து தங்கள் திட்டங்களை மனத்தின் ஆழங்களில் மறைத்துக்கொண்டு, தங்கள் செயல்களை இருளில் செய்து, நம்மை எவர் காணப்போகின்றார்? நம்மை எவர் அறியப் போகின்றார்? எனச் சொல்வோருக்கு ஐயோ கேடு!" (எசா 29:50) என அவர்களது சீர்கேட்டை எடுத்துரைக்கிறார். ஆனால் தூய பவுல் தனது வாழ்வின் உண்மை நிலையை அப்படியே மறைக்காமல் அப்பட்டமாக உரோமைத் திருமுகத்தில் எழுதுகிறார். உரோ 7:15-ல் நான் செய்வது என்னவென்று எனக்கே தெரிவதில்லை எதை வெறுக்கிறேனோ அதையே செய்கிறேன். மேலும் மனந்திறந்து பேசும்போது உரோ 7:19-ல் நான் விரும்பும் நன்மையை செய்வதில்லை, விரும்பாத தீமையையே செய்கிறேன் என உள்ளதை உள்ளபடியே தெரியபடுத்தும் பண்புடைய பவுலார், உரோமைப் பட்டணத்து மக்களும் அத்தகைய பண்பினை உடையோராக வாழ வேண்டும் என்ற அவரது விருப்பத்தை உரோ.13:12, 13-ல் ஆலோசனையாக வைக்கிறார், "இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்து கொள்வோமாக, பகலில் நடப்பது போல மதிப்போடு நடந்து கொள்வோமாக..." இங்ஙனம் நமது செயல்கள் பகிரங்கமாக இருக்கும்போது பிறருக்கு முன் மதிப்போடு நடந்து கொள்ள முடியும். ஒளிவுமறைவினால் தான் ஏசா, யாக்கோபு என்னும் சகோதரர்கள் வாழ்வில் அன்பு மறைந்து பகைமை வலுவடைந்தது. ஒரு தாயின் பிள்ளைகள் ஒருவருக்கு முன் ஒருவர் மதிப்போடு நடந்து கொள்ள முடியாதநிலை ஏற்பட்டது. ஆகவே திருக்குடும்பமாகிய இறை இல்லத்திலும், நமது குடும்பங்களிலும், பொறுப்புகளிலும் ஒளிவுமறைவின்றி செயல்பட முயற்சிப்போம். கிறிஸ்துவினால் செறிவூட்டப்பட்ட வாழ்வு அப்பட்டமான வாழ்வுக்கு அடித்தளமிடும் என்பதால் நாமும் இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ள அறிவுறுத்தபடுகிறோம்.

### 3. அழுக்கில்லா வாழ்வு (உரோ 13:13,14)

இருள்-ஒளி, நன்மை-தீமை, சுத்தம்-அசுத்தம், பாவம்-புண்ணியம், இன்பம்-துன்பம் என உலகில் தோன்றும் ஒவ்வொன்றுக்கும் இரண்டு

பக்கங்கள் உள்ளதுபோலவே மனித நிலையிலும் இரண்டு பக்கங்கள் உள்ளன. அவை அகம்-புறம் ஆகும். இந்த அகமும்-புறமும் மாசற்றதாக இருக்க வேண்டும் என்பது தான் நியதி. ஆனால் இந்நாட்களில் அகம் அழுக்கடைந்தும், புறம் கவர்ச்சியுடனும் தோற்றமளிக்கிறது. இப்படிப்பட்ட முரண்பாடான வாழ்வை அடையாளம் கண்ட இயேசு, ‘முதலில் கிண்ணத்தின் உட்புறத்தைத் தூய்மையாக்குங்கள் அப்பொழுது அதன் வெளிப்புறமும் தூய்மையாகும். (மத்.23:20)’ எனப் பொருள்படப் போதித்தார். மேலும் இயேசுகிறிஸ்து மறை நூல் அறிஞரிடம் ஆணித்தரமாகச் சொல்லும் உண்மையென்னவெனில், வெளியிலிருந்து மனிதருக்குள்ளே செல்லும் எதுவும் அவர்களைத் தீட்டுப்படுத்த முடியாது. மாறாக மனித உள்ளத்திலிருந்து வருகின்ற களவு, கொலை, விபசாரம், லஞ்சம், காமவெறி, பொறாமை போன்ற தீயச் செயல்கள் தான் மாசுப்படுத்தும் என்று கூறி புறத்தூய்மையை விட அகத்தூய்மை மிக முக்கியமானது என்று வலியுறுத்தினார். அங்ஙனமே உரோமைத் திருச்சபையார் வாழ்வு மீது அக்கறையுடைய தூய பவுலார் அவர்களது வாழ்வு அழுக்கடைந்து போக கூடாது என மாசுப்படுத்தும் பண்பினை விட்டுவிட அறிவுரை வழங்கும்போது (உரோ 13:13,14) உலகத்தைத் தகாத விதமாய் அனுபவிக்க தூண்டும் ‘களியாட்டம், குடிவெறியைத் தவிர்க்கவும், ஒழுக்கக் கேட்டினை உற்சாகபடுத்தும் ‘‘கூடா ஒழுக்கம், காமவெறி’ ஆகியவற்றைவிட்டு விடவும், பண்பின்மையையும் உறவுக்கேட்டையும் ஏற்படுத்தும் ‘சண்டை சச்சரவுகளிலிருந்து’ விடுபடவும், தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்காமல், இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள் என்கிறார். அழுக்கடைந்த வாழ்வு ஒருபோதும் இறையோடும் பிறரோடும் நல்லுறவுடன் வாழ அனுமதிக்காது. கடவுளால் தெரிந்துகொள்ளபட்ட இஸ்ரயேல் மக்களின் வாழ்வு போலியானதாகவும், உள்ளங்கள் அழுக்கடைந்து அருவருக்கதக்கதாகக் காணப்பட்டபடியால் கடவுள் வேதனையோடு எசாயா இறைவாக்கினர் வழியாகக் கூறுகிறார். இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலைவில் இருக்கிறது (எசா 29:13)’’. இத்தகைய அழுக்கடைந்த வாழ்வையல்ல, அகமும் புறமும் அழுக்கில்லா வாழ்வைத்தான் கடவுள் எதிர்பார்க்கிறார்.

திருவள்ளுவர் தனது குறளில் குறிப்பிடும்போது
அழுக்கற்ற அகன்றாரும் இல்லை அஃதில்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாகும் இல்’’ -அதாவது



**19-01-2014**

ஒருமைப்பாட்டு ஞாயிறு
NCCI ஞாயிறு

# ஒருமைப்பாட்டின் ஆதாரம் கடவுள்

## GOD : SOURCE OF UNITY

எசே. 36 : 24-28 திப. 16 : 11-15
திபா. 133 யோவா. 17 : 20-23

*“எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக!...” யோவா. 17 : 21*

**இறைவேண்டல் :** தூய கடவுளே, ஒருமைப்பாட்டின் ஊற்றாக இருப்பவரே, கூடி வந்திருக்கிற நாங்கள், திருமுழுக்கின் மூலம் ஒரே ஐக்கியத்தில் இணைக்கப்பட்டுள்ளோம். எங்கள் சபைகள் ஒரே ஞானஸ்நானத்திலும், ஒரே நம்பிக்கையிலும் செழித்து வளரவும், கிறிஸ்துவை எல்லா விதங்களிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் விட்டுக்கொடுக்காமல், சான்று பகரவும், சபையின் ஒருமைப்பாட்டை ஆழமாக ஒருவருக்கொருவர் காட்டவும், விசுவாசிகள் வாழ்வின் இறுதிவரை இந்த அழைப்பிலே உறுதியாயிருக்க உதவி செய்ய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

ஒருமைப்பாடு என்ற சொல் சமூக வாழ்வோடு ஒன்றித்து உள்ளது. அது பல்வேறு நிலைகளில் பயன்படுத்தப் படுவதையும் நாம் அறிகிறோம். இந்த ஒருமைப்பாடு தனி மனித நிலைகளிலிருந்து ஊற்றாகப் பாய்ந்து வர வேண்டும். ஏனெனில் மானிடத்தின் தன்னிலை விருப்பமே ஒருமைப்பாட்டைச் சிதைக்கிறது. இதனால் ஏற்படுகின்ற எழுச்சிகளின் விளைவே சமூகம், திருச்சபை என படந்து விரிந்து இறைநோக்கத்திற்கு எதிரான நிலைகளில் செயல்படுகிறது. ஆகவே தான் திருச்சபைக்குள் பல்வேறுக் கட்டங்கள் பலதரப்பட்ட போதனைகள், சடங்குகள் மரபுகள், கொள்கைகளால் ஒருமைப்பாட்டில் சிதைவுகள் ஏற்படினும், நம்பிக்கையின் நல் எதிர் நோக்கில் ஒருமைப்பாட்டின் உயர்ந்த குறிக்கோளை அடையும் இலக்கில் திருச்சபை முனைப்புடன் முன்னேறி வந்துக் கொண்டிருப்பதை வரலாறு வழியாக அறிய முடிகிறது. இதற்கு திருமைந்தர் இயேசு கிறிஸ்துவின் வேண்டுதல் ஒருமைப்பாட்டிற்கான அடித்தளமாக அமைந்துள்ளது. மட்டுமல்ல அத்தகைய பணியைத் தொடரவே பணியாளர் என்ற நிலையிலிருந்து நண்பர்கள் என்ற நிலையில் நம்மை அவர் அதிகாரப்படுத்தியுள்ளார் (யோவா 15:15). ஆகவே ஒருமைப்பாட்டின் பணியில் நான் எனும் சுயத்தை வேரறுத்து இறையரசச் சிந்தையில்

என்று கூறினர். இயேசு அதற்கு மறுமொழியாக, என் தாய் யார்? (மத். 12:46) அனைத்து உலக மக்களும் என் தாய், சகோதரர்களே எனக் கூற உலக மக்களுடன் தம்மை இணைத்துக் கொள்கிறார். மரியாளின் மகன், கடவுளின் மகன் ஆகிறார். நாம் வாசித்த திருப்பாடலில் இதனை அறிய முடிகிறது. நீர் என்னுடைய மகன்......... (சங். 2:7) வாசிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டுப் பகுதி எசாயா 49:3-யில் நீர் என் தாசன் என்பதை கடவுள் தெளிவாக கூறுவதை எண்ணும் போது மரியாளின் மகன் தெய்வீக மகனாக ஏற்றுக் கொள்ளப்பட்டதை திருமுழுக்கின் வழியாக அறிமுகம் செய்யப்படுகிறது. இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். (மத். 3:17) இது மறுரூப மலையில் உறுதி செய்யப்படுகிறது (லூக்கா 9:35) என்று கூறி இறைமகனாக அதிகாரப்படுத்துகிறார்.

### 3. இயேசுவின் திருமுழுக்கு : பாடுகளின் அடையாளம்

கருவறை முதல் கல்லறை வரை இயேசு கிறிஸ்து அறைகூவல்களையும், எதிர்ப்புகளையும் சந்திக்க வேண்டியதாய் இருந்தது. எதிர்ப்புகளைக் கண்டு ஓடவில்லை. பாடுகளைக் கண்டு பயந்து ஓடினால் அவைகள் நம்மை துரத்திக் கொண்டே இருக்கும். இயேசு பாடுகளை எதிர் கொண்டார். இந்த உலகப்பாடுகள் அனைத்தும் சிலுவையைச் சுமக்க ஆற்றல் அளித்தன எனலாம். எதிர்ப்புகள் முன்னேற்றத்திற்கான மூலதனம். இவைகளை எதிர்க்க திருமறை வாசகங்களைக் கொண்டு பயன்படுத்துகிறார். சவால்கள் பல கோணங்களில் வந்தன. சமய அழுக்குகளைச் சுட்டிக்காட்டினால் பரிசேயரின் தூய்மையற்ற வாழ்வை எதிர்த்தார். அரசியலில் இருந்த தீமைகளையும் சமயவாதிகளின் மாய வேடங்களையும் மனதில் கொண்டு வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே என்றார். இவர்களின் அத்தனை தீமைகளுக்கும் இயேசு கிறிஸ்து உடன்படவில்லை. எனவே சிலுவையை ஏற்கவேண்டியதாயிருந்தது. இயேசு கிறிஸ்து தமது அதிகாரத்தை உலப் பிரகாரமாய் கட்டியிருக்கலாம். ஆனால் உயிர்த்தெழுதல் வழியாகக் காட்டும்போது அது மிக அழுத்தமாக, மரணம் என்னை அடக்கிவிடாது அரசு முத்திரை என்னை அடக்க முடியாது என்ற இறை உண்மையை வெளிப்படுத்தலே சிலுவை என்கிறார். Restoring peace through confrontation satanic attack for doing salvific action மீட்பின் செயலுக்குப் பாத்திரத்தைப் பருகக் கட்டாயமாயிற்று.

### நிறைவுரை

இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு தனிச் சிறப்புடையது. சடங்கு வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். உண்மை வாழ்வுக்குள் மக்கள் அடியெடுத்து வைக்கவேண்டும். உண்மைக்கு அனேகக் காயங்கள் உண்டு. அக்காயங்களில் தான் விடுதலை இயங்கிக் கொண்டிருக்கிறது.

அருள்திரு. V. **டேவிட்**





மாசுகளோடு வாழ்ந்து மேன்மை அடைந்தோரும் இல்லை, நெஞ்சில் மாசு இல்லாமல் வாழ்ந்து உயர்வில் குன்றிப்போனவர்களும் இல்லை என்கிறார். இவ்வுண்மையையும் கருத்தில் கொண்டு இறைமக்களாகிய நாம் அகத்திலும் புறத்திலும் அழுக்கில்லா வாழ்வு வாழ்ந்து உயர்வுகள் பல பெற்று வாழ முயற்சி செய்வோம்.

மண்ணில் மனிதநேயம் மலர இச்சமுதாயம் இறைமக்களிடம் அன்புநிறைந்த, அப்பட்டமான, அழுக்கில்லா வாழ்வை எதிர்பார்க்கிறது. எனவே அத்தகைய வாழ்வு நம்மில் வெளிப்பட புதிய ஆண்டின் ஆரம்ப நாட்களில் பயணிக்கும் நாம் தூய பவுலாரின் ஆலோசனைப்படி கிறிஸ்துவினால் செறிவூட்டபட்ட வாழ்வு வாழ முயற்சிப்போம்.

அருள்திரு. G.S. **ஆஸ்வின் ஜெய்சிங்**

**12-01-2014** *திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் முதல் ஞாயிறு*

# இயேசுவின் திருமுழுக்கு

**BAPTISM OF JESUS**

எசா. 49 : 1 - 6 பேது 3 : 18 - 22

தி.பா. 2 : 1 - 8 மத் 3 : 13- 17

*"என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்."*
*மத். 3 : 17*

**இறைவேண்டல் :** நித்திய கடவுளே, உம் திருக்குமாரன் இயேசு தம்மைப் பாவம் செய்தோருடன் அடையாளப்படுத்த யோர்தான் நதியில் யோவான் திருமுழுக்கினரால் திருமுழுக்குப் பெற்று உலகின் மீட்புக்காகத் தம்மை அருட்பொழிவு செய்தாரே. எங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும் பற்றுறுதிக்குத் திரும்பவும் உமது ஆவியானவரைக் கொண்டு உதவி செய்யும். அதனால் இயேசு கிறிஸ்துவை உலக இரட்சகரென்று நாங்கள் பறைசாற்ற பெலன் தாரும். இவைகளை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம், ஆமென்.

முதலாவது நாம் அறிய வேண்டியது என்னவெனில் இயேசு பெற்றுக் கொண்ட திருமுழுக்கு, கிறிஸ்தவத் திருமுழுக்கு அல்ல. இது யோவான் கொடுத்த திருமுழுக்கு ஆகும்.

ஐந்து வித திருமுழுக்குகள் உண்டு.

1. புற இனத்தவர் திருமுழுக்கு
2. யூதத் திருமுழுக்கு
3. யோவான் திருமுழுக்கு
4. இயேசுவின் திருமுழுக்கு
5. கிறிஸ்தவத் திருமுழுக்கு.

இயேசு கிறிஸ்து பெற்றுக் கொண்ட திருமுழுக்கு யோவான் கொடுத்த திருமுழுக்கு. இது தனிப்பெரும் பொருள் சார்ந்தது. இதனைச் சிந்திப்போம். இயேசு கிறிஸ்து திருமுழுக்கு எடுக்கவேண்டும் என்ற இறைவாக்குகளோ, அறிவிப்போ திருமறையில் இல்லை. இயேசு கலிலேயாவிலிருந்து யோர்தானுக்கு திருமுழுக்கு எடுக்க வருகிறார் என்பது யோவானுக்குத் தெரியாது. யோவானின் திருமுழுக்கு நடைமுறைச் சடங்குகளுக்கு அப்பால் உணர்த்துவதைக் கண்டு இதனை அனைத்து மக்களும் ஏற்றுக் கொண்டிருக்கலாம் என, தான் முன் மாதிரியாகிறார். The submission of Jesus baptism to John's Baptism intended to prepare sinners for the coming of messiah is explicable only as a delibcrate act of



solidarity with sinful man and women (view dictionary of the Christian theology A.30). மேலும் யோவான் இயேசு கிறிஸ்துவுக்கு வழிகாட்டி, முன்தூதன் என அறிந்து, யோவான் முடிவுரையில் ஆற்றிய பிரசங்கத்தை இயேசு முகவுரையாக்குகிறார். மத். 3:2 ...........பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது (யோவான்) மாற்கு 1:15 கடவுள் ராஜ்யம் சமீபித்திருக்கிறது.

## *1. இயேசுவின் திருமுழுக்கு : பணிவிடையின் அடையாளம்*

இயேசு கிறிஸ்து தமது 30-ஆவது வயதில் திருப்பணியைத் தொடங்கினார். அது வரை தம்முடைய வாழ்வில் உலகத்தில் போதிக்க வேண்டியவைகளைக் கற்றுக்கொண்டு தம்மை திருப்பணிக்கு புகு வாயிலாக திருமுழுக்கின் வழி உலகை அறியச்செய்கிறார். இதோ உலகத்தின் பாவங்களைச் சுமக்கும் தேவ ஆட்டுக் குட்டி (யோ. 1:29). இந்த திருமுழுக்குப் பெற்ற கல்வாரித் திருச்சிலுவையின் திருமுழுக்கிற்குத் தம்மை ஆயத்தமாக்குகிறார். அந்தத் திருமுழுக்கு பாடுகளின் பாத்திரமே (லூக். 12:50). இதனை ஊழியத்தின் கடின பாதையிலும் கடக்க முடியாத சூழலிலும் தம்முடைய சீடர்களிடம் நீங்கள் அறியாத பாத்திரம் ஒன்று உண்டு எனச் சொல்லி (யோ. 4:32,33) சிலுவை மரணத்திற்கு மூழ்க வேண்டிய திருமுழுக்கிற்குத் தன்னை ஆயத்தப்படுத்தி அதற்கு நேராய் தம் பயணத்தைத் தொடர்கிறார். இந்தச் சிலுவை முழுக்கிற்கு மாற்று வழி கூறப்பட்டபோதும் சிலுவைப் பாதை குறிக்கோளைப் தவற விடாது, சிலுவைப் பாத்திரத்தைப் பருகப் புறப்படுகிறார். (சோதனை நிகழ்வில் மலையில் மாற்றுப் பாதையைப் தெரிவுச் செய்யவில்லை, மறு ரூபமலையில் மகிமையில் இருந்து விடுவோம் என்று நினைக்காதபடி, மலையின் அடியில் சீடர்களால் குணமாக்க இயலாத சந்திரரோகியான மனிதனின் பாடுகளில் பங்குகொள்ள, மலை மகிமையை விட்டு பூமியில் இயலாமையிலும், துன்ப நோய்களிலும் ஈடுபடுவதே மலையின் மகிமையை விடச் சிறந்தது எனக் கீழே இறங்கி வருகிறார். எனவே யோவானிடம் திருமுழுக்குப் பெற்றவுடன் சிலுவை என்னும் பாத்திரத்தைப் பருகத் தொடங்குகிறார்.

## *2. இயேசுவின் திருமுழுக்கு : பரம உறவுக்கான அடையாளம்*

இயேசு கிறிஸ்து தமது முப்பது வயது வரை தம் பெற்றாருக்கு கீழ்படிந்து அவர்களுக்கு உதவி செய்தார். குடும்பத்தில் கற்றுக் கொண்டதை உலகிற்கு கற்றுக் கொடுக்கத் துவங்குகிறார். எடுத்துக்காட்டாக, விதை விதைப்பவர் உவமை அதை மக்களுக்குச் சொல்லுகிற போது பெற்றோருடன் சென்று பணிச் செய்த அனுபவத்துடன் செல்வது போல உள்ளது. ஒரு முறை தீய ஆவியைத் துரத்திவிட்டு இருக்கும் போது, ஒருவர் இயேசுவிடம் வந்து உம் தாயாரும், சகோதரர்களும் உம்மைத் தேடி வந்திருக்கிறார்கள்

உயர்த்தப்படுவார் என இயேசு கிறிஸ்து கூறுகின்றார். யாக்கோபு தம் திருமுகத்தில் (4:10) ஆண்டவர்முன் தாழ்த்துங்கள் அவர் உங்களை உயர்த்துவார் என்கிறார். மேலும் நீதி. 29:23-ல் இறுமாப்பு ஒருவனைத் தாழ்த்தும், தாழ்ச்சி ஒருவரை உயர்த்தும் எனக் கூறுகிறார். இறைவனுக்கு முன்பாக உள்ளத்தாழ்மையை அணிந்து உயர்வினைப் பெற்றுக்கொள்வோம்.

### 3. தாழ்மை நல்லுறவுக்கு அடிப்படை : (உரோ. 12:16)

இன்றைய சமூகம் பல தவறான மனப்போக்குகளால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் சண்டையிட்டுக் கொண்டு மகிழ்ச்சியை இழந்து தவிக்கிறது. பவுலடிகளால் உரோமைத் திருச்சபை மக்களிடத்தில் நீங்கள் உடன்பிறப்புகள் போன்று வாழுங்கள் என அழைப்பு விடுக்கிறார். அதற்காக வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புநலன்களையும் ஆலோசனையாகக் கூறுகிறார். நீங்கள் உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுங்கள் என அறிவுறுத்துகிறார். (உரோ. 12:16). இந்தச் சிந்தனை நல்லுறவோடு வாழ வழி வகுக்கிறது.

தாழ்மையின் அவசியத்தை மார்ட்டின் லூத்தர் கிங் ஒரு கதையின் வாயிலாக விளக்குகின்றார். ஓர் ஆற்றின்மீது நடப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த மிகக் குறுகிய பாலத்தின் மீது எதிரெதிராக இரண்டு மலையாடுகள் நடந்துவந்து பாலத்தின் நடுவில் சந்தித்துக் கொண்டன. விலகிச் செல்வதற்கு வழியில்லை. ஒரு நேரத்தில் ஓர் ஆடுதான் செல்லமுடியும் என்ற அளவிற்கு குறுகலான பாலம். பின்னோக்கிச் செல்வது கடினம் முட்டி மோதிக் கொண்டால் இரண்டு ஆடுகளும் ஆற்றில் விழ நேரிடும். இந்தச் சூழ்நிலையில் ஓர் ஆடு படுத்துக்கொள்ள, மற்ற ஆடு அதன்மீது நடந்து சென்றது. இரண்டு ஆடுகளும் பிரச்சனையில்லாமல் பாலத்தைக் கடந்தன. நாமும் தாழ்ச்சியுள்ளவர்களாக வாழ்ந்தோமென்றால் தடைகளை எந்தப் பிரச்சனையும் இல்லாமல் தகர்ப்போம் என்பது உறுதி.

அருள்திரு. **ரமேஷ். டி. தாஸ்**





அருட்பணி ஒருமைப்பாட்டிற்கான வாயிலாகும். மட்டுமல்ல அருட்பணியானது மானுட வாழ்வை ஆய்ந்தறியத் தூண்டுகிறது. பவுல், சீலா எனும் திருத்தொண்டர்களின் பிலிப்பி பயணப் பணியானது ஒருமைப்பாட்டிற்கான வழிமுறைகளை ஏற்படுத்தியது. அது தனி மனித நிலையிலே தொடங்கியதை அறிய முடிகிறது. லீதியாளின் உள்ளம் திறக்கப்பட்டது. (தி.ப 16: 14)

உண்மையை உணரும் நிலையில் திருமுழுக்குப் பெறுதல் (16:15) உறவின் ஒருமைப்பாட்டின் அடையாளமாக இல்லம் தொழுகைக் கூடமாகிறது (16:40) ஒருமைப்பாட்டின் கருவியாக அருட்பணி தந்த மாற்றத்தால் தான் நாமும் விடுதலையுடன் கடவுளைத் தொழுகிறோம். சமூகப் பகுப்பாய்வு, சாதிய ஒடுக்குமுறை என அடிமைத்துவத்தின் காரணிகளை அருட் தொண்டர்களின் ஒப்படைப்புள்ள பணிகள் மாற்றின. மட்டுமல்ல வாழ்வின் நம்பிக்கையை நாம் பெற அவர்கள் வடிகாலாக அமைந்தார்கள். நாம் அருட்பணியில் பெற்றுக் கொண்ட ஒருமைப்பாட்டை நிலைப்படுத்தி கொள்கிறோமா? நியமங்களின் படி நடக்கவும், நீதி நெறிகளுக்குச் செவி கொடுத்து வாழவும், அவைகளைக் கடைப்பிடிக்கவும், அவரது மக்களாக இருக்கவும் (எசே 11:20) கடவுள் அருட்பணி வழியாக வாய்ப்பைத் தந்துள்ள நிலையில் நறுமணத்துடன் வாழ்வது தானே ஏற்புடையது அதற்காக தானே உறவற்றவர்களாக வாழ்ந்த நாம் தூயோராக, மாசற்றவர்களாக (எபே 2:13) ஒன்றிக்கப்பட்டோம் (கொலோ 1: 21-22) (1பேது 2:10) இத்தகைய நிலையினை இழந்து விடாது இறைப்பற்றுடன் ஒருமைப்பாட்டின் பணியைத் தொடருவோம்.

### 3. அனைவருக்கும் மாட்சியை அளித்து ஒன்றிக்கிறார்

யோவா 17: 22

படைப்பில் இழந்த மாட்சியை இயேசுகிறிஸ்து வழியாக அளித்து ஒருமைப்படுத்துகிறார். இத்தகைய ஒன்றிணைப்பு தனித்து விடப்படாமல் மேன்மையான நிலைக்கே நம்மை ஒருமுகப்படுத்துகிறது. (யோவா. 14:3) மேலும் இயேசு கிறிஸ்துவின் இறைவேண்டலில் திருச்சபை, திருமக்களின் ஒருமைப்பாடு என்பது கடவுள் தன்மையாகவும், அவரது மீட்பின் செயலாகவும் அமைந்துள்ளதை அறியலாம். ஆகவே தான், கலாச்சாரம் பாரம்பரியம், சடங்குகள், மரபுகள், அமைப்பு முறைகள் தாண்டி அனைவரும் ஒன்றாக இணைந்து தொழுகையில் பங்கேற்பதையும் நாம் காணலாம்.

மட்டுமல்ல ஒருமைப்பாட்டுணர்வை விடுத்து தொலைவில் காணப்படும். மக்களையும் (யோவா 10:16) இணைப்பதில் தான் இறைமாட்சி ஒளிருகின்றது என்பதையும் அறிதல் வேண்டும். ஏவாளின் சுய விருப்பமும், அடைய வேண்டுமென்ற அடங்காத் தன்மையும் படைப்பு பிளவுப்பட காரணமாயிருந்தது என்பதை நாம் அறிவோம். ஆகவே நாம் மட்டுமே தனிப் பேறு பெற்றவர்கள் என்ற நிலையை விடுத்துக் கொள்வதும், நான் என்ன செய்ய வேண்டுமென்று இறைவனிடம் கேட்டு (தி.ப. 9:6) திருவுளத்திற்கு ஒப்படைத்த சவுலைப் போல சுயப் பெருமைகளை விட்டு கல்வாரித் திருச்சபையின் தியாகத்தில் புது விடியலுடன் புது சமூக அமைப்பிற்கு ஒப்படைப்போம்.

ஒருமைப்பாட்டுணர்வு என்பது இறையவரில் பெற்றிருக்கும் மாபெரும் பேறு. அதை நமது சொற்களால், செயல்களால் சிதைத்து விடாமல் சகோதரத்துவ சிந்தையில் ஒன்றிணைவோம். திருச்சபைக்குள் கனி தரும் திராட்சைக் கொடியாக மாறுவோம். இறையரசின் அளவீடுகளான, அன்பு, மன்னிப்பு, பகிர்வு, பொறுமை, சகிப்புத் தன்மை, தன்னடக்கம் என இவைகளை வாழ்வோடு ஒன்றாக்கிக் கொள்வோம். இறையவரின் விருப்பம் அறிந்து வாழ்வோம், இறையாசி பெறுவோம்.

அருள்திரு. ***முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்***





### 1. தாழ்மை இறைவனுக்கு ஏற்புடையவராக மாற்றுகிறது:
(மீகா 6:8)

மனிதர்களின் விருப்பம் எப்படி கடவுளுக்கு உகந்தவராக மாறுவது? என்பதுதான். இதற்காக மனிதன் பல வழிகளைக் கையாளுகின்றான். பல வெளிப்படையான செயல்களினூடாக தங்களை இறைவனுக்கு உகந்தவராக மாற்றிக் கொள்ள விரும்புகின்றான். மீகா தீர்க்கரின் காலத்தில் வாழ்ந்த மக்களும் அவ்வாறே செய்து வந்தனர். பலிகளைச் செலுத்துவதினூடாக தங்களை இறைவனுக்கு ஏற்புடையவராக மாற்றிக் கொள்ளலாம் என எண்ணினர். ஆனால் கடவுள் விரும்புவது இப்பேர்ப்பட்ட வெளிப்படையான செயல்களை அல்ல, உண்மையான மனதளவின் மாற்றமே என மீகா குறிப்பிடுகிறார் (மீகா 6:8) நம்மோடு வாழும் சக மனிதனோடு நீதியை நடப்பித்து கடவுளுக்கு முன்பாக தாழ்மைப்பட்டு அவரைப் பணிந்து கொள்வதினூடாக இறைவனுக்கு ஏற்புடையவராக மாறுகின்றோம். சடங்காச்சாரமான வாழ்வையும் செயல்களையும் விட நாம் எப்படி வாழுகின்றோம் என்பதில் அதிகமாக அக்கறை கொள்வோம். தாழ்மையாய் நடத்தல் என்பது கடவுளை முதன்மைப்படுத்தி கடவுளோடுள்ள உறவில் நிலைத்து வாழ்வதாகும். இப்படிப்பட்ட வாழ்வை இறைவன் ஏற்றுக் கொள்கின்றார்.

### 2. தாழ்மை உடையவர்கள் கடவுளால் உயர்த்தப்படுகின்றனர்:

மனிதர்களின் பொதுவான எண்ணம் தங்களுடைய உயர்வுகளையும் பெருமைகளையும் சக மனிதர்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்பதுதான். தங்களிடமிருந்து வருபவை மட்டுமே சிறந்தவையாகவும் மற்றவர்களிடமிருந்து வருபவை கீழானவைகள் என எண்ணுகின்ற மக்களுக்கு மத்தியில் தாழ்மையுடைவர்களாக வாழவேண்டும் என்பதற்கு விளக்கமாக இயேசு கிறிஸ்து பரிசேயரும் வரி தண்டுபவரும் பற்றிய உவமையைக் கூறுகின்றார். (லூக் 18:9-14). இவ் உவமையின் வாயிலாக தாழ்மையுள்ளவர்களாக வாழ அழைப்பு விடுக்கின்றார். பரிசேயன் தன் வாழ்வைப் பிறரோடு ஒப்பிட்டு பெருமை நிறைந்த தன் வாழ்வின் உன்னத செயல்களை மார்தட்டிக் கொண்டு கடவுளிடம் பெருமைப்படுகிறார் ஆனால் வரிதண்டுபவரோ தன்னைப் பிறரோடு ஒப்புமைப்படுத்தாமல் தன்னை முற்றிலும் தாழ்த்தி பாவியாகிய என்மீது இரங்கியருளும் என வேண்டுகின்றார். இவ்வுவமையில் வரிதண்டுபவரே

**02-02-2014**

***திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு***

# தாழ்மை

## HUMILITY

| | |
|---|---|
| மீக். 6 : 6-8 | உரோ. 12 : 14-21 |
| தி.பா. 143 : 1-10 | லூக். 18 : 9-14 |

*"....தம்மைத்தாமே உயர்த்துவோர் தாழ்த்தப்பெறுவர், தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர்." லூக். 18 : 14*

**இறைவேண்டல்** : கடவுளே உம்முடைய மகனை எங்களது பணிவிடையாளராய் இருப்பதற்கு, வறுமையில் பிறக்கவும், நிந்தையிலும் வெட்கத்திலும் மரிக்கவும் அனுப்பினீரே! எங்களது பெருமையினால் ஏற்படும் தடைகளை உடைத்து, சிறு சிறு மேன்மைகளில் சிறைப்பட்டுப் போகும் தன்மையிலிருந்து விடுவித்து, தாழ்மையை வாழ்வின் பரிசாக ஏற்றுக் கொண்டு வாழ அருள்தாரும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

தாழ்மை கிறிஸ்தவ அருளில் முக்கியமானதும் இறைவனின் பார்வையில் பிரியமானதுமாகும் (Iபேதுரு 3:4). தாழ்மை, பெருமைக்கு எதிரானது ஆகும். தாழ்மை என்ற வார்த்தை பல பொருட்களைத் தந்தாலும் விவிலியத்தின் அடிப்படையில் கடவுளுக்கு முன் முழுமையாக அர்ப்பணிப்பதைக் குறிக்கிறது. இத்தாழ்மை இறைஅருளை பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனையாக (Condition) உள்ளது. இயேசு கிறிஸ்து தம் போதனையிலும் செயலிலும் தம் சீடர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். பழைய ஏற்பாட்டில் கடவுளை வழிபடும்போது தங்களைத் தாழ்த்துகின்ற (தொ.நூ. 24:26) பழக்கம் காணப்பட்டது. தொ.நூ. 18: 27-இல் ஆபிரகாம் சோதோம் நகருக்காக கடவுளிடம் மன்றாடும்போது "தூசியும் சாம்பலுமான நான்" எனத் தன்னைத் தாழ்த்துகின்றார். தாழ்மைக்கு இயேசுகிறிஸ்து மாதிரியாகக் காணப்படுகிறார். "சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்" (பிலி. 2:8) என பவுல் கிறிஸ்துவின் தாழ்மையைக் குறித்து எழுதுகிறார். இதுவே தாழ்மையின் முழுமை ஆகும்.

கொடுக்கப்பட்ட திருமறைப் பகுதியை மையமாகக் கொண்டு தாழ்மை கற்றுத்தரும் உன்னத நிலைகளைத் தியானிப்போம்.



**26-01-2014**

***திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு***

# கடவுளின் நிலையான அன்பு

## THE STEADFAST LOVE OF GOD

| | |
|---|---|
| வி.ப. 17:1-7 | எபே. 3:14-21 |
| திபா. 86 | மத். 22:34-40 |

*".... உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து." மத்.122:37*

**இறைவேண்டல்** : கடவுளே, எங்கள் துணையாளரே, பயணம் செய்யும் உமது மக்களுக்கு துணிவைத் தாரும். வனாந்தரத்தில் வாழ்வையும், கன்மலையில் இருந்து தண்ணீரையும் தந்தவரே, எங்களது சந்தேகங்களையும் கேள்விகளையும் உம்மிடத்தில் கொண்டு வருகிறோம். அவைகளைத் தீர்த்து முழுமையாக்கும். சபைகள் ஒருவரையொருவர் தாங்கவும், உமக்காக தாங்கப்படவும் அருள் தாரும். உமது அன்பின் பிரசன்னத்தைக் காட்டி எங்களோடு தோழமைகொள்ள வேண்டுமென்று. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

பல வருடங்களுக்குமுன் ஒரு மனநலக் காப்பகத்தில் ஓர் அறையில் மனநலப் பாதிப்புக்குள்ளான வாலிபன் ஒருவனை அடைத்திருந்தனர். அவன் பிற மனநலப் பாதிக்கப்பட்டவரிலும் சற்று மாறுபட்ட சாந்த குணமுள்ளவனாயிருந்தான். அதனால் அந்த மனநலக் காப்பகத்தின் அதிகாரிகளும் பணியாளர்களும் அவனிடம் மிகவும் அன்பு செலுத்தினர். மரணம் வரையிலும் அவன் அந்த அறையில் வாழ்ந்தான். அவன் மரணத்துக்குப்பின் அவன் அறையைப் பரிசோதித்த அதிகாரிகள் அறையின் சுவரில் எழுதியிருந்த ஒரு கவிதையைக் கண்டனர். அது இப்படியாக எழுதப்பட்டிருந்தது. "இதோ காண்கிற கடலை மையால் நிரப்பி, வானத்தைக் காகிதமாகப் பரப்பி வைத்து, எல்லா மரங்களையும் எழுதுகோலாக்கி சகல மனிதரும் இதழியலாளர்களாக மாறினாலும், விண்ணுலகத் தந்தையாம் கடவுளின் அன்பை வர்ணிக்கலாகுமோ?" என்பதாகக் கண்டனர்.

கடவுளின் அன்பு என்பது சொட்டு சொட்டாக சிந்தும் தண்ணீர் போன்றதல்ல. அது எந்தக் கோடைக் காலத்திலும் இயல்பாய் வற்றாது ஓடும் நீரோடையைப் போன்றது. இந்த அன்பு என்பது உறவில் வெளிப்படும் ஓர் உணர்வு. இறை மனித உறவிலும், மனிதருக்குள்ளும் ஏற்படும் அப்பழுக்கற்ற பரிமாற்றங்களுக்குக் காரணம் இந்த அன்பே. இறைவன் தன் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையில் இறுதி வரையிலும் நிலைத்து நிற்பதால்

அவர் நம்மிடம் காட்டும் அன்பை நிலையான அன்பாய்க் காணலாம் (தொ.நூ. 24:27; 32:10).

ஆண்டவர் மனிதர்களை அன்பு செய்து அவர்கள் தேவையை அவர் நிறைவு செய்வதால் இறைவன் அவனோடு கொள்ளும் அன்பிற்கு பிரதி அன்பை செலுத்தவேண்டிய கடனாளியாகிறான் மனிதன் (தி.பா. 116:1). அந்த அன்பை எவ்விதம் செலுத்தவேண்டும் என நம்மிடம் அன்புடன் கட்டளையிடுகிறார் (இ.ச. 6:5; மத். 22:37). ஒரு புது வருடத்தின் ஆரம்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் ஆண்டு முழுதும் அவர் நம்மிடம் வெளிப்படுத்தும் நிலையான அன்பை உணர்ந்து அவரிடம் அன்புகூர அழைக்கப்படுகிறோம்.

### 1. வரையறை தாண்டிச் செல்லும் இறையன்பு

அன்பு என்பது உறவுகளின் பிணைப்பு (மத். 22:37,40) ஆண்டவர் நம்மில் நிலைத்திருக்கிறார். நாம் அவரில் நிலைத்திருக்கிறோமெனில் அவ்விதம் அன்புகூர நம்மை கேட்கிறார். ஒருமனிதன் தான் இறைவனிடம் கொள்ளும் அன்பு என்பது தன் பாவ நிலையை உணர்வதினின்று எழுகிறது. அந்த அன்பு பரிசேய மனப்பான்மையுடன் ஒத்துப் போவதில்லை. நாம் ஆண்டவரிடம் அதிகமாய் அன்புகூரும் போது அவரும் பாவங்களை மன்னித்து அன்பு கூர்கிறார் (லூக். 7:47) திருமறையில் இந்நிகழ்வில் இயேசு, யூதரின் பெண்ணடிமைத்தன மனப்பான்மைக்கு முன் வரையறை தாண்டிய அன்பை வெளிப்படுத்துவதைக் காணலாம். ஆனால் இக்காலத்தில் மனிதர் பிறரை இயல்பாகவே வெறுக்கின்றனர். எனக்கு அடுத்திருப்பவர் யார் (லூக். 10:29) என்ற திருச்சட்ட அறிஞரின் கேள்விக்கு யூதர்களால் வெறுக்கப்பட்டிருந்த சமாரியரைப் போன்று அன்பு கூர கூறுகிறார். (மத். 5:43-48; லூக். 6:27,28; 32-36). ஆண்டவர் மனிதரிடம் நிலையாக அன்பு கூர்வதுபோல் தம்மைப் பின்பற்றுபவர்களும் பிற மனிதர் எல்லாரிலும் வேறுபட்டவராயிருந்து அன்பு கூர கூறுகிறார் (மத். 5:39; 46,47).

### 2. வாழ்வைத் திடப்படுத்தும் இறையன்பு

இஸ்ரவேலரின் சிறையிருப்பின் காலத்தில் ஆண்டவர் நம்மை முற்றிலும் மறந்துவிட்டாரோ என எண்ணி வாழ்ந்த இஸ்ரயேலருக்கு (ஏசா. 49:14) தமது மனதுருக்கம் ஒரு தாயின் மனதுருக்கத்தைவிடப் பெரியது என உணர்த்தினார் (ஏசா. 49:15) மனிதன் தன் பாவத்தில் உறுதியாய் நின்று மனமாற்றத்தின் தருணத்தை மறந்து வாழ்ந்தது போதும். அவர்களுக்கு நேரிடப்போகிற அழிவை நினைத்து மனதுருகினார் (லூக். 19:41-44). மனிதனின் குறைவுகளை (ஏழ்மை, அடிமைத்தனம், புறக்கணிப்பு....) நினைத்து மனதுருக்கம் கொண்டு அவர் நம்மைப் போலானார் (யோ. 1:14). அன்றாட வாழ்வில் உணவளித்துப் பசியகற்றினார் (மாற். 6:34) நோயில் நலமளித்தார் (2கொரி. 12:9) துக்கத்தில் ஆறுதலளித்தார் (யோ. 11:35) நம் அழுகுரலில்





நம்முடன் அழுது (ரோ. 12:15) அன்பு கூர்வதின் வழியாய் நம் வாழ்வைத் திடப்படுத்துகிறார்.

### 3. வளமான உறவுப் பிணைப்பைத் தரும் இறையன்பு

அன்பு என்பது எப்போதும் சொந்தம் பாராட்டக்கூடியது. தோழா (மத். 26:50), பிள்ளைகளே (யோ. 21:5), என்று நம்மை சொந்தம் பாராட்டுகிறார். இந்த அன்பு ஆழமானது அளவிட முடியாதது என்பதை யோவான் வெளிப்படுத்தினார் (யோவா. 1:12; 1யோ. 3:1) இந்த அன்பின் பிணைப்பில் ஒவ்வொரு மனிதனும் பிற உறவுகளிடம் காட்டும் அன்பைவிட அதிகமாய் அன்புகூர நம்மை அவர் தூண்டுகிறார் (மத். 10:37)

ஒரு இளைஞன் தன் 18-ம் வயதில் தன் வீட்டாரைவிட்டு ஓடிப்போய்விட்டான். தன் தந்தையிடம் கோபம் கொண்டு இனி ஒருக்காலும் நான் இந்த வீட்டிற்கு திரும்ப வரமாட்டேன் என்று கூறிப் புறப்பட்டான். சில வருடங்கள் கழித்து, நான் வீட்டிற்கு வர விரும்புகிறேன் என்று கூறி தன் தந்தைக்கு பலமுறை கடிதம் எழுதியும் அந்தத் தந்தை எந்தப் பதிலும் தன் மகனுக்குத் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் அவன் தன் தாய்க்கு கடிதமெழுதினான். அன்புள்ள அம்மா உங்களை என்னால் பார்க்காமலிருக்க முடியவில்லை. நான் வீட்டிற்கு வருவது உங்களுக்கு விருப்பமானால் நம் வீட்டினருகில் ரயில்வண்டி போகும் பாதையின் ஓரத்திலுள்ள நம் நிலத்தில் நிற்கும் புளிய மரத்தில் ஒரு வெள்ளைத் துணியை கட்டியிருக்கவேண்டும். நான் வெள்ளைத் துணியை காணாதிருக்கும் நிலையில் அதே ரயில்வண்டியில் திரும்பச் சென்று விடுவேன் என்று எழுதியிருந்தான். அவன் தன் வீட்டிற்குப் பயணம் புறப்பட்டான். வீட்டை நெருங்க நெருங்க அவனுக்கு பதட்டமாயிருந்தது. வீட்டின் அருகாமையில் வந்தபோது நடுக்கத்துடன் அவன் புளிய மரத்தைப் பார்த்தான். என்னே வியப்பு அந்தப் புளியமரத்தில் ஒரு வெள்ளைக் கொடியல்ல அந்த மரம் முழுதும் வெள்ளைக் கொடி பறந்து கொண்டிருந்தது. என்ன நடந்தது? தன் மகன் ஒரே ஒரு வெள்ளை கொடியைக் காணாமலே அவன் அதே ரயில் வண்டியில் செல்லக்கூடாதே என எண்ணி அந்தத் தாய் இறை இல்லத்தில் திருவிருந்து தொழுகைக்கு அணிந்து செல்லும் தன் ஒரே வெள்ளைப்புடவையைத் துண்டு துண்டாகக் கிழித்து அந்தப் புளிய மரம் முழுவதும் கொடிகளாகக் கட்டி தன் மகனோடுள்ள நிலையான அன்பை வெளிப்படுத்தி சொந்தம் பாராட்டினாள்.

நம்மிடம் நிலையான அன்பு செலுத்தும் நம் ஆண்டவருக்கு நாம் எவ்விதம் அன்பு செலுத்துகிறோம். என் பிள்ளைகளே, நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம். (1யோவா. 3:18).

அருள்திரு. **P. சேம் இம்மானுவேல் தோமஸ்**

**3. படைப்புகளுடன் ஒப்புரவு :** (கொலோ 1:15-20)

மீட்பு என்பது மனுகுலத்துக்கு மட்டுமல்ல அனைத்துப் படைப்புகளுக்கும் அருளப்படும் ஈவு. பால்திலிக் என்ற இறையியலாளர் "படைப்புக்கு மீட்பு இல்லாமல், மனுக்குலத்துக்கு மீட்பு இல்லை" என வலியுறுத்துகின்றார். "சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலைநாட்டவும், விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும், அவர்வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்". (கொலோ. 1:20)

உள்ளத்தில் உந்துதல் பெற்று ஆன்மிக எழுச்சிக்கு நடத்தும் இறைத்தொழுகை, ஜெபம், உபவாசம், ஈகை போன்ற செயல்களில் முன்னேற்றமடைந்து வருகின்றோம். ஆனால் படைப்புகளுக்கு எதிராக நடக்கும் அநீதிகளை எதிர்க்கும் ஆற்றலை நாம் பெற வேண்டும். புதிய வானமும், புதிய மண்ணுலகமும் என்னும் விவிலியக் கருத்துக்கள் (திருவெளி. 21:1-4) செயலாக்கம் பெற நாம் செயல்பட வேண்டும். உலகத்தின் மீது பற்றுக்கொண்டு அதிகமாகச் சேர்ப்பதும், அதற்காக கவலைப்படுவதையும் (மத். 6 : 33) விட்டுவிட்டு நிலைவாழ்வின் எதார்த்தத்தில் வாழ்தல் என்பது, நாம் வாழும் இவ்வுலகில் நம்முடைய பொறுப்புணர்வை மறந்துசெயல்படுதல் என்பதல்ல. இயேசு கிறிஸ்து கற்றுத்தந்த இறைவேண்டலில் நாம் வேண்டிக்கொள்ளுகிறபடியே கடவுளின் விருப்பம் விண்ணுலகினைப் போன்று மண்ணுலகிலும் செயல்படும் என்பதையும் அதில் நமது பொறுப்பாண்மையுள்ள செயல்பாடு மிக அவசியம் என்பதையும் உணர்வோம், இறை ஆசி பெறுவோம்.

அருள்திரு. R. **ஸ்டேன்லி நேசராஜ்**



**09-02-2014** *குணமாக்கும் திருப்பணி ஞாயிறு*

# மனதுருகும் அன்பும் நலமாக்குதலும்
## COMPASSIONATE LOVE AND HEALING

| | |
|---|---|
| எசா. 57 : 14-21 | யாக். 5 : 1-6 |
| திபா. 103 : 1-14 | மாற். 2 : 1-12 |

*"அவன் சென்ற பாதைகளைக் கண்டேன்; ஆயினும் அவனைக் குணமாக்குவேன். அவனை நடத்திச் சென்று அவனுக்கு மீண்டும் ஆறுதல் அளிப்பேன்."* எசா. 57 : 18

**இறைவேண்டல் :** அனைத்து ஆற்றலுமுள்ள, என்றும் வாழும் கடவுளே, உம் திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி, நலங்குன்றியோர்களைக் குணமாக்கி, முழு வாழ்வைத் தருகிறவரே! கஷ்டப்படும் உலகைக் கருணையுடன் கண்ணோக்கிப் பார்த்து, கிருபையினாலும், வல்லமையினாலும் மக்களைப் புதுப்பியும். உமது பாதுகாக்கும் அன்பால் அவர்களை ஒளிரப்பண்ணியருளும். அதனால் அவர்கள் உமது நலமாக்குதலின் கருவிகளாகச் செயலாற்றி, முழுமையின் முன்சுவையையும், சமாதானத்தையும் உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் கொடுக்க முடியும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

'நலமடைதல்' அல்லது 'குணமாகுதல்' என்பது உடலளவிலோ, மனதளவிலோ அல்லது இருநிலைகளிலுமோ ஏற்படும் பாதிப்பிலிருந்து மீண்டு இயல்புநிலைக்குத் திரும்புவதாகும். உடல் மற்றும் மனநலப் பாதிப்பு வாழ்வின் அனைத்துச் செயல்பாடுகளையும் முடக்கிவிடுகிறது. எனவே, நலமடைதல் என்பது வாழ்வின் முழுமையான, சிறப்பான செயலாக்கத்தைக் குறிப்பிடுவதாய் அமைகின்றது.

பழைய ஏற்பாட்டில் குணமாக்குதல் அல்லது நலமளித்தலைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ள " நிபுத்' என்ற எபிரேயச் சொல்லின் பொருள் 'உடைந்ததை ஒன்றிணைத்தல்' அல்லது 'பழுது நீக்கிச் சீராக்குதல்' என்பதாகும். Therapy (சிகிட்சைமுறை) என்ற ஆங்கிலச் சொல்லின் மூலச் சொல்லாகிய 'Therapio' என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் கரிசனையுள்ள பராமரிப்பு என்பதாகும்.

இசாக் வால்டன் என்ற அறிஞர், "உடல் நலன் பேணு. அப்படிச் செய்து கடவுளைப் போற்று. நல்மனசாட்சிக்கு அடுத்ததாய் உடல் நலனைப் போற்று; ஏனெனில் உடல் நலன் என்பது அறிவுக்குரிய மானுடராகிய நாம் பணத்தால் பெற்றுக்கொள்ள இயலாத கடவுளின் மாபெரும் அருட்கொடை"

எனக் கூறுகிறார். Look to your health; and if you have it, praise God, and value it next to a good conscious; for health is the second blessing that we mortals are capable of a blessing that money cannot buy. - Izaak Walton

உலக சுகாதாரக் கூட்டமைப்பு (WHO) ஆரோக்கியம் என்பது நோயின்றி வாழ்வது மட்டுமன்று; அது உடல், மனம் மற்றும் சமூகம் சார்ந்து நலமாக வாழும் நிலை எனக் குறிப்பிடுகிறது. கடவுள் மானுடர்மேல் அன்பும், மனதுருக்கமும் கொண்டு நலமளிக்கிறார். இந்தக் குணமாக்கும் திருப்பணி ஞாயிறில் முழுநலம் பெற கடவுள் தரும் அழைப்பையும், ஆலோசனைகளையும் திருமறை வெளிச்சத்தில் கண்டறிந்து ஏற்போம்.

### 1. வழிகளைச் சீராக்கி நலமளிக்கிறார் :

எசா. 57:18a அவன் சென்ற பாதைகளைக் கண்டேன்; ஆயினும் அவனைக் குணமாக்குவேன்.

மானுடம் செல்லும் வழிகளைக் கடவுள் கூர்ந்து நோக்குகின்றார். மனம் போன போக்கில் செல்லும் நிலையை மாற்றி, சரியான பாதைக்குத் திரும்ப கடவுள் விரும்புகின்றார். பேராசை என்னும் பெருந்தீமையின் பிடியில் சிக்கி சுயநலப்போங்குடன் செயல்பட்ட இஸ்ரயேலர் மேல் சினங்கொண்டு அவர்களை அடித்து நொறுக்கினேன் என ஆண்டவர் கூறுகின்றார். இத்தீயச் செயலால் உடனிருந்து பாதுகாக்கும் கடவுள் சிறு இடைவெளி ஏற்படுத்தி நிற்கும் நிலையைக் காண்கிறோம் (எசா. 57:17) எனினும் பேரிரக்கம் கொண்ட கடவுள் மீண்டும் நெருங்கி வந்து நலமளிக்கிறார்.

பேராசையால் பெருஞ்செல்வம் சேர்த்த சகேயு மனஅமைதி (நலம்) இழந்து தவித்தார். கிறிஸ்து இயேசுவால் சந்திக்கப்பட்ட போது பேராசையால் நீதியற்ற வழியில் சம்பாதித்துக்கொண்டவைகளால் பாதிக்கப்பட்டோருக்கு நான்கு மடங்காகச் செலுத்திடவும், சொத்தில் பாதியை வறுமையில் வாடுவோர்க்கு வழங்கிடவும் முன்வந்தார். சகேயு தன் வாழ்வின் தவறான இயக்கத்தைச் சீராக்கியதால் இயேசுநாதரின் நலமளிக்கும் விடுதலைப் பிரகடனத்தைப் பெற்று மகிழ்ந்தார்.

எசாயா 58-ம் அதிகாரத்தில் வெளிவேட உபவாசம் வாழ்வு தரஇயலாது; நீதி செயல்களும், உண்மைப் பகிர்வுமே நலமான வாழ்வை வழங்க இயலுமென இறைவாக்கினர் வாயிலாய் கடவுள் தெளிவுப்படுத்துகின்றார். நலமான வாழ்வு துளிர்க்கவும், கடவுளின் பாதுகாவல் பெறவும் இதுவே வழி என்கிறார் (எசா.58:8) விசுவாசக் கூட்டமான நம்மை நாமே மெச்சிக்கொள்ளும் நிலையில் வாழ்வின் வழிகளை ஆய்வுசெய்து நலம்பெற நாடுதல் அவசியம்.





### 1. படைப்புகளின் மீது ஆளுமை (தி.பா. 8:6)

கடவுள், படைப்புகள் அனைத்தையும் மனுக்குலத்துக்குக் கீழ்ப்படுத்தியுள்ளார். அதாவது பொறுப்பாகக் கவனித்து அழகுப் படுத்துங்கள் என்றே பணித்தார். தம் சாயலில் மனுக்குலத்தைப் படைத்து தம்மைப் போலவே படைப்புகள் கரிசனையுடன் இருக்கவேண்டும் என்றே எதிர்பார்க்கிறார். (தொநூ. 1:28) மண்ணுலகை நிரப்பி படைப்பனைத்தையும் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் என்பது அடக்கி ஆளுங்கள் என்று அல்ல (ஆதி.1:15). ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்துங்கள் என்பது உழைக்கவும் பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்பது பராமரிக்கவும் வழங்கப்பட்ட பொறுப்பான பணி என்பதை உணர்தல் அவசியம்.

“ஓசோன் படலத்தில் ஓட்டைகள், அமிலமழை, தேவையற்ற சூரியக் கதிர்கள் பூமிக்குள் நுழைதல், ஆபத்தை விளைவிக்கும் அணுக்கதிர்களின் (Hazardous atomic rays) உற்பத்தி, நில அதிர்வுகள், சுனாமி, காலநிலை மாற்றங்கள் போன்ற எதிர்விளைவுகளால் படைப்புகள் அனைத்தும் ஆபத்தை எதிர்நோக்கிக்கொண்டே இருக்கின்றன. இந்நிலை நமது கரிசனையான ஆளுமையினாலேயே சீராக்கப்படவியலும்.

### 2. படைப்புகளைப் பேணிக்காத்தல் : (எசாயா 65:18)

படைப்பைப் பேணிக்காக்கும்போது மகிழ்ச்சி ஏற்படும் என்று வலியுறுத்துகின்றார் இறைவாக்கினர். இயற்கை சார்ந்த சுற்றுச் சூழலும் (Physical Environment) உயிரினங்கள் சார்ந்த சுற்றுச் சூழலும் (Biological Environment) சமுதாய சுற்றுச்சூழலும் (Social Environment) படுமோசமாகப் பாதிக்கப்பட்டு சீர்கெட்டு வருகிறது. (உரோ. 8:22) இந்நாள்வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கிறது.

புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், நவீனமயமாக்கல் போன்றவற்றால் படைப்புகள் அனைத்தும் அழிவுகளைச் சந்திக்கின்றன. படைப்புகள் பாதுகாக்கப்பட்டால் (எசாயா 65:17-25) பச்சிளங்குழந்தை இறக்காது. முதியவர்களும் பெலன் பெற்றிருப்பர், வீடு இல்லாதோர் இருக்கமாட்டார். உழைப்பின் பலன் வீணாவதில்லை என்பது இறைவாக்கினர் வழி கடவுள் தரும் தெளிவு. எனவே, மனுக்குலத்துக்கும், படைப்புகளுக்குமிடையே நெருங்கிய உறவு ஏற்பட படைப்புகளைப் பேணிக்காக்க திருமறை சுட்டுகிறது. படைப்புகளைப் பேணிக்காத்து நன்மை பெற நம்மை இறையவர் ஏற்படுத்தியுள்ளார். அதைப் பொறுப்பாண்மையுடன் நிறைவேற்றுவது நமது கடமை.

**16-02-2014**

*உயிர்ப்புக்கு முன்வரும்*
*ஒன்பதாம் ஞாயிறு*

# படைப்பின் மீதான பொறுப்பாண்மை

## STEWARDSHIP OF CREATION

எசாயா 65 : 17-25 கொலோ. 1 : 15-20
திபா. 8 மத். 6 : 25-34

*“மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர் வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்.”* கொலோ. 1 : 20b

**இறைவேண்டல் : படைப்பின் ஆண்டவரே! படைப்பிலே இருக்கின்ற அழகிற்காக, பல்வேறு வகைகளுக்காக நன்றி செலுத்துகிறோம். பாருலகின் ஒழுங்கு உமது வல்லமையினாலும் தீர்மானத்தினாலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உமது வல்லமையையும், ஞானத்தையும், அன்பையும் தியானிக்க கிருபை தாரும். பொறுப்புள்ள உக்கிராணக்காரராக எல்லாப் படைப்புகளுள்ளும் இருக்க அருள்தாரும். உமது படைப்புக்களோடுள்ள ஒன்றிப்பை உணர்ந்து வாழ அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.**

கடவுளோடு படைப்பையும் தொடர்புப்படுத்த வேண்டுமா? கடவுள் ஒருமுறை படைத்துவிட்டு ஓய்ந்துவிட்டாரா? சைவ சித்தாந்தர் தனது பாடல்வரிகளில் ‘‘படைத்தான் படைப்பை மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க’’ - என அடுக்குகிறார். ஆதிப் பெற்றோரிடம் இந்தப் பூமியை ஆண்டுகொள்ள அதிகாரம் கொடுத்துவிட்டார். எனவே படைப்புகள் மனுக்குலத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுவிட்டது; ஆகவே விரும்பியபடி படைப்புகளை அடக்கி ஆளலாம் என்ற சிந்தனை தவறானது.

இறுதியான மீட்பின்பொருளைத் துல்லியமாகத் தெரிந்துகொள்ள கடவுளுடைய படைப்புச் செயலின் நோக்கத்தை நிலை நாட்ட நமது பொறுப்பாண்மை நிறைவேற்றப்பட வேண்டும். இந்திய கிறிஸ்தவ இறையியலாளர் பி.டி.தேவானந்தம் அவர்கள் புதிய படைப்பைப் பற்றிய சிந்தனையாக ‘‘புதிய படைப்பு முடிந்துவிட்ட செயல் என நினைக்கிறோம்; படைப்பைத் தொடங்குபவரும், நிறைவு செய்பவரும் அவரே’’ என குறிப்பிடுகிறார்.

படைப்பின் மீதான நமது பொறுப்பான்மையினைத் திருவாக்குகள் சார்ந்து சிந்திப்போம்.





### 2. வாழ்வின் உறவுகளை உறுதிப்படுத்தி நலமளிக்கிறார்:

எசா. 57:18b அவனை நடத்திச்சென்று அவனுக்கு மீண்டும் ஆறுதல் அளிப்பேன்.

சுயநலம், பேராசை போன்ற தீமைகளால் விரிசல்கள் ஏற்பட்டு அமைதியற்ற நிலை மானுடர்க்கு ஏற்படுகிறது. வேலையாட்களின் கூலியைச் சரியாய் வழங்காதோரும், கொடுக்காமல் ஏமாற்றிவிடுவோரும் மனஅமைதியுடன் வாழ இயலுவதில்லை. சுயலாபத்திற்காக நேர்மையாளரைக் குற்றவாளியெனச் சான்றளிப்போரும், தீர்ப்பிடுவோரும் சமாதானமாய் செயல்பட இயலாது. (யாக். 5 : 4, 6)

இவர்கள் தங்கள் வளங்களைப் பெருக்கி, உறவுகளை உடைத்து ஆடம்பர வாழ்வுக்கு அடிபணிந்தவர்கள். பிறர்நலன் மறந்து தன்னலமே பெரிதெனத் தீர்மானித்துக்கொண்டவர்கள். எனவே, உறவுகளைச் செப்பனிட்டு, உறுதிப்படுத்தி ஆறுதலும் வாழ்வு நலமும் பெற கடவுள் ஆலோசனை வழங்குகின்றார். ஆடம்பரமாகவும், இன்பமாகவும் வாழ்ந்தீர்கள் என்பதைக் குறிப்பிட பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கச் சொல் ‘truplein’ என்பதாகும். இச்சொல்லின் மூலவார்த்தை ‘to break down’ என்பது உடைந்து செல்லுதல் எனப் பொருள் தருகிறது. உடன் வாழும் மக்களுக்கு உதவி செய்ய வாய்ப்பிருந்தும் செய்யாமல், உழைத்தோரின் தாலியை வஞ்சகமாய் அபகரித்துக் கொள்ளும் நிலை நலமான வாழ்வின் செயல் அல்ல என்பது உணர்த்தப்படுகிறது. சுகபோகத் தாகத்துடன் வாழ்தல், இணைந்து வாழும் இறைத்திட்டத்திலிருந்து இடம்பெயர்தல் அல்லது உடைந்து செல்லுதல் ஆகும்.

பேராசையால் வாழ்வின் வளங்களை அளவுக்கதிகமாக பெருக்கிக்கொள்ளும் சிலரது முயற்சியால் வறுமை மற்றும் பட்டினியால் வாடுவோரின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே செல்கிறது. சத்துப் பற்றாக்குறையால் சக்தியிழந்து இரத்தசோகை, மாலைக்கண், ஸ்கர்வி, ரிக்கெட்ஸ் போன்ற நோய்களுக்கு ஆளாகும் குழந்தைகளின் நலன் பேணப்படவேண்டியது இன்றைய கட்டாயம். 2013-ம் ஆண்டு ஆகஸ்ட் 26-ஆம் நாள் நம் நாட்டின் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உணவுப் பாதுகாப்பு மசோதா பகிர்வின் பண்பை மேம்படுத்தி, உறவு கரிசனையை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. இதன் வாயிலாய் கடவுளின் மனதுருகும் அன்பும், நலமளித்தலும் நம்நாட்டு மக்களில் செயல்படுவது உறுதி.

ஆடம்பரமே குடும்ப வாழ்வின் சிறப்பை நிர்ணயிக்கும் என்ற நிலைப்பாட்டுடன் வாழ்வோர் மனைவி அல்லது கணவரை பணம் காய்க்கும் மரமாகக் கருதுவதால் உடைவுக்குச் செல்லும் குடும்பங்கள் பல. உன் வீட்டில் பணம் வாங்கி வா என மனைவியை அடிக்கடி துரத்தும் கணவனால் உள்ளமுடைந்து ஒதுங்கிக்கொள்வதே வழியென மனமுறிவுக்குச் செல்வோர் உளர். வாழ்க்கை வசதிகளைப் பெருமைக்காகப் பெருக்கிக்கொள்ள கணவனின் வரவு தாண்டி செலவு செய்து கடன் சுமையை குவித்து உறவு உடைவுக்கு வித்திடும் பெண்டிரும் உண்டு. உறவின் உறுதிப்பாடே நலமான வாழ்வு என்ற புரிதல் இறைப்பற்றாளர்களுக்கு இன்று மிக அவசியமாகிறது. மானுட உறவுகளில் கரிசனையின்றி வளம் சேர்க்கும் ஆவல் ஏற்படுத்தியுள்ள உறவு உடைவுகளை எண்ணிப்பார்த்து நம்மைச் சீராக்க முன்வருவோம்.

### 3. வாழ்வின் பற்றுறுதியைப் பலப்படுத்தி நலமளிக்கிறார்:

மாற். 2:5 இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு முடக்குவாதமுற்றவரிடம், "மகளே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார்."

முடக்கு வாதத்தால் முடங்கிக்கிடந்த மனிதனை இயேசு கிறிஸ்துவிடம் சுமந்து வந்த நால்வரின் நம்பிக்கை அம்மனிதர் நலம்பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தது.

உரிய மருத்துவ வசதிகளின்றி பல்வேறு நோய்களால் இன்னலுற்ற திருவிதாங்கூர் மக்களின் துயர்கண்ட மிஷனெறி அருள்திரு. மீட்ஜயர் அவர்கள் அழைத்து வந்த மருத்துவ அருட்பணியாளர் Dr. ராம்சே அவர்கள் 1838 மார்ச் மாதம் தன் மருத்துவப் பணிவிடையை நெய்யூரில் ஆரம்பித்தார். சிறந்த சேவை புரிந்த இவரைத் தொடர்ந்து வந்த மருத்துவ அருட்பணியாளர்கள் அனைவரும் தன்னலம் கருதாத உழைப்பால் நலமளிக்கும் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றினார்கள். இது, அவர்கள் ஆண்டவரிடம் கொண்டிருந்த பற்றுறுதியின் வெளிப்பாடேயாகும்.

தற்காலத்தில் மருத்துவத்துறை மகத்தான வளர்ச்சி பெற்று பல்வேறு உயர்தர சிகிட்சை முறைகளைப் பயன்படுத்தி சிகிச்சையளிக்கப்படுகிறது. இவையனைத்தும் இறைவனின் அருட்கொடையே எனினும் இறைப்பற்றுள்ள வேண்டுதல் நலம்பெறும் வழி; ஒருவருக்கொருவர் குறைகளை அறிக்கை செய்தலே குணமடையும் வாய்ப்பாகும் (யாக். 5:15,16).





இறைப்பற்றாளர்கள் எங்கேனும் சென்று நலம்பெற நாடும் போங்கு இன்றைக்குப் பெருகிவிட்டது. அதற்காக குறிகேட்கவும் மந்திர தந்திரங்கள் செய்யவும் அலையும் நிலை மிக அபத்தமானது. பெலவீனத்தில் இறை ஆற்றல் விளங்கும் என்ற பற்றுறுதியுடன் செயல்படும்போது கடவுள் பலப்படுத்தி நலமருள்வார். வாழ்க்கை என்பது துன்பம் இல்லாத நிலையன்று; துன்பங்களினூடேயும் நலமாக்கும் இறையருள் நாடி நம்பிக்கையுடன் முன்னேறுதலாகும். கடவுளிடம் பற்றுக்கொண்டு இறையச்சத்துடன் வாழ்வோர் அவரது பேரன்புக்குரியவர் (தி.பா.103:11). குற்றங்களை மன்னித்து நோய்களைக் குணமாக்குபவரும் அவரே (தி.பா. 103;3) எனவே, எவ்வித வாழ்வின் இடர்களிலும், நோய், துன்பங்களிலும் பலப்படுத்தி நலமருளும் கடவுளைப் பற்றிக்கொள்தலே இறைமக்களின் சிறப்பாகும்.

என்றென்றும் நலமளிக்கும் கடவுள், நம்வழிகளைச் சீராக்கி நலமருள நம்நிலையுணர்ந்து அவரிடம் செல்வோம். வாழ்வின் உறவுகளை உறுதிப்படுத்தி நலம்பெற இறையருள் நாடுவோம். பற்றுறுதியில் பலமடைந்து இறைநலம் பெறுவோம். நமது பாதைகளைக் கண்டறிந்து சீராக்கி நலமும், ஆறுதலும் அருளும் இறைச்செயல் தொடர நம்மை அர்ப்பணிப்போம், ஆமென்.

அருள்திரு. R. **ஹென்ஸ்லின் நேசராஜ்**

தூய்மைப்படுத்துவார். ஏனெனில் அவர் நம்பிக்கையுள்ளவர், நேர்மையுள்ளவர்.

கடவுளின் படைப்பு பழுதற்றது. நல்லது எனவும் கண்டார். முதல் பெற்றோர் கடவுளின் எதிர்பார்ப்பை சரியாக புரிந்து கொள்ளாமல் தீயோனின் சூழ்ச்சியில் வீழ்ந்துவிட்டதால், இறைவனுக்கும் மனிதனுக்கும் இருந்த உறவுநிலை சிதைந்தது. அதுவே பாவமாகவும் வெளிவந்தது.

மனுக்குலத்தை நியாயப்பிரமாணத்தின்மூலம் மீட்கலாம் என்று நினைத்தார். அதிலும் தோல்வி அதனால், கிறிஸ்துவின் வழி மீட்பு வழங்க கடவுள் தீர்மானித்தார்.

முன் தூதராகிய யோவான் உலகில் அனுப்பப்பட்டு, இயேசுகிறிஸ்துவை உலகுக்கு காட்டியவர். இயேசுகிறிஸ்துவை ஒருவரே உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற ஆட்டுக்குட்டி (யோவான் 1:29) என விடுதலை வழியை காண்பிக்கிறார்.

ரோமர் 8:3 "ஊனியல்பின் காரணமாய் வலுவற்றிருந்த பாவத்திற்கு முடிவுகட்டினார்."

இதற்கு தேவை நம்முடைய குறைகளை அறிவதும், அறிக்கை செய்வதுமே ஆகும். (1 யோ 1:8,9) நீதி. 28:13 "தன் குற்றப் பழிகளை மூடி மறைப்பவரின் வாழ்க்கை வளம் பெற்றது. அவற்றை ஒப்புக்கொண்டு விட்டு விடுகிறவர் கடவுளின் இரக்கம் பெறுவார்."

எ.கா. (i) பார்வோன் "நான் இம்முறையும் பாவம் செய்துவிட்டேன். (யாத் 9:27) மீண்டும் இருதயத்தை கடினப்படுத்தினான்.

(ii) சவுல் "நான் தவறிவிட்டேன்." (1 சாமு 15:30).

(iii) இளையமகன் - "நான் பாவம் செய்தேன்". லூக். 15:21

தங்கள் பாவங்களை அறிந்து கொண்டார்கள். உணர்ந்து கொண்டார்கள். அறிக்கை செய்தார்கள்.

1 யோ 1:7-ல் "...... இயேசுவின் இரத்தம் எல்லா பாவத்தினின்றும் நம்மை தூய்மைப்படுத்தும்."

ஆம்! பாவத்திலிருந்து தூய்மையாக்கும் கிறிஸ்துவின் ஆற்றல்.

### 2. நோயிலிருந்து தூய்மையாக்கும் கிறிஸ்துவின் ஆற்றல்

மாற்கு 1:41 இயேசு அவர் மேல் பரிவு கொண்டு தமது கையை தொட்டு, அவரிடம் "நான் விரும்புகிறேன். உமது நோய் நீங்குக" என்றார்.



**23-02-2014**

*உயிர்ப்புக்கு முன்வரும் எட்டாம் ஞாயிறு*

# மானுடத் தவறுகளும் மன்னிப்பும்

## HUMAN FAILURES AND FORGIVENESS

நீதி. 24:13 - 18 உரோ. 7: 14 - 25

திபா. 121 லூக். 15: 11 - 32

*"நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை; விரும்பாத தீமையையே செய்கிறேன்"*

*உரோ. 7 : 19*

**இறைவேண்டல் : கடவுளே! உமது திருக்குமாரன் இயேசுவின் மூலம் உம்மை வெளிப்படுத்தி, மீட்பின் நோக்கத்தை அறியச் செய்தீரே! இது எங்கள் பெலத்தினாலல்ல, உமது வல்லமையினால். தவறுகள் பல செய்திருந்தும் மன்னிக்கப்பட்டோம், மீட்கப்பட்டோம். உம்முடைய மன்னிக்கும் அன்பின் பிரதிபலிப்புகளாக இருக்க அருள்தாரும். அதின் மூலம் மன்னிக்கப்பட்ட, மன்னிக்கும் சமூகமாக இருக்கவும், ஒப்புரவாக்கப்படவும், முழுமையாக்கப்படவும் அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.**

அமெரிக்கா உளவியல் துறைத் தலைவர் டாக்டர் கார்ல் மென்னின்கர் "பாவத்திற்கு என்ன ஆனது?" (Whatever become of sin?) என்ற புத்தகம் ஒன்று எழுதினார். அப்புத்தகத்தின் தொடக்கத்தில் ஒரு நிகழ்வின் வாயிலாகத் தவறுகளை விளக்குகிறார். 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சிகாகே நகரில் மக்கள் கூடும் இடத்தில் திருத்தொண்டர் ஒருவர் கையில் விவிலியத்துடன் நின்று அப்பாதை வழியாய்ச் செல்லும் ஒவ்வொருவரிடமும் "நீ குற்றவாளி, நீ குற்றவாளி" என்று சொல்லிக் கொண்டிருந்தார். சிலர் ஏளனமாக நகைப்புடன் சென்றனர். பலர் இல்லத்தில் சென்று சிந்தனை செய்தனர். சிந்தனை செய்தவரது உள்ளத்தில் அவரது சிந்தனைக்கேற்ப பெரிய மாற்றங்கள் வந்திருக்கும் என்று டாக்டர் கார்ல் மென்னின்கர் எழுதியிருந்தார். நீ குற்றவாளி என்பது ஒவ்வொருவரின் தவறுகளையும் உணரச் செய்து விடும். இவ்வுலகில் தவறுகள் இழைக்காத மனிதர் இல்லை. (I யோ. 1 : 8). தவறுகளில் வீழ்ந்து கிடப்பதல்ல, தவறுகளை விட்டுச் செயல்படுபவரே மனிதர். "புயலில் கடவுளை நோக்கி வேண்டுதல் செய், ஆனால் படவை ஓட்டிக் கொண்டே இரு என்பது டானிஸ் பழமொழி. நல்லவர் ஏழு முறை விழுந்தாலும் எழுந்து நிற்பர் (நீதி. 24:16). திருத்தூதர் பவுலார் மானுடத் தவறுகளை மூன்று வகைகளாகப் பிரித்துப் பார்க்கிறார்.

## 1. உடல்நிலை சார்ந்த தவறுகள் (உரோ. 7 :15)

மனிதரின் உடலில் இருவகையான போராட்டங்கள் நடைபெறுகின்றன. (a) ஊனியல்பின் இச்சை, (b) தூயாவியாரின் விருப்பம் (கலா. 5 : 17). உடல் நிலை சார்ந்த தவறாகிய ஊனியல்பின் இச்சை வெளிப்படையாக இருக்கின்றது. பரத்தன்மை, கெட்ட வார்த்தை, காமவெறி, சிலை வழிபாடு, பில்லிசூனியம், அழுக்காறு, வெறி, களியாட்டம் என்பவைகளாக (கலா. 5: 19 - 21) சொல்லப்பட்டுள்ளன. உடல்நிலை சார்ந்த செயல்களில் ஈடுபடுவோர் இறையாட்சியை இழந்து விடுவர். ஊனியல்பின் மனநிலை கடவுளுக்குப் பகையானது (உரோ. 8:7). ஊனியல்புக்குரிய நிலையினில் வாழ்வோர் உடை அலங்காரத்தையும், உடல் அலங்காரத்தையும் உலக அலங்காரத்தையும் நாடுவோரேயன்றி உன்னத அலங்காரத்தைச் சிறப்புக்குரியதாய் எண்ணுவதில்லை. ஊனியல்புக்கேற்ப வாழ்வோரின் நாட்டமெல்லாம் அந்த இயல்புக்குரியவற்றின் மீதே இருக்கும் (உரோ. 8 : 5). இயேசு கூறிய காணாமற்போன மகன் உவமையில் இளைய மகனுக்கு தொலைநாடு, நெடும்பயணம், தாறுமாறான வாழ்வு போன்றவை சிறப்புக்குரியவையாகத் தோன்றின (லூக். 15: 13 - 14). இவை வாழ்வில் அமைதிக்கு ரியவைகளாய் அமையவில்லை. உடல் நிலை சார்ந்த செயல்களான ஆடம்பரம், உல்லாச வாழ்வு இவைகளால் அமைதி வருவதில்லை. தந்தையுடன் இருக்கும் பயிற்சியில் தான் அமைதி வருகிறது. அதனைப் பிற்பாடு இளையமகன் புரிந்து கொள்கிறான்.

## 2. உளநிலை சார்ந்த தவறுகள் (உரோ. 7 : 20)

மனிதரின் சிந்தையில் ஏற்படும் தவறுகள் அடிப்படைப் பாவங்களாகும். உளநிலை சார்ந்த தவறுகளுக்குக் காரணம் பாவம். அதனை இருவகைகளில் பவுலார் குறிப்பிடுகிறார். (a) மனம் ஏற்றுக் கொள்ளும் சட்டம் () உறுப்புகளில் இருக்கும் பாவச் சட்டம் (உரோ. 7 : 23). இவ்விரு சட்டங்களும் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாய் இருக்கின்றன. உளநிலைச் செயல்பாடுகளைப் புரிந்து கொள்ள கபிரியேல் மார்ஷல் கூறிய உவமை பொருத்தமானதாக அமையும். நம் நண்பரை தொடர் வண்டியில் ஏற்றி விட தொடர்வண்டி நிலையம் செல்கிறோம், வண்டி புறப்படுகிறது. ஆனால் அவரைப் பார்க்கும் வரை நாம் கையசைக்கிறோம், சிறிது சிறிதாக நமக்கும் அவருக்கும் உள்ள இடைவெளி அதிகரிக்கிறது. ஒரு கட்டத்தில் நண்பரை நம்மால் பார்க்க இயலவில்லை. ஆனால் நம் மனம் அவருடன் பயணம் செய்கிறது என்று கூறுகிறார். அதனைப் போன்று உள் மனதின் பதிவுகள் நாம் பார்க்கும் தீமைகளுடன் பயணம் செய்கிறது. லூக் 15:28-இல் குறிப்பிடப்பட்டுள்ள மூத்த மகன் கருத்தியல் ரீதியாக பாவி. காப்பாற்றப்படுவதை விட அழிக்கப்படுவது நல்லது எனக் கருதும் பரிசேயப் பிரிவினருக்கு ஒப்பாக இருக்கிறார். தந்தைக்குச் செய்யும் சேவையை



**09-03-2014**

*உயிர்த்தெழுதலுக்கு முன்வரும் ஆறாம் ஞாயிறு*

# கிறிஸ்துவின் தூய்மையாக்கும் ஆற்றல்

**CLEANSING POWER OF CHRIST**

சக. 13 : 1-9 — 1 யோவா. 1 : 5-10
திபா. 30 — மாற். 1 : 40-45

*"...அவர் மகனாகிய இயேசுவின் இரத்தம் எல்லா பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்தும்."* 1யோவா. 1 : 7 b

**இறைவேண்டல் :** எல்லா நேரங்களுக்கும், எல்லா இடங்களுக்குமான கடவுளே! சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசு கிறிஸ்துவின் மூலமாக நித்திய ஜீவனுக்கான வாசலைத் திறந்தவரே! உமது சுத்தமாக்கும் ஆற்றலால் எங்களை சுத்தப்படுத்தி, மகிழ்ச்சியோடு உமக்கு சேவை செய்யவும், புதிதாக்கப்பட்ட வாழ்வின் வழியாக நன்றியோடு உமது தூய வழிகளில் நடக்கவும் அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

## முன்னுரை :

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வந்நததின் முக்கியமான நோக்கம் மனிதனையும், சமூகத்தையும் தூய்மைபடுத்துகின்ற ஆற்றல் உடையதாக இருந்தது.

எ.கா. தென் திருவிதாங்கூர் பகுதியில் நற்செய்தி நம்மை சந்திக்கும் முன் அறியாமையின் இருள் நம்மை பிரித்திருக்கிறது. அதன் விளைவாக பாவத்திற்கும், பல்வேறு சமூக தீமைகளுக்கும் அடிமைப்பட்டிருந்தனர்.

ஆனால், இயேசுகிறிஸ்துவின் நற்செய்தி நம்மில் ஏற்படுத்திய தாக்கம் நம்மை முழுமையாய் தூய்மைபடுத்தியிருக்கின்றது.

இயேசுகிறிஸ்துவின் தூய்மையாக்கும் ஆற்றல் நம்மிடம் எவ்வாறு செயல்படுகின்றது என்பதை திருமறை கண்ணோட்டத்தில் சிந்திப்போம்.

(i) பாவத்திலிருந்து தூய்மையாக்கும் கிறிஸ்துவின் ஆற்றல்
(ii) நோயிலிருந்து தூய்மையாக்கும் கிறிஸ்துவிவன் ஆற்றல்.
(iii) சமூகத்தை தூய்மையாக்கும் கிறிஸ்துவின் ஆற்றல்

## 1. பாவத்திலிருந்து தூய்மையாக்கும் கிறிஸ்துவின் ஆற்றல் :

1 யோ. 1:9 "நம் பாவங்களை நாம் ஒப்புக்கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்து குற்றம் அனைத்திலிருந்தும் நம்மை

வினைகளிலிருந்து எவ்வளவு முயன்றும் எழ முடியவில்லை. இந்நிலையில் எகிப்தின் அடிமைத்தனத்தில் உச்சகட்ட வேதனையின் உணர்வில் நொறுக்கப்பட்ட இஸ்ரவேலரின் நிலை இன்று நமக்கும் உள்ளது. இந்நிலையிலிருந்து மீட்டு நம்மை வாழ்விக்க இயேசு கிறிஸ்து தம்மையே மீட்கும் பொருளாக்கினார். பாவத்தின் அகோரத் தண்டனையை ஏற்று நம் பாவங்களை நிவிர்த்திச் செய்து மீட்டு எடுக்கின்றார். வழி தவறி சேற்றில் விழுந்த தன் அன்பு மகனைச் சேற்றில் இறங்கி தூக்கி கரை சேர்ப்பதைப் போன்று நமக்காகப் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை ஏற்று பாவத்தின் கொடிய ஆக்கினையினின்று மீட்டு அழுக்கு நீங்கக் கழுவி தூய்மைப்படுத்துபவர் இயேசுகிறிஸ்து. நம்மை மீட்க தம்மையே விலைக்கிரயமாக்கினார்.

### 3. உருவாக்குகிறவர்

பாவ சேற்றிலிருந்து விடுவித்தவர் தூய்மையின் வழியில் நீதியைச் சுதந்தரித்துக் கொள்ள உருவாக்குகிறவர்.

திப. 9:15-ன்படி பவுலை எப்படி நற்செய்தி அறிவிக்கும்படி தம் பாத்திரமாகத் தெரிந்துகொண்டு செயலாற்றியது போல் நம்மையும் உருவாக்குகிறார். எதற்கு நம்மை உருவாக்குகிறார் ? அப். 20: 32ன்படி இறைமக்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமடையவும், சுதந்திரத்தைப் பெறவும் இறைவார்த்தையை அறிவிக்கவும் மீட்டலும் உருவாக்குதலும் மீட்பின் முழுமை பெற கிறிஸ்துவின் அன்பின் பணி அடித்தளமாகின்றது. இறைவன் அதி தூயவர் ஆகையால் நீங்களும் தூயவர் ஆகுங்கள் என்கிறார்.

பாவ அடிமைத்தனத்திலிருந்து வாழ்வுக்கு நேராய் மீட்டு எடுத்தவர். நம்மைப் புதுப்படைப்பாக்கி நிலையான மீட்பின் முழுமைபெற வழிநடத்துகிறார். இறைமகன் இயேசுகிறிஸ்துவின் போதனை வழியில் நடந்து முழுமையான மீட்பினை உரிமையாக்குவோம்.

அருள்திரு. J. **ஜேம்ஸ் ஞானரோஸ்**





அன்பின் அடிப்படையில் செய்யாமல் எதிர்பார்ப்புடன் செய்கிறார் (லூக். 15:29). இச்சிந்தனையுடன் நான் மட்டும் எப்படியாயினும் வாழ வேண்டும் என்ற சுயநலப் போக்குடையோர் இன்றும் சமுதாயத்தில் இல்லாமல் இல்லை.

### 3. உறவு நிலை சார்ந்த தவறுகள் : (உரோ. 7 : 24-25)

தவறு செய்வதனால் கடவுளுக்கும் மனிதருக்கும் உள்ள உறவுநிலைச் சிக்கல்களையும் பவுலார் கூறுகிறார். மனதால் கடவுளின் சட்டத்திற்கு கட்டுப்பட்டுள்ளேன். ஊனியல்பினால் பாவத்தின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்கிறார். கடவுளின் ஆளுகைக்குள் மனிதன் இருக்க வேண்டும் என்பது கடவுளின் எதிர்பார்ப்பு. இவ்வாளுகையை விட்டுச் சென்ற இளைய மகன் பன்றிக்கு உணவளிப்பவன் சபிக்கப்பட்டவன் என்ற யூதச் சட்டத்துக்குப் பங்காளியாகிறான். யூதர்களால் வெறுக்கப்பட்ட பன்றிகளுடன் அடையாளப்படுத்தப்பட்டான். பகைமை, சண்டைச் சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு இவைகளால் உறவு நிலை சார்ந்த தவறுகள் ஏற்படுகின்றன (கலா. 5:20). உறவுநிலையைச் சரி செய்ய உண்மையான திராட்சைச் செடியாய், உண்மையான ஆயராய் இயேசு உலகில் வந்தார். சமூகத்தில் இழிவாகக் கருதப்பட்ட சகேயுவின் வீடும் ஆண்டவருக்குத் தூரமாக இருக்கவில்லை (லூக். 19:5). இன்றையச் சூழலில் தங்களை மட்டும் நீதிமான்கள், தூயவர்கள் எனப் பிரித்து பிரிவினைக்குத் துணை போகும் சுயநலமிக்கோரும் வலம் வருகின்றனர். ஆனால் தந்தையை விட்டுச் சென்ற இளைய மகன் சுய உணர்வு பெற்று தன் தவறை ஒப்புக் கொண்டு தந்தையிடம் திரும்புகிறான். பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானிகள் நீண்ட நாள் ஆராய்ச்சிக்குப் பின் கோழிக் குஞ்சுக்குக் குயில் போன்ற குரலைக் கொடுக்க முடியும் எனக் கண்டு பிடித்துள்ளனர். குயிலின் மூளையிலிருந்து ஒரு குறிப்பிட்ட தசைநாரை எடுத்து கோழி முட்டையில் வளர்ந்து கொண்டிருக்கும் கோழிக் குஞ்சின் மூளையில் செலுத்தி விட்டால் கோழிக் குஞ்சு பொரித்து வெளியில் வரும்போது குயிலின் குரல் அதற்குக் கிடைக்கிறது. இது வியப்பான கண்டுபிடிப்பு. அதைவிட பெரிய வியப்பு என்னவெனில் கடவுள் கிறிஸ்துவின் சிந்தையை நமக்குக் கொடுத்திருக்கிறார். (Iகொரி. 2:16). இச்சிறப்பைப் பெற்றிருக்கும் மானுடர் மானுடத் தவறுகளைக் களைந்து கிறிஸ்துவின் சிந்தையுடன் செயல்படவேண்டும். தவறுகளிலிருந்து திருந்தி வாழ வரி தண்டுபவர் தம் மார்பில் அடித்துக் கொண்டதனைப் போன்று நம் குற்ற நிலை உணர்ந்து தந்தையிடம் செல்வோம். (லூக். 18:13). பாவத்தால் மரித்த முன்னால் உள்ள நிலையுடன் மீட்பினால் உயிர்த்த பின் உள்ள நிலையினையும் பெற்றுக் கொள்வோம் (லூக். 15:32). ஆண்டவர் அதற்குரிய அருளைத் தந்தருள்வாராக, ஆமென்.

அருள்திரு. S. **கிரீஷ் குமார்**

**02-03-2014**

***உயிர்ப்புக்கு முன்வரும் ஏழாம் ஞாயிறு***

# மீட்டுருவாக்கமும் மீட்பும்
## RESTORATION AND REDEMPTION

| | |
|---|---|
| எசா. 44 : 21-28 | தி.ப. 20 : 13-35 |
| திபா. 6 | மத். 8 : 5-13 |

***"என்னிடம் திரும்பி வா, நான் உனக்கு மீட்பளித்து விட்டேன்."*** *எசா. 44 : 22b*

**இறைவேண்டல் : கடவுளே! உமது திருக்குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி மீட்பையும் மீள்உருவாக்கலையும் ஏற்படுத்தினீரே. உமது ஆற்றலைத் தந்து உமது மீட்பை அனுபவிக்க பறைசாற்ற அருள்தாரும். அதன்மூலம் விடுதலையின் சின்னங்களாக முழு உலகிற்கும் காணப்பட அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.**

ஏசாயா தீர்க்கர் வழி இறைவன் தம் அன்பின் மீட்பின் செயலை இஸ்ரவேல் மக்களுக்குச் சுட்டி காட்டுகின்றார்.

உன் மீறுதல்களை, பாவங்களை மேகத்தைப் போலவும், கார்மேகத்தைப் போலவும் அகற்றி விட்டேன். ஏனெனில் நான் உன்னை உருவாக்கியவர். படைத்தவர், தெரிந்து கொண்டவர், மேலும் நீ என்றும் என்னால் மறக்கப்படாதவன் என்கிறார்.

ஓரிறைக் கோட்பாட்டை மறந்து. இறைவனின் அன்பின் வழிகாட்டுதலை மறுதலித்து விக்கிரக வழிபாட்டிற்கும், தீய செயலுக்கும் அடிமையாக்கப்பட்டு வாழ்வு இழந்து நிற்கும் இஸ்ரவேலர்களைப் பார்த்து இவ்விதம் கூறுகின்றார்.

தொநூ. 1:26ன் படி இறைவனின் திரித்துவ தன்மையின் படி இறைசாயலிலும் ரூபத்திலும் மனிதனை உருவாக்கினார். அவர்கள் பூமியில் இறைவனால் படைக்கப்பட்ட படைப்புகளைப் பாதுகாக்கவும் ஆளுமை செய்யவும் ஆசீர்வதித்தார். ஆளுகை வழி மனிதனுக்கு பொறுப்பாண்மையைச் சுட்டிக்காட்டினார். ஆனால் மனிதன் கீழ்ப்படியாமையால் தன்னையே கறைப்படுத்தினான். திரித்துவ இறைவனின் சாயல் ரூபத்திலிருந்து வீழ்சியடைந்தான் பாவத்தில் வீழ்ந்து பாவ சாயலானான். எனவே பாவத்தின் சம்பளமாகிய மரணத்தின் பிடியில்





அமிழ்ந்து போனான். இந்நிலையில் மானிடரை மீட்டு, மீண்டும் புதுபடைப்பாக்கி முழுமையான மீட்பை பெற வழிகாட்டுகின்றார். கிறிஸ்துவின் வாழ்வுப் பணியின் வாயிலாக எப்படி நம்மை முழுமையான மீட்புக்கு வழி நடத்துகின்றார் எனத் தியானிப்போம்.

### *1. மீட்பவர்*

மனிதனின் பாவத்தால் பாவ சாயலுக்குள் அடிமையாகின்றான். இந்நிலையில் பாவத்தின் விளைவாகிய தீமையின் பிடிக்குள் அமிழ்ந்து விடுகின்றான். எனவே நித்திய வாழ்வு என்ற உயர்நிலை பெற முடியாதவனாகி ஆத்துமா வியாகுலத்தாலும் பெலனற்று வியாதிக்குள்ளும், துயரத்துக்குள்ளும் பிடிக்கப்பட்டவனாகின்றான். இந்நிலையில் இறை உறவு சிதைக்கப்படுகிறது. மனித உறவில் நம்மைத் தகுதிப்படுத்தி உருவாக்குகின்றார். பாவசாயலிருந்து திரித்துவ இறைவனின் சாயலில் புதுப்படைப்பாக உருவாக்குகின்றார். 1கொரி. 3:6ன் படி புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரராக நம்மைத் தகுதிபடுத்துகின்றார். மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியர். பாவத்தை குறித்தும், நீதியை குறித்தும் நியாயத்தீர்ப்பை குறித்தும் கண்டித்து உணர்த்தி சகல சத்தியத்தின் பாதையில் இறைவனின் செயல் திட்டப் பாத்திரமாக உருவாக்குகிறார்.

அப்பா, பிதாவே என்று அழைக்கும் புத்திர சுவிகார ஆவியைத் தந்து அவருக்குள் நாமும், நம்மில் அவரும் இணைந்து மீட்பின் முழுமைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

### *2. மீட்பை முழுமையாக்குகிறவர்*

நிலையான மீட்பின் முழுமைபெற மீட்கப்பட்டவன் மீட்கபட்டுக் கொண்டிருத்தல் மிக அவசியம்

முற்றும் முடிய நிலை நிற்பவன் மீட்பைச் சுதந்தரித்து அவருடன் வாழும் உரிமைக்குள்ளாகின்றான். மீட்பு தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேலருக்கு மட்டுமல்ல எல்லா மக்களுக்குமுரியது. இயேசு கிறிஸ்துவின் வாழ்வையும் பணியையும் அடித்தளமாகக் கொண்டு செயல்படுவோர் நித்திய மீட்புக்குரியவராவார். வெளிப்படுத்தல் 21:24 நித்திய மீட்பினை சுதந்தரிப்போர் இறைவனின் ஆட்சிக்குரியோராய் வாழ்வு பெறுவர். இவ்வுலக வாழ்வில் இறைவனுக்குள் வெற்றி பெறுபவன் நிலையான மீட்பினைச் சுதந்தரிப்பான். இந்நிலையில் தான் மீட்பு பரிபூரணமடைகிறது. சிதைக்கப்பட்டு மனிதநேயம் இழந்து, சமாதானமற்று பயத்தின் பிடியில் அடிமையாகி வாழும் நிலை. தான் செய்த தவறால் வந்த

கொடுத்து இறைப் பிரசன்னத்தை இழந்து கொண்டிருக்கும் நிலை மாற வேண்டும். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையில் (பிலி.2:5) வழிபாடு அமைதல் சிறப்பானது. வெறுமையாக்குதல், பணிந்தடங்குதல், இறைத் திருவுளத்திற்கு ஒப்படைத்தல் எனும் கிறிஸ்து இயேசுவின் மனநிலையில் நாம் வழிபடும்போது மட்டுமே உன்னத அனுபவத்தை உணர முடியும். அதற்கு நம்மை மறைத்துள்ள சமூகத் திரைகளான சடங்குகள், மரபுகள், வேறுபாடுகள், ஏற்றத் தாழ்வுகள் எனும் பிரிவினை நிலைகள் தகர்க்கப்பட வேண்டும். இதையே நம்மிடம் ஆண்டவரும் எதிர்பார்க்கிறார். (யோவா. 4:23) விழிப்புடன் வழிபடுவதால் வியத்தகு செயலைக் காணும் விழிகளை பெறுகிறோம். ஆகவே உயிராற்றலின் மூச்சோடு வழிபாட்டில் ஒன்றிணைவோம்.

### 3. இறை உண்மையோடு தொழுதல் : (ஆமோ. 4 : 24)

வழிபாடு மானிட வாழ்வின் இயக்க ஆற்றலாக அமைதல் வேண்டும். அப்படியெனில் மட்டுமே சமூக நிலையில் வாழ்வின் மதிப்பீடுகள் ஒளிர்ந்திட முடியும். ஆகவே தான் இறைவாக்கினராகிய ஆமோஸ் நீதி வெள்ளமெனப் பொங்கி வருக ! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக என்கிறார். மட்டுமல்ல உண்மையாக குறிப்பிடப்படுபவர் இயேசு கிறிஸ்துவே (யோவா. 14 : 6). ஆகவே அவரோடு ஒன்றித்து வழிபடும்போது புத்தாக்கம் பெறுகிறோம். நமக்குள் மறைந்துள்ள உண்மையற்ற, அநீதமான செயல்கள் வேரற்றுப் போகின்றது. ஏனெனில் இயேசு கிறிஸ்து பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் பொருளற்ற வழிபாட்டு சடங்கை கடுமையாக எதிர்த்தார். அவர்களை கண்டனம் செய்தார், மட்டுமல்ல அவரே உண்மைக்கு இலக்கணமாக வாழ்ந்து முன் மாதிரி காட்டினார். அன்பு, பரிவு, கனிவு, பகிர்வு, மன்னித்தல், வெறுமையாக்குதல், சிலுவைப்பாதையேற்றல், உயிர் பெற்றெழல் எனும் நல் தடயத்தினில் நாமும் பயணிக்க அழைப்பு தந்தார். உண்மையை பின்னுக்கு தள்ளி உலக இன்பத்தில் உலாவரும் நவீன கால கட்டத்தில் நமது வழிபாடு பொருள் நிறைந்ததாகவும், ஆன்மீக நறுமணம் நிறைந்ததாகவும் இருத்தல் வேண்டும். உண்மையை அறிந்தவர்களாக மட்டுமல்ல, உண்மையால் விடுதலையும் பெற்றவர்களாக (யோவா 8 : 32) கிறிஸ்து இயேசுவில் வழிபடுதலே சிறப்பானதாகும்.

இயேசு கிறிஸ்துவின் திரு உதிரத்தால் பெற்றுக்கொண்ட திருச்சபை, போலித்தனத்திற்கும், ஏமாற்றுதலுக்கும், தீவினை பரப்புதலுக்கும் முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும். கடவுளை வழிபடுவதற்குரிய வழிமுறைகளை தெளிவாக திருமறை வழி எடுத்துக்கூறி இறையாட்சிக்குரிய நிலையில் இறைமக்களை ஒருமுகப்படுத்துவது சிறப்பானதாகும். நமது வாழ்வே வழிபாடாகட்டும். அதுவே ஆண்டவரிடம் மக்களை ஒன்றிணைக்கட்டும்.

அருள்திரு. இரா. **சாம் கிறிஸ்டோபர்**





மனித வாழ்வு பாவத்துக்கும் நோய்க்கும் தொடர்பு உண்டு. இயேசு நாதர் வாழ்ந்த காலத்தில் யூத சமூகத்தினரால்-தொழுநோய் இறைவனது சாபம் என்று கருதினர். தீட்டுள்ளவன் என்று கருதினர். பாவத்தின் விளைவால் தண்டனை என்று கருதினர். பாவத்தின் விளைவால் தண்டனை என்று கருதினர்.

இதனால் குடும்ப உறவில் இருந்தும், சமூக உறவில் இருந்தும் பிரித்தனர். பட்டணத்திற்கு வெளியே தள்ளப்படும் சூழல். எல்லாராலும் புறக்கணிக்கப்பட்ட நிலை.

தவறான வழியில் வாழ்ந்து, உடல் அளவில் பாதிக்கப்பட்டோரையும் நோய் தொற்றியிருக்கும் நிலை காண்கிறோம். இவர்களும் புறம்பாக்கப்பட்டவர்களாகவே உள்ளனர்.

இந்த சூழ்நிலையில் இருந்த மனிதனை தூய்மைப்படுத்த ஆண்டவர் விரும்பினார். இதற்கு அடிப்படை விசவாசம் மாற்கு 1:40. ஒருநாள் தொழுநோயாளர் ஒருவர் இயேசுவிடம் வந்து நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும் என்று முழந்தாள்படியிட்டு வேண்டினான்.

இயேசுகிறிஸ்துவால் என்னை சுத்திகரிக் முடியும் என்று பணிந்து, விசுவாசத்துடன் கேட்கிறான்.

இந்த விசுவாசத்தின் ஆழத்தில் வெறும் உடல் நோயை குணப்படுத்த மட்டுமல்ல

- மனக்காயங்கள் ஆற்றப்பட
- பிரிக்கப்பட்ட உறவை பெற்றுக்கொள்ள
- இழந்து போன மனித மாண்பை பெற
- மறுக்கப்பட்ட மனித உரிமைகளை பெற்றுக்கொள்ள

கிறிஸ்துவின் ஆற்றல் உதவி செய்கிறது

புறக்கணிக்கப்பட்ட பாவிகளையும், நலமற்றோரையும் இயேசு தொட்டு, தோழமையை உண்டாக்கினார்.

தொழுநோயை தொட்டால் சட்டபூர்வமாக தீட்டு என்று கூறும்போது, இயேசு கரிசனை கொண்டு, மனித நேயத்துடன் தாய்மை படுத்தினார்.

லேவி. 13:9-15-ல் தொழுநோயாளர் தீட்டுள்ளவன் என்று இப்பகுதி சொல்லுகிறது.

மாற்கு 2:5-ல் முடக்குவாதமுற்றவன்-பாவத்தை மன்னித்த கிறிஸ்து

மாற்கு 2:11-ல் முடக்குவாதமுற்றவன்- நோயிலிருந்தும் விடுதலை பெறுகிறான்.

இயேசுகிறிஸ்துவின் தூய்மையாக்கும் ஆற்றல் நோயிலிருந்து விடுதலை தருகிறது.

## 3. சமூகத்தைத் தூய்மையாக்கும் கிறிஸ்துவின் ஆற்றல்

செக்க. 13:2 “அந்நாளிலே..... கர்த்தர் சொல்லுகிறார்.”

- இந்த சமூகத்தை கெடுக்கின்ற சில சக்திகள் இருக்கின்றன. இறைவன் இல்லாதவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

எ.கா : பண ஆசை, நான் என்ற ஆணவம் (விக்ரகம்) அதிகாரவெறி போன்றவை.

1 சாமு 15:23-ல் இரண்டாம் பண்ணுதல்/சதி செய்தல் பொய் தரிசனங்கள் கடவுள் பெயர் சொல்லி ஏமாற்றுதல் அசத்தாவிகள்/கடவுளுக்கு எதிரான சக்திகள்

- இத்தகைய சூழ்நிலையிலிருந்து மக்களை விடுவிப்பேன் என்கிறார் சகரியா தீர்க்கன்

திபா. 13:1-ல் “அந்நாளில்.... ஒரு ஊற்று.”

- இந்த ஊற்று இயேசு கிறிஸ்துவே என்கிறார்.

இயேசு கிறிஸ்து சமூகத்தின் எல்லா தீமைகளையும் கடிந்துரைக்கிறார்.

மாற்கு 11:15-17-ல் வழிபாடு செய்யும் இடத்தை, வியாபார கூடமாக மாற்றிய செயலை கடிந்துரைத்து தூய்மையாக்கினார்.

மேலும் சமூகத்தின் பல்வேறு அவலங்களை கடிந்துரைத்து சீர்படுத்த அறைகூவல் விடுகின்றார்.

எ.கா. மாற்கு 12:39,40-ல் வேதபாரகரை குறித்து சொல்கிறார்.

ஆம் சமூகத்தில் காணப்டும் சீர்கேடுகளை அகற்றி தூய்மையாக்கும் கிறிஸ்துவின் ஆற்றலை இங்கு காண்கிறோம்.

### முடிவுரை :

இயேசு கிறிஸ்துவினுடைய தூய்மையாக்கும் ஆற்றல், இன்றைக்கு பாவத்தை தூயூமையாக்குதல் என்கிற ஒரு குறுகிய வட்டத்துக்குள் முடக்கப்படுகிறது.

ஆனால், இயேசுகிறிஸ்துவின் தூய்மையாக்கும் ஆற்றல் மனிதனின் அனைத்து அசுத்தங்களிலிருந்தும், அவளை விடுதலை செய்வதோடு, சமூகத்தையும் தூய்மைபடுத்தி முழுமையான விடுதலைக்கு வழி நடத்துகிறது.

அருள்திரு. Y. **மோகன் அருள்தாஸ்**





### 1. இறை தூய்மையோடு தொழுதல் : (தி.பா.96:9)

நாம் வாழ்ந்து வரும் இவ்வுலகில் நன்மையும், தீமையும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட நிலையினையே காண்கிறோம். இத்தகைய நிலையில் தீமையினை வேரறுக்க வேண்டுமெனில் தூய்மை என்பது முக்கியமானதாகும். ஏனெனில் அதுவே கடவுளைக் காண்பதற்குரிய வழியாகும். இதற்கு ஊடகமாயிருப்பது தான் வழிபாடாகும். இது ஒரு மனிதரை மன்னிப்பிற்கும் தூய்மையாக்குவதற்கும், வாழ்வின் நம்பிக்கைக்கும் நேராக நடத்த வேண்டும். இதில் குற்றப் பழிகளை உணர்ந்து அறிக்கையிடுதல் வாழ்வுக்குரிய வழியைக் காட்டுகிறது. திபா. 51-ல் கவியரசர் தாவீது தன் பாவ வாழ்வு கடவுளுக்கு விரோதமாக இருப்பதை உணருகிறார். தனது பாவ நிலையை, குற்றம், தீவினை, பாவம் எனக் குறிப்பிடுகிறார். மட்டுமல்ல தூயதோர் உள்ளத்தையும், உறுதி தரும் ஆவியையும் புதுப்பிக்கும் ஆவியையும் தனக்குத் தர வேண்டுமென முறையிடுகின்றார். உள்ளத்தில் உறைந்து விட்ட பாவ இருள் அகற்றப்பட பாவ அறிக்கை என்பது வழிபாட்டில் இணைந்து விட்டதேயாகும். ஆனால் இன்றைய நாட்களில் தொழுகைக்குப் பங்கேற்பவர்களில் அனேகர் இதைத் தவிர்த்த நிலையில் வருவதால் தூய்மை அடைவதற்குரியவைகளை இழந்து விடுகின்றனர். ஆகவே அத்தகையோரின் வாழ்வில் வழிபாடு பொருளற்ற நிலையிலே காணப்படுகிறது. ஆகவே கிறிஸ்தவர்கள் இறையவரை வழிபட என்றிக்கும்போது வழிபாட்டின் எல்லா முறைமைகளையும் ஏற்றுக்கொண்டு பங்கேற்பது தூய்மையானவரைத் தூய்மையாகத் தொழுவதற்கு ஒருமுகப்படுத்துவதாகும்

### 2. இறை ஆவியோடு தொழுதல் : (ஆமோ. 5 : 23)

ஆவியோடு தொழுதல் என்பது கடவுளோடுள்ள உறவு நிலையாகும். ஏனெனில் அவரே நாசிகளில் உயிர்மூச்சை ஊதி உயிராற்றலை வழங்கியவர் (தொ.நூ. 2 : 27). ஆகவே வழிபடும்போது உயிராற்றலோடு தொழுதிட வேண்டும். நவீன காலத்தில் ஆவியோடு தொழுதல் என்பது இசைக் கருவிகளைச் சப்தம் உயர்த்தி வாசிப்பது நடனமாடுவது, ஆர்ப்பாட்டம் செய்வது என்ற தவறான நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் தான் உயிராற்றலற்ற இத்தகைய வழிபாட்டு முறைமையை நான் வெறுக்கிறேன் என்கிறார் கடவுள். ஆமோ 5:23-ல் “என் முன்னிலையில் நீங்கள் இரைச்சலிட்டுப் பாடும் பாடல்களை நிறுத்துங்கள். உங்கள் வீணைகளின் ஓசையை நான் கேட்க மாட்டேன் என ஆண்டவர் கூறுகிறார். ஆவியோடுள்ள வழிபாடு நீதி, நியாயம் உண்மை எனும் வாழ்வு நெறியின் அளவீடுகளாக அமையும். அதையே இறையவரும் விரும்புகிறார். மரபுகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும் நாம் முக்கியத்துவம்

**23-03-2014**

*உயிர்ப்புக்கு முன்வரும்*
*நான்காம் ஞாயிறு*

# ஆவியோடும் உண்மையோடும் தொழுதல்

## WORSHIPPING IN SPRIT AND IN TRUTH

ஆமோ. 5 : 18-27 — பிலி. 2 : 5-11
தி.பா. 96 — லூக். 11 : 1-4

*"தூய கோலத்துடன் ஆண்டவரை வழிபடுங்கள்."* *தி.பா. 96 : 9*

**இறைவேண்டல் : ஆண்டவரே எங்கள் கடவுளே, உம் திருமுன் பாடல்களோடும், புகழ்ச்சிகளோடும் வருகிறோம். ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க எங்களுக்கு உதவி செய்யும். எங்களை ஜீவப் பலியாக உமக்குத் தருகிறோம். நீதி மற்றும் அமைதியின் கருவிகளாக ஒவ்வொரு வழிபாட்டின் செய்கை மூலம் வாழ வழிதாரும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.**

படைப்புகள் அனைத்திலும் தொழுகைக்கு ஆர்வமும், ஆற்றலும் கொண்ட படைப்பு மானிடம் தான். ஆகவே தான் படைத்தார் படைப்பெல்லாம் மானுடத்திற்காக மானுடத்தைப் படைத்தார். தம்மை வணங்குவதற்காக என்று பாடல் வரிகளில் குறிப்பிடுகிறார். கிறிஸ்தவ வாழ்க்கையில் வழிபாடு கவிஞர் வாழ்வோடு ஒன்றித்துள்ளது. இத்தகைய தொழுகை கடவுளுக்கும், மானிடத்திற்குமுள்ள உறவின் இணைப்பில் மலர்ந்து, மணம் பரப்பி, வளர்வதேயாகும். மட்டுமல்ல கடவுள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பின் முழுமையாலும், அவரை அடைய வேண்டுமென்ற விருப்பத்தினாலும் கூட தொழுகிறோம். நாம் அனைவரும் இறை மக்களின் ஒன்றிப்பிற்குரியவர்களாக மீட்கப்பட்டிருப்பதால், இத்தகைய ஒன்றிப்பில் உருவமற்ற அவரை உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபட வேண்டும். (யோவா 4:24). நாம் ஆண்டவரது மேய்ச்சலின் மக்களாக, பேணிக் காக்கும் ஆடுகளாக இருக்கிறபடியால் அவருக்கு முன் தாள் பணிந்து, முழந்தாளிட்டு வழிபடுவதே மாண்புமிகு செயலாகும் (தி.பா. 95:6,7). கிறிஸ்தவ வழிபாட்டில் போற்றுதலும், வழிபடுதலும் ஒன்றையொன்று தனித்துப் பார்க்க முடியாதவைகளே. போற்றுதல் நமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது போன்று வழிபாடு நமது ஆன்மீகத்தைப் (பக்தியை) பணிவிடையை வெளிப்படுத்தும் ஊடகமாகும். இத்தகைய சிந்தையில் எவ்வாறு இறையவரை வழிபடுவது எனச் சிந்திப்போம்.



**16-03-2014**

*உயிர்ப்புக்கு முன்வரும்*
*ஐந்தாம் ஞாயிறு*

# கிறிஸ்துவில் பற்றுறுதி

## FAITH IN CHRIST

1அர. 17 : 17-24 — கொலோ. 1 : 1-12
திபா. 34 : 1-15 — மாற். 9 : 14-29

*"நீங்கள் முன்பு கேட்ட உண்மையின் நற்செய்தி வழியாக அந்த எதிர்நோக்கு பற்றி அறிந்து கொண்டீர்கள்."* *கொலோ. 1 : 5*

**இறைவேண்டல் : நித்திய கடவுளே, உம் மீது நம்பிக்கை வைப்போரைப் பாதுகாப்பவரே, உம்மையன்றி ஒன்றும் உறுதியாக இருக்க முடியாது; ஒன்றும் தூயதாக இருக்க முடியாது. உம்மோடு எங்களை உமது கிருபையாலும், இரக்கத்தாலும் நிரப்பும். அதனால் நாங்கள் இக்காலத்தில் நல்லவைகளை நிகழ்த்தி உம்முடைய நித்தியத்தின் முக்கியத்துவத்தை அலட்சியம் பண்ணாமலிருக்க பெலன் தாரும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.**

தொழிலதிபர் ஒருவர் இறைப்பணியாளர்களுக்கு நிதி உதவி செய்து வந்தார். இதைக் கேள்விப்பட்ட வெளியூர் இறைப்பணியாளர் ஒருவர் அவரைச் சந்தித்து ஆலயம் கட்டுவதற்கு எப்படியாயினும் நிதி பெறவேண்டும் என எண்ணி அவரிடம் கேட்டார். ஆனால் அவரால் நிதி உதவி பெறமுடியவில்லை. "உங்களை எனக்கு யார் என்று தெரியாத நிலையில் நான் எப்படி உதவி செய்ய முடியும்"? எனத் தொழிலதிபர் கூற பெருத்த ஏமாற்றத்துடன் அந்த ஊழியர் திரும்பிச் சென்றார். அந்த தொழிலதிபரின் தாராள குணத்தைப் பற்றிய நம்பிக்கை சரியானதே. ஆயினும் இருவருக்கும் இடையில் தொடர்புநிலை இல்லாததால் அந்த நம்பிக்கை பயன்தரவில்லை. இதுபோல் இறைவன் நமக்கு நன்மையானவைகளைத் தருவார் என்ற விசுவாசம் சரியானதே. அதே வேளையில் நமக்கும் இறைவனுக்கும் இடையில் உறவு ஏற்பட வேண்டியது அவசியமாகின்றது. கிறிஸ்துவில் அசைக்க முடியாத பற்று கொண்டு நன்மையானவைகளைத் தருவார் என்ற உறுதியே அதிக வலுவுள்ளது. இதுவே பற்றுறுதி (Faith) ஆகும். கிறிஸ்துவிலுள்ள பற்றுறுதி நம்மில் எங்ஙனம் விருத்தியடைய வேண்டும் என்ற படிநிலைகளை நாம் இணைந்து சிந்திப்போம்.

### 1) பெற்றுக்கொண்ட இறை நம்பிக்கை :

"நீங்கள் முன்பு கேட்ட உண்மையின் நற்செய்தி வழியாக அந்த எதிர்நோக்கு பற்றி அறிந்து கொண்டீர்கள்." கிறிஸ்தவப் பற்றுறுதி என்பது கூடப்பிறந்தது அன்று. ஆனால் நமக்கு இயல்பான விசுவாசம் உண்டு. ஒரு சிறு குழந்தை கூட தன் தாய் யார் என்பதை அடையாளம் கண்டு கொள்ளும். இது ஏனைய உயிரினங்களுக்கும் பொருந்தும். உரோ. 10:16, 18ல் பார்க்கும்போது "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" பொதுவாக கிறிஸ்தவப் பற்றுறுதியில் வளரும் நிலைகளை நாம் எப்படிப் பெறுகிறோம்? முதலாவதாக பெற்றோர் பின்னர் திருமறைப்பள்ளி ஆசிரியர்கள், அதன் பின்னர் பல இறைப்பணியாளர்கள் மூலமாகப் பெற்றுக் கொள்கிறோம். இவைகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைவது இறைவார்த்தைகள் அடங்கிய நற்செய்தி ஆகும். இருநூறு ஆண்டுகளுக்கு முன் அருட்பணியாளர்கள் மூலமாக நாம் பெற்றுக் கொண்ட நற்செய்தியும், பல்வேறு கிறிஸ்தவ அனுபவங்களும் நம்மைக் கிறிஸ்தவப் பற்றுறுதியில் வளர உதவி செய்கின்றது.

### 2. பரவிப் பயனளிக்கும் இறை நம்பிக்கை :

"உலகம் முழுவதும் பரவிப் பயனளித்து வரும் அந்நற்செய்தி உங்களை வந்தடைந்தது. கடவுளின் அருளைப் பற்றிக் கேட்டறிந்து அந்த உண்மையை நீங்கள் உணர்ந்து கொண்டீர்கள்".

ஒரு மரம் செடியாக முளைத்து, வளர்ந்து, கிளைகள் படர்ந்து பல நிலைகளில் பலன் தருகிறது. அதுபோல் நாம் பெற்றுக்கொண்ட பற்றுறுதி வாழ்வு, கேள்விப்பட்டதோடு நின்றுவிடாமல் அதுபரவவேண்டும். 'யாம் பெற்ற இன்பம் இவ்வவையகமும் பெறுக' என்பதற்கேற்ப நம்மில் நாம் கிறிஸ்தவப் பற்றுறுதியை வளர்ப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், பிறருக்கும் சாட்சி பகரவேண்டும். (காண்க: மத் 13 : 13:31-33; திப. 1 : 8; எசா 52 : 7; ரோ 10:14,15,18). நற்செய்தி எங்கெல்லாம் சென்றடைகின்றதோ அங்குள்ளவர்கள் இறைவனின் அன்பை கேள்விப்படுவது மட்டுமின்றி அதனை உணர்ந்து கொண்டு பற்றுறுதி வாழ்வில் மலரும்படி செய்கின்றது.

### 3) பெருகிப் பயனளிக்கும் இறை நம்பிக்கை :

"அந்த நாள் முதல் உங்களிடையே அது பெருகிப் பயனளித்து வருகிறது".





இறை நம்பிக்கையைப் பெற்று அதனை பிறருக்குப் பறைசாற்றினால் மட்டும் போதாது. அது நம்மிலும் பிறரிலும் பெருக வேண்டும். அதற்கு நாம் கடவுளை அறிகிற அறிவில் விருத்தியடைய வேண்டும். II திமொ 1:5,6,12,13). It is better to know God rather knowing about God. கடவுளைப் பற்றி அறிவதை விட கடவுளை அறிவதே சிறந்தது. இதனை திருப்பாடல் ஆசிரியர், ஆண்டவர் நல்லவர் என்பதைச் சுவைத்துப் பாருங்கள், அவர்மேல் நம்பிக்கை கொள்வோர் பேறு பெற்றோர் என்கிறார் (திபா. 34:8). அநேகர் இறைவனின் மகத்துவத்தைத் தங்கள் இறை அனுபவங்களுடன் உணர்ந்து கொண்டனர். எ.கா.சாரிபாத் ஊர் விதவை (I அர 17:24) மேலும் இயேசு கிறிஸ்து உலகில் இருந்த நாட்களில் அவர் மூலம் நன்மை பெற்ற அநேகர். அனைவரும் பற்றுறுதி வாழ்வில் விருத்தியடைந்தனர். பிறரையும் விருத்தியடையச் செய்தனர்.

இறை உறவு வலிமையாக இல்லாத நிலையில் இறைவனை குறித்த வலிமையான பற்றுறுதி எந்தப் பலனையும் தராது. எனவே கிறிஸ்துவாகிய நற்செய்தியைப் பெற்று அவரைப் பற்றிய பற்றுறுதியில் வளர்ந்து பிறருக்குச் சாட்சி பகர்வது சிறந்தது. அதைவிட அவரை அறிகிற அறிவில் விருத்தியடைந்து ஆண்டவருக்கு பிரியமுண்டாக அவரை பற்றிய பற்றுறுதியில் பெருகி கிறிஸ்துவுக்கு ஏற்புடையவர்களாக நடந்து கொள்ள வேண்டும் (கொலோ 1:10). இந்த இறையனுபவங்களில் விருத்தியடைய இறைவன் துணை புரிவாராக. ஆமென்.

அருள்திரு. **D. ஒனேசிமஸ் சகாயம்**

கலாத்தியர் 6:2-ல் ஒருவர் மற்றவர்களுடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்'' இவ்வாறு கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள் என்கிறார். கொலோ 1:24-ல் இப்பொழுது உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். கிறிஸ்து தம் உடலாகிய சபைக்காக வேதனையுற்றார். அவர் மேலும் பட வேண்டிய வேதனையை என் உடலில் ஏற்று நிறைவு செய்கிறேன் என்கிறார்.

இயேசுநாதர் ஓய்வுநாளில் சுகப்படுத்துவதைக் கண்ட, சமய சமூகத்தலைவர்களுடைய எரிச்சலை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆயினும் பாதிக்கப்பட்ட மக்களின் வரிசையில் நின்று துன்பத்தை ஏற்றுக்கொண்டு பழிச்சொற்களைக் கண்டுகொள்ளாமல் சமூகத்தில் நன்மை செய்கிற இயேசுநாதரை லூக். 6:10-11 வசனங்களில் ஓய்வு நாளில் கைசூம்பிய மனிதரைக் குணப்படுத்திய நிகழ்வில் உணரலாம். இயேசுநாதர் எல்லா இடங்களிலும் சமூகம் ஆற்றல் பெறும் என்றால் தம் துன்பத்தை ஏற்றுக்கொள்வதில் தயாராக இருந்தார். அதுவே அவருக்கு சிலுவையைக் கொடுத்தது (யோவான் 5:10-18 38 வருடமாய் உடல் நலமற்றிருந்தவன்)

துன்பத்தை ஏற்கும் கிறிஸ்துவின் சிலுவையின் வழியாக உலகம் மீட்பைப் பெற்றது. அந்தக் கிறிஸ்துவின் சாவைத் தங்கள் உடலில் சுமந்த இரத்த சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாகியது என்றால் மிகையாகாது. அதுவே மிஷனரிகளின் வாயிலாக நமது சமூகத்திலும் இறையாற்றலாக வெளிப்பட்டு சாதிய அடிமைத்தனங்களையும் ஒடுக்குமுறைகளையும் அப்புறப்படுத்தியது.

இன்னும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளாலும், ஜாதிய வெறித்தனங்களாலும், சமயச் சகிப்பற்ற மதவெறிகளினாலும், பதவி அதிகார வெறித்தனங்களாலான அரசியல் சூழ்ச்சிகளாலும், பிரித்தாளும் கீழ்த்தர அரசியல் பிரிவினைகளாலும் பாதிக்கப்பட்ட வண்ணமாகவே இருக்கின்ற இந்தச் சமுதாயத்தில் கிறிஸ்து அடிக்கப்பட்ட வண்ணமாகவே இருக்கின்ற ஆட்டுக்குட்டியாக இருக்கிறார். இத்தகு சமுதாயத்தில் ஆட்டுகுட்டியானவரை முன்னிறுத்தித் தாழ்மையாய் இறையாற்றலை துன்பங்களைச் சகிப்பதில் வெளிப்படுத்துவோம். நல்ல மாற்றங்களை உருவாக்க சிலுவையை ஏற்க முன் வருவோம்.

அருள்திரு. A. **ஜெபசுஜி**



**30-03-2014**

***உயிர்ப்புக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு***

# கிறிஸ்துவில் புதிய சமூகம்

## NEW COMMUNITY IN CHRIST

நீ.த. 4:4-10 கலா 3:19 - 29

திபா. 89:1-16 மத். 9 : 9 17

***“.....கிறிஸ்து இயேசுவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள்.”*** *கலா. 3 : 26*

**இறைவேண்டல் : கடவுளே உமது பாதுகாக்கும் அழைப்பு, குழுவாக குடியிருக்கும் எங்களை அசைக்கிறது. உமது கிருபையை எங்களுக்கு தந்து கிறிஸ்துவின் புதிய சமூகமாக பதிலளிக்கவும், அமைதியின் முன்சுவையை காட்டவும் அருள்தாரும். புதிய சமூகமாக வாழக் கற்றுக்கொள்ளும் எங்களுக்கு துணிவை தந்து எங்கெல்லாம் உமது நற்செய்தியின் பிரதிநிதிகளாகச் செல்லுகிறோமோ அங்கெல்லாம் உமது செய்தியான ஒப்புரவாகுதலையும், அமைதியையும் கொண்டு சேர்க்க அருள்தர வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.**

உலகைப் படைத்த கடவுள் மனிதரைத் தமது சாயலில் படைத்தார். தொ.நூ. 1:27-ன்படி ஆண், பெண் அனைவரும் கடவுளின் சாயல் எனக் காண்கிறோம். ஆனால் மனிதன் தனது சுயநலத்தால் மனிதச் சமூகத்தைக் கூறுகளாக்கி சாதி, இனம், மொழி, நிறம், கலாச்சாரம் எனப் பல்வேறு பிரிவுகளை உண்டாக்கியுள்ளான். மனிதனின் பாவங்கள் பெருகி கடவுளிடம் இருந்து அவர் பிரிக்கப்பட்டான். இந்நிலையில் கடவுள் தம் மைந்தராகிய கிறிஸ்து இயேசுவை இந்த உலகத்தில் அனுப்பி, அவர் மூலமாக மானிடச் சமூகத்தையும், தமது படைப்புகள் அனைத்தையும் மீட்டெடுக்க விரும்பி அவரை இந்த உலகத்தில் தந்தார். கிறிஸ்து இயேசுவுக்குள் மீட்டெடுக்கப்பட்ட புதிய சமூகம் “கடவுளின் மக்கள்” என்ற சிறப்பு உரிமை பெறுகின்றனர். இந்தப் புதிய சமூகம் தனக்கென சில சிறப்பு இயல்புகளைக் கொண்டது. இந்தத் தகவுகளை ஒரு மனிதன் தனக்கு உரியதாக்கிக் கொள்ளும் போது அவனும் அந்த சமூகத்தின் அங்கத்துவத்தைப் பெறுகிறான் (யோவா 1:12). இங்கு கிறிஸ்துவில் கட்டப்படும் புதிய சமூகத்தின் அங்கத்தினர் யார்? என்பதைத் திருமறை அடிப்படையில் காண்போம்.

### 1. குற்றப்பழிகளை உணர்ந்து திருந்துபவர் (லூக். 15:18)

இந்த உவமையில் இளைய மகன் தந்தையை விட்டுப் பிரிந்து சென்றாலும் தனது தவற்றை உணர்ந்து தந்தையிடம் திரும்புவதை இயேசு சுட்டிக்காட்டுகின்றார். அவனை தந்தை கட்டித்தழுவிக்கொண்டார் (வச20). தன்னை வேலைக்காரனாக ஏற்கும்படி கேட்டுக்கொண்ட மகனை தனது சொந்த மகனாகவே ஏற்றுக்கொண்டார் (வச 22,23) என்று கூறுவதின் மூலம் மனம் திரும்பும் எவரும், கடவுளின் பிள்ளைகள் என்கிற சிறப்பு உரிமையை மீண்டும் பெறுகின்றனர் என்பதை உணர்த்துகின்றார். லூக் 19:1-10-ல் காணும் சகேயு இயேசுவைச் சந்தித்த நிகழ்வில், சகேயு தனது தவறுகளினிமித்தம் மனம் வருந்தி அதை நிவிர்த்திச் செய்ய முன்வந்தபோது (வச 8), இயேசு "இவரும் ஆபிரகாமின் மகனே" எனக்கூறி (வச 9) அவரை தமது புதிய சமூகத்தில் அங்கமாக ஏற்கின்றார். நீதி. 28:13. தன் குற்றப் பழிகளை மூடி மறைப்பவரின் வாழ்க்கை வளம்பெறாது; அவற்றை ஒப்புக்கொண்டு விட்டுவிடுகிறவர் கடவுளின் இரக்கம் பெறுவார் என்கிறது.

### 2. வேறுபாடுகளைத் தாண்டிச் செயல்படுபவர் (கலா. 3:27, 28)

இங்கு பவுலடியார் கிறிஸ்து இயேசுவுடன் இணைந்திருக்கும்படி நாம் திருமுழுக்குப் பெற்றோர் என்றும், அவ்விதமாக கிறிஸ்து இயேசுவுடன் இணைந்தவர்கள் அனைவரும் இனம், சாதி, மொழி, பாலினம் போன்ற வேறுபாடுகளைக் கடந்து, வாழவேண்டும் என்கிறார். இந்தச் சமூகத்தில் ஏற்றத்தாழ்விற்கு இடம் இல்லை, பிரிவினை உணர்வுக்கு இடம் இல்லை. நீ.த. 4 : 4,5 வசனங்களில் தெபோரா என்கின்ற பெண், கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டு இஸ்ரவேல் அனைத்தையும் நியாயம் விசாரித்தாள் என்று பார்க்கிறோம். இஸ்ரவேல் மக்கள் அவளை, பெண் என்பதால் ஓரம் கட்டவில்லை. இயேசு கூட்டிச் சேர்த்த சீடர் கூட்டத்தில் மீனவர்கள், ஆயக்காரர்கள், செலோத்தியர்கள் எனப் பலதரபட்ட மக்கள் ஒரே குடும்பமாக இயேசுவுடன் இணைந்து பணியாற்றினர். ஆயக்காரராகிய மத்தேயுவின் வீட்டில் பந்தி இருந்தபோது பரிசேயர் இயேசுவைப் பழித்தனர் (மத். 9 : 11). ஆனால் இயேசு தான் அத்தகையோரை இறைவனின் மக்களாய்க் கூட்டிச் சேர்ப்பதற்கே வந்துள்ளேன் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார் (மத். 9:12, 13)

### 3. இறையவரின் ஆளுமையை முழுமையாய் ஏற்பவர் (கலா. 2 : 20)

கிறிஸ்து இயேசுவில் அமையும் புதிய சமூகத்தில் அங்கத்தினராய் இருப்பவரின் மிக முக்கியமான தகவு, அவர் தன்னை முழுமையாய் இறைவனின் ஆட்சிக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதே. பவுலடியார்





1பேதுரு 3:17-ல் பேதுரு அடிகளார் தீமை செய்து துன்புறுவதைவிட நன்மை செய்து துன்புறுவதேமேல் என்கிறார். அவரே 1 பேதுரு 4:12-13-ல் "துன்பத்தீயில் நீங்கள் சோதிக்கப்படும்போது ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள், மாறாக கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணைப் பங்கு கொள்ளுகிறீர்கள் என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சிவெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள் என்கின்றார்.

கிறிஸ்துவின் வாழ்வை உடலில் சுமக்கும் அனுபவமாக நீதிக்கான போராட்டத்தில் நமக்கெதிராக எழும்பும் பகைகள், நிந்தனைகள், ஏளனங்கள், நகையாடுதல்கள், கடுஞ்சொற்கள், பழிச்சொற்கள் அனைத்தையும் ஏற்போம். நிச்சயமாய் உண்மையை யாரும் அழிக்க முடியாது, அதை மறைத்தாலும் ஒருநாள் வெளிவரும் அப்போது அதினால் வரும் கனமும் மாட்சியும் மேன்மைக்கேதுவாயிருக்கும்.

### 3. துன்புறுதல் - சமூக வாழ்வின் ஆற்றலை வெளிப்படுத்தல் :

கிறிஸ்துவின் சாவை தன் உடலில் சுமந்துநிற்கும் பவுலடிகளார் II கொரி. 4:12-ல் கூறுகிறார், சாவின் ஆற்றல் எங்களிலும் வாழ்வின் ஆற்றல் உங்களிலும் வெளிப்படுகிறது என்கிறார்.

கிறிஸ்து சிலுவையை ஏற்றதும், அடியவர்கள் சிலுவைக்குச் சான்று பகர அர்ப்பணிக்கப்படுவதும் சமூகத்தின் மேன்மைக்காகவேயாகும்.

எல்லா மனிதருக்காகவும் ஒருமனிதர் சாவது நலமாயிருக்கும் என்ற கூற்று உலகிற்காக கிறிஸ்து தம்மையே கொடுப்பதன் முன்னறிவிப்பாகும்.

எரேமியா 8:21-ல் "என் மகளாகிய மக்களுக்கு ஏற்பட்ட முறிவு எனக்கே ஏற்பட்டதாகும். நான் துயருகிறேன்" என்று கடவுள் தம் மக்களின் வேதனையைத் தன்னகத்தே ஏற்றுக்கொள்கிறார். இஸ்ரவேலுக்காக கர்த்தர் துயருகிறார். இது கடவுளின் ஆற்றல் துன்புறும் தன் சமூகத்திற்காக வெளிப்படுவதைக் காணலாம்.

துன்புறும் ஊழியர் பற்றி ஏசாயா இறைவாக்குரைத்தபோது அவ்வூழியர் மெய்யாகவே நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார்; நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார். நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார், நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார், அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம். (ஏசா. 52:13-53:12). இந்த இறைவாக்கு இயேசுவில் நிறைவேறியது. கிறிஸ்துவின் சாவில், அவர் ஏற்ற துன்பம் இந்த உலக மக்களின் வாழ்வு உய்வு பெற வழிசெய்தது. அதையே பவுலடிகளார்

உரோ. 8 : 17-ல் ''நாம் கிறிஸ்துவினுடைய துன்பங்களில் பங்கு பெற வேண்டும். அப்போதுதான் அவரது மாட்சியிலும் பங்குபெறுவோம்'' என்கிறார்.

''கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்வதற்கு மட்டுமல்ல அவருக்காக துன்பங்களை ஏற்பதற்கும் நீங்கள் அருள்பெற்றுள்ளீர்கள்'' என்று பிலிப்பியச் சபைக்கு எழுதுகிறார் பவுலடிகளார் (பிலிப் 1 : 29 - 30)

மாற்கு 10:35 முதல் உள்ள பகுதியில் செபதேயுவின் மைந்தர்கள் இயேசுநாதரிடம் அவரது ஆட்சியின்போது அவருக்கு வலது, இடது பக்கம் அமர இடம் தர வேண்டுகின்றனர். ஆனால் இயேசு நாதர் சொன்னார் ''நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?'' என்று கேள்வி எழுப்புகிறார். கிறிஸ்துவில் பங்கடைதல் அவரது பாடுமரணத்தில் நம்மையும் பிணைத்துக் கொள்வதேயாகும்.

இன்று திருச்சபையும், தலைவர்களும் விரும்புவதெல்லாம் சொகுசு வாழ்வு. சொகுசுக்காகத் தீமையை கண்டு கொள்ளாமல் நமக்கேன் வம்பு என்று சென்றுவிடுவது வாடிக்கையாகிவிட்டது. தீமைக்கு எதிர்கேள்வி எழுப்பி சமூகத்தை விழிப்படையச் செய்வது கிறிஸ்தவரின் பங்கு. அதில் வரும் துன்பங்களை ஏற்றுக்கொள்வது கிறிஸ்துவின் சாவில் பங்கடைவதே. அதுவே நம் எதிர்நோக்கு.

### 2. துன்புறுதல்-இயேசுவின் வாழ்வை உடலில் சுமத்தல் :

சாவுக்குரிய துன்பங்களை ஏற்றுக்கொள்வது என்பது இயேசுவின் வாழ்க்கையை உடலில் சுமப்பதாகும் எனப் பவுலடிகளார் II கொரி 4:11-ல் கூறுகிறார். இயேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் உடலில் வெளிப்படவே துன்பத்தை ஏற்றுக்கொள்கிறதாகக் கூறுகிறார். இதனால் வரும் நிறைவு, துன்பத்திற்கு முடிவு நிச்சயம் என்பதையும் வலியுறுத்துகிறது.

இரவுக்குப் பின் பகல், குளிருக்குப் பின் வெப்பம், புயலுக்குப் பின் அமைதி என்பதுபோல சிலுவைக்குப்பின் உயிர்ப்பு நிச்சயம் என்பதை உணரமுடிகிறது. எனவேதான் ரோமர் 5 : 3 -இல் துன்பங்களைத் தாங்கி கொள்வதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம் என்கிறார் பவுலடிகளார். அவரே கொலோசேயருக்கு எழுதும்போது 1:24-இல் உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சியுறுகிறேன் என்கிறார். துன்பங்கள் நெடுநாள் நீடிப்பதில்லை, அத்துன்பங்களில் மகிழ்ச்சியுற வேண்டும் என்கிறார். தெச. 3:1-4 வரை பார்த்தால் துன்பங்களில் மனம் தளரக்கூடாது என்ற நம்பிக்கையினை உறுதிப்படுத்துகிறார்.





''இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் என்று குறிப்பிடுவதின் மூலம் இந்த உண்மையை தனது வாழ்வுடன் ஒப்பிட்டுப் பேசுகின்றார். தமஸ்குப் பாதையில் இயேசுவால் சந்திக்கப்பட்ட போது பவுலடியாரின் ''நான் என்ன செய்ய வேண்டும்'' (தி.ப. 9 : 6) என்று கேட்ட கேள்வி அவர் தனது சொந்த நிலையை விட்டு கடவுளின் ஆளுகையை ஏற்றுக்கொண்டதை உணர்த்துகிறது. இதற்கு தேவை ''நான்'' என்கின்ற குறுகிய வட்டத்தில் இருந்து நாம் வெளியே வர வேண்டும். எனவேதான் இயேசு மாற். 8 : 34-ல் ''என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் என்றார். இறைவன் ஆட்சிக்கு நம்மை முழுமையாய் ஒப்படைக்கும்போது தூய ஆவியார் நம்மில் வாழுவார். அவர் நம்மில் வாழ்ந்து நம்மை வழிநடத்தும் போது ஊனியல்புகளுக்கு உரிய (மாமிசத்திற்குரிய) எந்தச் செயல்களையும் நாம் செய்ய மாட்டோம். மாறாக, நம்மில் இருந்து தூய ஆவியின் கனி வெளிப்படும். (கலா 5:16, 22,23)

நாம் கிறிஸ்துவின் புதிய சமூகத்தில் அங்கத்தினராய் வாழ்கிறோமா என்பதை இந்த வசனங்களின் அடிப்படையில் சீர்தூக்கிப் பார்ப்போம். நம்மில் காணப்படும் குறைவுகளை அறிந்து சீர்திருத்தி நமது வாழ்வில் புதிய சமூகத்தின் அங்கத்தினராய் தொடர்வோம். ஆமென்.

அருள்திரு. J. **விக்டர் ஞானராஜ்**

**06-04-2014**

*உயிர்ப்புக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு*

*பாடுகளின் ஞாயிறு*

# சிலுவையும் துன்புறும் மானுடமும்
## CROSS AND THE SUFFERING HUMANITY

எரே. 8 : 18-22 | II கொரி. 4 : 7 - 12
திபா. 73 | மாற். 10 : 35 - 52

*"இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம்."*

II *கொரி. 4 : 10*

**இறைவேண்டல் :** கடவுளே உமது மகனை சிலுவையில் மரிக்கக் கொடுத்து எங்களையெல்லாம் தள்ளப்படுதலில் இருந்தும், நிராகரிக்கப்படுதலில் இருந்தும் மீட்டவரே! சிலுவையில் உமது மகன் இயேசு தள்ளப்பட்டோரோடும், நிராகரிக்கப்பட்டோரோடும் தம்மை அடையாளப்படுத்தினாரே. சிலுவையின் இந்த போதனைக்கு செயல் வடிவம் கொடுக்கவும், துன்புறும் உம் மக்களை ஊசல்கள், கறைகள், அநீதிகள் போன்றவைகளில் இருந்து விடுவிக்கவும் ஆற்றல்படுத்தும் ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

இந்திய நெடுஞ்சாலைத்துறையில் பொறியாளராகப் பணியாற்றி அடித்தூண் பெற்றவர், தன் பணி வாழ்வைப் பற்றி சொன்னபோது தன்னுடைய பணிநிறைவு பெருவெற்றி பெற்ற உணர்வைத் தந்தது. பல சோதனைகளில் போராடி வெற்றி பெற்ற திருப்தி எனக்கிருக்கிறது. என்னை நெருங்கிய தடைகள், ஏளனங்கள், குற்றச்சாட்டுகள், பழிச்சொற்கள் எல்லாவற்றிலும் கடவுள் என்னோடிருந்தார் என உணர்கிறேன் என்றார். காரணம் கேட்டபோது, என் பணி வாழ்வில் எச்சூழலிலும் தவறு செய்யக்கூடாது என்ற உடன்பாட்டை ஆரம்ப முதலே நான் செய்து கொண்டேன். நெடுஞ்சாலைத்துறையில் லஞ்சம் வாங்காமல், சரியான அளவீடுகள், நெறியான பணி என்றால் எப்படிப்பட்ட துன்பங்கள் வரும் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும். துறைத் தலைவர்களுடைய எரிச்சல்கள், கோபங்கள், வசைமொழிகள், ஏளனப் பார்வைகள், ஒப்பந்தக்காரர்களின் தவறான எதிர்ப்புகள் எனப் பல போராட்டங்களைச் சந்தித்திருக்கிறேன். ஆனாலும் கடவுள் என்னைக் கைவிடவில்லை. தற்போது நான் எதிர்கொண்ட சோதனைகளில் எல்லாம் வெற்றி பெற்ற அனுபவம் மன நிறைவை, மகிழ்வைத் தருகிறது என்றார்.



தீமைகளைப் பொறுத்தமட்டில் இன்று உலகில் மூன்றுவித போக்குகள் உள்ளன.

1. தீமைகளை அங்கீகரித்தல்
2. தீமைகளைக் கண்டுகொள்ளாதிருத்தல்
3. தீமைகளை எதிர்த்து நிற்றல்

முதல் இரண்டும் சமூகத்தில் கேடுகளை விளைவித்து, எதிர்விளைவுகளை ஊக்கமூட்டுகிறது. தீமைகளை எதிர்த்து நிற்கும்போது துன்பங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். வாழ்க்கைப் போராட்டமாகிப் போகும். ஆனால் சமூகத்தில் தெளிவு பிறக்கும், வாழ்க்கையின் நம்பிக்கை நிலைக்கும், சமூகம் தழைக்கும். இத்தகு நீதிக்கான போராட்டமான சிலுவையை ஏற்பதினால் மானுடம் தழைக்கும்.

இன்னும் சிலுவை என்றதுமே நீதிக்கான போராட்டம், வாழ்வுக்கான போராட்டம் என்பவைகளே நாம் கண்டுகொள்ளுகின்ற பொருட்கள். இந்தக் கண்ணோட்டத்தில்தான் பவுலடிகளாரும் II கொரிந்தியர் 4 : 7 - 12 வசனங்களை எழுதுகிறார். II கொரி 4 : 10-இல் கிறிஸ்தவப் போராட்ட வாழ்வில் கிறிஸ்துவின் சாவுக்குரிய துன்பங்களைத் தம்முடைய உடலில் கிறிஸ்துவின் வாழ்வு வெளிப்படும்படியாகச் சுமந்து செல்பவராக உள்ளார் என்கிறார். இத்தகைய பவுலடிகளாரின் தகவு சார்ந்து சிலுவையும் துன்புறும் மானுடமும் சார்ந்து மூன்று சிந்தனைகள்.

### 1. துன்புறுதல் - கிறிஸ்துவின் சாவில் பங்கடைதல் :

II கொரி 4 : 10-இல் பவுலடிகளார் கிறிஸ்துவின் வாழ்வு தன்னில் வெளிப்பட அவருடைய சாவுக்குரிய துன்பங்களைத் தன் உடலில் சுமப்பதாகக் கூறுகிறார். அதாவது கிறிஸ்துவுக்காக வாழுகிறேன் என்பது அவரது சாவில் பங்கடைகின்ற அனுபவமாகும்.

துன்பங்களின் நடுவிலே தான் இறைவன் இருக்கிறார் என்பது பவுலடிகளார் தமஸ்கு வழியில் அனுபவித்த உண்மை. எனவேதான் "நாள்தோறும் சாவை எதிர்கொள்ளுகிறேன்" என்கிறார் பவுலடிகளார் (1 கொரி 15 : 3) தாமஸ் அக்குவினாஸ் என்ற இறையியலாளர் "ஒன்றில் இயேசுவுக்காக துன்புறுவேன் அல்லது சாவேன் என்கிறார்.

கிறிஸ்துவின் சாவிலே பங்கடையும் அனுபவத்தைத் துன்புறுதல் தருகிறது என்பதை உணர்ந்த பவுலடிகளாரின் விசுவாச நிலை தான் II கொரி 4:8,9 வசனங்கள்," நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை, குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை, துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை, வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போவதில்லை."

'martur' என்னும் வார்த்தை வந்தது. இரத்தம் சிந்தி சான்று பகரும் அனுபவத்தை இவ்வார்த்தை குறிப்பிடுகிறது. இறைவார்த்தையை வல்லமையோடு அறிவித்ததின் மூலமாகவும் (திப. 2:14-40), துன்பங்களைக் கண்டு மனம் உடைந்து போகாததன் மூலமாகவும் (திப. 5:40-41), கோழைகளாக இல்லாததன் மூலமும், (திப. 4:13) இயேசுவின் சீடர்கள் உயிர்த்த இயேசுவுக்கு உயிருள்ள சான்றுகளால் சான்று பகர்ந்தனர். நாம் உயிர்த்தெழுந்த இயேசுவுக்கு சான்றுகளாய் வாழ்கிறோமா?

Resurection is not merely a simple overcoming of death, but victory of God over the absence of God and God forsaknness"......சாவின் மீது இயேசு அடைந்த வெற்றி மட்டிலுமன்றி, கடவுள் நம்மைக் கைவிட்டுவிட்டதாக நாம் நினைக்கிற அனுபவங்களின் மீதும், கடவுள் நம்மை விட்டு அகன்று நிற்பதாக நாம் உணரும் அனுபவங்களின் மீதும் கடவுள் நமக்கு வழங்குகின்ற வெற்றியே உயிர்த்தெழுதல் ஆகும். இவ்வாண்டு நாம் எதிர்கொள்ளும் உயிர்தெழுதல் அவ்வித அனுபவங்களை நமக்கு வழங்கட்டும்.

அருள்திரு. **எஸ். ஜாண் சகாயம்**





**13-04-2014** *உயிர்த்தெழுதலுக்கு முன்வரும் ஞாயிறு*

*குருத்தோலை ஞாயிறு*

# ஓசன்னா எமை மீட்டருளும் ஆண்டவரே !
# இயேசு எருசலேமுக்குள் நுழைதல்
## HOSANNA SAVE US O LORD : JESUS ENTERS JERUSALEM

சக. 11 : 9-12 எபே. 1 : 15-23

திபா. 24 மாற். 11 : 1-11

*"ஓசன்னா ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப் பெறுக!" மாற். 11 : 9*

**இறைவேண்டல் :** கடவுளே இயேசு கிறிஸ்துவின் மூலமாக நீர் உலகை மீட்டுக் கொண்டதற்காக உம்மை போற்றுகிறோம். இன்று இயேசு பரிசுத்த நகரமாகிய எருசலேமிற்குள் வெற்றியோடு நுழைந்து, மேசியா என்று பிரகடனப்படுத்தி, இராஜா என்று துணிகளையும், மரக்கிளைகளையும் வழியில் பரப்பினோர் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்டாரே. இக்கிளைகள் வெற்றியின் சின்னங்களாக என்றும் இருக்கட்டும். ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

இயேசு கிறிஸ்துவின் குருத்தோலைப் பவனியில் முக்கியப்படுத்தப்பட்டுள்ள பல பொருட்கள் நமது குருத்தோலை ஞாயிறு சிந்தனைகளாய் அமைந்துள்ளன. கழுதை, குருத்தோலை, சிறுவர்கள், அத்திமரம் என அவைகளைப் பட்டியலிடலாம். இன்று பவனியில் அனைவராலும் பயன்படுத்தப்படும் ஒரு சொல் ஓசன்னா. இதை மையப்படுத்தி அதன் செம்பொருளைச் சிந்தனை செய்ய முற்படுவோம்.

ஓசன்னா என்ற சொல் லூக்கா நற்செய்திநூல் தவிர இதர மூன்று நற்செய்தி நூற்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மத். 21:3-ல் தாவீதின் மகனுக்கு ஓசன்னா, உன்னதத்தில் ஓசன்னா என்றும்

மாற் 11 : 9 10-ல் உன்னதத்தில் ஓசன்னா என்றும்

யோவா. 12 : 13-ல் ஓசன்னா என்றும் சொல்லப்பட்டுள்ளன. இதன் பொருள் என்ன?

## 1. அபயக் குரலாய் அமைந்த வார்த்தை ஓசன்னா :

ஓசன்னா என்பது பழைய ஏற்பாட்டின் மூல மொழியான எபிரேய மொழியிலுள்ள ஒரு சொல். இச்சொல் அப்படியே புதிய ஏற்பாட்டின் மூல மொழியான கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எபிரேய மொழியில் இவ்வார்த்தை ஓசியானா? (Hoshiya na) என்று காணப்படுகிறது. இதன் பொருள் 'கடவுளே இரட்சியும்' என்பதாகும். பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு இடத்தில் இவ்வார்த்தை வருகிறது. அதுவும் ஓசியா னா என்று சொல்லப்படாமல் அதன் பொருளே சொல்லப்பட்டுள்ளது. திபா. 118:25 ஆண்டவரே மீட்டருளும். இவ்வார்த்தை அபயக் குரலாய் வெளிவரும் வார்த்தை. தீயினுள் அல்லது தண்ணீருக்குள் அகப்பட்டுக் கொண்ட ஒரு மனிதன் விடுதலைக்காய் உதவி வேண்டி எழுப்பும் அபயக் குரலே ஓசியானா கடவுளிடம் உதவி வேண்டி எழுப்பும் குரல் இது.

பல்வேறுக கால கட்டங்களில் எகிப்து, பாபிலோன், அசீரா போன்ற பேரரசுகளால் அடிமைகளாக்கப்பட்ட சூழலில் ஆண்டவரே எங்களை மீட்டருளும் என்ற ஏங்கலின் குரல் ஓசியா. னா என்பது முடிவற்ற குரலாகவே ஒலித்தது. இன்றும் அடிமைத்தனங்களில் வாழ்வோருக்கு இறைவனே மீட்பின் நம்பிக்கையாக அமைந்துள்ளார்.

## 2. நம்பிக்கையின் குரலாய் அமைந்த வார்த்தை ஓசன்னா :

அபயக் குரலாய் வெளி வந்த வார்த்தை சங்கீதக்காரரின் பாடலிலே நம்பிக்கையின் குரலாய் அமைந்திருப்பதை நாம் காணமுடிகிறது. ஆண்டவரே மீட்டருளும், ஆண்டவரே வெற்றி தாரும் என்று அபயமிட்ட தாவீதுவின் குரல் அடுத்த வசனத்தில் வேண்டுதலுக்கு பதில் அருளப்பட்ட வார்த்தையாக, வெற்றியின் வார்த்தையாய் அமைந்துள்ளது. ஆண்டவரின் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர் என்று உதவி செய்ய வந்துவிட்ட மீட்பரைப் போற்றும் வார்த்தைகளாய் அமைந்துள்ளன. கிணற்றில் தவறி விழுந்துவிட்ட பரிதாபத்துக்குரியவரின் குரலினைக் கேட்டு அவருக்கு உதவி வந்துவிட்ட சூழலில் அவர் எத்தகைய அக்களிப்பு கொள்வாரோ அந்த மகிழ்வினையினையும் மீட்பின் நம்பிக்கையினையும் உறுதிப்படுத்தும் குரலே ஓசியானா





வேண்டுமென்பது மோசே மூலமாக கொடுக்கப்பட்ட கட்டளை, நீர் என்ன சொல்கிறீர் (யோ. 8:5) என்று இயேசுவிடம் கேட்டார்கள்.

கல்லறை வாயிலிருந்த கல் இயேசுவை அடைத்து அடக்கி வைத்திருந்த சாவின் ஆற்றல்களுக்கு அடையாளமாக இருக்கிறது. இந்தக் கல் அகற்றப்பட்டிருந்தது என்பது இயேசு சாவின் ஆற்றலை வெற்றி கொண்டதை சுட்டிக் காண்பிக்கிறது. மனித ஆளுகை எப்பொழுதும் அடிமைப்படுத்துவதும் கொல்வதும்தான். ஆனால் கடவுளின் ஆட்சி விடுதலை வழங்கும். கல் அகற்றப்பட்டது விடுதலை வழங்குதலைக் குறிக்கும். இங்கு குறிப்பிடப்படும் உண்மை யாதெனில் மனித ஆற்றலை கடவுள் ஆற்றலை அடக்கி வைக்க முடியாது என்பதே ஆகும். நமது வாழ்விலும் உயிர்த்தெடுதலின் மக்களாக நாம் வாழ்வதற்குத் தடையாக பல பாவக் கற்கள் நம் இருதயமாகிய குகையை மூடியிருக்கின்றன. அவற்றை அகற்றிவிட நாம் அழைக்கப்படுகிறோம்.

## 3. ஆண்டவரைச் சந்திக்கும் அனுபவம் தருகிறது :

யோ. 20:18-ல் "நான் ஆண்டவரைக் கண்டேன்" என்று மகதலேனா மரியாள் கூறினாள். ஆற்றல் மிக்க புதிய வாழ்வுடன் புதுக்காட்சியோடு முன்னேறிச் செல்ல கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு உதவுகிறது. Resurrection of the Lord gives a fresh vision to go forward with a strength of new Life. உயிர்த்தெழுதலின் அனுபவமானது மரியாளையும் அவளுடன் இருந்த சீடர்களின் கவலையையும் அகற்றி பெரும் மகிழ்வை ஏற்படுத்தியது. தாங்கள் அனுதினமும் சந்தித்துக் கொண்டிருந்த அச்சுறுத்தல்கள் மற்றும் எதிர்காலத்தைக் குறித்த அச்ச உணர்வுகளின் ஊடாகவே சீடர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சியை அனுபவித்தார்கள். ஆண்டவருடைய உயிர்ப்பு அனுபவம் அவரை சீடர்களுக்கு மிகவும் நெருக்கமானவராக நிலைநிறுத்தியது. எனவே "என் சகோதரர்களிடம் சொல்லுங்கள்" (மத். 28:10) என்று திருத்தூதர்களை தம்முடைய உடன் பிறப்புகளாக அறிவிக்கிறார். "நம்மை கிறிஸ்துவின் அருட்பணிக்கு அழைத்து அனுப்புவதற்காகவே தந்தையாம் கடவுள் தம் மகனை கல்லறையைவிட்டு வெளியே வர அழைத்தார் என ஓர் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

God the fater called out His beloved son from the tomb to calls us out and to send us out His mission" இயேசுவின் உயிர்ப்பை நேரில் கண்ட சீடர்கள் அவரின் சீடர்களாயினர். சான்று என்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க பதம் 'Marturia' என்பது. இதிலிருந்துதான்

வெற்றி கொண்டு ஆண்டவராக உயிர்த்தெழுந்தார். எனவே சாவிலிருந்து வாழ்வுக்கு நம்மை அழைக்கும் இயேசுவின் உயிர்த்தெழுதலை நாமும் கொண்டாட அழைக்கப்படுகிறோம். இயேசுவின் உயிர்ப்பைக் கொண்டாடும் நாம் நமது வாழ்வில் எப்படியெல்லாம் அல்லது எவற்றில் இருந்தெல்லாம் உயிர்க்க வேண்டும் என்று சிந்திக்க அழைக்கப்படுகிறோம். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு தரும் உண்மையை சிந்திப்போம்.

### 1. ஆன்மிக இருளினை அகற்றுகிறது :

யோ. 20:1-ல் இருள் நீங்கும் முன்பே கல்லறையை நோக்கி ஓடியவர் மகதலேனா மரியாள் என கூறப்பட்டிருக்கிறது. இங்கு கூறப்படும் 'இருள்' காலச் சூழ்நிலையில் நிலவிய புற இருளை மட்டுமல்ல, உள்ளத்தே நிலவிய அக இருளையும் சுட்டிக்காட்டுகிறது. இயேசுவோடு கூட இருந்தும் அவர் கூறிய வார்த்தைகளை சரிவர புரிந்து கொள்ளாததின் காரணமாக ஏற்பட்ட இருள் இது. "மானிட மகன் பாவிகள் கையில் ஒப்புவிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட வேண்டும்; மூன்றாம் நாளில் உயிர்த்தெழ வேண்டும்" என்று கலியோவில் இருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள் (லூக். 24:6) என்ற வசனம் இதை உறுதி செய்கிறது. எனவே சீடர்களின் எதிர்பார்ப்புக்கும் அப்பாற்பட்ட ஒன்றாகவே இருந்திருக்கிறது என்பது புலனாகிறது. Easter was beyond the expectation of even the closet disciples of our Lord. நாமும் ஆன்மீக இருளில் இருக்கும்போது, நம்மைச் சுற்றி நடக்கின்ற நிகழ்வுகளை சரியான புரிதலுடன் அணுகமுடியாது என்பதே இயேசு நமக்கு சுட்டிக்காட்டும் பாடம். பரிசேயர்கள் ஆன்மீக இருளில் இருந்ததன் காரணமாக இயேசுவை அவருடைய உண்மை இயல்பில், அதாவது இறைமகனாக, பார்க்க முடியவில்லை. இஸ்ரவேல் மக்கள் இறைவனின் அன்பைச் சரிவர புரிந்து கொள்ள இயலாததன் காரணத்தால், இறைவன் அவர்களைக் 'கண்களிருந்தும் குருடர்கள்' (ஏசா. 43:8) என்று சாடுகிறார். ஆன்மீக இருள் நம்மில் ஆதிக்கம் செய்யும்போது நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளை தவறாகவே புரிந்து கொள்கிறோம். சந்தேகப்படுதல், குறைகண்டுபிடித்தல் முதலியவை நமது தவறான புரிதலுக்கு ஒரு சில எடுத்துக்காட்டுகளே இத்தகைய தவறான புரிதல் தவறான செயல்பாடுகளுக்கு இட்டுச் செல்வதை யாரும் மறுக்க முடியாது.

### 2. அடிமைத்துவ ஆதிக்கத்தை அகற்றுகிறது :

யோவா. 20:1-ல் 'கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருந்தது' என கூறப்பட்டிருக்கிறது. 'கல்' மனி அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது. விபசாரத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணைக் கல்லால் எறிந்து கொல்ல





ரோமாபுரியின் அடக்குதல்களும், ஆளுகையும் மக்களுக்கு சலிப்பாகி விடுதலை வராதா என்று ஏங்கிக் கொண்டிருந்த காலத்திலே பஸ்காவின் காலம் இவர்களுக்கு நம்பிக்கையின் காலமாக இருந்தது. எகிப்தின் அடிமைத்தனத்தில் கடவுள் மோசேயின் வழியாகத் தந்த விடுதலையின் நினைவு கூருதலே பஸ்கா பண்டிகை. ஒவ்வொரு பண்டிகையின் காலத்திலும் ரோமாபுரிப் பேரரசிலிருந்து விடுதலையை எதிர்பார்த்து ஏமாந்து கொண்டிருந்த காலத்திலே தான் அந்த பஸ்கா பண்டிகை ஒரு புதிய நம்பிக்கையினைத் தந்திருந்தது. இயேசுவை அவர்களது நம்பிக்கை அவரது குணப்படுத்தும் வரம், மரித்தோரையும் உயிரோடெழுப்பிய ஆற்றல், பிசாசு பிடித்தோரை விடுவித்த நற்செயல், புறக்கணிக்கப்பட்டோரிடத்திலும் எளியோரிடத்திலும் அவர் காண்பித்த அன்பு கரிசனை மாதிரிகள் மக்களை அதிகமாய் அவர்பால் ஈர்த்தன. ஆற்றல் மிகுந்த அவரது வார்த்தைகள் மிகுந்த ஆறுதலைத் தந்தன. உலகமே அவர்பின் செல்லுகிறதே என்று கூறுமளவுக்கு அவரது புகழ் பரவியிருந்தது. இவ்வேளையில்தான் மீட்புக்காக ஏங்கிய மக்கள், மீட்பு அருகில் வந்து விட்டதை இயேசுவின் பவனியில் கண்டனர். பெருங்குரலாய் ஓசன்னா வென்று முழக்க மிட்டனர். இன்றும் இயேசுகிறிஸ்வின் குருத்தோலைப் பவனி மீட்பு வந்துவிட்ட குதூகலத்தை அருளுவதால் அமைந்துள்ளது.

### 3. இயேசுவே மீட்பர் என அறிக்கையிட்டு அறிவிக்கும் வார்த்தை ஓசன்னா :

இயேசு கிறிஸ்துவின் குருத்தோலை பவனியில் வெளிப்பட்ட வார்த்தையில் மீட்பு அருகில் வந்துவிட்டது என்பதைவிட இயேசுவே மீட்பர் எனும் அறிக்கையே மேலோங்கி நிற்பதை நாம் உறுதி செய்யமுடியும்.

ஓசன்னா என்பது மீட்பருக்கு ஜே என்று முழக்கமிடும் வெற்றியின் வார்த்தையாக தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்பதை தாவீதின் குமாரனே எங்கள் மீட்பர்; உன்னதத்திலே ஓசன்னா என்பது உன்னதங்களிலும் அவரே மீடபர் அல்லது அவரே உன்னத மீட்பர் என்பதை இயேசுவின் பவனியில் மக்கள் உணர்ந்தனர். அறிக்கை செய்தனர்.

இயேசு கிறிஸ்துவின் உலக தாய் மரியாள் கருவுற்றிருந்த போது தூதன் யோசேப்புக்கு அறிவித்த செய்தியில் "அவர் ஒரு மகனைப்

பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்'' என்றார். இச்செய்தி இயேசு ஒருவரே மீட்பர் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

ஓசன்னா என்ற குரல் அபயக் குரலாய் வெளியிடப்பட்டு அது நம்பிக்கையின் குரலாய் வளர்ச்சியடைந்து இயேசுவை மீட்பர் என்ற வெற்றி அறிக்கையாக நிறைவடைகிறது. எல்லா சூழலுக்கும் அவர் ஒருவரே நமக்குப் போதுமானவர் ஏல்ஷடாய் என்ற சர்வ வல்லமையின் நிறைவாய் ஓசன்னா அமைந்துள்ளது. நம் வாழ்வில் இதனை அறிந்து அனுபவித்த குருத்தோலைப் பவனியில் ஓசன்னா பாடுவோம்.

அருள்திரு. D. **ஜஸ்டின் தேவதாசன்**



**20-04-2014** *உயிர்ப்பின் ஞாயிறு*

# கிறிஸ்துவின் உயிர்ப்பு வாழ்வின் கொண்டாட்டம்

## CHRIST'S RESURRECTION : CELEBRATION OF LIFE

| | |
|---|---|
| IIஅர. 4:26-37 | Iகொரி. 15:42-58 |
| திபா. 118:1-4; 14-17 | யோவா. 20:1-18 |

*"...நான் ஆண்டவரைக் கண்டேன்..." யோவா. 20:18*

**இறைவேண்டல் : மகிமையான வாழ்விற்கான கடவுளே, உமது மகனின் வல்லமையான உயிர்த்தெழுதல் மூலமாக பாவத்தின் பழைய ஒழுங்காகிய சாவை முறியடித்து, எல்லாவற்றையும் புதிதாக்கினீரே! கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மாசந்தோஷத்தோடு கொண்டாடி, நீதியான வாழ்விற்குள் செல்ல உதவி புரிய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.**

இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதல் நிகழ்வு மனிதனை இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கிய இன்ப நிகழ்ச்சி. வரலாற்றில் இதற்கு முன் எப்போதுமே நிகழ்ந்திராத ஓர் நிகழ்வு. இதுவே கிறிஸ்தவ வாழ்வுக்கு அடிப்படை ஆனது. ''கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்'' (I கொ 15:14) என பவுலடிகளார் கூறியுள்ளார். இயேசு கிறிஸ்து உயரோடெழுந்த நாட்களில் பத்திரிகைகள் இருந்திருந்தால் 'இயேசு உயிரோடெழுந்தார்' என்ற செய்தியே அன்றைய தலைப்புச் செய்தியாக வெளியாகி இருந்திருக்கும். ஆனால் அவ்வசதிகளற்ற சூழலில் இயேசுவின் உயிர்ப்புச் செய்தியை அறிவித்தவர்கள் இயேசுவின் சீடர்களும் சில பெண்களுமே ஆவர்.

மரணம் அனைவர்க்கும் பொதுவானது. இறைவனின் படைப்பில் உறுதிபடுத்தப்பட்ட உண்மையாகும் மரணம் இல்லையெனில் வாழ்வில் எவருக்கும் பிடிப்பே இல்லாமல் இருந்திருக்கும். சருகுகளே இல்லாவிட்டால் எப்படி புதிர் தளிர்களுக்கு பூபாளம் இருந்திருக்கும்? கரையே இல்லாத கடலும் இல்லை. முடிவே இல்லாத நதியும் இல்லை. சிகரமே இல்லாத மலைகளும் இல்லை. ஒவ்வொரு மூலத்திற்கும் ஒரு முடிவு தவிர்க்க இயலாதது. மனித வாழ்க்கையில் மரணமும் அப்படித்தான். அப்படிப்பட்ட மரணம் இவ்வுலகில் இயேசு ஒருவரைத்தான் ஆண்டவர் ஆக்கியது. 'ஆண்டவர்' என்றால் 'வெண்றவர்' என்று பொருள். கிறிஸ்து மரணத்தை

நிலைக்குத் தள்ளப்படுகிறான். தாவரங்கள் உணவு தயாரிப்பதற்கு சூரிய ஒளி மிக முக்கியமானது போல கிறிஸ்துவாகிய ஒளி நம்முடைய வாழ்வில் முக்கியம் என்பதை உணர்வோம்.

திருதூதரான பவுல் எபேசு சபைக்கு தன்னுடைய கடிதம் எழுதுகின்றபோது ஒளியின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் என்றார். முற்காலத்தில் நீங்கள் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாகவும், வேசித்தனம், அசுத்தம், பொருளாசை போன்ற இருளான அனுபவத்திலும் இருந்தீர்கள். கிறிஸ்துவின் இரத்தம் நம்மை இவைகளிலிருந்து மீட்டது. ஆகவே, நம்மீது அவருடைய ஒளியை வீசச் செய்து ஒளியில் வாழ வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு நீங்கள் ஒளியின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் என்று கூறுகின்றார்.

இப்படியே உயர்வான வாழ்வுக்கு பவுல் நம்மை அழைக்கின்றார். மேலும் ஆண், பெண் உறவில் காணப்படும் ஒழுக்கக்கேட்டைக் குறை கூறுகிறார். இவ்வித ஒழுக்கக் கேட்டை வர்ணிக்க பொருளாசை, பேராசை போன்ற சொற்களைப் பயன்படுத்துகிறார். இவ்வித புத்தியீனமான இருளான நடத்தைகளை விட்டு ஒளியில் நடக்கக் கூறுகிறார். இன்று அவருடைய பிள்ளைகளாக வாழும் நாம் ஒளி கொடுப்பது எப்படி என்று சிந்தனை செய்வோம்.

### *1. உடன் வரும் கிறிஸ்துவாகிய ஒளி* (லூக்கா 24 : 15)

.... இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார்.

வாழ்க்கை என்பது ஒரு நெடுந்தூரம் பயணம். இந்தப் பயணத்தில் ஆரம்பத்தில் தாய், தந்தை அருகில் இருக்கிறார்கள். பாதி வழியில் சில நண்பர்கள் வருகிறார்கள். மனைவி பிள்ளைகள் என்று குடும்பம் வளர்கிறது. இதில் சிலர் பிரிந்து போகிறார்கள். சிலர் மரித்து விடுகிறார்கள். ஆனால் வாழ்வின் இறுதிவரை உடன் வருகிறவர் இறைவன். இந்த வாழ்க்கைப் பயணத்தின் சிறப்பும் இனிமையும் ஒளியாகிய இறைவன் உடன் வருவதில் தான் இருக்கிறது. "ஆண்டவரே நீர் எங்களோடு வருவதினால் அல்லவா நானும், உம்முடைய மக்களும் விசேஷித்தவர்களாய் இருக்கின்றோம்" என்று பக்தன் மோசே கூறுகிறார்.

எம்மாவூர் நோக்கி சென்ற சீடர்கள் நம்பிக்கையற்ற நிலையில் இருந்தனர். இயேசுவைத் தங்கள் வாழ்வின் நம்பிக்கையாகக் கொண்டிருந்த அவர்கள் இப்போது தனிமையை உணர்கிறவர்களாகச் செல்கின்றனர். எருசலேமை விட்டு வருகின்றனர். அவர்கள் தோற்றமும் வார்த்தைகளும்



**27-04-2014**

*உயிர்ப்புக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு*

## என் ஆண்டவரே, என் கடவுளே

## MY LORD AND MY GOD

| | |
|---|---|
| வி.ப. 3 : 7-15 | 1பேது. 1 : 3-9 |
| திபா. 93 | யோவா. 20 : 24-29 |

*"...விசுவாசமற்றவனாய் இராதே, விசுவாசம் கொள்."* யோவா. 20 : 27

**இறைவேண்டல் :** கடவுளே எங்கள் இரட்சகரே, உமது ஒரே மகனை எங்கள் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்க ஒப்புக்கொடுத்து, எங்களை நீதிக்குட்படுத்த அவரை உயிரோடு எழுப்பினீரே. அவரது உயிர்த்தெழுதலை பூரணமாக, எந்த சந்தேகமின்றி நம்பவும், உம் மீதுள்ள நம்பிக்கையில் கண்பதித்து நடக்கவும் அருள் தாரும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

தோமா என்பது அராமியச் சொல். திதிமு என்பது கிரேக்கம் இவைகள் இரண்டும் இரட்டையன் என்ற பொருளைத் தருகின்றன. திருமறை திதிமு எனப்பட்ட தோமா என்றே இந்தியாவின் அப்போஸ்தலனாகிய தோமாவை அறிமுகம் செய்கிறது. (யோவான் 11:16; 20:24; 21:2). பிலிப்பு மூலம் இயேசுவுக்கு அறிமுகமானவர் தோமா. முதலில் தச்சுத் தொழிலாளியாகவும் பிறகு, மீன்பிடிப்பவராகவும் இருந்தார். தோமாவின் தொழிலும் இரட்டைத் தொழிலேயாகும். தோமாவின் வாழ்வில் விளங்கிய சில சிறந்த இரட்டை அனுபவங்கள் நமக்குத் தெளிவை தருகின்றன. அவைகளைச் சிந்திப்போம்:

### *1. இரட்டையான விடைகளும் வினாக்களும்*

**விடைகள் :** லாசர் என்பவர் உடல் நலமில்லாமல் இருப்பதை இயேசு கேள்வியுற்று யூதேயாவுக்குப் போகலாம் என்றார். இயேசுவின் சீடர்கள். "ஆண்டவரே அங்கு உம்மைக் கொல்லத் தேடுகிறார்கள். வேண்டாம்" எனத் தடுக்கையில் திதிமு எனப்பட்ட தோமா மட்டும் "வாருங்கள் நாமும் செல்வோம்; அவரோடு இறப்போம்" என்றார் (யோவா 11:19) இரட்டை விடைகள் (செல்வோம்; இறப்போம்) அர்த்தமுள்ள, அன்பை வெளிப்படுத்தும் விடைகள். அவருடைய (தோமா) வார்த்தைகள் மற்றவர்களை ஊக்கப்படுத்தும் ஊட்டசத்தாய் அமைந்தன.

**வினாக்கள்:** இராவுணவின் போது "ஆண்டவரே நீர் செல்லுமிடமே எங்களுக்குத் தெரியாதிருக்க அங்கே போகும் வழி எப்படித் தெரியும்"? என்றார் தோமா. இரட்டைக் கேள்வி செல்லுமிடம்? போகும்வழி? இது தோமாவின் கேள்வியில் தெரிந்து கொள்ளும் தாகமும்; பின்பற்ற வேண்டும் என்ற வேகமும் இணைந்துள்ளது. இதற்கு இயேசு தந்த பதில் அற்புதமான

மறையுண்மைகளை நமக்கு விளக்குகிறது. "நானே வழியும் உண்மையும், வாழ்வும், என் வழியாயன்றி எவனும் பரம தந்தையிடம் வருவதில்லை. நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள்" என்றார் இயேசு (யோவா. 14: 57)

நமது கேள்விகளும், விடைகளும் அர்த்தமுள்ளதாயும், அன்பின் வெளிப்பாடாயும், பின்பற்றக் கூடியதாயும் அமையவேண்டும்.

### 2. இரட்டையான இதய அறிக்கை

இயேசுநாதர் உயிர்த்தெழுந்த ஞாயிறன்று மாலை தமது சீடர்களுக்குத் தோன்றினார். ஆனால் தோமா அந்நேரம் அங்கு இல்லை. மற்ற சீடர்கள் அவரிடம் "ஆண்டவரைக் கண்டோம்" என்றனர். தோமாவோ "அவர் கைகளில் ஆணியால் உண்டான தழும்பைப் பார்த்து, ஆணிகள் இருந்த இடத்தில் என் விரலை விட்டு அவர் விலாவில் என் கையை இட்டால் ஒழிய நான் விசுவாசிக்கமாட்டேன்" என்றார். எட்டு நாளைக்குப் பின்பு அவருடைய சீடர்கள் மீண்டும் வீட்டில் கூடியிருந்தார்கள். இயேசு காயங்களைக் காட்டி தோமாவிடம், "இங்கே உன் விரலை இடு, இதோ "என் கைகள் உன் கையை நீட்டி என் விலாவில் இடு. விசுவாசமற்றவனாய் இராதே, விசுவாசம் கொள்" என்றார். இதை பார்த்ததும் பாதத்தில் விழுந்தார் தோமா. "என் ஆண்டவரே என் கடவுளே" என்ற உறுதி அறிக்கையை வெளியிட்டார். புதிய ஏற்பாட்டு நூலில் யாருமே இயேசுவை இவ்வாறு அறிக்கையிட்டதில்லை. கடவுளும், ஆண்டவராகிய இயேசுவும் ஒன்றே என அறிக்கையிட்டார் தோமா. (யோவா 20: 24 - 28)

* தழும்பைப் பார்த்து, விரலை இட்டு,
* கையில், விலாவில்.
* என் ஆண்டவரே, என் கடவுளே

போன்றவைகள் இரட்டையாக இப்பகுதியில் வருவது குறிப்பிடத்தக்கது.

புனித தோமாவின் பெயரைக் கேட்டவுடன் அவர் ஒரு சந்தேகப் பேர்வழி என்பதுதான் நம் நினைவில் வரும். புனித தோமாவைப் போன்று இயேசுவைச் சந்திப்பதற்கு முன்பு, அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் சந்தித்தப் பிறகு புதுப்படைப்பாக மாறியுள்ளனர் என விவிலியம் வெளியிடுகிறது. இயேசுவைச் சந்திக்கும் முன் சமாரியாப் பெண், பிறவி குருடன், புனித பவுல், சகேயு போன்றவர்கள் இருந்த நிலை மாறி இயேசுவைச் சந்தித்த பின் புதுப்படைப்பாக, புது வாழ்வு, புது வசந்தம் பெற்று இயேசுவின் சாட்சிகளாக மாறினார்கள். இரட்டை என்பதற்கு இருக்கும் அதிக பெலன், இரண்டற ஒன்றிப்பு போன்ற பொருள்களே தோமாவில் வலிமை பெறுகிறது என்பதே உண்மை. நாமும் இயேசுவோடு இரண்டற ஒன்றிப்போம்.

அருள்திரு. M. **பிரேம்சிங் ஜெயக்குமார்**



**11-05-2014**

***உயிர்ப்புக்கு பின்வரும் மூன்றாம் ஞாயிறு***

## இயேசுவே உலகின் ஒளி : ஒளியில் நடப்போம்

## JESUS THE LIGHT OF THE WORLD : WALKING IN THE LIGHT

ஏசா. 60 : 1 - 7 எபே. 5 : 8 - 21
திபா. 27 லூக். 24 : 13 - 35

***"ஒரு காலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்போது ஆண்டவரோடு இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள். ஆகவே ஒளி பெற்ற மக்களாக வாழுங்கள்."*** *எபே. 5 : 8*

**இறைவேண்டல் : வெளிச்சத்தின் ஆண்டவரே, உமது மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் நிரந்தரமான ஒளியை அனுப்பி, இருளை அகற்றியவரே! உமது வெளிச்சத்தினால் பிரசன்னமாகி, வெளிச்சத்தின் பிள்ளைகளாக வாழ அருள்தாரும். அதனால், வெளிப்படையான மற்றும் நீதியான வாழ்க்கை வாழவும், இருளின் அதிகாரங்களுக்கு எதிர்த்து நிற்கவும் அருள் தாரும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.**

ஒளி மகிழ்ச்சியூட்டும் இறைவனின் கொடை. கதிரவன் கடலிலிருந்து எழும்பி வருவது கண்கொள்ளாக் காட்சியாக, காண்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது. பலமுறை அதைப் பார்த்தாலும் பார்ப்பவர் மனம் மகிழ்கின்றது. ஒளியைக் கொண்டுவரும் சூரிய உதயத்தைக் கண்டு மகிழாதவர் எவரும் இல்லை. ஆனால் இருளைக் காணும்போது உள்ளம் உடைகிறது, நடுக்கம் உண்டாகின்றது.

இறைவன் படைத்த படைப்புகளில் மேன்மையானது ஒளி. ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்த பூமியின் ஆழத்தின்மேல் இருள் இருந்தது. படைத்தவரின் முதல் செயல் இருளையும் ஒளியையும் வேறுபடுத்தியதே யாகும். (தொநூ. 1 : 3).

ஒளியில்லாமல் உயிர் இல்லை. அனைத்து உயிர்களுக்கும் ஆற்றல் கொடுக்கும் ஆதாரமாக விளங்குவது சூரிய ஒளி. சூரிய ஒளி இல்லை என்றால் அதனைப் பயன்படுத்தி உணவு தயாரிக்கும் தாவரங்களும், தாவரங்களைச் சார்ந்து வாழும் மற்ற உயிரினங்களும் வாழ முடியாது. இயேசு கிறிஸ்து "நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்கிறார். அவரில்லாமல் மாந்தர்க்கு வாழ்வில்லை. கிறிஸ்துவை உடையவனே முழு வாழ்வை உடையவன். கிறிஸ்து இல்லாதவன் முழுமையற்ற வாழ்வு

கல்லறையின் அருகில் அழுதுகொண்டிருந்த மரியாளுக்குக் காட்சி கொடுத்து அழுகையை அகற்றினார். (யோவா 20:16). பாடையைத் தொட்டு வாலிபனை உயிர்பெறச் செய்து விதவைத் தாயின் அழுகையை அகற்றினார் இயேசு. வாழ்வு கிறிஸ்துவில் இணைகின்றபோது அழுகை அகன்றுவிடுகின்றது.

இன்றைய நமது கிறிஸ்தவ வாழ்வைச் சிந்திப்போம். கரையில் நமக்காகக் காத்திருக்கும் இயேசுவை யார் என்று அறிந்திடாமல் அறியாமையில் வாழ்கிறோமா? (யோவா. 21:4) மீன் கண்டங்களோடு உணவை ஆயத்தம் செய்து அலைகடலின் ஆழத்திலிருந்து கரைசேர்க்க நமக்காகக் காத்திருக்கும் இயேசுவை நேசிக்காமல் வாழ்கிறோமா? அமைதி வாழ்வை அருளும் இயேசுவின் அன்பை உணராமல் வாழ்கிறோமா? உயிர்த்த கிறிஸ்து நம்மில் வாழ்பவர். நம் வாழ்வின் தீமைகளை அகற்றி துன்பங்களின் நடுவிலும் துணிவுடன் அவரைப் பற்றிக் கொண்டு உலகுக்கு நற்சான்று பகரும் மக்களாய் வாழ்வோம். இறையாட்சியில் பங்கடைவோம்.

அருள்திரு. J. **வின்சென்ட் ராபர்ட்**



**04-05-2014**

***உயிர்ப்புக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு***

# உயிர்த்த கிறிஸ்துவில் வாழ்வு

**LIFE IN THE RISEN CHRIST**

| | |
|---|---|
| எசே. 37 : 1 - 14 | உரோ. 6 : 1-14 |
| திபா. 23 | யோவ 21 : 1-14 |

***“கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை.” உரோ. 6 : 8***

**இறைவேண்டல் :** வாழ்வின் கடவுளே, உமது மகன் மரணத்தை ஜெயித்ததால் முடிவற்ற நிலைவாழ்விற்கான கதவை திறந்தீரே! உமது உயிர்த்தெழுதலை கொண்டாடவும், உமது புதிதாக்கும் வல்லமையினால், சாவிலிருந்து எழுந்து, நீதியின் வாழ்விற்குட்படவும் அருள் புரிய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

“கடவுளின் தெய்வீக ஆற்றல் எங்கே கிரியை செய்கின்றதோ அங்கே கல்லறைகள் கூட மரித்தவரைக் கக்கிவிடும்” என்கிறார் ஒரு இறைபக்தர். வெறுமையான கல்லறையை (Empty tomb) நேரடியாகப் பார்த்த பேதுரு இயேசுகிறிஸ்து உயிர்பெற்றெழுந்தார் இதற்கு நாங்களே சாட்சிகள் என்றார். உயிர்த்தெழுந்த இயேசு இன்னும் உயிர் வாழ்கிறார். அவர் விண்ணகத்தில் ஏறி அமர்ந்திருக்கவில்லை, மறைந்திருக்கவும் இல்லை. மாறாக அவர் சமூகத்தில் சங்கமித்து வாழ்கிறார். மனிதர்களின் உள்ளங்களில் வாழ்கிறார். வரலாற்றில் கலந்து வாழ்கிறார். சமத்துவத்தையும் சமூக நீதியையும் அமைதி வாழ்வையும் நிலைநாட்ட வாழ்கிறார். இறையாட்சிக்கு இறைமக்களை ஆயத்தம் செய்யவே வாழ்கிறார். உயிர்த்த கிறிஸ்துவில் நம் வாழ்வு கட்டப்படவேண்டும் என்பதே ஆண்டவர் நம்மில் எதிர்பார்க்கும் வாழ்வு. எனவேதான் உயிர்த்த கிறிஸ்துவில் வாழ்வு. (Life in risen Lord) என்னும் தியானக் பொருளை தென்னிந்திய திருச்சபை இந்த நாளுக்குக் கொடுத்திருக்கிறது. உயிர்த்த கிறிஸ்துவில் நம் வாழ்வு நிலையைத் தொடர்ந்து சிந்திப்போம்.

## 1. அறியாமை அகன்ற வாழ்வு :

இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த பிரபலமான வழக்கறிஞர் பிராங்க் மாரிசன். இவர் ஒரு நாத்திகர். கடவுள் இல்லை என வாதிடுபவர்.

இயேசுவைப் பற்றி இவர் கொண்டிருந்த எண்ணம், இயேசு என்ற ஒருவர் பிறந்து போதனை செய்து அருஞ்செயல்கள் செய்தார் என்பதை ஒருவேளை ஏற்றுக்கொள்ளலாம், ஆனால் அவர் மரணமடைந்து உயிர்த்தெழுந்தார் என்பதை ஏற்கவே முடியாது என்றார். தனது கருத்துக்களையும், திறமையையும் ஒருமுகப்படுத்தி இயேசு உயிர்த்தெழவில்லை என ஒரு புஸ்தகத்தை எழுதிவிட்டால் அது காலங்காலமாக எனது புகழைச் சொல்வதோடு மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் என நினைத்தார். இயேசுவைப் பற்றி மறுத்து எழுதவேண்டுமென்றால் அவரைப்பற்றி அறிந்திருக்கவேண்டுமே, எனவே திருமறையைப் படிக்கத் தொடங்கினார். பைபிளைப் படிக்கப் படிக்க கண்களில் கண்ணீர் வந்தது. தன் அறியாமையை உணர்ந்தார். தான் எவ்வளவு பெரிய பாவி என உணர்ந்தார். இறுதியாக புஸ்தகம் எழுதினாரா? ஆம் எழுதியேவிட்டார். இயேசுகிறிஸ்து உயிர்தெழவில்லை என்பதற்கு பதிலாக அவர் நிச்சயமாகவே உயிர்த்தெழுந்தார் என்று ஆதாரப்பூர்வமாக எழுதினார். அவர் எழுதிய ஆங்கில புத்தகம் தான் "WHO MOVED THE STONE" என்ற மிகப் புகழ்பெற்ற நூலாக விளங்குகிறது. இயேசுவின் உயிர்த்தெழுதல் அறியாமை அகன்ற வாழ்வை மனிதனுக்குக் கொடுக்கிறது. உயிர்த்த கிறிஸ்துவாய் சீடர்களுடன் எம்மா ஊருக்குப் பயணம் செய்தபோது அவர்கள் அறியாமையை அகற்றினார். அவரை அறிந்துகொண்ட சீடர்கள் அவருடன் இணைந்து வாழத் தங்களை அர்ப்பணித்தார்கள்.

### 2. அமைதி நிறைந்த வாழ்வு :

அமைதி வாழ்வுக்காக அகிலமே இன்று ஏங்குகின்றது. அமைதிக்காக ஏங்கும் மனிதரின் இதய வேட்கையை நிறைவேற்றவே இயேசுகிறிஸ்து மனிதராய் இவ்வுலகத்தில் வந்தார். ஆகவே அவர் கல்லறையிலிருந்து உயிர்பெற்று எழுந்த பின்பு யார் யாருக்கெல்லாம் காட்சி தந்தாரோ, அவர்களையெல்லாம் பார்த்து உங்களுக்கு அமைதி உண்டாவதாக (யோவா. 20:19) என்ற வாழ்த்துடனேதான் அவர்களுடன் உரையாடத் தொடங்கினார். அவர் அளித்த அமைதி மனிதனின் உள்ளொளி சார்ந்த அமைதி.

ஆஸ்திரேலிய மிஷனரி கிரகாம் ஸ்டுவட் ஸ்டெயின்ஸ் தன்னுடைய இரண்டு மகன்கள் பிலிப்பி, தீமோத்தி ஆகியோருடன் ஒரிசாவில் 1996 ஜீன்மாதம் சமூக விரோதிகளால் எரித்துக் கொல்லப்பட்டபோதும் உயிர்த்த கிறிஸ்துவில் துணிவோடு நின்றவர் அவரது மனைவி கிளாடிஸ். இன்னமும் அவர்கள் சாந்தமாக இருந்தார்கள்.





சமாதானமாகப் பேசினார்கள். அடுத்த என்ன செய்யப்போகிறீர்கள் எனப் பத்திரிகையாளர்கள் கேட்டபோது, இங்கே உள்ள சகோதர சகோதரிகளை என் கணவர் நேசித்தது போலவே நானும் நேசிக்கிறேன். இங்குதான் இருக்கப்போகிறேன் என்றார். காரணம் கிறிஸ்துவில் பெற்ற சமாதானம்.

தொடக்க கால கிறிஸ்தவர்களையும் உயிர்த்த இயேசுகிறிஸ்துவின் அமைதி இப்படித்தான் மாற்றியது. அவரது மரணத்தால் தடுமாறிப்போனவர்கள் உயிர்த்தெழுதலால் அமைதி பெற்றனர். இந்த இயேசுகிறிஸ்துவே இன்றும் நம் உள்ளத்தில் ஒளியாய் இருந்து அமைதி அருள்கிறார்.

### 3. அழுகை அகன்ற வாழ்வு:

உயிர்த்த கிறிஸ்துவில் நாம் வாழ்வது நமது அழுகையை அகற்றி அகன்ற பார்வையைத் தருகிறது. பிறந்ததும் குழந்தை அழுகின்றது. அழுது கொண்டே அது ஒரு மனிதனாய் வளருகின்றது. வாழ்க்கைச் சூழல் எனும் சூறாவளிக்குள் சிக்கி அழுது கொண்டே வாழ்க்கைப் பயணத்தைத் தொடருகின்றது. பலர் சுற்றி அழுது கொண்டிருக்க வாழ்க்கை பயணத்தைத் நிறுத்துகிறது. ஆனால் உயிர்த்த இயேசு கிறிஸ்துவோடு வாழ்வது அழுகையை அகற்றுகிறது. கண்ணீரைத் துடைக்கின்றது. அழுகையற்ற நிலை வாழ்வைத் தருகின்றது.

வகுப்பில் அழுதுகொண்டிருந்த சிறுவனிடம், ஏன் அழுகிறாய்? எனக் கேட்டார் ஆசிரியர். அதற்கு சிறுவன் என் தங்கை உண்மையாகவே இறந்துபோனாள். அவளைக் குழி தோண்டி புதைத்து மண்ணை அள்ளிப்போட்டு மூடிவிட்டார்கள் என்று சொல்லிவிட்டு மேலும் அழுதான். அவனது கண்ணீரைத் துடைத்துவிட்டு வகுப்பறை சன்னலின் அருகில் அழைத்துச் சென்று மண்ணால் நிரப்பப்பட்டிருந்து தொட்டிகளை காண்பித்து இங்கே பார் போன வாரம்தான் நாம் இதில் விதைகளை ஊன்றினோம் இப்போது அது முளைக்க ஆரம்பித்திருக்கிறது என்று அவனிடம் கூறிவிட்டு மண்ணைத் தோண்டி முளைகிளம்பிய விதையை அவனிடம் காண்பித்து ஆசிரியர் சொன்னார், உன்னுடைய தங்கையும் இதைபோலவே புதைக்கப்பட்டிருக்கிறாள். ஆனால் அவள் திரும்பவும் ஒருநாள் உயிர்பெற்று எழுவாள். ஆண்டவரோடு வாழும் பேற்றினைப் பெறுவாள் என்றார். அழுகையை நிறுத்தினான் சிறுவன்.

நிலையான வாழ்வின் பேரின்பத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிற நாம் இவ்வுலகின் துன்பங்களிலும், மரணங்களிலும் அழுது கொண்டிருக்க அல்ல, மாறாக கிறிஸ்துவோடு வாழ்ந்து ஆனந்தம் அடைவதற்காகக்

**25-05-2014**

***உயிர்ப்புக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு***

# அருள்பணிக்கான புத்தாக்கம்

## RENEWAL FOR MISSION

எசா. 1 : 10-17 யாக். 1 : 19-27
திபா. 113 மத். 25 : 31-46

***“என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள்; உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமை பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.”*** *மத். 25 : 34*

**இறைவேண்டல் : கடவுளே எங்கள் மீது உமது ஞானத்தின் ஆவியை ஊற்றும் அதனால் நாங்கள் புதுப்பிக்கப்பட்டு, தகுதிப்படுத்தப்பட்டு உமது சிலுவையின் வழியில் நடக்க அருள் தாரும். நீர் விரும்புகிறபடி பணிசெய்ய தகுதிபடுத்தும் இழப்பை எண்ணாமல் கொடுக்கவும், காயங்களை கட்டவும், பெலனை பாராமல் உழைக்கவும், உமது திருவுளத்தை அறிந்து செயல்படவும் அருள் தாரும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.**

அருள்பணிக்கான புத்தாக்கம் இன்றைய உலகிற்கும் அருள் பணிக்கும் மிகவும் தேவையானது. உப்பாக கரைந்தும், ஒளியாக எரிந்தும் உலகிற்கு செயல்பட நாம் அழைக்கப்படுகிறோம். பணிகள் உண்மையாக இருந்தால் மட்டுமே அருள்பணி ஆகும். இதில் இன்று புத்தாக்கம், புதுமை எது என சிந்திப்பது நல்லது. இறைவனைத் தொழும் கரங்கள் மேலானதா? இல்லை மனிதனுக்கு உதவும் கரங்கள் மேலானதா? இரண்டும் ஓர் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல் முக்கியமானது. மத். 22:37-39இல் சகோதரிடம் மனத்தாங்கல் இருந்தால் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக்கொண்டு வந்து காணிக்கை செலுத்து. மத்.5:22-24 பலியை அல்ல இரக்கத்தையே கர்த்தர் விரும்புகிறார். மத். 9:13. இவற்றோடு கொடுக்கப்பட்டிருக்கும் திருமறைப்பகுதிகளை ஆயும்போது அருள்பணிக்கான புத்தாக்கம் புரிந்து கொள்ளலாம்.

### 1. பணிதலும் தூய்மையும் : (எசா. 1:16)

உங்களைக் கழுவி தூய்மைப்படுத்துங்கள் என்கிறார் கி.மு. 8-ம் நூற்றாண்டு இறைவாக்கினர் ஏசாயா. அருள்பணியில் பலிகள் செலுத்துவது பண்டிகைகள் கொண்டாடுதல், மாதப்பிறப்பு கொண்டாடுதல், காணிக்கைகளைக் கொண்டு வருதல், தூபம் காட்டுதல், நாள்களை





அவர்களின் கவலை, பயம், நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகின்றன. “அவர்கள் முகவாட்டத்தோடு இருந்தனர்” (லூக்கா 24 : 17) “அவர் இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என நினைத்தோம்” (லூக்கா 24 : 21). இந்த வார்த்தைகள் அவர்களின் நம்பிக்கையின்மையின் வெளிப்பாடுகள். ஆனால் வாழ்க்கைப் பயணத்தில் கடவுள் தம்முடைய பிள்ளைகளோடு உடன் வருகிறார். இது யாருடைய கட்டாயத்தின் பேரிலும் அல்ல, அவரே முன் வந்து உடன் வருகிறார். இது அவர் எடுத்த தீர்மானம். நாமும் துன்பங்களிலும், கடவுளின் இருத்தலை உணர இயலாத காலங்களிலும் சீடர்களைப் போல் நம்பிக்கை இழக்காமல் உடன் வரும் ஒளியாகிய கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளுவோம்.

### 2. உரையாடும் கிறிஸ்துவாகிய ஒளி : (லூக்கா 24 : 17)

“அவர் அவர்களை நோக்கி வழி நெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டிருப்பது என்ன? என்று கேட்டார்.

எம்மாவூர் சீடர்களின் பயணத்தில் உடன் இருந்த கிறிஸ்துவாகிய ஒளி நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழி நடந்து பேசிக் கொள்ளும் நிகழ்வு என்ன என்று விசாரித்து அவர்களோடு உரையாடுகிறார் கிறிஸ்துவாகிய ஒளி. அவர்கள் வருத்தம் தோய்ந்த, மனங்குழம்பிய, இழப்பு பற்றிய மனதுக்கத்துடன் எருசலேமில் சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்ட இயேசு நாதர் இஸ்ரவேலரை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். ஆனால் அவர் இறந்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்று நாளாகிறது என்றனர். புத்திக் கூர்மையில்லாத மந்த நிலையில் உரையாடலில் கொளுந்து விட்டு எரியும் அனுபவம் பெற்றும் கண்கள் திறக்கவில்லை. பயத்தின் பிடியில் சிக்கித் தவித்த சீடர்கள் தங்கள் பார்வையை விசாலமான பார்வையாகக் கொள்ள முடியவில்லை. வாழ்க்கைப் பயணத்தில் ஈடுசெய்ய முடியாத இழப்புடன் வாடி வதங்கியோருடன் வாழும் ஒளியாக கிறிஸ்துவின் உறவு உண்டு என்பதை மறவாது, செயல்படுவோம்.

### 3. உறவாடும் கிறிஸ்துவாகிய ஒளி : (லூக்கா 24 : 29)

அவர்கள் அவரிடம், “எங்களோடு தங்கும்; ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று; பொழுதும் போயிற்று” என்று கூறிக் கட்டாயப்படுத்தி அவரை இணங்கவைத்தார்கள். அவர் அங்கு தங்குமாறு அவர்களோடு சென்றார். உறவுகள் உடைந்து சிதறிக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் மானிடம் அன்புக்காக ஏங்கி தவிக்கிறது. அன்பின் உறைவிடமான குடும்ப வாழ்வில்

கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள் இப்படி ஒவ்வொருவருக்குமிடையில் உறவு குறைந்து வருகிறது.

உறவு வாழ்வில் மிகவும் தேவையானது. மனித உறவு மலர்ந்தால் மக்களிடையே மனிதாபிமானம் மலரும். இயேசு கிறிஸ்து விண்ணுலகக் கடவுளோடும், மண்ணுலக மக்களோடும் இணைபிரியாத உறவை வைத்தார்.

இயேசுவைத் தங்களோடு தங்குமாறு அழைக்கும் சீடர்களின் செயல் சிறப்பானது. நாங்கள் இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் என்பதைத் தங்கள் நற்செயல் வழி வெளிப்படுத்துகின்றனர். சீடர்கள் கட்டாயப்படுத்தி இயேசுவைத் தங்களோடு தங்க இணங்கவைத்ததாகத் திருமறை சொல்கிறது (லூக்கா 24 : 29) சீடர்கள் இயேசுவை அந்நியராக நினைத்து அழைத்தனர். நம்முடைய அழைப்பை ஆண்டவர் எதிர்பார்க்கிறார் ''.... அந்நியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள் (மத்தேயு 25 : 35) விருந்தினராக வந்த கிறிஸ்து இங்கு விருந்தளிப்பவராகத் தம்மை வெளிப்படுத்துகிறார். இணைந்து உணவு உண்பது என்பது உறவுக்கு அடையாளம். உறவு இல்லை எனில் உதவி இல்லை உதவி இல்லை எனில் உறவு இல்லை.

''... தன் சகோதரனிடத்தில் அன்பு கூருகிறவன் ஒளியிலே நிலை கொண்டிருக்கிறான்'' உறவில் காணப்படும் விரிசல்களைக் களைந்து உறவில் ஒளி கொடுக்கும் அடியவர்களாய் வாழ்வோம்.

நிறைவாக, ஆண்டவர் என் வெளிச்சம் (திபா. 27 : 1) எனத் தாவீது சொல்கிறார். தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவும் இருள் இல்லை (I யோவான் 1 : 5), ஆண்டவர் ஒளியில் இருக்கிறது போல நாமும் ஒளியில் நடப்போம் (1 யோவான் 1 : 7). ஒளியைக் காண்பித்த இறைவன் இன்று நம்மை உலகில் உள்ள மக்களுக்கும், அவர்களது வாழ்விற்கும் ஒளியாக மாறும்படி அழைக்கிறார். மற்றவர்களை இருளிலே நடத்தாதபடி, மற்றவர்களுக்கு இருளைப் பரிசாக அளிக்காதபடி ஒளியையும், ஒளியின் வாழ்க்கையைக் கொடுக்கும்படி அழைக்கிறார். இறைவன் படைப்பின்போது'' வெறுமையையும், இருளையும் கண்டவர் ''வெளிச்சம் உண்டாகக் கடவது'' என்றார். வெளிச்சம் உண்டானது. எங்கே வெறுமை உள்ளதோ அங்கே இறைவனின் பிள்ளைகளாக ஒளியை உருவாக்கி, மெய்யான ஜீவ ஒளியை மக்கள் கண்டடையச் செய்வோம்.

அணைந்து போகிற விளக்கைப் போல அல்ல, அணையா விளக்காய் ஒளி கொடுப்போம்.

அருள்திரு. J. **ஜெபசிங்**





மரண தருவாயிலிருக்கும் ஒரு மனிதனை மருத்துவமனைக்கு கொண்டு வருகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள் முதலாவது மருத்துவர்கள் அவருடைய உயிர் அவரை விட்டுப் பிரிந்துவிடாதபடி, மரண ஆபத்தைத் தடுத்து நிறுத்துகிறார்கள். இது அவர்கள் செய்கிற முதல் காரியமாகும். இரண்டாவதாக, அவர் பூரண ஆரோக்கியம் பெறும்படி இன்னும் தொடர்ந்து சிகிச்சை அளிக்கின்றார்கள். அவருடைய பெலவீனங்கள் எல்லாம் மாறி, பெலனுள்ளவராக விளங்கும் வழிமுறைகளையும் செய்கிறார்கள். இதைத் தான் இயேசுநாதர், ''நான் வாழ்வு பெறும் பொருட்டும் அது நிறைவாகப் பெறும்பொருட்டும் வந்துள்ளேன் என்று சொன்னார்.

முதலாவது, அவர் தம்முடைய வாழ்வை நமக்காகக் கொடுத்தார். நம்மை மரணக் கண்ணிகளுக்கும், பாதாளத்தின் வல்லமைக்கும் விடுவித்தார். கல்வாரியிலே தம் உயிரைக் கொடுத்து, வாழ்வை ஜீவனை நமக்குள்ளே கொண்டு வந்தார். நாம் தெய்வீக சுபாவங்களோடும், குணாதியங்களோடும் பூரணமடைய கிருபை செய்கிறார். ''அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபைமேல் கிருபை பெற்றோம்'' (யோவான் 1:16). யோவான் 11:25-ல் இயேசுநாதர், ''உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்'' என்கிறார். ஒரு மனிதன் இரட்சிக்கப்படும்போது, அவன் கிறிஸ்துவாகிய ஜீவனோடு அல்லது கிறிஸ்துவின் ஜீவனோடு இணைகிறான். கிறிஸ்து அவனுக்குள் கெம்பீரமாய் வந்து வாசம்பண்ணகிறதினாலே அவன் நித்திய ஜீவனைப் பெற்று அவரிலே பெலன் உள்ளவனாகிறான். யோவான் 10:28-ல் இயேசுநாதர், ''நான் என் ஆடுகளுக்கு நிலை வாழ்வை அளிக்கிறேன்; அவை என்றுமே அழியா; அவற்றை எனது கையிலிருந்து யாரும் பறித்துக்கொள்ள இயலாது'' என்றார். அதனால் உங்களுடைய வாழ்வு எப்போதும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதாக. அதுதான் பாக்கியமான கிறிஸ்தவ வாழ்க்கை.

அருள்திரு. **R. ரஞ்சிட் சுதிர்**

செவிசாய்க்கின்றனர்'' என்றார் இயேசுநாதர். தெய்வீக வெளிப்பாட்டின் பூரணமே சத்தியமாகும். நம்முடைய திருமறையை நாம் இரண்டு முக்கியமான வார்த்தைகளினால் அழைப்போம். ஒன்று சத்திய வேதாகமம். இரண்டு, பரிசுத்த வேதாகமம். சத்தியமும், பரிசுத்தமும் ஒன்றோடொன்று இணைந்தது. அதனால் தான் இயேசுநாதர் யோவான் 17:17-ல் பிதாவிடம் ஜெபித்து, ''உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை'' என்றார். பவர் மொழிபெயர்ப்பில், ''உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உண்மையை அறியுங்கள். திருமறையின் வாக்குத்தத்தங்களை அறிந்து உரிமை பாராட்டுங்கள். திருமறையின் உண்மைகள் உங்களை உயிர்ப்பிக்கின்றது. தெய்வீக ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது. கிறிஸ்துவின் சாயலில் வாழ உதவி செய்கின்றது. வருகையிலே காணப்படத் தூண்டுதலாக இருக்கிறது. அதனால் தான் யோவான் 8 : 32-ல் ''உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள்; உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்'' என்றார். இந்த உண்மையை அறியாமல் ஜனங்கள் சிறைப்பட்டுப் போகிறார்கள். சங்காரமாகிறார்கள். சத்தியம்/உண்மை எப்பொழுதும் உங்களுடைய உள்ளத்தில் இருக்குமானால் வெற்றி நிச்சயம். அப்பொழுது நீங்கள் ஒருநாளும் திசைமாறிப் போவதில்லை. உண்மையை /சத்தியத்தை அறிகிற அறிவே உங்களை பாக்கியவான்களாக்கும்.

### 3. இயேசுவே வாழ்வு

யோவான் 11:6-ல் ''நானே வாழ்வு'' என்றும், யோவான் 10:10-ல் ''நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்'' என்ற இயேசுநாதர் சொல்கிறார்.

இயேசுநாதர் தம்முடைய சீஷர்களிடம் மனந்திறந்து பேசும்போது, நானே வழி, நானே உண்மை என்று மட்டும் சொல்லாமல் நானே வாழ்வாயிருக்கிறேன் என்றும் சொன்னார். ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே ஜீவன் மிகவும் முக்கியமானதாகும். இந்த ஜீவன்தான் அவனை இயங்க வைத்து உயிர் வாழச் செய்கிறது. மனிதனுக்குள் ஜீவன் இருக்கும்போதுதான் அவன் நித்திய ஜீவனைப் பெற்று என்றென்றும் வாழ முடியும். அதனால்தான் பவுல், ''கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்'' என்று முழங்கினார். ஜீவனாகிய கிறிஸ்து ஒரு மனிதனுக்குள் வாசம்பண்ணும்போது, பரலோகத்தின் பரிபூரணங்கள் எல்லாம் அவனுக்குள் வந்துவிடுகின்றன.



**18-05-2014**

***உயிர்ப்புக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு***

## இயேசுவே வழி, வாய்மை (உண்மை), வாழ்வு

## JESUS, THE WAY, THE TRUTH AND THE LIFE

நீதி. 4:10-19 — IIபேது. 1:3-11

திபா. 33:1-9; 20-22 — யோவா. 14:1-7

***இயேசு அவரிடம், "வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை." யோவான் 14 : 6***

**இறைவேண்டல் :** கடவுளே எங்கள் ஆண்டவரே, உமது குமாரனின் மூலம் எங்களுக்கு வழியையும், வாய்மையையும், வாழ்வையும் காட்டியவரே, உமது சபை உமது வழிகளில் நடக்கவும், உண்மையை காணவும், வாழ்வின் முழு அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளவும் அருள் தாரும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

திருமறையை வாசிக்கும் போது, நமக்காக எல்லாவற்றையும் ஆயத்தம் செய்கிறவர் ஆண்டவர் என்பதை அறிந்து கொள்கின்றோம். மனிதர்களை சிருஷ்டிப்பதற்கு முன்பாகவே, அவர்கள் வாழ்வதற்கு இந்தப் பூமியை ஆயத்தம் செய்தார். இஸ்ரவேல் ஜனங்களுக்காக பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை ஆயத்தம் பண்ணினார். அது ஆயத்தமாகின்ற வரையிலும் அவர்கள் அடிமைகளைப் போல எகிப்திலே வாழ்ந்து வந்தார்கள். ஒரு பக்கம் கானான் சீர்திருத்தப்பட வேண்டும். வீடுகளும், திராட்சைத் தோட்டங்களும் நாட்டப்பட வேண்டும். மறுபக்கம் அங்குள்ள மக்களின் பாவங்கள் பூரணமாக்கப்பட வேண்டும். அதற்குப்பின்பு, அவரே இறங்கிவந்து, ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலே இஸ்ரவேலை மீட்டுக் கொண்டு, மேகஸ்தம்பங்கள் அக்கினி ஸ்தம்பங்கள் வழி நடத்த, கானானைச் சென்றடைந்தார்கள். அங்கே, தாங்கள் கட்டாத வீடுகளையும், நாட்டாத திராட்சைத் தோட்டங்களையும் சுதந்தரித்துக் கொண்டார்கள்.

ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நமக்குப் பரம கானான் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. அதாவது, நித்தியத்திலும் கூட ஆண்டவர் நமக்காக யாவையும் ஆயத்தமாக்கி வைத்திருக்கின்றார். நீங்கள் எப்படியோ வந்து பரம கானானைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லாமல்,

''நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன்'' என்று சொல்கின்றார். அவர் இரண்டாம் வருகையிலே வரும் போது, தந்தையின் மகிமை பொருந்தினவராய் தேவதூதர்களுடைய எக்காளத்தோடு, வானத்திலிருந்து இறங்கி வருவார். இவ்வளவு வல்லமையும், மகிமையும் நிறைந்த ஆண்டவர் எப்படிப்பட்டவர், நாம் எப்படி வாழ்ந்தால் நம்மை தம்மோடு சேர்த்துக் கொள்வார் என்று பார்ப்போம்.

### 1. இயேசுவே வழி

யோவான் 14:4-ல் இயேசுநாதர், ''நான் போகுமிடத்துக்கு வழி உங்களுக்குத் தெரியும் என்றார்''. 6-வது வசனத்தில் நானே வழி என்று சொல்கின்றார். இயேசுநாதர் தன்னுடைய மூன்றரை ஆண்டுக்கால ஊழியத்தின் போது, தன்னுடைய சீஷர்களோடு உண்டு, உறங்கி, நெருங்கிப் பழகி, பரலோக இரகசியங்களையெல்லாம் அவர்களுக்குப் போதித்து வந்தார். குறிப்பாக மத்தேயு 24-ம் அதிகாரம், லூக்கா 21-ம் அதிகாரம், மாற்கு 13-ம் அதிகாரத்திலெல்லாம் தம்முடைய இரண்டாவது வருகையைக் குறித்து சீஷர்களுக்கு அதிகமாகப் போதித்ததை வாசிக்கலாம். அதனால் தான் அவர், ''நான் போகுமிடத்துக்கு வழி உங்களுக்குத் தெரியும்'' என்று சொன்னாள். இங்கே அவர் நேரடியாகவும், திட்டமும் தெளிவுமாகவும் ''நான் தான் பரலோகத்திற்கு வழி'' என்று அறிவித்தார். வழி மட்டுமல்ல, வாயிலும் அவர்தான். யோவான் 10:9-ல், ''நானே வாயில், என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர்; வெளியே வருவர்; மேய்ச்சல் நிலத்தைக் கண்டு கொள்வர்'' என்று சொல்கின்றார். அதாவது, அவர் வழியும், வாயிலுமானவர் மட்டுமல்ல, பரலோகத்திற்கு வைக்கப்பட்டிருக்கிற ஏணியும் அவர்தான். யாக்கோபு தரிசனத்தில் கண்ட ஏணியிலிருந்து தேவதூதர்கள் ஏறுகிறவர்களாகவும், இறங்குகிறவர்களாகவும் இருந்தார்கள். ஆனால், கிறிஸ்து கல்வாரியில் ஏணியாக மாறினபடியால், அவருடைய காயங்கள் படிக்கட்டுகளாக நிற்கின்றன. அதில் அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்ட ஜனங்கள் பரலோகத்திற்கு ஏறிச்செல்வார்கள்.

உலகத்தில் பல சமயங்கள், மார்க்கங்கள் இருக்கின்றன. பல தத்துவ ஞானிகள், ரிஷிக்கள், முனிவர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் பலருடைய உபதேசம், கடவுள் ஒருவர்தான். அவரைச் சேருவதற்கு பல வழிகள், பல மார்க்கங்கள் உண்டு. பல நதிகள் ஒரே கடலில் போய்ச்





சேருவதில்லையா? அதுபோலத்தான் இதுவும் என்று சொல்கிறார்கள். ஆனால் இயேசுவே வழி. அவருடைய வழிகளைப் பின்பற்றும்போது அல்லது அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்போதுஅது உங்களைப் பரிசுத்த பாதையிலே அருமையாக வழிநடத்திச் செல்லுகிறது. ''ஆட்டுக்குட்டி சென்ற இடம் எங்கும் அதைப் பின்தொடர்ந்தவர்கள்; கடவுளுக்கும் ஆட்டுக்குட்டிக்கும் உரிய முதற்கனியாக மனிதகுலத்திலிருந்து விலை கொடுத்து மீட்கப்பட்டவர்கள்''. (வெளி. 14.4)

இரண்டு வித்தியாசமான முறையில் இயேசுநாதர் வழியாக இருக்கிறார். முதலாவது, கடவுளிடத்திலிருந்து மனித இனத்துக்கு வருகின்ற எல்லா ஆசீர்வாதங்களுக்கும் அவரே வழியாக இருக்கிறார். இரண்டாவதாக, மனிதர்கள் பரலோகப் பிதாவைக் கிட்டிச் சேருவதற்கும், நித்தியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளவும் அவரே வழியாக இருக்கிறார்.

### 2. இயேசுவே உண்மை (வாய்மை)

யோவான் 14:6-ல் இயேசுநாதர் ''நானே உண்மை'' என்று சொல்கின்றார். அவர் வழியானவர் மட்டுமல்ல, உண்மையானவரும் கூட. அவர் பிதாவை வெளிப்படுத்துவதினாலே, உண்மையானவராக இருக்கிறார்.

யோவான் நற்செய்தி நூலில், இயேசுநாதர் தன்னை ஏழு விதங்களில் 'நானே, நானே' என்று அறிமுகப்படுத்துகிறதை வாசிக்கமுடியும் (Seven I Am Sayings). முதலாவதாக, யோவான் 6:48-ல் ''ஜீவ அப்பம் நானே'' என்கிறார். இரண்டாவதாக, யோவான் 8:12-ல் ''நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்'' என்றார். மூன்றாவதாக, யோவான் 10:9-ல், ''நானே வாசல்'' என்றார், ஐந்தாவதாக, யோவான் 11:25, ''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்'' என்றார். ஆறாவதாக, யோவான் 14:6-ல் ''நானே வழியும், உண்மையும், வாழ்வும்'' என்கிறார். ஏழாவதாக, யோவான் 15:1-ல், ''நானே மெய்யான திராட்சை செடி'' என்றார்.

இவைகளை நன்றாகக் கவனியுங்கள் ''நானே'' என்று அழுத்தம் திருத்தமாக ஆண்டவர் சொல்கின்றார். நானும் ஒரு வழி என்று அல்ல. நான் மட்டுமே என்பது இதனுடைய அர்த்தமாகும். மனித இரட்சிப்பு ஒரு தத்துவத்தை நம்புவதில் அல்ல. ஒரு கிரியையை ஏற்றுக்கொள்வதினால் அல்ல. அது கிறிஸ்துவிலே மட்டும்தான் அடங்கியிருக்கிறது. அதனால் தான் யோவான் 18:37-ல், ''............... உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன்; இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச்

அன்னை மரியா ஆவியாரின் ஆற்றலால் இயேசு கிறிஸ்துவைக் கருவுற்று பெற்றெடுத்தார். கிறிஸ்துவின் பிறப்பில் ஆவியாரின் ஆற்றல் செயல்பட்டது (மத். 1:18-25)

இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் மீது ஆவியார் பெந்தகோஸ்தே திருவிழாவின்போது நெருப்பு போன்ற பிளவுள்ள நாவுகள் வடிவில் வந்திறங்கினார். அப்போது திருச்சபை பிறந்தது. ஆவியாரின் ஆற்றலோடு சீடர்கள் கிறிஸ்துவை அனைவருக்கும் அறிவித்தனர் (திப. 2 : 1-11)

இவ்வாறு திருமறையில் ஆவியாரின் அடித்தளத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. இத்தகைய ஆவியார் தொடர்ந்து தம்முடைய வாக்குறுதியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதையும் திருமறையின் வழியாய்ப் புரிந்து கொள்ள முடிகிறது. கொடுக்கப்பட்ட திருமறைப் பகுதிகளினூடாய் ஆவியாரின் வாக்குறுதியைப் புரிந்து கொள்ள முயலும்போது மூன்று நிலைகளில் புரிந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

***1. ஆற்றலுடையது :*** (யோவேல் 2:28-32)

ஆவியாரின் வாக்குறுதி ஆற்றலுடையது. ஆவியார் அருளும் ஆற்றலைப்பாருங்கள்.

- நான் மாந்தர் யாவர் மேலும் ஆவியைப் பொழிந்தருள்வேன்
- புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர்
- முதியோர் கனவுகளைக் காண்பார்கள்
- இளையோர் காட்சிகளைக் காண்பார்கள்
- உங்கள் பணியாளர், பணிப்பெண்கள் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன்
- விண்ணிலும் மண்ணிலும் வியத்தகு செயல்களைச் செய்து காட்டுவேன் என்கிறார்.

இறைவாக்கினர் யோவேல், ஆவியார் அனைத்து மக்களையும் ஆற்றல்படுத்துபவர் என்ற செய்தியைத் தருகிறார்.

இந்த ஆற்றல் ஒருவனை அகிலத்திற்கும் சான்று பகர வைக்கின்றது. அதை ஆண்டவர் இயேசுகிறிஸ்து கூறும்போது ''.... தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்'' என்றார். (திப. 1 : 8)





முக்கியப்படுத்துதல் ஆகியவை முற்பிதாக்கள் அன்று கடைபிடித்தனர். அதனை நாமும் கடைபிடிக்கிறோம். இவற்றுடன் நின்று விடாமல், இவற்றை ஏறெடுக்கும்போது இருக்க வேண்டிய செயல்பாடு தூய்மை, நம்மை கழுவி தூய்மைப்படுத்தும் செயல் முக்கியம். மாறானது ஆண்டவருக்கு உகந்தது அல்ல கடவுள் அதை வெறுக்கிறார். தூய கோலத்துடன் ஆண்டவரைத் தொழுது கொள்ளுங்கள். திபா. 96:9. உண்மையாய் தொழுது கொள்வோர் ஆண்டவரை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் தொழுது கொள்வர். யோ. 4:23,24. உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவர் ஆகையால் நீங்கள் தூயவராயிருங்கள் 1 பேதுரு 1:15,16. நமது தலைமைக் குருவாகிய இயேசு தூயவர், கபடற்றவர், மாசற்றவர் எபி.7:26. மக்களினங்கள் அனைத்திற்கும் ஆண்டவர் மேலானவர், வானங்களையும் விட உயர்ந்தது அவரது மாட்சி திபா. 113:4. அவரது கூடாரத்தில் தங்க தகுதியுடையோர் மாசற்றவராய் நடப்போர் திபா. 15:1,2. தூய பணிவிடை பரமனுக்கு ஏற்றதே தவிர வீண் வெளிவேடம் ஏற்றது அல்ல. ''கோலம் எதற்கு, கொட்டுமேளம் எதற்கு, சீலம் பேணும் உள்ளத்தை தெய்வம் தேடி வராதோ'' என்பர். இன்றைய அருள்பணியில் வேடம் வெறுத்து, பரிசுத்தம் பாதுகாத்து புத்தாக்கம் புனைவோம்.

***2. கேட்டலும், கீழ்ப்படிதலும் :*** (யாக். 1:19, 22,23)

அருள்பணியில் கேட்டலும் முக்கியம் கீழ்படிதலும் முக்கியம். பலர் போதிக்கிறார்கள், பலர் கேட்கிறார்கள் ஆனால் அதன்படி செய்வது இல்லை. இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ விண்ணரசில் பெரியவன் மத்.5:19. கைக்கொண்டு போதிப்பது மிகவும் முக்கியம். மத்.10:32. லூக்.7:26. தாங்கள் கேள்வியுறாத ஒருவர் மீது எவ்வளவு நம்பிக்கை கொள்வார்கள். அறிவிக்கப்பட்டால் தான் நம்பிக்கை வரும். உரோ.10:14-17. திருவசன போதனைகளை நாம் கேட்பதற்கு தீவிரமாக இருக்க வேண்டும் யாக்1:19. சாமுவேல் சிறு வயதில் சொன்னார் கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன். I சாமு. 3:10. சவுல் தமஸ்கு பாதையில் கர்த்தர் சந்தித்த போது ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்றார். தி.ப. 9:6. பேசுகிறவர் நீங்களல்ல தூய ஆவியார் அப்போது வீதியாளின் உள்ளம் திறக்கப்பட்டது போல உள்ளம் திறந்து ஏற்றுக்கொள்வது மிக மிக முக்கியம். இன்று ஒரு காது வழியாக கேட்கிறோம் மறுகாது வழியாக விட்டு விடுகிறேன். அடுத்த நேரம் என்ன என்பது தெரிவது இல்லை. ஆகையால் திருப்பணியின் மூலம் மறுபிறப்பின் அனுபவம் குறைந்துள்ளது. அருள்நாதர்

இயேசு முதல் செய்தியில் மனந்திரும்புங்கள் சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். மாற்.1:15 கானாவூர் திருமணவீடு மக்கள் கேட்டார்கள் கீழ்ப்படிந்தார்கள். பெரிய அற்புதம் நடந்தது. யோ 2:11. கேட்டலும் கீழ்ப்படிதலும் திருப்பணியில் புத்தாக்கத்தை ஏற்படுத்தும்.

**3. நாடலும் நற்பணியும் :** (மத். 25:31-46)

இப்பகுதியில் மனுக்குலம் அடையும் தீர்ப்பு குறித்து சொல்லப்படுகிறது. ஆட்சியை உரிமை ஆக்குங்கள் பசித்தோருக்கு உணவு, தாகத்திற்கு தண்ணீர், அன்னியரைச் சேர்த்தல், அணிய ஆடைக்கு ஆடை நோயில் பராமரிப்பு, சிறையில் விசாரிப்பு எனப் பார்க்கிறோம். மத்.25:40 இத்தகைய நற்பணிகள் நேர்மையானோரின் செயல்கள். இவ்விடத்தில் சபைகளும் சாக்கிரமெந்துகளும், தொழுகை முறைகளும் சொல்லப்படவில்லை. தேவையில் இருக்கும் சிறியோர் இறைவனின் சகோதரர்கள். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். நீதி. 19:17. ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பர். திருமறை பல உண்மைகளை நமக்கு சொல்கிறது. நீதி. 3:17, 11:27, 14:31; திபா. 112:5,9; யாக். 4:17, கலா. 6:9,10. நன்மை செய்வோர் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் 3யோவா. 11. ஆரம்ப கால மிஷனெரிகள் நன்மைகளைச் செய்தார்கள். தீய பழக்கவழக்கம், மூட நம்பிக்கை இவற்றில் கடினமாக நற்பணி செய்தார்கள். நாம் இன்று வாழ்வு பெற்றோம். கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் கடவுளை அடைவார்கள். மத். 25:34 கிறிஸ்தவ அருள்பணியில் விசுவாசமும் வேண்டும் கிரியையும் வேண்டும். யாக். 2:14 உலகின் இரட்சகர் இயேசு நன்மை செய்கிறவராகவே அருள்பணி செய்தார். தி.ப. 10:38 எந்த பிரதிகூலத்தையும் அவர் நாடாமல் செய்தார். நற்பணியின் நாட்டம் புத்தாக்கம் தரும்.

பணிதலின் தூய்மையும், கேட்டலும் கீழ்படிதலும், நாடலும் நற்பணியும் அருள்பணியில் புத்தாக்கம் தரும். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு. N. **ஸ்மைல்**



**01-06-2014**

***உயிர்ப்புக்குப் பின்வரும் ஆறாம் ஞாயிறு***

# தூய ஆவியாரின் வாக்குறுதி

## PROMISE OF THE HOLY SPIRIT

| | |
|---|---|
| யோவே. 2 : 28-32 | கலா. 5 : 22-26 |
| திபா. 42 | யோவா. 14 : 15-21 |

***"அந்நாள்களில் உங்கள் பணியாளர், பணிப் பெண்கள் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன்."*** *யோவே. 2 : 29*

**இறைவேண்டல் :** கடவுளாக எல்லா வாழ்வின் ஆதாரமாக இருப்பவரே உமதுபெலப்படுத்தும் ஆவியை ஊற்றி எங்களை பெலப்படுத்தி உலகின் நம்பிக்கையாக இருப்பதற்கு உதவி தாரும். அதனால் எந்த தனிப்பட்ட எண்ணமின்றி, கனவுகளையும், தரிசனங்களையும் கண்டு, உமது சாட்சிகளாக இருந்து, உலகிலே நீதியை நிலைநாட்ட முடியும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

திருமறையிலே நான்கு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பிறப்புக்கள் நடைபெற மூலக்காரணம் தூய ஆவியார். ஆவியார் பிறப்புக்கு, புதுப்பிறப்புக்கு, புது வாழ்வுக்கு, புத்துணர்வுக்கு அடிப்படை ஆதாரமாக இருக்கிறார்.

தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபோது நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக்கொண்டிருந்தது. (தொநூ. 1 :1-2) அப்போது கடவுள் எல்லாவற்றையும் தம் வார்த்தையால் படைத்தார். எனவே படைப்பின் ஆதாரம், அடிப்படை ஆவியார்தான்.

சீனாய் மலையில் உடன்படிக்கை சமயத்தில் ஆண்டவர் கார்மேகத்தில் ஆவியார் வாயிலாக வந்தார். "இதோ! நான் உன்னோடு பேசுவதை மக்கள் கேட்கும்படியும் என்றென்றும் உன்னை நம்பும்படியும் நான் கார்மேகத்தில் உன்னிடம் வருவேன்" (விப. 19:9) அப்போது பேரிடி முழங்கியது. மின்னல் வெட்டியது. சீனாய் மலை முழுவதும் புகைந்து கொண்டிருந்தது. ஆண்டவர் அதன் மீது நெருப்பில் இறங்கி வந்தார். கடவுளும் இடி முழக்கத்தில் விடையளித்தார் (யார். 19:11-19) தம் சொந்த மக்களாக இஸ்ராயேல் மக்களை தேர்ந்துகொண்டு புதிய சமுதாயத்தை ஏற்படுத்தியபோது ஆவியார் அவர்களுடன் இருந்தார்.

இஸ்ரவேல் வரலாற்றில் ஆரோன் வழித்தோன்றல்களுக்கு மட்டும் தான் குருத்துவப் பணி கொடுக்கப்பட்டது (விப. 29: 8,9) ஆரோனுக்கும் அவர் குமாரருக்கும் என்றுமுள்ள கட்டளை எனக் கடவுள் கூறுகின்றார். ஆனால் இயேசு கிறிஸ்துவோ அனைவரும் சீடராக வேண்டும் எனக் குறிப்பிடுகிறார்.

மார்ட்டின் லூதர் கருத்துப்படி எல்லாரும் குருத்துவப் பணியாளர்கள் (All are priest hood).

ஆனால் உயர்த்தப்பட்ட கிறிஸ்து எல்லாரையும் சீடராக்குகின்ற சமஉரிமையைத் தருகின்றார். இன்றைய கிறிஸ்தவம் இதைத் தொடர அறைகூவல் விடுகின்றார். நமது பேராயத்தில் முதற் கனியான மகாராசன் வேதமாணிக்கம் இன்றைக்கும் ஒரு சவாலாக இருக்கின்றார்.

ஆகவே உயர்த்தப்படுதல் என்பது தியாகம், சேவை, அர்ப்பணிப்பு மூலமாக மட்டுமே பெறமுடியும். எனவே உயர்த்தப்பட்டவர் நம்மோடிருக்கிறார் (God with us) என்ற சிந்தனையோடு செயல்படுவோமாக.

அருள்திரு. J. **செலின் ஜெப சுவிஸ் ஆரோன்**



**29-05-2014** ***விண்ணேற்றத் திருநாள்***

# உயர்த்தப்பட்ட கிறிஸ்து
## EXALTED CHRIST

தானி. 7 : 9-10, 13-14 — தி.ப. 1 : 1-11
திபா. 47 — லூக். 24 : 44-53

*"…. இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததைக் கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார் என்றனர்."* தி.ப. 1 : 11

**இறைவேண்டல் :** எல்லாம் வல்ல கடவுளே, மகத்துவமானவரே, உமது மகன் உயர்த்தப்பட்டு எல்லாவற்றையும் நிரப்ப வானங்களுக்கு மேலாக எழுந்தருளினாரே! அவரை போல எங்களைத் தாழ்த்தி, அவரது தியாகமான அன்பினை வெளிப்படுத்தி, ஓரங்கட்டப்பட்டோரையும், ஏழைகளையும் உயர்த்த அருள் தாரும். அதனால் முழு படைப்பும் உமது இரட்சிப்பை உணர்ந்து, உமது உயர்த்தப்படலை கொண்டாட அருள் தாரும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

உயர்த்தப்படுதல் உலகில் பல நிலைகளில் உண்டு. நோக்கமும், முயற்சியும் இல்லாமல் பணத்தாலும், பதவியாலும், பலத்தாலும் உயர்வை விரும்புகிறவர்கள் ஏராளம். ஆனால் சீரிய நோக்கோடு தந்தையின் திட்டமாகிய உலக மக்களின் மீட்பை இந்தப் பூமியில் நிறைவேற்ற எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல் தம்மைத் தியாகமாக அர்ப்பணித்தவர் இயேசு கிறிஸ்து. உயர்வு என்பது தாழ்மை, அடிக்கப்படுதல், அவமானங்களைச் சகித்தல், அர்ப்பணிப்பு, ஒப்புக் கொடுத்தல், சேவை ஆகியவை மூலமாகத்தான் பெறமுடியும் என்று தம் வாழ்க்கை வழியாகக் கற்றுத் தந்தவர் இயேசு கிறிஸ்து.

உலக மக்களுக்காகத் தம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்து மரித்து உயிர்த்தெழுந்து மாட்சியில் உயர்த்தபட்ட நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் தன்மைகளைத் தியானிப்போம்.

### *1. உயர்த்தப்பட்டவர் எல்லாருக்கும் உரியவர்*
### (Christ is a Universel God)

இயேசு கிறிஸ்து தனிச் சமூகத்திற்கு தனிச் சமயத்துக்கு மட்டும் உரியவர் என்பதல்ல. மாறாக அவர் உலக மக்கள் எல்லாருக்கும் உரியவர் (He is a Universel God) என்பது அவரது உயிர்த்தெழுதல் தரும்

தெளிவான செய்தியாகும். உயிர்த்த கிறிஸ்து தங்களுக்கு மட்டுமே உரியவர் என்று கிறிஸ்தவ யூதர்கள் நினைத்தனர். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்கள் 'யாவே' கடவுள் தங்களுக்கு மட்டுமே உரியவர் என்ற சிந்தனையுடன் செயல்பட்டனர். கடவுள் மோசேயிடம் கூறும் போது 'என் மக்கள்' என்று அழுத்தமாகக் கூறுவதைக் (விப. 3: 7-10) காணலாம்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பே "எல்லா மக்களுக்கும் நற்செய்தியாகிறது." (லூக். 2:10, 2:30)

இயேசு கிறிஸ்துவின் 3½ஆண்டு பணிகளில் எல்லாரையும் ஒன்றிணைத்துச் செயல்பட்டார். மட்டுமல்ல அனைத்து வேறுபாடுகளையும் தாண்டி எல்லாருக்கும் சமநீதி என்ற அடிப்படையில் செயல்பட்டார்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து தம் சீடர்களைப் பார்த்து உலகெங்கும் சென்று எல்லா மக்களினத்தாருக்கும் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் (மத். 28:19) என்று கட்டளை கொடுக்கிறார். ஆகவே இயேசுகிறிஸ்துவின் பிறப்பு முதல் மரணம் வரையும், தொடர்ந்தும் அவருடைய பணி எல்லா மக்களையும் உட்படுத்தியே இருந்தது.

ஆதரவற்றோர், கைம்பெண்கள், கைவிடப்பட்டோர், ஏழைகள், விடுதலைக்காகக் காத்திருப்போர், உறவற்ற நிலையில் தவிப்போர் இவர்களுக்கெல்லாம் வாழ்வு வழங்க மக்களோடு இணைந்து இந்த மண்ணில் வாழ்கிறார். உயர்த்தப்பட்டவர் விண்ணிலிருக்கின்றார் என்பது பொருள் அல்ல. மாறாக அவர் இந்த மண்ணில் இன்றும் செயலாற்றிக் கொண்டிருக்கின்றார்.

நாம் இங்கே இருப்பது நல்லது என்பது சொகுசு வாழ்வை விரும்பிய சீடர்களுக்குப் பதிலடி கொடுக்கின்ற வகையில் மலையை விட்டு கீழிறங்கி துன்புறும் மற்றும் தேவையோடு காத்துக்கொண்டிருக்கும் மக்களோடு இணைகின்றார். (லூக் 9 : 33 - 37)

### 2. உயர்த்தப்பட்டவர் எல்லையைத் தாண்டிச் செயல்படுபவர் (Acting Beyond the Boundary)

எல்லாவற்றிற்கும் ஓர் எல்லை உண்டு என்பார்கள். ஆனால் எல்லையைத் தாண்டிச் செயலாற்றுபவர் உயிர்த்த கிறிஸ்து. கடவுள் மறுபடியும் எருசலேமில் ஆளுகை செய்வார் என்று இஸ்ரவேல் மக்கள் எதிர்பார்த்ததை அப். 1:6ல் படிக்கிறோம். மேசியாவின் எதிர்பார்ப்பு யூதர்கள் நடுவில் ஏமாற்றத்தை அளித்த நிலையில் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலம் மறுபடியும் நம்பிக்கை ஏற்படுகிறது.





இயேசு கிறிஸ்து மண்ணில் மனிதராக வாழ்ந்த போது அவரின் பணியானது பாலஸ்தீனத்திற்குட்பட்ட எல்லைக்குள்ளாகவே இருந்தது. ஆனால் உயர்த்தப்பட்ட கிறிஸ்து பாலஸ்தீன எல்லைக்குள் மட்டுமல்ல உலகின் எல்லாப் பாகங்களிலும் செயல்படுகின்றார் என அப். 1:8ல் படிக்கிறோம்.

இயேசு கிறிஸ்து உலகில் வாழ்ந்த போது அவரது சிந்தனைகள் மண்ணுக்குரிய தாழ்வான சிந்தனைகளல்ல மாறாக விண்ணுக்குரிய மக்களின் மீட்பை சார்ந்தேயிருந்தது. எனவேதான் தீயோனின் ஆசைகளுக்குக் கீழ்ப்படியாமல் வெற்றி பெற்றதைக் (மத். 4: 1-11) காண்கிறோம். பவுலடிகளார் கொலோ. 3:1,2ல் மேலானவைகளை நாடுங்கள் என்கிறார். மேலான சிந்தனைகள் இருந்தால் மட்டுமே எல்லைகளைத் தாண்டிச் செல்ல முடியும்.

இயேசுநாதர் தம் சீடர்களை இந்த எருசலேமில் மட்டுமல்ல எல்லைகளைத் தாண்டி உலகம் முழுவதும் சென்று கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று அழைக்கிறார் (திப. 1 : 8).

இதுவரை தங்களுக்கென்று எல்லைகளை வகுத்துணர்ந்த சீடர்கள் அந்த எல்லைகளை உடைத்து உலகின் பல பாகங்களுக்குச் சென்று இரத்த சாட்சிகளாக மரித்தார்கள். அவர்களில் இந்தியா வந்த தோமாவும் ஒருவர்.

உயர்த்தப்பட்ட கிறிஸ்துவின் பணி என்பது அரசியல், ஆளுகை, அதிகாரம், கலாச்சாரம், இவைகளைக் கடந்து செயல்படுகின்ற பணியாகும். இன்றும் கிறிஸ்தவம் சட்டதிட்டம், பாரம்பரியம், கட்டுப்பாடு, தனக்கு வேண்டியவர்கள் என்ற குறுகிய எல்லைக்குள்ளேயே முடங்கி கிடக்கிறது. ஆனால் இந்த குறுகிய எல்லை உடைக்கப்பட்டு எல்லை கடந்து பணி செய்ய கடவுள் விரும்புகிறார். ஆதித் திருச்சபை குறிப்பிட்ட எல்லைக்குள் முடங்கி கிடக்கவில்லை (திப. 8:4) நம்முடைய பணிகளும் மேலான சீரிய நோக்கோடு எல்லைகளைக் கடந்து செயலாற்ற வேண்டும்.

### 3. உயர்த்தப்பட்டவர் எல்லாரையும் சீடராக்குபவர் :

உயர்த்தப்பட்ட கிறிஸ்து தம் சீடர்களிடம் தூய ஆவியாரின் ஆற்றலோடு உலகமெங்கும் போய் அனைத்து மக்களினத்தாரையும் சீடராக்கும் பணிக்குக் கட்டளை கொடுக்கிறார். (மத். 28: 19) இயேசு கிறிஸ்துவுக்கு 12 பேர்கள் மட்டும் சீடராக இருப்பது விருப்பமல்ல, எல்லாரும் சீடராக வேண்டும் என்பதுதான் அவரின் கட்டளை.

அதிகாரிகள் என அரசியல், சமூகச் செல்வாக்குடையவர்கள் வாழ்ந்து வந்தனர். இருப்பினும் அந்நகரத்தில் தீமைகளும், பாவங்களும் நிறைந்து காணப்பட்டன. அதற்குக் காரணமாக பவுலார் சொல்வது என்னவென்றால், கடவுளை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்கள் மனதில்லாதிருந்தார்கள் (உரோ 1:28) என்கிறார். கடவுளை அறியும் அறிவே உண்மையான அறிவாகும். அதுவே வாழ்வு சார்ந்த அறிவாகும். (யோவா. 17:3). ஆண்டவரோடுள்ள அனுபவமே அறிவின் ஆதாரமாகும். மாசற்ற நடத்தையும் பாவமற்ற வாழ்க்கையும் முழுமனத்தோடு ஆண்டவரைத் தேடுவதாலும் அவருடைய வார்த்தைகளின் வாயிலாக அவரை அறிய முற்படுவதாலுமே சாத்தியமாகும். (தி. பா 119: 9-11)

நாம் அனைத்திலும் ஆண்டவருக்கு உகந்தவற்றைச் செய்து அவருக்கு ஏற்புடையவர்களாக நடக்க வேண்டுமானால் ஆண்டவரைப் பற்றியும் அவருடைய திருவுளத்தைப் பற்றிய அறிவையும் நாம் நிறைவாக அடைய வேண்டும். (கொலோ. 1:9)

இப்படிப்பட்ட அறிவே நம்மைத் தீமைக்கு விலக்கித் தற்காக்கும் (யோபு 28:28) இந்த அறிவே ஞானத்தைப் பெறுவதற்கான அடிப்படையாகும்.

## 2. ஞானம் எங்கே கண்டெடுக்கப்படும்?

யோபு 28ஆம் அதிகாரத்தில் ஞானம் எங்கே? கண்டெடுக்கப்படும் என்பது பற்றி சொல்லப்பட்டுள்ளது. அதற்கு முன் ஞானம் என்றால் என்ன? என்பதையும் அறிவுக்கும் ஞானத்திற்குமான வேறுபாட்டையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆஸ்வால்ட் சான்டர்ஸ் என்னும் இறைப்பணியாளர் ஞானத்திற்கும் அறிவுக்குமான வேறுபாட்டைப் பின்வருமாறு வரையறுத்துள்ளார்.

உலகியல் பார்வையில் அறிவு என்பது தகவல்களைச் சேர்த்தலாகும். ஞானம் என்பது பரலோகத்திலிருந்து வரும் பகுத்தறிவாகும், காரியங்களின் உள்ளான தன்மையைக் கண்டறியும் உள்ளுணர்வாகும். ஞானம் என்பது கடவுளைப் பற்றியும் மனித இருதயத்தின் இரகசியங்களைப் பற்றியும் அறியும் அறிவை உள்ளடக்கியதுமாகும்.

அறிவு என்பது மற்றவர்களின் கருத்துகளால் நிறைந்திருக்கும். மேலும் அறிவானது திருத்தப்படாமலே அல்லது தீட்டப்படாமலே இருக்கும். ஆனால் அறிவை நன்முறையில் பயன்படுத்தும் திறன்தான் ஞானமாகும். ஞானமே, அறிவை ஆன்மிக மற்றும் ஒழுக்கம் சார்ந்த செயல்களில் நன்முறைப்படுத்துகின்றது.

இப்படிப்பட்ட மேலான ஞானத்தைப் பெறும் வழிமுறை என்ன என்பதைத்தான் யோபு 28-ஆம் அதிகாரம் குறிப்பிடுகிறது.





தூய ஆவியாரின் ஆற்றல் பெறுபவர் கிறிஸ்துவுக்குச் சான்றாளர். பவுலார் தீமோத்தேயுவுக்கு கடிதம் எழுதும் போது, ‘‘கடவுள் நமக்குக் கோழை உள்ளத்தை அல்ல. வல்லமையும், அன்பும், கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தைத் தருகிறார். (II தீமோ. 1:7) என்கிறார்.

இந்த ஆற்றலைப் பெற்ற ஆண்டவரின் அடியவர்கள் பூட்டிய அறையிலிருந்து அம்பலத்துக்கு வந்து சாலமோன் மண்டபத்தில் நின்று கூறிய ஆற்றல் மிகு அறிக்கை, ‘‘நீங்கள் தூய்மையும் நேர்மையுமானவரை மறுதலித்துக் கொலையாளியை விடுதலை செய்யுமாறு வேண்டிக்கொண்டீர்கள். வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்றுவிட்டீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார். இதற்கு நாங்கள் சாட்சிகள் (அப்.3:14,15) என்று அன்றைய சமயத் தலைமைக்கும் அரசியல் தலைமைக்கும் சவால் விடுகிறார் பேதுரு அடிகளார். தூய ஆவியார் தரும் வாக்குறுதி ஆற்றலுடையது. ஜெல்லி மீன் புயல்வரும் எனத் தெரிந்தால் கடலின் ஆழத்துக்குச் சென்று விடும். நாமும் கடவுளின் அன்பின் அன்பின் ஆழத்திற்குச் சென்று விட்டால் பயமில்லை. பாதுகாப்புதான்.

இவ்வுலகில் பல அச்சுறுத்தல்களுக்குள் அகப்பட்டு வாழும் மானுடத்திற்கு ஆவியார் ஆற்றல்படுத்துகிறவர் என்கின்ற செய்தி எத்துணைப் பலம் எத்துணை ஆழம் இல்லையா?

## 2. ஆவிக்குரியது :- (கலா 5:22-26)

தூய ஆவியார் தரும் வாக்குறுதி ஆவிக்குரியது.

ஆவிக்குரியது என்னும் போது உணர்த்துவது என்று புரிந்துகொள்ள வேண்டும். யோவான் நற்செய்தியில், ‘‘அவர் வந்து பாவத்தைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவா. 16:8) என்று ஆவியாரின் வாக்குறுதி ஆவிக்குரியது, அதாவது உணரத் தூண்டுவது, உணர்த்துவது என தெளிவாகப் புரிந்து கொள்கிறோம்.

இவ்வாறு உணர்த்துதல் பெற்ற மனிதன் ஆவிக்குரியவனாக ஆவியின் கனியை உடையவனாக விளங்குவான் என்கிறார் பவுலார் (கலா 5:22-23)

அன்பு எனும் கனி, வெறுப்பு, சீற்றம், பகைமை, புறங்கூறுதல் ஆகிய தீயகுணங்களை அழிக்கிறது.

மகிழ்ச்சி எனும் கனி, சோகம், ஏமாற்றம், கவலை பதற்றத்தை நீக்குகிறது.

அமைதி எனும் கனி, வன்முறை, கலகம், குழப்பம், பொறாமை, பகை வெறியை அழிக்கிறது.

பொறாமை எனும் கனி, கோபம், பரபரப்பு, அவசரத்தன்மையை அகற்றுகிறது.

பரிவு, எனும் கனி, பழிவாங்குதல், பொறாமை, தீமைக்குத் தீமை செய்தல் போன்ற தீய குணங்களை நீக்குகிறது.

நன்னயம் எனும் கனி, சுயநலம், அகந்தை, ஆணவம் ஆகிய தீச்செயல்களை அகற்றுகிறது.

நம்பிக்கை எனும் கனி, விரக்தி, சந்தேகம், மனச்சோர்வு இவைகளை நீக்குகிறது.

கனிவு எனும் கனி, குறை கண்டுபிடித்தல், அக்கறையின்மையை நம்மிடமிருந்து அகற்றுகிறது.

தன்னடக்கம் எனும் கனி, கெட்ட நடத்தை, கெட்ட செயல்பாடுகளை விட்டொழிக்க உதவுகிறது.

இவ்வாறு ஆவியின் கனியைத் தன்னகத்தே கொண்டு மற்றவர்களுக்கு, சுவைக்கக் கொடுப்பவன்தான் ஆவிக்குரியவன், அதைத் தருபவர் ஆவியார். ஆம் ஆவியார் நமக்குத் தரும் வாக்குறுதி ஆவிக்குரியது அது உணர்வுப்பூர்வமானது, நம்மை உணர்த்துவது.

ஆனால் இன்று உணர்ச்சி வசப்பட்டு உறக்கத்தில் வரும் உளறல்களால் நாங்கள் ஆவிக்குரியவர்கள் என்று தங்களை அடையாளப்படுத்தும் சிலரை நாம் பார்க்கலாம். உணர்ச்சி அல்ல உணர்வு என்பதே ஆவிக்குரிய வாழ்வு. அது ஆவியின் கனியால் வெளிப்படும் வாழ்வு. அதுவே ஆவியாரின் உணர்வோடு கூடிய வாக்குறுதி.

**3. *அனுகூலமானது :-*** யோவா 14:15-21

தூய ஆவியார் தரும் வாக்குறுதி அனுகூலமானது.

யோவான் 14:16-ம் திருமொழியில் "உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார்."என கிறிஸ்துநாதர் உரைக்கிறார். இவ்வாறு துணையாளராய் உங்களுக்கு அனுகூலமாக வருபவர்தான் ஆவியானவர் என்பதை அழுத்தமாகத் தெரிவிக்கின்றார். மட்டுமல்ல யோவான் 14:17-ம் திருமொழியில் "... நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள். ஏனெனில் அவர் உங்களோடு





## *1. அறிவின் உறைவிடம் எங்கேயுள்ளது?*

ஒருமுறை அறிஞர் பிளேட்டோவிடம், கல்வியின் வாயிலாக அறிவைப் பெற முடியும் என்பதைப் பற்றி நீங்கள் கூறுவது என்ன? என்று கேட்டபோது அவர் சொன்னது,

கல்வியின் நோக்கம், குருடனின் விழிகளுக்குள் பார்வையைத் திணிப்பதுபோல், ஆத்மாவுக்குள் அறிவைத் திணித்துவிடலாமென்று சில கல்விமான்கள் தவறாகச் சொல்லுகிறார்கள். கல்வி கற்பதற்கு உரிய இயல்பும் சக்தியும் எந்த ஆன்மாவுக்குள்ளும் ஏற்கெனவே இருக்கிறது.

கல்வி என்பது குழந்தைகளிடம் இயற்கையாக அமைந்துள்ள இயல்பின் முதல் உணர்வுகளுக்கு ஏற்றவாறு பழக்கங்களைக் கொடுக்கும் பயிற்சிதான் என்று பதிலளித்தார். குழந்தைகள் பிறக்கும்போது அதன் ஆன்மநிலையில் கபடற்றவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் வளரும்போது அவர்கள் இதயத்தில் விருப்பும் வெறுப்பும் குடிகொள்வதற்கு அக்குழந்தைகள் வாழும் சூழலும் வளர்க்கப்படும் விதங்களுமே காரணமாகும்.

அப்படிப்பட்ட இதயத்தைப் பண்படுத்தி அறிவின் தொடக்கநிலையைக் கண்டறிய உதவுவதே கல்வியின் பயனாகும். பாடநூற்களை மட்டும் கற்பதனால் ஒருவன் இப்படிப்பட்ட அறிவைப் பெற முடியாது.

2013 அக்டோபர் 10ஆம் நாள் நெல்லை அருகேயுள்ள வல்லநாட்டில் பொறியியல் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் மூவர் கல்லூரியின் முதல்வர், அம்மாணவர்களின் தவற்றைக் கண்டித்தார் என்பதற்காக முதல்வரைக் கொலை செய்தனர்.

அறம் சாராக் கல்வி புத்திசாலியான பிசாசுகளைத் தான் உருவாக்குமே தவிர அறவழியில் வாழ்வைச் செலுத்தும் மனிதர்களை உருவாக்காது என்பதற்கு இந்நிகழ்வே சான்றாகும்.

அறிவைப் புகட்ட வேண்டிய கல்விமுறை மாணவர்களை வன்முறைக்குத் தூண்டுவதை என்னவென்று சொல்வது.

ஆகவே தான் ஜான் ஹோல்ட் என்பவர் இன்றைய கல்வி முறையைப் பின்வருமாறு சாடுகின்றார்.

கல்வி என்பது நாகரிக உலகின் முன்னறிவிக்கப்படாத கொத்தடிமை முறை; குழந்தைகள் மீது நிகழ்த்தப்படும் சமூகம் அங்கீகரித்த கொடிய வன்முறை என்கிறார்.

திருத்தூதரான பவுலின் காலத்தில் உரோமை நகரத்தில் அறிஞர்கள், வணிகர்கள், உத்தியோகஸ்தர்கள், படைத்தலைவர்கள்,

அவனிடம் சென்று, தம்பி, எதற்காக உன் அப்பா தந்த ஐந்து ரூபாய் நாணயத்தை விட்டு விட்டு இரண்டு ஒரு ரூபாய் நாணயங்களை எடுத்தாய் எனக் கேட்டார்.

சிறுவன் சொன்னான், சார், நான் ஐந்து ரூபாய் நாணயத்தை என்றைக்கு எடுக்கிறேனோ அன்றோடு இந்த விளையாட்டு முடிவுக்கு வந்துவிடும்.

எங்கப்பா என்னைத் திருத்துவதாக நினைத்துக் கொண்டு தினமும் எனக்கு இரண்டு ரூபாய் தந்து கொண்டே இருக்கிறார் என்றான்.

வாடிக்கையாளர் வாயடைத்துப் போனார்.

ஞானம், அறிவு என்பன உலகியல் பார்வையில் உயர்ந்ததை, முதன்மையானதைத் தேர்வு செய்வதில் அடங்கியுள்ளது என்கிற தவறான மனோபாவம் இன்று பெருகிவிட்டது. மட்டுமல்லாமல் ஞானம் அறிவு என்பனவற்றின் அளவீடுகளும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றன.

நாம் கல்வியின் வாயிலாக அனுபவத்தின் வாயிலாக, ஆன்மிகத்தின் வாயிலாகப் பெறக்கூடிய ஏதுக்களைப் பிரித்துப் பார்க்க வேண்டும். இதை விளக்க ஒரு பரிணாம முறையைக் குறிப்பிடுகின்றனர். தரவு (Data) தகவலை (Information) அறிவு (Knowledge) ஞானம் (Wisdom) என்பதாகும்.

இதை இன்னும் எளிதாகப் புரிந்து கொள்ள ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது.

பருத்தி எனும் மூலப்பொருளைத் தரவு (Data) என எடுத்துக் கொண்டால், பருத்தியிலிருந்து பெறப்படும் நூல் என்னும் இடைப்பொருளோடு தகவலை (Information) ஒப்பிடலாம். நூலினால் நெய்யப்படும் துணியே அறிவாகும் (knowledge). துணியை முறையாகக் கத்தரித்து தைக்கப்பட்ட அழகான ஆடையே ஞானம் (wisdom) எனலாம்.

கல்வியின் வாயிலாக தரவையும், தகவலையும் பெற இயலும். அனுபவத்தின் வாயிலாக ஓரளவு அறிவையும் பெறலாம். இவைகளை மட்டும் பெறுவதனால் ஒருவர் நல்லொழுக்கம் உள்ளவராக மலர முடியாது.

ஏனெனில் பெற்ற தரவையும், தகவலையும், அறிவையும் ஆக்கப்பூர்வமாக, வெற்றிகரமாகப் பயன்படுத்தும் ஆற்றலே ஞானமாகும்.

அத்தகைய அறிவாற்றலையும் ஞானத்தையும் தருபவர் கடவுள் ஒருவரே (நீதி. 2:6). அப்படியானால் அவைகளைப் பெறுவது எங்ஙனம் என்பதைத் தியானிப்போம்.





தங்கியிருக்கிறார். உங்களுக்குள்ளும் இருக்கிறார்'' ஆக ஆவியானவர் நம்மோடு இருக்கும் நம்மோடு என்றும் தங்கும் துணையாளர், அனுகூலர்.

தூய ஆவியாரைக் குறிக்கும் ஓர் அடையாளம் காற்று. மனிதன் உயிர்வாழ காற்று அவசியம். காற்றை சுவாசிக்காதவர் செத்த மனிதன்.

தூய ஆவியார் வரும் முன், ''கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. அப்போது நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர்'' (திப. 2:2-3)

தூய ஆவியார் காற்றைப்போன்று வந்தார். எனவே காற்றைப்போன்று தூய ஆவியாரைக் கொண்டிராதோர் செத்த மனிதர்.

ஆக தூய ஆவியார் நாம் உயிர்வாழ எப்பொழுதும் நமக்குள் வாசம் பண்ணும் சுவாசம். அத்தகைய அனுகூலர். மனிதன் தன் வாழ்வில் செயல்படும் விதத்தை வைத்தே, அவர் தூய ஆவியாரைப் பெற்றிருக்கிறாரா இல்லையா எனச் சொல்ல முடியும்.

தூய ஆவியாரைக் குறிக்கும் இன்னொரு அடையாளம் 'புறா'. புறா சாந்தத்தின் அடையாளம். அதன் உடலமைப்பு மற்ற பறவைகளிலிருந்து தனித்தன்மை வாய்ந்தது. புறாவின் உடலில் 'பித்தப்பை' அதாவது கசப்புணர்வு இல்லை. புறா வடிவில் உள்ள தூய ஆவியார் நம்மீது தங்கும்போது மனிதர்களாகிய நாம் நமது உள்ளத்தில் கசப்புணர்வு இல்லாமல் இனிமையானவர்களாக, சாந்த இயல்பினராக, சமாதானத் தூதுவர்களாக இருந்து வாழ வேண்டுமென உணர்த்துகிறார். புறா தூதுரைப்பதற்கும் அடையாளம் அதாவது நாம் நற்செய்தியின் தூதுவர்களாக, இறையரசின் மதிப்பீடுகளை வாழ்ந்து காட்டும் தூதுவர்களாக மாற தூய ஆவியார் நமக்கு அனுகூலராக இருக்கிறார் என்பதே எத்துணை நிறைவு இல்லையா? மட்டுமல்லாது, பவுலார் கலாத்தியருக்குக் கடிதம் எழுதும்போது, ''நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார். அந்த ஆவி அப்பா, தந்தையே எனக்குறிப்பிடுகிறது.'' ஆகையால் இனி நீங்கள் அடிமைகளல்ல: பிள்ளைகள் தாம். பிள்ளைகளாகவும் உரிமைப்பேறு உடையவர்களாகவும் இருக்கிறீர்கள். இது கடவுளின் செயலே (கலா.4:6-7) எனக் கூறி ஆவியார் ஒரு தந்தையாக, தாயாக நமக்கு அனுகூலமானவர் என்பதைத் தெளிவுப்படுத்துகிறார்.

### குரு, சீடன் இருவருக்குமிடையேயான உரையாடல்

**சீடன் :** நான் களவு, பொய், விபச்சாரம், கொலை எதுவும் செய்யல எந்த பாவமும் செய்யல. எனக்கு மோட்சம் கிடைக்குமா...

**குரு :** இந்த மேசை, நாற்காலி, டம்ளர், தட்டு கூட எந்த பாவமும் செய்யல. இதுக்கெல்லாம் மோட்சம் கிடைச்சா உனக்கும் மோட்சம் கிடைக்கும்.

**சீடன் :** என்ன சொல்றீங்க குருவே!

**குரு :** பாவம் செய்யாததுனால மோட்சம் கிடைக்காது. புண்ணியம் செஞ்சாதான் மோட்சம் கிடைக்கும்.

**அன்பர்களே!**

நம் இயலாமைகளில், அச்சுறுத்துதல்களில் நம்மை ஆற்றல்படுத்தும் ஆவியானவரின் வாக்குறுதியை நம்பி, அனுதின வாழ்வில் உணர்வுடன் வாழும் வாழ்வை, ஆவிக்குரிய வாழ்வைத் தந்து நடத்தும் ஆவியாரின் வாக்குறுதியை உணர்ந்து என்றென்றும் நம்மோடிருந்து நம்மை நிலையான வாழ்வுக்கு நேராய் நடத்தும் ஆவியானவரின் வாக்குறுதியை அனுபவித்து ஆவியாருக்கு நம்மை அர்ப்பணம் செய்வோம்.

இறையரசைச் சுவைப்போம் விரிவுப் படுத்துவோம்

***சிந்தனைக் கவி :***

வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே வாக்குமாறா நல்ல நாதரே வாக்கை நம்பி வந்து நிற்கிறோம் வல்ல ஆவிமாரி ஊற்றுமே.

அருள்திரு. S.M. **டேனியல் தேவதாசன்**



**01-06-2014**

*மாணவர் ஞாயிறு*

*உயிர்ப்புக்குப் பின்வரும் ஆறாம் ஞாயிறு*

## ஞானமும் அறிவும் கடவுளின் அருட்கொடைகள்
## WISDOM AND KNOWLEDGE : GIFTS OF GOD

| | |
|---|---|
| யோபு 28 | யாக். 3 : 13-18 |
| திபா. 119 : 9-16 | லூக். 2 : 41-52 |

*"...ஞானம் எங்கே கண்டெடுக்கப்படும்? அறிவின் உறைவிடம் எங்கேயுள்ளது?"*
*யோபு 28 : 12*

**இறைவேண்டல் :** கடவுளே, ஞானத்திற்கும் அறிவிற்கும் ஆதாரமானவரே, எங்கள் மாணவ சமூகத்தை உமது கைகளில் அர்ப்பணிக்கின்றோம். அவர்களை உமது நம்பிக்கையாலும், நற்குணங்களாலும், பொறுமையாலும், இறையுணர்வாலும் நிரப்பி, நன்றாக படிப்பதற்கும், எது நன்மையானதோ, எது அழகானதோ, எது நீதியானதோ அதை பின்பற்றி, உயர்வின் பாதைக்கு கடந்து செல்ல உதவி செய்ய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

இந்த நாட்ல சுயமாக சிந்திக்கும் திறனற்ற பசங்க ஜாஸ்தி, அதோ வர்றானே, அவன்தான் உலகத்திலிலேயே பெரிய அறிவிலி என்று தூரத்தில் வந்த சிறுவனைக் கைக்காட்டினார் அந்த டீக்கடையின் உரிமையாளர். எப்படிச் சொல்லுகிறீர் என்று கேட்டார் வாடிக்கையாளர். இப்ப பாருங்கள், என்று சிறுவனை அழைத்த கடை உரிமையாளர் ஐந்து ரூபாய் நாணயத்தை ஒரு கையிலும், இரண்டு ஒரு ரூபாய் நாணயங்களை மறுகையிலும் வைத்துக் கொண்டு இவற்றில் உனக்கு எது வேண்டும்? என்று கேட்டார்.

அந்தச் சிறுவன் இரண்டு ஒரு ரூபாய் நாணயங்கள் இருந்த கையைக் காட்டி அதில் இருந்த இரண்டு ஒரு ரூபாய் நாணயங்களை எடுத்துச் சென்று விட்டான்.

பார்த்தீர்களா, நான்தான் சொன்னேனே, இவனுக்கு எப்பத் தான் புத்தி வருமோ தெரியவில்லை என்று அலுத்துக் கொண்டார் கடை உரிமையாளர்.

யார் அந்தப் பையன் என்று கேட்டார் வாடிக்கையாளர். என் மகன்தான் என்றார் கடை உரிமையாளர்.

விடைபெற்று அடுத்த வீதிக்கு வந்த வாடிக்கையாளர், அங்கே அந்தச் சிறுவன், கடை ஒன்றில் சாக்லேட் வாங்கி சுவைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

இயற்கைக்குள்ளும் நல்லுறவு உண்டு என்பதில் ஐயமில்லை. சந்திரனின் சுழற்சி, சூரிய ஒளியின் சக்தி, தாவரங்கள், மழை, காற்று இவைகளினால் மனித உடலில் மாற்றங்கள் நிகழ்கின்றன. எனவே படைப்புகளோடு இணைந்திருப்பது சூழலுக்கு ஏற்றபடி பயன்படுத்துவது சிறப்பு. இத்தகைய வளமையான படைப்புகளை மனிதன் தன் சுய வாழ்விற்காகப் பாழ்ப்படுத்துகிறான். கடவுள் ''படைப்புகளை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்'' என்று கூறினார். இதனை மனிதன் தனக்கு சாதகமாக்கி முழுப் படைப்புகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயலும்போது தான் படைப்புகளுக்கு எதிராக சென்று விடுகின்றான். ஆண்டு கொள்ளுவது என்பது ஆளுகை செய்வதுமட்டுமல்ல படைப்புகளுக்குத் தொண்டு செய்வதுமாகும் (Not onlyownership but stewardship).

பண்படுத்தவும், பாதுகாக்கவும் கடவுள் மனிதனுக்குக் கட்டளையிட்டார் (தொநூ. 2:15). இதில் "abad" (till, work,serve) 'Shamar' (keep, natch, preserve) ஆகிய எபிரேயச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. உழைக்கவேண்டும், தொண்டுபுரிய வேண்டும், பாதுகாக்க வேண்டும், கண்காணிக்க வேண்டும் என்ற விளக்கங்களைத் தந்து மனிதர்களும், படைப்புகளும் எப்படி வாழவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. ஆனால் இன்ற மனிதர்களாகிய நாம் படைப்புகளிலிருந்து இலாபம் மட்டும் பெற விழைகின்றோம். பாதுகாக்க வேண்டியதை நாம் பாழ்ப்படுத்துகின்றோம். இந்நிலை தொடருமாயின் அது கடவுளின் கட்டளைகளை மீறி நமக்கும் ஏனைய படைப்புகளுக்குமிடையேயுள்ள நல்லுறவைச் சிதைப்பதாகும் சிதையாமல் படைப்புகளோடு இணைந்திப்போம்.

### 3. படைப்புகளைப் பாதுகாப்போம் :

மனிதன் தன் சக படைப்புகளான ஏனைய படைப்புகளோடு நல்லுறவு கொண்டு அதனைப் பாதுகாக்க கடவுளால் படைக்கப்பட்டவன். ஆனால் காலம் செல்லச் செல்ல அந்நிலை மாறிவிட்டது. ''மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை, நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்'' (தி.பா 24) ''நிலம் என்னுடையது நீங்களே என்னைப் பொறுத்தவரையில் அன்னியரும் இரவற் குடிகளுமே (லேவி. 25:23) இந்த திருமறை வாசகங்கள் மனிதன் இவ்வுலகிற்கு நிரந்தரமானவன் அல்ல என்பதையும் இயற்கை வளங்களை அழிப்பதற்கு, நிலங்களை, ஆக்கிரமிப்பு செய்வதற்கு உரிமை இல்லை என்பதையும் வெளிப்படுத்துகிறது. ஆனாலும் மனிதன் பாழ்ப்படுத்துவதில் முன்னிலை வகிக்கின்றான்.





இவ்வதிகாரத்திலே ஞானத்தை என்னென்ன வழிகளிலே கண்டெடுக்க மனிதர் முயற்சி மேற்கொள்வர் என்பது பற்றிச் சொல்லப்பட்டள்ளது.

அறிவியல் வளர்ச்சியால் ஞானத்தைக் கண்டெடுப்பது கூடாத காரியமாயிருக்கின்றது. (யோபு 28: 1-13) தற்காலத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் மாபெரும் வளர்ச்சியடைந்துள்ளன. அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா, கியூரியாசிட்டி (curiosity) என்னும் விண்கலத்தைச் செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய அனுப்பியுள்ளது.

அந்தக் கியூரியாசிட்டி (curiosity) விண்கலம் செவ்வாயில் ஷார்ப் என்ற மலைக்குன்றில் ஆய்வு செய்து வருகிறது. இந்த ஆய்வின் மூலம் செவ்வாய்க் கிரகத்தின் தொன்மைக்கால நிலைகுறித்தும், பருவகால மாறுபாடுகள் குறித்தும், புவியியல் அடுக்குகள் குறித்தும் அறிய முடியும் என்று சொல்லப்படுகிறது.

2013 நவம்பர் 5ஆம் நாள் செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்ய இந்தியா மங்கல்யான் என்னும் விண்கலத்தை அனுப்பியுள்ளது. 2014 செப்டம்பர் மாதம் இவ்விண்கலம் செவ்வாயின் சுற்றுப்பாதையை அடையும் என்று சொல்லப்பட்டுள்ளது.

மங்கல்யான் விண்கலம் செவ்வாயின் நிலப்பரப்பு, சுற்றுச்சூழல், கனிமவளங்கள், மீத்தேன் வாயு போன்றவை குறித்து ஆராயும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தான் யோபுவின் நூலில் மனிதர் இருளுக்கு இறுதி கண்டு எட்டின மட்டும் தோண்டி இருட்டிலும் சாவின் இருளிலும் கனிமப் பொருளைத் தேடுகின்றனர். மக்கள் குடியிருப்புக்குத் தொலையில் சுரங்கத்தைத் தோண்டுவர் என்று குறிப்பிட்டுள்ளார் (யோபு 28: 3-4)

இந்த அளவுக்கு அறிவியலும் தொழில்நுட்பமும் முயன்றாலும் ஞானம் எங்கே கண்டெடுக்கப்படும் என்பதை அறியமுடியவில்லை என்கிறார். (யோபு 28: 12,13)

யோபு 28:14இல் ஞானம் என்னுள் இல்லை என்று ஆழ்கடலும் என்னிடம் இல்லை என்று பெருங்கடலும் கூறுவதாகச் சொல்கிறார். இது எதைக் குறிக்கிறதென்றால் பூர்வீகக் கிழக்கத்திய நாடுகளில் சமுத்திரம் மற்றும் நதி போன்றவை கடவுளாகப் பாவிக்கப்பட்டு அவற்றின் சீற்றத்தினின்று தாங்கள் தப்புவிக்கப்பட பூஜைகளையும், சடங்குகளையும் அவற்றின் ஓரத்தில் செய்த வந்தனர். இதைப் பின்னணியாக வைத்தே இதுபோன்ற சன்மார்க்கச் சடங்குகளைப் பின்பற்றினாலும் ஞானத்தை அடைய முடியாது என்கிறார்.

அப்படியாயின் ஞானத்தைப் பெறுவதற்கான வழி எது என்று ஆராயும் போது, "ஞானத்தின் வழியைத் தெரிந்தவர் கடவுள் ஒருவரே. அதன் இடத்தை அறிந்தவரும் அவரே" (யோபு 28:23)

ஆண்டவர்க்கு அஞ்சுங்கள்; அதுவே ஞானம் (யோபு 28:28, நீமொ. 1:7) கடவுளுக்கு அஞ்சி அவர்மேல் பற்றுமை கொண்டு வாழ்வதன் வாயிலாகவே ஒருவன் ஞானத்தைப் பெறமுடியும். சீடன் ஒருவன் ஒவ்வொரு மரமாகச் சோதனை செய்து கொண்டே வந்தான். அச்சீடனைப் பார்த்து குரு கேட்டார். ஒவ்வொரு மரமாக அப்படி என்னப்பா தேடுகிறாய்? நான் ஞானம் பெற போதி மரத்தைத் தேடுகிறான் என்றான் சீடன். இதைக் கேட்ட குரு சொன்னார், ஞானம் என்பது மரத்தில் அல்ல; உன் மன விழிப்பில் உள்ளது என்றார்.

இத்தகைய விழிப்புநிலையைத் தான் தாவீதின் வாழ்விலே பார்க்கின்றோம். தன்னைக் கொல்லத் துடிக்கும் சவுலைப் பழிவாங்க வாய்ப்புக் கிடைத்த போதும், தாவீதின் மனுஷர் இது உனக்கு ஆண்டவர் ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்பு எனத் தூண்டிய போதும் அத்தீமைக்கு உடன்படாமல் ஆண்டவர் திருப்பொழிவு செய்தவர் மீது நான் கைவைக்கக் கூடாது என்று இறையச்சத்தோடு கூடிய தீமைக்குத் துணை போகாத தன் மன விழிப்பு நிலையை வெளிப்படுத்தினார். (1 சாமு 24: 1-7)

இதை மையப்படுத்தித்தான் பவுலார் எபேசு சபையாருக்கு எழுதும் போது உங்கள் நடத்தையைப் பற்றி மிகவும் கருத்தாய் இருங்கள். ஞானமற்றவர்களாய் வாழாமல் ஞானத்தோடு வாழுங்கள் (எபே 5:15) என்கிறார். புனித யாக்கோபும் தம் கடிதத்தில் பரத்திலிருந்து வரும் ஞானம் பணிவாலும் நன்னடத்தையாலும் வெளிப்பட வேண்டும் என்கிறார். (யாக். 3: 13-18)

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் இத்தகைய விழிப்புநிலை உடையவராகவே இருந்தார். ஆகவே தான் பெற்றோரை விட்டு விட்டு ஆலயத்திலேயே அமர்ந்திருந்து தந்தையாம் கடவுளின் அலுவல்களில் முனைப்போடு ஈடுபட்டார். கேட்பதிலும் கற்பதிலும் அதிக ஆர்வம் காட்டினார். ஆகவேதான் அனைவரும் அவருடைய அறிவாற்றலையும், புரிந்து கொள்ளும் திறனையும் கண்டு வியந்தனர்.

புதிய கல்வியாண்டுக்குள் அடியெடுத்து வைக்கும் அனைவரும் கடவுளின் அருட்கொடைகளான ஞானத்தையும் அறிவையும் பெற முனைப்பு காட்டவேண்டும். கடவுளின் கட்டளைகளை மனத்தில் இருத்தி இறைபயத்தோடு தீமையை விட்டு விலகி ஞானத்தையும் அறிவாற்றலையும் அளிக்கவல்ல கடவுளிடம் நம்மை ஒப்படைப்போம்.

திரு. B. **சாம் ஜெபசிங்**





கீழ்ப்படிவதையும், இயற்கைக்கு எதிரான இவ்வுலகில் கடவுளின் பிள்ளைகளாக வாழ்வதைக் குறித்தும் சிந்திப்போம்.

### 1. கடவுளைப் போற்றுவோம் :

கடவுள் உலகின் அனைத்துப் படைப்புகளையும் படைத்து ஒழுங்குப்படுத்தி மனிதர்களிடம் ஒப்படைத்தார். இயற்கைக்கும் கடவுளுக்கும் நேரடித் தொடர்பினைத் திருமறை வெளிப்படுத்துகிறது. அனைத்துப் படைப்புகளும் கடவுளைச் சார்ந்து வாழவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. மனிதர்கள் ஏனைய படைப்புகளோடு இணைந்து வாழவேண்டும் என்பது இறைவனின் விருப்பம். திருப்பாடலாசிரியர் இதனைத் தெளிவாய் தன் வாழ்வு. சார்ந்து குறிப்பிடுகிறார் (தி.பா. 23). கடவுள் துணையின்றி மனிதர்கள் வாழ்வது மிகக் கடினம் என்பதை பவுலடியார் கூறுகிறார் (Iகொரி. 15:10). மனிதன் மட்டுமல்ல ஏனைய படைப்புகளும் இறைவனைப் போற்றுகின்றன. ரபிந்திரநாத் தாகூர் தன் இலக்கியப் படைப்புகளில் இயற்கையும் இறைவனை போற்றுகின்றன என்பதை கூறுகிறார். எப்படியெனில்,

"I asked the tree
Speak to me about God
And it blossmed."

"நான் ஒரு மரத்தைக் கேட்டேன் கடவுளைப் பற்றி பேசுமாறு உடனே அது மலர்ந்தது எனக் கூறுகிறார். இப்படி மௌனமாக இயற்கை கடவுளைப் போற்றுகின்றது. திருப்பாடலாசிரியர் அனைத்துப் படைப்புகளையும் இறைவனைப் போற்ற அழைப்பு விடுக்கின்றார்.

(தி.பா. 148).

யோவானின் தரிசனம் இயற்கைகள் கடவுளைப் போற்றும் நிலைதனை மிகத் தெளிவாக விளக்குகின்றது (திருவெளி. 4:6). மனிதர்கள் மாத்திரமல்ல முழு உலகமும் கடவுளைப் போற்ற படைக்கப்பட்டுள்ளது. அனைத்துப் படைப்புகளும் அரியணைமேல் வீற்றிருக்கும் இறைவனை ஒன்றாய் வழிபடுகின்றன. இது தனிப்பட்ட மனித ஆன்மிகம் அல்ல முழுப் படைப்பு சார்ந்த ஆன்மிகம் (Not individual spirituality but cosmic spirituality). கடவுளோடு படைப்புகள் இணைந்து, இசைந்து வாழ்தலும் அவரைப் போற்றுதலும் மிகத் தேவை. இந்த வாழ்வே கடவுளோடு நம்மை ஒன்றுபடுத்தும் வாழ்வு. இதுவே சிறந்த ஆன்மிகம்.

### 2. படைப்புகளோடு இணைந்திருப்போம் :

கடவுள், படைப்புகள் அல்லது இயற்கை ஒவ்வொன்றிற்குமிடையே உறவுநிலைதனை வலுப்படுத்தியிருக்கின்றார். மனிதனுக்கும்

**08-06-2014** *சுற்றுச்சூழல் ஞாயிறு*

# படைப்பின் ஒருங்கமைவு

## INTEGRITY OF CREATION

லேவி. 25:8-28 தி.வெ. 22 : 1 - 7

தி.பா 148:8 யோவா. 1 : 1 - 5

*"…..நிலம் என்னுடையது. நீங்களோ என்னைப் பொறுத்தவரையில் அன்னியரும் இரவற்குடிகளுமே." லேவி 25 : 23*

**இறைவேண்டல் :** படைப்பின் கடவுளே, உமது வார்த்தையால் படைக்கப்பட்ட படைப்பு தண்ணீர்களின் மேல் பலவிதமான உயிரினங்களையும், காற்றில் பறக்கும் பலவிதமான பறவைகளையும் உள்ளடக்கியதாய் இருக்கிறதே! உமது படைப்பிலுள்ள திரட்சிக்காக அகமகிழுகிறோம். பூமியில் வாழும் பல உயிரினங்களுக்கும் உமது ஞானத்தை கொடுத்து, இப்பூமியை அழிவுக்குட்படுத்தாதபடி, ஞானமாய் மேலாண்மை செய்து எங்கள் சந்ததியாருக்கு அவைகளை அனுபவிக்கும்படி வைத்து போக உதவி புரிய வேண்டுமென்று ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

### *முன்னுரை :*

கடவுள் தம் வல்ல செயல்களினால் உலகைப் படைத்தார், படைப்புகளை ஒழுங்குபடுத்தினார். அவைகளை நல்லதெனவும் கண்டார். படைப்பின் மகுடமான மனிதரைக் கொணடு பண்படுத்தவும் பாதுகாக்கவும் கட்டளையிட்டார். ஆனால் புதிய அறிவியலின் கண்டுபிடிப்புகளினாலும், மனிதனின் பேராசைகளாலும் சிறப்பான படைப்புகள் அதன் வளங்கள் அனைத்தும் சீர் குலைந்து காணப்படுகின்றன. இயற்கையின் வளங்கள் சூறையாடப்படுகின்றன, நிலங்கள் ஆக்கிரமிப்புள்ளாகின்றன,அதிவேகம், போலித்தன்மைகள் இவைகள் படைப்புகளைப் பட்சிக்கின்றன. அரசின் கொள்கைகள், உலகமயமாக்குதல், புதிய பொருளாதாரக் கொள்கைகள் நிலமற்றவர்களையும், பெலனற்றவர்களையும், இயற்கைக்கு எதிரான சூழல்களையும் பெருக்கி வருகின்றன. தொழிற்சாலைகளின் பெருக்கமும். அதன் கழிவுகளும் கடல்வாழ் உயிரினங்களை அழிக்கின்றன, நிலங்கள் மலட்டுத்தன்மை அடைகின்றன. இந்நிலையில் படைப்புகள் ஒன்றும் நமக்குரியதல்ல, அனைத்தும் கடவுளுக்குரியது என்பதையும் வாழும் காலம் வரை இயற்கையோடு இணைந்து வாழ்வதையும், இறைக்கட்டளைக்குக்



**08-06-2014** *பெந்தக்கோஸ்து விழா &*
*சுற்றுச்சூழல் ஞாயிறு*

# வாரும் தூய ஆவியாரே எம்மை மாற்றுருவாக்கும்

## COME HOLY SPIRIT, TRANSFORM US

எசேக். 36 : 22-32 தி.ப. 2 : 1-13

திபா. 29 யோவா. 20 : 19-23

*"உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்." எசே. 36 : 27*

**இறைவேண்டல் :** வல்லமையின் கடவுளே, இதே போன்றதொரு நாளிலே, உண்மையுள்ள உமது மக்களை இருதயத்தில் புத்தொளியுள்ளோராக்கினீரே! தூய ஆவியாரின் கொடையால் துணிவை தந்து எங்களை மாற்றுருவாக்கும். உமது ஆவியானவரின் கனிவு எங்களை நடத்தி, நாங்கள் எண்ணிய இலக்கை அடைய உதவி செய்ய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

யூத மக்களின் சமய வாழ்க்கையிலே பண்டிகைகள் பல இடம் பெற்றிருந்தன. சிறிதும், பெரிதுமான பத்துப் பண்டிகைகளை அவர்கள் ஆசரித்து மகிழ்ந்து வந்தார்கள். இவற்றில் மிக முக்கியமானதும் எல்லாத் திசைகளிலிருந்தும் மக்கள் கூடி ஆசரிப்பதுமான பண்டிகை பஸ்காப் பண்டிகையாகும். இதற்கு அடுத்த முக்கியப் பண்டிகை பெந்தக்கோஸ்துப் பண்டிகை என்பதாகும். பெந்தக்கோஸ்து என்பதற்கு 50-ஆம் நாள் என்பது பொருள். பஸ்காப் பண்டிகையிலிருந்து 50-ஆம் நாள் இப்பண்டிகை நடைபெற்றது.

இப்பண்டிகை விவசாய சூழலில் அறுப்புக் காலத்தின் ஆரம்பத்தைக் குறிப்பிட்டது. எனவே புதிதாகக் கொய்து எடுக்கப்பட்ட வாற்கோதுமைக் கதிர் கர்த்தருடைய சமூகத்தில் அடையாள ரூபமாகப் படைக்கப்பட்டது.

பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியார் அருளப்பட்ட நிகழ்ச்சியில் முக்கிய குறிப்பு அவர்கள் பேசத் தொடங்கியவர்கள். இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும் இந்நிகழ்ச்சி வரையிலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிறருக்குக் கூறியதாகத் தெரியவில்லை. அவர்கள் பேசத் தொடங்கிய போது அதைக் கேட்டவர்கள், இவர்கள் மதுபானத்தால் நிறைந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் கேட்டவர்களுக்கு நேராகப் பேசியவர்கள். ஆவியானவர் புதிய ஏற்பாட்டின்

காலத்தில் மட்டுமென்று, அவர் எல்லாரிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்ற சிந்தனையோடு ஆவியானவரைப் பற்றித் தியானிப்போம்.

## 1. உள்ளத்தில் தங்கும் ஆவியார்

தூய ஆவியார் எங்கும், எப்போதும் தங்கி இருக்கின்றார். நாம் அழைத்த உடன் வருபவராகவும், நாம் அழைக்காவிட்டால் நம்மில் இல்லாதவர் போல நினைப்பது நமது புரிந்துகொள்ளுதலில் உள்ள தவறு. தொ.நூ. 1,2-இல் நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. நீதித்தலைவர்கள், இறைவாக்கினர்கள், ஆவியாரின் நிறைவினால் செயலாற்றியதாகப் பார்க்கிறோம். எனவே எக்காலத்தும், எத்துறையிலும், செயல்படுகிறவர் பரிசுத்த ஆவியானவரே,

தி.ப. 1:4-ல் நீங்கள் எருசலேமை விட்டு நீங்க வேண்டாம். என்னிடமிருந்து கேட்டறிந்த தந்தையின் வாக்குறுதி நிறைவேறக் காத்திருங்கள் என்று இயேசுநாதர் அவர்களுக்குக் கூறியிருந்தார். அதன்படி தூய ஆவியாரில் நிரப்பப்படுகிறார்கள். இயேசு நாதர் தம்மில் தங்கியிருக்கும் ஆவியாரை அறிக்கையிட்டுக் கூறியது லூக்கா. 4:18-இல் நாசரேத் அறிக்கையாகக் குறிப்பிடுகிறார். கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள் என்கிறார் பவுலார்.

தூய ஆவியார் எங்குமிருக்கின்றார். நான் அவருக்கு உரிமைப் பேறானவர் என்பதில் மட்டுமன்று மாறாக தூய ஆவியார் நமது உள்ளத்தில் தங்க இடம் தர வேண்டும். எடுத்துக்காட்டாக, வீடு ஒன்றை விலைக்கு வாங்குகிறோம். அதனால் என்ன பயன் ? அந்த வீட்டிற்குள் சென்று நமது உடமைகளை அதனுள் வைத்து தங்க வேண்டும். அதனை எனக்குரியது என்ற நிலையில் உடமையாக ஏற்பதால் தான் அது எனக்குரியதாகிறது.

## 2. உறுதிப்படுத்தும் ஆவியார்

தி.ப. 1:8-ன் படி தூய ஆவி உங்களிடம் வரும்போது சாட்சிகளாயிருப்பீர்கள். தூய ஆவியார் அவரது கட்டளைகளைக் கிருபையாக கைக்கொண்டு நடக்க நம்மை உறுதிப்படுத்துகின்றார். கடவுளின் வார்த்தைக்கு அடங்கி வாழ்வது ஆவியானவரில் உறுதியோடு வாழ்வதற்குரிய வழித் தடமாகும். ஆண்டவர் இதனை ஒரு உவமை வழி விளக்குகின்றார். மத். 7:24-27-இல் ஆகவே நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறை மீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார் என்கிறார்.

கடவுளின் வார்த்தையினால் உறுதிப்பட்டவர்கள் சான்று பகர்ந்தனர். தி.ப. 2:40,41-இல் இன்னும் அனேக வார்த்தைகளால் பேதுரு கூறிய சாட்சி சுமார் மூவாயிரம் பேர் சபையிலே சேர்த்துக்





கொள்ளப்பட்டார்கள். கடவுளின் கட்டளையின்படி நடக்கும்போது நாம் மட்டுமன்று, பிறரும் உறுதிப்பட ஆவியார் அருள் செய்கின்றார்.

துன்பத்தில், நெருக்கத்தில், பாடுகளில், வேதனையில் உறுதியோடு வாழ்ந்த நமது முன்னோர்கள் வரலாறு, நற்செய்தி அறிவிக்க நமது மண்ணில் வந்த நற்செய்திப் பணிவிடையாட்களின் வாழ்வு அனைத்தும் உறுதியான சாட்சி. எடுத்துக்காட்டாக 19-வது நூற்றாண்டில் வாழ்ந்த நமது முன்னோர்கள் சாதிக் கொடுமையினால் தரம் தாழ்த்தப்பட்டவர்களாக நடத்தப்பட்டனர். சமூக வழக்கங்களிலிருந்து புறக்கணிக்கப்பட்டவர்களாக காணப்பட்டனர். ஆனால் விடுவிக்கும் ஆவியார், தவறான பழக்கவழக்கங்கள், மூடப்பழக்கவழக்கங்கள், தவறான பாரம்பரியங்கள் மற்றும் சடங்குகளிலிருந்து விடுவித்து உறுதிப்படுத்துகின்றார்.

## 3. உதவி செய்யும் ஆவியார்

உயிர்த்தெழுந்த ஆண்டவர் உள்ளம் சோர்வடையும் வேளையில் எல்லாம் உதவி செய்பவராகத் தம்மை வெளிப்படுத்துகின்றார். மனிதனின் வாழ்வு மரணத்தோடு முடிந்து போகும் என்ற மரண பயம் நீக்கி, சாவை வென்றவராக சாவாமையுடைய நித்திய வாழ்வின் நம்பிக்கையுடையவராக வாழ உதவி செய்கின்றார். வாழ்வோடு போராடிக் கொண்டிருக்கும் மனிதர், வாழ்விழந்து தவிப்போர், கைவிடப்பட்டோர், நம்பிக்கையிழந்தோர், ஏமாற்றம் அடைந்தோர், அச்சமடைவோர் அத்தனை பேருக்கும் உயிர்த்த ஆண்டவர் உதவி செய்கின்றார். உண்மையும், உத்தமமாய் வாழ உதவி செய்கின்றார். உயிர்த்தெழுந்த ஆண்டவரில் உள்ளன்பு உடையோர் உறுதியுடன் பிறருக்கு உதவிட்ட நிகழ்வு தான் அற்புதங்களும் அடையாளங்களும், எனவே உயிர்த்த ஆண்டவரின் பெயரில் செய்த செய்யப்பட்ட, செய்யப்படுகின்ற செயல்கள் எல்லாம் உதவி செய்தலுக்கு நேராகத் தூண்டுகிறது. யோவா. 20:19-23 வரை உள்ள நற்செய்திப் பகுதியில் தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று கூறி தூய ஆவியாரின் நடத்துதலோடு நன்மையானவைகளை செய்ய சீடர்களை அனுப்புகின்றார். இந்த அனுப்புதலின் நோக்கம் பாவத்தின் பாரத்தில் வாழும் மனுக்குலம் வாழ்வுபெற முடியும் என்ற பாவமன்னிப்பின் உறுதி கூறவே அனுப்புகின்றார். எனவே பாவம் செய்வோர் சாபம் பெற்று அழிந்து போவார்கள் என்ற அவ நம்பிக்கையினின்று, விடுதலை பெற்று வாழ்வடைவார்கள் என்ற செய்தியினைக் கூற இன்றும் உதவி செய்கின்றார்.

உயிர்த்தெழுந்த ஆண்டவரின் அருள் ஆற்றல் இன்றும் நம்மில் தங்கி, உறுதிப்படுத்தி, உதவி செய்பவராக நம்மை நிலைப்படுத்துகின்றார்.

அருள்திரு. அறிவர் **A.R. செல்லையா**

இன்றைய அருளுரைக்குத் தரப்பட்டுள்ள திருமறைப் பகுதிகளின் பின்னணியத்தில் கிறிஸ்தவ சீடத்துவத்தின் பணி என்ன? என்பதைத் தியானிப்போம்.

**1. பின்பற்றுவோர் :** 2அர 2 : 2

எலியா எலிசாவை நோக்கி, "ஆண்டவர் என்னை பெத்தேலுக்கு அனுப்பியுள்ளார். எனவே நீ இங்கே தங்கியிரு" என்றார். எலிசா அவரை நோக்கி, வாழும் ஆண்டவர் மேல் ஆணை! உம் உயிர் மேலும் ஆணை! நான் உம்மை விட்டுப் பிரியமாட்டேன் என்றார். ஆகவே அவர்கள் பெத்தேலுக்குப் போனார்கள்.

எலியா என்ற சொல்லின் பொருள் "கடவுளே மீட்பு" என்பதாகும். எலியாவைப் போன்றதொரு பெரிய தீர்க்கத்தரிசி களம்விட்டு காலத்திரைக்குள் மறையும் போது அந்த இடத்தை நிரப்ப யார் தைரியம் கொள்வர்? எலியா தமது பின் தொடர்பாளராகத் தெரிந்தெடுத்தது விவசாயியான எலிசாவையாகும். ஒற்றுமையுடைய பெயரை உடையவரெனினும் வேற்றுமை மிக்கச் செயல்பாட்டுச் சுவைகள் அவரிடமிருந்தது. எலிசா என்ற சொல்லின் பொருள் "கடவுளே மீட்பு" என்பதாகும். மக்களின் நடுவில் இவர் வாழ்ந்து, அனாதைகளையும், ஏழைகளையும் பராமரித்தார். அனைத்து தரப்பு மக்களும் அவரைக் கனம் பண்ணினார்கள். எலிசா அனைவருக்கும் ஆறுதலாளராய், அற்புதம் செய்பவராய், அரசனுக்கு ஆலோசனை அறிவிப்பவராய், அபிஷேகம் செய்பவராய் பணி செய்து ஏற்றமிகு எலியாவின் பின்தொடராளரானார்.

இயேசு கிறிஸ்து, தம்மைப் பின்பற்றுவோர் இன்னவிதமாய் நடந்துகொள்ளவேண்டும் என்று மத். 10: 37-42 இல் கூறியுள்ளார். திருச்சபையாராகிய நாமும் எலிசாவைப் போன்று பணிகளைச் செய்து சமூகத்தாரை கிறிஸ்துவைப் பின்பற்ற நடத்துவோம்.

இந்தியாவின் கிறிஸ்தவ சமய வரலாற்றில் முதன் முதலில் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றிய நாடு என்ற பெருமை "திருவிதாங்கூருக்கு உண்டு". 1498 முதலே போர்த்துக்கீசியர்கள் திருவிதாங்கூருக்கு வந்தனர். கடலோரப் பகுதியில் வாழ்ந்த மக்கள் போர்த்துக்கீசியரின் போதனையால் கவரப்பட்டு, கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாக மாறினர். 1542-இல் கோவா வந்தடைந்த பிரான்சிஸ் சேவியர் கடலோரமாக தமது பணியினை நிறைவேற்றி, தென்திருவிதாங்கூருக்கு வருகை தந்தார். கோட்டாறை மையமாகக் கொண்டு மீன் பிடிக்கும் தொழிலாளர், மற்றும் தாழ்த்தப்பட்ட சாதியாரை கிறிஸ்துவைப் பின்பற்றுவோராக மாற்றினார்.





மனிதன் தன் சுய இலாபத்திற்காக போலி உரங்கள் தயாரித்து நிலத்தை மலடாக்கி பாழ்ப்படுத்தியது நம் நாட்டில் நிகழ்ந்த கொடுரமான செயல் (நக்கீரன் vol 26, No. 21,2013, ஜூன் 29 P14) இது நிலத்திற்கு பாதுகாப்பு இல்லை என்பதை வெளிக்கொணர்ந்துள்ளது. கடவுள் படைத்த புனிதமான பூமியை நாம் பாழ்ப்படுத்துகிறோம் மாசுப்படுத்துவதில் இந்தியர்களாகிய நாம் உலகில் நான்காவது இடத்திலுள்ளோம். (2007 வியட்னாமில் நடைபெற்ற அறிவியல் மாநாட்டின் வெளியீடு). இன்று நடைபெறும் இயற்கையின் சீற்றங்களுக்கும் நாமே காரணமாகி விட்டோம். அதிக மாசு ஓசோன் படலத்தில் ஓட்டையை ஏற்படுத்துகிறது. சூரியனின் அதிக வெப்பம், சூரியக் கதிர்களின் (Globel warming) அதிக வெப்பத்தால் வடதுருவ பனிப்பாறைகள் உருகும் நிலை, தாழ்வான இடங்களைக் கடல் நீர் சூழ்ந்து கொள்ளும் நிலை போன்றவைகள் மனித இனத்தையே எதிர்காலத்தில் அழித்துவிடும். காடுகளை அழிப்பதனால் மழையின்மை ஏற்படுகிறது, மனுக்குலம் செழுமையை இழக்கிறது. இந்த நிலையில் நாம் படைப்புகளைப் பாதுகாக்கின்றோமோ பாழ்ப்படுத்துகின்றோமா என்பதைச் சிந்திப்பது நல்லது. இயற்கைகளை அழித்து வாழ்வதை நிறுத்திக் கொள்வது நல்லது. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இயற்கைக்குத் திரும்புவோம் என்று அழைப்பு விடுக்கின்றனர் (Go back to Nature). இயற்கையோடு இணைந்து வாழ்வோம் அவைகளைப் பாதுாப்போம் வாழ்வோம்.

**முடிவுரை :**

மீட்பு, மனிதர்களுக்கு மாத்திரமல்ல எல்லாப் படைப்புகளுக்கும் அருளப்படுகின்ற அருட்கொடை என்பதை Paul Tillic என்ற இறையிலாளர் குறிப்பிடுகிறார். "படைப்பிற்கு மீட்பு இல்லாமல் மனிதர்களுக்கு மீட்பு இல்லை" (There is no salvation of Nature). இத்தகைய படைப்புகளை இயன்றமட்டும் பாழ்ப்படுத்துகின்றோம். இந்த நிலை தொடருமாயின் நம் எதிர்கால சந்ததியரின் நிலை என்ன? படைப்புகளைப் பாழ்ப்படுத்திய நமக்கு மன்னிப்பு உண்டா? என்ற கேள்விகள் எழுப்பப்படும் காலங்களில் வாழ்கின்றோம். மனிதனுக்காக படைப்புகள் என்ற நிலை மாறி மனிதமையத்திலிருந்து படைப்புகளின்மையமாக வேண்டும் (Ecotheology). இறையியல் மாற்றம் மட்டுமல்ல இதயமாற்றம் மிக அவசியம். நம்முடைய ஆன்மிக வாழ்வில் இயற்கை சார்ந்த ஆன்மிகத்தைச் சேர்த்து (Eco Spiritualty) ஆன்மிக வாழ்வுப் பயணத்தைத் தொடருவோம்.

அருள்திரு. **S. பெல்சன் கிராமணி**

**15-06-2014** *திரித்துவ ஞாயிறு*

# மூவொரு கடவுளைப் பாடுங்கள்

## SING TO THE TRIUNE GOD

| | |
|---|---|
| வி.ப. 3: 12-15 | தி. வெ. 4 : 1-11 |
| தி.பா. 98 | மத். 28 : 16-20 |

*"...எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவர்; இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் இவரே." வெளி. 4 : 8*

**இறைவேண்டல் :** ஆசீர்வதிக்கப்பட்ட திருத்துவமே! உம்மிலே நாங்கள் காணப்படுகிறதும் காணபடாததுமான எல்லாவற்றையும் படைத்த படைப்பாளரையும், தூரத்திற்கும், சமீபத்திற்குமான எங்கள் இரட்சகரையும் தொழுகை செய்ய துணையாய் நிற்கும் துணையாளாகிய ஆவியானவரையும் கண்டோம். பரலோகத்திலுள்ள சர்வ சேனைகளோடு நாங்களும் உமது தெய்வீக மகத்துவத்தை பாடவும், தூயர், தூயர், தூயர் சேனைகளின் கடவுள் வானமும் பூமியும் அவர் தம் மகிமையால் வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

இறைவனைப் பற்றி பல அரிய உண்மைகள் மறைந்து கிடக்கின்றன. அத்தகைய அரிய உண்மைகளுள் ஒன்றினை திருமறை நமக்குப் புலப்படுத்துகிறது. அதாவது கடவுள் தந்தை, மைந்தர், தூய ஆசியார் என்று மூவராகத் தம்முன் விளங்குகின்ற விளக்கமாகின்ற ஒருவரே. தந்தையார் பெருமையும் மைந்தர் அருமையும், ஆவியார் செழுமையுமாய் கடவுள் பெருமானிடத்து விளங்கும் மாட்சியைத் திருமறையில் காணலாம்.

மூவர் எவ்வாறு ஒருவராக இருந்திடல் இயலும் என்று இடர் படுகின்றவர்கள் உண்டு. இது உலக கணக்கியலுக்கு ஏற்காத ஒன்று. ஒன்றும் ஒன்றும் ஒன்றும் மூன்று என்பதுதான் நமது கணக்கியல். ஆனால் ஒன்றும் ஒன்றும் ஒன்றும் ஒன்றே என்பது கடவுட் கணக்கியல். பொருளாதார அமைப்பில் இல்லாததும் கடவுளுக்கே உரியதுமாகிய ஒரு உண்மையை கடவுளே நமக்கு வெளிப்படுத்தி உணர்த்தியிருக்கிறார். அவர் உணர்த்தி தெரிவிக்கவில்லையானால் நமக்கு அந்த உண்மை மறைந்தே இசைந்திருக்கும்.

மனித அறிவு பெருகப் பெருக மும்மை குறித்த கேள்வி அதிகரித்து வருவதைக் காணலாம். அறிவியல் அறிஞர்கள் அடைசாரசரமேஉலகத்தையே கேள்வி எழுப்பி ஒரு புதிர் என்று



**22-06-2014**

# கிறிஸ்தவ சீடத்துவம்

## CHRISTIAN DISCIPLESHIP

| | |
|---|---|
| 2 அர 2 : 1 - 15 | தீத்து 2 : 1 - 15 |
| தி.பா 119 : 33 - 48 | லூக் 14:25 - 33 |

*"உம் நியமங்களை பெரிதும் விரும்பினேன்; நீர் நீதியுள்ளவராய் இருப்பதால் எனக்கு வாழ்வளியும்." திபா. 119 : 40*

**இறைவேண்டல் :** ஆண்டவரே எங்கள் கடவுளே, இயேசு கிறிஸ்து எனும் உமது மகன் மூலமாக நல்ல குருவை எங்களுக்கு தந்து, அவருடைய சீடர்களாக அவரை பின்பற்ற அருள் செய்தீரே! அவரது போதனைகளை மனதினுள் நாட்டி, அவரது அடிச்சுவடுகளை பின்பற்றி, எங்களை ஒறுத்து, வெறுத்து, அவரது சிலுவையை அனுதின வாழ்க்கையில் சுமந்து நடக்கவும், கிறிஸ்துவை போல வாழவும், உண்மையான நம்பகத்தன்மையோடும், நேர்மையோடும் உம்மை பின்பற்றவும் அருள் புரிய வேண்டுமென்று, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

சீடத்துவம் என்ற வார்த்தை "Mathetes" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. ஆங்கிலத்தில் "Disciple" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இதன் பொருள் "மாணவர்" என்பதாகும். லத்தீன் மொழியில் "Discipulus" என்பதன் பொருள் கற்றுக் கொள்பவர் என்பதாகும். ஆகவே சீடன் என்பதற்கு மாணவர் என்றும், ஆசிரியரிடமிருந்து கற்றுக் கொள்பவர் என்றும் விளங்குகிறது.

நம் நாட்டில் குரு - சிஷ்ய முறை இருந்து வந்தது. குருவிடம் சிஷ்யன் அமர்ந்திருந்து கற்றுக் கொள்ளவேண்டும். திருமறையில் இயேசு கிறிஸ்துவும், தமது திருப்பணிவிடைகளை நிறைவேற்றுவதற்கு சீடர்களை ஏற்படுத்தி தம்மோடு இருக்கவும் தீய ஆவிகளைத் துரத்தவும் சான்று பகரவும் போதித்தார்.

தென் திருவிதாங்கூரில் Spek-இன் அருட்பணிகள் சுவாட்ஸ் ஐயர் வழியாக தரங்கம்பாடியில் நடைபெற்றது. பின்னர் திருச்சிராப்பள்ளியிலும் தொடர்ந்து பாளையங்கோட்டையிலும் நடைபெற்றது. அப்பகுதியைச் சார்ந்த சத்தியநாதன் என்பவர் சீடராகப் பின்தொடர்ந்து வந்தார். எனவே அவருக்கு 1772-ஆம் ஆண்டு சுவாட்ஸ் ஐயர் திருமுழுக்குக் கொடுத்தார். தொடர்ந்து சத்தியநாதன் மூலம் Spek-இன் பணிகள் திருவிதாங்கூர் வரை நடைபெற்றது.

1. தந்தையும் மைந்தரும் ஒருவரே என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் (யோ. 14:9)

   நாம் (தந்தையும் மைந்தரும்) ஒன்றாய் இருக்கிறது போல. (யோ. 17:21)

2. மைந்தரும் ஆவியரும் ஒருவரே கர்த்தரே ஆவியுமானர் (1கொரி. 3:17) குமாரனுடைய ஆவி (கலா. 4:6)

3. ஆவியரும் தந்தையரும் ஒருவரே இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி (ரோ. 8:1)

   அவர் தம்முடைய ஆவியை நமக்குத் தந்தருளினார் (1 யோ. 4:3)

எனவே தந்தை = மைந்தர் = ஆவியர் = ஒரே கடவுளை விண்ணகத்தில் 4, உயிரிகளும் 24 மூப்பர்களும் பாடி மாட்சிமைப் படுத்தினது போல மண்ணக மானிடமும் இணைந்து தூயவர், தூயவர், தூயவர் எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவர் இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவரும் இவரே என மும்முதற் கடவுளைப் பாடி மாட்சிமைப்படுத்துவோம்.

அருள்திரு. A. **மேஷாக்**





இப்போதெல்லாம் அறிக்கையிடுகின்றார்கள். பள்ளி கணிதப் பாடத்தில் infinity 00 என்ற எல்லையற்ற எண்ணைப் பற்றி நாம் படிக்கையில் அந்த எண்ணுடன் மற்றொரு எல்லையற்ற எண்ணைக் கூட்டினாலும் குறைத்தாலும் அஃது அந்த எண்ணாகவே இருக்கும் (00+00+00 = 00) என்று கணித இயல் கூறினால் நாம் ஏற்பது போல கடவுள்+கடவுள்+ கடவுள் = கடவுள் என்று இறையியல் கூறுவதையும் நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

நற்செய்தியின் பொருட்டு நாடுகடத்தப்பட்ட தூய யோவான் கடவுளின் நாளில் தூய ஆவியரால் ஆட்கொள்ளப்பட்டு திருக்காட்சி காண்கிறார் (வெளி. 1: 9 - 10) விண்ணக அரியணையில் மாட்சிமை நிறைந்தவராய் இறைவன் வீற்றிருக்கிறார் (வெளி. 4: 1 – 5) அரியணையைச் சுற்றிலும் படைப்பின் பிரதிநிதிகளாய் நான்கு வெவ்வேறு வடிவமுடைய உயிரிகள் இருந்தன. அவைகளைச் சுற்றிலும் மானிடப் பிரதிநிதிகளாக 24 மூப்பர்கள் ஆசனங்களின் வீற்றிருந்தனர். இவர்கள் "தூயவர், தூயவர் தூயவர்; எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டர் இருந்தவரும். இருக்கின்றவரும் வருகின்றவரும் இவரே" என மும்மைக் கடவுளை மும்மைப் பாடலுடன் போற்றி புகழ்ப் பாடலால் மாட்சிமைப்படுத்தினர். (வெளி 4: 6 - 11) இப்பாடல் நமக்குணர்த்தும் மூன்று உண்மைகளை சிந்திப்பது ஏற்புடையது.

### *1. மூவொரு கடவுள் இருந்தவர் :* (தி.வெளி 4 : 8)

மூவொரு கடவுள் தொடக்கத்தில் இருந்தவர் என்பதை இப்பாடல் நமக்கு உணர்த்துகின்றது. பொதுவாக பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கடவுள் தந்தையாகவும், புதிய ஏற்பாட்டுக் காலத்தில், கடவுள் மகனாகவும். இயேசு நாதரின் பரமேறுதலுக்குப் பின் கடவுள் தூய ஆவியராகவும் செயலாற்றுகின்றார் என்கின்ற எண்ணம் நிலவிவருகிறது. படைப்பாளராகிய மும்மைக் கடவுளின் தன்மையை நாம் புரிந்து கொள்கிறோம். தொடக்கத்தில் தந்தையாம் கடவுள் இருந்ததாகவும் நீர்த் திரள் மேல் தூய ஆவியாராகிய கடவுள் அசைந்தாடிக் கொண்டிருந்ததாகவும். உண்டாகுக! உண்டாகுக! என்று மைந்தராகிய கடவள் வார்த்தையாய்ச் செயல்பட்டதையும் காண இயலுகின்றது. (தொ.நூ. 1: 1 - 8) தூய யோவான் நற்செய்தியாளர் இதைத் தன் நற்செய்தியில் குறிப்பிடும்போது, தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடிருந்தது. அவ்வாக்குக் கடவுளாயிருந்தது. வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடிருந்தார் அனைத்தும் அவரால் உண்டாயின. உண்டானது எதுவும் அவராலன்றி உண்டாகவில்லை எனப் படைப்பில் லோகோஸ் (Logos) என்ற வாக்காய் இயேசுநாதர் செயல்பட்டார்

என்பதை விளக்குகின்றார். (யோ. 1 : 1 - 3) திருமுழுக்குநர் யோவான் ''எனக்கு பின் வருபவர் எனக்கு முன்னிருந்தவர்'' என இயேசுநாதர் தொடக்கம் முதல் இருக்கின்றார் என்ற உண்மையை எடுத்துரைக்கின்றார். யோவான் பிறந்து, ஆறு மாதத்திற்குப் பின்னர் தான் இயேசு பிறந்தார். ஆயினும் அவர் யோவானுக்கு முன்னிருந்தவர். கடவுள், ஆதிமுதல் இருக்கின்றவர் என்று அறிகிற அறிவு மகத்தானது. (யோ. 1:15) தூய யோவான் தந்தையரே தொடக்க முதல் இருக்கும் அவரை நீங்கள் அறிந்துள்ளீர்கள் எனவே உங்களுக்கு எழுதுகிறேன் எனப் பெருமையோடு கூறுகிறார். (1யோ. 2: 13,14), தந்தையும் மைந்தனும் ஆதிமுதல் இருக்கிறவர்கள் என்பதை திருமுழுக்குநர் யோவான் அறிந்து அறிக்கையிட்டார். அதையே அன்பின் சீடன் யோவானும் எடுத்துரைக்கிறார். ஆதிமுதல் இருக்கிறவர் என்ற அறிவு மட்டுமல்ல அவர் உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக இருக்கிறார் என்ற அறிவு அதைவிட மகத்தானது. தந்தை மைந்தன் தூய ஆவியாராக செயல்படும் கடவுள் முன்னிருந்தவர். நம்மைமுன் தெரிவு செய்தவர். நமக்காக உலகத் தோற்றம் முதல் அடிக்கப்பட்ட செம்மறி.

### 2. மூவொரு கடவுள் இருக்கின்றவர் : (தி.வெளி. 4 : 8)

மூவொரு கடவுள் வாழுகின்றவராய் உடனிருக்கிறார். இயேசுநாதர் சீடர்களுக்கு இறுதிக் கட்டளை கொடுக்கின்றார். நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள், தந்தை மைந்தன் தூய ஆவியாரின் திருப்பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்று கூறினார். நிகழ்கால நிகழ்வுகள் அனைத்திலும் வாழும் கடவுளின் உடனிருப்பை நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

உதாரணமாக, ஒரு கிறிஸ்தவர் பிரார்த்தனை செய்ய முழங்காலில் நிற்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த அனுபவத்தினை நாம் அறிந்து கொள்ள முற்படும்போது அவர் கடவுளுடன் உறவு கொள்கிறார். ஆனால் அதற்காக அவரது உள்ளத்தில் தூண்டுதல் அளிப்பவரும் கடவுளே என உணருகிறார். அதே நேரத்தில் கடவுளைப் பற்றித் தனக்கிருக்கும் அறிவும் உறவும் இயேசுகிறிஸ்து மூலமாகவே அவர் பெற்றுக் கொண்டார் என்று அவருக்குத் தெரியும். அதாவது ஜெபத்தின் வாயிலாக கடவுள் வழியாக அவர் எட்ட விரும்புவார். கடவுள் அதற்குத் துணை செய்பவர். வழியாக அமைபவரும் கடவுள் என்று அவர் கடவுளை மூன்று வகையாக





அனுபவிக்கிறார். இவ்வனுபவத்தை இறையியல் மொழியில் கடவுள் நிகழ்காலத்தில் மூவரில் ஒருவராகச் செயல்படுகிறார் என்று சொல்லலாம். ஆதித்திருச்சபையின் அனுபவம் இதற்கொத்ததாய் அமைந்திருந்தது. அவர்கள் யூத சமய நம்பிக்கையின்படி கடவுளை ஒருவராகவே வழிபட்டனர். இயேசு கிறிஸ்துவும் கடவுளைத் தந்தையென்று போதித்து கடவுளின் அன்பினை விளக்கினார். ஆனால் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் அவர் தங்களுடன் இருப்பதை சீடர்கள் அனுபவத்தில் உணர்ந்தனர். மேலும் ஆவியில் பல்வேறு ஆற்றல்களையும் ஈவுகளையும் திருச்சபைக்கு வழங்கியுள்ளதையும் அவர்கள் உணர்ந்தனர். இன்றும் நம் இறைவேண்டல்களில் ஆலய ஆராதனைகளால் வாழும் கடவுளின் மும்மை அனுபவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

### 3. மூவொரு கடவுள் வருகிறவர் : தி.வெளி 4 : 8

இயேசு நாதர் மீண்டும் வருவார், என்பது கிறிஸ்தவத்தின் அடித்தளமான நம்பிக்கை திருமறையில் பயன்படுத்தப்பட்டுள்ள மார நாதா (1 கொரி 16:22) என்பதன் பொருள் ''ஆண்டவரே வாரும்'' அல்லது இயேசு ஆண்டவரே வாரும் (வெளி 22:20) என்பதாகும். இயேசு நாதரின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருந்த அன்றைய கிறிஸ்தவர்களுக்கு மகிழ்வினையும் நம்பிக்கையினையும் கொடுக்கும் சொல்லாக இருந்ததால் இவ்வார்த்தையினை வேண்டுதலாகவும் பாடலாகவும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தினர். மூன்று நிலைகளில் இறைவனின் வருகையை நாம் திருமறையின் அடிப்படையில் எதிர் நோக்கலாம்.

1. அவரை ஏற்றுக் கொள்ளும் அடியவர் உள்ளங்களில் ஆண்டவரும் அரசருமாய் ஆவியார் வருகிறார். (லூக். 17:21)

2. ஒருமனப்பட்டு இறைவனின் திருப்பெயரில் கூடுமிடமெல்லாம் இறையுறவைத் தர இறைவன் வருகின்றார். (மத். 12:28, 18:20)

3. உலக வரலாறு என்றும் ஓடிக் கொண்டிருக்காது. கடவுளின் நோக்கம் நிறைவேறும் வகையில் வரலாற்றில் குறுக்கீடு செய்த அவர் மீண்டும் வருவார் (வெளி. 22:12). அவ்வருகை நடுத்தீர்ப்போடு இணைக்கப்பட்டுள்ளது. அகரமும், னகரமும். முதலும், இறுதியும் தொடக்கமும் முடிவும் நானே (வெளி. 22:12) தூய ஆவியாரும் ஆட்டுக்குட்டியாரின் மணமகளும் சேர்ந்து வருக வருக என்கிறார்கள் (வெளி. 22:17) என்ற திருவார்த்தைகள் மும்முதற்கடவுளின் வருகையைத் தெளிவுபடுத்துகின்றது. ஆட்டுக் குட்டியின் மணமகளாகிய திருச்சபை வருக வருக என்று இறைவனை வரவேற்க ஆயத்தமாய் ஆவல் கொள்கின்றோமா அல்லது தயக்கம் காட்டுகின்றோமா?

சாதனையாளரிடம் உங்கள் உயர்வுக்குக் காரணம் என்ன என்று கேட்டபொழுது அவர் சொன்ன பதில் ''நான் எப்பொழுதுமே பிறரிடம் உள்ள நல்ல பண்புகளை மட்டுமே பார்ப்பேன்'' என்றாராம். ஆனால் ஒரு தாலந்து பெற்றவர்?

குறைச் சொல்லுதல் சர்வதேசக் கெட்ட குணங்களில் ஒன்றாகும். தன் தவறை மறைக்க, பிறர் மீது போடும் பழியே குறை சொல்லுதல் ஆகும். சிலர் முழுக்க முழுக்க தங்கத்தால் உருவாக்கப்பட்ட தங்க தேசத்தில் வாழ நேர்ந்தாலும் கூட சே.......சே.... எங்கே பார்த்தாலும் மஞ்சளா இருக்கே என குறை சொல்வார்கள் 'தன் முதுகு தனக்குத் தெரியாது' என்பது போல் பலரும் தன்னுடைய தவறுகளை உணருவதில்லை. ஆதாமிடம் இறைவன் 'ஏன் இதைச் செய்தாய்' என்றபொழுது (ஆதி. 3:12) என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த பெண், அம்மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள் எனக் குறையைத் தன் மனைவி மீது சுமத்துகிறான். பொதுவாக, ''எதிலும் நிறைவு காணாதவர்கள், தனக்குத் தான் எல்லாம் தெரியும் என நினைப்பவர்கள். தம் குறையை மறைக்க நினைப்பவர்கள், அதிகாரத் தோரணை கொண்டவர்கள், பழிவாங்கும் எண்ணம் கொண்டவர்கள் பிறர் மீது அன்பில்லாதவர்கள் பிறரை, குறைசொல்லிக் கொண்டேயிருப்பார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து, நாம் யாரையும் தீர்ப்பிடக் கூடாது என்று (மத். 7:1) தெளிவுப்படுத்துகிறார். ஒரு தாலந்தைப் பெற்றவன் இதற்கு மாறாக, எஜமான் மீது குற்றம் சுமத்தி விட்டுத் தப்பிக்க நினைக்கிறான். நாம் இவனைப் போலச் செயல்படக் கூடாது. சீடன் ஒருவன் தம் குருவிடம் ஆசி பெற வேகமாகச் சென்றான். வழியில் துறவி ஒருவர் அவனை இடைமறித்து, 'உன் குருவுக்கு ஒன்றும் தெரியாது, அவர் ஒரு முட்டாள். அவரிடம் ஒரு அற்புதமும் கிடையாது' அப்படிப்பட்ட அவரை ஏன் நீ குருவாய் ஏற்றுக் கொண்டாய்? சீடன் சொன்னான் ''அவரிடம் அற்புதங்களுக்கெல்லாம் மேல் அற்புதம் இருக்கிறது அது என்னவெனில் அவர் யாரையும் குறை சொல்லமாட்டார்'' எனவே நான் அவரைக் குருவாய் ஏற்றுக்கொண்டேன் என்றானாம்.

### 2. எவரையும் தவறாய் மதிப்பிடக்கூடாது : மத்தேயு 25: 24

''.................... நீர் கடின உள்ளத்தினர்............................''

அவனா, ரொம்ப ரொம்ப மோசம் என்று நல்லவரையும் தவறாக மதிப்பிடுவது நமது சமூகத்தின் அவல நிலை. மீன் வகைகளில் சுறாமீன் என்றொரு வகை உண்டு, பார்ப்பதற்கு அழகாகவே இருக்கும். கடலில் வாழும் சிறிய வகை மீன்கள், இந்தச் சுறா மீனைப் பார்த்து, ரொம்ப நல்லவங்க என்று நினைத்து அருகில் வரும். இதையே வாய்ப்பாய்ப்





### 2. பிழையற்றிருப்போர் : தீத். 2 : 15

நீ இவை பற்றிப் பேசு; முழு அதிகாரத்தோடும் அறிவுறுத்தி கடிந்துகொள், யாரும் உன்னைத் தாழ்வாக மதிப்பிட இடமளிக்காதே.

திருச்சபையின் பல்வேறு குழுக்களின் கடமை நற்கிரியை ஆகும். இக்கடிதம் நற்கிரியைகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்கிறது. நற்கிரியைகளின் பொருள் தேவ கருணையும், கிருபையுமே. இவைகள் மீட்பின் அடிப்படை. நற்கிரியைகளுக்கு நாம் மாதிரியாக வேண்டும். சகலவித நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். முதிர்வயதுள்ள ஆண்கள், பெண்கள், இளம்பெண்கள், இளைஞர்கள். தாய்மார்கள். வேலைக்காரர்கள் கவனிக்கப்படவேண்டும். கடவுள் தங்களை வைத்திருக்கும் இடங்களில் நேர்மையுடன் நடந்து கொள்ளவேண்டும்.

இஸ்ரயேல் மக்கள் பிழையற்று வாழ்வதற்கு ஆண்டவர் மோசேயை நோக்கி, கடவுள் தந்த கட்டளைகளை அறிவிக்க அறிவுறுத்தினார். (வி.ப 20: 1-17). இயேசு கிறிஸ்து, மக்கள் கூட்டத்தைக் கண்டு. மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர்கள் அவரருகே வந்தார்கள். அப்போது பிழையற்று வாழ்வதற்கு மத். 5ஆம் அதிகாரத்தில் காண்கிறபடி போதித்தார்.

கி.பி. 376ஆம் ஆண்டில் அலெக்சாண்டிரியாவில் பிறந்த சிரில், அலெக்சாண்டிரியாவிலேயே உத்தம சீடராக, தீமைகளை அகற்றும் தொண்டராகச் செயல்பட்டார். திருமறையைக் கற்று அறிந்தார். புனித சிரிலாக வாழ்க்கையை ஆரம்பித்தார். கி.பி. 428-ஆம் ஆண்டில் குருவாக நியமிக்கப்பட்ட நெஸ்டோரியஸ் தவறான போதனைகளை அறிவித்து வந்தார். அதை புனித சிறில் கண்டித்தார். கிபி 31-ஆம் ஆண்டு பொதுச் சங்கம் ஒன்றைக் கூட்டி நெஸ்டோரியசை திருச்சபைக்குப் புறம்பாக்கினார். இவ்வாறு பிழையற்று வாழ்ந்து, பிழை செய்தோரைத் தண்டித்து உணர்த்தி நற்பணியாற்றினார். நாமும் திருச்சபையின் தவறுகளைக் களைந்து பிறரை கிறிஸ்துவண்டை சேர்க்கப் பிழையற்றிருப்போம்.

### 3. பிறருக்காய் வாழ்வோர் : லூக். 14 : 26

என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள் ஆகியோரையும், ஏன் தம் உயிரையுமே என்னை விட மேலாகக் கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது.

கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ்வது பாக்கியமான வாழ்க்கை. ஆனால் அதற்கு சில கடினப்பாடுகள் உண்டு. அர்ப்பணம் தேவை. அர்ப்பணம் என்பது வேண்டாத ஒன்றை இழப்பது அல்ல. மிகவும் தேவை எனத் தோன்றும் எதையும் விட்டு விடத் துணிவது, உறவுகளையும், உடமைகளையும், அர்ப்பணம் (பிறருக்காய்) செய்வது ஆகும். எந்தச்

சூழ்நிலையிலும், அலைகடல் நடுவில் அலறிய சீடர்களுக்கு ஏற்பட்ட நிலைமையைப் போன்ற அனுபவங்கள் வந்தாலும், இறைமகன் மட்டும் நம்முடன் இருந்தால் எதையும் எதிர் கொள்ள முடியும் என்ற விசுவாசம் இருப்பவர்கள் பிறருக்காய் வாழ்வார்கள்.

இயேசு கிறிஸ்து தர விரும்புவது வங்கி கணக்கல்ல, வேலை உத்தரவாதங்களல்ல, சுகவீனமே இல்லாத தூதர் வாழ்வல்ல, ஒரு சிலுவை, அதுவும் கிறிஸ்துவின் சிலுவையல்ல, அவரவர் சிலுவை. இயேசு கிறிஸ்து பிறரிடம் அன்பு செலுத்துவதைப் பற்றிக் கூறும்போது ''ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்'' என்றார். (யோவா.13:34-35)

பவுலடியார் கொரிந்து நகரிலுள்ள கடவுளின் திருச்சபைக்கு எழுதிய திருமுகத்தில் ''உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல, கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே உங்கள் உடலால் கடவுளுக்கு பெருமை சேருங்கள்'' (Iகொரி. 6:19 20) என்று கூறுகிறார்.

1878-ஆம் ஆண்டு வேல்ஸ் நாட்டில் பிறந்தவர் ஈவான் இராபர்ட்ஸ், சிறுவயதிலேயே கடவுளின் வழி நடத்துதலை உணர்ந்தவராக, ஆத்துமத் தாகம் உடையவராக, தன்னுடைய இறை அனுபவத்தை வாலிபர்களிடம் பகிர்ந்து கொண்டார். சிறு குழுக்கள் மூலமாக சுவிசேஷத்தை எடுத்துரைத்தார். தனது 27-ஆம் வயதில் வேல்ஸ் நாட்டில் மாபெரும் ஆன்மிகப் புரட்சியை ஏற்படுத்தினார். பல்லாயிரக்கணக்கானோர் மனந்திரும்பினர். பத்திரிக்கைகளில் இம்மாபெரும் எழுப்புதலை வெளியிட்டனர். 13 ஆண்டுகள் இடைவிடாது ஜெபித்தும், உழைத்தும், ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். இவர் திருமணம் ஆகாதவராக பிறருக்காய் வாழ்ந்து. கிறிஸ்துவுக்காய் அர்ப்பணித்தார்.

கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் கிறிஸ்தவ சீடத்துவத்தில் தொடங்குகிறது. ஓர் உண்மையான சீடர் என்பவர் பின்பற்றுவோராய், பிழையற்றிருப்போராய், பிறருக்காய் வாழ்வோராய் காணப்படுபவர்களே. நாமும் கடவுள் சித்தத்தை நிறைவேற்றி வாழ்வோம். கிறிஸ்தவ சீடத்துவம் வளரட்டும்.

அருள்திரு. M.P. **விஜயகுமார்**





கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கிறது. அம்பேத்கர், அண்ணல் காந்தியடிகள் போன்றோர் ஆலயத்திற்கு வந்த பிறகும் ஒரு கிறிஸ்தவராய் மாறவில்லை. ஏன்? போதிக்கும் கிறிஸ்தவம். வாழ்ந்து காட்டவில்லை, இயேசுவின் போதனையைச் சொன்னார்கள். ஆனால் வாழும் இயேசுவைத் தன்னில் காட்டவில்லை. ஆக, நாமும் பொறுப்பாண்மையில் தவறுகிறோம். நம்மில் நோக்கமும் மாறுகிறது என்பதனை இன்று ஒரு (1) தாலந்து பெற்ற மனிதனை அடிப்படையாக கொண்டு சிந்தனை செய்வோம்.

## கிறிஸ்தவப் பொறுப்பாண்மை :

கிறிஸ்தவ பொறுப்பாண்மை என்பது ஒரு கிறிஸ்தவப் பணியாளர் கிறிஸ்துவுக்காக நிறைவேற்ற வேண்டிய பணிகளாகவும், கிறிஸ்துவின் சீடராகக் கிறிஸ்துவுக்கு நம்பிக்கைக்குரியவராயிருந்து அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவருக்காய்ப் பணி செய்வதும் எனப் புரிந்து கொள்ளலாம். கிறிஸ்தவ பொறுப்பாண்மையில் கிறிஸ்தவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிர்வாகத்துக்கு அல்லது பொருள்களுக்குக் கணக்குக் கொடுத்தல் வேண்டும் எனவே பவுலடியார் ''என்னை மதிப்பீட்டுத் தீர்ப்பளிப்பவர் ஆண்டவரே'' (I கொரி 4: 15) என உறுதி தருகிறார். ஆனால் இன்றைய சிந்தனை பகுதியில் ஒரு தாலந்தை பெற்றவர் தம் பொறுப்பாண்மையில் தரும் பதிலும், நமக்கு அவர் வழியாய் கற்று தரும் சிந்தனைகளுமே இந்த அருளுரையின் மையமாகும். (**தாலந்து:** பொதுவாக தாலந்து என்றால் திறமைகள் (ஓவியம், படிப்பு etc ) என்ற புரிதல் உண்டு. ஆனால் இறையரசுக்கான 'பண்புகள்' (நீதி, அன்பு, உண்மை, பகிர்வு etc ) என புரிவது தொடர் சிந்தனைக்கு வலு சேர்க்கும்)

**<u>பொறுப்பாண்மையில் சிறந்து விளங்காத ஒரு தாலந்தைப் பெற்றவன் நமக்குக் கற்றுத் தரும் மூன்று உண்மைகள்:</u>**

### 1. எவரையும் குறை கூறக் கூடாது : மத். 25 : 24

................ நீர் விதைக்காத இடத்தில் அறுவடை செய்கிறவர்..........

ஐந்து தாலந்து பெற்றவரும், இரண்டு தாலந்தைப் பெற்றவரும் எஜமானின் பாராட்டைப் பெற்றபொழுது ஒரு தாலந்தைப் பெற்ற மனிதர் மட்டும் தம்மிடம் உள்ள குறையை உணராமல், தம் குறையை மறைக்க எஜமான் மீதே குறை கூறுகிறான். பொறுப்பாண்மையில் தவறிவிட்டு தன்னைக் காப்பாற்ற, பிறர் மீது குற்றம் சுமத்தும் இவர் மிக மோசமான மனிதரில் ஒருவர். விதைக்காத இடத்தில் அறுவடை செய்கிறவர் என்று தம் எஜமானை சொல்வதின் வழியாய், மறைமுகமாக தம் எஜமானை 'மகா பெரிய கஞ்சன்' என்பது போல் பேசுகிறார். பிறரைக் கஞ்சன் எனச் சொல்ல இவருக்கு என்ன அருகதை இருக்கிறது? பெஞ்சமின் ப்ராங்களின் என்ற

**06-07-2014** பொறுப்பாண்மை ஞாயிறு

# கிறிஸ்தவப் பொறுப்பாண்மை

## நம்பகத் தன்மையுடனும், நோக்கத்துடனும் வளங்களைப் பயன்படுத்துதல்.

## CHRISTIAN STEWARDSHIP : FAITHFUL AND PURPOSEFUL USE OF RESOURCES

மலா. 3 : 6-18 2கொரி. 8 : 1-9

திபா. 147 : 1-11 மத். 25 : 14-30

*"ஒரு தாலந்தைப் பெற்றுக்கொண்டவரும் அவரையணுகி ஐயா, நீர் கடின உள்ளத்தினர்; நீர் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவர்; நீர் தூவாத இடத்திலும் விளைச்சலைச் சேகரிப்பவர் என்பதை அறிவேன்." மத். 25 : 24*

**இறைவேண்டல் :** நித்திய கடவுளே, உம் கரத்தின் கிரியைகளால் எம் கண்களைத் திறந்தருளும். உம் கரத்தின் தொடுதலினால் இவ்வுலகம் தூய்மையாக்கப்பட்டிருக்கிறது. எங்களைச் சுற்றி காணப்படும் நம்பிக்கையான பொறுப்பாளர்கள் போன்ற ஈவுகளை மனதில் வைத்து போற்றவும், ஆசீர்வாதங்களை எங்கள் சகோதர சகோதரிகளோடு பகிரவும் உம் பிரசன்னத்தில் வாழ்வின் மகிழ்வை அனுபவிக்கவும் உதவியருளும். உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக இப்போதும் எப்போதும் வாழ்ந்து அரசாளுகிற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

நம் கண்களைத் தம் அழகால் கவர்வது தேயிலைத் தோட்டம். கண்களை மட்டுமா? நம் உள்ளத்தையும் களவாடிக் கொள்ளும். எங்கிருந்து பார்த்தாலும் அத்தனையும் பூஞ்சோலை போல் காட்சியளிக்கும் இவ்வளவு அழகான தேயிலைத் தோட்டத்தின் பின்னணியில் பொறுப்பாய் இருப்பது யார் தெரியுமா? **சில்வர் ஓக்** என்ற மரம். தேயிலைத் தோட்டத்தின் இடையில் நெடுமரம் போல் காட்சியளிக்கும். தேயிலைத் தோட்டத்தை ரசிப்பதற்கு இடைஞ்சலாய் இருப்பது போல் இருக்கும் இம்மரம், உண்மையிலே மிகப் பொறுப்பாய் மழை நேரங்களில் தம் வேர்களில் வெள்ளத்தைச் சேகரித்து வைத்துக் கொண்டு, வெயில் நேரங்களில் தேயிலைச் செடிக்குத் தேவையான தண்ணீரைச் சேகரித்து வைக்கும். அதே வேளையில் வெயில் காலங்களில் தண்ணீரைக் கொடுத்தும் மிகப் பொறுப்பாய்ச் செயல்படுவதால் தேயிலைத் தோட்டம் அழகு பெறுகிறது. நாம் **சில்வர் ஓக்** மரத்தைப் போல் சிறப்பான கடமைகளை நிறைவேற்ற ஆண்டவர் எதிர்பார்க்கிறார். ஆனால் சிலர் தம் கடமையில் (5,2 தாலந்து பெற்றவர்கள்) சிறப்பாகவும் சிலர் பொறுப்பற்றத் தன்மையிலும் (1 தாலந்து பெற்றவன்) செயல்படுவதால் இன்றைய கிறிஸ்தவப் பொறுப்பாண்மை பல



**29-06-2014**

# ஒன்றித்துப் பகிர்ந்து வளரும் சமூகம்

## COMMUNITY OF SHARING AND GROWING TOGETHER

வி.ப. 36 : 1-7 திப. 4 : 32-37

திபா. 136 : 1-9, 23-26 மாற். 8 : 1-10

*"நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாக கருதவில்லை." திப. 4 : 32*

**இறைவேண்டல் :** எல்லா சந்ததிகளின் கடவுளே! எங்களை பற்றுறுதியின் சமூகங்களாக இருப்பதற்கு அழைத்து பிரித்தெடுத்திருக்கிறீர். தொடர்ந்து இவ்வழைப்பில் நிலை கொண்டிருப்பதற்கு எங்களை தகுதிப்படுத்தும். எங்களது சமூகங்கள் அவைகளின் உறுப்பினர்களுக்கு ஓர் அடையாளத்தை கொடுக்கவும், ஒருவருக்கொருவர் சொந்தங்கள் என்ற உணர்வில் வாழவும் அருள் புரிவீராக. அவர்களுக்கு புகலிடம் கொடுத்து, பிறரை ஏற்றுக்கொள்ளவும், மேன்மையாக அங்கீகரிக்கவும் அதன் மூலம் பிரிவினையின் அனைத்து தடைகளை உடைத்து, மன்னிப்பை, நீதியை, அமைதியை கொண்டாடும் சமூகத்தை கட்டவும் அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.

பகிர்தலும் ஒன்றித்து வளருதலும் கிறிஸ்தவ சமூகத்தின் இரண்டு கண்கள், நாணயத்தின் இரு பக்கங்கள் எனலாம். பகிர்ந்து வாழும் சமூகம் வளரும் என்பது நிச்சயம். இனம், இடம். மொழி. சமயம், கலாச்சாரம் எனும் பிரிவுகள் மானிடரைப் பிளவுப் படுத்துகின்றன. ஒன்றித்த வளர்ச்சிக்கு தடைக்கற்களாக நிற்கின்றன.

மனித நேயம் தன்னலப்போக்கினால் மறைந்து போகிறதோ என்ற அச்சம் ஒருபுறம் இருப்பினும் ஆங்காங்கே நடைபெறும் மனிதநேயச் செயல்கள் சமூகத்தின் வளர்ச்சிக்குத் துணையாக இருக்கின்றன.

கார்கில் போரில் இந்திய, பாகிஸ்தானிய இராணுவ வீரர்கள் ஆயிரக்கணக்கில் உயிரிழந்தனர். இரு நாடுகளுக்கு இடையே வர்த்தக உறவுகள், போக்குவரத்து நிறுத்தப்பட்டன. அதுவரை உடன்பிறப்பாய் வாழந்த இருநாட்டினரும் ஒருவரை ஒருவர் பகைத்தனர். இவ்வேளையில் போதிய மருத்துவ வசதியின்றி இருதயநோயால் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த ஒரு பாகிஸ்தானிய சிறுமியுடன், அவரது பெற்றோர் பல்வேறு

தடைகளைக் கடந்து, இந்தியாவின் மும்பை மருத்துவமனைக்கு வந்து இந்திய மருத்துவர்களின் உதவியுடன் அச்சிறுமிக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்தனர். மூளைச் செயலிழப்பு நோயினால் சற்று நேரத்தில் மரிக்க இருந்த இந்திய சிறுவன் ஒருவரின் இருதயம் அச்சிறுமிக்குக்குப் பொருத்தப்பட்டது. அவரும் அவரது பெற்றோரும் முகமலர்ச்சியுடனும் நன்றி உணர்வோடும் பாகிஸ்தானுக்குத் திரும்பிச் சென்றனர். போரின் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்த செய்தித்தாள்கள், இந்தியச் சிறுவனின் இதயத்தைப் பெற்றுச் செல்கின்ற இந்த இஸ்லாமிய சிறுமி ஒட்டுமொத்த இந்தியர்களின் இதய பூர்வமான உணர்வுகளை, பாகிஸ்தானிய அரசுக்கும் மக்களுக்கும் கொண்டு செல்வதாகச் செய்திகளை வெளியிட்டன.

திருமறை பகிர்ந்து வாழ்வதால் உருவாகும் வளர்ச்சியைத் தெளிவாகப் போதிக்கிறது. தொடக்கக் காலத் திருச்சபை மக்களின் பகிர்தல் திருச்சபையில், சமுதாயத்தில் பெரிய மாற்றங்களை, வளர்ச்சியைத் தந்தது வரலாற்று உண்மையன்றோ. ஒன்றித்து வளர துணைபுரியும் பகிரும் சமூகத்தின் தன்மைகள் குறித்து இறைவாக்கு சார்ந்து சிந்திப்போம்.

## 1. வளங்களைப் பகிர்தல்

மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை (தி.பா. 24:1). இன்று ஆண்டவர் படைத்துள்ள வளங்களின் பெரும்பான்மை குறைந்த எண்ணிக்கை கொண்டவர்களிடம் உள்ளது. அவைகள் பகிர்ந்தளிக்கப்படும்போது சமுதாயத்தில் வளர்ச்சி ஏற்படும். தொடக்கக் காலத் திருச்சபை மக்கள் அதைச் செய்தனர் (தி.ப. 4:35). ஒருவருக்கும் ஒன்றும் குறைவாக இருக்கவில்லை. பவுல் கலாத்தியா நாட்டு சபைக்கு இதனைத் திட்டமாக எழுதுகிறார் (கலாத். 6:2,6) தன்னிடமிருந்த 5 அப்பங்களையும், 2 மீன்களையும் சிறுவன் பகிரக் கொடுக்க முன்வந்தபோது உண்டான நிறைவை (யோவான் 6:1 - 12) திருமறை தெளிவாகக் கற்றுத் தருகிறது. வளங்களைப் பகிர்தல் ஒன்றித்த வளர்ச்சிக்குத் துணைபுரிகிறது.

## 2. உறவுகளைப் பகிர்தல் :

உறவுகளின் முடிச்சுதான் மனித வாழ்க்கை. எல்லா உறவுகளுக்கும் அடிப்படை அன்பு. அன்பின் நிறைவுத்தான் தியாகமாக, பகிர்வாக பிரதிபலிக்கிறது. கடவுளுக்கும் இஸ்ரவேலருக்கும் இடையே நிலவிய உடன்படிக்கை அன்பின் வெளிப்பாடாகும். கடவுளிடம் அன்பு செலுத்தும் இறைமக்கள் இறை சாயலில் படைக்கப்பட்ட மனிதர் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்பதே இறைக் கட்டளை ( யோவான் 4: 7,20, 5:2). ஆண்டவரிடம் பற்றுறவுடன் வாழ்வோர் எந்தச் சூழ்நிலையிலும்





பதறுவதில்லை; கலங்குவதில்லை. காரணம் அவர்கள் உறவு ஆண்டவருடன் ஆழமாக உள்ளது. (யோவான் 15:5) இவர்கள் மற்றவர்களுடைய வளர்ச்சிக்கும் அஸ்திபாரமாக இருக்க முடியும்.

## 3. பணிகளைப் பகிர்தல்

பணிகளைப் பகிர்ந்து செய்யும்போது பொறுப்புகள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. பணிச்சுமை இலகுவாகிறது. பணிகள் விரைவில் நிறைவேற்றப்படுகின்றன. அன்பும் ஐக்கியமும் உருவாகிறது. சீனாய் மலையில் நாற்பது நாள்கள் ஆண்டவருடன் தனித்திருந்து கட்டளைபெற்ற மோசே, திருத்தலப் பணிவிடையைச் செய்ய மக்களுக்கு ஆலோசனை கூறினார். நடந்தது என்ன? தாராள மனதுடையோர், திறன்மிக்கவர்கள், உள்ளார்வமிக்கோர் அனைவரும் ஆண்டவருக்குத் தாராளமான காணிக்கைகளைக் கொண்டுவந்தனர் (வி. ப. 35: 4 29). அறிவுக் கூர்மையும், தொழில் திறமையும் பெற்றிருந்த கலைஞர் யாவரும் வேலை செய்தனர் (வி.ப. 36:1). ஒவ்வொருவரும் தங்கள் திறமை, தாலந்துகளுக்கு ஏற்ப பணிகளைப் பகிர்ந்து கொண்டபோது நிறைவு ஏற்பட்டது (வி.ப. 36: 6,7)

## 4. வரங்களைப் பகிர்தல்

ஆண்டவர் ஒவ்வொரு மனிதருக்கும் விதவிதமாக வரங்களை அளிக்கிறார். வரங்களில் வித்தியாசம் உண்டு ( கொரி. 12:4). பொது நன்மைக்காகவே இந்த வரங்கள் அளிக்கப்பட்டிருக்கிறது ( கொரி. 12:7). ஒவ்வொருவரும் தாங்கள் பெற்றுள்ள வரங்களைப் பிறர் நன்மைக்காகப் பயன்படுத்த முன்வரும்போது சமுதாயத்தில் வளர்ச்சி ஏற்படுகிறது.

இயேசு பல்வேறு வரங்களைத் தம் அடியவர்களுக்கு வழங்கினார். அவரில் நம்பிக்கை கொள்வோர் அனைவருக்கும் வழங்கி வருகிறார் (மத். 16: 17,18). இவை பகிர்ந்து கொள்ளப்படும்போது ஒன்றுபட்ட வளமான சமூகம் உருவாகிறது.

திருச்சபை கடவுளால் அழைக்கபட்ட சமூகம். உலக மயமாதல், நவீனமயமாதல், இயந்திரமயமாதல் போன்ற யுக்திகள் ஏழைகளை ஏழைகளாகவும், செல்வந்தர்களை இன்னும் கோடீஸ்வரர்களாகவும் மாற்றும் சூழலில் இறைமக்கள் திருச்சபையினை ஒரு பகிரும் சமூகமாக உருவாக்க தங்கள் அழைப்பினை உறுதி செய்து இறைப்பெயருக்கு மாட்சிமை அளிப்பது சிறப்பாக அமையும். Charity begins at home என்பதற்கிணங்க நம் இல்லம் என்னும் சிறிய அமைப்பில் பகிர்ந்து வாழும் சூழ்நிலைகளை உருவாக்கினால் பரந்த அளவிலும் அதனைச் செயல்படுத்த அடித்தளமாக அமையும்.

அருள்திரு. V. **ஜாண்சன் கில்பட்**

இறைமக்களாக்கும் இறைப்பணியாற்றிடவே அழைப்பு கொடுக்கப்படுகிறது. மீன்களைப் பிடித்தவர்களை மனிதரைப் பிடிக்கப் பணியாற்ற அழைப்பு தகுதியினால் தரப்படும் ஒன்று அல்ல, அது கடவுள் அருளினால் தரப்படும் ஒன்று. அழைப்பு இன்பமாய் வாழ அல்ல வோன் உறாஃபா கூறுவதுபோன்று ஒருவனை, கிறிஸ்து அழைக்கும்போது நீ வந்து உன் உயிரைக் கொடு என்கிறார். அதாவது துன்புறும் மக்களின் பிரதிநிதியாக நிற்க துன்புறும் மக்களின் தலைவராய் நின்று அவர்தம் வாழ்விற்காய்க் குரல் கொடுக்கத் துன்புறும் மக்களுக்காய்த் துன்புறும் வேளையிலும் அதை இன்பமாய் ஏற்றிட அனுப்பப்படுதலே அழைப்பு ஆகும்.

யோசு 1:2 இல் இறைவன் யோசுவாவை மக்கள் கூட்டத்திலிருந்து மக்களுக்காக நிற்க அழைக்கிறார். இஸ்ரவேல் மக்களின் விடுதலைப் பயணத்தில் மக்கள் பிரதிநிதியாகவும், மக்கள் தலைவராகவும், மட்டுமல்ல மக்களுடைய விடுதலைப் பாதையில் இறைத்தூதராக நின்று செயல்பட அழைப்பு கொடுக்கப்படுகிறது. இது சவால் நிறைந்த பணி. அரசுகளின் அதிகார ஆற்றல் சூழலிலும் மக்களின் எதிர்ப்புச் சூழலிலும் இறைவன் தரும் ஆற்றல் அறிவு, அதிகாரத்தை மையமாகக் கொண்டு இறைதூதராக நின்று மக்களுக்குத் தொண்டாற்றவே அனுப்பப்படுகிறார். 1பேதுரு 2:9ல் திருதூதுவர்கள் இறைவனால் அழைக்கப்பட்டு இறைவனின் வியத்தகு செயல்களை, மேன்மைகளை அறிவிக்கவேண்டியவர்கள் இங்கே திருத்தூதர் (அப்போஸ்தலர்) யார்? என்கிற கேள்விக்குத் தூய பேதுரு தரும் பதில்

1. தேர்ந்தெடுக்கப்பட்டவர்
2. குருக்கள் (ஆசாரியர்)
3. தூய மக்களினத்தினர்
4. கிறிஸ்துவின் உரிமைச் சொத்தான மக்கள்

1 பேதுரு 2:10ல் சொல்லப்பட்டுள்ள, முன்பு நீங்கள் ஒரு மக்களினமாய் இருக்கவில்லை இப்பொழுது மக்களாக இருக்கிறீர்கள் என்ற வாசகம் திருவிதாங்கூர் அடக்குமுறையைச் சிந்திக்கத் தூண்டுகிறது. நம் முன்னவர்கள் சாதிய கொடுமைகளால் தீண்டத்தகாத அசுத்தர்களாகவும் இறைவனை வழிபடத் தகுதியற்றவர்களாக, உரிமையற்றவர்களாக, அடகு முறையாலும் அடக்கு முறையாலும் அனுபவித்த இன்னல்களுக்கு அளவே இல்லை. இன்று இறைவன் நம்மைத் தம் திருத்தூதர்களை அனுப்பி, தெரிந்தெடுத்துத் தூயமக்களினமாக, குருக்களாக்க, தம் உரிமை சொத்தாக்கி இருக்கிறார். இன்று இரக்கம் பெற்றவர்கள் மட்டுமல்ல இரக்கம் காட்டவேண்டிய உயரங்களில் நிறுத்தியிருக்கிறார் நம் கடவுள். நல்லதலைமுறைகள் மலர தாழ்மையிலிருந்த நம்மை இப்படியாக அழைத்து திருத்தூதராக்கியிருக்கிறார். எதற்காகவென்றால் மாற். 3:14ன் படி அவருடன் இருக்க, அவருக்காக நடக்க அவருக்காகப் பேச இங்கே





பயன்படுத்தி, சிறிய வகை மீன்களை, சுறா மீன்கள் தமக்கு இரையாக்கிக் கொள்ளும். அதே வேளையில், டால்பின் வகை மீன்கள் அப்படியல்ல, தோற்றத்தில் அடாவடித்தனமாய் இருந்தாலும் மிகவும் சாதுவானவைகள், மீன்கள் என்ன, நமது குழந்தைகள் கூட டால்பின் வகை மீன்களுடன் விளையாட முடியும். இங்கு ஒரு தாலந்தைப் பெற்றவன், எஜமானைத் தவறாய் மதிப்பிடுகிறான். 5, 2 தாலந்து பெற்றவர்களுக்கு மிகுந்த உயர்வையும், சந்தோஷத்தையும் (25: 21, 23) கொடுத்த எஜமான் பிறரின் உழைப்பைப் புரிந்து கொள்பவர், பிறரின் கஷ்டத்தைப் புரிபவர், தாராளமாய்க் கொடுப்பவர். ஆனால் ஒரு தாலந்தைப் பெற்றவனோ எஜமானனைக் கடின உள்ளத்தினராகப் பார்க்கிறான். ஒரு வள்ளலைக் கொடியவராகப் பார்க்கிறான், நல்லவரை அநீதியாளராகப் பார்க்கிறான். ஒரு பெண்ணை (யோவா. 8:4) யூதச் சமூகம் குற்றவாளி எனச் சுட்டியபோது, சொன்னவர்களே குற்றவாளியாய்த் தலை குனிய செய்தது, இயேசுவின் பதில். 'எவரையும் தவறாய் மதிப்பிடாதே' என்பதும் உண்மைதானே.

எப்பொழுதும், பிறரைக் குற்றவாளி என்று சொல்வது எளிது. பிறரை ஒரு விரல் சுட்டிக்காட்டுகிறது என்றால், உன்னை நான்கு விரல்கள் சுட்டிக்காட்டுகிறது. பிறரைப் பற்றி ஒரு முறை சொல்லுமுன், நான்குமுறை உன்னைக் குறித்து யோசி. எவரையும் அற்பமாய் எண்ணாதே சிறு துரும்பும் பல் குத்த உதவும். தாய்லாந்தில், ஒரு நிர்ப்பந்தமான சூழ்நிலை காரணமாக, ஒரு களிமண் சிலையை (புத்தர்) இடம் மாற்றினர். களிமண் சிலை தானே இதற்கு போய் எதற்கு இவ்வளவு பாதுகாப்பு, செலவு எனப் பலர் பேசினர். ஆனால் பொறுப்பாளர்களோ, மிகுந்த பய பக்தியுடன், ஒரு லாரியில் வைத்துக் கொண்டு சென்றனர். ஆனால் பாதையில் மழை கொட்ட, பொறுப்பாளர்கள், களிமண் சிலையை மழையில் இருந்து காப்பாற்ற முடியாமல் திணறினர். மழையில் களிமண் சிலை கரையத் துவங்கியது. பொறுப்பாளர்களின் உள்ளமும் கரைந்தது. ஆனால் ஆச்சர்யம், மண்ணெல்லாம் கரைந்து போக, அப்புறம் உற்றுநோக்கினால் ஒரு தங்கச் சிலை ஒளிவீசியதாம். அதாவது ஒரு தங்கச்சிலையைச் சுற்றி முன்னோர்கள் மண்ணைப் பூசி வைத்துள்ளனர். களிமண்தானே என்று சொன்னவர்கள் எல்லாம் வாயடைத்துப் போனார்களாம். எவரையும், எதையும் அற்பமாய் எண்ணாதீர்கள். அற்பமாய் தவறாய் மதிப்பிட்ட ஒரு தாலந்தைப் பெற்றவன், பரிசேயன் (லூக் 18:11, ஆயக்காரனைப் போல் இராததினால்) சிலுவைக் கள்ளன் போன்றவர்கள் நன்மையை இழந்து போனார்கள். எவரையும் தவறாய் மதிப்பிட்டு விமர்சிப்பது கிறிஸ்தவப் பண்பல்ல (தாலந்தல்ல).

### 3. எதிலும் நன்மையைப் பார்க்க வேண்டும் (மத்தேயு 25:26)

பொதுவாக, நாம் வாழும் இவ்வுலகில் நடப்பவைகளை அனைத்தையும் கெட்டவைகளாகப் பார்த்தால், நம்மால் ஒரு நொடி கூட நிம்மதியாய் வாழ முடியாது. ஒரு தாலந்தைப் பெற்றவனும் 'கெட்டச் செய்திகளை' மட்டும் முன் உதாரணமாய்க் கொள்கிறான். எஜமானின் நல்ல குணங்களை விட்டுவிடுகிறான். ஆனால் அவருடைய 'மோசமான' (25:26) பண்பை அறிந்து, அதையே காரணமாக்குகிறான். ஒருமுறை, தாமஸ் ஆல்வா எடிசனின் வயதான காலத்தில் கோடி கோடியான டாலர் மதிப்புள்ள அவருடைய தொழிற்கூடம் விபத்தில், எரிந்து சாம்பலாகிறது. அவரின் வாழ்நாள் முயற்சி எல்லாம் பொசுங்கி போனது. கண்கலங்கவே இல்லை அவர். அப்பொழுது அவர் சொன்னார் "அழிவிலும் பெருநன்மை இருக்கிறது, எனது எல்லாத் தவறுகளும் பொசுங்கிவிட்டன. இனிப் புதிதாக எதையும் தொடங்கலாம் நன்றி ஆண்டவரே" என்றாராம். எதிலும் நல்லதையும், நன்மையையும் பார்க்கத் தொடங்கிவிட்டால் கிறிஸ்தவ பொறுப்பாண்மையும், நோக்கமும் நம்மால் எட்டமுடியும். நமது பண்பு சார்ந்த வளங்களும் ஆண்டவரின் மகிமைக்காகவே இருக்கும்.

புயலும் மழையும் கடுமையாக உள்ள ஓர் இரவில் ஒரு வயதான பெரியவரும் அவரது மனைவியும் (வில்லியம் வால்டார்ப்) நியூயார்க் நகரில் உள்ள விடுதிகளில் தங்க இடம் கிடைக்குமா என்றனர். அங்கிருந்த பணியாளர், அவர்களை அந்த இரவில் திருப்பி அனுப்ப மனம் இல்லாமையால், 'வேண்டும் என்றால், என் அறையில் படுத்துக் கொள்ளுங்கள்' என்று வழி அமைத்துக் கொடுத்தார். காலை செல்லும் போது அப்பெரியவர், அப்பணியாளரைப் பார்த்து 'நீ அமெரிக்காவிலேயே பெரிய விடுதியை நிர்வாகம் செய்யத் தகுதியான ஆள், யார் கண்டார், அந்த விடுதியை நானே உனக்குக் கட்டித் தந்தாலும் தரலாம்' எனப் பேசிச் சென்றார்கள். இரண்டு வருடங்கள் தாண்டி, ஒரு நாள் ஒரு 'மடல்' வந்தது. அதில் 'நீ என் விடுதியின் நிர்வாகியாய் நியமிக்கப் பட்டுள்ளாய் உடனே வேலையில் சேர்' என அத்துடன் ரயில் டிக்கெட்டும் வந்தது. அதை அனுப்பியவர் அதே பெரியவர்தான். இவனும் புறப்பட்டுச் சென்றான். நியூயார்க் நகரில் உலகப் புகழ்பெற்ற விடுதியாகிய **வால்டார்ப் அஸ்டோரியா** விடுதியின் முதல் Manager-ஆக நியமிக்கப்பட்டாராம், அவனது சிறந்த நிர்வாகத்துக்குக் கிடைத்த பரிசு அது.

தம் பொறுப்பாண்மையில் உண்மையாய், இருப்போர் உயர்த்தப்படுவார். ஒரு தாலந்தைப் பெற்றவனைப் போல் இருப்போர் நன்மைகளை இழப்பர். நாம் நமது பொறுப்பில் உண்மையாய் இருப்போம்.

அருள்திரு. **P. இராஜா ஸ்டாலின்**



**20-07-2014**

# இறைமக்களின் திருத்தூதுப் பணி

## THE APOSTOLATE OF THE PEOPLE OF GOD

| | |
|---|---|
| யோசு. 1: 1 - 9 | 1பேது. 2: 1 - 10 |
| திபா. 2/5 | மாற். 6 : 1 - 13 |

*"அப்பொழுது அவர் பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை இருவர் இருவராக அனுப்பத் தொடங்கினார். அவர்களுக்குத் தீய ஆவிகள் மீது அதிகாரமும் அளித்தார்."* மாற்கு 6 : 7

**இறைவேண்டல் : கடவுளே எல்லா மக்களும் மீட்பை பெறவும் வளரவும் ஆவல்கொண்டீர். உம் திருமகன் வழியாய் முதல் திருத்தூதுவர்கள் அனுப்பப்பட்டது போல, திருச்சபையும் தொடர்ந்து அவர் பெயரால் ஏழைகளுக்கு உமது அன்பை குறித்த நற்செய்தியை அறிவிக்கவும், நோயாளிகளை குணமாக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலையை அறிவிக்கவும் உதவியருளும். இவைகளை ஆண்டவரும் இரட்சகருமான இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம் தந்தையே. ஆமென்.**

இறைமைந்தர் இயேசு இறைபணியாற்ற பன்னிருவரை அழைத்து இருவர் இருவராக அனுப்புகிறார். திருத்தூதர் (அப்போஸ்தலர்) என்பதற்கு அனுப்பப்படுகிறவர் என்று பொருள். தியான வாசகத்தை மையமாகக்கொண்டு நோக்கினால் இறைமைந்தர் கிறிஸ்துவால் அழைக்கப்பட்டு அனுப்பப்படுகிறவர் என்பது பொருள். சபை என்பது பற்றுறுதியாளர்கள் என்னும் கற்கள் கிறிஸ்துவில் ஒன்றாய்க் கலந்துகட்டிய புதிய உயிருள்ள கட்டடம். சபை என்பது ஆலயம் மட்டுமல்ல குருக்களின் (ஆசாரிய) கூட்டமாகும் 1 பேது. 2:9 இக்கூட்டத்தில் ஆள் சேர்க்கும் பொறுப்பாளர் திருத்தூதர் ஆவார். திருத்தூதர் என்பவர் இறைவனுக்காக மக்களிடம் இறைத்தூதுச் சொல்லக்கூடியவர். இறைவனுக்காக மக்களோடு நிறபவர். இறைவனிடம் இறைமக்கள் வர பாலம் கட்டும் உன்னதப் பணியாளர். எல்லா இறைமக்களும் ஒவ்வொரு இறைத் தூதுவர் என்ற சிந்தனையை மனதில் வைத்துத் தொடர்ந்து சிந்திப்போம்.

### 1. அனுப்பப்படுகிறதற்காக அழைக்கப்படுகிறவர் :

மாற். 6 : 7

திருத்தூதர் அனுப்பப்படுகிறதற்காக அழைக்கப்படுகிறவர். அழைப்பு என்பது திருமறைப்படி ஒரு கூட்டத்திலிருந்து பிரித்து எடுப்பது அதாவது இனிஒரு வாழ்க்கை வாழ்வதற்காக மட்டுமன்று மக்களை

### 3. இறை உண்மையில் வலுப்படுத்துகிறது (எபே. 4 : 14, 15)

மெய்மை கொண்டுள்ள ஒன்று தன்னையே வெளிப்படுத்தும்போது, புத்திக்குத் தெளிவானதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்கும்போது அதுவே உண்மை என்று அழைக்கப்படும். உண்மையைப் பற்றிய விவிலியக் கருத்தானது இறைவனுடனான சந்திப்பின் விளைவான சுய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. பவுலார் எபேசுத் திருச்சபைக்கு எழுதும்போது, நாம் எல்லாரும் இறைமகனைப் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம். கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறுமளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம். ஆகவே இனி நாம் குழந்தைகளைப் போல் இருக்கக்கூடாது. மனிதருடைய தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் தவறுக்கு வழிநடத்தும் ஏமாற்று வழிகளையும் நம்பி, அவர்களுடைய போதனைகள் எல்லாம் காற்றால் அடித்துச் செல்லப்பட்டு அங்குமிங்கும் அலைக்கழிக்கப்படக் கூடாது. மாறாக, அன்பின் அடிப்படையில் உண்மை பேசி, தலையாகிய கிறிஸ்துவைப் போன்று எல்லாவற்றிலும் நாம் வளரவேண்டும் (எபே. 4 : 13 -15).

இயேசு கிறிஸ்து, நானே வழியும் உண்மையும் வாழ்வுமாயிருக்கிறேன் (யோவா. 14: 6) என்றார். உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்.

இந்த உலகத்தில் உண்மையும் பொய்மையும் இருக்கின்றது. எது உண்மை? எது பொய்? என்பதை திருமறை வழியாகவும் கிறிஸ்துவின் வழியாகவும் புரிந்து கொண்டு உண்மையாகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்வோம். ஒருமுறை காந்தியடிகள் நல்லது வாழவும் நயவஞ்சகம் ஒழியவும், உண்மை வாழவும் பொய்மை ஒழியவும், அறிவு வாழவும் அறியாமை ஒழியவும் ஒரு புதிய சமூகப் பொது வாழ்வை உருவாக்குவோம், வாருங்கள்'' என்று அழைத்தார்.

நிறைவாக, இறைமக்களின் இறையியல் கல்வி இறைவாக்கை அறியச் செய்கிறதாகவும் மானுட வாழ்வில் இறை நம்பிக்கையை உறுதிபடுத்தி கற்பாறையாகிய கிறிஸ்துவில் கட்டப்படுகின்ற வாழ்வாகவும் உண்மையாகிய இயேசுகிறிஸ்துவில் வலுப்படுத்துகிறதாகவும் அமையட்டும். இறைவர் தாமே இவ்வார்த்தையின் வழியாக நம்மை வழி நடத்துவராக! ஆமென்!

அருள்திரு **T. ஸ்டாலின் வினு ஜோண்ஸ்**



**13-07-2014** — *இறையியல் கல்வி ஞாயிறு*

# இறைமக்களின் இறையியல் கல்வி

## THEOLOGICAL EDUCATION OF THE PEOPLE OF GOD

எரே. 1 : 4 - 10 — எபே. 4 : 7 - 16

திபா. 119 : 89 - 104 — மத். 7 : 24 - 29

*"....இதோ பார்! என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன்."* எரே. 1 : 9

**இறைவேண்டல் :** சர்வ வல்ல கடவுளே, உம் திருமகன் பன்னிரண்டு அப்போஸ்தலர்களை அழைத்து இறையரசின் ரகசியங்களை போதித்தார். உமது திருச்சபையின் பரிசுத்த திருப்பணிக்காக தங்களை ஆயத்தப்படுத்துவோரை ஆசீர்வதிக்கவும் அவர்களை போதித்து வழிநடத்தவும் உம்மிடம் வேண்டுகிறோம். உம் வார்த்தை மற்றும் திருவருட் சாதனங்களை குறித்த உண்மையான புரிந்துகொள்ளுதலை பெறவும்; ஜெபவாழ்விற்கு, உமது சேவைக்கு தங்களை அற்பணிக்கவும்; பரிசுத்தம் மற்றும் அன்பின் வழிகளில் உம் மக்களை நழிநடத்தவும் ஆயத்தபடுத்தவும் அவர்களுக்கு உதவி செய்தருளும் இவைகளை உம்மோடும் தூய ஆவியாரோடும் ஒரே கடவுளாக என்றென்றும் வாழ்ந்து அரசாளுகிற இயேசுகிறிஸ்துவின் வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.

இறையியல் என்கிற சொல் Theology என்னும் ஆங்கிலச் சொல்லினுள் "Theos" (கடவுள்), "Logos" (வார்த்தை) ஆகிய இரு கிரேக்கச் சொற்கள் அமைந்துள்ளன. இறையவரை பற்றிய பேச்சு அல்லது சிந்தனை என்பது இதன் பொருள். இது இறைவினை பற்றிய அறிவியல் என்று இருந்தாலும், ஒட்டுமொத்தமாக, திருமறை, திருச்சபை, திருப்பணி, திருவருட்சாதனங்கள் போன்ற அனைத்தையும் பற்றிய அறிவு, இறையியல் என்றழைக்கப்படுகிறது. பல்கலைக்கழகங்களிலும் இறையியல் கல்லூரிகளிலும் இந்த அடிப்படையிலேயே இறையியல் கல்வி தனித்து இயங்குகிறது. ஆயினும், இறையியல் கல்லூரிகளில் முறைப்படுத்தப்பட்ட இறையியல் (Systematic Theology), கோட்பாட்டு இறையியல் (dogmatic theology) அறநெறி சார்ந்த இறையியல் (moral theology), திருமறையில் அறியக் கிடக்கும் உண்மைகளைத் தொகுத்துக் காண்பது விவிலிய இறையியல் (Biblical theology), நம்பிக்கையின் இறையியல், விடுதலை இறையியல், பெண்கள் இறையியல் போன்ற புதிய பெயர்களுடன் இறையில் கல்வி மூலமாக அறியப்படுகின்றன. இன்றைய திருமறைப் பாடங்களின் அடிப்படையில் எவ்வாறு இறைமக்களுடைய இறையியல் மனித

வாழ்விற்குப் பயன்படுகிறது என்பதைச் சிந்திப்பது அவசியம். இறையியல் கல்வி நமக்குத் தரும் சிந்தனையைச் சிந்திப்போம்.

### 1. இறைவாக்கை அறியச் செய்கிறது (எரே 1: 10)

எரேமியா, பழங்கால மேற்காசியாவின் மிகவும் குழப்பங்கள் நிறைந்த காலத்தில் வாழ்ந்தார். இத்தகைய குழப்பமான அரசியல், சமய, சமூகப் பின்னணியில் இறைவன் எரேமியாவை யூதாவுக்கு இறைவாக்கினராக இறைவாக்குரைக்க அழைத்தார். ஆண்டவர் தம் கையை நீட்டி எரேமியாவிடம் கூறியது; இதோ, பார் என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன். பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கூட்டவும், நடவும் இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன். அநீதிகள் நிறைந்த சூழலில் அநீதிகளையும், அநியாயங்களையும், அக்கிரமங்களையும் பிடுங்கவும் தகர்க்கவும், அழிக்கவும், விழ்க்கவும் நீதிகளையும் நியாயங்களையும் நிலைநாட்டவும் எரேமியாவுக்கு கடவுள் பொறுப்பைக் கொடுக்கின்றார்.

கடவுளின் வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது, இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது; ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும் மச்சையையும் ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது.

ஆனால் இன்று கடவுளின் வார்த்தையை வாழ்வை மாற்றக்கூடிய வார்த்தையாகச் சொல்லாமல் தங்களுக்குச் சாதகமாகவும் ஆதாயமாகவும் திருமறையை இழிவான ஆதாயத்திற்காகப் போதிக்கின்றனர். தொலைக்காட்சிகளிலும், மாதாந்திரப் பத்திரிகைகளிலும், கன்வென்ஷன் கூட்டங்களிலும், ஒப்பாரி இல்லங்களிலும் கடவுளுடைய வார்த்தையைத் தவறாகப் போதிக்கின்றனர். தங்கள் நாவின் சொல்லையே வழங்கி இதை ஆண்டவர் கூறுகிறார் என்று சொல்லி பொய்க்கனவுகளை இறைவாக்காக உரைத்து தங்கள் பொய்களாலும், மூடச் செயல்களாலும் என் மக்களை தவறான வழியில் நடத்திச் செல்கிறார்கள். நான் அவர்களை அனுப்பவில்லை, அவர்களுக்குக் கட்டளையிடவும் இல்லை, அவர்களால் இந்த மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்கிறார். ஆண்டவர் (எரே. 23 : 31, 32)

ஆகவே கடவுளுடைய வாக்கு எது என்பதை உணர்ந்து அதனடிப்படையில் இறைமக்களுக்கு கடவுளின் வார்த்தையைக் கற்றுக் கொடுத்து கடவுளின் வார்த்தையில் வளர திருச்சபையைத் தூண்டுவோம் (II திமொ. 3:16).





கடவுளின் வார்த்தை என் வாய்க்குத் தேனிலும் இனிமையானவை (திபா. 119 : 103). என் திருப்பாடகராகிய தாவீது கூறுகின்றார். ஆனால் இன்று தேனில் சீனிப்பாகினைக் கலப்படம் செய்வதும் நாம் அறிந்ததே. அப்படியானால், விவிலியச் செய்தியில் கலப்படம் சேராமல் பார்த்துக் கொள்வது திருச்சபையின் பொறுப்பாகும்.

### 2. இறை நம்பிக்கையில் உறுதிப்படுத்துகிறது: (மத். 7:24)

இறை வார்த்தையைக் கேட்டு வாழ்வில் அதை நடைமுறைப்படுத்துகிறபோது கற்பனையாகிய கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட வாழ்வாக அமையும். ஆகவே கிறிஸ்துவின் போதனைகள் மக்களுக்கு அழைப்பையும் அதே நேரத்திலே நல்ல செயல்களைச் செய்யத் தூண்டுதலையும் அளிக்கின்றன. அவருடைய போதனையைப் புரிந்து கொண்டால் மட்டும் போதாது, வாழ்க்கையில் செயல்படுத்தியும் காட்டவேண்டும். இவ்வாறு செயல்படுத்த இயேசு கிறிஸ்துவின் சீடன் மறந்தால் அவன் பெரும் அழிவுக்கு உள்ளாவான். வீடு கட்டுபவர்கள் பற்றிய உவமை பாலஸ்தீன மக்களது வாழ்க்கையை வெளிப்படுத்துகிறது. பாலஸ்தீன நாட்டிலே மழை பெய்யும்போது பெருமளவில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் என்பதை மத்தேயு அறிவார். இந்த வேளையிலே மணல் மீது கட்டிய வீடுகள் பலத்த சேதமடைகின்றன. எனவே சிறந்த வாழ்க்கையே விசுவாசிகளுடைய வாழ்க்கையின் அடித்தளமாக அமையவேண்டும். அறிவும், ஆண்டவருடைய கட்டளைகளில் நம்பிக்கையும் மட்டும் இருந்தால் போதாது. அவற்றின்படி நடப்பதும் மிகவும் அவசியமானது. இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். ஏனெனில் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடவாதோர், கண்ணாடியிலே தம் முகத்தைப் பார்த்துவிட்டுச் சென்று உடனே தாம் எவ்வாறு இருந்தார் என்பதை மறந்து விடும் மனிதருக்கு ஒப்பாவர் (யாக். 1 : 22 24). ஒருமுறை இயேசு கிறிஸ்து போதித்துக் கொண்டிருக்கும்போது, கூட்டத்திலிருந்து பெண் ஒருவர், "உம்மை கருத்தாங்கி பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறு பெற்றவர் என்று குரலெழுப்பிக் கூறினார். அவரோ, இறை வார்த்தையைக் கேட்டு அதை கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்" என்றார் (லூக். 11 : 27, 28). ஆகவே இறைவார்த்தையைக் கேட்டு, கடைப்பிடித்து மனுக்குல வாழ்வை கற்பாறையாகிய கிறிஸ்துவின் மேல் கட்டியெழுப்புவோம்.

கீர்த்தனையில் கீர்: 19

"எத்தனை தீர்க்கர், அநேக அப்போஸ்தலர்
எத்தனை போதகர்கள், இரத்த சாட்சிகள்,
எத்தனை வேண்டுமோ அத்தனையும் தந்திங்
கித்தனையாய்க் கிருபை வைத்த நம் கர்த்தனைப்
-பாடித்துதி மனமே

பேதுரு தனது ஆயர் அருட்பொழிவுப் பணிக்கென அயராது உழைத்தார்.

நீரோ எனும் ரோமப் பேரரசன் கிறிஸ்தவர்களைக் கொன்று குவித்த காலம் அது. கி.பி 68ல் பேதுரு சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார் என யூசிபஸ் எனும் வரலாற்றாசிரியர் கூறுகிறார்! மீட்பர் இயேசுவைப் போல நேராகச் சிலுவையில் தொங்க தனக்குத்தகுதியில்லை எனக் கூறி தலைகீழாகத் தன்னைச் சிலுவையில் அறையும்படி வேண்டிக் கொண்டாராம் பேதுரு.

டைபர் நதிக்கரையில் வாடிகன் மலைமீது சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார் பேதுரு. மார்செல்லிலை என்ற தேவ ஊழியர் இவரது உடலைப் பதப்படுத்தி வாடிகனில் அடக்கம் செய்தார். அந்த இடத்தில் ஒரு சிறு ஆலயத்தையும் கட்டினார்.

உன்மேல் என் சபையைக் கட்டுவேன் கற்பாறையாயிருக்கிறாய் என்ற அருள் நாதரின் அருட்பொழிவை ஏற்று அருட்பணி செய்த பேதுரு ஆட்டுக்குட்டிகளையும் ஆடுகளையும் பாடுகளினூடே மேய்த்திட்டார் என்பது நிரூபணமாகிறது.

1பேதுரு 5 : 1 - 2 திருச்சபை மூப்பர்களுக்கும் மக்களுக்கும் எழுதிய அறிவுரைக் கடிதத்தில் கிறிஸ்துவின் துன்பங்களுக்குச் சாட்சியும் வெளிப்படவிருக்கும் மாட்சியில் பங்கு கொள்ளப் போகிறவனுமாகிய நான் உடன் மூப்பர்களுக்குக் கூறும் அறிவுரை யாதெனில் "உங்கள் பொறுப்பிலிருக்கும் கடவுளின் மந்தையை நீங்கள் மேய்த்துப் பேணுங்கள்.......... கடவுளுக்கேற்ப

மன உவப்புடன் மேற்பார்வைசெய்யுங்கள் ............ என்கிறார்

அருள்திரு. D.S. **செல்வராஜ்**





திருத்தூதருக்காக (அப்போஸ்தலர்) என்பது முக்கியமல்ல அனுப்பியவருக்காகவே அல்லது திருத்தூதராக்கினவருக்காகவே என்பது முக்கியம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒவ்வொரு இறைத்தூதுவர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

## 2. அனுப்பப்படுகிறவரின் பொறுப்பாளர் அனுப்பியவரே.

மாற்கு 6:8

இறைப்பணி பாதையில் உணவு, பை, போன்றவற்றை எடுத்துச் செல்லவேண்டாம் என்ற கிறிஸ்துவின் வார்த்தை மக்களிடம் எதிர்பார்த்து தொடரும் இறைப்பணியல்ல. மாறாக இறைவனை முழுமையாய்ச் சார்ந்து அவரிடம் எதிர்பார்த்துத் தொடரும் இறைப்பணியைக் குறிப்பிடுகிறார். அனுப்பப்படுகிறவருக்கு எல்லாம் இறைவனே. அடிப்படைத் தேவைக்குக் கூட இறைவனை எதிர்பார்த்து நிற்பதை இங்குக் காணலாம்.

1 பேதுரு 2:3ல் திருத்தூதுவர் பேதுரு குறிப்பிடுகிறார் புதிதாய்ப் பிறந்த குழந்தையைப் போல வஞ்சகமற்ற வார்த்தையாகிய பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாய் இருங்கள். ஒரு குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் எல்லாம் பாலில் அடங்கியிருக்கிறது அது போன்று ஒரு மனிதனுடைய உடல், ஆத்மீக, பொருளாதாரம் சார்ந்த முழுமையான வளர்ச்சிக்குரிய சத்துக்கள் இறைவார்த்தையில் (திருமறையில்) நிரம்பி இருக்கிறது. எனவே இறைவார்த்தையை உணவாக உட்கொண்டு வாழ பேதுரு அழைக்கிறார். லூக்கா 4:4ல் இயேசு தீயவனுக்குச் சொல்லும்போது மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல இறைவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். இதை நினைவில் கொள்ள வேண்டும். "திருமறைச் சத்திலே வளருகிற வாழ்க்கை கிறிஸ்துவில் வேரூன்றுகிற வாழ்க்கை"

யோசுவாவிடம் "நான் உன்னுடன் இருப்பேன்............." என்கிறார். இறைவனால் ஒருவன் அனுப்பப்படுகிற போது அவனோடு இறைவன் இருக்கிறார். அவனுக்குள் இறைவன் வாழ்கிறார். அவனுக்குள்ளும் அவன் வாயிலாகவும் இறைவன் செயல்படுகிறார். அவனோடு இறைவன் இருப்பதால் பிசாசுகள் (இறைவனுக்கு எதிரான தீமைகள்) அவனைத் தாக்காது.

இங்கே திருத்தூதர்கள் இறைவன் தங்களோடு இருக்கிறார் என்பதையும் தங்களுடைய செயல்பாடுகளை இறைவன் கவனிக்கிறார் என்கிற எச்சரிப்புடன் பணிபுரிதல் அவசியம்.

"மோசேயோடு இருந்ததுபோல உன்னோடும் இருப்பேன்" என்ற யோசுவாவிற்கு கொடுக்கப்பட்ட இறைவார்த்தை, மோசே வெற்றி பெற்றதைப் போல நீயும் இறைப்பணிப் பாதையிலே வெற்றிமேல் வெற்றி பெறுவாய்

என்பதாகும். மாற்கு 6:7ல் தீய ஆற்றல்மீது தனக்கு இருந்த அதிகாரத்தையும், தீய ஆற்றலைத் துரத்தும் (பிசாசு) அதிகாரத்தையும் திருத்தூதர்களுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். உடன் இருக்கும் இறைவன் தன் ஆற்றலைத் தன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறாரர்.

திருத்தூதர்கள் இறைவன் பகிர்ந்தளித்த இறை ஆற்றலிலும் இறை அதிகாரத்திலும் மட்டும் சார்ந்து நிற்பது அவசியம். அவர் அனுப்பியவருக்கு அவரே பொறுப்பாளர் அவர் நடத்துவார் என்கிற நம்பிக்கையுடன் செயல்படுதல் அவசியம்.

அனுப்பப்படுகிறவருக்கு (திருத்தூதர்) அனுப்பியவர் தரும் நிபந்தனைகள். மாற்கு 6: 8,9 நற்செய்திப் பாகத்தில் இறைப்பணிப்பாதையில் கைத்தடி மிதியடி தவிர உணவு, பை, இடைக்கச்சையில் செப்புக்காசு முதலிய வேறு எதையும் நீங்கள் எடுத்துக் கொண்டு போகவேண்டாம். இவைகளே தலைமைத் திருத்தூதரான இயேசு திருத்தூதர்களுக்கு தரும் நிபந்தனைகள் ஆகும். பழைய ஏற்பாட்டில் யோசுவா: 1: 6 - 8 வரை உள்ள பகுதியில் இறைவன் உடன் இருக்க யோசுவாவிற்கு சில நிபந்தனைகளை இறைவன் கொடுக்கிறார்.

x மோசே கட்டளையிட்ட சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

x வலதுபுறம் இடதுபுறம் சாயக்கூடாது.

x திருச்சட்ட நூலை உன் வாயை விட்டு அகற்றாதே.

x இரவும் பகலும் இதனைத் தியானம் செய்.

அதில் எழுதி உள்ளதைக் கடைப்பிடி இதுவே இறைவன் உன் உடன் இருக்கவும் வெற்றிக்கும் ஒரே வழி. இன்று இறைவனால் நமக்குக் கொடுக்கப்பட்டது தான் திருமறை. திருமறைக்கும் நமக்கும் உள்ள உறவுதான் என்ன? தொடர்புதான் என்ன? திருமறை தரும் நிபந்தனைகளை ஏற்கிறோமா நம் உள்ளத்தைக் கேட்டுப்பார்ப்போமே.

திருத்தூதர் பேதுரு குறிப்பிடும் போது 1 பேதுரு 2: 9ல் உங்களை இருளினின்று வியத்தகு ஒளிக்கு அழைத்தவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி. இது நம்முடைய கடமை. இதிலிருந்து கடுகளவும் மாறிவிடக்கூடாது. தன்னையோ பிறரையோ மேன்மைப்படுத்துதல் இறைப்பணியல்ல. நான் என்பதற்கு இங்கு இடம் இல்லை. மட்டும் அல்ல இருளிலிருந்து நம்மை ஒளியிடம் வரவழைத்து தெரிந்தெடுத்து அரசக் குருக்களின் கூட்டத்தினராக்கி அவரது உரிமை சொத்தான மக்கள் என்கிற உயர் வாழ்வியல் சூழலை இறைவன் நமக்கருளிய இந்த வாழ்வியலைக் களங்கப்படுத்தும் விதத்தில் தீமையின் கருவிகளாய் மாறிவிடக்கூடாது. இந்த மேன்மை தங்கிய இறைவனைச்





## 3. பாடுகளை ஏற்றிட அழைக்கிறார்

வேறொருவர் உன்னைக்காட்டி “உனக்கு விரும்பமில்லாத இடத்துக்கு கூட்டிச் செல்வர்” யோவான் 21 : 18

பேதுருவிடம் ஆயர் அருட்பணியில் வரும் பேரிடர்களைப் பரமன் இயேசு கூறுகிறார் பேதுரு எவ்வாறு இறந்து கடவுளை மாட்சிப்படுத்திடப் போகிறார் என்பதைக் குறிப்பிட்டே அவர் இவ்வாறு சொன்னார். இதைச் சொன்னபின் பேதுருவிடம் என்னைப் பின்தொடர் என்றார் இயேசு. யோவான் : 21 : 18.

பக்தன் ஒருவர் சொன்னார் பரமனைப் பின் தொடர்வதும் பரமன் பணி செய்வதும் பஞ்சு மெத்தை அல்ல முட்கள் பதித்தமலை! காடுகள், மேடுகள், மலைகள், மடுக்கள் அலைந்து திரிந்து செயல்படும் ஆயனின் கையில் கோலும் தடியும் இருக்கும்! சில வேளை சிங்கம், கரடி, புலிகள் எல்லாம் வரலாம்! திருடர்கள் குறுக்கிடலாம்! போராட்டச் சாலை தான்!

தாவீது சவுலிடம் ஒன்றைக் குறித்துச் சொன்ன சான்று யாதெனில், உம் அடியானாகிய நான் என் சிங்கமோ, அல்லது கரடியோ மந்தையில் புகுந்து ஆட்டைக் கவ்விக் கொண்டு ஓடினால். நான் பின் தொடர்ந்து ஓடி அதை அடித்து, அதன் வாயினின்று ஆட்டை விடுவிப்பேன். அது என்மீது பாய்ந்தால் அதன் தாடியைப் பிடித்து, நன்றாக அடித்துக் கொல்வேன், எனவே கோலியாத் பெலிஸ்தியன் பெலசாலி பாய்ந்து வந்தாலும் அவனையும் வெல்வேன் என்கிறார். 1சாமு: 17 : 34 - 36

ஆயர் அருட் பணியின் அழைப்பு பாடுகளை ஏற்பதற்குத்தான் திருச்சபைத் தலைவர் இயேசு தம் சீடர்க்கு கூறிய அருள்வாக்கு யாதெனில் அவர்கள் பரியாசம் பண்ணி வாரினால் அடித்து, துப்பி, கொலை செய்வார்கள் ஆகிலும், மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார். மாற். 10: 3- 4

துதிப்பாடல் பாடினபின் ஒலிவமலைக்குச் செல்லும் வழியில் இயேசுவின் அருள்வாக்கு யாதெனில் “மேய்ப்பனை வெட்டுவேன்” மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் இவ்வாக்கினைக் கேட்ட பேதுரு.......... “நான் உம்மோடு சேர்ந்து இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒரு போதும் மறுதலிக்கமாட்டேன் என்கிறார் மத். 26 : 31,34.

ஆயனின் அழைப்பும், அர்ப்பணமும், ஆடுகளுக்காய் பாடுபடுவதுதான். இக்காலச் சூழலில் திருச்சபையெனும் மந்தையின் ஆடுகளே ஆயனை முட்டுகின்ற சூழல்கள்............ தஞ்சை சரபோஜி மன்னனின் அரச அவைக் கவிஞர் வேதநாயக சாஸ்திரியார் தம்

இயேசு மீண்டும் வந்து பேதுருவைப் பார்த்து ஆடுகளை மேய்த்திட அழைக்கிறார். ஆயர் அருட்பணி என்பது கடவுளால் கிடைக்கும்.......... நல்லதொரு வாய்ப்பாகும்.

''மோசேயும், ஆரோனும், அவர்தம் குருக்கள்'' எனத் திருப்பாடல் 99:6-ல் எபிரேயக் கவிஞர் கவிதை பாடினார். வனத்தில் ஆடு மேய்த்த மோசேக்கு, ஆண்டவரின் அழைப்பு, இஸ்ரயேலரை வளமிகும் நாடு நோக்கி வழிநடத்திட வருகிறது!

அழைத்த கடவுளை, நம்பிக் கடந்து செல்கிறார் மோசே. இவர் நல்ல ஆயனாக, இஸ்ராயேலரை வனம் வழியாக வழி நடத்துகின்றார். வறண்ட நிலங்களில், காடைகளும் மன்னாவும் கற்பாறையில் தண்ணீரும் ஊட்டுகிறார். கற்பனைகள் மூலம் நல்வழிப்படுத்துகிறார்.

இறைவாக்கினர் எசேக்கியேல் பூசி என்ற குருவின் மகன்! திருப்பணிக்கெனக் கடவுள் அவரை அழைக்கிறார். அவர் கேபார் ஆற்றோரம் இருக்கையில், விண்ணுலகம் திறக்கப்பட்டுக் கடவுள் அருளியக் காட்சிகளைக் காண்கிறார். எருசலேமின் வீழ்ச்சிக்கு முன்பும், பாபிலோனியச் சிறையிருப்பின் போதும், இறைவாக்கினர், எசேக்கியல் வாழ்ந்தார்! பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டோருக்கு மட்டுமின்றி; எருசலேமில் எஞ்சியிருந்தோருக்கும், அவர் இறைவாக்குரைத்தார்! அவர் குருவாகவும், இறைவாக்கினராகவும் இருந்தமையால், எருசலைக் கோவிலைக் குறித்தும், மக்களின் உள்ளத்தூய்மையைக் குறித்தும் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார்.

இன்றைய உலகில், ஆயன் இல்லா ஆடுகள் போல அலைந்து திரியும் மாந்தர்கள் பல கோடி! கடவுளும் அலைகிறார் அவர்களைத் தேடி! எனவே ஆடுகளைத் தேடவும், கண்டுபிடிக்கவும், மேய்க்கவும் கடவுள் தம் பணிக்காய் ஆயர்களை அழைக்கிறார்! அகில உலகெங்கும் அனுப்புகிறார்

''ஆடுகள் ஏராளம் அலைந்து திரிந்திடுதே''
தேடுவார் யாவருக்கும் என் பெலன் தாராளம்
அத்தனை நாட்டவரும் அறிய எத்தனை நாட்கள் செல்லும்

எனும் பாடலின் பதங்கள் நம்மைப் பக்குவப்படுத்துவனவாய் உள்ளன மூன்று முறை சேவல் கூவுமுன்னர், நல்ல ஆயன் இயேசுவை மறுதலித்த பேதுருவை; மூன்று முறை அழைத்து, ஆடுகளை மேய்க்க அன்புக் கட்டளையிடுகிறார் நம் பிரதான ஆயர் இயேசு! யோவான் 21 : 17

நல்ல ஆயர் இயேசுவில் அன்பு கூருவோர் மட்டும் தான் ஆயர் அருட்பணியை செய்திட முடியும்! இச்செயலை உறுதிப்படுத்தி அற்பணித்த பேதுருவை ஆயர் அருட்பொழிவுக்காக அனுப்புகிறார் அன்புறும் ஆயர் இயேசு!





சார்ந்த தூய அறவாழ்வை இறைப்பணிப் பாதையிலும் நம் வாழ்விலும் தொடர திருத்தூதர் பேதுரு வலியுறுத்துகிறார். (1பேது. 2:11)

மாற்கு 6:8ல் இறைப்பணிப் பாதையில் கைத்தடியும் மாற்கு 6:9 மிதியடியும் (செருப்பு) தவிர வேறு எதையும் எடுத்துச் செல்ல வேண்டாம் என்கிறார். கைத்தடி என்பது பாலஸ்தீன மேடுபள்ளங்களில் கால்நடையாய் நடந்து செல்ல வீழ்ந்து விடாமல் ஊன்றி நடக்க அவசியமான, தேவையான ஒன்று. மிதியடியும் கற்கள் நிறைந்த பாதையிலே விரைவாய் நடந்து செல்ல தேவையானது. அவசியமானதைப் பயன்படுத்தும் உரிமை கொடுக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் மோசேயிடம் இருந்த கோலை நாம் அறிவோம். இந்தக் கோல் இறைப்பணியாளர்கள் பயன்படுத்தினாலும் அது இறைப் பணி பாதைக்காகவும் இறைமக்களுக்காகவும் பயன்படுத்தப்படவேண்டும். காலச் சூழலுக்கு ஏற்ப அடிப்படைத் தேவையான பொருள்களை இறைப்பணியாளர்கள் பயன்படுத்துவதில் தவறில்லை. (வாகனங்கள் தொடர்பு சாதனங்கள் ..........) பயன்படுத்துவது பணியாளராய் இருப்பினும் பயனாளிகள் இறைமக்களாய் இருக்கவேண்டும்.

உணவு.......... இறைப்பணிபாதையில் உணவை நம் இதயத்தில் மையமாகக் கொண்டு செல்லக்கூடாது உணவை இதயத்தில் வைத்துக் கொண்டு செய்திடும் பணி அது திருத்தூதர் பணியாகாது.

பை............ பையை எடுத்துச் செல்ல வேண்டாம் என்ற இறைவார்த்தை பையை இதயத்தில் வைத்துக் கொண்டு இறைப்பணியாற்ற வேண்டாம். இன்று திருத்தூதர்கள் எத்தனை பைகளை (சேமிப்புகள் வங்கி கணக்குகள்) கையில் எடுத்துச் செல்லுகிறார்கள். இன்றைய சூழலில் பை வேண்டாம் என்பதைக் காட்டிலும் பைக்காக ஆற்றிய இறைப்பணி, பைநிறைய ஆற்றுகிற இறைப்பணி மற்றும் வாழ்க்கை இதைத்தான் கிறிஸ்து கண்டிக்கிறார். இது ஒரு போதும் திருத்தூதர் பணி ஆகிவிடாது. மனித நேயத்தை மையமாகத் திருத்தூதுவர் பணி அமைய வேண்டும் என்பது தான் இங்கு வலியுறுத்தப் படும் உண்மை.

இறைமக்கள் எல்லோரும் திருத்தூதர்களே, இறைப்பணி மட்டுமே திருத்தூதர் பணி என்பதல்ல. எப்பணியை இறைவன் நமக்கு கொடுத்தாலும் அப்பணியை இறைவன் எனக்குத் தந்த பணி என்ற உணர்வுடன் அப்பணியை ஒரு திருத்தூதராக நின்று ஆற்றிட இறைவன் நம்மை அழைக்கிறார்.

அருள்திரு. S. **எட்வின் ஜெயகுமார்**

**27-07-2014**

# அருள்பொழிவுத் திருப்பணி : பணிபுரிய அழைப்பு

**ORDAINED MINISTRY : CALLED TO SERVE**

| | |
|---|---|
| எசேக் : 33 : 1 - 9 | I பேது. 5 : 1-4 |
| திபா. : 99 | யோவா. 21 : 15-19 |

*பேதுருவிடம் "என்னைப் பின் தொடர்" என்றார். யோவா. 21 : 19*

**இறைவேண்டல் :** சர்வ வல்ல கடவுளே! எல்லா நலன்களையும் கொடுப்பவரே, உம் ஆவியரால் திருச்சபையில் பல வகையான திருப்பணிகளை நியமித்திருக்கிறீர். அருட்பொழிவு திருபணிகளில் சேவை செய்ய அழைக்கப்பட்ட உம் அடியவர்களை இரக்கமாய் கண்ணோக்கி வார்த்தையினாலும், நல் உதாரணத்தினாலும் அவர்கள் நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் உம் நாம மகிமைக்காக சேவை செய்யவும் உம் திருச்சபையை கட்டவும் பரிசுத்த ஆவியரால் அவர்களை நிரப்பியருளும் என்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம்நல்ல கடவுளே. ஆமென்.

உயிர்த்தெழுந்த ஆண்டவர்......... உலகில் உலாவுகின்றார்! திபேரியக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற சீடர்கள் ஒருவருக்குத் தோற்றமளிக்கிறார்! அன்று இரவு அவர்களுக்கு மீன் ஒன்றும் கிடைக்கவில்லை! தொழிலில் தோற்றவர்கள் முன் தோற்றமளித்த இயேசு சீமோன் பேதுருவிடம் அருட்பொழிவுத் திருப்பணிக்கென அழைப்பின் விடுக்கிறார்!

## 1. ஆட்டுக்குட்டிகளை மேய்த்திட அழைக்கிறார்

"என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர் - யோவான் 21 : 15

ஆட்டுக்குட்டிகளைப் பேணுவதும் வளர்ப்பதும் ஆயனின் தலையாயக் கடமை! இயேசு தம்மை நானே நல்ல ஆயன் என்கிறார். யோவான் 10:11. ஆயர்கள் பல்வகைப்படுவர்! கெட்ட ஆயர்களும், உள்ளனர்! அவர்கள் ஆடுகளைத் திருடவும், கொல்லவும், அழிக்கவும் கங்கணம் கட்டுகின்றனர். இயேசு தம் மந்தையின் ஆட்டுக்குட்டிகளைப் பேணிவளர்க்கும் நல்ல ஆயர்களை அழைக்கிறார்! அவர்களில் பேதுரு முதன்மையானவர்!

எபிரேயக் கவிஞர் தாவீது தம் கவிதையில் "கடவுள் என் மேய்ப்பர்! நான் தாழ்ச்சியடையேன் எனவும் பசும்புல் வெளிமீதும் அமைதியான நீர் நிலைகளுக்கும் அழைத்துச் செல்கிறார்! புத்துயிர் அழிக்கிறார் எனவும் திருப்பாடல் 23 : 1,2,3-ல் குறிப்பிடுகிறார்!





"ஆட்டுக்குட்டிகள்" எனும் போது .............. சிறார்களைப் பேணுவதும், வளர்ப்பதும், ஆயர்பணியின் அரும் பெரும் கடன் ஆகும்! கடவுள் கடந்து வந்து ........... சாமுவேலே......சாமுவேலே.......சாமுவேலே என ஆலயத்தில் சிறுவனை அழைத்து.... ஆளாக்கி.......... பெரும் தலைவனாய் மாற்றினார் மோசே குழந்தைக்காக............கரிசனை கொண்ட கடவுள் "இந்தக் குழந்தையை எனக்காக வளர்த்திரு" என்கிறார்! மோரியா மலையில் ஈசாக்கு பலியாடாய் மாறிடாது பதிலாடாய் ஆட்டுக்குட்டியை அனுப்புகிறார். இயேசு கிறிஸ்துவின் திருவெளிப்பாடு சிறார்களின் இடையே இடம் பெறக்காணலாம்! பெற்றோரிடமிருந்து சின்னஞ்சிறார்களை எடுத்து அணைத்து ஆசீர்வதித்து மீண்டும் பெற்றாரிடம் வளர்விக்கக் கொடுத்தமை சிறப்பு!

இன்றும் தொட்டிகளில் கிடக்கும் சிறார்களைத் தொட்டில்களில் கிடக்கச் செய்யும் வரலாற்று நிகழ்வுகள் இறைச்செயலே! மேலை நாட்டு அருட்பணியார்கள் நம் நாட்டில் இறை அழைப்பைப் பெற்று வந்து ஆதரவற்ற சிறுவர்களைத் தத்தெடுத்து, சிறுவர்களுக்காய்க் காப்பகங்கள், கல்விக்கூடங்கள் அமைத்து அருட்பணியாற்றினர். இப்பணியை அன்று முதல் இன்று வரை தென்னிந்தியத்திருச்சபையின் கீழ் இடம்பெறுதலும் சிறப்பாக நமது பேராயமும் இப்பணியைத் தொடர்வதும், "ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்" எனப் பேதுருவை அழைத்து, இயேசு பிரான் இட்டக் கட்டளையைத் தொட்டுத் தொடர்ந்திட ஆயர்பணி அழைப்பின் ஓர் அம்சம் ஆகும்.

திருச்சபைகளில் ஆயர் என்பவரின் பணி சிறப்புக்குரியது. நல்ல ஆன்மீக மேய்ச்சல்களைக் காட்டுவது மட்டுமன்று கடவுளின் அருள்வாக்கை ஊட்டுவதும், ஆண்டவரின் அழைப்பிற்கு இறைமக்களை ஆயத்தப்படுத்துவதும் முக்கியமானதாகும் கடவுளின் குருத்துவப் பணிகளைக் குறையின்றி செய்யும்போது திருச்சபை, மட்டுமல்லாது உலகும் சிறப்புப் பெறுகிறது.

## 2. ஆடுகளை மேய்த்திட அழைக்கிறார்

"என் ஆடுகளை மேய்" யோவான் 21:16 மீன்களைப் பிடித்து நின்றவர்களை மனிதர்களைப் பிடிப்போர் ஆக்குவேன், என அழைத்துத் தம் சீடராக்கினார் இயேசு! இப்போது உயிர்த்தெழுந்த இயேசுவை மறந்தும், மறுத்தும் வெறுத்தும், வேரறுத்தும், மீண்டும் மீன்பிடிக்கப்போகிறேன் என திபேரியாக் கடலுக்குக் கடந்து சென்ற பேதுருவின் கடின உழைப்பில் கடுகளவு கூடப் பயன் இல்லை. கடலில் வலை வீசினார்! ஆனால் கடல் மீன்களை விலை பேசிட வாய்ப்பும் இல்லை வாழ்வும் இல்லை!

**17-08-2014**

# திருமுழுக்கு ஓர் அருள் அடையாளம்

## THE SACRAMENT OF BAPTISM

விப. 14 : 15-31 — தீத்து 3 : 3-8
திபா. 32 — யோவா. 3 : 1-8

*"நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல, மாறாக தம் இரக்கத்தை முன்னிட்டு, புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும், புதுப்பிக்கும் தூய ஆவியினாலும் கடவுள் நம்மை மீட்டார்."* தீத்து 3 : 5

**இறைவேண்டல் :** என்றென்றும் வாழும் இறைவா! நீர் எங்கள் கடவுளென்றும் நாங்கள் உம் மக்களென்றும் எம் திருமுழுக்கில் உம் இரக்கத்தினால் வாக்குரைத்தீர் திருமுழுக்கினால் உம் உடன்படிக்கைக்குள்ளாக்கப்பட்டதற்காக நன்றிவேண்டுகிறோம். உம் அன்பில் எப்போதும் எமை காரும் நம்பிக்கையில் வளர வழிபாட்டும் வாழ்வின் எல்லா ஆபத்துக்களிலும் சோதனைகளிலும் எங்களை பாதுகாத்து வாழ்வின் இறுதிவரை ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவை அறிக்கை செய்யவும் அவரின் நம்பிக்கையான சீடர்களாயிருக்கவும் ஆற்றல் கொடும். இயேசுவின் திருப்பெயரால் வேண்டுகிறோம் பிதாவே. ஆமென்.

கடலைக் கண்டிராத மலைவாசி ஒருவன் ஒருமுறை தன் நண்பர் ஒருவருடன் கடற்கரைக்குச் சென்றான். கடலிலே நன்றாக நண்பனுடன் விளையாடினான். மகிழ்ந்தான், பூரிப்படைந்தான். நிறைவில் தனது தண்ணீர் குப்பியில் கடல் நீரைச் சேகரித்தான். நண்பன் சொன்னான் "இது கடல் நீர் இதைக் குடிக்கக்கூடாது". எனது ஊரில் இருக்கும் மனைவி மற்றும் பிள்ளைகள் இதுவரையிலும் கடலைக் கண்டதில்லை. ஆகவே அவர்களுக்கு கடலைக் காட்ட குப்பியில் தண்ணீர் சேகரிக்கிறேன் என்றான். குப்பியில் (bottle) இருக்கும் நீர் கடலாக முடியுமா? இதுதான் கடல் என்று கூற முடியுமா?

இதைப்போன்று தான் இன்று திருமுழுக்கு தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. திருமுழுக்கின் முறையினை (மூழ்கி எழும்புதல், தண்ணீர் தெளித்தல்) திருமுழுக்கு இதுதான் எனச் சாதிப்பவர்கள் உண்டு. திருமுழுக்கு எடுக்கின்ற முறையில் அல்ல, திருமுழுக்கினை அதனைப் பெற்றவரின் வாழ்விலிருந்து அறியமுடிகிறது. திருமுழுக்குத் திருச்சபையின் அருள் அடையாளங்களில் ஒன்று. மனித வாழ்வின் அருள்



**03-08-2014** — *அருட்பணி ஞாயிறு*

# அருள்பணி : மானுடத்திற்குச் சேவை செய்தல்

## MISSION : SERVICE TO HUMANITY

எசா : 42:1-9 — 1 கொரி 1 : 18-31
திபா : 146 — யோவா. 13 : 1-17

*"நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன் மாதிரி காட்டினேன்."* யோவா. 13 : 15

**இறைவேண்டல் :** சர்வவல்ல கடவுளே, உம் மக்களில் சிறியவர்க்கு நாங்கள் எதை செய்கிறோமோ அதை அவர்கே செய்கின்றோம் என்று உம் திருமகன் இயேசு கற்றுத்தந்தார். அவர் எல்லோருக்கும் பணிவிடைக்காரராய் இருந்ததுபோல நாங்களும்பாதம் கழுவும் பணியிலும், பிறருக்கான சேவையிலும் ஈடுபடவும் செய்யும் வாழ்வின் பல்வேறு நிலையிலும், வேலைகளிலும், மானுடத்திற்கு தொண்டாற்ற தங்களை ஊக்கமாக ஈடுபடுத்தியவர்கள் அனைவரும் சுறுசுறுப்பாக அருட்பணியை தொடருவதற்காக வேண்டுதல் செய்கிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக இன்றும் என்றும் வாழ்ந்து அரசாளுகிறவரும் எங்களுக்காக தம் வாழ்வை தந்து மரித்தவருமாகிய இயேசுகிறிஸ்துவின் வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.

அதிகாலை நேரம் அமெரிக்கா நகரம் ஒன்றில் அரசுக்குச் சொந்தமான வண்டி ஒன்றில் இருந்து பல பொருட்களை ஐந்து நபர்கள் இறக்கிக் கொண்டிருந்தனர். அருகில் நின்று கொண்டிருந்த மேற்பார்வை அதிகாரி இப்படிப்பட்ட பெரிய வேலையைச் செய்ய ஐந்து பேர்களை மட்டும் அரசாங்கம் அனுமதித்துள்ளது என்று சொல்லி குறை கூறிக்கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக வந்த வழிப்பயணி அவரிடம் சென்று என்ன காரியம்? என்ன ஆயிற்று? என்று கேட்டார். இங்கே கடினமான வேலை. இன்னும் ஒரு நபர் இருந்தால் நன்றாயிருக்கும். வேலையும் எளிதாயிருக்கும் என்றார். உடனே அவர் நீங்களும் இவர்களோடு இணைந்து வேலை செய்யலாமே என்றார். நான் மேற்பார்வை அதிகாரி. இதுபோன்ற என் தகுதிக்கு குறைவான வேலைகளை நான் செய்வதில்லை என்றார். வழிப்பயணி வேறு எந்த பதிலும் சொல்லாமல் தன் மேல் சட்டையைக் கழற்றி வைத்துவிட்டு அந்த ஐந்து பேருடன் இணைந்து வேலை செய்தார். இறுதியில் அந்த வழிப்பயணி அவ்விடம்

விட்டுச் செல்லுமுன் மேற்பார்வை அதிகாரியைப் பார்த்து உங்களுக்கு உதவி செய்த வழிபோக்கர் யார் என்று யாராவது கேட்டால் அமெரிக்கா ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் என்று சொல்லுங்கள் என்று சொல்லி விட்டுத் தன் வழியே சென்றார்.

“ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளை கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளை கழுவ கடமைபட்டிருக்கிறீர்கள் என்றார்.” (யோவா. 13 : 14)

இயேசு தமது சிலுவைச் சாவை மூன்று முறை அறிவித்தார். ஆனால் சீடர்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை. முதல்முறை பேதுரு ஆண்டவரே இது உமக்கு வேண்டாம் (மத்.16 : 22) என்றார். இரண்டாம் முறை தங்களுள் யார் பெரியவர் என்று வாதாடினர் (மாற். 9 : 34), மூன்றாம் முறை யாக்கோபும், யோவானும் விண்ணகத்தில் முதல் இரண்டு இடங்களை கொடுக்கும்படி கேட்டனர் (மாற். 10 : 37). இவர்கள் தம் நோக்கத்தையும், இலட்சியத்தையும் புரிந்து கொள்ளாததைக் கண்டு அதிர்ச்சி கொடுக்கக்கூடிய அளவில் அடிமையின் கோலம் பூண்டு தன் சீடர்களின் பாதங்களைக் கழுவி, நான் செய்ததுபோல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன் மாதிரி காட்டினேன் (யோவா. 13 : 15). ஆக மானிடத்துக்குச் சேவை செய்ய வேண்டுமானால் தங்களில் காணப்பட வேண்டிய நிலை என்ன என்பதைக் குறித்துச் சிந்திப்போம்.

### 1. தன்னையே வெறுமையாக்குதல் :

தன்னை வெறுமையாக்குகின்றவரால் மட்டுமே மானிடத்துக்கு சேவை செய்ய முடியும். இயேசுகிறிஸ்து சிலுவைச் சாவு மூலம் தம்மையே வெறுமையாக்கிக் கொண்டார். “தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்” பிலி. 2 : 7).

“நான்”, “தான்”, “எனது” போன்ற சுய நலச் சிந்தனைகளாலும் அகங்காரம், ஆணவம் போன்ற தீமைகளாலும் நிரப்பி வைத்திருக்கும் எவரும் பிறருக்குச் சேவை செய்ய முடியாது. “நான்”, “தான்”, “எனது” போன்றவற்றை அகற்றி, தன்னை வெறுமையாக்கும் எவரும் பிறருக்குச் சேவை செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றனர்.

கறுப்பினத் தலைவர் மார்ட்டின் லூத்தர் கிங் என்பவர் எனது இறப்பின் போது உரையாற்றினார். இவர் நோபல் பரிசு பெற்றவர். மேலும் 400 விருதுகளைப் பெற்றவர் என்று சொல்லாமல் இவர் மக்களுக்குச் சேவை செய்வதில் மகிழ்ச்சி அடைந்தார் என்று சொல்லுங்கள் என்று கூறினார்.





### 2. இறையன்பை வெளிப்படுத்துகிறவர்கள் : (I கொரி. 13)

திருமறையில் அன்புக்கு பல வார்த்தைகள் உண்டு ‘அகபே’ என்ற கிரேக்கச் சொல் இறைவனின் தியாக அன்பை வெளிப்படுத்துகிறது. அதாவது பிதாவானவர் தமது ஒரே மைந்தராகிய இயேசு கிறிஸ்துவையே நமக்குத் தந்து நம்மீது அன்பு செலுத்தினார். இங்கு பிதாவின் தியாகத்தை நாம் அறிகிறோம். கணவன் மனைவி இதேபோல் தங்களைக் கொடுத்து தங்கள் துணைவரை, துணைவியை அன்பு பாராட்ட வேண்டும். (Sacrificial love) தனது விருப்பத்தைத் தியாகம் செய்து தனது துணைவர், துணைவியின் விருப்பத்தை நிறைவு செய்வது தான் தியாக அன்பாகும். இது குடும்ப வளர்ச்சிக்கு மிகத் தேவை. இறைவனின் தியாக அன்பைப் புரியும் இடம் குடும்பமாகும்

### 3. இறை மன்னிப்பைச் செயல்படுத்துகிறவர்கள் :

(கொலோ 3 : 12, 13)

ஒருவரை ஒருவர் தாங்கி ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டு எனில் கிறிஸ்து உங்களை மன்னித்தது போல் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள். கணவன் மனைவி உறவு இன்பத்திலும் துன்பத்திலும் ஒருவரை ஒருவர் தாங்குதல், உற்சாகப்படுத்துதல் மேலும் கணவன் மனைவி ஒருவர் மற்றவர் மீது குறைகளைக் காண்கின்றபொழுது நாம் மன்னிக்க வேண்டும். ஏழு எழுபது தடவை மன்னிக்கவேண்டும் என்று கூறிய ஆண்டவர், நமக்குக் கற்றுத்தந்த ஜெபத்திலும் “எங்கள் கடனாளிகளுக்கு மன்னிக்கிறது போல் எங்கள் கடன்களை மன்னியும் என்றார்”. மன்னிப்பின் முக்கியத்துவத்தையும் அதன் வல்லமையையும் வெளிப்படுத்தும் இடம் குடும்பமாகும். இது குடும்பங்கள் வளர்ந்து ஓங்க மிகத் துணையாக உள்ளது.

### திருமண உறவு நிரந்தரமானது : (மாற். 10 : 1-12)

தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக. (மாற்: 10:9) அந்நாட்களில் தள்ளுதற் சீட்டைக் கொடுத்து மனைவியைத் தள்ளலாம் என்ற மோசேயின் நியாயப்பிரமாண விளக்கத்தைக் குறித்து பரிசேயர் கேள்வி கேட்டனர். அதற்கு ஆண்டவர் மனைவியை வைத்து துன்பப்படுவதைக் காட்டிலும் அவளை விட்டு விடுவது நல்லது என்ற பொருளில் மோசே சொன்னாரே தவிர இறைவன் இணைத்ததை மனுஷன் பிரிக்க வேண்டாம் என்பது தான் அவருடைய ஆலோசனையாக இருந்தது என்கிறார்.

சங்கீதம் 128ல் கூறியிருக்கிறபடி குடும்பங்கள் கடவுளுக்குப் பயந்து வாழ அழைக்கப்படுகின்றன. அப்பொழுது உழைப்பின் பலன் கிடைப்பதோடு மனைவி வீட்டிற்குள்ளே கனிதரும் திராட்சைக் கொடிபோல் அமைவது மட்டுமல்லாமல் பிள்ளைகளும் சமாதானத்தை வலியுறுத்தும் ஒலிவக்கன்றுகள் போல் இருப்பார்கள் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.

அருள்திரு. அறிவர் P.J. **ஜெயசீலன்**

**10-08-2014**

# கிறிஸ்தவத் திருமணம்

## CHRISTIAN MARRIAGE

| | |
|---|---|
| தொ.நூ. 2 : 18-25 | 1கொரி. 13 |
| திபா. 91 | மாற். 10 : 1-12 |

*“....ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.”* *மாற். 10 : 6*

**இறைவேண்டல் :** குடும்பங்களை வடிவமைத்தவரும் தொடக்கத்தில் மனிதனையும் மனுஷியையும் பகிரப்பட்ட அன்பில் இணைக்கவும் அவர்களை உருவாக்கிய கடவுளே! திருமண உடன்பாட்டில் இருக்கின்ற அனைவர்மேலும் உம் முகம் பிரகாசிக்கட்டும். அவர்கள் ஒருவரை ஒருவர் மகிழ்விக்கவும், மன்னிக்கவும், நம்பிக்கையோடு அரவணைக்கவும், விசுவாசம், நற்குணம் மற்றும் அறிவால் நிரப்பப்படவும் மகிழ்வான குடும்பமாக இருக்கவும் உதவியருளும். உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக இன்றும் என்றும் வாழ்ந்து அரசாளுகிறவருமாகிய இயேசுகிறிஸ்துவின் வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.

### “MARRIAGE IS NEITHER PARTNERSHIP NOR FELLOWSHIP BUT IT IS A CONVENANT.”

திருமணம் என்பது இறைவனுடன் கணவனும் மனைவியும் சேர்ந்து எடுத்துக் கொள்கிற ஒரு உடன்படிக்கையாகும். இன்று முதல் நன்மையிலும் தீமையிலும் வாழ்விலும் தாழ்விலும் சுகத்திலும் சுகவீனத்திலும் மரணம் நம்மைப் பிரிக்கும்வரை கடவுளுடைய தூய நியமப்படி உம்மை நேசிக்கவும் காப்பாற்றவும் கீழ்ப்படியவும் வாக்குக் கொடுக்கிறேன். இதனை இருவரும் கூறிய பின்னர் அந்தப் போதகர் கூறுவார், இதைக் கடவுளும் கேட்டார். நாங்களும் கேட்டோம், என்பதாகும். அதாவது (மரணம் பிரிக்கும்வரை) கடவுளோடு செய்து கொள்கிற உடன்படிக்கையாகும். எனவே திருமணத்தில் மூவர் பங்கு பெறுகின்றனர். (கணவன்+மனைவி+கடவுள்)

***1. எலும்பில் எலும்பும் உறவு :*** (ஆதி. 2 : 18 - 25) (Closeness)

உயிருள்ள எந்த மனிதனும் மனிதனின் எலும்பையோ மாம்சத்தையோ நேரில் பார்த்தது கிடையாது. அப்படி பார்க்க வேண்டுமென்றால் அது ஒரு விபத்து இடமாக இருக்கும், அல்லது ஒரு மருத்துவமனையின் அறுவை சிகிச்சைக் கூடமாக இருக்கும். எலும்புதான் கணவன் மனைவிக்கு வடிவம் கொடுப்பதும் பெலன் கொடுப்பதும். இந்த எலும்பு மாம்ச உறவு அவர்களைப் பிரிக்கக் கூடாமல் இணைந்து வாழச் செய்கின்றது. இது குடும்பங்களின் உறவுக்கு வெற்றிக்கு மிக அவசியம்.





“நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும் வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மானிட மகனுக்கோ தலைசாய்க்க இடமில்லை (லூக். 9 : 58).

மக்களுக்குச் சேவை செய்யும் பலர் தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள மக்களையும் தான் வளரச் செய்வர். மக்கள் சேவையில் காமராசர் விடுதலைப் போராட்டத்தில் 9 ஆண்டுகள் சிறைவாசம். 5 முறை சட்டமன்ற உறுப்பினர், 4 முறை நாடாளுமன்ற உறுப்பினர், 9 ஆண்டுகள் தமிழக முதல்வர், 5 ஆண்டுகள் அகில இந்தியக் காங்கிரசின் தலைவர், 12 ஆண்டுகள் தமிழ்நாடு காங்கிரசின் தலைமை. 2 முறை இந்தியப் பிரதமர்களை உருவாக்கினார் இவைகளுக்குப் பின்னும் அவர் கண்மூடும்போது அவருக்கென எஞ்சியது ரூ.60 (அறுபது) 10 கதர் வேட்டி-சட்டைகள், அவர் வாழ்ந்த வீட்டை அதன் உரிமையாளர் எடுத்துக்கொண்டார். அவர் பயன்படுத்திய வாகனத்தைக் கட்சி எடுத்துக்கொண்டது. அவருடைய உடலை அக்கினி எடுத்துக்கொண்டது.

ஆம், இயேசு கிறிஸ்து மானிட வாழ்வின் வளர்ச்சிக்காக, நிறைவாழ்வுக்காகத் தம்மையே வெறுமையாக்கி, சிலுவையில் கையளித்தார்.

### *2. தன்னையே தாழ்த்துதல் :*

தாழ்மை என்பது நமது உண்மை நிலை அறிவதும் பிறர் நல்வாழ்வுக்காக உழைப்பதுமாகும். பணிவாழ்வே பரமன் வாழ்வு. காரணம் அந்தப் பரமன் இயேசுவே பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவே வந்தேன் என்றார். தாழ்மையின் இலக்கணமாய் வாழ்ந்த ஆண்டவரால் தான் “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்து இருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும், மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள்” (மத். 11 : 28) என்று அழைக்கவும், சவாலான முன்மாதிரியான “நான் செய்தது போல நீங்களும் செய்யுங்கள்” எனக் கூறவும் முடிந்தது.

பாலஸ்தீன நாட்டில் பெரும்பாலும் தங்கள் வீட்டுக்கு வரும் சிறப்பு விருந்தினர்களின் பாதங்களைக் கழுவி விருந்துக்கு அழைப்பர். வருபவர்களின் கால்களைக் கழுவ அடிமைகளையும் நியமித்திருப்பர். ஆனால் இங்கு இயேசு தங்களில் யார் பெரியவர் என அடிக்கடி வாதாடும் சீடர்கள் தாழ்மையின் பாடத்தை கற்றுக்கொண்டு, பணிவிடை புரிய எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொடுக்க, தாமே

அடிமைக் கோலம் பூண்டு பணியாளராகத் துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு தம் சீடர்களின் கால்களைக் கழுவி நான் செய்தது போல நீங்களும் செய்யுங்கள் என்றார் (யோவா.13 : 15). சீடர்களுக்கு "நீங்கள் மக்களுக்கு பணியாற்றும் கருவி" என்பதை;னூ கற்றுக்கொடுத்தார்.

### 3. தன்னையே இறையன்புக்கு ஒப்படைத்தல் :

தாழ்மையும், வெறுமையாக்குதலும் உள்ளவர்கள் தான் இறையன்பின் இயக்கத்திற்கு தன்னை ஒப்படைக்க முடியும். மட்டுமல்ல ஒளிர்ந்திடவும் முடியும்.

நீ என்னை அன்பு செய்தால் தான் நான் உன்னை அன்பு செய்வேன் என்று சொல்லுபவன் மனிதன். இறைவனோ நீ என்னை அன்பு செய்யாவிட்டாலும் நான் உன்னை அன்பு செய்வேன் என்கிறார். எனது எதிர்பார்ப்புகளின்படி வாழ்ந்தால் தான் நான் உன்னை அன்பு செய்வேன் என்பவன் மனிதன். இறைவனோ எனது எதிர்பார்ப்புகளுக்கு எதிராக சென்றாலும் நான் உன்னை அன்பு செய்வேன் என்கிறார். அதாவது இயேசுவின் அன்பு நிலையான, நிச்சயமான, நிபந்தனையில்லாத, நிரந்தரமான அன்பு. "உலகில் வாழ்ந்த தமக்குரியோர்மேல் அன்பு கொண்டிருந்த அவர், அவர்கள் மேல் இறுதிவரையும் அன்பு செலுத்தினார்." (யோவா. 13 : 1). தன்னைக் காட்டிக்கொடுக்கும் யூதாசை அன்பு செய்தார். அன்பின் ஆழத்தில் தம்மிடம் வந்த ஏழை எளிய மக்களைக் கண்டு அதிகமாய் அன்பு செய்தார். ஒடுக்கப்பட்டோர், பசித்திருப்போர், சிறைப்பட்டோர், பார்வையற்றோர், தாழ்த்தப்பட்டோர், கைவிடப்பட்டோர், கைம்பெண்கள் இவர்களை ஆதரித்தார். (சங் 146 : 7-9)

இத்தகைய நலிந்தவர்களிடம் காட்டும் அன்பும், பரிவும் ஆண்டவருக்குக் காட்டும் அன்பாகும். "அன்னை தெரசா" வில் பிறந்து இந்தியாவில் கல்கத்தாவை மையமாகக் கொண்டு பணி செய்தவர் மானுடத்தால் புறக்கணிக்கப்பட்ட மக்களை மனதில் கொண்டும், அழுகி நாற்றமெடுத்த தொழுநோயாளியின் புண்களைக் கழுவி துடைத்து முத்தமிட்ட அனுபவங்கள் உலகையே இறைவனிடம் திரும்பிப் பார்க்க வைத்தது. பிற சமய அமைப்புகளே நடுநடுங்கின. இவர் அன்பால் இந்தியாவை கிறிஸ்து மயமாக்கிவிடுவாரோ என்று அஞ்சினர்.

மிக சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத். 25 : 40).





டாக்டர் ஆல்பர்ட் ஸ்வைட்சர் மருத்துவச் சேவையில் இருண்ட கண்டம் என்று அழைக்கப்பட்ட ஆப்பிரிக்காவின் மகாத்மாவாகப் போற்றப்படுகிறார். காரணம் எளிய மக்களுக்கு ஆற்றிய பணியாகும்.

இறைவனுக்கு நாம் செய்யும் அன்பை நாம் எளிய சகோதரருக்கும், உலகினரால் புறக்கணிக்கபட்டவர்களுக்கும் செய்யும் அன்பு சேவையாக மாற்றிடும் வகையில் ஒளிர்வோம்.

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
வறுமையில் வாழ்பவன் என் நண்பன்
வருத்தத்தில் இருப்பவன் சகோதரன்
அல்லல் படுபவன் என் நண்பன்
ஆபத்தில் இருப்பவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

அருள்திரு. N. **ஜாண் பென்டிங்**

சகோதரிகளிடையே தங்கள் வளமைகளை பகிரும் தன்மையும், மன்னித்தலும், ஒப்புரவாகுதலையும் உருவாக்குகிறது. அநீதி, சுதந்தரமின்மை, இனவெறி., பிரிவினைகள் உடைத்தெறியப் படுகிறது. கிறிஸ்துவை மையமாகக் கொண்ட புதிய உறவு உருவாகிறது.

திருவிருந்து எனும் திருவருட்சாதனத்தின் வழி கடவுளின் அருளாகிய விடுதலை, அனைவருடனும் நல்லுறவுடன் வாழ்தல், இறையரசின் தகவுகள் இவ்வுலகில் உருவாதல் போன்றவற்றை பெருக்குகிறோம்.

- திருவிருந்தில் தவறாது பங்கேற்போம்
- திருவிருந்தில் மகிழ்வுடன் பங்கேற்போம்
- இயேசு கிறிஸ்து வழங்கும் புதுவாழ்வை பெறுவோம். உடன்படிக்கையை உறுதிப்படுத்துவோம்.
- அனைவருமனும் அமைதியாக வாழ உறுதி ஏற்போம்.
- அனைவருடனும் நல்லுறவுடன் வாழ்வோம்.
- சமூக நல்லிணக்கத்திற்காக உழைப்போம்.
- அநீதிகளை கழைந்திடுவோம்.

அருள்திரு. J. **ஸ்பர்ஜன் இன்ப ஜெயா**





அடையாளமாக, அனுபவமாகப் புரிந்து கொள்ள வேண்டும். திருமுழுக்கென்பது "புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும், புதுப்பிக்கும் தூய ஆவியினாலும் கடவுள் நம்மை மீட்டெடுக்கும் உன்னத அனுபவம்" (தீத்து 3:5). மீட்பு புதுவாழ்வினை நமக்கு அருளுகிறது. கிறிஸ்துவின் தூய்மை அனுபவத்தோடு நம்மை இணைக்கிறது. திருமுழுக்கு ஓர் அருள் அடையாளமாயிருப்பதினால், திருமுழுக்கின் உயரிய அனுபவத்தை அதனைப் பெற்றவர் தமது உள்ளான வாழ்வில் அனுபவித்து, அதனுடைய நிறைவினைத் தனது வெளிப்புற வாழ்வில் சான்றாளராக வெளிப்படுத்துகிறார். அதாவது திருமுழுக்கினால் ஒருவர் பெற்றுக் கொள்ளும் மாற்றம் (மீட்பு) அவரது தோற்றத்தில் அல்ல, செயலிலே அமைந்துள்ளது. அருள் அடையாளமான திருமுழுக்கினைக் கீழ்க்காணும் நிலைகளில் சிந்திப்பது இன்றைய சூழலில் ஏற்புடையது.

## 1. தீமையிலிருந்து மீட்கும் அருள் அடையாளம் :

(விப. 14:15-31)

இஸ்ரயேலர் விடுதலைப் பயணப் பாதையின் முன்னால் செங்கடலும் பின்னால் பார்வோன் படைவீரர்களும் தீமை தருகின்றவர்களாக இருந்தபோது, இத்தீமையினால் அழிந்து போகாதபடி கடவுள் அவர்களை மீட்டார். மேகமும், கடலும் தீமையிலிருந்து இஸ்ரவேலரை மீட்கும் அருள் அடையாளமாகவும்; தீமையினை அழிக்கும் ஆற்றலாகவும் அமைந்திருந்தது. இந்நிகழ்வினைப் பவுல் கொரிந்து திருச்சபைக்கு எழுதும்போது" அவர்கள் அனைவரும் மோசேயோடு இணைந்திருக்கும்படி மேகத்தாலும் கடலாலும் திருமுழுக்குப் பெற்றார்கள். அவர்கள் அனைவரும் ஒரே ஆன்மிக உணவை உண்டனர்" (I கொரி. 10:2,3). இஸ்ரயேலர் மோசேயோடு இணைந்திருக்க கடவுள் பயன்படுத்திய "மேகம்" எகிப்தியருக்கு இருளாகவும் இஸ்ரயேலருக்கு இரவில் ஒளியாகவும் அமைந்தது; இதனால் இரவில் எந்நேரத்திலும் அவர்கள் இவர்களை நெருங்கவில்லை" (வி.ப.14:20). மேகம் ஒன்று ஆனால் அதின் செயல்பாடு இரண்டு. இருளில் ஒளியான மேகம் இருளான எகிப்தியரிடமிருந்து இஸ்ரயேலரை மீட்டது. அருள் அடையாளமான திருமுழுக்கு அதனைப் பெற்றவர்களைத் தீமையிலிருந்து மீட்டதோடு மட்டுமன்று தொடர்ந்து தீமையில் விழாதபடி காக்கிறது. திருமுழுக்கு பெற்றோர் இருளில் ஒளிர்வர்.

செங்கடலைக் கடந்த அனுபவம் திருமுழுக்கின் அனுபவமாகச் சொல்லப்படுகிறது. "கடல் இஸ்ரயேலருக்கு அரணாக விளங்க அவர்கள் கடல் நடுவே உலர்ந்த தரையில் நடந்து சென்றனர்" (வி.ப.14:22). ஆனால் கடல் எகிப்தியர் அனைவரையும் (தீமை) அழித்துப்போட்டது, அவர்களில் ஒருவர் கூட தப்பவில்லை. (வி.ப.14:23-28). ஆகவே கடல் வாழ்வின்

அடையாளமாக இஸ்ரவேலருக்கும் அழிவின் அடையாளமாக எகிப்தியருக்கும் அமைந்தது. திருமுழுக்குத் தீமையிலிருந்து விடுபடுகிறவர்களுக்கு வாழ்வின் அடையாளமாகவும், தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற அழிவின் அடையாளமாகவும் புரிந்து கொள்ளப்படுகிறது. அதோடு திருமுழுக்கு கிறிஸ்துவின் சிலுவையோடு நம்மை இணைக்கின்றது. சிலுவை மீட்கப்படுகிறவர்களுக்கே வாழ்வின் அருள் அடையாளமாகவும், தீமையினை அழிக்கும் அடையாளமாகவும் உள்ளது. மட்டுமல்லாது கிறிஸ்துவின் சிலுவையினைப் பற்றிக் கொள்கிறவர்கள் திரும்ப இருளின் வாழ்வில் நுழையாதபடி ஒளியின் அனுபவத்தோடு வாழ முடியும்.

## 2. தூய்மையாதலின் அருள் அடையாளம் : (தீத்து 3:5)

தீமையிலிருந்து மீட்கும் திருமுழுக்குத் தொடர்ந்து தூய்மையாக வாழும் அனுபவத்தினைத் தருகின்றது. புற இனத்தவர் யூதராக மாறுகின்றபோது அவர்களைப் புதிதாய்ப் பிறந்தவர்கள் அல்லது தூய்மையானவர்கள் என அழைப்பதுண்டு. காரணம் புற இனத்தவரை தூய்மையற்றவர்கள் என யூதர்கள் எண்ணினர், புறஇனத் தூய்மைக் கேடு மறைந்திட திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. யூத சமய நம்பிக்கையில் தண்ணீர் இனத்தூய்மைக்கேட்டை அகற்றுகிறது எனும் நிலையில் தான் பவுல் தீத்துவுக்கு புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும், புதுப்பிக்கும் தூய ஆவியினாலும் கடவுள் நம்மை மீட்டார்" (3:5) என்று எழுதுகிறார். புதுப்பிறப்பு பெறும் அனுபவம் ஒருநாள் அனுபவம். ஆனால் புதுப்பித்தல் அல்லது தூய்மையாகுதல் ஒவ்வொரு நாளும் அனுபவமாக மாறுகிறது. இதனை யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடுகையில் தண்ணீராலும் ஆவியாலும் பிறத்தல் என்கிறார் (யோ.3:5). "Water and spirit denote cleansing and regeneration".

திருமுழுக்கு ஓர் அருள் அடையாளமாக ஒவ்வொரு நாளும் நம்மைப் புதுப்பித்து கடவுளின் திட்டம் நம்மில் வெளிப்படவும், அவரது சித்தத்தின்படி வாழவும் நமக்கு வழிகாட்டுகிறது. இயேசு திருமுழுக்குப் பெற்று தண்ணீரிலிருந்து கரையேறின உடனே வானம் திறந்ததையும் கடவுளின் ஆவி அவர்மேல் இறங்கி வருவதையும் கண்டார், "என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" எனும் குரலையும் கேட்டார். பாவமில்லாத இயேசு, மக்கள் மனமாறுவதற்காக யோவான் கொடுத்த திருமுழுக்கினை ஏற்றார் (மத். 3:11). தூய ஆவி எனும் நெருப்பால் திருமுழுக்குக் கொடுக்கும் இயேசு யோவானின் திருமுழுக்கை ஏற்றார். (மத்.3:11). ஆகவே அவர் கடவுளின் அன்பார்ந்த மகன் ஆனார். திருமுழுக்கின் வாயினால் உலகிற்கு அன்பான





முன்னடையாளமாய் நிறைந்துள்ளது. இதுவே திருச்சபையின் புதிய பஸ்கா உணவு ஆகும். இயேசு கிறிஸ்து புதிய சமூகத்தை உருவாக்குவதற்காக தம் உடலையும், இரத்தத்தையும் சிந்தினார். சிந்திய இரத்தத்தின் வழி புது சமூகத்தோடு உடன்படிக்கை செய்து கொண்டதை நினைவு கூரும்படி எக்காலத்திற்கும் உரிய மேலான உடன்படிக்கையை நிறுவுகிறார்.

திருவிருந்தில் பங்கேற்கும் பற்றுறுதியாளர்கள் ஆண்டவர் தங்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையை அறிந்து, உணர்ந்து, வாழ்வதற்கான வலிமையான அறிவுத்தலே திருவிருந்து ஆகும்.

## 3. உறவின் விருந்து

கிறிஸ்தவ பற்றுறுதியாளர்கள் மகிழ்வுடன் இவ்விருந்தில் பங்கேற்க வேண்டும். திருவிருந்து கடவுளின் கருணையைக் கொண்டாடும் வழிபாடு. திருவிருந்து இயேசுகிறிஸ்துவின் விலைமதிக்க இயலாத உயர்ந்த அன்பை வெளிப்படுத்தும் விருந்து. (ரோம. 5:8). ஆண்டவரின் அன்பை மன்னிப்பின் வழியாக ருசித்தவர்கள் கிறிஸ்தவ அன்புடன் வாழ வேண்டும். சிறந்த அன்பு அனைவருடனும் நல்லுறவில் வாழ்வதிலேயே வெளிப்படுகிறது. அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிற படியால் அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம். 1 கொரி. 10:17) திருவிருந்து வழியாக பற்றுறுதியாளர்கள் கடவுளுடனும், மற்ற சகோதர சகோதரிகளுடனும் நல்லுறவில் வாழ வழி வகுத்துள்ளது.

கடவுளின் வார்த்தையால் உந்தப்பட்டு திருவிருந்தின் வழியாக ஒருவரோடொருவர் இணைக்கப்படுகின்றனர்.

ஜஸ்டின் மார்டையர் திருவிருந்தின் வழி நாம் கிறிஸ்துவுடன் தொடர்பு கொள்கிறோம். பிறருடனும் தொடர்பு கொள்கிறோம் ஒன்றிணைக்கப் பெறுகிறோம் என்பதால் தூய ஐக்கியம் எனும் எனும் பெயர் பெற்றது.

தாமஸ் அக்குவினாஸ் திருவிருந்து விழாவின்போது நாம் ஓரிடத்தில் வடி (திருச்சபை) ஒரே அப்பத்தில் பங்குபெற்று, ஒரே பாத்திரத்தில் (one cup) பானம் பண்ணுதல் வழியாக கிறிஸ்துவின் திருவுடலோடு ஐக்கியமாகிறோம். பங்கேற்கும் அனைவரோடும் ஐக்கியமாகிறோம்.

திருவிருந்தில் பங்குபெறுவதன் வழி, மொழி வேறுபாடுகள், சாதீய வேறுபாடுகள், குழு மனப்பாங்கு தகர்த்தெறியப்பட்டு புதிய இறையரசு சமூகம் கட்டியெழுப்பப்படுகிறது. இறைக்குடும்பமாக வாழும் சகோதர /

விடுதலையை சொந்தமாக்கவும், பாவ வாழ்விலிருந்து விடுதலை பெறவும் அழைக்கப்படுகிறோம். (1 யோவா. 1:7, ரோம 5:9)

I கொரி. 11:24, 25 வாக்கியங்களில் என் நினைவாகச் செய்யுங்கள், என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள் எனக்கூறும் போது சபை கூடி வரும்போதெல்லாம் திருவிருந்து நிகழ்வினை நடத்துவது மட்டுமல்லாது இயேசு கிறிஸ்து பாவத்தை குறித்து கண்டித்து வைத்தார். சமயவல்லுநர்களுடைய பிற்போக்குத்தனத்தை கண்டித்துரைத்தார். ஏழைகள் ஒடுக்கப்பட்டோர், ஓரங்கட்டப்பட்டோர், பெண்கள், குழந்தைகளின் விடுதலை வாழ்வுக்காக குரல் கொடுத்தார். எனவே அவர் இரத்தம் சிந்திட நேரிட்டது. திருவிருந்தில் பங்கேற்போரும் இந்த விடுதலை உணர்வுடன் பங்கேற்க வேண்டும்.

## 2. உடன்படிக்கையின் விருந்து

இஸ்ரயேலர் எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை அடைந்தனர். அவர்கள் மேற்கொண்ட விடுதலைப்பயணத்தின் போது சீனாய் மலையில் கடவுள் மோசே வழியாக இஸ்ரயேல் மக்களோடு உடன்படிக்கை செய்து கொண்டார். மோசே அப்போது மோசே இரத்தத்தை எடுத்து மக்கள் மேல் தெளித்து, இவ்வனைத்து வார்த்தைக்குமிணங்க, ஆண்டவர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையின் இரத்தம் இதோ என்றார் (வி.ப. 24:8)

இஸ்ரயேலர் இறைவனுடைய உடன்படிக்கையை குறித்துக் கொண்டனர். சிலைவழிபாட்டில் ஈடுபட்டனர். எனவே இறைவாக்கினர் எரேமியா வழியாக புதிய உடன்படிக்கையை முன்னறிவித்தார். இதோ, நாள்கள் வருகின்றன. நான் இஸ்ரயேல் வீட்டாரோடும் யூதாவின் வீட்டாரோடும் புதிய உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வேன் என்கிறார் ஆண்டவர். (எரே 31:31)

கடவுள் முன்னறிவித்த இந்த புதிய உடன்படிக்கையை இயேசு கிறிஸ்து மனுக்குலம் அனைத்துடனும் செய்தார். தனது சொந்த இரத்தத்தில் செய்தார். இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருக்குச் சிந்தப்படும் இரத்தம் (மாற். 14:24; மத். 26:28, லூக். 22:208) I கொரி. 11:25)

திருவிருந்து இஸ்ரயேலர் அடிமைத்தன நாட்டிலிருந்து விடுதலை பெற்றதற்காக கொண்டாடப்பெற்ற பஸ்கா நினைவு ஆசரிப்பிலும், சீனாய் மலை மீது நடைபெற்ற உடன்படிக்கை (வி.ப. 24), விருந்து ஆகியவற்றில்





மைந்தர் என்று அறியப்பட்ட இயேசு தமது வாழ்வு முழுவதும் தூய்மையாக வாழ்ந்தார், தூய்மையாக நடந்தார், தூய்மையின்றி வாழ்ந்தோரைத் தூய்மையாக்கினார், நலிந்தோருக்கு நன்மை செய்தார். தூய்மையாகுதலின் அருள் அடையாளமான திருமுழுக்கு நம்மைத் தூய்மையாக்குவது மட்டுமல்லாது, நம் செயலினைக் காண்பவர்களும் தூய்மையாய் வாழ்ந்திட வழி செய்கிறது.

## 3. இறையாளுகையின் அருள் அடையாளம் : (யோ. 3:1-8)

திருமுழுக்கின் வாயிலாக இறையாளுகையின் தன்மைகளை வாழ்விலே சொந்தமாக்குகிறோம். பாவத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைக்கும் அனுபவமே திருமுழுக்கு. இறையாளுகை நீதியின் ஆளுகையாகும். நீதியாய் உலகில் வாழாதவர்கள் இறையாளுகையில் பங்கு பெறமுடியாது. வாழ்வின் அநீதிகள் அனைத்தையும் அகற்றி நீதியாய் வாழ்வதே மறுபடியும் பிறக்கும் அனுபவம். யோவான் நற்செய்தியாளர் இதனை "மறுபடியும் பிறவாதவன் கடவுளின் அரசைக் காணமாட்டான் (யோ. 3:5) என்கிறார். நாம் அனைவரும் இறையாளுகையின் மக்களாதலே மறுபிறப்பின் வாழ்வாகும். நல்ல சமய அறிவு, யூதர் என்னும் அடையாள உரிமை போன்றவை கடவுளோடு உறவு கொள்ளவும், இறையாளுகையின் மக்களாக முடியும் எனும் நம்பிக்கையோடிருந்த நிக்கதேமுவுக்கு உனது நம்பிக்கை சரியல்ல இவ்வாழ்விற்கு "மறுபிறப்பு" (New Existence) தேவை என இயேசு நாதர் உணர்த்தினார்.

மறுபிறப்பு என்பது பழையன ஒழிந்து புதிதாகும் வாழ்வு (II கொரி 5:17) துர்க்குணம், கபடம், வஞ்சகம், பொறாமை, புறங்கூறுதல் போன்றவற்றை ஒழித்திடும் வாழ்வாகும் (I பேது 2:2). நமது வாழ்வோடு தொடர்புடைய ஜென்ம சுபாவங்கள், மாமிச இச்சை, உலகு சார்ந்த ஆசைகள் இவைகளைக் களைந்துவிட்டு மனம் புதிதாகுதலினாலே மறுரூபமாகும் அனுபவம் (ரோமர் 12:11). இதனை R.V.G. Taskar என்பவர் குறிப்பிடும்போது "Emergence from darkness to light" என்கிறார். இருளிலிருந்து விலகி ஒளியாக வாழும் அனுபவம். ஆகவே தான் இயேசுநாதர் "நான் உலகத்தில் இருக்கையில் உலகிற்கு ஒளியாயிருக்கிறேன் (யோவா. 9:5) என்றார். ஒளியான இயேசுவில் நிலைத்திருக்கும் ஒளியின் தன்மைகளை உலகிற்கு வெளிப்படுத்தி நாம் பெற்றுள்ள திருமுழுக்கு இறையாளுகையின் அடையாளம் என உலகிற்கு எடுத்துரைப்போம். மறைந்திருக்கும் வெளிச்சமாக அல்ல, உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள் (மத். 5:16).

அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்**

**24-08-2014**

# திருவிருந்து எனும் திருவருட்சாதனம்

## THE SACRAMENT OF THE HOLY COMMUNION

இ.ச. 26 : 1-11 — 1கொரி. 11 : 23-34

திபா. 16 — மாற். 14 : 12-26

*"...என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்." 1கொரி. 11 : 24,25*

**இறைவேண்டல் : ஆற்றல்மிகு கடவுளே! உமது குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பி மனுக்குலத்தை மீட்கவும், எங்களை உம்மோடு ஒப்புரவாக்கவும், உம் தெய்வீக அன்பை தாராளமாய் ஈந்தவரே! திருவிருந்து என்னும் திருவருட்சாதனத்தை உம் திரு குமாரனின் மரணத்தை ஞாபகப்படுத்துதல் புது உடன்படிக்கையாக்கியதால் எங்கள் மனமுவந்த நன்றியை செலுத்துகிறோம். நாங்கள் அதில் பங்குபெறுதலின் வழியாய் அதன் புனிதத்தையும், பயபக்தியான நிலையையும் எண்ணி பார்க்க உதவிசெய்து நாங்கள் உள்ளார்ந்த நிலையில் மாற்றம் பெற்று சமூகத்தில் பணிசெய்ய தகுதிபடுத்தும். இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் கேட்கிறோம் பிதாவே. ஆமென்.**

சாக்கிரமெந்து எனும் சொல் 'Sacramentum' எனும் இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தெர்த்துலியன் என்பவர்தான் சாக்கிரமெந்து எனும் சொல்லை முதன்முறையாக பயன்படுத்தியுள்ளார். 'அருளின் அடையாளம்' என்பது பொருள். கடவுளின் உள்ளான அருளுக்கு வெளிப்படையாய் பார்க்க கூடிய அடையாளமே சாக்கிரமெந்து. மறைபொருள், இரகசியம், எனும் சொற்களில் திருமறையில் கையாளப்பட்டுள்ளது. (எபேசி 5:32).

திருமுழுக்கு, திருவிருந்து எனும் இரண்டு திருவருட்சாதனங்கள் சீர்திருத்த திருச்சபைகளில் கடைபிடிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| ஆண்டவரின் இறுதி விருந்து | - Lord's Supples |
| நற்கருணை | - Eucharist |
| தூய ஐக்கியம் | - Holy's Communion |
| ஆண்டவரின் பந்தி | - Lord's Table |
| அப்பம் பிடுதல் | - Breaking of the Bread |

எனப் பல பெயர்களால் திருவிருந்து அழைக்கப்படுகிறது.





உரோமன் கத்தோலிக்க திருச்சபை உட்பொருள் மாற்றுக் கொள்கை "(Transsubstanciation) எனும் கொள்கையையும், லூதரன், ஆங்கலிக்கன் திருச்சபைகள் "உட்பொருள் இணைவுக்கொள்கை (Consubstranciation) எனும் கொள்கையையும் சபையாளுகை மற்றும் மெதடிஸ்ட் திருச்சபைகள் நினைவு கூறல் (Remembrance) எனும் கொள்கைகயையும் கடைபிடிக்கின்றன.

"திருவிருந்து கடவுளின் ஈவு. தூய ஆவியாரின் ஆற்றல் வழியாக கிறிஸ்துவில் நமக்காக கடவுள் உருவாக்கி தந்துள்ள ஈவே திருவிருந்து ஒவ்வொரு கிறிஸ்தவரும் இம்மீட்பின் ஈவை கிறிஸ்துவின் உடல், உதிரம் இவற்றில் ஐக்கியமடைவதன் வழியாக பெற்றுக்கொள்கிறார். அப்பத்தையும் உதிரத்தையும் உட்கொள்வதின் வழியாக கிறிஸ்து தம்மோடு நம்மை ஐக்கியமாக்க கடவுள் உரிமை தருகிறார் (BEM document)

### 1. உன்னத விடுதலையின் விருந்து

திருவிருந்து இயேசு கிறிஸ்துவின் வழியாக வரும் விடுதலையை வலியுறுத்தும் விருந்து. இயேசுகிறிஸ்து மேல் வீட்டறையில் தமது சீடருடன் பாஸ்காவிருந்து உண்ணும்போது இது எனது உடன்படிக்கையின் இரத்தம் பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம் மாற் 14:24; என்றும் பலருடைய பாவ மன்னிப்புக்காக சிந்தப்படும் இரத்தம் மத் 26:28 எனவும் பார்க்கிறோம். யோவா. 6:51-58 வரையுள்ள பகுதிகளை படித்துப்பார்க்கிற போது எனது கதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதிநாளில் உயிர்த்தெழச் செய்வேன். (யோவா. 6:54) என்றும் படிக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் இறப்பு, சிந்திக்கப்பட்ட இரத்தம் வழியாக பாவத்திலிருந்து விடுதலை பெறுகிறோம்.

திரெந்து மாமன்றம் (Council Bioend) திருவிருந்தின் பலன் பாவ மன்னிப்பு அல்ல. இது பாவ மன்னிப்புக்கென்று பலருக்காக சிந்தப்பட்ட புது உடன்படிக்கைக்குரிய என் இரத்தம் என்று இயேசு கூறும் போது பாவ மன்னிப்புக்காக அவரது இரத்தத்தை குடிக்கச் சொல்லாமல் பாவமன்னிப்புக்காக அவரது குருதி சிந்தப்பட்டது என்று விளக்கம் தருகிறது. இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறும் அனுபவத்தோடு பஸ்கா உணவை உண்டது போலவும், ஆண்டு தோறும் நிசான் மாதம் 14ம் நாள் விடுதலையை நினைவுகூர்ந்து பஸ்கா விழாவை கொண்டாடுவதையும் போல இயேசு கிறிஸ்து திருவிருந்து விழாவை நிறுவினர். திருவிருந்தில் பங்கேற்பதன் வழியாக கிறிஸ்துவின் வாழ்வு, மரணம், உயிர்த்தெழுதல் வழியாக மானிடம், முழுபடைப்பும் பெற்றிருக்கும்

***எஸ்தரின் வாழ்க்கையில் கடவுளின் ஆற்றல் நிறைந்து காணப்பட்டது.***

எஸ்தர் தான் ஒரு யூத ஸ்திரீ என்பதை யாரிடமும் அறிவிக்கவில்லை.

அவள் ஒரு கீழ்ப்படிதலுள்ள மகளாக திகழ்ந்ததாக நாம் திருமறையின் மூலமாக அறிந்து கொள்ள முடியும். ஒரு குறிப்பிட்ட நாளில் யூதரெல்லாரும் கொலை செய்யப்பட வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டதால், தேசமெங்கிலுமுள்ள யூதர்கள் உபவாசம் பண்ணி ஜெபித்தார்கள். அநேகர் இரட்டுடுத்தி சாம்பலில் கிடந்தார்கள். விவரமறிந்த எஸ்தர் இது மௌனமாயிருக்கக் காலமல்ல என உணர்ந்து, எழும்பினாள். ராஜாவிடம் தன் ஜனத்திற்காக விண்ணப்பித்தார். இராஜ்யத்தின் பாதிமட்டும் கேட்டாலும் தருவேன் என்று தன்னிடம் ராஜா வாக்குப்பண்ணினபோது என் வேண்டுதலுக்கு, என் ஜீவனும் என் மன்றாட்டுக்கு, என் ஜனங்களும், கொடுக்கப்படுவதாக என்று வேண்டினார். எஸ்தர் இராஜாத்தியின் வசதிகள், அந்தஸ்து இவற்றை விட அடிமைகளைப் போல வாழ்ந்து கொண்டிருந்த அவள் ஜனத்தின் உயிரைப் பெரிதாக நினைத்தாள். எஸ்தர் ராஜாத்தியின் தியாகம் தான் என்னே! உயர்ந்த எதிர்நோக்குடன் செயல்பட்டவர். எஸ்தரின் கடவுள் தமது ஜனத்தை கண்ணுறங்காமல் காக்கும் கடவுள். அவர் தூரத்திற்கும், சமீபத்திற்கும் கடவுள் நம்மை ஏற்ற வேளையில் உயர்த்த அவர் போதுமானவர். தேவனின் கிரியைகள் வெளிப்படையாக எல்லாராலும் பார்க்க முடியாவிட்டாலும், அவர் செயலில் வல்லவர். கடவுளின் கிரியைகள் மகத்துவமானவைகள் நமக்கு கடவுள் கொடுத்துள்ள, வாய்ப்புகள், வசதிகளின் நோக்கங்கள் நாம் உணர்ந்து செயல்படவேண்டும்.

***இயேசு பெண்களைக் கனப்படுத்தினார்***

ஜெபாலயம் ஓரிடத்தில் இருந்ததால் யூத ஆண் மக்கள் மட்டுமே தேவனைத் தொழுதனர். ஆனால் பெண்களோ வீட்டில் தனித்து விடப்பட்டனர். ஆனால் இயேசு கிறிஸ்து நடத்திய ஜெபக் கூட்டங்களுக்கும், பெண்கள் ஏராளமாய் வந்து கலந்து கொண்டனர். அந்நாட்களில் ரோமர் இஸ்ரவேலை ஆண்டனர் ரோம சாம்ராஜ்யத்தின் பெண்கள் அடிமைகளை விட கேவலமாகவே நடத்தப்பட்டனர்.

ஆனால் இயேசு கிறிஸ்து பெண்களைக் கனப்படுத்தினார். பொது இடங்களில் அவர்களுடன் பேசினார். அவர்களது தேவைகளைச் சந்தித்தார். அவர்களது சேவையை ஏற்றுக் கொண்டார். உயிர்த்தெழுந்த



**31-08-2014**

# நற்செய்தியும் சமயப் பன்மையும்

## THE GOSPEL AND RELIGIOUS PLURALISM

| | |
|---|---|
| எசா. 45 : 1 - 8 | திப. 17: 16 - 31 |
| திபா. 67 | மத். 15: 21 -28 |

*"....அம்மா உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்...." மத். 15:28.*

**இறைவேண்டல் :** கடவுளே! உம்மால் மீட்கப்பட்ட மக்களாகிய நாங்கள், சமய கொள்கையை மதிக்காத எல்லா தேசத்திற்கும் ஒப்புரவாக்குதலின் நற்செய்தியை அறிவிக்க உம் மகனால் உத்தரவிடப்பட்டோம். சமய பன்மையுடைய ஒரு சமுகத்தில் வாழும் நாங்கள் உமது நற்செய்தியின் ஒப்பற்றத்தன்மையை வெளிப்படுத்துவதில் அதிக சவால் நிறைந்தவர்கள் உமது தூய ஆவியரின் ஞானம், தைரியம் மற்றும் ஆற்றலை எங்களுக்கு தந்து உமது ராஜ்யத்திற்காக மக்களை ஜெயிக்க உதவிசெய்யும் கிறிஸ்துவின் திருப்பெயரால் வேண்டுகிறோம். ஆமென்.

நாம் வாழும் இந்தியத்திருநாடு பல்சமயச் சூழலுடைய நாடு. நமது குமரி மாவட்டத்தில் கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழ்ந்து வந்தாலும் இந்தியாவில் (சராசரியாக) குறைந்த விழுக்காடு அளவுதான் வாழ்கின்றனர். இந்தப் பின்னணியத்தில் கிறிஸ்துவின் நற்செய்தியை வாழ்வில் வெளிப்படுத்தி, ஒரே கடவுளின் மக்களாக அனைவரிடமும் இறையன்பைப் பகிர்ந்து வாழ வேண்டியது இறைமக்களின் கடமையாகும். அதே வேளை கடவுளின் பெயரில் சக மனிதர்களிடம் அன்பைப் பகிராமல், பகைமையை வெளிப்படுத்துவதைத் திருமறை கடுமையாக எச்சரிக்கிறது. தூய யோவான் அடிகளார், கடவுளிடம் அன்பு செய்வதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதர, சகோதரிகளைப் பகைப்போர் பொய்யர் என்று சூளுரைக்கிறார் (1யோவா. 4:20). எல்லாச் சமயத்தவரையும் கடவுள் நேசிக்கிறார் என்ற உண்மையை இறைமக்கள் உணர்ந்து கொள்ளச் செய்வதை இன்றைய திருமறைப் பகுதிகள் தெளிவாக எடுத்தியம்புகின்றன. எனவே இறைமக்கள் அனைவரும் எல்லாச் சமயத்தவர்களையும் மதித்து (respect) அன்பு செய்து (Love affection) அங்கீகரித்து (Accept) நற்செய்தியின் தகவுகளை வாழ்வில் வெளிப்படுத்தி வாழவேண்டியது கடமையாகும். இன்று சமயங்களிடையே வன்முறைகள் தலைவிரித்தாடுகின்ற இச்சூழ்நிலையில் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய அணுகுமுறை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைத் தரப்பட்டுள்ள திருமறைப் பகுதிகள் சார்ந்து தியானிப்போமாக.

### 1. அன்பை வெளிப்படுத்தவேண்டும் : (சசா. 45:1)

இஸ்ரயேலர் தங்களுடைய அரசர்களைக் கடவுளால் அருட்பொழிவு செய்யப்பட்டவர்கள் என்றும், கடவுளுடைய பதிலாளாக அரசர்கள் அவர்களை ஆளுகை செய்வதாகவும் நம்பினர். எனவே தான் ஆண்டவர் அரசாளுகிறார் எனத் திருப்பாடல்கள் வாயிலாகப் போற்றினர் (திபா. 97:1; 99:1..........). இந்நிலையில் சைரஸ் (கோரேசு) என்ற பாரசீக அரசனைத் தாமே அருட்பொழிவு செய்ததாகக் கடவுள் குறிப்பிடுகிறார். அது மட்டுமல்ல, அவருடைய வலக்கரத்தைப் பிடித்துக் கொண்டு .......... (எசா. 45:1 ஆ) என்று கூறி தமக்கும், அவருக்குமிடையேயிருக்கும் ஆழ்ந்த உறவை வெளிப்படுத்துகிறார். பிற இனத்தவர்களும், சமயத்தவர்களும் தீண்டத்தகாதவர்கள் என எண்ணிய இஸ்ரயேலருக்கும், ஏன், இறைவாக்கினர் எசாயாவுக்கும் இது வியப்பாயிருந்திருக்கும் என்பதில் ஆச்சரியமேதுமில்லை. கடவுள் தம்முடைய மீட்பின் பணியில் சமய எல்கைகளைக் கடந்து மக்களைப் பயன்படுத்துகிறார். அவர்களிடம் தமது அன்புறவைப் பகிர்ந்து கொள்ளுகிறார். எனவே அவரது பிள்ளைகளும் சக மனிதர்களிடம் அன்பு செய்து வாழ வேண்டும் என்பதைக் கட்டளையாகத் தருகிறார் (லேவி. 19:18). இயேசு கிறிஸ்துவும் இவ்வுண்மையைத் தெளிவாக உணர்த்துகிறார் (மத். 19:19). அதோடு நம் உயிரையே ஈந்து உறவுக்குப் பாலமாகி, அன்பின் மிகுதியை வெளிப்படுத்தினார். இன்று நம் உடன் வாழும் பிற சமய நம்பிக்கையுள்ள மக்களும் கடவுளின் பிள்ளைகள் என்ற உணர்வுடன் அன்பை வெளிப்படுத்தி வாழ அழைக்கப்படுகிறோம்.

### 2. மதிக்க வேண்டும் : (திப. 17:22)

துய பவுலார் ஏதென்ஸ் நகரத்தில் (அத்தேனே பட்டணத்தில்) சுற்றித் திரிந்த வேளை நகரம் முழுவதும் சிலைகளால் நிறைந்திருக்கிறதைக் கண்டார். எனினும் அங்கிருந்த பிறசமய நம்பிக்கையாளர்களிடமும் மெய்யியல் அறிஞர்களிடமும் (Philosophers) கலந்துரையாடினார் (திப. 17:17,18). அவர்கள் சமய நம்பிக்கையைக் கொச்சைப்படுத்தாதபடி அவர்களை மதித்து, அவர்களுடன் பொறுமையாக உரையாடினார். அவர்களது சமயப் பற்றை மெச்சினார் (17:22). இதைக் கண்டு வியந்துபோன அவர்கள் பவுலாரை அரயோப்பாகு மன்றத்திற்கு (மார்ஸ் மேடை) அழைத்துச் சென்றனர் (17:19). ஏதென்ஸில் இருந்த தொழுகைக் கூடமொன்றில் அறியப்படாத தெய்வத்துக்கு என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்ட பவுலார் அதை மையமாக வைத்துக் கடவுளைக் குறித்த செய்தியைத் தெளிவாக விளக்கி அவர்களது கவிஞர்களின் கவிதைகளையும் மேற்கோள் காட்டினார் (17:28). பவுலார், பிறசமய நம்பிக்கையுடைய மக்களையும்,



**14-09-2014** மகளிர் ஞாயிறு

## மகளிரை ஆற்றல்படுத்தும் இயேசு

## JESUS EMPOWERS WOMEN

| | |
|---|---|
| எஸ். 7 : 1-10 | 1திமொ. 1: 1-5 |
| லூக். 1 : 46-55 | லூக். 13: 10-17 |

*"தம் கைகளை அவர் மீது வைத்தார். உடனே அவர் நிமிர்ந்து கடவுளைப் போற்றி புகழ்ந்தார்." லூக். 13 : 13*

**இறைவேண்டல் : எங்கள் பொற்றோராகிய கடவுரே! வாழ்வின் ரகசியத்தை அதன் எல்லா முழுமையிலும் தேடினோம். பெண்கள் குழந்தைகள் மற்றும் பெலவீனர் நிந்தனைக்குரியவர் என்று கருதப்படுபவரோடும் உம் ஆற்றல்மிகு உடனிருப்பிற்காக நாங்கள் மகிழ்கிறோம். அன்பின் பாதுகாப்பிற்காக மெய்யான வாழ்வை உம்மிடத்தில் வாழும் வாஞ்சையை அங்கீகரியும் நாங்கள் சுயேட்சையாகவும் வெளிப்படையாகவும் இருக்க உதவியருளும். எங்கள் வலிகளையும், மகிழ்வையும், பயங்களையும், நம்பிக்கையையும் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொள்ள உதவி செய்து சமத்துவம் நீதி மற்றும் அமைதிக்காக ஆற்றல்படுத்தபட்டு, ஆயத்தப்படுத்தப்பட்டு, அற்பணிக்கப்பட்ட ஆண், பெண் சமூகமாக வாழ உதவியருளும். கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் கேட்கிறோம் பிதாவே. ஆமென்.**

மனுக்குலத்தைப் படைத்த கடவுள் ஆணும், பெண்ணுமாகப் படைத்தார். ஆனால் பெண் எல்லா நிலைகளிலும் பின்னோக்கி தள்ளப்பட்டு, அவளின் நற்செயல்கள், விசுவாசமான வாழ்க்கை, இவைகளுக்கு எந்தவிதமான ஒரு அங்கிகாரமில்லாத சூழ்நிலைகள் காணப்பட்டது. யூதர்கள் பெண்களை இரண்டாம் தர குடிமக்களைப் போல நடத்தி வந்த காலம் அது. நமது பிரதான போதகரான இயேசு பெண்களை வெறுக்கவோ, பிற ரபீமார்களைப் போல ஒதுக்கவோ இல்லை. அவர் எல்லா விதமான பெண்களையும் ஏற்றுக் கொண்டார். தங்களுக்குப் பிரியமானவர்களைச் சாகக் கொடுத்து கண்ணீர் வடித்த பெண்களை அவர் பரிவோடு நோக்கினார். தன் ஒரே மகளைப் பிரிந்த விதவைத் தாயை "அழாதே" என்று மனதுருக்கத்துடன் கூறித் தேற்றினார் (லூக் 7:13) மரண வேதனை, இழப்பின்துக்கம், அவரது தொண்டையையும் அடைத்தது. இயேசு கண்ணீர் விட்டார் என்றும் பார்க்க முடிகிறது. பெண்ணை ஆபிரகாமின் குமாரத்தி என்றும், சீயோன் குமாரத்தி என்றும் இயேசு கிறிஸ்து அழைப்பதைத் திருமறையில் பார்க்கலாம்.

வெளியே துரத்தப்படுகின்றது. இயேசுவிற்கும் தீய ஆவிக்கும் தொடர்பில்லை, இயேசு தன்னை யார் என்று அறியச் செய்தார். தீமையை அறியச் செய்து தீமையை அகற்றுபவர் இயேசு. எங்களுக்கும் உமக்கும் என்ன? என்று கேட்ட லேகியோனை (மத. 8:29) தீமையிலிருந்து விடுவித்தார். உள்ளும் புறமும் சுத்தப்படுத்துகின்ற போதனை இயேசுவின் போதனை.

### 3. ஆச்சரியமூட்டும் ஆற்றல் நிறைந்த கல்வி (மாற்கு 1:27)

இயேசுவின் கல்வி புதிய உபதேசமாக அமைந்தது. காரணம் சில புதுமைகள் இருந்தன. புதுமைகள் மக்களை ஆச்சரியமடையச் செய்தன. ஆச்சரியம் போதனையில் மட்டுமல்ல தனிப்பட்ட அதிகாரத்திலும், பதிலுரையிலும், பேச்சிலும் இருந்தது. யூதக் கல்விமுறை மரபுகளைச் சிதைத்துவிடாதபடி வரும் காலத்துக்குக் கடத்திச் செல்வதாய் அமைந்தது. இயேசு மரபுகளுக்கு மறுவிளக்கம் கொடுத்தார். இறையரசைக் கட்டாத மரபுகளை எதிர்த்தார். வினா எழுப்பி விடை கொடுத்தார். இயேசுவின் ஆச்சரிய மூட்டிய போதனை மக்களைப் பல்வேறு புரிதலுக்கு உட்படுத்தியது.

மத்தேயு 12: 23,24 மக்கள் தாவீதின் குமாரன் என்றனர் பரிசேயன் புரிதல் பிசாசு களின் தலைவனாகத் தெரிந்தது.

மத்தேயு 13: 54,55 தச்சனது மகனல்லவா என்று ஆச்சரியமடைந்தனர். யூத ரபீகள் தோராவை மனனம் செய்ய முதன்மைப்படுத்தினர். இயேசு சொல்வதைச் செயலால் வெளிப்படுத்தினார். கற்றுக்கொண்டதை தூய ஆவியார் நினைவூட்டுவார் எனக் கூறினார் (யோவான் 14:26). ஆகவே இயேசுவின் போதனை ஆச்சரிய மூட்டும் ஆற்றல் நிறைந்ததாய் அமைந்தது.

திருச்சபையின் கல்விப்பணி கருத்து சார்ந்ததாய் மட்டும் அமைந்தால் தன்பணியில் தோல்வியடைந்துவிடும். இயேசுவில் வெளிப்படுத்தப்பட்ட முழு வாழ்வுக்குரிய கல்வியாய் அமையவேண்டும். தீமைகளின் சத்தம் அடக்கப்பட்டு விடுதலையின் சத்தம் மேலோங்க வேண்டும். ஜெப ஆலயத்தில் நின்று தீய ஆவி உமக்கு இங்கு என்ன என்ற கேள்வி எழுப்பியது போல இயேசுவை இன்று திருச்சபை வெளியே நிறுத்தி வைத்திருக்கின்றதா என்பதைத் திறனாய்வு செய்ய வேண்டும். புதிய உலகிற்கான புரைமைப்பின் பணியே இயேசுவின் கல்விப்பணி. இந்த தரிசனத்தைத் திருச்சபை நிறைவேற்ற வேண்டும்.

அருள்திரு. **I. ரெஞ்சித் வேத குமார்**





அவர்களது சிந்தனைகளையும் தெளிவாக அறிந்திருந்தபடியால் அவர்களை மதித்து, கிறிஸ்துவைக் குறித்து மிக பொறுமையுடன் வெளிப்படுத்துகிறார். இன்று பலவேளைகளில், பிற சமயங்களைக் குறித்து எந்த அறிவுமின்றி சமய நல்லுறவைக் குலைக்கின்ற மக்களைக் காண முடிகிறது. ஆனால் சமயங்களைக் குறித்த அறிவும் அவைகளை மதிக்கின்ற மனப்பக்குவமும் மிகவும் அவசியமானதாகும். அங்ஙனம் வாழ்ந்து கிறிஸ்துவின் நற்செய்தியை வாழ்வில் வெளிப்படுத்தும் போது, நீர் அளிக்கும் இந்தப் போதனையைப் பற்றி நாங்கள் அறியலாமா? (17:19) என பிறசமயத்தவர் கேட்பர் என்பதற்கு ஐயமேதுமில்லை.

### 3. அங்கீகரிக்க வேண்டும் : (மத். 15:28)

தீர், சீதோன் பகுதிகளில் திருப்பணியில் ஈடுபட்டிருந்த இயேசுகிறிஸ்துவிடம் கானானியப் பெண் ஒருவர் வந்து தம்முடைய மகள் குணமடைவதற்காக மன்றாடினார். ஓயாமல் கதறிக் கொண்டிருந்த அப்பெண்மணிக்கு இயேசு கூறும் பதில் வியப்பைத் தரக்கூடியதாக உள்ளது (15,24,26). யூதர்கள் பல தெய்வ வணக்கமுடைய இந்தக் கானானியரை நாய்கள் போன்றே எண்ணி வந்தனர். சீடர்களும் கூட இந்த எண்ணத்தில் இருந்தனர். ஆனால் கானானியப் பெண் பற்றுறுதியில் எவ்வளவு உறுதியானவர் என்பதைச் சீடர்கள் நேரடியாகக் கண்டு கொள்ள இயேசு இவ்வாறு கூறுகிறார் எனலாம். அப்பெண்மணியுடன் இயேசு உரையாடி நிறைவில் அவரது பற்றுறுதியின் உயர்வை மெச்சி அங்கீகரிக்கிறார் (15:28). இதனால் இதுவரை சீடர்கள் மனதிலிருந்த உயர்வு எண்ணங்கள் தகர்க்கப்பட்டன. எனவே தொடர்ந்து அவர்கள் திருப்பணிக்காகக் கலிலேயா நோக்கிச் சென்றனர் எனக் காணமுடிகிறது (15:19). பேதுருவின் மனதிலிருந்த தவறான சிந்தனையை ஆண்டவர் காட்சியினூடாய் மாற்றினார் (திப. 10: 10 19). எனவே பேதுரு ‘நானும் உங்களைப் போல மனிதர்தான்’ (10:26) என்றும், கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை (பட்சபாதமுள்ளவரல்ல) (10:34) என்றும் அறிவிப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். நம்முடன் வாழும் பிறசமயத்தவர்களை மனிதராக மதித்து அன்பு செய்து, அங்கீகரித்து நற்செய்தியின் தகவுகளை வாழ்வில் வெளிப்படுத்த வேண்டும். வார்த்தைகளால் நற்செய்தியைச் சொல்வதை விட வாழ்வில் கிறிஸ்துவின் நற்செய்தியை வெளிப்படுத்துவது மிக அர்த்தமுடையது ஆகும். இதனை பக்தர் தமது பாடல் வரிகளில் “இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே பேச்சில் அல்ல செயலில் நல்ல இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே.........” என்று பாடுவது பொருத்தமுடைய சிந்தனையேயாகும்.

அருள்திரு. **A. பிறைட் சாலமோன்**

**07-09-2014**

***பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதிமூன்றாம் ஞாயிறு***

***கல்வி ஞாயிறு***

# திருச்சபையின் கல்வித் திருப்பணி

## CHURCH'S MINISTRY OF EDUCATION

| | |
|---|---|
| நீதி. 8 : 1-12 | தி.ப. 8 : 26-38 |
| திபா. 119 : 97-104 | மாற். 1 : 21-28 |

*"...இயேசு தொழுகைக் கூடத்திற்குச் சென்று கற்பித்து வந்தார்."*

*மாற். 1 : 21*

**இறைவேண்டல் :** எல்லா ஞானமும் அறிவுமாகிய கடவுளே! உமது மிகுந்த கிருபையினால் படிக்கின்ற மற்றும் ஆராய்ச்சி செய்கின்ற இடங்களை கண்ணோக்கி அதன்வழியாக அறிவும் எங்களிலே பெருகவும், நன்கு கற்றல் மலரவும் நிறைந்து காணப்படவும் அருள்தாரும். கற்றுக்கொடுக்கிறவர்களையும், கற்றுக்கொள்பவரையும் ஆசீர்வதித்து தங்கள் தாழ்மையான மனதுடன். எல்லா பெலன், ஊக்கம் மற்றும் தாலந்துகளை வைத்து உமது விருப்பம் நிறைவேறுகின்ற நீதி மற்றும் அமைதியில் ஒரு சமுதாயத்தை உருவாக்க உதவியருளும். இவைகளை கிறிஸ்து இயேசுவின் திருப்பெயரில் வேண்டுகிறோம் பிதாவே. ஆமென்.

இயேசு கிறிஸ்துவின் பணிகளில் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று போதித்தல். இயேசுவின் போதனை மலை, படகு, சமபூமி என பல இடங்களில் அமைந்தது. சிறப்பாக, ஜெப ஆலயம் முக்கிய இடமாக அமைந்தது. இயேசு முதல் முறையாக பேசிய ஜெப ஆலயம் கப்பர்நகூம். கலிலேயக் கடலின் வடக்கு முனையிலுள்ள இடம், ஜெப ஆலயத்தில் இறைவேண்டல், இறைவார்த்தையை வாசித்தல், விளக்கமளித்தல் ஆகிய மூன்று காரியங்கள் நடைபெறும். விளக்கமளித்தல் அல்லது கற்றுக் கொடுத்தல் என்பதே முதன்மையானது. ஜெப ஆலயத்தில் வந்திருக்கும் யார் வேண்டுமென்றாலும் விளக்கம் கொடுக்கலாம் என்ற மரபுப்படி இயேசு கற்றுக் கொடுத்தார். இயேசு சிறந்த ஆசிரியராய்ச் செயல்படுகின்றார். மாணவர்களைத் தெரிந்தெடுத்து கற்றுக் கொடுத்தார். அவரின் மாணவ சீடரான பேதுரு கப்பர்நகூமைச் சார்ந்தவர். இயேசு உயர்ந்த நிலையிலுள்ள வரை தம் மாணவராக்குவதை விட கடற்கரை போன்ற தாழ்ந்த கிராமங்களிலிருந்து மாணவர்களைத் தெரிந்து தாழ்ந்த கிராமங்களிலிருந்து மாணவர்களைத் தெரிந்து தாழ்ந்த நிலையிலிருந்து இறையரசைக் கட்டுவதை தனது பணியின் சிறப்பாகக் கருதினார். இயேசுவின் கல்விப்பணி ஜெப ஆலயத்தில் எவ்வாறு அமைந்தது. அது இன்றைய திருச்சபையின் கல்விப் பணிக்குத் தருகின்ற வழிகாட்டுதல் என்ன என்பதை நற்செய்திப் பகுதி விளக்குகின்றது.





### 1. அதிகாரப்படுத்தப்படாதவரின் அதிகாரமுள்ள கல்வி:

மாற்கு. 1 : 22,25

யூத பாரம்பரியத்தில் அதிகாரப்படுத்தப்பட்ட போதகர்கள், வேதபாரகர்கள், நியாயப்பிரமாணத்தைக் கற்றுத் தேர்ந்தவர்கள். பாரம்பரியங்களுக்கு விளக்கம் கொடுக்கும் அதிகாரம் பெற்றவர்கள். சட்டங்களை அறிந்தவர்கள். யூதருக்கு உலகிலேயே புனிதமான நூல் தோரா. குறிப்பாக, பத்துக்கட்டளை, ஐந்தாகமம், ஆகியவைகளை தெய்வீக வெளிப்பாடாக யூதர்கள் நம்பினர். இவைகள் மோசேக்கு நேரடியாகக் கொடுக்கப்பட்டது என்ற நம்பிக்கை இருந்தது. வேதபாரகரின் முக்கியமான பணி தோராவைக் கற்றுக்கொடுத்தல், தோராவின்படி அறவழிநடத்துதல், தோராவின்படி தீர்ப்பளித்தல் போன்றவை ஆகும். தோராவே முதன்மையான கல்வியாய் அமைந்தது. தோரா கடவுளால் தரப்படவில்லை என்று சொல்பவர்களுக்கு மறு உலகில் இடமில்லை என்றனர்.

இயேசுவை அதிகாரப்படுத்தப்படாவராகவே யூதர்கள் கண்டனர். ஆனால் இயேசு தனி அதிகாரமுடன் போதித்தார். இயேசுவின் அதிகாரம் நேரடியாக தந்தையிடமிருந்து பெறப்பட்டது. (யோவான் 12:49,50) வேதபாரகர் சட்டத்தைச் சுட்டிக்காட்டி தீர்ப்பளித்தனர். ஆனால் இயேசு கடவுளின் சத்தமாய்த் தீர்ப்பளித்தார், பதிலளித்தார். இயேசுவின் போதனையிலும், அற்புதங்களிலும் அதிகாரம் வெளிப்பட்டதால் இரு அதிகாரமும் இணைந்து இயேசுவில் இருந்தது. யூதருக்கு ஆச்சரியம் தந்தது. எனவே இந்த அதிகாரம் கொடுத்தது யார் என்று கேள்வி எழுப்பினர். (மாற்கு; 2:7) ஆனால் அனைத்து அதிகாரமும் உடையவர் இயேசு (மத் 28:18). அதிகாரம் கொடுப்பதற்கும் அதிகாரம் பெற்றவர் இயேசு. தம் உயிரைக் கொடுக்கவும் அதிகாரம் பெற்றவர் (யோவான் 10:18).

### 2. அறியச் செய்து அசுத்தங்களை அகற்றும் கல்வி

(மாற்கு 1:24)

ஜெப ஆலயத்தில் தீய ஆவி பிடித்த மனிதன் இருந்தான். தீய ஆவி அனைத்துலகிலும் ஆலயத்திலும் ஊடுருவும் ஆற்றல் உடையதாயிருக்கின்றது. ஆலயத்திலிருந்து தீய ஆவி எங்களுக்கும் உமக்கும் என்ன என்று கேட்கின்றது. எங்களை என்பது ஒட்டுமொத்த உலகைக் குறிக்கின்றது. தீமையின் குழுவிலிருந்து தனிமைப்பட விரும்பவில்லை. கப்பர்நகூமில் நசரேயனுக்கு என்ன? என்று கேட்கிறது. கப்பர்நகூம் வானபரியந்தம் உயர்த்தப்பட்டதால் (மத். 11:23) பெருமை கொண்டது. தீயோனின் இருப்பிடமாக ஜெப ஆலயத்தைக் கருதி தூய்மைக்கு இங்கு இடமில்லை என்கிறது தீய ஆவி. இன்று திருச்சபைகள் தீமையின், தீயோரின் கூடாரமாகி தூய்மை, தூயவாழ்வு நேர்மை வாழ்வு ஆகியன புறக்கணிக்கப்படுகிறது. அதனால் தூய்மை ஆலயத்திற்கு

லூக். 2 : 48,49 மரியா-மகனே ஏன் எப்படி செய்தாய்?...... மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே.

இயேசு-நீங்கள் என்னை ஏன் தேடினீர்கள்... உங்களுக்குத் தெரியாதா ?

லூக். 8 : 19-21 தாயும் சகோதரர்களும் அவரை அணுக முடியவில்லை. அவர்கள் இயேசுவைப் பார்க்க விரும்பியபோது இயேசு அதனை நிராகரித்தல்.

லூக். 11 : 27-28 உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர் என்றபோது இயேசுவானவர் இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர் என்றார். இந்நிகழ்வுகள் எல்லாம் நிச்சயம் மரியாவின் உள்ளத்தை வாள் போல் ஊடுருவியிருக்கும்.

லூக். 1 : 38 நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படி எனக்கு நிகழட்டும் எனத் தன்னை அர்ப்பணித்த மரியாவின் மறைவான எண்ணங்களை (லூக். 2 : 35a) சிமியோன் தாத்தாவின் வார்த்தை வெளிப்படுத்துகின்றது. கிறிஸ்துவின் பணியில் தம்மை இணைத்துக் கொள்ளவும் இயேசு கிறிஸ்துவின் உலகலாவிய பணியினை ஏற்றுக்கொள்ளவும் வழிவகை செய்ய ஆயத்தமாக்குகின்றது.

குடும்பங்களில் பிள்ளைகள், பெற்றோரின் உள்ளகிடக்கையை குறிப்பால் உணர்த்தி நல்லதொரு உறவினை உருவாக்குவது முதியோருக்கு கைவந்த கலையன்றோ !

ஒரு வயோதிபர் மரணமடையும் போது ஒரு நூலகம் அழிவதற்குச் சமம். முதியோரின் பட்டறிவை ஏற்றுக்கொள்வது, அவர்களது இறைப்பற்று மற்றும் துன்பங்களை, வேதனைகளை, நிறைகுறையினை எதிர்கொண்ட முறைகள், ஆறுதலளிக்கும் வாக்குகள் போன்றவை எவ்வளவு உயர்ந்தவை. எனவே முதியோரை ஏற்றுக்கொள்வது என்பது அவர்களது உணர்வுகளை ஏற்று அவர்களைக் கௌரவமான வாழ்வுக்குக் காரணிகளாவதே சமூகத்திற்கு அழகு.

சுமைகள் அல்ல முதியோர் !
சுமை தாங்கும் சும்மாடுதான் !
சும்மாடே சுமையென எண்ணில் !
சுமை சுமப்பது எப்படி ?

அருள்திரு. M. **கிங் தனேஷ் குமார்**





இயேசு கிறிஸ்து முதன் முதலில் தரிசனமானதும் ஒரு பெண்ணிற்கு தானே. உயிர்த்தெழுந்த நாதரைக் குறித்து பறை சாற்றும் வாய்ப்பும் ஒரு பெண்ணிற்கே கொடுக்கப்பட்டது என்பது எத்தனை பாக்கியம் (யோவான் 20:17). இயேசு கிறிஸ்துவின் அடியவர்கள் ஒருவரையொருவர் கனப்படுத்துவர், கீழ்ப்படிவர், (எபே 5:21, 29) போன்ற பவுலின் போதனைகள் ஊடுருவும், அப்பொழுது பல பிரச்சினைகள் தானாகவே மறையும் ஏனெனில் பெண்களுக்கு ஒரு சிறப்பு உள்ளுணர்வு உண்டு. அந்த உள்ளுணர்வு சரியாகப் பயன்படுத்தப்பட்டால் பல பிரச்சனைகளிலிருந்து தப்பும் வாய்ப்பும் உண்டு. எல்லாச் சூழ்நிலைகளிலும் நாம் மற்றவர்களைக் கனம் பண்ண வேண்டும். அப்பொழுது தான் பிறர் நம்மிடமிருந்து இந்த நல்ல குணத்தைக் கற்றுக் கொள்வர்.

பெண்கள் தங்களது தாலந்துகளைப் பரலோக ராஜ்ய மேன்மைக்காய் பயன்படுத்தட்டும். ஏவாளால் அவலமாக்கப்பட்டப் பணி மரியாளால் மீட்டெடுக்கப்பட்டது. இந்த மீட்பின் பணி தொடர வேண்டும்.

## ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று தேவதூதன் மரியாளிடம் சொன்னார் :

மரியாள் மிகுந்த அடக்கத்துடனும் அர்ப்பணிப்புடனும், இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்கிறாள். தேவதூதன் அவ்விடத்திலிருந்து மறைந்து விட்டார். மரியாள் என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையைக் கண்டார். வல்லமையுடைவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார். அவருடைய நாமம் பரிசுத்தம் உள்ளது. அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது என்றார்.

## ஊனமுற்றோர் ஒதுக்கப்பட்டோர் இயேசுவால் வாழ்வு பெறுகின்றனர்

இயேசு ஓர் ஒய்வு நாளில் ஜெப ஆலயத்தில் போதகம் பண்ணிக் கொண்டிருந்தார். 18 ஆண்டுகளாய்த் தீய ஆவி பிடித்து உடல் நலம் குன்றிய ஒரு பெண் அங்கு இருந்தாள். அவள் சிறிதும் நிமிர முடியாதவாறு கூன் விழுந்த நிலையில் இருந்தாள். இயேசு அவளைக் கண்டு தம்மிடம் அழைத்து பெண்ணே! உன் நோயிலிருந்து விடுவிக்கப்பட்டாய் என்று சொல்லி அவள் மீது தன் கைகளை வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து கடவுளை மகிமைப்படுத்தினாள்.

இயேசு ஓய்வு நாளில் 18 வருடம் சிறிதும் நிமிர்ந்து நடக்க முடியாத ஊனமுற்ற பெண்ணை சுகப்படுத்தினதால் ஜெப ஆலயத்தலைவன் கோபங்கொண்டு, மக்களை நோக்கி வேலை செய்வதற்கு ஆறுநாட்கள் உண்டே, அந்த நாட்களில் வந்து குணம் பெற்றுக் கொள்ளுங்கள் ஓய்வு நாளில் இந்த குணமாக்குதல் வேண்டாம் என்றான்.

இயேசு ஜெப ஆலயத்தலைவனிடம் உங்களில் ஒருவனது மாடு அல்லது கழுதையைத் தொழுவத்திலிருந்து அவிழ்த்து தண்ணீர் காட்டுவதில்லையா? சாத்தான் 18 வருடமாய் பெலவீனப்படுத்தி வைத்திருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளைக் குணப்படுத்த வேண்டியதில்லையோ என்றார். (யூதர்கள் தங்களை ஆபிரகாமின் சந்ததி என்று பெருமையாகச் சொல்லி கொள்வார்கள்) இயேசு இவற்றைச் சொன்னபோது தலைவன் உட்பட அவரை எதிர்த்த அனைவரும் வெட்கப்பட்டார்கள். அனைவரும் இயேசுவின் வார்த்தைகளையும், செயல்களையும் கண்டு மகிழ்ந்தனர், ஆச்சரியப்பட்டனர்.

### இயேசு பெண்களின் தேவையைச் சந்தித்தார்

பிசாசு பிடித்த பெண்களின் தேவை, விடுதலையடைய வேண்டும். சிலரின் தேவை சந்தேகங்களில் தெளிவாயிருந்தது, சிலரின் தேவை ஆறுதலாயிருந்தது. தேவை எதுவாக இருந்தாலும் இயேசு எல்லாவற்றையும் பூர்த்திச் செய்தார். இயேசுவண்டை வாருங்கள். உங்கள் குறைவுகளை நிறைவாக்குவார்.

திருமதி. **லலிதா தேவகடாட்சம்**





ஏன் முதியோர் பராமரிக்கப்பட வேண்டியவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவர்கள் என்பதை லூக். 2:25-38 வரையுள்ள பகுதியின் வழியாகச் சிந்திப்போம்.

### 1. சிமியோன் தாத்தாவின் வார்த்தை :

சிமியோன் தாத்தாவுக்குச் சொல்லப்பட்ட வார்த்தை லூக் 2:26 ஆண்டவருடைய மேசியாவைக் காணுமுன் சாகப் போவதில்லை. தொ.நூ.46:30இல் யாக்கோபு வயோதிக நிலையில் யோசேப்பைக் கண்டவுடன் உன் முகத்தைக் கண்ணாரக் கண்டுவிட்டேன். இப்பொழுது நான் சாகத் தயார். இங்கு சிமியோன் தாத்தா அடியேனை அமைதியுடன் போக விடுகின்றீர் என்கிறார் (லூக் 2:23). கடவுளின் முகத்தை யாரும் காண முடியாது காண்கின்றவர்கள் உயிரோடு வாழவும் முடியாது. வி.ப. 33:20. மோசே கடவுளின் மகிமையைக் காண்கின்றார். (வி.பா. 33:20f). கடவுளுடைய மகிமையை, மீட்பை, மானிட மகனாகப் பிறந்த குழந்தையின் முகத்தில் கண்டு, இயேசுநாதரைக் கையில் ஏந்தி சொன்ன வார்த்தைகள்; அடிமை, மீட்பு, மக்களினங்களின் வீழ்ச்சி-எழுந்திருத்தல் இருதய எண்ணம் (சிந்தை) - மகிமை or (பெருமை) வெளிச்சம் (ஒளி) தள்ளி விடுதல் பட்டயம், உள்ளம் ஊடுருவல், வெளிப்படுதல், பிறப்பு இறப்பு, குழந்தை, பெற்றோர்-முதியோர், அமைதி, அடையாளம் இவை திருமறையின் மொத்த கருத்தினையும் உள்ளடக்கியுள்ளன. ஆக, இங்கு சிமியோன் தாத்தாவின் வார்த்தைகள் அவரது பட்டறிவை வெளிப்படுத்துகின்றன.

### 2. சிமியோன் தாத்தாவின் வாழ்வு :

லூக். 2 : 31 அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. சிமியோன் தாத்தா வாழ்வுக்கான தேடுதலைக் கிறிஸ்துவில் காண்கின்றார். லூக். 2 : 25, 27 இல் அவரது வாழ்வைக் குறித்துச் சொல்லுமிடத்து

a) அவர் நேர்மையாளர் b) இறைப்பற்றுக் கொண்டவர்

c) ஆறுதல் எதிர்பார்த்திருந்தார் d) தூயாவியைப் பெற்றிருந்தார்

e) ஆவியாரின் தூண்டுதலால் கோவிலுக்கு வந்திருந்தார்

ஆக, சிமியோன் தாத்தா நம்பிக்கையுடைய, ஆறுதலுடைய, நேர்மையான, தூயாவியைப் பெற்றுத் தள்ளாடும் வயதிலும் கோவிலுக்குச் செல்லும் பக்தி நெறியில் வாழ்ந்தார்.

### 3. சிமியோன் தாத்தாவின் இறைவாக்குரை :

லூக். 2 : 35 உமது உள்ளத்தையும் ஒருவாள் ஊடுருவிப்பாயும் என்பதைப் பலர் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பாடு, மரணம் ஆகியன குறித்தது என்பர், இதனை விட இயேசு, தம் தாயாரின் உரையாடலோடு தொடர்புப் படுத்துவது சிறப்பு.

**28-09-2014** *முதியோர் ஞாயிறு*

# முதியோரை ஏற்றுக்கொள்ளுதல்

## ACCEPTING THE AGED

| | |
|---|---|
| எசா. 40 : 21-31 | I திமொ. 5 : 1-10 |
| திபா. 139 : 1-18 | லூக். 2 : 25-38 |

*"உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன."* லூக். 2 : 31

**இறைவேண்டல் :** தேற்றுகின்ற நல்ல கடவுளே! தனிமை, மனஅழுத்தம் மற்றும் பெலவீனத்தினால் வாழும் முதியோர்களை இரக்கமாய் கண்ணோக்கும். கௌரவத்தோடும் அமைதியோடும் அவர்கள் வாழ உதவி செய்ய எங்களுக்கு உதவியருளும். அவர்கள் தங்கள் நம்பிக்கையையும் உம் அன்பின் உறுதியிலும் பெருக உதவியருளும். இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரால் வேண்டுகிறோம். ஆமென்.

முதியோர் யார்? அல்லது முதியோரை எவ்வாறு வரையறை செய்யலாம் எனில், 1) பேரப்பிள்ளைகள் பிறந்தவுடன் 2) ஓய்வு பெறும் போது (Retiredment) 3) 65 வயதிற்கு மேற்பட்டோர் எனப் பல்வேறு வரையறை இருந்தாலும் மூன்றாவது கருத்தே அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலுள்ளது எனலாம்.

### முதியோரைக் குறிக்கும் சொற்கள்

அமெரிக்கா, லண்டன் போன்ற நாடுகளில் மூத்த குடிமகன் (Senior citizen) என்று அழைக்கின்றனர். Social Science-இல் Older adult என்றும் Chronological அடிப்படையில் (elder) மூத்தவர் என்றும் குறிக்கப்படுகின்றனர். சிலர் Old age people என்று சொல்வது சிறப்புக்குரியது அல்ல. தமிழ் இலக்கியத்தில் கிழவன், கிழவி என்பது உரிமை படைத்தவர் என்பதை வலியுறுத்தும் உரிமைச் சொல். நாளடைவில் இச்சொற்கள் தாழ்வாகப் பொருள் கொள்ளப்பட்டுள்ளன.

### முதியோர் சந்திக்கும் பிரச்சனைகள்

நினைவாற்றல் குறைவு (Memory Loss), மிகைப்பட பேசுதல் அல்லது கூறியதுகூறல் (Loss Talk) தேவையற்ற பேச்சு, தனிமை, உறவுக்காக ஏங்குதல், மருத்துவச் செலவுகள் அதிகரிப்பு ஆனால் வருமானம் குறைவு அல்லது ஓய்வூதியம் இல்லை. சமூகத்தில் அங்கீகாரம் அல்லது கௌரவம் இல்லையெனில் ஏற்றுக்கொள்ளல் இல்லை அவர்களது உணர்வுக்கு முக்கியத்துவமில்லை.



**21-09-2014** *உலக அமைதி நாள்*

# அமைதியும் ஒப்புரவும்

## PEACE AND RECONCILIATION

| | |
|---|---|
| மீகா 4 : 1-8 | IIகொரி 5 : 11-21 |
| தி.பா. 85 | மத். 10 : 34-42 |

*"பேரன்பும் உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் நிறைவாழ்வும் ஒன்றையொன்று முத்தமிடும்."* தி.பா. 85 : 10

**இறைவேண்டல் :** இரக்கமுள்ள கடவுளே இந்த பூமியில் சில நேரங்களில் வன்முறை தீவிரவாதம் மற்றும் மரண போராட்டங்களின் மூலம் எடுக்கப்பட்டு அன்னியர்களை போல இருக்கின்றோம். மிதமான நறுமணம் போல அமைதியின் ஆவியை எங்கள் மீது ஊற்றும், எங்கள் கடினமான சந்தோஷங்களை உருமாற்றம் செய்யும். உமது உலகில் அமைதி உதிக்கும் வேளை வரைக்கும் ஒப்புரவாகுதலை சுமப்பவர்களாக எங்களை ஆயத்தப்படுத்தும் என்று வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் இயேசுவின் இனிய நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

### அமைதி (Peace)

அமைதி என்றால் பணிவு, நிறைவு, அசைவின்மை, அடக்கம் எனப் பொருள் கொள்ளலாம். இதில் போர் இல்லாத நிலை எனவும் கலகம், ஒழுங்கீனம் ஆகியவை இல்லாத நிலை எனவும் கூறலாம். சமாதானம், அமைதி நிலை, பொறுமையான வாழ்வு, மேன்மையான வாழ்வு எனவும் இதனை இறைவன் விரும்பும் வாழ்வு எனவும் கொள்ளலாம்.

### ஒப்புரவு (Reconciliation)

ஒப்புரவு என்றால் ஒற்றுமை, சமமான நிலை, சமாதானப்படுத்துதல், மன வேற்றுமையை மாற்றுதல், ஒத்துப்போதல் எனப்பொருள் கொள்ளலாம். இவை மனித முயற்சியால் வரும் பலன்கள் எனக் கொள்ளலாம்;.

இறைவன் விரும்பும் வாழ்வு நிலைக்கு மனிதன் தன்னை வரவழைத்துக் கொள்ளும் முயற்சியே அமைதியும் ஒப்புரவுமான வாழ்வு ஆகும். இதனைத் திருச்சபை மிகவும் முக்கியமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இன்று உலகத்தலைவர்கள் எதிர்பார்க்கும் மிக முக்கியமான காரியம் அமைதி. அமைதியை உலகம் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அமைதிப் பேச்சுவார்த்தைகள் உலக அளவில் நடைபெற்று வருகின்றன. போர் வேண்டாம், நண்பராய் இருப்போம்; நட்புடன் நடப்போம், பகிர்ந்துகொள்வோம், உதவ முன் வருவோம், நாட்டின் ஒற்றுமையை வளர்ப்போம் இதுபோன்ற உன்னதக் கொள்கைகளின்

அடிப்படையில் உலகம் இயங்கிக் கெண்டிருக்க கிறிஸ்துவின் பிறப்பின் போது தூதர் பாடினர் ''உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகும்'' மேலும் உயிர்த்தெழுந்த இயேசு சீடர்கள் முன் வந்து உங்களுக்கு அமைதி உண்டாகுக'' என்றார்.

உறவு நாடுகளின் கூட்டமைப்பு (SARCH) நாட்டு மக்களுக்குள் நல் இணக்கத்தையும் அமைதியையும் நீதியையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்கின்றது. இதற்காக பல நாட்டின் தலைவர்கள் பாடுபடுகின்றனர். 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பாகிஸ்தான் ராணுவம் இந்திய வீரர்கள் இருவரைக் கொன்று அவர்கள் தலைகளை வெட்டி எடுத்துச் சென்ற போது இந்திய அரசு அமைதிப் பேச்சில் ஈடுபட்டது. இதனால் பெரிய உயிர் இழப்பும் போரும், பொருளாதாரச் சீர்கேடும் வராமல் தடுத்து இந்திய இறையாண்மையை நம் நாடு பாதுகாத்தது.

நாட்டின் தலைவர்களும் சமயத்தலைவர்களும் இவ்வாறு அமைதி மற்றும் ஒப்புரவுக்காகப் பாடுபடும்போது மறுபுறம் தீவிரவாதங்கள், பிரிவினைச் சக்திகள், மொழி, இனம், சமயம், கலாச்சாரம், பண்பாடு, பதவிகள், ஆகியவற்றின் ஆதீக்கத்தை உருவாக்கி, பேதங்களையும், பிரிவினைகளையும் பெருக்கிக் கொண்டே போகின்றது. இச்சூழலில் திருச்சபை செய்யவேண்டிய கடமைகளை மீகா இறைவாக்கினரின் வார்த்தைகளின் அடிப்படையில் சிந்திப்போம். மீகா இறைவாக்கினர் மூன்று கருத்துக்களை நம்முன் வைக்கிறார்.

### *1. இறையவருக்கு நேராய்த் திரும்பவேண்டும்*

(Turn to God) (மீகா. 4 : 2)

மக்கள் இறையவரிடமாய்த் திரும்பும்போது அமைதி உண்டாகிறது. இறை இல்லத்தில் போதனையும், வழிகாட்டுதலும், உண்டாயிருக்க வேண்டும். கடவுள் உயரமும் உன்னதமுமானவர் என்று உணர்த்த வேண்டும். காரணம் கடவுளின் இல்லம், மலைகளின் மேல் உருவாக்கப்பட்டுள்ளது. எல்லா மக்களும் இறை இல்லத்துக்கு ஓடி வர வேண்டும். மறந்து போனவர்களை இறை இல்லத்திற்குப் போவோம் வாருங்கள் என்று வருந்தி அழைத்து இறை இல்லத்தில் கூட்டிச் சேர்க்கவேண்டும். அங்கே நாங்கள் இறை வழியில் நடப்போம் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டு ஒருவரில் ஒருவர் இணக்கமாய் இருக்கவேண்டும்.

### *2. போர்க் கருவிகள் விவசாயக் கருவிகளாக மாற்றப்பட வேண்டும்* (Turning war weapons into Agricultural)

(மீகா 4 : 3)

பட்டயங்கள் மண்வெட்டிகளாகவும், ஈட்டிகள் அரிவாள்களாகவும் மாற்றப்படவேண்டும். வாழ்வில் முரட்டுத்தன்மைகள், கொடுமைகள், தாக்குதல்கள், மூர்க்க வெறிகள் முற்றிலுமாக நிறுத்தப்படவேண்டும்.





மனிதன் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய பயிர் நிலங்களுக்குச் செல்ல வேண்டும். நாடுகள் ஆயுதப் பெருக்கத்துக்குச் செலவிடும் தொகை அனைத்தும் விவசாயத்துக்குப் பயன்படுத்தவேண்டும். மனிதர் யாவரும் தங்கள் நேரத்தை திராட்சைச்செடியின் நிழலிலும் அத்திமரத்தின் நிழலிலும் செலவிட்டு பயப்படுவார் இல்லாமல் அமர்ந்து பணி செய்ய வேண்டும். (மீகா 4 : 4). அப்போது விரோத மனப்பான்மை மறைந்து அன்பும் ஒப்புரவும் உருவாகும்.

### *3. போர்க் கலை கற்பதை நிறுத்தவேண்டும்*

(Decide Not to Learn war.) (மீகா 4:3)

அமைதியும் ஒப்புரவும் உருவாக போர்க் கலைகளைக் கற்பதிலிருந்தும் கற்பிப்பதிலிருந்தும் மனிதன் விலகிக்கொள்ள வேண்டும். தீவிரவாதக் கும்பல்களின் பயிற்சிகள், காடுகளிலும் மலைச்சிகரங்களிலும், ஆள் நடமாட்டமில்லாத இடங்களிலும் நடைபெறுகின்றன. இந்தப் போர் பயிற்சிகள் உலகிற்கு பெரிய அச்சுறுத்தலாகியுள்ளன. இதனால் பெரும் ஆபத்துகள் சில வேளைகளில் நிகழ்ந்ததும் உண்டு, நிகழ வாய்ப்பும் உண்டு. வேலை இல்லாத திண்டாட்டம், மதுபான வெறி, போதைப் பொருட்களின் உபயோகம் ஆகியவை இன்று அமைதிக்கும் ஒப்புரவுக்கும் குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்கிறது.

போர்ப் பயிற்சிக்குப் பதிலாக விவசாயப் பயிற்சி வேண்டும். எவர்க்கும் அஞ்சாமல் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து உற்றார் உறவினருடன் அமர்ந்து இணைந்து மகிழ திருச்சபை வழிகாட்டவேண்டும். அப்போது அமைதியும் ஒப்புரவும் உண்டாகும்.

**முடிவுரை :**

இன்றைய சூழல் வல்லரசு நாடுகள் போதிய அளவுக்கு போர்க் கருவிகளை உருவாக்கி மறைத்து வைத்துக் கொண்டு ஏழை நாடுகளை மிரட்டி போர்க் கருவிகளை உற்பத்தி செய்வதைத் தடைசெய்கின்றது. இப்படி, பூட்டி வைக்கப்பட்டிருக்கும் கொலைக் கருவிகள் உலகத்தை அழித்துவிடும் அபாயத்தில் உள்ளது. ஆகவே அமைதியும் ஒப்புரவும் உருவாக அனைவருக்கும் சம உரிமை, சமநீதி, சீரான பொருளாதாரம், சம உரிமை கொண்ட அரசியல் அமைப்பு, சமமான நில உடமை உரிமை ஆகியவை மிகவும் தேவை.

திருச்சபை ஒருரை ஒருவர் அன்பு செய்யும் குடும்பமாக விளங்குமாயின் அங்கே அமைதியும் ஒப்புரவும் உண்டாகும். மக்கள் கடவுளிடம் திரும்பி கடவுளின் திருச்சட்டத்தைக் கற்று அதன்படி வாழ்வது இவை அனைத்துக்கு மேலான அமைதியையும் ஒப்புரவையும் உருவாக்கும்.

அருள்திரு. **S. ஐசாயா**

**19-10-2014** இளையோர் ஞாயிறு

# தொழில் நுட்ப காலத்தில் ஆன்மிகம்

## SPIRITUALITY IN THE AGE OF TECHNOLOGY

1சாமு. 17 : 32-50 பிலி. 3 : 1-16
திபா. 111 மாற். 10 : 17-31

*"...ஆண்டவர் வாளினாலும் ஈட்டியினாலும் மீட்கின்றவர் அல்லர்"* 1சாமு. 17 : 47

**இறைவேண்டல் :** சர்வவல்ல கடவுளே! மாற்றங்களை வேகப்படுத்தவும் மனித நம்பிக்கையை ஊக்கப்படுத்தவும் இளையோரை அழைத்தீர். இந்த தொழில்நுட்ப உலகில் நம்பிக்கையின் ஆதாரமும் முழுமையுமாக இருக்கிறவராகிய உம்மில் தங்கள் கண்களை பதித்து நீர்அங்கிகரிக்கும் வகையில் அவர்கள் கனவுகள் காணவும், குருசறையப்பட்ட இயேசுவின் ஆவியில் வாழவும், தீயசக்திகளாகிய பிரிவினை மற்றும் வேறுபாடுகளை மேற்கொள்ளவும், வாழ்வின் முழுமையில் மகிழ்வை தரும் உம் ராஜ்யத்திற்கென்று தங்களை ஊக்கப்படுத்தவும் அருள் செய்யும். இயேசுவின் திருபெயரில் வேண்டுகிறேன் ஆமென்.

நாம் வாழும் தற்காலத்தைத் தொழில் நுட்பக் காலம் என்று சிந்தனையாளர்கள் அழைக்கிறார்கள். ஐரோப்பா கண்டத்தில் 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இயந்திரம் சார்ந்த தொழில் முறையின் பரிணாம வளர்ச்சிதான் தற்கால தொழில் நுட்பப் புரட்சி. பத்து ஆண்டுகளுக்கு முன் அலைபேசி மற்றும் கணினி ஆகிய உயர் தொழில் நுட்பம் கொண்ட பொருள்கள் சாமானிய மனிதர்கள் கற்பனை செய்ய முடியாத தூரத்தில் இருந்தன. ஆனால் இன்று ஐந்து வயது சிறுவன் அலைபேசியில் வீணைமீட்டிக்கொண்டிருக்கிறான்.

தொழில் நுட்ப வளர்ச்சி எல்லாத் தரப்பு மக்களையும் பாதித்திருக்கிறது. தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவாய் ஏற்பட்டிருக்கிற பணப்புழக்கத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஒருபுறம் தொழில் நுட்ப வளர்ச்சி பெரும் பணக்காரர்களை உருவாக்கிய அதே நேரம் அதிக ஏழைகளையும் உருவாக்கியிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்காய் விவசாய நிலங்கள் அரசாலும் பெரும் வணிக நிறுவனங்கள் மூலமாகவும் கையாக்கம் செய்யப்படுவதால் விவசாயத்தையே நம்பி இருந்த பெருவாரியான சனங்கள் வாழ்க்கையின் பெரும் கொடுமையைச் சந்திக்கிறார்கள். தொழில் துறையில் நிபுணர்களாகக் கூடிய இளைஞர்களுக்கு வணிக நிறுவனங்கள் அதிக



**05-10-2014**

# இறைச்சாயலும் மானிட மாண்பும்

## GOD'S IMAGE AND HUMAN DIGNITY

யோபு 36 : 1-15 கொலோ. 3 : 5-11
திபா. 146 லூக். 4 : 16-21

*"புதிய மனித இயல்பை அணிந்திருக்கிறீர்கள். அவ்வியல்பு தன்னை உண்டாக்கினவரின் சாயலுக்கேற்பப் புதுப்பிக்கப்படுகிறது."* கொலோ 3 : 10

**இறைவேண்டல் :** எல்லா மனிதரையும் தம் சாயலாக படைத்து மனுக்குலத்தை பெருந்தன்மையினாலும் மேன்மையினாலும் முடிசூட்டிய கடவுளே! இந்த உலகத்தால் வெறுக்கப்பட்டவர்கள் மற்றும் தள்ளப்பட்டவர்களை இரக்கமாய் கண்ணோக்கும். துணிவுடன் கிறிஸ்துவை பின்பற்றவும், அவரது அன்பை வெளிப்படுத்த முயலவும், ஒதுக்கப்பட்டோரோடும் அநீதி, தீவிரவாதம், நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டோரோடும் நிற்கவும் உதவியருளும். அமைதியில் அவர்களை பெலப்படுத்தும். எல்லா மக்களும் மரியாதையுடனும் மேன்மையுடனும் இணைந்து வாழும் ஒரு புதிய சமுதாயம் உதயமாகும் நம்பிக்கையை அவர்களுக்கு கொடுத்தருளும். இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். நல்ல கடவுளே.

கடவுள் மனிதனைத் தம்முடைய சாயலாகப் படைத்தார் என்பது விவிலியம் தரும் நிறைவான அருட்செய்தியாகும். ஆகவே இறைச்சாயலை இயற்கையாகவே மனிதன் பெற்றிருக்கிறான் என்பது புதுமையான ஆன்மீகச் செய்தியாகும். மனிதன் பெற்றுள்ள இறைச்சாயல் மானிட மாண்பின் வாயிலாக வரலாற்றில் கண்டு வருகிறோம் என்பது இறையியல் உண்மையாகும். மனிதன் இறைச் சாயலில் நிலைத்திருப்பதே வாழ்க்கையின் யதார்த்தமாகும். இறைச் சாயலும் மானிடமாண்பும் இணைந்து செயல்படும்போது வாழ்வின் குறிக்கோள் வெளிப்படுகிறது. இயேசு தாம் வளர்க்கப்பட்ட ஊராகிய நாசரேத்தூர் தொழுகைக் கூடத்திற்கு வருகை புரிந்தபோது இறைவாக்கினர் ஏசாயாவின் தோல் சுருள் படிக்கும் படியாக அவர் கையில் கொடுக்கப்பட்டது. இறைச்சாயலும் மானிட மாண்பும் ஒருங்கமைந்திருந்த பகுதியை எடுத்து இயேசு தொழுகைக் கூடத்தில் படித்தார். மேலும் அன்றைய தினமே அந்த இறைவாக்கு நடைமுறைக்கு வந்துவிட்டதாக விளக்கமளித்தார் (லூக். 4: 16 - 21). இயேசு அளித்த விளக்கத்திற்கு செவி மடுத்த தொழுகைக் கூடத்திலிருந்த மக்கள்

இறைச்சாயலுக்கும் மானிட மாண்புக்கும் சான்று பகர்ந்தார்கள் (4:21). இயேசு கூறிய வார்த்தைகளிலிருந்து வெளிப்பட்ட இறைச்சாயலையும், மானிடமாண்பையும் ஏற்றுக் கொண்டு நற்செய்திக்குச் சான்று பகருவதே இன்றைய அருட் செய்தியின் நோக்கமாகும்.

## இயேசுவின் அருள் வாக்கில் வெளிப்படும் இறைச்சாயல்

தொழுகைக் கூடத்தில் ஏசாயா இறைவாக்கினரின் இறைவாக்கை இயேசு படித்து அதற்குரிய விளக்கத்தையும், மறைந்திருக்கும் இறைச்சாயலையும் எடுத்துரைத்தார். இயேசு கூறிய திருவார்த்தைகள் அங்கு கூடியிருந்த மக்களுக்கு கிருபையுள்ள அருள் வாக்குகளாக ஒலித்தன. இறைவாக்குகள் எப்போதும் மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தும், செயல்பாட்டிற்கு உடனடியாக வழி நடத்தும். ஆகவே அங்கு கூடியிருந்து தொழுகை செய்த மக்கள் இறைச்சாயலுக்கு சாட்சி பகர்ந்தார்கள். தங்களின் சாயல் மனிதச் சாயலாக மட்டுமல்ல இறைச்சாயலும் இணைந்த ஒன்றாக இருப்பதை உணர்ந்தார்கள். இறைச்சாயலின் வெளிப்பாட்டிற்கு இறைவாக்கினர் வழங்குகின்ற இறைவாக்கின் உட்கருத்தை அவர்கள் உடனடியாக ஏற்றுக் கொள்கிறார்கள். இறைச்சாயல் வெறும் வார்த்தைகளால் மட்டும் வெளிப்படுவதன்று. அது வாழ்க்கையின் ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் செயல்படுவதாகும். ஆகவே இயேசு இந்த இறைவாக்கு இப்பொழுது செயல்பாட்டிற்கு வந்துவிட்டதாக அறிவித்தார். அங்கு கூடியிருந்த மக்கள் இறைச் சாயலை வெளிப்படுத்தத் துவங்கி விட்டார்கள். தம் அருகில் இருப்பவரை நோக்கும்போது இறைவனின் சாயலையும், ரூபத்தையும் பார்ப்பதாகக் கண்டார்கள். இறைவனை நம்மோடு வாழ்பவர்களின் வாயிலாகக் காண வேண்டுமே தவிர வெற்றிடத்தில் இறைவனைத் தேடி அலைய வேண்டாம். வனாந்திரம், காடு, மலை எங்கும் போக வேண்டாம். நம் உடன் வாழும் மனிதர்களில் இறைவனைக் காண வேண்டும். நம் உடன் வாழுபவர் துன்புறும் போது இறைவனும் துன்புறுகிறார் என உணர வேண்டும். நம் உடன் வாழுபவர் மகிழும் போது இறைவனும் மகிழுகிறார் என்பதை எங்கும் நற்செய்தியாக அறிவிக்கவேண்டும். நம் உடன் வாழுபவருக்கு விரோதமாக நாம் செயல்பட நினைத்தாலும், செயல்பட்டாலும் அது இறைவனுக்கு விரோதமாக நாம் செய்யும் செயலாக மாறுகிறது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இயேசுவின் அருள் வாக்கில் இறைச்சாயல் வெளிப்பட்டது. தம் பணிக் காலத்தில் துயருறும் மனிதர்களைக் காணும்போது





என்கிறார் (யோபு 18:5). மாற்றுத்திறனாளிகளை சமூகத்தில் ஊனப்படுத்தும் வார்த்தைகளும் செயல்களும் உள்ளன. இவைகள் நெருங்காலமாய் உலகில் புரையோடிப் போயுள்ளது. உழுத்துப் போன இந்த கருத்தமைவுகளை இயேசு சீடர்களிடம் வன்மையாய்க் கண்டித்து மறுத்துள்ளார். நாமும் இவர்களின் வேதனைத் தொடர்ச்சிக்கு காரணமான கருத்தமைவுகளைத் தகர்ப்போம்.

## 3. பாசமாய் சகோதரனாக ஏற்கும் மானுட மகன்

இயேசு கிறிஸ்துவின் வழியாய் தந்தையாம் கடவுளின் செயல்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இயேசு பிறவியிலே பார்வையற்றவன் வழியாய் கடவுளின் செயல்களை வெளிப்படுத்துகின்றார் (யோவா. 9:3) மைந்தரான இயேசு கிறிஸ்து தந்தையைக் காட்டுபவர் அனைத்தையும் படைத்தவர் (எபி 1:2) விண்ணகத்திலிருந்து இறங்கி தூய ஆவியரால் கன்னிமரியாளின் மகவாய் மண்ணில் வந்தவர், தொடக்கத்திலிருந்து வார்த்தை மனுவுருவானவர் (யோவா 1:14) தந்தைக்கு விருப்பமானதைத் தந்தையுடன் இணைந்து செய்பவர் (யோவ 7: 16) மண்ணினால் உருவாக்கப்பட்டவர்களே மானுடம், மாற்றுத்திறனாளிகள், இயேசு மாற்றுத் திறனாளியான பார்வையற்றவரைத் தனது தந்தையின் செயல்களை வெளிப்படுத்தும் தமது உடன்பிறப்பாய் உலகறியச் செய்தார். மாற்றுத்திறனாளிகளைச் சகோதர சகோதரிகளாய் ஏற்கும் மனமாற்றம் மானுடத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுக்கு வழி கோலும்.

மாற்றுத்திறனாளிகள், மண்ணில் பெருகி வருகிறார்கள். உலகில் நடைபெறும் போர்கள், அணுக்கதிர்வீச்சுகள், சமய, இனக் கலவரங்கள், மாசுபட்ட மானுடக் கலாச்சாரங்கள், ஆதிக்க ஆற்றல்களின் செயல்பாடுகள் போன்றவைகள் இதற்கு காரணமாகலாம். எனவே மாற்றத்திறனாளிகளுக்கு காரணம் இறைவன் எனக் கூறாமல், நாம் காரணம் என, ஏற்று மனம் திருந்தி, மாற்றுத் திறனாளிகளை உடன்பிறப்புகளாய் ஏற்று உலகில் வாழ்வோம்.

அருள்திரு. S. **பாலஸ் செல்வமணி**

பார்வையற்றிருந்த மாற்றுத்திறனாளி பார்வை பெறும்படி செய்தார் (யோவா 9:6,7) வாய் பேச இயலாதவரை பேசவைத்தார் (மத் 12 : 22) காது கேளாதவரை கேட்க வைத்தார் (மாற் 7: 32 - 35). மாற்றுத்திறனாளிகளின் முழுமைக்காய் இறைமகன் செய்த திருப்பணி, அவரின் உள்ள ஏக்கத்தை உலகறியச் செய்கின்றது. நாம் மாற்றுத்திறனாளிகளுடன் நல்லுறவில் வாழ்வதற்கு திருமறை வழி கடவுள் தரும் செய்தியைத் தியானிப்போம்.

## 1. படைப்பிற்குப் பொறுப்பேற்கும் இறைவன்

கடவுள் முழுமையானவர், தம்மைப் போல் மானுடத்தைப் படைத்தார் (தொ.நூ 1:27). ஆதி மானுடம் மாற்றுத்திறனாளிகளாயில்லை. படைப்பாளரை, மணவாட்டி புகழ்கையில் என் நேசர் வெண்மையும், சிவப்புமானவர் பதினாயிரம் பேர்களில் சிறந்தவர் என்கிறார் (இபா 5:10). இயேசு கிறிஸ்துவில் இறைவன் தம்மை வெளிப்படுத்தினார். இவர் அவருடைய மாட்சியின் சுடரொளியும் அவருடைய தன்மையின் அச்சுப் பதிவுமாயிருந்தார் (எபி 1:3). இவரும் மாற்றுதிறனாளியாய்த் தெரியவில்லை. இவரது வளர்ச்சியை, சுமார் முப்பது ஆண்டு கால வளர்ச்சியை தூய லூக்கா குறிப்பிடுகையில் "இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" என்கின்றார் (லூக் 2 : 52). முழுமையானவரான கடவுளின் படைப்புகள் மாற்றுத் திறனாளிகளாயிருக்கையில், இந்த மானுடத்திற்கு, மக்கள் காரணராய் கடவுளையே அன்றும் இன்றும் காட்டுகின்றனர். இந்த மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு காரணங்களிருப்பதை அறிவோம். இருப்பினும் இத்தகு படைப்புக்குப் பொறுப்பு ஏற்கின்றார் (வி.ப 4: 10).

## 2. பழுதான கருத்தமைவுகளை உடைக்கும் இறைமைந்தர்

(மத் 11 : 5)

மாற்றுத்திறனாளிகளைக் குறித்து பல்வேறு கருத்தமைவுகள் உள்ளன. பிறவியிலேயே பார்வை யற்றவானாயிருந்த மனிதனை இயேசுவின் சீடர்கள் கண்டபோது இவன் இப்படிப் பிறந்திருப்பதற்கு காரணம் இவன் செய்த பாவமா? இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமா என்ற கேள்வியைக் கேட்டனர். இயேசு இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல என்றார். (யோவா 9:3) சமுதாயத்தில் பாதிக்கப்பட்டவர், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றவர்களைக் குறித்து, பாவமே காரணம் என்னும் கருத்தமைவு உள்ளது. (வி.ப 20:5)

யோபுவின் நண்பன் பில்தாத், விளக்கு அணைந்து போவதற்கும் அடுப்பின் நெருப்பு எரியாமல் போவதற்கும் துன்மார்க்கமே காரணம்





தேவையிலிருக்கும் மக்களின் குரலைக் கேட்கும் போதும் அவர் மனதுருகி அவர்களைத் தொட்டும், வார்த்தையாலும் வல்லமையினாலும், பணிவிடையினாலும் இறைச்சாயலை வெளிப்படுத்தி மக்களிடையே இறைப்பணியைத் தொடர்ந்தார். நாமும் தேவையிலிருக்கும் மக்களுக்கும், துயருறும் மக்களுக்கும் பணிவிடை செய்யும்போது இறைச்சாயலை வெளிப்படுத்தலாம். அன்னை தெரசா போன்றவர்களும் இறைச்சாயலை தங்கள் பணிவிடை வாயிலாக வெளிப்படுத்திச் சான்று பகர்ந்துள்ளார்கள்.

## இயேசுவின் பணிவிடையில் வெளிப்படும் மானிட மாண்பு

இயேசு தொழுகைக் கூடத்தில் படித்த இறைவாக்கும், தாம் வாழ்ந்த ஊரின் நிலமையும், தாம் பணி செய்யப் போகும் கலிலேய நாட்டின் சூழமைவும் ஒருங்கே இருந்தது என இயேசுவின் கால வரலாற்றை ஆய்வு செய்த அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். எப்படியெனில் இயேசுவின் காலத்தில் இருந்த அரசியல் நிலை மக்களை ஒடுக்கி, உரிமைகள் மறுக்கப்பட்டு, எந்தவிதமான சுதந்திரமும் இல்லாமல் அடிமைகளாகவே பெரும்பான்மை மக்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் செய்யாத குற்றங்களுக்கும், சிறிய குற்றங்களுக்கும் கொடிய தண்டனைகளும், சிறைத்தண்டனைகளும் வழங்கப்பட்டன. மனிதநேயமும், மானிட மாண்பும் சூறையாடப்பட்டு இருந்தன. பொருளாதார முறையில் மக்கள் மிகவும் பின்தங்கியிருந்தார்கள். தினசரி உணவிற்கு அவர்களின் நிலை மிகவும் பரிதாபமாகவும், பசியாகவும் பஞ்சத்திற்கு உட்பட்டுமிருந்தார்கள். சமூக அந்தஸ்து அவர்களுக்கு வழங்கப்படவில்லை. மனிதர்களாக மதிக்கப்படவும் இல்லை. இச்சூழலில் ஆண்டவர் இயேசு இத்தகைய மக்கள் மத்தியில் விடுதலைப் பணியைச் செய்ய கடவுள் ஆவி தம்மீது பொழியப்பட்டுட இருப்பதாகவும் மிகவும் ஒடுக்கப்பட்டு கிடக்கும் மக்களுக்கு விடுதலையின் நற்செய்தியை அறிவிக்க இறைவனால் தாம் அனுப்பப்பட்டு இருப்பதாகவும், இறைவன் வழங்கும் முழுமையான விடுதலையை மக்களுக்குப் பணிவிடை செய்வதின் வாயிலாகத் தாம் நிறைவேற்றப் போவதாக இயேசு குறிப்பிட்டார்.

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக துன்பத்தில் தவிர்த்த போது இறைவன் மோசே வாயிலாக அவர்களை விடுவித்தார். அதுபோல கலிலேயா மக்களின் முழுமையான விடுதலைக்காக கடவுளால் அனுப்பட்டப் புதிய மோசேயாக இயேசுநாதர் தம் பணியைத் தொடர்ந்தார் என நற்செய்தியாளர்களும் இறையியல் வல்லுநர்களும் குறிப்பிடுகிறார்கள் இயேசுவின் திருப்பணியில் மானிட மாண்பு முற்றிலும் மீட்டுக்

கொள்ளப்படுகிறது. குறிப்பாக பேய் பிடித்த இளைஞன் நிகழ்வின் வாயிலாக மானிட மாண்பு முற்றிலும் மீட்டளிக்கப்படுகிறது. அவன் ஆடை அணிந்து இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருந்தான் எனக் குறிப்பிடப்படுகிறது (லூக். 7:35) மனம் திருந்திய மகனும் புது வாழ்வு கண்டு கொண்டான்.

தென் திருவிதாங்கூர் என அறியப்பட்ட இடத்தில் மனித மாண்புகள் சூறையாடப்பட்டு, மனிதர்கள் மனிதர்களாக மதிக்கப்படாமல் மேல் சாதி மக்களின் அடக்குமுறைகளுக்கும், அடிமைத்தனத்திற்கும் பலியாகி வந்த மக்களை மீட்கும் படியாகவும், விடுதலை வழங்கும்படியாகவும், மனித மாண்பு புதுப்பிக்கப்படவும் கிறிஸ்தவ நற்செய்தி இந்த குமரி மண்ணில் அறிவிக்கப்பட்டு, இங்குள்ள அடிமை இன மக்கள் இறைச்சாயலைப் புரிந்து கொள்ளவும், மானிட மாண்பைப் பெற்றுக்கொள்ளவும் நற்செய்திப் பணியாளர்கள் நற்செய்திப் பணிபுரிந்தார்கள். நாமும் தொடர்ந்து இறைச்சாயலையும், மானிட மாண்பையும் வெளிப்படுத்தும் கருவிகளாக இறைவாக்கைக் கேட்டு, இறைத் திட்டத்தை நிறைவேற்றுவோம். இறையாட்சி என்றும் நிறைவாகயிருக்கட்டும்.

அருள்திரு. **E. கென்றிதாஸ்**



**12-10-2014** *மாற்றுத்திறன் படைத்தோர் ஞாயிறு*

# மாற்றுத் திறனாளிகளுடன் கூட்டொருமை கொள்ளல்

**SOLIDARITY WITH THE MENTALLY AND PHYSICALLY CHALLENGED**

| | |
|---|---|
| II சாமு. 9 : 1-13 | Iதெச. 5 : 12-22 |
| திபா. 38 | மத் 11 : 1-6 |

*"...பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர்..." மத். 11 : 5*

**இறைவேண்டல்** : என்றும் மாறா சர்வவல்ல கடவுளே! மாற்றுத்திறனாளிகளுக்கு நீரே பெலனும் ஆறுதலுமானவர். அவர்கள் உம்மிலே மனித மேன்மையை கண்டுகொள்ளவும், தங்கள் வாழும் சமுதாயத்திற்கு கனிகொடுத்து வாழவும் தைரியம், தன்நம்பிக்கை, இரக்கம், உதவி மற்றும் இளைப்பாறுதலையும் கொடுத்தருளும். இவைகளை இந்த பூமியில் வாழும்போது மாற்றுத்தினாளிகளோடு கூட்டொருமையை வெளிகாட்டி அவர்களை குணமாக்கிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம் பிதாவே. ஆமென்.

மானுடத்தில், மாற்றுத்திறனாளிகள், அதிகமாகவே வாழ்ந்து வருகின்றார்கள். ஒரு காலத்தில் இவர்களின் உள்ளங்களை உருவக்குத்தும், குருடன், நொண்டி, சாப்பாணி, முடவன், ஊமையன் ஆகிய சொற்களைப் பயன்படுத்தி வந்தோம். அண்மைக்காலத்தில் கடினச் சொற்களுக்குப் பதிலாய் மாற்றுத்திறனாளிகள் என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருப்பதற்காய் கடவுளுக்கு நன்றி சொல்லுவோம். மாற்றுத்திறனாளிகளுக்கு நல்லுள்ளம் கொண்டோரும், தொண்டு நிறுவனங்களும் திருச்சபையும், அரசும் செய்யும் சேவை பாராட்டுவதற்குரியது. மாற்றுத்திறனாளிகளுடன் கூட்டுறவில் வாழ மானுடத்தில் பெரும்பாலோர் விரும்புவதில்லை. திறனுள்ளவர்களில் பெரும்பான்மை, மாற்றுத்திறனாளிகளின் மனிதராய் கருதுவதில்லை. ஒதுக்கப்படும் நிலையுள்ளது. இறைன் மாற்றுத்திறனாளியைக் கொண்டு மண்ணில் மிகப் பெரிய செயல்களைச் செய்துள்ளார் என்பதற்கு திக்குவாயும், மந்தநாவும் உள்ள மோசேயைக் கொண்டு இறைவன் செய்த மீட்பின் பணி சான்றாயுள்ளது (வி.ப. 4:10) இயேசு கிறிஸ்து தன் திருப்பணியை அறிமுகம் செய்கையில் மாற்றுதிறனாளிகளை விடுவித்து வாழ்விப்பது, தன் பணியின் நோக்கம் என்றார் (லூக் 4:18). மாற்றத்திறனாளிகளைக் கண்டு மனதுருகி இறைமைந்தன்

**02-11-2014** உலக ஞாயிறுப்பள்ளி நாள்

# பற்றுறுதியில் வளர்த்தல்

## NURTURING IN FAITH

| | |
|---|---|
| நீமொ. 23 : 15-26 | எபி. 12 : 1-13 |
| திபா. 1 | யோவா. 6 : 1-14 |

*“பிள்ளையின் தந்தை மிகவும் களிகூர்வார்.”* நீமொ. 23 : 24

**இறைவேண்டல் :** அன்பின் கடவுளே! இயேசு கிறிஸ்துவில் குழந்தைகளை இறையரசின் வாரிசுகளாக அங்கீகரித்தவரே, எல்லா குழந்தைகளும் பற்றுறுதியில் வளரவும், அவர்களது முழு வளர்ச்சிக்கான அத்தனை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ளவும் அவர்களை தகுதிபடுத்த வேண்டுமென ஜெபிக்கின்றோம். உமது ஒளியை இவ்வுலகின் முழு படைப்பிற்கும் பறைசாற்ற நீர் அவர்களுக்கு ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வாயிலாக உம்மை வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

உலகத்தில் அதிக அளவில் குழந்தைகள் மற்றும் சிறுவர்களைக் கொண்ட நாடு இந்தியா ஆகும். சுமார் 40 கோடி பேர் இருக்கிறார்கள் (தேசோபகாரி. நவம்பர் 2013, ப. 64). இந்தியாவில் 1974ம் ஆண்டு சிறுவர்களுக்கென உருவாக்கப்பட்ட தேசிய கொள்கையே சிறுவர்களின் தேவைகளுக்காகவும், உரிமைகளுக்காவும் கொண்டுவரப்பட்ட முதல் கொள்கை ஆகும். சிறுவர்கள் நாட்டின் முக்கியமான, உயர்ந்த சொத்து என்பதை இக்கொள்கை அடையாளபடுத்துகிறது. ஒரு குழந்தையின் வளர்ச்சிக் காலத்தில் உடல், உள்ளம் மற்றும் சமுதாயம் சார்ந்த முழு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் நாடு செய்ய வேண்டிய பணிவிடைகளை இக்கொள்கை கோடிட்டுக் காட்டுகிறது. நம் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் 26 மில்லியன் குழந்தைகள் பிறக்கிறார்கள் என்று கணக்கிடப்படுகிறது. முன் காலத்தை விட 2001-2011 கணக்கில் நாட்டின் மக்கள் தொகை 181 மில்லியன் அதிகரித்துள்ளது. ஆனால். இக்காலகட்டத்தில் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை முன் காலத்தை விட 5.05 மில்லியன் குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் குழந்தைகளுக்கெதிரான வன்முறைகள் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. கடந்த 2010-ம் ஆண்டில்





சம்பளத்தைக் கொடுத்து அவர்களின் நேரம், உடல்நலம், மனநிலை ஆகிய அத்தனையையும் உறிஞ்சிவிடுகிறது. அதிக சம்பளம் கிடைக்கும் என்கிற ஒற்றை நோக்கத்துக்காய் இன்று இளைஞர்கள் தொழில் நுட்பத் துறையில் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். இதனைப் பெற்றோர்களும் ஆதரிக்கிறார்கள்.

பணம் இன்று ‘‘கடவுளின்’’ இடத்தையே எடுத்து விட்டது. இந்தச் சூழலில் மாற்கு 10:17-31 வசனங்கள் பணத்தைக் கடவுளாக்கிய மனிதனின் மதியீனத்தைக் கடிந்துகொள்கிறது.

மனிதன் படைக்கப்பட்ட காலம் துவங்கி இன்றுவரை, அது எந்த ஒரு சூழலாயிருந்தாலும், கடவுளோடு நான் எப்படி வாழ்வது என்கிற கேள்வியைக் கேட்டுக்கொண்டே இருக்கிறான். இப்பகுதியில் இயேசுவிடம் வந்த அந்த வாலிபனும் இதே கேள்வியைத்தான் கேட்கிறான். ‘‘நல்ல போதகரே, முடிவில்லா வாழ்வு வாழ நான் என்ன செய்ய வேண்டும்’’ (மாற்கு 10:17). இந்தக் கேள்விக்கு இயேசு மூன்று வழிகளை அந்த இளைஞனுக்குச் சொன்னார். இந்த மூன்று வழிகளும் ஒன்றோடு ஒன்று நெருங்கின தொடர்புடையன என்பதை நாம் கவனிக்க வேண்டும். அந்த மூன்று வழிகள் :

1. மோசேயின் திருச்சட்டத்தில் எழுதியிருக்கிற கற்பனைகளைக் கடைப்பிடி (மாற்கு 10:19)
2. உனது செல்வத்தை ஏழ்மையில் வாழ்வோரோடு பகிர்ந்தளி. (மாற்கு 10:21a)
3. சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்தொடர் (மாற்கு 10:21)

### 1. மோசேயின் திருச்சட்டத்தில் எழுதியிருக்கிற கற்பனைகளைக் கடைப்பிடி : (மாற்கு 10:19)

யூதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மோசேயின் திருச்சட்டத்தைச் சிறுவயதிலிருந்தே கற்றுக்கொடுப்பார்கள். (இச. 6:7)

மோசே மூலமாய் கடவுள் இஸ்ரவேலுக்குப் பத்துக் கற்பனைகளைக் கொடுத்தார் (விப. :1-17). இந்தக் கற்பனைகளை இரண்டாகப் பிரிக்கலாம் முதல் 4 கற்பனைகள் மனிதன் கடவுளுக்குச் செய்ய வேண்டியவைகளைக் குறித்துக் கூறுகிறது. அடுத்த 6 கற்பனைகளும் மனிதன் தன் சகமனிதனுக்குச் செய்ய வேண்டியவைகளைக் குறித்துக் கூறுகிறது.

‘‘முடிவில்லா வாழ்வை’’ குறித்து வினவின அந்த இளைஞனுக்கு ஆண்டவர் சொன்னது. ‘‘நீ முதலாவது மோசேயின் கற்பனையில் உள்ள இரண்டாவது பகுதியை நிறைவேற்று என்பதாகும். தன் சகமனிதனை நேசிக்க முடியாதவன் கடவுளை நேசிக்க முடியாது. நாம் எப்படி

சகமனிதனை மதிக்கிறோம் என்பதைப் பொறுத்தே நமது ஆன்மிகம் அமையும்.

தொழில் நுட்பக் காலத்தில் மனித உணர்வுகளுக்கும், மனித உடமைகளுக்கும், மனித உயிர்களுக்கும் மதிப்பு குறைந்து காணப்படுகிறது. ''பணம்'' ஒன்றே மனிதனின் குறிக்கோளாயிருப்பதால் மனிதத்தை மனிதன் மறந்தான். அதிக சம்பளம் கொடுத்து தொழில் நுட்ப வல்லுநர்களை பிழிந்தெடுக்கின்றன. வணிக நிறுவனங்கள். இந்த மன அழுத்தத்தால் குடும்பங்கள் சிதைகிறது. இல்லை அழிகின்றன. அதிகமான மணவிலக்குகள், தற்கொலைகள், சரியான உறவுகள் இல்லாக் குடும்ப அங்கத்தினர்கள் என்று நீளுகிறது பட்டியல். மனித உறவு மேம்பட அடிப்படையானது கற்பனைகளைக் கைக்கொள்வதாகும்.

## 2. உனது செல்வத்தை ஏழ்மையில் வாழ்வோரோடு பகிர்ந்தளி (மாற்கு 10:21a)

எப்போது உறவுகளில் இணக்கம் ஏற்படுகிறதோ அப்போது பகிர்ந்து கொள்ளுதலும் உண்டாகும். கொடுப்பதில்தான் உறவுகள் உண்டாகின்றன. சக மனிதனோடு நல்லுறவில் வாழ்கிறவன் எப்படி பகிர்ந்து கொடுக்காமல் இருக்க முடியும். ஆனால் இயேசு கிறிஸ்துவிடம் வந்த இந்த இளைஞன் கற்பனைகளை மதித்து வாழ்ந்தது உண்மையே. ஆனால் கற்பனைகளை எதிர்நோக்கும் வாழ்க்கை வாழவில்லை. நான் இந்தக் கற்பனைகளை எனது சிறுவயது முதல் கடைப்பிடித்து வருகிறேன் என்று அந்த இளைஞன் சொன்னதை மெச்சிக்கொண்ட கர்த்தர் கற்பனைகளை நடைமுறைப்படுத்தத் தவறிய அந்த ''குறையை'' சுட்டிக்காட்டினார்.

''ஏழை'' என்கிற சொல் மூலமொழியில் (கிரேக்க புதிய ஏற்பாட்டில்) ''பிச்சைக்காரர்களை'' குறிக்கிறது. பிச்சைக்காரன் என்பது பிறரைச் சார்ந்து வாழ்பவரைக் குறிக்கிறது. நிலம் இழந்ததினாலோ, குணமாக்க முடியாத நோயின் நிமித்தமோ, தங்களுடைய உறவினர்களால் தங்கள் உடமைகளை இழந்ததினாலோ ஒருவர் யாகசம் புரியலாம்.

சக மனிதர்களால் கைவிடப்பட்டவர்களைக் காப்பாற்றுவதும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதுவுமே ஆன்மிகம். நான், எனக்கு, என்றாகிவிட்டது தொழில் நுட்ப காலத்து வாழ்க்கை முறை. கர்த்தர் நம்மை நான் என்பதிலிருந்து நாங்கள் ஆகவும்; என் என்பதிலிருந்து எங்கள் என மாறவும் அழைக்கிறார். எப்படியாகிலும் எந்த வழியிலாகிலும் பணம் சம்பாதிப்பது என்பது நடைமுறைப் பழக்கமாகிவிட்ட காலத்தில் நமது உடமைகளைப் பகிர்ந்து கொடுப்பதே ஆன்மிகம் என்கிறார் கர்த்தர்.





பண்ணினான். யோசியாவின் இந்த மாற்றங்களை அனுமதித்த சீர்திருத்தம் மக்களைப் பற்றுறுதியில் மீண்டும் வாழச் செய்தது. இயேசு கிறிஸ்துவும் உண்மையான பக்தி வாழ்வை விட்டு, தேவாலயத்தில் நடந்த வியாபாரப் போக்கை, தீமைகளை, மாறுபாடுகளை அறிந்து அவற்றை அகற்றி மாற்றத்தை ஏற்படுத்தி பற்றுறுதியில் வாழ வகை செய்தார்.

பற்றுறுதியை மீண்டும் கண்டறிதலும் அதன்படி மீண்டும் வாழ்வது என்பது யோசியா, இயேசுகிறிஸ்து, மார்ட்டின் லூதர் இவர்களுடைய காலத்தில் மட்டுமோ, திருச்சபை வரலாற்றில் எப்போதோ ஓரிருமுறை நடைபெற்ற நிகழ்வோ அல்ல. இது ஆன்மீக வாழ்வில் அனுதினமும் நடைபெற வேண்டிய நிகழ்வு. இன்றும் நம்முடைய பற்றுறுதி வாழ்வில் ஏற்பட்டிருக்கும் சறுக்கல்களையும் மாறுபாடுகளையும் அறிந்து கடவுள் முன் மனத்தாழ்மையுடன் மாற்றங்களை ஏற்படுத்த அழைக்கப்படுகிறோம். கடவுளுக்குத் தரவேண்டிய முக்கியத்துவத்தை பணம், பதவி, படிப்பு, பாரம்பரியம் இவைகளுக்கு பல வேளைகளில் தந்து பற்றுறுதியில் வீழ்ச்சியடைந்திருக்கிறோம். இந்த மாறுபாடுகளை அறியவும், மனத்தாழ்மை அடையவும், மாற்றங்களை அனுமதிக்கவும் இற்றின் வழியாய் பற்றுறுதியைத் திரும்பவும் கண்டுபிடித்து அதன்படி வாழவும் ஆண்டவர் அருள் புரிவாராக.

அருள்திரு. M. **இம்மானுவேல் கின்சன் பெல்**

## 2. மனத்தாழ்மை அடைதல்

பற்றுறுதி வாழ்க்கையில் நாம் மாறுபாடு அடைந்துள்ளோம் என்ற உண்மையை நாம் அறியும் போது அதனை மறைக்காமல் அல்லது நியாயப் படுத்த முயலாமல் நம்முடைய குறைவுகளை உணர்ந்து மனத்தாழ்மை அடையவேண்டும். அரசன் யோசியா தேவாலயத்தை சுத்திகரிக்க முயன்ற போது கண்டெடுக்கப்பட்ட நியாயப்பிரமாண புஸ்தகத்தை ஆசாரியனாகிய இல்க்கியா வாசித்துக் காட்டினார். நியாயப்பிரமாண வார்த்தைகளைக் கேட்டு தன்னுடைய பற்றுறுதி வாழ்க்கை மாறுபட்டிருப்பதை அறிந்த யோசியா மனத்தாழ்மை அடைந்தார். தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டார் (வ. 19). பற்றுறுதியில் மீண்டும் வாழ என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய இறைவாக்கினரை நாடினார் (வ. 21). அரசனின் மனத்தாழ்மையைக் கண்ட கடவுள் அவருக்கு இரங்கினார் (வ. 27). பற்றுறுதி வாழ்க்கையில் மனத்தாழ்மை மிகவும் அவசியம். நம்முடைய மாறுபாடுகளை அறியும்போது, உணரும்போது அவற்றை மறைத்துவிட முயலுவோமானால் நமக்கு வாழ்வு இல்லை (நீதி. 28:13). அவற்றை நியாயப்படுத்த முயற்சித்தால் நாம் மாய்மாலக்காரராய் இருப்போம் (Iயோவா 1:8) தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கும் ஆண்டவர் (Iபேது 5: 5) மனத்தாழ்மையுள்ளவர்களைத் தமது கோபத்திலிருந்து காத்து (செப் 2:3) பற்றுறுதியில் மீண்டும் வாழச் செய்வார்.

## 3. மாற்றங்களை அனுமதித்தல்

மாற்றங்கள் வளர்ச்சியின் அடையாளம், வளர்ச்சி உயிரோடிருப்பதன் அடையாளம். தீமை நிலையிலிருந்து தாழ்நிலையிலிருந்து உயர் நிலைக்கு மாறுதல் பற்றுறுதி வாழ்வின் உன்னத அனுபவம். பற்றுறுதி வாழ்வில் மாறுபாடுகளை அறிந்து, மனத்தாழ்மை அடைவதோடு நின்றுவிடாமல் மாற்றங்களை அனுமதிக்க, ஏற்றுக்கொள்ள, கொண்டுவர எதிர்பார்க்கப்படுகிறோம். பற்றுறுதி வாழ்வின் அவலநிலை கண்டு மனத்தாழ்மையடைந்த யோசியா, கடவுளுடனான பற்றுறுதி வாழ்க்கையில் பயணிக்கத் தடையாயிருந்த அந்நிய தெய்வங்களையும் பலிபீடங்களையும் அழித்தான். அந்நிய தெய்வங்களை ஆராதிக்கிறவர்களையும் அழித்து அவைகளுக்கான பலிகளையும் பண்டிகைகளையும் தடை செய்தான். தேவாலயத்தில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தி நியாயப்பிரமாணத்தின்படி தானும் மக்களும் நடக்க கடவுளோடு உடன்படிக்கை பண்ணினான். மக்களையும் உடன்படிக்கை செய்யப்





## 3. சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்தொடர் (மாற்கு 10:21)

“சிலுவை” துன்பத்தையும், ஒடுக்கப்படுதலையும், தனிமையையும், ஓரம் கட்டப்படுதலையும் குறிக்கிறது. கிறிஸ்துவைப் பின் தொடர்கிறவர்கள் துன்பப்படுவர் என்பது கர்த்தரின் வாக்கு. இன்றைக்குச் சிலுவைக்கு மாற்றான போதனையை எங்கும் கேட்க முடிகிறது. இயேசுவைப் பின்பற்றினால் செழுமை என்பது தான் சமகாலப் பிரசங்கங்கள் கூறும் செய்தி. ஆனால் கிறிஸ்து தம்மைப் பின்பற்றுவோர் சிலுவை சுமந்து வரும்படி கூறினார். கிறிஸ்துவின் வசனத்துக்கு விரோதமாய் அவரைப் பின்பற்றுவது என்பது நம்மை நாமே ஏமாற்றுவதாகும்.

கிறிஸ்துவுக்காய்ப் பாடுகளை ஏற்றுக்கொள்வதை இங்கே கவனிக்க முடியும். செல்வந்தன் தனது செல்வத்தை விற்று ஏழ்மையில் வாழ்வோருக்குக் கொடுத்து துன்பத்தை ஏற்றுக்கொள்கிறான். நமது பாதுகாப்பு அரண்களை விட்டு வெளியேறி பாடுகளைச் சொந்தமாக்கிக் கொள்ள இயேசு கூறுகிறார். “நாம் பல பாடுகள் வழியாய் முடிவில்லா வாழ்வைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது” என்று திருமறை கூறுகிறது. கிறிஸ்து நமக்கு நன்மாதிரியாய் சிலுவை சுமந்தார். சிலுவைப் பாதைதான் கிறிஸ்துவின் பாதை. ஆனால் அந்தச் சிலுவைப் பாதையின் முடிவோ உயிர்த்தெழுதல். சிலுவை நம்மை உயிர்தெழுதலுக்கு அழைத்துச் செல்லுகிறது. வேறு ஒரு வார்த்தையில் சொன்னால் சிலுவை நம்மை முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்லுகிறது.

### முடிவுரை :

மோசேயின் திருச்சட்டம், ஏழ்மையில் வாழ்வோருக்குப் பகிர்ந்து கொடுத்தல், சிலுவை சுமத்தல் ஆகிய இந்த மூன்று வழிமுறைகளும் ஒன்றோடு ஒன்று மிகுந்த தொடர்புடையது. தொழில் நுட்பக் காலத்தில் மனிதர்கள் “பணத்தை” முதன்மைப்படுத்துகிறார்கள். ஆனால் முதன்மைப்படுத்தப்பட வேண்டியது “கடவுளை”. கடவுளை நாம் முதன்மைப்படுத்தும்போது நாம் அவரது கற்பனைகளை கைக்கொள்ளுவோம். அவரது கற்பனைகளைக் கைக்கொள்வது என்பது பிறரை நேசிப்பதாகும். குறிப்பாய், ஏழ்மையில் வாடுவோரை நேசித்து அவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பதாகும். பிறருக்காய் வாழ்வது என்பது சிலுவையை விரும்பி ஏற்றுக்கொள்வதாகும். சிலுவைப் பாதை என்பது கிறிஸ்துவின் பாதையாகும். சிலுவையின் முடிவு உயிர்த்தெழுதல் தான்.

திரு. P.G. **ஜெயின்குமார்**

**26-10-2014** *சீர்திருத்த ஞாயிறு*

# பற்றுறுதியை மீண்டும் கண்டறிதலும் மீள்வாழ்வும்

## RE-DISCOVERING AND RELIVING THE FAITH

| | |
|---|---|
| 2 குறி. 34 : 8-21 | யூதா. 1 : 17-25 |
| திபா. 112 | யோவா. 2 : 12-22 |

*"...தூய்மைமிகு விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு உங்கள் வாழ்வைக் கட்டி எழுப்புங்கள்..." யூதா. 1 : 20*

**இறைவேண்டல் :** சர்வவல்லமையும் என்றும் மாறாதவருமாகிய கடவுளே! ஆண்டவரும் இரட்சகருமாகிய உம் திருகுமாரனில் எல்லாவற்றையும் புதுப்பிக்கும் விருப்பம் கொண்டீர். இவ்வுலகம் அவரது அமைதியில் களிகூரவும், அவரின் அன்பில் வாழவும் அவரது நீதியில் மகிமையையும், சீர்திருத்தம் பெறவும், திரும்ப ஒன்று சேர்க்கவும் எல்லா மனிதரையும் எல்லா படைப்புகளையும் திருச்சபையின் முழுமைக்கு அழைத்துவரவும், எல்லாவற்றிற்கும் எல்லாமாக நீர் இருக்கவும் வேண்டுமென்று ஆண்டவரும் உலக இரட்சகருமான இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

அக்டோபர் மாதம் கடைசி ஞாயிறு சீர்திருத்த ஞாயிறாக ஆசரிக்கப்படுகிறது. திருச்சபையின் பற்றுறுதி வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முயன்ற மார்டின் லூத்தர் 1577ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் தேதி தாம் திருப்பணியாற்றிய விட்டன்பர்க் ( Wittenberg) ஆலய வாயிலில் தனது 95 கருத்துக்களை எழுதி தொங்கவிட்டு திருச்சபை சீர்திருத்தத்திற்கு வழிகோலினார். திருச்சபை பற்றுறுதிப் பாதையிலிருந்து தடம்புரண்டு செல்வதையும் மனிதத் தலைமைத்துவம் மையப்படுத்தப்படுவதையும் மனிதன் தெய்வநிலைக்கு உயர்த்தப்படுவதையும் திருமறையின் அடிப்படையில் அமையாத பாரம்பரியங்கள் பின்பற்றப்படுவதையும் வன்மையாக எதிர்த்தார். இறைவார்த்தையினால் மட்டுமே (Sola Scriptura) இறையருளால் மட்டுமே ( Sola Gratia) பற்றுறுதியால் மட்டுமே (Sola Fide) நீதிமான் பிழைப்பான் என்ற லூத்தரின் பற்றுறுதிக் கோட்பாடு சீர்திருத்தத் திருச்சபையின் அடிப்படையாக அமைந்தது. வாசிக்கக் கேட்ட இன்றைய திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் பற்றுறுதியை மீண்டும் கண்டறிந்து அதன்படி வாழ்தல் எங்ஙனம் என்று சிந்திப்போம்.





### 1. மாறுபாடுகளை அறிதல்

மாறுபாடு (Perverse) என்பது உண்மை நிலையிலிருந்து விலகி மாறுபட்ட நிலையில் வாழ்வது. இஸ்ரவேல் மக்கள் கடவுளுக்கு சொந்த ஜனமாயிருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இதனை மறந்து கடவுளை விட்டு, அந்நிய தெய்வங்களை வணங்கும் மாறுபாடுள்ள பக்தி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அரசியலில் வலிமை வேண்டி வேற்றுநாட்டு பெண்களை சாலமோன் அரசர் மணந்ததும், அவரது மனைவியர் தங்கள் தங்கள் தெய்வ வழிபாட்டு முறைமைகளை இஸ்ரவேலுக்குள் கொண்டு வந்ததும், இஸ்ரவேலர் பக்தி வாழ்க்கையில் மாறுபாடு அடைய காரணமாயிற்று ( IIஅரசர் 11 : 1-10) மேலும் இஸ்ரவேல் தேசம் இஸ்ரவேல் (வடநாடு), யூதேயா (தென்நாடு) என்று இரண்டாகப் பிரிந்து தொன்னாட்டின் தலைநகரான எருசலேம் ஆன்மீக மையமாகத் திகழ்ந்ததை தடுக்கும் நோக்கில் வடநாட்டு அரசன் யெரொபெயாம் தாண் மற்றும் பெத்தேலில் மக்கள் வழிபடும்படி வைத்த பொற்கன்றுக்குட்டிச் சிலைகளும் அவைகளுக்கான பலிகள் மற்றும் பண்டிகைகளும் இஸ்ரவேல் மக்களிடையே அந்நிய தெய்வ (IIஅரசர் 12: 25 - 13: 21) வணக்கத்தை கொண்டுவந்தன. இதைத் தொடர்ந்து பல்வேறு அரசர்களும் தங்களது ஆன்மீக வாழ்வின் மாறுபாடுகளை அறியாதவர்களாகவே ஆட்சி புரிந்தனர். இந்நிலையில் யோசியா தனது எட்டாவது வயதில் அரசனானார். யோசியா என்பதற்கு "கடவுள் துணையாக இருப்பார்" (The Lord will support) என்று பொருள். தனது ஆட்சியில் ஆலயத்தை சுத்தப்படுத்த யோசியா ஆணையிட்டார். அப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட நியாயப்பிரமாண புஸ்தகம் அவரிடத்தில் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. நியாயப் பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்ட யோசியா தாமும் தம்முடைய மக்களும் பற்றுறுதி வாழ்வில் வீழ்ச்சியடைந்திருப்பதையும், கடவுளின் கோபத்திற்கு ஆளாகியிருப்பதையும் அறிந்தார். இயேசு கிறிஸ்துவும் கடவுளுடைய வீடாகிய தேவாலயம் கள்ளர் குகையாக்கப்பட்டிருக்கும் அவல நிலையை அறிந்தார் (மத் 21:13; மாற் 11: 17 லூக். 19:46) "உன்னை அறிந்துகொள்" (Know Thyself) என்றார் கிரேக்க தத்துவ ஞானி சாக்ரடீஸ். நாம் இருக்கும் நிலையை அறிந்து கொள்ளாவிட்டால் மீண்டெழுவது இயலாத காரியம். இன்றும் பற்றுறுதியில் ஏற்பட்டிருக்கிற மாறுபாடுகளை, ஆன்மீக வாழ்வில் நம்மை தடம் புரளச் செய்கிற காரியங்களை நாம் அறிந்திருக்கிறோமா?

சிறையிருப்புக்கு பின், இஸ்ரவேல், யூதா எனப் பிரிந்திருக்கும் இறைமக்கள் தங்கள் அசுத்தமான வாழ்வை விட்டு திரும்பி, ஒன்று சேர்ந்து ஒரே ஆட்சியின் கீழ் வாழ்வார்கள் என்பதை ஓர் அடையாளச் செயல் மூலமாக விளக்குகிறார் (எசே. : 37 : 15 - 23)

Iகொரி. 1 :9-ல் இறைமக்களாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் நட்புறவில் பங்குபெற அழைக்கப்பட்டுள்ளோம். வழிபாட்டின் மூலமாக நட்புறவில் நாம் இணைக்கப்படுகிறோம். இறைமக்களின் இணைவு கிறிஸ்துவின் (யோ. : 1:3) மேலும், பவுல் ரோமர் 12:5-ல் நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம். ஒருவருக்கொருவர் உடனுறுப்புகளாய் இருக்கிறோம்.

இயேசு கிறிஸ்து இவ்வுலக வாழ்வின் இறுதி நாட்களில் ஏறெடுத்த மன்றாட்டு நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது. ஒரே சபைக்காக இரட்சகர் ஜெபிக்கிறார். (யோவா. 17 : 21) திருப்பாடல் 133ன்-படி நாம் இணைந்து ஆராதிப்பது எவ்வளவு இனிமையானது எனக் கூறப்படுகிறது.

இறை ஒருமைப்பாட்டுடன் நடத்தப்படும் தொழுகையில் தாம் கலந்து கொள்வதாக ஆண்டவர் வாக்கு தருகிறார். (மத். 18 : 19, 20)

ஆகவே, நமது வழிபாடுகள் மூலம் ஒன்றிணைந்து உலகத்தின் அனைத்து மக்களும் ஒரே விசுவாச சமூகமாக வாழ்வோமாக.

## 2. நற்சான்று வெளிப்படுகிறது

மீட்பராகிய கடவுளுக்கு மீட்கப்பட்ட மக்கள் சாட்சிகளாக இருக்கவேண்டும். (எசா. 43 : 12). மீட்பராகிய இயேசு கிறிஸ்துவுக்கு, அவரைத் தங்கள் சொந்த மீட்பராக ஏற்றுக்கொள்கிறவர்கள் சாட்சிகளாவர். சாட்சி கொடுப்பதிலிருந்துதான் நற்செய்திப் பணி ஆரம்பமாகிறது. (திப. 1:8)

ஒரே மீட்பராகிய இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக விளங்கும் கிறிஸ்தவர்களும் ஒன்றுபட்டு இருக்கவேண்டும். கிறிஸ்தவ வாழ்வு, பணி, வழிபாடு அனைத்தையும் நாம் சான்று நெறி என்று புரிந்து கொள்ளும்போது தான் சாட்சி என்பதின் முழு பொருள் விளங்கும்.

யோவான் 4-ம் அதிகாரத்தில் இயேசுவுக்கும் சமாரியப் பெண்ணுக்கும் இடையே நடைபெறுகின்ற உரையாடலைக் கவனிக்கும் போது, சமாரியப் பெண் வழிபாட்டைக் குறித்த பிரச்சினையைக் கிளப்புகிறாள். ஏனென்றால் இணைச் சட்டம் ஒரிட வழிபாட்டை வலியுறுத்துகிறது. (இ.ச. 12)





குழந்தைகளுக்கு எதிராக நடந்த குற்றங்கள் குறித்த விவரங்களை தேசிய குற்ற நிகழ்வுகள் பதிவு அமைப்பு வெளியிட்டது. அதில் 2010-ம் ஆண்டில் இந்தியாவில் 10670 குழந்தைகள் கடத்தப்பட்டுள்ளனர்; 1408 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்; 5484 குழந்தைகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டிருக்கின்றனர் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது (தினத்தந்தி, 31.10.2011, பக். 3)

கடந்த 2013-ம் ஆண்டு அண்மை மாநிலமான கேரளாவில் பிள்ளைகளுக்கெதிராக நடந்த நிகழ்வுகள் நெஞ்சை உறைய வைக்கின்றன. நிகழ்வு 1) 2013 ஜூலை மாதம் இடுக்கி மாவட்டத்தில் ஐந்து வயதான ஹெபீக் என்ற சிறுவன் தன் தந்தை மற்றும் சித்தியால் (தந்தையின் இரண்டாம் மனைவி) கொடூரமாகத் தாக்கப்பட்டார். சித்தி அடுப்பூதும் இரும்புக் குழலால் காலை அடித்து உடைத்தார். நினைவிழந்து சாகும் நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நிகழ்வு 2) 2013 நவம்பர் மாதம் எர்ணாகுளம், சோற்றானிக்கரை அருகில் தன் கணவனைப் பிரிந்து வாழும் ராணி என்ற பெண், தன் இரண்டு காதலர்களுடன் இணைந்து அக்ஷா என்ற நான்கு வயது மகளைப் பாலியல் பலாத்காரம் செய்து, கொன்று புதைத்தனர், நிகழ்வு 3) கோழஞ்சேரிக்கருகில் பொன்குந்நம் என்ற இடத்தில் புதிதாகப் பிறந்த தன் உடன் பிறப்பையும், தன் தாயையும் பார்க்க மருத்துவமனைக்கு வந்த சுஜித் என்ற ஆறு வயது சிறுவன் மருத்துவமனை மாடியிலிருந்து தூக்கி எறியப்பட்டான். இந்நிகழ்வுகளில் பிள்ளைகளை பராமரித்து வளர்த்த வேண்டிய பெற்றோரே பிள்ளைகளின் உயிருக்கு உலை வைத்தது வேதனையானது.

பிள்ளைகள் ‘‘முதியோரின் மணிமுடி,’’ ‘‘பந்தியைச் சுற்றியுள்ள ஒலிவச் செடிகள்’’ என்பன சிறுவர்களைக் குறித்து கூறும் ஆசியுரைகள். குழந்தைகள்/ சிறுவர்கள் முற்றுப்பெறாத உருவங்கள் என்பதும் திருமறை காட்டும் உண்மை. மனம் போல போகிற போக்கு தான் அவர்களது சட்டம் (மத் 11 : 16-19). தந்திரங்கள், சூழ்ச்சிகள், ஏமாற்று வழிகள் போன்ற காற்றுகளாலும் பந்தாடப்படாமலிருக்க (எபே 4:14), அவர்கள் மேற்பார்வையாளர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் கீழ் வைக்கப்படவேண்டும் (கலா 4 : 1, 2) என்பதும் திருமறையின் கருத்து. கடவுளிடமிருந்து பெற்றோரின் கனிவும், பராமரிப்பும் சிறுவர்களுக்கு உண்டு என்பதை குழந்தையாம் இஸ்ரயேலைப் பராமரிப்பதில் அறிய முடிகிறது (ஓசே 11 : 1-4) குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் வாயினின்று கடவுள் தனக்கெனப் புகழ்ச்சியை ஆயத்தப்படுத்துகிறார் (திபா 8 : 2, 3; மத் 21:16)

இஸ்ரயேலரில் ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் விடுதலை வரலாற்றை அவர்கள் பிள்ளைகளுக்கு உணர்வூட்டும் வகையில் சொல்லி கொடுத்திருக்கிறார்கள். தங்கள் முற்பிதாக்கள் சொல்லிக் கொடுத்தவைகளையும், இறைவார்தைதகளையும், கடவுளின் வல்ல செயல்களையூம் மறைக்காமல் தலைமுறையினருக்கு கற்றுக் கொடுத்தார்கள். அந்தச் சிறுவர்கள் வளர்ந்து பெரியவர்களான பின்பு தங்கள் பெற்றோரால் எப்படி அறிவு புகட்டப்பட்டார்கள் என்பதை நினைவு கூர்ந்தார்கள் (திபா. 78 : 3-4)

கணவனும் மனைவியும் அன்பு செலுத்தி, பராமரிப்பது போல் தங்கள் பிள்ளைகளிடத்தும் அன்பு காட்டி. அவர்களை பராமரிக்க வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு உண்டு. பிள்ளைகளை அன்பிலும், நீதியிலும் வளர்த்தி, அவர்களது உடல் மற்றும் ஆன்மிகம் சார்ந்த தேவைகளை நிறைவாக்குவது பெற்றோரின் புனிதமான கடமையாகும். மனோவா தன் பிள்ளை சிம்சோன் பிறப்பதற்குமுன் பிள்ளைப் பேற்றினை உறுதி செய்த இறைத் தூதரிடம் கேட்ட "அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும்? அதை எப்படி நடத்த வேண்டும்?" என்ற கேள்விகளை இன்றைய பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் குழந்தைகளை வளர்த்த இறை வழிகாட்டலுக்காக கடவுளிடம் கேட்க வேண்டும். இக்கேள்விக்கு சில பதில்களை இன்றைய திருமறைப் பகுதிகளிலிருந்து காண முயல்வோம்.

### 1. *இறை அச்சமுள்ள பிள்ளைகளாக வளர்த்தல்*

(நீமொ. 23:17)

அச்சம் என்பது ஆபத்தால் அல்லது சந்தேகத்தால் எழும் உணர்ச்சி ஆகும். இறையச்சமோ மதிப்பு, அன்பு, உண்மை, தொழுகை, நம்பிக்கை, எதிர்நோக்கு போன்ற உணர்வுகளை உருவாக்குகிறது. மனிதர் பாவத்தின் காரணமாகவும், கடவுள் தண்டிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பினாலும் கடவுளுக்கு அஞ்சினர் (தொநூ 3:10; 18:15; 20:8; திபா. 76:8; 78:33; 90: 7-11). இது கடவுளின் அன்பை உணர்வதிலிருந்து எழ வேண்டும் (ஓசே. 11 : 9-11). இதுதான் "செமா" (Shema) என்று எபிரேய வழக்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது (இச. 6:4-5) இது கடவுளோடு உள்ள முழுநம்பிக்கையோடு இணைந்தது ஆகும் (திபா. 23:4; 130:4; லூக். 1:50). இது மனித நடத்தையின் கோட்பாடாகிறது; ஞானத்தின் தொடக்கமாகிறது (யோபு 28:28; திபா. 111:10; நீமொ. 1:7) கடவுள் நம் சொல், சிந்தனை, செயல்களை அறிகிறார்; இவற்றிற்குரிய பலனை நமக்கு தருவார் என நம்பி, தவறு செய்யாமல், தீமைக்கு விலகி வாழ்வதுதான் இறை அச்சம் என்று



**09-11-2014** ஒன்றிப்பு ஞாயிறு

## வழிபாட்டில் ஒன்றிணைதல்
## (UNITING IN WORSHIP)

எசேக். 37 : 15-23 எபேசி. 4 : 1-16
திபா. 95 யோவா. 4 : 19-26

*"அவை இரண்டும் உன் கையில் ஒரே கோலாயிருக்கும்படி, அவற்றை ஒன்றாகச் சேர்." எசே. 37 : 17*

**இறைவேண்டல் : நல்ல கடவுளே! ஒற்றுமை, இசைவு போன்றவற்றிற்கான தரிசனத்தை தந்தவரே, நாங்கள் இணைந்து தொழுதுகொள்வதற்குரிய வாய்ப்பினை தந்ததற்காக உம்மை போற்றுகின்றோம். நாங்கள் உம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுக்கொள்ளும் ஒரு சமூகமாக ஒற்றுமையில் வளரவும் அதன்வழியாய் ஒரே மந்தை ஒரே மேய்ப்பர் என்று உமது பெரிய விருப்பத்தை முழுமைப்படுத்தவும், வழிபாட்டில் ஒன்றிணையவும் இவ்வுலகில் எங்கள் சாட்சியை பெலப்படுத்த உதவி செய்யும் என்று கிறிஸ்துவின் திருபெயரில் வேண்டுகிறோம். ஆமென்.**

வழிபாடு என்பது மனிதனோடு இரண்டற கலந்த ஒன்று. வழிபாட்டில் மனிதன் பங்குகொள்ளும்போது உள்ளான மனிதனில் மகிழ்ச்சி உருவாகிறது. (Worship in the turning of man to God, infaith and adoration)

இறைபக்தியின் மூலம் மனிதன் இறைவனோடு ஒன்றுபடும் உணர்வைப் பெற்றுக்கொள்கிறான் (It in as saint Augustine said, 'Thou hast made us for Thyself, and our heart is restless till it rest in Thee').

கிறிஸ்தவ வழிபாடு என்பது சுயரட்சிப்புக்கு உரியது மட்டுமல்ல. இது உடன் விசுவாசிகளையும் இறைவனின் ஆழமான அன்புக்கு அழைத்துச் செல்வதும், இதை அனைத்து மனுக்குலத்திற்கும் உரியதாக மாற்றுவதும் ஆகும். (மாற். 12:29 34)

வழிபாட்டில் இறைமக்கள் ஒன்றிணைவதால் ஏற்படும் சில தாக்கங்களை ஈண்டு காண்போம்.

### 1. *நல் இணைவு ஏற்படுகிறது*

ஒன்றுபட்டு வாழும் வாழ்வு சிறந்தது. தங்களுக்குள்ளே இருக்கும் பிரிவினைகளை அகற்றிவிட்டு இறை ஆளுகைக்குத் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டுமென்பதே இறைவனின் விருப்பம். நல் இணைவு இறை பக்திக்கு அடையாளமாயிருக்கிறது.

வெளிப்படுத்தப்படுகிறது. “குழந்தைகள் பெரியவர்களைப்போல உடை அணிந்து, பேசி, செயல்பட்டாலும் அவர்கள் இப்பொழுதும் குழந்தைகள் என்பதை பெற்றோர் மறுக்க முடியாது; வளர்ச்சியை விரைவாக்கவும் கூடாது” என்று Elkind கூறுகிறார். பிள்ளைகளால் மகிழ்ச்சியடைய வேண்டும். பிள்ளைகள் சமுதாயத்தில் நன்மதிப்பையும், உயர்வையும் அடைவது பெற்றோருக்கு மகிழ்ச்சி. “நேர்மையான பிள்ளையின் தந்தை மிகவும் களிகூர்வார்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்ற தகப்பன் அவர் பொருட்டு மகிழ்ச்சி அடைவார்” (நீமொ. 23:24). பிள்ளைகள் பெற்றோரை மகிழ்விக்க வேண்டும் என்று திருமறை கூறுகிறது (நீமொ. 23:25). திருமுழுக்கு யோவானின் பிறப்பை முன்னறிவித்த தூதர், யோவானால் பெற்றோருக்கும், பிற மக்களுக்கும் மகிழ்ச்சி உண்டாகும் என்று சகரியாவிடம் கூறினார் (லூக். 1:14). பிள்ளைகள் சிறுவன் சாமுவேல் வளர்ந்ததைப் போல, இயேசுவைப் போல வளர்ந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவர்களாக வாழவேண்டும் (1 சாமு. 2:26; லூக். 2:52). அதுதான் பெற்றோருக்கு மகிழ்ச்சியைத் தரும். எனவே, மகிழ்ச்சி தரும் பிள்ளைகளாக நம்முடைய பிள்ளைகளை வளர்த்த வேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாக, பெரியவர்களாக மாறுவார்கள் என்ற தூரப்பார்வையோடு குழந்தைகளை, சிறுவர்களை வளர்த்த வேண்டும். ஒரு குழந்தையின் வாழ்வு என்பது அக்குழந்தை தொடர்பு வைத்திருக்கும் சூழமைவில் உள்ள பெற்றோர், ஆசிரியர்கள், உடன்பிறப்புகள் மற்றும் நண்பர்களின் பிரதிபலிப்பு ஆகும். எனவே, சமுதாயத்தில் பெற்றோர், ஆசிரியர்கள், பெரியவர்கள், தலைவர்கள் என அனைவரும் இன்றைய சிறுவர்களின் வளர்ச்சியில் பொறுப்புள்ளவர்கள் என்பதை உணர்தல் வேண்டும். நம் பிள்ளைகளின் வளர்ச்சியில் கரம் கோர்ப்போம். நம் பிள்ளைகளை இறைஅச்சம் உள்ள பிள்ளைகளாக, நம்பிக்கையின் பிள்ளைகளாக, நன்னெறியின் பிள்ளைகளாக, மகிழ்ச்சி தரும் பிள்ளைகளாக வளர்த்துவோம். பிள்ளைகளின் வருங்காலத்தை வளமானதாக்குவோம்.

அருள்திரு. T.P. **சலீம் தங்க குமார்**





அறிவது பொருத்தமானது. இறை அச்சமுள்ள வாழ்வில் உண்மை, நீதி, அன்பு, கீழ்ப்படிதல், தாழ்மை, இரக்கம் போன்ற பண்புகள் வெளிப்படுகின்றன. பெற்றோர் பிள்ளைகளை இறையச்சம் உள்ள பிள்ளைகளாக வளர்த்தவேண்டும். Robert A. Heinlein என்பவர் “உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையை எளிதாகக் காட்டி அவர்களை ஊனமாக்காதீர்கள்” (Do not handicap your children by making their lives easy) என வாழ்க்கையின் கடினங்களை உணர்த்தாமல் சுகபோகமாய் பிள்ளைகளை வளர்த்தும் பெற்றோருக்கு அறிவுரை கூறுகிறார். வளமுடன் இருக்கும் பாவிகளைப்போல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் தவிர்த்து வாழ வழி காட்ட வேண்டும் (நீமொ. 23:17). ஏனெனில், பாவிகளின் தீய வழியில் நில்லாதவரே நற்பேறு பெற்றவர் என்பது இறைவார்த்தை கூறும் உண்மை (திபா 1:1). தீமையை வெறுப்பதே இறை அச்சம் (நீமொ. 8:13). பிள்ளைகள் ஆண்டவரிடம் எப்போதும் அச்சமுள்ளவர்களாக இருக்கவும் (நீமொ. 23:17), ஆண்டவருக்கு அஞ்சி தீமையை அறவே விலக்கி வாழவும் கற்றுக் கொடுக்க வேண்டும் (நீமொ. 3:7). பிள்ளைகள் ஆண்டவருக்கு அஞ்சி நடந்தால் ஆயுள் நீடிக்கும்; மனநிறைவு கிடைக்கும்; தீங்கும் அவர்களை அணுகாது (நீமொ. 19:23) என்பதை உறுதிசெய்து பிள்ளைகளை வளர்த்தவேண்டும்.

### 2. நம்பிக்கையின் பிள்ளைகளாக வளர்த்தல் (நீமொ 23:18)

இறைமக்கள் சில வேளைகளில் தங்களுக்கு வருங்காலமே இல்லாததுபோல் உணர்ந்தனர். “நமது நம்பிக்கை அழிந்துவிட்டது” (புல 3:18) என்று சொல்லுமளவிற்கு சோதனைக்குட்பட்டனர். தண்டனை பெற்ற நேரங்களில் நம்பிக்கை நிறைந்த வருங்காலம் என்ற பறைசாற்றல் ஒலித்துக்கொண்டேயிருந்தது (எரே. 29:11; 31:17). இதுவே அவர்களின் நிலையான ஆறுதலும் நம்பிக்கையுமாய் அமைந்தது (திபா 9: 18 19). ஒரு குழந்தையின் வாழ்வில் முக்கியமானவர்கள். அக்குழந்தைக்கு எதிர்காலத்தை உருவாக்கி, திருத்தியமைக்கும் பெற்றோர் ஆவர். இங்கு தான் பெற்றோர் தங்கள் குழந்தைகளின் ஆசிரியர்கள் என்ற கூற்று உண்மையாகிறது. இறைவழிகாட்டலின் அடிப்படையில் பிள்ளைகளின் நம்பிக்கையை வளர்த்தெடுப்பது என்பது பெற்றோருக்கு கிடைத்திருக்கும் ஓர் உன்னத வாய்ப்பு ஆகும். இது இரவு பகலாக நடைபெறும் ஒரு தொடர் செயல் ஆகும். இன்றைய திருமுகப் பகுதியில் கடவுள் ஒரு தந்தை தன் பிள்ளைக்கு அறிவுரை கூறி பயிற்சி அளிப்பது போல் தம் மக்களுக்கு நல்லுரை கூறி திடப்படுத்துகிறார் (எபி. 12: 1 13). இன்றைய நற்செய்திப்

பகுதியில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும், இரண்டு மீன்களும் ஐயாயிரம் பேருக்கும் அதிகமான இந்த மக்களுக்கு எப்படிப் போதும்? என்று கேட்ட சீடர் அந்திரேயாவிடம், "மக்களை அமரச் செய்யுங்கள்" என ஆண்டவர் இயேசு கூறிய வார்த்தை சீடர்களைத் திடப்படுத்தி அவர்களுக்கு நம்பிக்கை தந்தது (யோவா. 6:9 10). பிள்ளைகளின் வாழ்வின் எதிர்காலம் வளமானதாக அமைய விரும்பும் பெற்றோர் அவர்கள் மனதில் வாழ்வின் எதிர்காலத்தைக் குறித்த உறுதியான நம்பிக்கையை உருவாக்க வேண்டும். கடவுளில் நம்பிக்கை, அவரது மைந்தரும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை வாழ்வைக் குறித்த நம்பிக்கையைத் தரும். எனவே, பிள்ளைகள் நம்பிக்கையைத் தொடங்கி, வழி நடத்தி, அதை நிறைவு செய்பவருமான இயேசு கிறிஸ்துவின் மீது தங்கள் கண்களைப் பதிய வைக்க வழிகாட்ட வேண்டும் (எபி. 12:2). பிள்ளைகள் தளர்ந்துபோன கைகளையும் தள்ளாடும் முழங்கால்களையும் போன்றவர்கள்; தங்கள் மனம் போன போக்கில் நடக்க முயற்சி செய்பவர்கள் அவர்களைத் திடப்படுத்த வேண்டும்; அவர்களை உறுதிப்படுத்த வேண்டும்; நீங்கள் நேர்மையான பாதையில் நடந்து செல்லுங்கள் என்று நேர்வழிப்படுத்த வேண்டும் (எபி. 12:12 13) "முழுமனத்தோடு ஆண்டவரை நம்பு; உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே, நீ எதைச் செய்தாலும் ஆண்டவரை மனத்தில் வைத்துச் செய்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செம்மையாக்குவார்" (நீமொ. 3:5-6) என்ற இறைவார்த்தையை பிள்ளைகள் மனத்தில் இருத்த வேண்டும். அப்பொழுது உன் வருங்காலம் வளமானதாயிருக்கும்; உன் நம்பிக்கை வீண் போகாது (நீமொ. 23:18) என்ற நம்பிக்கையைப் பிள்ளைகளின் மனத்தில் உருவாக்கி நம்பிக்கையின் பிள்ளைகளாக அவர்களை வளர்த்த வேண்டும்.

### 3. நன்னெறியின் பிள்ளைகளாக வளர்த்தல் (நீமொ. 23:19,26)

Ann Landers என்பர் "நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காக என்ன செய்கிறீர்கள் என்பதல்ல, பிள்ளைகள் அவர்களுக்காகச் செய்ய நீங்கள் என்ன கற்றுக் கொடுத்தீர்கள் என்பதுதான் அவர்களை வெற்றியுள்ள மனிதர்களாக மாற்றும்" (It is not what you do for your children but what you have taught them to do for themselves that will make them successful human beings) என்ற கூற்றின் வழியாக பிள்ளைகளை வளர்த்தும் பெற்றோரை, கற்பிக்கும் ஆசிரியர்களை சிந்திக்க வைக்கிறார். பிள்ளைகளுக்கு நல்ல போதனைகளைக் கற்றுக் கொடுத்து, நன்னெறியில் பிள்ளைகளை வளர்ப்பது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பு ஆகும். தால்மூத் (Talmud) என்ற எழுத்துப் படிவத்தில், "நீ உன் மகனுக்கு கற்றுக் கொடுக்கும் போது உன்னுடைய மகனின் மகனுக்குக்





கற்றுக்கொடுக்கிறாய்" (When you teach you son, you teach your son's son) என்ற ஒரு கூற்று இருக்கிறது. பிள்ளைகள் ஞானமுள்ளவர்களாக வாழ்வதற்கு நன்னெறியில் தங்கள் கவனத்தையும், மனத்தையும் செலுத்தவேண்டும் என்பதுதான் திருமறையின் கருத்து (நீமொ 23: 19,26). "நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்க முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டு விடமாட்டார்" (நீமொ. 22:6). பெற்றோர் பிள்ளைகளைக் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்துத் திருத்தி அவர்கள் இதயத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் மடமையை அகற்ற வேண்டும். இன்று பிள்ளைகளைக் கண்டிப்பதும், தண்டிப்பதும் குறைந்துவிட்டது. பிள்ளைகளைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் பெற்றோர் பயந்த வாழும் காலம் இது. ஆனால் அது பிள்ளைகளை நல்வழியில் நடத்துவதற்குரிய ஒரு முக்கியமான வழிமுறை என்பதை மறுக்க இயலாது. தண்டித்து பிள்ளைகளைத் திருத்துதல் அவர்களை பாதாளத்துக்குத் தப்புவிக்கும் (நீமொ. 23 : 13-14). எனவே அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்து திருத்தி, அறிவு புகட்டி வளர்த்த வேண்டும் (எபே. 6:4) ஒழுக்க நெறிகளையும், ஆன்மிக நெறிகளையும் முன் வைத்து, உண்மையும், நேர்மையும், நற்பண்புகளும், நன்மதிப்பும் உள்ள பிள்ளைகளாக நம் பிள்ளைகளை உருவாக்கும் நன்னெறியில் அவர்களை நடத்துவோம்.

### 4. மகிழ்ச்சி தரும் பிள்ளைகளாக வளர்த்தல்

(நீமொ. 23 : 15-16, 24-5)

மகிழ்ச்சி என்பது அனைவரும் எதிர்பார்க்கும் ஒன்று, பிள்ளைகளால் பெற்றோருக்கு கிடைக்கும் மகிழ்ச்சி என்பது ஓர் உன்னதமான அனுபவம். ஆனால், இன்று பிள்ளைகள் இளமைப்பருவம் அடைந்ததும் பெற்றோருக்கு கீழ்ப்படியாமல், அறிவுரைகளைப் புறந்தள்ளி, ஒழுக்கக் கேடாக வாழ்ந்து தீமைகளில் விழுந்து விடுகின்றனர். இன்று பிள்ளைகளை வளர்த்துவதில் பெற்றோரிடம் காணும் ஒரு தவறான போங்கு என்னவெனில், பிள்ளைகள் விரைவாக வளர தரும் உந்துதல் ஆகும். குழந்தை உளவியலாளர் David Elkind இதை "Hurried Child Syndrome" என்று அழைக்கிறார். இது ஒரு குழந்தையின் மனநிலை, சமுதாய மற்றும் உணர்ச்சி நிலைகளுக்கு மேலாக அல்லது அவற்றைவிட அதிகமாக அக்குழந்தை செயல்பட பெற்றோர் எதிர்பார்க்கும் நிலை ஆகும். பிள்ளைகளின் வாழ்வில் அதிக பட்டியலைத் திணிப்பதும், கல்வியில் வெற்றிக்காக அதிக மன அழுத்தம் கொடுப்பதும் இதில் அடங்கும். இங்கு சில அழுத்தங்கள் நிறைந்த பண்புகள் குழந்தைகளால்

அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. மக்களைப் பொருள்களாக நடத்தப்படும், மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பாடல்களையும், செய்திகளையும் அழுத்தமாக கேட்கும்படியான ஒருவிதத் தொடர்பு நிலை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஒரேப்பில் கடவுளின் மெல்லிய சத்தத்தினாலான தொடர்பு இன்று ஒலிப்பெருக்கியின் பேரிரைச்சலால் மூழ்கடித்து விடப்படுகின்றன. தொடர்பு வகைகளில் இருவருக்கிடையே நடைபெறும் தொடர்பு மிகவும் ஆற்றல் வாய்ந்தது. எலியாவுக்கும், இறைவனுக்குமிடையே நடந்த தொடர்பு பலமுக்கியப் பணிகளைச் சமூகத்திற்கு எலியா செய்ய உதவியது. தொடர்புச் சாதனங்களுடன் தொடர்பு கொள்வதைவிட மனிதர் மனிதரோடு கொள்ளும் நேரடித் தொடர்பு மிக ஆற்றல் பெற்றது. ஆதாம் கடவுளை விட்டு விலகிப் போனது கடவுளுடன் கூடிய உரையாடல், தொடர்பு இவற்றிலிருந்து மட்டும் விலகிப் போகவில்லை. வாழ்வின் இதரப் பகுதிகளின் அனைத்துத் தொடர்புகளிலிருந்தும் விலகிப்போனார். கடவுளுடன் உறவு துண்டிக்கப்பட்டது மட்டுமல்ல தனக்குள்ளேயும், மற்ற மக்களுடன் கூடிய உறவிலும், படைக்கப்பட்ட உலகின் உறவு நிலைகளிலும் உடைவு கண்டார். (தொடக்க நூல். 3:8, 4:12, 6,6) இத்தகைய உரையாடல் வகைத் தொடர்பு, நற்செய்தியை ஆழமாகப் புரிந்து கொள்ளவும், சமய நம்பிக்கை உடைய மக்களோடு உறவுகளை வளர்த்திடவும் மிகவும் ஆற்றல் வாய்ந்தது.

### 2. கடவுளின் தொடர்பு பங்கேற்பு நிலையிலானது
God's Communicatio participatory

பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு ஊடகங்கள் வாயிலாக இறைவன் தம் திருவுளத்தை மாந்தருக்கு வெளிப்படுத்தினார். நிறைவாக மைந்தராகிய கிறிஸ்துவின் வழியே மாந்தருடன் தொடர்பு கொண்டார் (எபி. 1:1-4) கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும் அவருடைய இயல்பின் அச்சுப்பதிப்பாகவும் விளங்குகின்றார். இக்கருத்தானது மாற்கு 12:1-11 லும் தொடர்கின்றது. பல்வேறு வகைகளில் தொடர்பு கொள்ள முயலும் திராட்சைத் தோட்டப் பொறுப்பாளர் இறுதியாக தம் சொந்த மகனையே தொடர்பாளராக அனுப்புகின்றார். இவ்விரு திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் மைந்தராகிய இயேசுவின் மனு உருவேற்பு நிலை (Incarnation of Jesus Christ) கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே முழுமையான தொடர்பிற்குரிய அரங்கத்தினைத் திட்டமிடுகின்றது. இதனையே வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடி கொண்டார் என யோவான் 1:14ல் குறிப்பிடப்படுகின்றது. 'மனிதர்களுடனான கடவுளின்





யூதர்கள் இது எருசலேம் வழிபாட்டைக் குறிக்குமென்று கொண்டனர். ஆனால் சமாரியர் இது கெரிசீம் மலையில் தங்கள் வழிபாட்டைத்தான் குறிக்குமென்று கொண்டனர்.

இயேசு சமாரியப் பெண்ணிடம் கூறியது என்னவென்றால் உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர். (யோவா: 4 : 23). இயேசுவின் இந்த உரை சமாரியப் பெண்ணைத் தொட்டது. எங்கும் கடவுளைத் தொழுது கொள்ளும் காலம் வருகிறது. இரண்டு பிரிவினர் இரண்டு பகுதிகளாய் கடவுளை வழிபட்டனர். உண்மையை உணர்ந்த போது, அவள் உண்மை வழிபாட்டை உணர்ந்து கொண்டாள். கிராமத்திலே சாட்சியாய் நின்று, இயேசுவே உண்மையான மேசியா என்று சாட்சி பகர்ந்தாள்.

வழிபாட்டில் ஒன்றிணைவதின் மூலம், இறை பிரசன்னத்தால் நாம் நிரப்பப்பட்டு களிகூரும் அனுபவம் நமக்குக் கிடைக்கிறது. மேலும். நல் இணைவும் நற்சான்றும் நமது கிறிஸ்தவ வாழ்வின் வழிபாடாக அமையட்டும். உயிரூட்டமான வாழ்வால் உன்னதாரை உலகிற்குக் காண்பிப்போம். இறையரசின் தடயத்தினில், இறைமக்களின் கூட்டொருமைப்பாட்டில் புதிய சமூக அமைப்பை உருவாக்கிடுவோம். நமது வாழ்வையே வழிபாடாக அமைத்து ஆன்மிக ஒளியை ஒளிர்ந்திட செய்வோம்.

அருள்திரு. R. **இராஜபால்**

**16-11-2014** பெண்குழந்தைகள் ஞாயிறு

# பெண் குழந்தைக்கு வருங்காலத்தை உறுதி செய்தல்

## ASSURING A FUTURE FOR THE GIRL CHILD

II அர. 5 : 1-15 எபே 6 : 1-4

தி.பா. 8 மாற்கு 5 : 21-43

***"அவள் தன் தலைவியை நோக்கி, என் தலைவர் சமாரியாவில் இருக்கும் இறைவாக்கினர் முன்னிலையில் சென்றாரெனில், அவர் இவரது தொழுநோயைக் குணமாக்குவார்."*** II *அர. 5 : 3*

**இறைவேண்டல் : இரக்கமுள்ள கடவுளே! உம் திருக்குமாரன் வழியாய் வலுவற்றவரையும் தள்ளப்பட்டவரையும் வலுப்பெறவும்! முழுமைப்பெறவும் செய்பவரே உம்மை துதிக்கிறோம். ஓரங்கட்டப்படுகின்ற பெண்குழந்தைகளை இரக்கமாய் கண்ணோக்கி அவர்களுக்கு தைரியத்தையும் புது நம்பிக்கையையும் கொடுத்தருளும். பெண் குழந்தையை சமுகத்தின் முழு அங்கமாக நாங்கள் ஏற்றுக்கொண்டு அவர்கள் இழந்த மரியாதையும் மேன்மையையும் திரும்பப்பெற செய்ய உதவிசெய்யும் இந்த முழு உலகின் பாதுகாப்பிற்காகநீர் அருளிய எங்களது சமமான ஆற்றல் மற்றும் ஆற்றலின்மை, தாலந்துகள் வாய்ப்புகள் போன்றவற்றை பயன்படுத்த எங்களை தகுதிப்படுத்தி உதவிப்புரிய வேண்டுமென்று ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம் பிதாவே ஆமென்.**

பெண்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும் சுமை என்று எண்ணும் இந்நூற்றாண்டில் திருச்சபைகளில் பெண் குழந்தை ஞாயிறு என்று நடைமுறைப் படுத்தியிருப்பது சிறப்பானதே. இன்றைய நூற்றாண்டில் பெண் குழந்தைகளைச் சிலர் வெறுக்கின்றனர். தங்களுக்குப் பாரமாகவும் நினைத்து கொண்டு எரிச்சல் அடைகின்றனர். அழிக்கின்றனர். திருமறையில் கூறப்படும் ஒரு சிறு பெண்ணின் குணங்களைச் சிந்திக்கலாம்.

சீரியா நாட்டு அரசரின் படைத்தலைவனான நாகமான் தன் தலைவனிடம் சிறப்பும், நன்மதிப்பும் பெற்றிருந்தான். ஏனெனில் அவர் மூலமாய் சீரியாவுக்கு ஆண்டவர் வெற்றி கொடுத்தார். வலிமைமிக்க வீரர் ஆனால் தொழுநோயாளி. சீரிய நாட்டினர் ஒருமுறை கொள்ளயடிக்கச் சென்றபோது, இஸ்ரயேலைச் சார்ந்த ஒரு சிறுமியைச் சிறைபிடித்துக் கொண்டு வந்திருந்தனர்.

அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து வந்தாள். அவளது குணங்களைத் திருமறை வழியாகச் சிந்திப்போம்.





புரிந்து கொள்ளலாம். உலகம் படைக்கப்பட்டதிலிருந்தே கடவுள் மனுக்குலத்துடன் தம்மைத் தொடர்புப் படுத்திக் கொண்டிருக்கின்றார். பழைய ஏற்பாட்டில் கடவுள் செயல்பாடுகள் வழியாகவும், வார்த்தைகள் வழியாகவும், தாம்படைத்த உலகு வழியாகவும், வரலாறு வழியாகவும் சிறப்பான வெளிப்பாடு வழியாகவும் தொடர்பு கொள்கின்றார் என்பதனைக் காணலாம்.

வானங்கள் இறைவனின் மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன
வான்வெளி அவர்தம் கைகளின் வேலைப்பாட்டை விவரிக்கின்றது.
ஒவ்வொரு பகலும் அடுத்த பகலுக்கு அச்செய்தியை அறிவிக்கின்றன
ஒவ்வோர் இரவும் அடுத்த இரவுக்கு அதைப்பற்றிய அறிவை விளக்குகின்றது
அவற்றுக்குச் சொல்லுமில்லை, பேச்சுமில்லை; அவற்றின் குரல் செவியில் படுவதுமில்லை.
ஆயினும் அவற்றின் அறிக்கை உலகெங்கும் சென்றடைகின்றது
அவை கூறும் செய்தி உலகின் கடையெல்லைவரை எட்டுகின்றது
இறைவன் அங்கே கதிரவனுக்கு ஒரு கூடாரம் அமைத்துள்ளார்.
திருப்பாடல் 19:1-4

இவ்வாறு இஸ்ரவேல் மக்கள் தங்களுடன் தொடர்பு கொள்ளும் கடவுளைத் தங்கள் வரலாற்றின் மூலம் தெரிந்து கொண்டனர்.

ஒரேப் மலையில் இறைவாக்குரைஞரான எலியா கடவுளுடன் சந்திக்கும் நிகழ்வு I அரசர். 19:10-18 வரையுள்ள திருமறைப் பகுதியில் இடம் பெறுகின்றது. எலியா குகையில் கடவுளைச் சந்திப்பதற்காக ஆவலோடு காத்திருக்கிறார். ஆகாப், யேசபேலின் எதிர்ப்பினால் தொய்ந்து போன நிலையில் இறைவரின் சந்திப்பிற்காக ஆயத்தமாகின்றார். குகையிலிருந்து வெளியே வந்து மலைமேல் நிற்க பெரிய சுழல் காற்று வந்தது, தொடர்ந்து நில நடுக்கம் வந்தது. அதைத் தொடர்ந்து நெருப்பு தோன்றியது. இந்த இயற்கை சார்ந்த மூன்று அழுத்தங்களிலும் கடவுள் எலியாவைச் சந்திக்க வில்லை. அதனைத் தொடர்ந்து தனியொருவரைக் குறித்தது எனலாம். இங்கு ஒரு பெரிய செய்திப் பரிமாற்றம் நடைபெறவில்லை. ஆனால் எலியா, நீ இங்கு என்ன செய்கின்றாய்? என்ற கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது. உடனடியாக எலியா தொடர்பின் முதல் நிலையாக மாற்றப்பட்டு கடவுளுடன் தொடர்பு கொண்டார். இன்று நமது வாழ்விடங்களின் ஒலிப்பெருக்கியின் சப்தங்கள் நம்மை நாள் தோறும்

நற்செய்தி என்பது திருமைந்தர் இயேசு கிறிஸ்துவின் வழியாகவும், கிறிஸ்துவிலும் இவ்வுலகினை மீட்கும் படியான கடவுளின் செயல்பாடாகும் (God's action to save the world in and through his son Jesus Christ). சுருங்கக் கூறின் 'கிறிஸ்துவே நற்செய்தியின் மையம்' எனலாம். இந்த நற்செய்தியினை உலகிற்குத் தொடர்புப் படுத்தும் இப்பணியினைத் திருச்சபை பெற்று செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. நற்செய்தியினைத் தொடர்புப்படுத்தும் இப்பணியில் தனி நபர், குழுக்கள், நிறுவனங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. தொடர்பு ஊடகங்கள் மனித வாழ்வில் ஆக்கப்பூர்வமான மற்றும் எதிரிடையான பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இக்காலத்தில் தொடர்பு ஊடகங்கள் நற்செய்தியினை தொடர்புப் படுத்துவதில் மிகவும் பயன்படுகின்றன எனலாம். நாம் வாழும் இக்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியால் பல மாற்றங்களை மக்கள் சந்தித்து வருகின்றனர். கருவிகளைச் சார்ந்து நிற்றல், சமூக சமய வாழ்வில் புதிய நோக்கு, அரசியல் அறிவில் விழிப்புணர்வு ஆகிய சூழலைச் சந்திக்கும் மக்களுக்கு ஏற்ப நற்செய்தியை தொடர்புப் படுத்தும் பக்குவம் திருச்சபைக்குத் தேவை. தொடர்பு ஊடகங்களான செய்தித்தாள், திரைப்படம், தொலைக்காட்சி, இணையதளம் போன்றவைகள் நற்செய்தியைத் தொடர்புப் படுத்துவதில் திருச்சபையினால் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. "திருமறையின் மூலமாக மீட்பரின் உலகைக் குறித்த நல்ல செய்திகள் யாவும் தொடர்புப்படுத்தப்படுகின்றன. மனிதனுக்குத் தேவையான அனைத்தும் திருமறையில் அடங்கியுள்ளன" All the good from the saviour of the World is communicated through the Bible. All the things desirable to man are contained in it என ஆபிரகாம் லிங்கன் குறிப்பிட்டார். இக்கருத்தின் அடிப்படையில் திருமறையின் மையமாகிய கிறிஸ்துவின் நற்செய்தியினைத் திருச்சபை தொடர்புப்படுத்தி இறைப்பணி செய்திட வேண்டும்.

### 1. கடவுளின் தொடர்பு தனியொருவரைக் குறித்தது (God's Communication is Personal.)

திருமறையின் கண்ணோட்டத்தில் கடவுள் தமது தன்மையில் ஒரு தொடர்பாளர், படைப்பின் வரலாற்றினிலே கடவுள், தான் ஒரு தொடர்பாளர் என்பதை விவரித்துள்ளார். கடவுள் பேசியபோது பொருட்கள் படைக்கப்பட்டன. அவர் ஆதாம், ஆபிரகாம், மோசே, தாவீது போன்றோரின் உறவினைத் தேடினார். தொடர்பு என்பது அடிப்படையில் உறவு நிலை (Communication is basically relationship) என்பதை இதன் வழி





### 1. இறை அன்புடையவள் :

தான் பணியாற்றிய தலைவியிடமும், தலைவரிடமும் அன்பு வைத்திருந்தாள். கடமைக்காக வேலை செய்யாமல், முறுமுறுப்பில்லாமல் தான் பணிபுரியும் வீட்டின் நன்மைக்காய்க் கருத்தோடு செயல்பட்டாள். கிறிஸ்துவின் ராஜ்ய விரிவாக்கத்திற்காகத் தங்கள் பொறுப்பை உண்மையாய் நிறைவேற்றும் பணியாள்கள் இன்று தேவை.

எசாயா 6 : 1-8 எசாயா தன்னை இறைவனின் பணிக்கு அர்ப்பணித்தார்.

### 2. இறைக் கரிசனையுடையவள் : 2 அர. 2 : 3

தன் தலைவர் (ஏஜமான்) தொழுநோயில் இருந்து விடுதலைபெற வேண்டும் என்ற கரிசனை இருந்தது.

மாற்கு 5 : 21-43 இப்பகுதியில் இயேசு யவீருவின் மகளை உயிரோடெழுப்பி, அவரது வருங்கால வாழ்வை உறுதிப்படுத்தினார். உதிரப்போக்கினால் வருந்திய பெண்மணிக்கு இயேசு விடுதலை கொடுத்து அவளது வருங்கால வாழ்வை உறுதிப்படுத்தினார். மாற். 5 : 34ன் இந்நிகழ்ச்சிகள் இயேசுவின் கரிசனையை சுட்டிக்காட்டுகின்றன. கடவுளின் திட்டம் பெண் குழந்தைகள் வாழ்வு பெறவேண்டும் என்பதே. நாகமானின் வேலைக்காரப் பெண்ணின் கரிசனை நாகமான் விடுதலைபெற காரணமாக அமைந்தது. நாமும் பிறர் மீது கரிசனையுடையவர்களாக இருக்கவேண்டும் என்பதே, பிலி. 2:4-ல் குறிப்பிடப்படுள்ளது.

### 3. இறைத் திட்டத்தின் ஊடகமானவள் : 2 அர. 5 : 3 - 17

சிறைபிடித்தவர்களைப் பழிவாங்காமல் அவர்களின் இன்னலைத் துடைத்தாள்.

மத். 5 : 44 உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.

நாகமான் விடுதலை பெற்றது மட்டுமல்ல இஸ்ரவேலின் கடவுளை தவிர பூமி எங்கும் வேறு கடவுள் இல்லை என்பதைக் கண்டு கொண்டார்.

இச்சிறுமியின் நற்பண்புகளைச் சிந்திக்கும் போது நாம், பெண் குழந்தைகளின் எதிர்கால வாழ்வு ஆசீர்வாதமாய் அமைய கருவிகளாய் விளங்கவேண்டும்.

ஒரு திருச்சபையில் கணவனால் கைவிடப்பட்ட தாய்க்கு ஒரு பெண் குழந்தை இருந்தாள். குழந்தை பிறந்தவுடனேயே கணவன் கைவிட்டு விட்டான். அப்போது அத்திருச்சபையில் பணியாற்றிய போதகர்

அச்சிறுபெண் குழந்தையின் மீது கரிசனை கொண்டு, அக்குழந்தையின் எதிர்கால வாழ்வைக் கருத்தில் கொண்டு உதவி செய்ய முன்வந்தார்.

அத்திருச்சபையில் கொடுக்கும் தன்மையுடைய சிலரிடம் நன்கொடை வாங்கி அக்குழந்தையின் பெயரில் 10,000/- ரூபாய் வங்கி கணக்கில் வைத்தார்கள். அக்குழந்தைக்கு 20 வயதாகும்போது சுமார் ஒரு லட்சம் ரூபாய் கிடைக்கும். தந்தையால் கைவிடப்பட்ட அப்பெண் குழந்தையின் வருங்கால வாழ்விற்கு இத்தொகை உதவியாய் இருக்கும். இதுபோல கைவிடப்பட்ட, ஆதரவற்ற பெண் குழந்தைகளின் எதிர்கால வாழ்வு வளம்பெற, ஆசீர்வாதமாய் அமைய திருச்சபை கரிசனையுடன் செயல்பட இறைவன் அருள் புரிவாராக.

அருள்திருமதி. **பேபி கமலா ஜஸ்டஸ்**



***23-11-2014***

# நற்செய்தியைத் தொடர்புப்படுத்துதலும் ஊடகமும்

**COMMUNICATION OF THE GOSPEL AND MEDIA**

| | |
|---|---|
| I அர. 19 : 10-18 | எபி. 1 : 1-4 |
| திபா. 19 | மாற். 12 : 1-11 |

***"பலமுறை, பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாட்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்."*** *எபிரேயர் 1 : 1,2a*

**இறைவேண்டல் : கடவுளே! எங்களை மீட்பதற்கான உம் விருப்பத்தை இயேசுகிறிஸ்து வழியாக தொடர்புப்படுத்தி, உமது அன்பான இரக்கங்களால், பரிவான பிரசன்னத்தினால் கூடிய ஆசீர்வாதங்களினால் எல்லாநாளும் எங்களை தொடர்பு கொள்கிறீர் இந்த நன்மைகளை வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவில் முழுமையாக பெற்றுக்கொள்ள உதவிச்செய்யும் ஊடகத்திற்கு நாங்கள் அடிமையாகாமல் அதை ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் மரண போராட்டத்தில் இருப்போரிடமிருந்து தளர்த்திவிட உதவிசெய்யும். இயேசுகிறிஸ்துவின் வழியாய் இவைகளை வேண்டிக்கொள்கிறோம் பிதாவே ஆமென்.**

பிரான்ஸ் நாட்டில் புரட்சி நடந்த நேரத்தில் அறிஞர் ஒருவர் ஒரு புதிய மதத்தைத் தோற்றுவிக்க நினைத்தார். கிறிஸ்தவ நற்செய்தி நூற்களிலிருந்து சில கருத்துக்களையும், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற தத்துவ ஞானிகளின் அறிவுரைகளிலிருந்து சிலவற்றையும் சேர்த்து ஒரு புதிய மதத்தைப் படைக்க முயற்சி செய்தார்.

ஆனால் அவர் படைத்த புதிய சமயம் பரவவில்லை.

ஒரு நாள் தன் நண்பரிடம் நண்பனே! நானொரு அறிஞன் "நான் ஏற்படுத்தியிருக்கும் புதிய மறை நூல், அறிவு ஜீவிகளாகத் திகழ்ந்த தத்துவ ஞானிகளின் தத்துவக் கோட்டை. ஆனால் மக்கள் இந்தப் புதிய மதத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றார்கள். ஆனால் பெருவாரியாக மீன் பிடித்து வாழ்ந்த, 12 பேரைத் தனது சீடர்களாகக் கொண்ட இயேசுவின் வேதம் மட்டும் எப்படி பரவி வளர்கின்றது?" என்றார்.

அதற்கு அவருடைய நண்பர் : "நீயும் இயேசுவைப் போல் மக்களுக்காகச் சிலுவையில் உயிர்விட்டால், நீயும் அவரைப் போல இறந்து உயிர்த்தால் உன் மறையும் வளரும்" என்றார்.

## 1. உணர்வூட்டும் உயிருள்ள இறைவார்த்தையாகிய உணவு

மனிதன் கீழ்ப்படியாமையால் பாவியாக மாறி இறை உறவை இழந்து தான் தோன்றித்தனமாக உணர்வற்றவனாய் வாழ்கிறான். எனவே கடவுள் தீர்க்கர்கள், ஆசாரியர்கள், நியாயாதிபதிகள், இறைமக்கள் வாயிலாக மக்களை நல்வழிப்படுத்தி இறைவனுடன் உறவினை உருவாக்க தம் வார்த்தையினை நல்கினார். கடவுளின் வார்த்தைக்குச் செவிசாய்க்காத நிலையில் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரரான இயேசு கிறிஸ்துவை உலகிற்குத் தந்து தமது அன்பினை வெளிப்படுத்தினார்.

2 சாமுவேல் 12:1-24 தாவீது மன்னன் தனது சுய இச்சையால் ஈர்க்கப்பட்டு உரியாவைக் கொன்று, அவனது மனைவியினைத் தனது மனைவியாக்கிக் கொண்டான். கர்த்தர் தமது வார்த்தையினை நாத்தான் தீர்க்கன் வாயிலாகத் தெரிவிக்க ஆத்திரம் கொண்ட தாவீது மன்னன். தவறிழைத்தவனைத் தண்டிப்பேன் எனக்கூறினான். 2 சாமு:12:7 நாத்தான் தீர்க்கன் மன்னனைப் பார்த்து 'நீயே! அந்த மனிதன்' எனக் கூறி உணர்வூட்டினான். உணர்வு பெற்ற தாவீது மனம் வருந்தி இரட்டுடுத்தி சாம்பலில் அமர்ந்து கடவுளை நோக்கி வேண்டுதல் செய்தான். யோ:8:3-11 பெண்மணி ஒருவரைக் கையும் மெய்யுமாய் விபச்சாரத்தில் பிடித்தோம் எனக்கூறி ஒரு கூட்டம் அவளைக் குற்றப்படுத்தி மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி அவளைக் கல்லெறிந்து கொலை செய்ய வேண்டும் எனக் கற்களுடன் இயேசுவண்டை கொண்டு வந்து துடிப்புடன் இயேசுவின் பதிலுக்காகக் காத்திருந்தனர். இயேசுவோ உங்களில் பாவமில்லாதவன் முதலில் கல்லெறியட்டும் என்றார். இதனைக் கேட்ட மக்கள் உள்ளத்தில் குத்தப்பட்டவர்களாய் கற்களைக் போட்டுவிட்டுச் சென்றனர். உணர்வூட்டும் கடவுளின் வார்த்தைகள் தவறினைச் சுட்டிக்காட்டுகிறது. இயேசு அப்பெண்ணிடம் நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாக்கவில்லை நீ போ இனிப்பாவம் செய்யாதே என்றார். அவள் தன் தவறினை உணர்ந்து திருந்தி புதியதொரு வாழ்வினை வாழ உணர்வு பெற்றாள்.. எனவே இன்றும் கடவுளின் வார்த்தை மனித வாழ்வில் உணர்வூட்டும் உயிருள்ள உணவு என்பதற்கு எம்மாவூர் சீடர்கள் வாழ்வு ஊர் சான்று அன்றோ! (லூக். 24:13-35).

எம்மாவூர் சீடர்களுடன் இயேசு பயணித்தபோது உரையாடிக்கொண்டு சென்றனர். மாலை வேளையில் தங்களுடன் தங்க இயேசுவிடம் வேண்டிக்கொண்டனர். இயேசுவும் அவர்களுடன் சென்று





தொடர்பு இயேசுவில் மனு உருவேற்றது. கடவுளின் இத்தகைய தொடர்பு மனித வாழ்வுடன் உள்ளாகவும், அதன் வழியாகவும் பங்கேற்கும் தொடர்பாகும். மறு உருவேற்பு நிலையின் மூலமாகத் தொடர்பு கொள்வது என்பது மக்களின் வாழ்க்கைச் சூழலில், பிரச்சனைகளில், மக்களின் போராட்டங்களில் பங்கேற்று தொடர்பு கொள்வதாகும். இதனால் தான் இயேசு அடித்தள மக்களுடன், ஆயக்காரருடன் தொழுநோயாளிகளுடன் மற்றும் தேவையுள்ளவருடன் ஒன்றுபட்டு, தொடர்பு கொண்டு பணி செய்தார். இத்தொடர்பின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்த Fr.Vadakkan அவர்கள் குறிப்பிடும்போது, "இந்நாளில் கிறிஸ்து என்பதன் பொருள் வறுமை என்னும் பெரிய பாவத்திற்கு எதிரான ஏழைகளின் போராட்டத்துடன் திருச்சபையின் பங்கேற்பாகும்" என்கிறார். ("Christ today means solidarity of The Church with the poor in their struggles against the 'great sin' poverty") வயிறு குலுங்காமல் சிரிக்கும் மனிதனைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்ற சீனப்பழமொழியின் கருத்தும் இவண் கருத்துடன் நோக்கப்படவேண்டும்.

கைவண்டிக்காரன் ஒருவன் தனது பாரம் நிறைந்த வண்டியினை களைப்புடன் இழுத்துச் சென்றான். வெயிலின் வெப்பம், பாரத்தின் சுமை அவனை வலுவாக அழுத்தியது. நண்பகல் நேரத்தில் இவ்வாறு பாரச்சுமையை இழுத்துச் சென்ற வண்டிக்காரனைப் பார்த்த ஒருவர் இது உன் வினைப்பயன் அதனை நீயே சந்தித்துக்கொள் என்று கூறி சென்றாராம். இன்னொருவர் பாரமான வண்டியை எளிதாக இழுப்பதற்குரிய சில யுக்திகளைச் சொல்லி கடந்து சென்றார். ஆனால் கைவண்டிக்காரரின் களைப்பான நிலையைக் கண்ணுற்ற இன்னொருவரோ ஓடோடிச்சென்று அந்தப் பார வண்டியினைத் தன் கரங்களால் தொட்டு, தூக்கி அவ்வண்டியை இழுக்க உதவினார். பங்கேற்கும் தொடர்பு என்பது இவ்வாறு மக்களின் வாழ்வில் ஒன்றுபட்டு, தொடர்பு கொண்டு பணி செய்வதாகும். இதுவே பங்கேற்புத் தொடர்பின் சிறப்பாகும். இயேசுவின் மனு உருவேற்பு நிலை சார்ந்த பணியில் இத்தகைய தொடர்பே நடைபெற்றது.

இன்றைய இந்தியாவில் நற்செய்தியினை தொடர்புப்படுத்தும் கிறிஸ்தவத் தொடர்பாளர்களின் வாழ்க்கை மாதிரி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மதுரைப் பகுதியில் பணிபுரிந்த ஐரோப்பிய அருள்தொண்டர் ராபர்ட்-டி-நொபிலி உயர்சாதி மக்களிடையே கிறிஸ்தவம் தொடர்புப்படுத்தப்படுவதில் காணப்பட்ட தோல்வி நிலைகளை ஆய்வு செய்து, பிராமணர்களின் வாழ்க்கைப் பாணியை, பழக்க வழக்கங்களைப்

பின்பற்றி, சமஸ்கிருதமொழி பயின்று நற்செய்தியைத் தொடர்புப்படுத்தி வெற்றி கண்டார்.

பில்லிகிரகாம் என்ற அருளுரைஞர் ஆரம்ப காலத்தில் இந்தியாவில் பணி செய்ய திட்டமிட்டபோது ஒருமுறை D.T. நைல்ஸ், என்பவரிடம் இந்திய மக்களுக்கு அருட்பணி செய்வதற்காகத் தான் குறிப்பாக அறிய வேண்டியது எது என்று கேட்டாராம். அதற்கு D.T. நைல்ஸ் கூறியதாவது "நீவிர் இந்தியாவிலிருக்கும்போது கடவுளின் மகன் என உரிமைகோரும் உம்மிடம் ஒழுக்கக் கட்டுப்பாட்டினை (Austerity) உமது வாழ்வின் வழியாக அமைத்துக் கொள்ளும்படி எதிர்பார்ப்பர் என்றாராம். தொடர்புப் படுத்தப்படும் நற்செய்தி, தொடர்பாளரின் வாழ்வில் சோதிக்கப்பட வேண்டும். நம் வாழ்வும், செயல்பாடுகளும் கிறிஸ்துவாகிய நற்செய்தியைத் தொடர்பு படுத்தாதிருந்தால் நாம் கிறிஸ்தவத் தொடர்பாளர் என்ற நம்பகத் தன்மையை இழந்தவர்களாயிருப்போம். எனவே கிறிஸ்தவத் தொடர்பாளர்கள் கிறிஸ்துவைத் தொடர்புப்படுத்தி, வாழும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் அமைந்திடவேண்டும். தூயாவியார் அத்தகைய வழிகாட்டுதல்களை நமக்கு வழங்குவாராக.

அருள்திரு. W. **ஸ்டான்லி ஜோண்ஸ்**



**07-12-2014**

***விவிலிய ஞாயிறு***
***வருகையின் இரண்டாம் ஞாயிறு***

# இறைவாக்கு வாழ்வின் உணவு

**WORD OF GOD : THE BREAD OF LIFE**

எசா. 55 : 1-13 திப. 1 : 1-13
திபா. 119 : 105-112 யோவா. 6 : 35-51

***"விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்."*** *யோவா. 6 : 51*

**இறைவேண்டல் : நித்திய கடவுளே உம் வார்த்தையால் காணப்படுபவைகளையும் காணப்படாதவைகளையும் சிருஷ்ட்டித்தீர் உம் வார்த்தையின் ஆற்றலை எழுதப்பட்ட இறை வார்த்தைகளை படிக்கும்போது புரிந்துக்கொள்ள உதவும். அதன் வளங்களுக்கு எங்கள் இதயங்களும் மனங்களும் திறந்தவைகளாகவும், எங்கள் போதனை, திருத்தம் மற்றும் நேர்மையான பயிற்சிக்கு பயனுள்ளதாகவும் அமையட்டும். இவைகளை தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக என்றென்றும் ஆட்சிசெய்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.**

ஆதியிலே வார்த்தையானவர் தூதர் கூற்றுப்படி இயேசு பாலகனாகப் பிறந்தார் அவருக்கு இயேசு எனப் பெயரிட்டனர். பாலகன் இயேசு பெற்றோருடன் வாழவும், பண்டிகை கொண்டாட எருசலேம் சென்றார். தேவாலயம் சென்ற இயேசு வேத ஆராய்ச்சியில் மூழ்கியிருந்தார். தன்னுடன் வாதிடும் வேத பாரகர்களுடன் வாக்குவாதம் செய்தார். வேத வாக்கின்படி வாழ்பவரே எனக்குச் சகோதரரும், சகோதரிகளும் ஆவர் என்றார் இயேசு. இதன் வாயிலாக இயேசு வேத வாக்கியங்களுக்கு எத்தனை முக்கியத்துவம் கொடுத்தார் என அறிய முடிகிறது. வேத வாக்கியமே வாழ்வின் உணவு என்றார் இயேசு. மத்.4:4-இல் மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல கடவுளின் வாயிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். உலக வார்த்தையினால் அழிவின் பாதையில் செல்லாது, இறைவார்த்தைக்குச் செவி சாய்த்து வாழ்வு பெற தெளிவுள்ளோராய் வாழவும், இறையாற்றலுக்கு உட்பட்டு இறைவார்த்தையினை அனுதினம் ஆராய்ந்து ஆன்மிக வாழ்வில் உயர்வு பெற இறைவாக்கு வாழ்வின் உணவு என்ற தலையங்கத்தின் கீழ் ஆராய்வோமாக.

## 3. பசியைப் போக்குவதில் வெளிப்படும் மகிழ்ச்சி

(லூக். 1 : 53-55)

தமிழகத்தின் முன்னை முதல்வர் (பெருந்தலைவர் காமராஜர் கிராமங்களைச் சுற்றிப் பார்க்க அரசு வாகனத்தில் புறப்பட்டார். கிராமத்துச் சிறுவர்கள் ஆடு மேய்த்துக் கொண்டிருந்ததை வாகனத்தின் சாளரம் வழியாகப் பார்த்தார் அந்த முதலமைச்சர். ஏன் பள்ளிக் கூடம் செல்லவில்லை எனச் சிறுவர்களிடம் கேட்டபோது நாங்கள் பள்ளிக்கூடம் போனா வயிற்றுக்கு என்ன பண்றது? எனச் சிறுவர்கள் முதலமைச்சரிடம் பதிலளித்தனர். ஒரு நிமிடம் ஆடிப்போன முதலமைச்சரின் சிந்தனையில் உதயமானதுதான் மதிய உணவுத் திட்டம். மாணவர்களின் வயிற்றுப் பாடு அஸ்தமமானது.

பொருளாதார வல்லுநர்கள் மனித விருப்பங்களை தேவை (Need), வசதி (Comfort) ஆடம்பரம் (Luxary) எனக் கணித்துள்ளனர். பசியாற்றுதல் மானிட வாழ்வின் ஏன் உயர்வாழ்வின் அடிப்படைத் தேவை (basic need) என்பதை எவரும் மறுக்கலாகாது. இதன் வெளிப்பாடுகளாக இஸ்ரயேலர்களைக் காடைகளால் உணவளித்தார் (எண். 11:13). எலியா சாரிபாத் விதவைக்கு உணவளித்தார். (1இரா. 17:16) எலிசா 20 அப்பங்களால் 1000 பேரை போஷித்தார் (2 இரா. 4: 42) இறைமகன் இயேசு 5 அப்பத்தையும் இரண்டு மீன்களையும் கொண்டு 5000 பேருக்கும் அதிகமானோர்க்கு உணவு கொடுத்தார் எனத் திருமறையில் படிக்கிறோம். 1980களுக்கு முன் நம் நாட்டில் உள்ள நடுத்தட்டு மற்றும் அடித்தட்டு மக்கள் விழாக்காலங்களில் மட்டும் சோறு வயிறார உண்டனர். அன்று சோற்றுக்காக ஏங்கிய மக்களின் வழி மரபினர் இன்று சோற்றுத்தட்டிருந்து ஒதுங்கிப் போகு மட்டும் பசி பட்டினி நீங்கிய நிலை எங்கும் நிலவுகிறது. இது கிறிஸ்து வருகையினால் உண்டான மரியாளின் மகிழ்ச்சியின் வெளிப்பாடே. இதை அறிந்தும் இன்றைய விழாக்களில் உணவைச் சேதமாக்குவது வருத்தத்திற்குரியது. நாள் ஒன்றுக்கு குறைந்தது 1000 பேர் பட்டினியால் சாகும் தருணத்தில் நம்மால் சேதமாகும் உணவு இன்னொருவருக்கு தேவையாகட்டும்

கிறிஸ்துவின் பற்றாளர்களாக உலகில் நம்மை அடையாளம் காட்ட விளையும் போது, கிறிஸ்து வருகையில் மரியாளுக்கு வெளிப்பட்ட மகிழ்ச்சியான எதிர்நோக்கின் வெளிப்பாடுகள் நம்மில் அடையாளங்களாகட்டும். கிறிஸ்து வருகையின் வளமும் வனப்பும் நம்மில் தங்கட்டும்.

அருள்திரு. S. **வில்சன்**



**30-11-2014** வருகையின் ஞாயிறு

# கிறிஸ்துவின் வருகையை மகிழ்வுடன் எதிர்நோக்கல்

**JOYFUL EXPECTATION OF CHRIST'S COMING**

தொ.நூ. 33 : 1-17 1தெச. 3 : 6-13
திபா. 68 : 11-20 லூக். 1 : 39-55

*"இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று." லூக். 1 : 44*

**இறைவேண்டல் :** ஆண்டவராம் கடவுளே நீர் எம்மிடம் வர நாங்கள் யார்? ஆனாலும் நீர் உம் மக்களாகிய எங்களை சந்தித்து உம் மகனில் எமை மீட்டுக்கொண்டீர் அவரது பிறப்பை கொண்டாட ஆயத்தப்படும் எங்கள் இருதயங்கள் உம் வார்த்தைகளின் சத்தத்தால் மகிழ்ந்து குதித்து உம் ஆவியால் அசைக்கப்பட்டு உமது அதிசயமான வேலைகளை எண்ணச்செய்கிறது. இவைகளை நிச்சயமாய் சீக்கிரம் வருகிறவராகிய இயேசுகிறிஸ்துவின் மாட்சியுள்ள நாமத்தில் கேட்கிறோம் நல்ல கடவுளே... ஆமென்.

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், பி.பி.சி வானொலி நிலையம் சர்ச்சில் பேசுவதற்காக ஏற்பாடு செய்திருந்தது. வழியில் வந்து கொண்டாடிருந்த மகிழுந்தை (Taxi) சர்ச்சில் நிறுத்தினார். இன்று வானொலியில் பேசவிருக்கும் சர்ச்சில் அவர்களின் பேச்சைக் கேட்கவே வீட்டுற்கு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறேன். எனவே என்னால் வர இயலாது என மகிழுந்து ஓட்டுநர் பதிலளித்தார். தன்மீது மக்கள் வைத்திருந்த மதிப்பை எண்ணி சர்ச்சில் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். மகிழ்ச்சி என்பது தன்னகத்தின் திருப்தியிலிருந்து வெளிவரும் உன்னத வெளியீடு. இது எதிர்பார்ப்பின் நிறைவு. ஆண்டாண்டு காலம் தன்னில் அடங்கியிருக்கும் ஏங்கலின் பிரதிபலிப்பு. உலகிலுள்ள அனைத்து மனிதரும் விரும்புவதும் இதையே. நாம் வாழ்வதற்கு மகிழ்ச்சி அவசியம். மகிழ்ச்சி மட்டும் எனக்கு இல்லையெனில் நான் என்றைக்கோ செத்துப்போயிருப்பேன் என்று சொன்னார் மகாத்மா காந்தி. மகிழ்ச்சி மானிடத்துக்கு ஒரு மருந்து, அது நம் சுவாசத்தைச் சீராக்குகிறது. நம் நுரையீரலை விரியச்செய்கிறது. நம் இரத்தத்தில் சக்கரையின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. இப்படி அருமருந்தாக செயல்படும் மகிழ்ச்சி பிறரிடமிருந்தும் கிடைக்கிறது. நமது மனப்பக்குவத்திலிருந்தும் வெளிவருகிறது.

இன்றைய நற்செய்தியில் (லூக். 1: 39-45). வானதூதரின் வாழ்த்து மரியாவின் வாழ்த்து எலிசபெத்துக்கும் எலிசபெத்தின் வாழ்த்து மரியாவுக்கும்

என மாறி மாறி கிடைத்த வாழ்த்தினால் பெற்ற மகிழ்ச்சியைவிட ஒடுக்கப்பட்டோர் பெறும் விடுதலைக்கான மகிழ்ச்சியின் எதிர்நோக்கே மரியாளின் பாடலாக இடம்பெறுவது சிறப்பானது. சரியான பார்வையும், சரியான புரிதலும், சரியாக வாழ்வதுமே மனித சமூகத்தைச் சரியான பாதையில் வழிநடத்தும் என்பதற்கேற்ப தனக்குக் கிடைத்த மகிழ்ச்சியில் மரியா செலுத்திய சரியான பார்வை முழு மானிட விடுதலைக்கு வித்திடுகிறது. கிறிஸ்துவருகையின் மிகப் பெரிய மகிழ்ச்சியின் எதிர்நோக்கு மரியாவின் பாடலில் தொனிப்பதை இவண் அறிவோம்.

### 1. அடிமையைக் கண்ணோக்குவதில் வெளிப்படும் மகிழ்ச்சி (லூக். 1 : 48-50)

இயேசுவின் வருகையை எதிர்நோக்கும் காலமே அட்வெந்து காலம். பலநூறு ஆண்டுகளாக மேசியாவின் வருகைக்காக இஸ்ரேயேல் மக்கள் எதிர்பார்த்திருந்தனர். உரோம ஆட்சியில் அடிமைப்பட்டுக்கிடந்த இஸ்ரயேலை மேசியா மீட்பார் என நம்பியிருந்தனர். மேசியாவின் வருகை யூத சமூகத்திற்கு மாபெரும் மகிழ்ச்சியாக இருக்கும் என எண்ணினர். மேசியாவின் பிறப்பு ஒரு சதுசேய குருவின் வீட்டில் நிகழும் எனக் கணித்தனர். கணக்குக்கும் கணிப்புக்கும் மாறாக, யூத சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட கலிலேயாவிலுள்ள நாசேரேத்து என்னும் சிற்றூரில் வாழ்ந்த மரியாளிடம் (லூக். 1:26) பிறப்பது வானதூதரால் உறுதி செய்யப்பட்டது (லூக். 1: 27-31) யூதப் பாரம்பரியவாதிகளுக்கு ஒரு பேரடியாக இருந்தது. ஆண்டவர் பிறப்பு அடிமையை அந்தஸ்தில் உயர்த்துகிறது என எண்ணி மரியாள் மகிழ்ச்சியடைகிறாள். இதோ ஆண்டவருக்கு அடிமை என்ற ஒப்படைப்பில் தொடங்கி (லூ. 1:38) அடிமையைக் கண்ணோக்கினார் என மகிழ்ந்து பாடுகிறார் (லூ. 1:49).

சிறுவனாக இருக்கும்போது தந்தையோடு விறகுக்கட்டைகளைச் சுமந்து வந்த நேரத்தில் பங்கு பங்காக அடிமைகள் விற்கப்படுகின்ற காட்சியை ஆபிரகாம் லிங்கன் பார்த்தார். நான் இந்த நாட்டின் தலைவரானால் அடிமைத்தளையை ஒழிப்பேன் எனத் தீர்மானித்தார். தீர்மானத்தில் உறுதியோடு நின்று போராடிய லிங்கன் அமெரிக்க அதிபரான முதல் நாளில் தன் முதல் கையெழுத்தை அடிமை விடுதலைப் பிரகடனத்தில் போட்டு 1861ல் அடிமை வியாபாரத்தை ஒழித்தார். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென் திருவிதாங்கூரில் அடிமை வியாபாரம் களைகட்டியிருந்தது. அப்போது திருத்தொண்டராகப் பணியாற்றிய அருள்திரு. சார்லஸ் மீட் தலைமையில் நடந்த போராட்டத்தின் வழி 1855ல் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டது. ஆண்டாண்டு காலமாக அடிமையாகிக் கிடந்த திருவிதாங்கூர் மக்களுக்கு இயேசு கிறிஸ்துவின் பிறப்புச் செய்தி அடிமையில் கண்ணோக்கினார் என்ற நிலையில் ஆனந்தமாகவே இருந்தது. பொருளாதார ஏற்றத்தாழ்வில்





அடிமைத்தளையில் சிக்கித் தவிக்கும் சமூகத்தாரை விடுவிக்கும் நம்பிக்கையைத் தருவதாக கிறிஸ்துவின் வருகை அமைகின்றது. இதுவே மரியாளின் மகிழ்ச்சியின் எதிர்நோக்காக இருந்தது.

### 2. அகங்காரத்தை அகற்றுவதில் வெளிப்படும் மகிழ்ச்சி

(லூக். 1 : 50-52)

அகங்காரம் அல்லது ஆணவம் அதிகாரம் மறுமுகம், பணம், பதவி, அதிகாரம் படைத்தோர் அகங்கார தோரணையில் தென்படுவர். அகங்காரிகள் கண்களில் ஏழையர் இல்லாதவர், இயலாதோர் தென்படுவதில்லை. அகங்காரிகள் பொய்களைப் பிணைக்கிறார்கள் (திபா. 119:69). அகங்காரியிடம் பெருமை குடிகொள்கிறது. (எசா. 13:11). அகங்காரிகளிடமிருந்து அகந்தை பிறக்கிறது. நான், எனது, என்னுடைய என்று சுயததை நம்பி வாழ்கிறான். சுயமே சுகம் எனத் தீர்மானிக்கிறான். சுயவெளிப்பாட்டின் காரணமாகத்தான் பார்வோன் இஸ்ரவேலர்களை விடுவிக்க மறுத்தான் (யாத். 5:2) நான் என்ற ஆணவத்தால் கோலியாத்து தாவீதை எள்ளி, நகையாடினான் (1சாமு 17: 40-44) தான் என்ற அதிகாரம் வேட்கையினால் தான் சவுல் தாவீதைக் கொன்றுபோட வழிதேடினான் (1 சாமு. 19:1). ஆணவத்தின் பிரகடனமாக நேபுகானேசர் நான் கட்டின மகா பாபிலோன் என்றார் (தானி. 4:30). தனக்கு என்ற குறுகிய எண்ணத்தால் செல்வந்தன் மதிமயங்கி ஆத்துமாவே விருப்பம்போல் புசித்து குடித்து பூரிப்பாயிரு என்றான் (லூக். 12: 13-21). ஆனால் அகங்காரியின் வீட்டை ஆண்டவர் பிடுங்கிப்போடுவார் (நீதி. 15:25), மனிதரின் அகந்தை அவனைத் தாழ்த்தும் (நீதி. 29:23) என்பதற்கேற்ப, பார்வோன் இஸ்ரயேலரை விடுவித்தான், கோலியாத்து ஆணவத்தால் வீழ்ந்தான், சவுல் அதிகாரத்தை இழந்தான், நேபுகானேசர் தள்ளப்பட்டார். என்பது திருமறை கண்கூடு. கிறிஸ்துவின் வருகையால் உரோம அதிகாரத்திலிருந்து இஸ்ரயேலர் விடுவிக்கப்படுவர் என்ற மகிழ்ச்சியின் வெளிப்பாட்டில் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எடுத்துள்ளார் (லூக். 1: 50-53) என மரியா அகமகிழ்ந்து பாடுகிறார்.

கிறிஸ்து வருகை என்பது சாதாரணத்திலிருந்து அசாதாரணமான இல்லாமையிலிருந்து இருப்பவையாவது, குப்பையிலிருந்து தூக்கி அரியணையில் அமர்த்துவது. தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து இந்திய குடியரசுத் தலைவராக உயர்ந்த நாராயணன் அவர்களே இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. வலிமையிழந்தோர் வலியவர் ஆவதும் விளிம்பு நிலையிலுள்ளோர் அதிகாரத்தில் மையநிலையில் வருவதும் கிறிஸ்து வருகையினால் வெளிப்படும் மகிழ்ச்சியின் அடையாளங்களே இருப்போரை உயர்த்தும் நிலையில் கொண்டுவர முயல்வதே திருச்சபைப் பணி என்பதே மக்களின் எதிர்நோக்கு.

திரளான கால்நடைகளும் மீண்டும் வருவீர். அதைச் சுற்றிலும் அக்கினி மதிலாய் நான் இருப்பேன். எழுந்திருங்கள் ஒடிவாருங்கள் எனப் பாபிலோனில் அடிமைப்பட்டு, நம்பிக்கையிழந்து காணப்பட்ட இஸ்ரவேலருக்கு இறை அழைப்பு கொடுக்கப்பட்டது.

கடவுளின் முக்கியமான தன்மைகளில் ஒன்று, அவர் இருக்கிறவர் என்பதாகும். அவர் எங்கேயோ அல்ல, அவர் இடிந்துபோன நம்பிக்கைகளுடன் நொறுங்கிப்போன வாழ்வு அனுபவங்களுடன் முடிங்கிக் கிடக்கும் மனிதர்களிடையே வந்து அவர்களுடன் தமது இருப்பு நிலையை உறுதிப்படுத்தி அவர்களை மகிழ்ச்சியுடன் வாழ அழைக்கிறார். நாமும் நமது நிலைமைகளிலே மகிழ்ந்து வாழ அவரது அண்மை அவசியம் எனும் அழைப்பை ஏற்றுக் கொள்வோம்.

## 2. இறையவரின் அங்கீகாரம்

“............. எனது மனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்” (லூக்கா 1:48)

மீட்பரின் வருகையானது மகிழ்ச்சியின் சூழலை உருவாக்குகின்றது. மற்ற நற்செய்தியாளர்களை விட லூக்கா அதிக அளவில் இந்த உண்மையைப் பதிவு செய்துள்ளார். இயேசு பாலகனின் பிறப்புக்கு முன்னரே (லூக். 1: 14) மரியாள் எலிசபெத்தை சந்திக்க வந்தபோது யோவான் கருப்பையில் அக்களிப்பால் துள்ளினார் (லூக். 1 : 41-44), வான தூதரின் வாழ்த்தினை மகிழ்ச்சியின் அழைப்பாகக் கொண்ட கன்னிகை மரியாளை (1:25 தாழ்ச்சியின் அளவிற்கேற்ப மகிழ்ச்சியுடன் எளியோரைக் காப்பதற்கென தனது மகவாக உருவான ஆண்டவரை மகிழ்ந்து போற்றுகிறார். இயேசுவின் பிறப்பின் செய்தியானது அதனை அறிவிக்கின்ற வானதூதருக்கும், அவர் மீட்க வந்த மக்களுக்கும் பெரு மகிழ்ச்சியின் செய்தியாக அமைந்தது.

சமய, சமூக சூழலில் தலைகுனிவும், பாதுகாப்பும் அற்ற நெருக்கடியான நிலையில் காணப்பட்ட மரியாள் தன் நிலையை (லூக். 1:34) வானதூதரிடம் தெரிவித்து தகுந்த இறை நடத்துதலை (லூக் 1:35) தெளிவாக அறிந்து முழுமையாக தன்னை இறைவன் அங்கீகரித்துள்ளார் என்பதைப் புரிந்து “நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் (லூக். 1:38) என்று முழுமனதோடு அர்ப்பணித்து ஆண்டவரைப் போற்றி மகிழ்ந்துள்ளார் (லூக் 1:47) காரணம் தன்னில் இருப்பது தூயாவி தன்னில் பிறப்பது தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும் (லூக் 1:35) எனும் இறை உண்மையே ஆகும். நாமும் நமது நெருக்கடியான கடினமான நம்பிக்கையற்ற பாதுகாப்பில்லாத சூழல்களிலும் இறைவன் நம் நடுவில்





இரவு உணவு அருந்தும்படி அமர்ந்தபோது அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது. வேத வாக்கியங்களை அவர் நமக்கு விளக்கியபோது உள்ளங்கள் கொழுந்துவிட்டு எரியவில்லையா என்றனர், மற்றோர்க்கும் சான்றாயினர். நாமும் கடவுளின் வார்த்தையால் உணர்வு பெற்று மற்றோர் முன் சான்றாவோமா?

## 2. உடன்படத் தூண்டும் உயிருள்ள இறை வார்த்தையாகிய உணவு யோவா. 6 : 51,58

யோவான் குறிப்பிடும் போது இறைவார்த்தையாகிய அப்பம் ஜீவனைக் கொடுப்பதுமட்டுமல்ல அழியாமையையும் தருகிறது. எனவே கடவுளின் வார்த்தை ஜீவனையும் அழியாமையையும் பெறும்படி கடவுளின் வார்த்தைக்கு உடன்படத் தூண்டுகிறது. ஏசாயா இறைவாக்கினர் சொல்லும்போது ஏசா:55:11-ல், என வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். மனிதன் ஜீவன் பெற்று அழியாமையுள்ள நித்திய வாழ்வுடையவனாக வாழ உடன்படத் தூண்டுவது இறைவார்த்தை என்பதே இதன் பொருளாகும். இதற்காகவே வார்த்தையாகிய கடவுள் மாட்சியாக மரியாளைத் தெரிந்து கொண்டு பெத்தலையில் பாலகனாகப் பிறந்தார். லூக். 1 : 34-38. மரியாள் இறைத்திட்டத்திற்கு உடன்பட்டபடியால் உலக இரட்சகர் இயேசுவை உலகிற்கு தந்து ஆசி பெற்றாள். சவுல் என்ற வாலிபன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த அனுமதி பெற்று தமஸ்கு பாதையில் செல்லும் போது ஆண்டவரால் தடுத்தாட்கொள்ளப்பட்டு அவரது சத்தம் கேட்க ஆண்டவரே நீர் யார்? எனக் கேள்வி எழுப்பினார். அதற்கு இயேசு நீ துன்பப்படுத்துகிற கிறிஸ்து நானே என்றார். அதற்கு சவுல் ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்றார். அனனியா வாயிலாக இறைச் சித்தம் அறிந்து இறைப்பணிக்கெனத் தன்னை ஒப்புவித்தார். அதனால் பல சபைகள் உருவாயின. லூக். 19:1-10-ல் சகேயு ஆயக்காரன் பாவியான மனுஷன். ஆண்டவராகிய இயேசுவைக் காண விரும்பி இயேசு செல்லும் பாதையில் முன்னாக ஓடிச் சென்று காட்டத்தி மரத்தில் ஏறி அமர்ந்திருந்தான். இயேசு அவனைக் கண்டு சகேயுவே கீழிறங்கி வா. இன்று நான் உன் இல்லத்தில் தங்கவேண்டும் என்றபோது உடனே கீழ்ப்படிந்து கீழிறங்கி தன் ஆஸ்தியில்

பாதியை ஏழைகளுக்கும், அநியாயமாக வாங்கினதுண்டானால் 4 மடங்காகவும் திருப்பிக் கொடுக்கிறேன் என்றான். இந்த இல்லத்திற்கு மீட்பு வந்தது. இவனும் ஆபிரகாமின் குமாரன் என உறுதிபட கூறினார். உடன்படத் தூண்டிய இறைவார்த்தையினால் மீட்பினைப் பெற்றார் சகேயு. இன்று கடவுளின் வார்த்தைக்கு உட்பட்டோர் இறைத் தொண்டர்களாய், (உ.ம்) நிங்கல்தௌபே, சாள்ஸ்மீட், சிங்ளேயர் என இறைமக்களாய் உயிர்த்தெழுந்த இயேசுவுக்குச் சாட்சியாயினர். நாமும் உண்மையான சாட்சிகளாக இறைவார்த்தைக்கு உட்பட்டு வாழ்வோம்.

### 3. உன்னத வாழ்வு நல்கும் உயிருள்ள இறைவார்த்தையாகிய உணவு

"என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்" (யோவா. 6 : 51).

உன்னத வாழ்வு என்றால் நிலைவாழ்வாகும். இறை வார்த்தையின்படி வாழ்ந்தால் நிலை வாழ்வு உறுதி. நியாயசாஸ்திரி ஒருவன் இயேசுவைச் சோதிக்கும்படி நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். (லூக். 10:25-37). நியாயப்பிரமாணம் என்ன சொல்லுகிறது என்று கேட்டார் இயேசு. முழு மனதுடன் அதற்கு பதிலாக தேவனிடத்திலும் அயலானிடத்திலும் முழு மனதுடன் அன்பு கூர வேண்டும் என்று பதில் கூறிய நியாய சாஸ்திரியிடம் நிதானமாய் உத்தரவு சொன்னாய் அந்தப்படியே செய் எனக் கட்டளையிட்டார். தன்னை அதிக நீதிமான் என காட்டத் துடித்த நியாயசாஸ்திரி எனக்குப் பிறன் யார்? என்றான். அதற்கு இயேசு நல்ல சமாரியன் உவமையினைக் கூறி கள்ளர் கையில் அகப்பட்ட மனிதனுக்கு இம்மூவரில் யார் அவனுக்குப் பிறனாயிருந்தான் என்றார். அதற்கு அவன், அவனுக்கு இரக்கம் காட்டினவனே நீயும் போய் அந்தப்படியே செய். நிலைவாழ்வு பெற இயேசு சொன்னபடியே செய்ய வேண்டும். செல்வந்த வாலிபன் ஒருவன் நிலை வாழ்வு பெற என்ன செய்ய வேண்டும் என வினவினான். இயேசு, கற்பனைகளைக் கைக்கொள் எனக் கூறி சிறுவயது முதல் கடைப்பிடித்து வருகிறேன் என்றான். உன்னில் ஓர் குறையுண்டு உனக்குண்டானவைகளை விற்று தரித்திரருக்குக்கொடு. பின் என்னைப் பின்பற்றி வா என்றார். (லூக். 18:18-27) தன் ஆஸ்தியினை



**21-12-2014** வருகையின் நான்காம் ஞாயிறு

## அகமகிழ்வோம் ஆண்டவர் அண்மையில்

**REJOICE THE LORD IS NEAR**

சக. 2 : 10-13 பிலி. 4 : 4-9

திபா. 50 : 1-15 லூக். 1 : 46-56

*"...அகமகிழ்ந்து ஆர்ப்பரி : இதோ நான் வருகிறேன். வந்து உன் நடுவில் குடிகொள்வேன்." சக. 2 : 10*

**இறைவேண்டல் : எங்களை தேற்றுபவரும் ஆற்றலளிக்கிறவருமாகிய கடவுளே, இரவின் செய்கைகளை விலக்கி, பகலுக்குரியவர்களாக வாழ உம்முடைய தாசர்கள் மூலம் எங்களுக்கு போதித்தவரே பகற்காலம் எங்களருகில் இருக்குமட்டும் நாங்கள் விழித்து ஜாக்கிரதையாயிருக்க உமது ராஜ்யத்திற்காக காத்திருந்து சான்றாளர்களாக எங்கள் பற்றுறுதியை பெலப்படுத்தி நம்பிக்கையை புதுப்பித்து கிறிஸ்துவின் வருகையில் களிகூர்ந்து அவரை துதிக்க உதவி செய்யும். இவைகளை இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் கேட்கிறோம் தந்தையே ஆமென்.**

வருகையின் காலத்தில் கடவுள் வழங்கும் கொடைகளில் முதன்மையானது மகிழ்ச்சியாகும். படைத்தவராகவும், மீட்பராகவும் அவர் தம்மையே வெளிப்படுத்துவதே மனிதரில் ஒப்பற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. மானுட வரலாற்றில் கடவுள் மற்றும் அவரது செயல்களின் முன்னிலையில் உணர்வுடைய ஒவ்வொரு மனிதரையும் மகிழ்ச்சி நிச்சயமாக மேற்கொண்டு விடுகின்றது(சங். 92: 5 7). உண்மையில் இம்மகிழ்ச்சி இறையரசின் சிறப்புமிக்கப் பண்பும் (ரோம 14:17) ஆவியின் கனியுமாகும் (கலா 5:22). இம்மகிழ்ச்சியானது இறையவரது அண்மையை அறிந்து கொள்ளுவதினால் அனுபவமாகிறது என்பதனைச் சிந்திப்போம்.

### 1. இறையவரின் அழைப்பு :

".......... இதோ நான் வருகிறேன்; வந்து உன் நடுவில் குடிகொள்வேன்" சகரி. 2:10

ஆண்டவரின் நகரமாகிய எருசலேம் அதன் அமைதியையும், பாதுகாப்பையும், ஆசீர்வாதத்தையும் இழந்து இடிந்து நொறுங்கி காணப்பட்ட காலம் அது. எருசலேமின் மதில்கள் இடிந்து மக்கள் ஆரவாரமாய் இருந்த தெருக்களெல்லாம் வெறிச்சோடி மக்கள் நடமாட்டமின்றி அலங்கோலமாகக் காணப்பட்டது. இந்நிலையில் எருசலேமில் எண்ணிறந்த மனிதர்களும்

### 3. பத்திரமாய்ச் சேர்க்கப்படும் : மாற்கு 13: 24 - 27

எருசலேமின் அழிவு, உலகத்தின் இறுதி, துன்பத்தின் அதிகரிப்பு, இறைமகனின் இரண்டாம் வருகை, இறைமக்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல் என்பவைகள் இத்திருமறைப் பகுதியின் முக்கிய நிகழ்வுகள். ஏசாயா, 3: 10; 34; 4; லூக்கா 21: 25, 26 மற்றும் 2 பேதுரு 3:10 ஆகிய வசனங்களிலும் காணலாம். வரலாற்றில் யூதர்கள் சிதறடிக்கப்பட்டது முக்கிய நிகழ்வு. சிதறடிக்கப்பட்டு உலகில் எங்கு யூதர்கள் வாழ்ந்தாலும் கடவுள் அவர்களை ஒன்று சேர்ப்பார் என்ற எதிர்நோக்கு அவர்களுக்குள் இருக்கிறது. மாற்கு 13: 27........ பூமியும் அழிந்து போகும் ஆண்டவரால் தெரிந்தெடுக்கப்பட்ட மெய் விசுவாசிகள் அவரது அழியாத ராஜ்யத்தில் ஒன்று சேர்க்கப்படுவார்கள், அவரோடு வாழ்வார்கள் (1தெச. 4:17). எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். இழப்பிலும் இறை நம்பிக்கை இழக்காமல் இருத்தல் அழியாத வாழ்வைத் தரும். இயேசுவின் இரண்டாம் வருகை என்பது பாடுபடும் மேசியா பெற்றுக் கொண்ட மகிமைக்குள் தம் ஜனத்தைச் சேர்த்து மகிமையைப் பகிருதலாகும். அழியா வாழ்வுக்குள் கடவுள் நம்மைச் சேர்த்துக் கொள்வார் என்பது நமது நல் எதிர்நோக்கு. அதுவே இறை நோக்கத்தின் நிறைவேறுதல்.

இறைவனின் நீதிச்செயலால் வருத்தத்தின் காலம் மகிழ்வின் காலமாக மாறி புதுவாழ்வு தரும், நற்செயல் புரிதலால் வரும் துன்பம் கிறிஸ்துவுக்குள் வாழும் ஒன்றித்த வாழ்வைத் தரும். சாதக மற்ற சூழலிலும் பற்றுறுதியுடன் வாழ்தல் அழியாத வாழ்வைத் தரும் என்பவைகளை இறைமக்களாகிய நமது நல் எதிர்நோக்கமாகக் கொண்டு வாழ இறைவன் அருள்புரிவாராக.

அருள்திரு. E. **ஸ்டேன்லிராஜ்**





இழக்க மனமற்று நிலை வாழ்வை இழந்தான். ஆனால் (லூக்.19:1-10) அடங்கிய பகுதியில் சகேயு என்னும் ஆயக்காரன் நிகழ்வு சித்தரிக்கப்பட்டுள்ளது. அவனை இயேசு அழைத்து உன் இல்லத்தில் தங்க வேண்டும் என்றபோது அதற்குத் தடையாகக் காணப்பட்ட குறைகளை நிவிர்த்தி செய்ய அவைகளை அறிக்கை செய்தான். இயேசு அதனைக் கேட்டு இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே என்றார். இறைவார்த்தையால் குறை நிவிர்த்தி செய்யப்பட்டால் நிலை வாழ்வு உறுதியாகும்.

இயேசுவுடன் சிலுவையில் தொங்கும் கள்வர்களில் ஒருவன் தன் பிழை உணர்ந்து நாம் நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். அவரோ நீதிபரர் என அறிக்கை செய்தான். மேலும் நிலை வாழ்வு கேட்டான். இயேசு அவனுக்குப் பரதீசின் வாழ்வு நல்கினார். நாமும் இறைவார்த்தைபடி வாழ்ந்தால் நிலை வாழ்வு உறுதியாகும்.

எசா. 55 : 11 - இல் "விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயினிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்தில் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பினகாரியமாகும்படி வாய்க்கும்" -நான் கர்த்தர். இறைவாக்கு உணர்வூட்டி, உடன்பட செய்து, உயர்வான வாழ்வு நல்கும் உணவாகும். எனவே நாம் இறைவார்த்தையாகிய உணவால் வாழ்வு பெறுவோமாக.

அருள்திரு. V. **டேவிட் றாபி ஜேக்கப்**

**14-12-2014** *வருகையின் மூன்றாம் ஞாயிறு*

# மீட்பின் நல் எதிர்நோக்கு

**HOPE OF SALVATION**

| | |
|---|---|
| செப். 3 : 14-20 | 1பேது. 3 : 8-16 |
| திபா. 43 | மாற். 13 : 24-27 |

***"...உங்களை முன்னைய நன்னிலைக்கு உயர்த்தி, உலகின் எல்லா மக்களிடையேயும் நீங்கள் பெயரும் புகழும் பெறுமாறு செய்வேன்."*** *செப். 3 : 20*

**இறைவேண்டல் : எல்லாவற்றையும் படைத்தவரும் தொடர்ந்து நிலைநிற்கச் செய்கிறவருமாகிய கடவுளே உம் மகனாம் இயேசு கிறிஸ்து இரட்சிப்பின் நம்பிக்கையை எமக்கு தந்தார். இவ்வுலகில் நீர் செயல்பட்டு மாற்றத்தையும் நீதியையும் தருகிறீர் என்பதில் நம்பிக்கையும் உறுதியும் தாரும். எல்லா பாடுகள், குழப்பங்களின் மத்தியிலும் உம் இரட்சிப்பை அனுபவிக்கும் கிருபையை தந்து இரட்சிப்பின் முழுமைக்காக ஜெபிக்க உதவி செய்தருளும் என்று உலக இரட்சகராம் இயேசுவின் திருப்பெயரில் கேட்கிறோம் தந்தையே. ஆமென்.**

உன்னை மாற்றிக்கொள் அதன்பின் உலகத்தை மாற்று. தற்போதைய உலகச் சூழல், எதிர்நோக்கு இன்றி உலகை மட்டும் முதன்மைப்படுத்தி வாழும் வாழ்வு முறை. இதனால் அமைதி இழப்பு, வரம்பு மீறிய உணர்ச்சிப் பெருக்கு, பண்புச் சிதைவுகள் அதிகரித்து மனிதன் மனம்போல வாழ விரும்புகின்றான். சமயத்தையும், சமய நெறிமுறைகளையும் தனக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றானே தவிர, இறை நெறிக்கு தான் சாதகமாக இருக்க வேண்டுமென விரும்பாததால் வாழ்வு இழப்பாகின்றது. இறைமக்கள் தங்களுக்குள், மீட்பின் எதிர்நோக்குக்கான மாற்றங்களை உருவாக்கி வாழுகின்றபோது பிறருக்கு நம் வாழ்வு, வழிகாட்டுதலாகவும் அமையும்.

## *1. நீதி உருவாகும் :* செப்பனியா 3: 14 - 20

கடவுள் மறைவிடமாயிருக்கிறார் என்ற பொருள் கொண்ட செப்பனியா எழுதிய இறைவாக்கு வருத்தமூட்டும், காலம், மகிழ்வின் காலம் என இருபெரும் பிரிவுடையது. வருத்தத்தின் காலத்தில் கடவுள் தேசத்தின் மீது நியாயத்தீர்ப்பையும் மகிழ்வின் காலத்தில் கடவுள் தேசத்தின் மீது நீதியையும் நிறைவேற்றுவார். கடவுள் நீதி செய்வார் என்பது நல் எதிர்நோக்கு. கடவுள் நீதி செய்வதில் தமது கிருபையின் தன்மை





மாற்றத்தைத் தமது மூன்று செயல்தன்மைகளால் தம் ஜனத்திற்கு நிறைவேற்றுகின்றார்.

**1. கடவுள் இஸ்ரவேலின் ராஜா :** இதில் அரசனின் தீர்ப்பு அறிக்கையை வெளிப்படுத்துகிறார். தம் ஜனங்கள் குற்றமற்றவர்கள் என்ற வெளிப்படையான அறிவிப்பு. செப். 3:15a: கர்த்தர் உன் ஆக்கினையை அகற்றினார்; 3b சத்துருக்களை விலக்கினார் 3c. பாதுகாப்பை உருவாக்கினார்.

**2. கடவுள் ஒரு வீரர் :** கடவுள் ஒரு வீரரைப் போல (warrior) சோர்ந்து போகும் மக்களை ஊக்கப்படுத்தினார், உற்சாகப்படுத்தினார் மட்டுமின்றி வெற்றியும் கொடுத்தார். (செப். 3: 16, 18,19).

**3. கடவுள் ஒரு மணமகன் :** அவர் தம்முடைய ஜனங்களை அன்பினால் புதுப்பிக்கின்றார். இது மணமகன். மணமகளிடம் அன்பு கொண்டு சேர்த்துக் கொள்வது போல அமைகின்றது. V. 20.

**4. மீட்பின் நல் எதிர்நோக்கு,** இறைவனின் நீதி செயலாற்றலால் மீண்டும்; நாம் ஆர்ப்பரிப்புடன் முழு இதயத்தோடு மகிழ்ந்து களிகூர்வோம் என்பதே. செப்பனியா 3: 14,15

## *2. துன்பம் நீங்கும் :* 1 பேதுரு 3: 8 - 16

எதிர்நோக்குடைய அப்போஸ்தலன் என்று அழைக்கப்படுகின்ற பேதுரு, கி.பி. 64-ல் எழுதிய தனது முதல் கடிதத்தில் துன்பம் கிருபை என்ற இருவார்த்தைகளை முதன்மைப் படுத்துகின்றார். நன்மை செய்து துன்பம் ஏற்பது நல்லது, நன்மை என்ற சிந்தையைத் தெளிவுபடுத்தும் ஆக்கியோன், இதனை அனுபவமாக்கிக் கொள்ள பிலிப் 2:5ல் கூறிய படி கிறிஸ்து இயேசுவில் இருக்கிற சிந்தையையும்; கொலோ. 3: 1,2ல் கூறியபடி கடவுளுக்குரியவைகளைத் தேடுவதும், தாழ்மைப்படுவதும் தேவை, தீமையிலிருந்து விலகுவது மட்டுமல்ல நன்மை செய்ய வேண்டும்; சமாதானம் தேடுவது மட்டுமல்ல, சமாதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நமது எதிர்நோக்கு யாதெனில் தீமைக்கு நன்மை செய்து, துயர் ஏற்று மகிமையடைந்த இயேசுவே (1 தீமோத்தேயு 1:17; கொலேசெயர் 1:27) நமக்குள் இருப்பதே மகிமையின் நம்பிக்கை. தீமைக்கு நன்மை செய்து துன்புறுவோருக்கு நல் எதிர்நோக்கு யாதெனில் பாடுகளால் மகிமையடைந்த இயேசுவுக்காக நாம் வாழ்வதும் அவருக்காகச் சான்று பகருவதுமே. இது நம் துன்பத்தை எளிதாக்குவதோடு கனமகிமைக்கு நேராகவும் நடத்தும்.

யோ: 11:25 உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே.

யோ: 14:6 வழியும், உண்மையும், வாழ்வும் நானே.

நித்திய வாழ்வுடையவர் மரணத்திற்காக தம்மை ஒப்புக்கொடுத்தார். நித்தியமாக வாழ்பவர் அவர். நித்திய வாழ்வுக்கு வழி நடத்துபவரும் அவர். அப்படிப்பட்டவர் யோ:15:13-ல் இறைவனின் அன்பு பிறருக்கு வாழ்வு வழங்குகிறது என்றார். இறைவனின் ஆளுகையை முன்னெடுத்து செல்ல இயேசு கொடுத்த பெரிய விலைக்கிரயம் அவரது ஜீவன் (வாழ்வு). ஆண்டவருக்காக அவரது விருப்பம் நிறைவேற எதையும் இழக்கவில்லை என்றால் பண்டிகை கொண்டாடி பயன் இல்லை. இழப்பிலே தியாகத்திலே தான் பண்டிகை பலனுள்ளதாகிறது. கொலோ:1:20-ல் அவர் சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தினாலே அமைதியை நிலைநாட்டவும் அனைத்தையும் ஒப்புரவாக்கினார் என பவுல் இந்த தியாகத்தை வெளிப்படுத்துகிறார்.

பண்டிகை ஆசரிப்பு, பண புழக்கம், குடும்ப கூடுகை மகிழ்விலிருந்து, புதியனவற்றை வாங்குதல் இவைகள் ஒருபக்கம் இருந்தாலும் மறுபக்கம் கடவுள் நம்மோடு வாழ்வதற்காக, நம்மை வாழ்விப்பதற்காக எவ்வளவு பெரிய தியாகத்தை செய்திருக்கிறார் என்பதை எண்ணி பார்ப்போம். உயர்ந்த மேன்மையை உதறி தள்ளி உலகில் வந்துள்ள ஆண்டவரின் உணர்வுகளில் பங்கடைந்து பண்டிகையை ஆசரிப்போம். இறையருளும் ஆசி நம்மோடு இருப்பதாக.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசுமணி**





இருக்கிறார். அவர் இம்மானுவேல் எனும் உண்மைச் செய்தியை மறவால், நம்மை முழுமையாய் அர்ப்பணித்து மகிழந்து வாழ தாழ்மையுடன் அவர் அண்மையைப் பற்றிக் கொள்வோம்.

### 3. இறைமக்களின் ஆசீர்வாதம்

"....... ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்" (பிலி. 4:4)

கடவுள் தமது இருப்பிடத்தை இறைமக்களிடையே அமைத்துக் கொள்வதினால் மக்களிடையே மகிழ்ச்சி ஏற்படுவது இயல்பு. புனித பவுலடியார் குறிப்பிடும்போது நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? (1கொரி. 3:16) என்கிறார். வாக்கு மனிதர் ஆனார் அவர் நம்மிடையே குடிகொண்டார் அவரது மாட்சியை நாங்கள் கண்டோம் என்கிறார் யோவான் (யோவா. 1:14)

இறையவர் இறைமக்களில் இருக்கிறார் எனும் உண்மை நிலையை உலகின் முன் வைக்க கிறிஸ்வின் உண்மைச் சீடர்களுக்கு ஒரு முன் மாதிரி உண்டு. அவற்றிலிருந்து இளைய தலைமுறையினர் கற்றுக்கொள்ள வாய்ப்பும் உண்டு. பவுலடியாருக்கு உண்மையும், ஒழுக்கமும், நீதியும், கற்பும், கண்ணியமும், புண்ணியமும், அன்பும், புகழும் உள்ளடக்கிய ஒரு முன் மாதிரியை முன் வைக்க முடிந்தது. காரணம் இனி நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் எனும் அனுபவம் ஆகும். எனவே அம்மாதிரியைப் நாமும் பின்பற்ற அவரால் அழைப்பு பெற்றுள்ளோம் எதைக் குறித்தும், எந்த கவலையும் கொள்ளாமல், நன்றியோடு இறைவேண்டல் செய்யும் போது அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனதையும் பாதுகாக்கும். ஏனெனில் ஆண்டவர் அண்மையில் உள்ளார் (4:5) என்கிறார்.

வருகையின் காலத்தில் இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து இறையவரின் அங்கீகாரத்தையும், ஆசீர்வாதங்களையும் பெற்று அகமகிழ்ந்து வாழ மரியன்னையின் தாழ்மையை உளத்தில் பதிந்து அக்களிப்புடனும், பேருவுகையுடனும் வாழ்வோம். ஆண்டவர் நம் அண்மையில் அன்றும் இன்றும், என்றும், அவர் இம்மானுவேல் ஆமென்.

அருள்திரு. D. **ஜாண் ஜெபதாஸ்**

**24-12-2014** *Christmas Eve*

# பூவுலகில் அமைதி

## PEACE ON EARTH

எசா. 9 : 1-7 | 1திமொ. 3 : 14-16

திபா. 85 : 8-13 | லூக். 2 : 1-14

*"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!" லூக். 2 : 14*

**இறைவேண்டல் : எங்கள் மீட்பராகிய கடவுளே இவ்வுலகில் வந்த இயேசுவை உமது பரிசாக தந்து எங்களையும் முழு படைப்பையும் மீட்டு புனிதப்படுத்தினபடியால் நன்றி கூறுகிறோம். அவரை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளவும் அவரது இரட்சிப்பின் சந்தோஷத்தை அனுபவிக்கவும் உமது கிருபையை எங்களுக்கு தந்தருளும். இவைகளை இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரால் வேண்டுகிறோம் நல்ல தந்தையே ஆமென்.**

### முகவுரை :

பூ+ உலகில் வாடிப்போகும் வாழ்வில் அமைதியை எல்லாப் படைப்புகளும் எதிர்பார்க்கின்றன. எளியவைகள் பலம் உள்ளவைகளால் அமைதி இழப்பது அன்றாட அனுபவம். அமைதிக்காக உலகம் ஏங்கியப் போது ஏசாயா முன்னுரைத்த அமைதியின் அரசன் (சமாதான பிரபு) இயேசுவில் வெளிப்படுகிறார்.

அமைதி (Shalom) என்பது எதிர்ப்பில்லா அனுபவத்தை மட்டும் காட்டுவது அல்ல, முழுமையான மகிழ்ச்சி, நலம், பாதுகாப்பு முதலியன உள்ளடக்கில் நிறைவான இறை அனுபவம். அமைதியின் நகரம் என கருதப்பட்ட எருசலேமுக்கு அமைதி பெற சென்று வர வேண்டும் என்ற மனிதச் சிந்தனைகள் மாற்றப்பட்டு இறைவனே அமைதித் தர தேடி வந்த அனுபவம் தான் மந்தை மேய்ப்பர்களைச் சந்தித்து (லூக். 2 : 13,14) சமாதானம் கூறிய நிகழ்வு. அமைதியின் அரசர் மனுக்குலத்திற்கு வெளிப்பட எருசலேம் மட்டும் போதும் என்ற எண்ணத்தை அகற்றி திறந்தவெளிகள், வனாந்தரங்கள் எல்லா இடங்களும் (யோ 4 : 20 - 23) இறைவன் பிரசன்னமாகும் இடங்கள் என்பதை இச்சம்பவத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார். மாட்டுத்தொழுவமும், வயல்வெளிகளும் கடவுள் தங்கும் இடமே என ஆயருக்குக் காட்டி எவர் எவ்விடத்தில் தங்கியிருந்து பணிபுரிந்தாலும் கடவுளின் சமூகத்தை உணரலாம் என்ற உண்மை விளக்கப்படுகிறது. ஒரு மனத்தோடு மந்தை மேய்த்த ஆயர்களால் தான் அமைதியின் அரசரின் செய்திக்கு ஏற்றவாறு செயல்பட முடிந்தது.





### 2. செல்வத்திலிருந்து வறுமை நிலைக்கு :

யோ:1:3 அனைத்தும் அவரால் உண்டாயின.

யோ: 1:10 உலகு அவரால் தான் உண்டானது.

யோ. 1:16 அவர் நிறைவிலிருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம்.

சங். 24:1 மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையது. நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்.

II கொரி: 8:9 அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார்.

நிதி: 8:18 என்னிடம் செல்வமும் மேன்மையும், அழியாப் பொருளும் அனைத்து நலமும் உண்டு.

சொல்லக்கூடியவர் ஆண்டவர் ஒருவரே. உலகமும் அதிலுள்ள யாவும் அவருக்கு உரியது. ஆண்டவர் எவ்வளவு பெரிய செல்வந்தர். ஆனால் வறுமை நிலைக்கு, எளிய நிலைக்கு, தாழ்மை நிலைக்கு அவரே இறங்கி வந்தார். இதனை உண்மையாய் உணர்ந்தால் அதுவே கிறிஸ்மஸ் லூக்கா 9:58, நரிகளுக்கு பதுங்கு குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மானிட மகனுக்கோ தலைசாய்க்க கூட இடமில்லை.

II கொரி: 8:9 அவருடைய ஏழ்மையினாலே நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்.

கிறிஸ்து இவ்உலகில் இருந்தபோது பணமில்லை, வீடு இல்லை, வசதி இல்லை, ஆனால் சாப்பிடாமல் இருந்ததில்லை, தேவைகள் சந்திக்கப்படாமல் இருந்ததில்லை. தம்மை அன்பு கூருகிற, இறைவனின் ஆளுகையில் இணைக்கப்படுகிற மக்கள் வசதி வாழ்வை பெற தாமே தரித்திரரானார். எத்தனை பெரிய தியாகம். செல்வ நிலையிலிருந்து இறுமாப்போடு, ஆணவத்தோடு பண்டிகை ஆசரிக்காமல் எளிமையான உணர்வுகளோடு எளியவர்களோடு இணைந்து பண்டிகையை கொண்டாடுவோம்.

### 3. வாழ்விலிருந்து மரணத்திற்கு :

யோ:1-4. அவரிடம் வாழ்வு இருந்தது

ஏசாயா: 11:1. ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும்.

கொலோ:1:18 எல்லாவற்றுக்குள்ளும் முதன்மை பெறுமாறு இறந்து உயிர்த்தெழுவோருள் அவர் தலைப்பேறு ஆனார்.

அரசியலிலும் சமூகத்திலும், சமயங்களிலும், ஏன் திருச்சபைகளுக்குள்ளும் வலம் வருகிறார்கள். கீழிருந்து மேல்நோக்கி செல்ல கையூட்டு, ஊழல், ஆள் கடத்தல், அடிதடி, பரிசுபொருள் கொடுத்தல், இவைகளை கையாண்டு மேல் நிலையை அடைய துடியாய் துடித்து சாதித்தும் விடுகிறார்கள். கிறிஸ்மஸ் பண்டிகை என்பதை கீழிருந்து மேல்நோக்கி சென்றவரை பற்றி சிந்தித்து மகிழ்கிற பண்டிகை அல்ல. உன்னத நிலைகளை விண்ணின் உயர்ந்த, கனமான, மகிமையாக வாழ்வை தியாகம் செய்து மண்ணில் தன்னை எல்லைக்குட்படுத்தி எளிமையான கோலம் எடுத்து, அடிமையைப்போல வாழ்விழந்த மக்களோடு தன்னை ஒன்றித்து, ஒரு ஒப்பற்ற தியாகத்தை நிறைவேற்றிய கடவுளின் உணர்வுகளிலே இரண்டற கலந்து கொள்வதற்கான பண்டிகை. எப்படிபட்ட, எந்த நிலையிலிருந்து கடவுள் நம்மோடு வாழ இறங்கி வந்தார், மனு உரு எடுத்தார் என்பதை சிந்திப்போம்.

### 1) மதித்து வணங்கப்பட்ட நிலையிலிருந்து புறக்கணிக்கப்படுகிற நிலைக்கு :

கொலோ : 1:15 கடவுளது சாயல், படைப்பனைத்திலும் தலைப்பேறு.

கொலோ : 1:16 அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர்.

கொலோ : 1:17 அனைத்திற்கும் முந்தியவர் அவரே,

கொலோ : 1:18 திருச்சபையாகிய உடலுக்கு தலையும் தொடக்கமும் அவரே.

கொலோ : 1:19 முழு நிறைவும் அவருக்குள் குடிகொள்ளக் கடவுள் திருவுளம் கொண்டார்.

எல்லாராலும், எல்லாவற்றாலும், எப்போதும், எல்லா நிலையிலும் மதிப்பிற்குரிய, போற்றுதலுக்குரிய நிலையிலிருந்து புறக்கணிக்கபடுகிற, மதிப்பிழந்த, அவமானமான நிலைக்கு அவர் இறங்கி வந்தார். ஏசாயா இதனை குறித்து முன்கூட்டியே தீர்க்கதரிசனமாக உரைத்தார். பவுலடிகளாரும் இந்த தியாகத்தை குறித்து எழுதினார்.

ஏசாயா : 53:3 அவர் இகழப்பட்டார்; மனிதரால் புறக்கணிக்கப்பட்டார். வேதனையுற்ற மனிதராய் இருந்தார்.

பிலிப் : 2:7 தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்

மாற்கு 15:34 'என் இறைவா, என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர்' என்று கதறுகிற நிலைக்கு தள்ளப்பட்டார்.

இறைப்பணியில், இறைவனோடு இணைந்து வாழும் வாழ்வில் இத்தகைய அனுபவங்களை எதிர்கொள்ள நம்மை பலப்படுத்தும் பண்டிகையாக அமையட்டும்.





### 1. ஆண்டவர் அளிக்கும் அமைதி (சமாதானம்)

பூவுலகம் அமைதிக்காக ஏங்குகிறது. நிச்சயமற்ற உலக வாழ்க்கையில் அமைதிக்காக அலைந்து கொண்டிருக்கும் மனிதனுக்கு அமைதியின் அரசராக வெளிப்படுகிறார். இயேசு கிறிஸ்து குறிப்பிடும்போது என் சமாதானத்தையே தருகிறேன் எனக் கூறுகிறார். (யோ: 14 : 27)

**ஆண்டவரின் அமைதி வெளிப்படையானது.**

1. பகையைத் தகர்த்து ஒன்றுபடுத்துவது (எபே 2 : 14)
2. நீதி நிறைந்தது (தி.பா 72: 7; ரோ 14 : 17)
3. சமத்துவம் நிறைந்தது (ரோ 10 : 12)
4. அன்பு நிறைந்தது ( I கொரி 13)
5. நம்பிக்கைக்குரியது (ஏசா. 11: 1 - 9)

உலகம் சமாதானத்தைக் குறித்துப் பேசலாம். II ம் உலகப் போருக்குப்பின் ஏற்படுத்தப்பட்ட UNO-வில் உறுப்பினராக இருக்கும் பல நாடுகள் பல போர்களை நடத்தியும், யுத்தக் கருவிகளைத் தயாரித்தும் போலியான அமைதியின் முகமூடி அணிந்து பலருடைய வாழ்க்கையைப் பலியாக்குகின்றனர். ஆண்டவரின் அமைதி உள்ளும், புறம்பும் மேய்ச்சலை காணும் நிறைவான வாழ்வு.

### 2. அமைதி தர அழைக்கும் ஆண்டவர்

அழைப்புகள் பலவிதம், அழைத்து ஏமாற்றுபவர், லாபம் சம்பாதிப்பவர் அழித்து அட்டூழியம் செய்பவர் முதலியவர்கள் அழைக்கும் அழைப்புகள் உண்டு. வனாந்தரத்தில் மந்தை மேய்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு முழு வாழ்வுக்கான அழைப்பு கொடுக்கப்பட்டது.

ஆண்டவர் இயேசு அழைக்கும்போது வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னண்டைக்கு வாருங்கள் என அன்போடு அழைக்கிறார்.

இறைவிருப்பம் செய்கின்றவர்களுக்கு அழைப்பு கொடுக்கும்போது என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே வாருங்கள்; உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள் (மத். 24:31 - 46). சமாதான வார்த்தை கூறி அறிவிப்பவர் நம்பிக்கைக்குரியவர் அவரிடம் அழியாத வாழ்வு உண்டு.

உலகம் சார்ந்து செயல்படுகிறவர்களும் பல்வேறு தந்திர வார்த்தைகளினால் அழைக்கிறார்கள். அழைப்பு எங்கிருந்து யாரிடமிருந்து வருகிறது எனச் சிந்திக்க மறந்தால் அழிவு தான் பரிசு. (எ.கா.) சீசரா தவறான அழைப்புக்கு கீழ்ப்படிந்து அழிவது.

(நீதித் தலைவர்கள் 4 : 17 - 22)

உலக அழைப்பையும் இறை அழைப்பையும் பிரித்துப் பார்த்து அமைதி அரசரின் பாதைகள் கடினமாக இருந்தாலும் கடினங்கள் கடைசியில் கடவுளிடம் சேர்க்கும். (யோ 16:33)

### 3. ஆயர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டவரின் அமைதி :

சமாதானம் கூறி ஆயர்களை ஆண்டவர் அழைத்தபோது ஆணவம் காட்டாது, ஆண்டவரின் கட்டளையை ஏற்றுக் கொண்டு மந்தையைக் காக்கும் பொறுப்பு கடவுளுடையதுஎன உணர்ந்து, மந்தையைக் கடவுள் கரத்தில் ஒப்படைத்து விட்டு இறைமகனைச் சந்திக்கச் சென்றனர். மேய்ப்பர்களுக்கு மந்தைதான் செல்வம். ஆனால் இறை அழைப்பைப் பெற்ற போது அமைதி தரும் அரசரின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக் கொள்வார் என்ற உணர்வு வனாந்தரத்தில் அனலூட்டும் அனுபமாகி, அழைப்பை ஏற்றுக் கொண்டு பெத்லகேம் பாலனைப் பார்க்கச் சென்றனர்.

ஆண்டவரின் அழைப்பு பெற்ற போது ஏற்றுக் கொண்டவர்கள் தான் கடவுளின் சான்றுகளாகவும் மாறினர். (உ.ம் சாது சுந்தர்சிங்). கடவுளின் அழைப்பு யாவருக்கும் பொதுவானது. ஏற்றுக் கொள்வதும், புறக்கணிப்பதும் மனிதர்களைச் சார்ந்தது. அமைதி தரும் அழைப்பை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க பல சாக்குப்போக்குகள் கூறலாம். அமைதி பெற விரும்புபோருக்கு சௌகரியமின்மை, இரவு வனாந்தரபயம், உலகச் செல்வம் முதலியவை எவையும் தடையாக இருப்பதில்லை.

### முடிவுரை

தேடி வந்து அழைக்கும் அமைதியின் அரசரை ஏற்றுக் கொள்பவர்கள் பூவுலகில் அமைதியின் ஊடகங்களாக மாறுகிறார்கள். அமைதிக்கான நோபல் பரிசை 1964 ஆண்டு தன் 35ஆம் வயதில் பெற்ற மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் அமெரிக்காவில் இருந்த ஏற்றத்தாழ்வு மிக்க சமூக அமைப்பைச் சுட்டிக்காட்டி ஏற்றத்தாழ்வற்ற சமூக அமைப்பு உருவாக வேண்டும் என முழங்கியபோது அச்சமுகத்தைப் பார்க்க "நான்கனவு காண்கிறேன்" (I have a dream) என அறைகூவல் விடுத்து சமத்துவச் சிந்தனையைத் தட்டியெழுப்பி அன்பின் அரசரின் நற்செய்தி ஊடகமாக மாறினார். சமாதான பிரபுவின் சமாதானம் உள்ளங்களை ஆட்கொள்ளட்டும். அமைதி ஏற்படுத்துவோர் விதைக்கும் விதை நீதி என்னும் கனியைத் தருகிறது. (யாக். 3:18)

அருள்திரு. J. **ஜஸ்டின் தேவதாஸ்**



**25-12-2014** *கிறிஸ்துப் பிறப்பு*

## கடவுள் நம்மோடு

## GOD WITH US

எசா. 11 : 1-9 கொலோ. 1 : 13-20
திபா. 85 : 8-13 மத். 1 : 18-25

*"இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்று பொருள்."*
*மத். 1 : 23*

**இறைவேண்டல் :** விடுதலை வழங்கும் கடவுளே, உமது திருமைந்தரை எங்களோடிருக்க இவ்வுலகுக்கு அனுப்பினீர். எங்கள் வாழ்வின் அனைத்து காலங்களிலும் எங்களுள் உமது உறைதலை உயர்த்தி ஒளிவீச அருள்தாரும். உம் எழுந்தருளுதலால் எங்கள் வாழ்வில் தூய மாற்றம் பெற்று உம்மைப் புகழ என்றும் எங்களை வழிநடத்தும் வல்லவர் இயேசுகிறிஸ்து வழியாக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

நீண்ட காலம் வெளிநாட்டில் குடும்பமாக பணிபுரிந்த மகன் விடுமுறைக்காக சொந்த ஊருக்கு வந்திருந்தார். அவரது தந்தைக்கு அவர் ஒரே ஆண் மகன். இரு சகோதரிகளும் அவருக்கு உண்டு. தந்தையோ வயதின் காரணமாக உடல்நலக் குறைவாக இருந்தார். விடுமுறைக்கு வந்த மகன் மீண்டும் வெளிநாடு செல்லவேண்டிய நேரம் வந்தது. ஆனால் அவர் செல்லவில்லை. தந்தைக்கு அருகில் இருந்து அவருக்கு உதவி செய்து தந்தையோடு இருப்பதையே அவர் வாழ்வின் பெரும் பேறாக எண்ணினார். வெளி நாட்டு வேலை, வருமானம், அவரது உடைமைகள், வெளிநாட்டு நண்பர்கள், வெளிநாட்டு வேலை என்ற கௌரவம் இவை எல்லாவற்றையும் விட தந்தையோடு இருந்து வயதான தந்தைக்கு செய்கிற பணிவிடை இவையே மேன்மையாக கருதினார். மகனின் தியாகத்தை, மகனின் உயர்ந்த அன்பை கண்டவர் ஆச்சரியப்பட்டு போனார்கள். இந்த காலத்தில் இப்படி ஒரு மகனா? என்று வியந்து போயினர் அப்பகுதி மக்கள்.

உலகின் மக்கள் அனைவரும், கிறிஸ்தவர்களும் கீழிருந்து மேலே செல்லவே விரும்புகின்றனர். கல்வியில் செல்வாக்கில், பதவிகளில், பணி பொறுப்புக்களில், பொருளாதார நிலைகளில், நாகரீகத்தில், வசதியில் என அடுக்கிக்கொண்டே போகலாம். மேற்கண்ட மேன்மைகளை பெற நேர்மையோடு ஒருங்கோடு செயல்பட முன்வருபவர்கள் சிலர் மட்டுமே. பெரும்பாலானோர், இதற்கு மாறுபட்ட சிந்தனைகளையுடையவர்களாய்

# புதிய மாதத் தொடக்கத் தொழுகை அருளுரைகள்

**01-02-2014** *அருணோதயத் தொழுகை*

## நன்மைகளை அருளும் இறைவன்

செக். 9 : 11-17

> ***"இருமடங்கு நன்மைகள் நான் உங்களுக்குத் தருவேன் என்று நான் இன்று உங்களுக்கு அறிவிக்கிறேன்."*** *செக். 9 : 12*

நாம் வாழும் உலகில், மனிதர்கள் குறுகிய காலத்திலும், குறுக்கு வழியிலும் இரட்டிப்பான பணத்தைச் சம்பாதிக்க விரும்புகின்றனர். இத்தகைய மனநிலையைச் சில தந்திரக் குணமுள்ள வியாபாரிகள் உடனடி இலாபம், குறுகிய காலத்தில் பணம் இரட்டிப்பு என்று நூதன வழிகளில் மக்களை ஏமாற்றுகின்றனர். இதற்கு அடிப்படை, பேராசை மற்றும் பொறுமையற்ற நிலை ஆகும். குறிப்பாக (Real Estate) நில விற்பனை, தங்கத்தில் முதலீடு, பங்கு வர்த்தகம், வைப்பு நிதி முதலீடு போன்றவற்றில் இதை நாம் காண முடியும்.

ஆண்டவர் அளிக்கும் ஆசிகளைச் சொந்தமாக்க பொறுமை, இறை நம்பிக்கை அவசியம். இத்திருமறைப்பகுதியில் மேசியாவின் வருகையில்,

இஸ்ரயேலும் அதைச் சுற்றி உள்ள அனைத்து நாடுகளையும் ஆண்டவர் வெற்றி கொள்வார். தீமைகளை அகற்றி அனைத்து நாடுகளையும் இறையாளுகைக்குள் கொண்டு வருவார் என்றுரைக்கப்படுகின்றது. இவ்வாளுகையில் மாட்சிமை பொருந்திய அரசர், எளிமையும், தாழ்மையும் நிறைந்தவர், சமாதானத் தூதுவராக மேசியா, வெளிப்படுவார். இறை நம்பிக்கையோடு, பொறுமையோடு, விசுவாச உறுதியோடு காத்திருக்கும் மக்களுக்கு தரப்படும் செய்தி, உங்களுக்கு இருமடங்கு நன்மைகள் அருளப்படும். நம்முடைய ஆன்மீக வாழ்விலும் நாம் இருமடங்கு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள நாம் செய்ய வேண்டியது;

### *1. பொறுமையோடு காத்திருத்தல்*

உலகத்திலே மிகவும் விலையுயர்ந்த, மதிப்புள்ள பொருள் வைரம், அதே நேரத்தில் மிகவும் கடினமான பொருளும் வைரம்தான். இந்த



**28-12-2014** *கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும் முதல் ஞாயிறு*

## குடும்பம் கடவுளின் கொடை

**FAMILY AS GOD'S GIFT**

| | |
|---|---|
| யோசு. 24 : 14-22 | கலா. 6 : 1-10 |
| திபா. 128 | மத். 2 : 13-23 |

> ***"…..நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்."***
> *யோசுவா 24 : 15*

**இறைவேண்டல் : எங்கள் அன்பு கடவுளே! எங்கள் வாழ்விடங்களுக்காகவும், குடும்பங்களுக்காகவும் உமக்கு நன்றி சொல்லுகிறோம். நாங்கள் மனித வளங்களை எங்கள் குடும்பங்களில் வளப்படுத்தவும், உலக சமூகத்தோடு பகிர்ந்துகொள்ளவும், உமது அரசு இவ்வுலகில் வந்ததை அதன் வழியாய் அனைவரும் அறிந்துணரவும் உதவி செய்தருள வேண்டுமென்று நாசரேத்தில் குடும்ப வாழ்வில் பங்குகொண்ட எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.**

கடவுள் உலகில் ஏற்படுத்தியுள்ள அமைப்புகள் இரண்டாகும். அவை (1) குடும்பம் (2) திருச்சபை. இவற்றுள் குடும்பம் முதன்மையானது. குடும்பம் என்ற அமைப்புக்கு அடிப்படை திருமணம் ஆகும். திருமண விழா தான் குடும்ப வாழ்வின் தொடக்கமாகும். குடும்ப வாழ்வில் கணவனும், மனைவியும், பிள்ளைகளும் மிக முக்கியமானவர்கள். முப்புரிக் கயிறு அறுவது கடினம் (சஉ.4:12) என சபை உரையாளர் கூறுகிறார். முதல் புரி - கணவன், இரண்டாவது புரி - மனைவி, மூன்றாம் புரி - இறைவன். இவ்விதமாக மூன்றுபுரிகள் இணைந்து அமைக்கப்பட்ட பாசப்பிணைப்புத்தான் குடும்பம். "வாழ்வின் சமூக, அரசியல் மற்றும் பரிணாமங்களைக் கொண்ட ஒரு தெய்வீக நிலையம்தான் குடும்பம்" என அருளாளர். K.V. சைமன் கூறுகிறார்.

குடும்ப உறவுகளை ஒன்றிணைத்து இறைவன் வழி நடத்துகிறார் (தி.பா. 127). ஆண்டவரைத் தலைவராகக் கொண்ட குடும்பம் நிறைவை நோக்கிப் பயணம் செய்கிறது. எனவேதான் யோசுவா, "… நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்" (யோசு. 24:15b) என்றார். மகிழ்ச்சியான குடும்பம் பூமியிலே ஒரு பரலோகம் போன்றது. அது பாசங்களையும் அன்பையும் கற்றுக் கொடுக்கும் படைப்புக்கூடமாகும். அதே நேரத்தில் குடும்பம் என்பது சவால்கள் நிறைந்தது. துன்பமும்

மகிழ்ச்சியும் நிறைந்தது. சவால்களையும் துன்பங்களையும் சோதனைகளையும் கடந்து கடவுளில் குடும்பங்களைக் கட்டும் போதுதான் குடும்பங்கள் மேன்மை பெறுகிறது. கடவுளில் கட்டப்பட்ட யோசுவாவின் குடும்ப வாழ்வில் காணப்பட்ட கடவுள் பற்றும் குடும்பப் பாசமும் நமது குடும்ப வாழ்வுக்குச் சவாலாக உள்ளது என்பதைத் தியானப் பகுதியான யோசுவா 24 : 14-22 தெளிவுப்படுத்துகிறது.

### *1. தன்னை முன் நிறுத்தும் யோசுவா - "நானும்"*

(யோசு. 24:15b)

யோசுவா எப்பிராயீம் இனத்தைச் சேர்ந்த நூனின் மகனாவார் (1 குறி.7 : 20-27). மோசேயின் உண்மைத் தொண்டராக இருந்து அவருடைய புனிதச் செயல்களுக்கெல்லாம் சாட்சியாக விளங்கினார் (எண். 7:14). அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்த கடவுளை மறந்து போன இஸ்ரயேல் மக்கள் அனைவரையும் கூடி வரச் செய்து வரலாற்றில் கடவுள் எங்ஙனம் செல்பட்டார் என்பதைத் தெளிவுப்படுத்தினார் (யோசு. 24 அதி). அதுமட்டுமல்ல மக்களை நன்றியுடன் வாழ அழைப்புக்கொடுத்து தன்னை மாதிரியாக முன்நிறுத்தினார் (யோசு. 24:15). யோசுவா ஜனங்களுக்கு முன் தைரியமாகக் கூறும் அளவில் தனது தலைமைத்துவத்தைச் சரிவர தனது வீட்டில் நடத்தி வந்ததைக் காண்கிறோம். ஆக்கில்லா பிரிஸ்கில்லா தம்பதியரின் குடும்ப வாழ்வும் முன்மாதிரியான குடும்பத்துக்கு உதாரணமாகத் திருமறை கூறுகிறது (தி.ப.18:1-13). கணவனின் அன்பான தலைமைத்துவத்தை மனைவி ஏற்றுக்கொண்டு, கணவனை மதித்து அவரோடு சேர்ந்திணைந்து இருவருமாக குடும்பப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

குடும்பவாழ்வு சிறக்க குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினர்களின் ஒத்துழைப்பும், மாதிரியான வாழ்வும் மிக முக்கியமானது. சரியான நிர்வாகம் குடும்பத்தில் இருந்தால் குடும்பம் கடவுளுக்குச் சாட்சியாகக் காணப்படும். அதற்கு யோசுவாவைப்போலத் தங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் மனநிலை கணவனுக்கும் மனைவிக்கும் தேவையாகும். குடும்ப அங்கத்தினர்களுக்கிடையே உறவுகள் வலுப்பட பெற்றோரின் முன்மாதிரியான வாழ்க்கையும் போதனையும்தான் அடித்தளமாகும் (இச.6அதி). அதுமட்டுமல்ல பல்சமய மக்கள் நிறைந்த சூழலில் வாழும் நமது குடும்ப வாழ்வு கடவுளுக்கு சாட்சியாக அமைந்தால் அநேகர் கடவுளின் மக்களாக மாற நாம் கருவிகளாவோம்.





வாழ்வில் கவலை அதிகம். காட்டுபுஷ்பங்களைக் கவனித்துப் பாருங்கள் என்ற புதிய வாழ்க்கை முறைக்கு அழைப்பு விடுகிறார் ஆண்டவர். அடைக்கலான் குருவிகளை பார்க்கிலும் விசேஷித்தவர்கள் என்று அறிக்கை செய்கிறார். இஸ்ரவேல் மக்களின் விடுதலைப் பயணத்தில் தண்ணீருக்கும் அப்பத்திற்கும் தடுமாறின போது பராமரிக்கும் ஆண்டவர் அவர்களைப் பராமரித்தார். ஆண்டு முழுவதும் குறைகள் இல்லாமல், இல்லாமைகள் இல்லாமல் பராமரித்த கடவுள் எவ்வளவு நல்லவர். புதிய ஆண்டு உலகப் பற்றில் நம்பிக்கை கொள்ளாமல் இறைப்பற்றில் நம்பிக்கை கொள்ளும்போது பராமரிக்கும் கரத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

வாக்குதத்தத்தை எதிர்பார்த்து புது வருடத்துக்குள் பிரவேசிக்க இருக்கும் நாம் படைத்த இறைவனின் கரத்தை இறுகப் பிடித்து அவருடைய பாதுகாவலையும் பராமரிக்கும் அனுபவங்களையும் உணர்ந்து சிலுவையின் நிழலில் அனுதினமும் வாழ முயற்சிப்போம்;

அருள்திரு. J. ***சிங் ஜாண் நத்தானியேல்***

தனிமை நல்லதல்ல என்று கண்டு துணையைப் படைத்தார். (தொநூ. 1:27). படைப்பின் நோக்கமே கடவுளிடம் அன்பு செலுத்துவதும், கீழ்ப்படிதலுமே. விடுதலைப் பயணத்தில் ஏற்பட்ட சோதனைகளில் கடவுளின் கரம் அவர்களோடு இருந்தது.

எசா.66:2-இல் என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித்ததினால் இவைகள் எல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன். கடந்து வந்த பாதையில் எவ்வளவோ வேதனையின் அனுபவங்கள், மகிழச்சியின் உச்சகட்டங்கள். எல்லாவற்றிலும் படைத்தவரின் கரம் உடனிருந்தது. உள்ளங்கையில் வரைந்து வைத்திருக்கிற ஆண்டவர் புதிய வருடத்திலும் உடனிருப்பார் என்ற நம்பிக்கை மேலானது.

### 2. பாதுகாக்கும் கரம் :

படைத்தவர் பாதுகாப்பார். இந்த இரகசியம் கடவுள் மேல் வைத்திருக்கும் ஆழமான அன்பு. பாடுகளின் மத்தியில் பயணித்தோம் வழுவிப் போகாமல், சிதறிப் போகாமல் நம்பிக்கையின் அடிப்படையில் பாதுகாத்தார். பவுலடியார் தெசலோனிக்கத் திருச்சபைக்கு எழுதும் போது, பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விடுங்கள், பரிசுத்தமாய் வாழுங்கள் என்று கூறுகிறார் (I தெச. 5 : 22 - 24). விடுதலைப் பயணத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு ஏற்பட்ட பலவிதமான பிரச்சனைகளிலிருந்தும், உபத்திரவங்களிலிருந்தும் கடவுள் பாதுகாத்தார். சங். 27 : 5ல் கேடு வரும் நாளில் அவர் என்னை தம் கூடாரத்தில் மறைத்து என்னை தமது கூடார மறைவிலே ஒளித்து வைத்து என்னை கன்மலையின் மேல் உயர்த்துவார். இந்த நம்பிக்கை தனிப்பட்ட உள்ளங்களில் உருவாகும் போது பாதுகாக்கும் கரத்தை உணரலாம். புதிய ஆண்டில் பாதுகாக்கும் கரம் உடனிருந்து, அருளுடன் ஆற்றலுடன் பாதுகாத்து வழி நடத்துவார்.

### 3. பராமரிக்கும் கரம் :

அனுதினமும் நம்மோடு இருந்து பராமரிக்கும் கரத்தை உணர்ந்து கொண்டோம். நமது உணவு, உடை, ஆஸ்தி, வீடு, வாசல், பணம் என்று கவலைப்படாமல் இறைவனிடம் உறுதியான நம்பிக்கை கொண்டதினால் இறைவனின் பராமரிக்கும் அனுபவங்களைப் பெற்றுக்கொண்டோம். பொல்லாங்கனின் கரத்தில் உலகம் விழுந்து கிடக்கிறது. ஆகவே மனித





### 2. தன் குடும்பத்தை முன் மாதிரியாக்கும் யோசுவா - "என் வீட்டாரும்" (யோசு.24:15b)

அடிமைப்பட்ட நிலையில் காணப்பட்ட தங்கள் வாழ்வில் கடவுள் எப்படிச் செயல்பட்டார் என்பதை இஸ்ரவேல் குடும்பத்தார் மறந்து போயினர். எருசலேமில் காணப்படும் உயர்ந்த மலையின் மீதுள்ள கடவுளின் திருக்கோவிலில் அவரது பிரசன்னம் உள்ளது. விண்ணுக்கும் மண்ணுக்கும் உயர்ந்திருக்கும் ஆண்டவர் நம்மை மேன்மைப்படுத்துகிறவர் என்ற அசையாத நம்பிக்கையும், எருசலேமின் நல்வாழ்வைத் தருபவர் என்ற உணர்வும் இஸ்ரயேலரிடம் இருந்தது. எருசலேம் என்ற வார்த்தையைப் பிரித்து பொருள் கொள்ளும் போது எரு-நகரம், சலேம்-அமைதி வாழ்வு என்பது எபிரெய மொழியின் பொருளாகும். முன்னொரு நாளில் எருசலேமின் நல்வாழ்வு என்பது இஸ்ரயேலரின் ஒட்டு மொத்தமான பாதுகாப்பையும் குடும்பக் கூட்டுவாழ்வின் மேன்மையையும் குறிப்பதாகக் கருதப்பட்டது. எனினும் திருப்பாடல் 128:5-6 வசனங்களில் சீயோனிலிருந்து ஆசி வழங்கி எருசலேமின் நல்வாழ்வைக் காண்பித்த கடவுளின் செய்கைகளை இஸ்ரயேலர்கள் அனுபவித்தும் நன்றி கெட்டவர்களாய் தடுமாறினர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் யோசுவா தன்னை முன் நிறுத்தியது மட்டுமல்ல தன் குடும்பத்தையும் மாதிரியாக முன்நிறுத்தித் தைரியமாகப் பேசினார். தானும் தன் குடும்பமும் கடவுளை மறந்துவிடவில்லை எனத் தன் குடும்பத்தின் அங்கத்தினர்களை, தடுமாறி நிற்கும் மக்கள் முன் மாதிரியாகக் காண்பித்தல் எத்தனை சிறப்பானது!

யோசுவா தனது குடும்பத்தை முன்மாதிரியாய் முன்நிறுத்தியவுடன் கூடியிருந்த அனைவரது உள்ளங்களும் உடைந்தது. தங்கள் தவறுகளை உணர்ந்து கொண்டவர்களாய் நாங்களும் ஆண்டவருக்கு ஊழியம் புரிவோம் என்றார்கள் (யோசு.24:18). கடவுளுக்காய் நம் குடும்பங்கள் சான்றுபகரும்போது அநேக குடும்பங்களை இறைவனுக்குச் சான்றுபகர உருவாக்க முடியும்.

### 3. தயாபரரில் பக்தி கொள்ளும் யோசுவா - "ஆண்டவருக்கே" (யோசு.24:15b)

குடும்ப மகிழ்ச்சியின் தொடர்ச்சிக்கு அடித்தளம் உண்மையான இறைப்பக்தியாகும் என்பதை யோசுவா ஆணித்தரமாகக் கூறுகிறார். ஏனெனில் விண்ணுலகிலும் மண்ணுலகிலுமுள்ள ஒவ்வொரு குடும்பமும் நல்ல குடும்பமாக விளங்கக் காரணமாயிருப்பவர் கடவுள் என்பதை யோசுவா தன் வாழ்வில் உணர்ந்து செயல்பட்டார். ஒருவர் தன் மனைவி, பிள்ளைகள் ஆகியோரின் பக்தி வைராக்கியமான வாழ்வினை நன்கு

அறிந்து செயல்பட்டாலொழிய 'ஆண்டவருக்கே பணி செய்வோம்' என உறுதியாகச் சொல்ல முடியாதது. யோசுவா தன் குடும்பத்தின் இறைப்பக்தியில் மிகக் கவனமாக கரிசனை உடையவராக இருந்தார் என்பதனை அவரது வார்த்தைகள் (Statement) தெளிவுப்படுத்துகின்றன. உரோமைப் படைவீரனான கொர்நேலியு தம் வீட்டார் அனைவருடனும் கடவுளுக்கு அஞ்சி நடந்தார் (திப.10:1,2). அக்குடும்பத்தில் நல்லுறவும், கருத்தில் இசைவும், மகிழ்ச்சியின் பகிர்வும், இறையாசியும் செழித்திருக்கும். சீடர்கள் கடிந்து கொண்டாலும் தம் குழந்தைகள் இறையாசி பெற வேண்டும் (மத்.15:27) என சிரமத்தையும் பாராது ஆசிக்காக காத்து நின்றது போன்ற மனப்போங்கு நம் குடும்பத்தில் இருந்தால் அது பக்தி வாழ்வுக்கு அதிக உரமிடும்.

இறைப்பக்தியை திருமறை வழியாகவும் ஆலயத் தொழுகை வழியாகவும் பக்தியுள்ள மனிதர்கள் வழியாகவும் பெறுகிறோம் (இ.ச.6:6). திருமறையை மனதில் பதித்து பிள்ளைகளுக்குப் போதிக்கும் போது பிள்ளைகளின் பக்தி வளர்ச்சியோடு நினைவாற்றலும் வளருகிறது. ஒவ்வொரு வளர்ச்சியிலும் பக்தியின் பிரதிபலனை நாம் காணலாம். குழந்தைகளின் உள்ளத்தில் பதிகின்ற பக்தி வாழ்வை யாராலும் பறிக்க இயலாது. குடும்பத்தில் காணப்படும் நடைமுறைகள், தீர்மானங்கள், உணவருந்தும் முறை, பொருளாதார நிலைப்பாடு, குடும்பஜெபம், பாடல், தியானம் என அனைத்தும் சுத்தபக்தியின் அடையாளங்களாகும். இவைகளால் குடும்பங்கள் வேர் கொள்ளுதல் அவசியம், பக்தியை வளர்க்க நல்லவைகளைச் சிந்தித்தல், நல்லவைகளைப் பேசுதல், ஆலயத்தொழுகை போன்றவை முக்கியமானவையாகும். இறை பயமும், இறைப்பக்தியும் வாழ்வில் இருந்தாலும் இழப்புகளும் இன்னல்களும் குடும்பவாழ்வில் வருவது சகஜம் (லூக்.10:38-42). எனினும் கடவுளில் கொண்டுள்ள பற்றும் பாசமும் நம்மைவழி விலகிப் போகாதபடி மாதிரி வாழ்வுக்குக் காத்து நடத்தும்.

இறைவன் நமக்குத் தந்துள்ள குடும்ப வாழ்வுக்காய் நன்றி செலுத்துவோம். குடும்பத்தில் நாம் எப்படி வாழ்கின்றோமோ அதன் அடிப்படையில்தான் நம் மகிழ்ச்சியும் நமது குடும்பத்தின் மகிழ்ச்சியும் அமைகிறது என உணர்ந்து, மாதிரியாய் வாழத் தீர்மானிப்போம். யோசுவா தன் மாதிரியான வாழ்வு மூலம் சுட்டிக் காட்டும் தன்மைகளை வாழ்வில் கடைப்பிடித்துச் செயல்படும்போது அது நம்மைப் பக்திக்கு நேராய் வழிநடத்தும்.

அருள்திரு. P. **ராஜா ஜெயசிங்**



**31-12-2014** *ஆண்டு நிறைவுத் தொழுகை*

# ஆண்டவரிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்

**TRUST IN THE LORD**

விப. 33 : 12-23 Iதெச 5 : 23 - 28
திபா. 136:1-9, 23-26 லூக். 12 : 22 - 31

***"என் கையால் உன்னை மூடி மறைப்பேன்."*** *விப. 33 : 22*

**இறைவேண்டல் : என்றென்றும் வழிநடத்தும் கடவுளே, அனைத்து படைப்பிற்கும் ஆதாரமானவரே எமது காலங்கள் உமது கரத்தில் உள்ளன. வாழ்வின் அனைத்து நெருக்கடியான நிலைகளிலும் உயர்வான உம் ஆசிகளை தினமும் எங்கள் வாழ்வில் அனுபவிக்க வாய்ப்பருளினீர். எங்கள் நம்பிக்கையினை முழுமையாய் உம்மிர் வைத்து வாழ்வு தொடரவும், நிலைவாழ்வுக்கு ஆயத்தப்படவும் எம்மை வலுப்படுத்த என்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை செய்யும் இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். ஆமென்.**

இறை வார்த்தை கிறிஸ்தவ நம்பிக்கையின் ஆதாரம். அதிகாரப்பூர்வமான அளவுகோல். நம்பிக்கையின் ஏணி. மோசே இறைவனிடத்திலே வைத்த ஆழமான நம்பிக்கையினால் இறை மகிமையைக் காண விரும்பினார். இஸ்ரவேல் மக்களுக்காக இறைவன் பயன்படுத்திய பாத்திரம் மோசே. திருச்சட்டங்கள் மோசே மூலம் மானுடச் சமுதாயத்திற்கு தரப்பட்டது. இஸ்ரவேலின் விடுதலைப் பயணத்தில் அடுத்த நாள் என்ன நேரிடும் என்று மோசேக்குத் தெரியாது. முழுமையான இறை நம்பிக்கையில் வேரூன்றி நின்றதனால் கடவுள் அவரைப் பயன்படுத்தினார். புதிய ஆண்டில் பிரவேசிக்க இருக்கும் நாம் கடவுள் செய்த கிருபைகளை நினைத்து நன்றி சொல்வது அவசியம். தடம்புரண்ட நேரங்கள் தத்தளித்த தருணங்கள், பின்வாங்கின சந்தர்ப்பங்கள் இவற்றை சரி செய்து புதிய ஆண்டில் அடியெடுத்து வைப்போம். மோசேக்கு, "என் கரத்தினால் உன்னை மூடுவேன்" என்ற வாக்குதத்தத்தைக் கொடுத்து தைரியப்படுத்தினதைப் போல புதிய ஆண்டில் பிரவேசிக்கும் நமக்கு கடவுளின் கரம் எப்படிப்பட்டது என்பதைச் சிந்திப்போம்.

### 1. படைத்த கரம் :

கடவுளின் கரம் அழிக்கும் கரம் அல்ல. உருவாக்கும் கரம். எல்லாம் நல்லது என்று கண்ட கடவுள் மனிதனைத் தம் சாயலால் படைத்து

நடுவில் பயந்து, கவலை கொண்டு, சோர்ந்து போய் விடுகின்றோம். மிதினியானியர்களின் நெருக்கடியால் வாழ்வா? சாவா? என்ற போராட்டம். ஆண்டவரை நோக்கி அபயமிட்டனர். ஆண்டவர் உடன் நின்று நடத்துகின்றார்.

விசுவாசமே நமது ஆயுதம் அதைப் பிடித்துக் கொள்வோம். 'ஏனெனில் கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும்; உலகை வெல்வது நம் நம்பிக்கையே'. (1 யோ 5:4)

நமக்கு ஜெயத்தைத் தரும் இறைவன் நம் அருகில் உண்டு. அவர் நம்மை அலைகளை கடந்து செல்ல நமக்கு உதவுவார்.

## 2. ஆழங்களில் அமைதி

கடலின் ஆழமான இடங்களில் தான் அதிகம் மீன் கிடைக்கும், கடலின் ஆழமான பகுதியில் தான் கப்பல் பயணிக்கும் கடலின் பகுதியில் தான் விலை உயர்ந்த முத்துக்களும் மறைந்திருக்கும்.

அலைகளின் நடுவில் அமைதியை அருளிய ஆண்டவர் கிதியோனிடம் ஆழத்திற்குச் செல் என்கின்றார். கிதியோனின் உள்ளத்தில் மிதியானியர் என்ற ஆழத்தைப் பார்த்து உள்ளத்தில் கேள்விகள், பயம் புகுந்துவிடுகின்றன. நானா இதைச் செய்ய வேண்டும் எப்படி இது? நடைமுறையில் சாத்தியம் தானா? என்று சிந்திக்கின்றார்.

ஆண்டவரே ஏன் இத்தனை சோதனைகள்? ஏன் கைவிட்டுவிட்டீர்? (நீ.த. 6 : 13) எவ்வழியில் நான் இஸ்ரயேலை விடுவிப்பேன்! இதோ மனாசேயிலேயே நலிவுற்று இருப்பது என் குடும்பம் என் தந்தை வீட்டிலேயே நான் தான் சிறியவன் என்றார். (நீ.த. 6 : 15)

தயங்கி நிற்கின்றான் கிதியோன் மோசே தயங்கி நின்றதைப் போன்று நிற்கின்றான் (வி.ப 4:10) எரேமியா நான் சிறுபிள்ளை என்று தயங்கியதை போன்று தயங்கி நிற்கின்றார் கிதியோன் (ஏரே. 1 : 6)

ஆண்டவர் அவரைப் பார்த்துக் கூறுகின்றார்

வலிமை மிக்க வீரனே! ஆண்டவர் உன்னோடு இருக்கிறார் என்றார். ( நீ.த. 3 : 16)

இறைவன் அழகான ஆடைகளை நமக்குப் பரிசாகத் தருவதில்லை, பஞ்சையும், நூலையும் கொடுப்பார், நாம் தான் நூற்று ஆடை செய்ய வேண்டும். கிதியோனிடம் நீ வலிமையற்றவனல்ல வலிமையுள்ளவன் என்று நீ ஆழத்தில் பயணித்தால் வெற்றி உனதே என்று நடத்துகின்றார்.





வைரத்தின் பிறப்பு நீண்ட பொறுமைக்குப் பின்பே நம் கரங்களில் வருகின்றது. நிலத்தின் அடியிலுள்ள Carbon என்ற மூலமே தனது பொறுமையால் வைரமாகப் பிறக்கின்றது. நிலத்தின் அடியிலுள்ள மரங்களின் கரி (Graphite) பூமிக்கடியிலிருந்தே எரிந்து பூமியினாலும் அழுத்தப்பட்டு இறுதியாக வைரமாக மாறுகின்றது. இது நீண்டகாலப் பொறுமையின் வெளிப்பாடு.

சகரியா தீர்க்கர் இறை நம்பிக்கையோடு, நீடிய பொறுமையோடு காத்திருக்கும் சிறைக்கைதிகளுக்கு விடுதலை மற்றும் இருமடங்கு நன்மைகள் உண்டு என்று வாக்குரைக்கின்றார். எலிசா, எலியாவிடம் "ஆவி இருமடங்காக" வேண்டுமென்று விண்ணப்பிக்கின்றார். இந்த விருப்பம் நிறைவேற மிகவும் பொறுமையோடே நீண்ட பயணம் மேற்கொள்கின்றார். கில்காலிருந்து பெத்தேலுக்கு, பெத்தேலிருந்து எரிகோ, எரிகோவிலிருந்து யோர்தான். (2 அரசர்: 2, 4, 6). நீண்ட பயணம் மேற்கொண்ட எலிசா, எலியா விண்ணுக்கு எடுத்துக் கொள்ளப்போகிறார் என்று அறிந்தும், தொடர்ந்து பொறுமையோடு பயணிக்கின்றார். எலிசா எலியாவை ஒவ்வொரு முறையும் தடை செய்கின்றார். நீ இங்கேயே தங்கியிரு (2 அரசர் 2:2, 4, 6) தடைகற்களைத் தாண்டி தன் விண்ணப்பத்தை வைக்கின்றார். ஆனால் இப்போதும் அவருடைய பொறுமை மறுபடியும் சோதிக்கப்படுகின்றது. நீ காண்பாயாகில் கிடைக்கும். (2 அரசர் 2:10). நீடிய பொறுமையோடு காத்திருந்த எலிசாவிற்கு எலியாவைக் கண்களால் காண இயலவில்லை. இறை நம்பிக்கையோடும், நீடிய பொறுமையோடும் காத்திருக்கும் இறை மக்களை ஆண்டவர் வெறுமையாக அனுப்புவதில்லை. எலியாவிடமிருந்து விழுந்த போர்வையால் ஆற்றலைப் பெறுகின்றார்.

அவருடைய கூக்குரல், ஏக்கம் நிறைந்த இருதயத்தை, கண்ணீரை (2அரசர் 2:12) இறைவன் கண்டார், நிறைவாக்கினார், ஆசியைப் பொழிந்தார்.

'பொறுமை ஆட்சியாளரையும் இணங்கச் செய்யும்' (நீதி 25:15)

'ஆண்டவர் முன் அமைதியுடன் காத்திரு' (தி.பா. 37:7)

இப்புதிய மாதத்தில் விசுவாசத்தோடு கடவுளை நோக்கி பொறுமையோடு காத்திருப்பவர்கள் இரு மடங்கு நன்மையைப் பெறுவார்கள். யோசேப்பு, வாழ்வில் தடைகள், கடினப்பாதைகள் வழியாக பொறுமையோடு பயணிக்கின்றார். ஆண்டவர் உயர்வுகளை அருளினார்.

## 2. உறுதியோடு நிலைத்திருத்தல்

எலிசா பொறுமையோடு பயணிக்கும் போது சந்திக்கும் தடைகள் மத்தியில் உறுதியோடு பயணிக்கின்றார். 'வாழும் ஆண்டவர் மேல்

ஆணை! உம் உயிர்மேலும் ஆணை! நான் உம்மைவிட்டுப் பிரியமாட்டேன் என்றார். (2 அரசர் 2 : 2, 4, 6)'. இத்தகைய உறுதியான நிலைப்பாடு ஆண்டவரின் ஆசியைப் பெற்றுக் கொள்ள வழிநடத்துகின்றது. உறுதியான நிலைப்பாட்டோடு பயணித்த எலிசாவிற்கு கிடைத்ததோ சாதாரண போர்வை. ஆனால் ஆண்டவரைப்பற்றிக் கொண்டவர்களின் வாழ்வில் சாதாரணமும் அசாதாரணமாகும். அசாதாரணம் சாதாரணமாகும். சாதாரண போர்வையால் இறையாற்றல் வெளிப்படுகின்றது.

நாம் பொறுமையோடும், உறுதியோடும், விசுவாசத்தோடும் பயணிக்க வேண்டியவர்கள் ஆனால் நாமோ கடினப்பாடுகள் நடுவில் வளைந்தும், நெளிந்தும், திரித்தும் பயணிப்பதுண்டு. நாணற்புற்களைப் போன்று காற்று அடிக்கும் திசையை நோக்கிப் பயணிப்பதுண்டு.

யாக்கோபு விசுவாச உறுதியோடு மன்றாடினார். 'நீர் எனக்கு ஆசிவழங்கினாலொழிய உம்மைப் போக விடேன். (தொ.நூ. 32 : 26)' இறை ஆசியைப் பெற்றுக் கொண்டார். ஓசேயா இறைவாக்கினர் கடவுளோடு போராடி, கண்ணீர் சிந்தி அவர் அருளைப் பெற்றார். (ஓசே 12 : 4) என்று குறிப்பிடுகின்றார்.

யோபு, வாழ்வில் சந்தித்த பாடுகளின் நடுவிலும் பொறுமையோடு, விசுவாச உறுதியோடும் பயணித்தார். வாழ்வில் இரண்டு மடங்கு நன்மைகளைப் பெற்றுக்கொண்டார். (யோபு 42 : 10).

மணவாளனின் வருகைக்கு ஆயத்தத்தோடும் பொறுமையோடும், விசுவாச உறுதியோடும் நின்றவர்கள் மகிழ்ச்சியில் பங்கு பெற்றார்கள். (மத். 25 : 10).

ஆம், புதிய மாதத்தில் இறை நம்பிக்கையோடு, பொறுமையோடு இறைவனில் நிலைத்திருப்போம். 'அவமானத்திற்கு பதிலாக இருமடங்கு நன்மை அடைவீர்கள் (எசா 61:7)' என்று வாக்குரைத்த இறைவனின் கரத்தைப் பற்றிக்கொள்வோம்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**





பயிர்களை அழித்தனர், உணவை இழந்தனர், உயிரினங்களையும் இழந்தனர். (நீ.த. 6:4-5).

இஸ்ரயேலர் மீது ஒவ்வொரு திசைகளிலுமிருந்து அலைகள் பாய்ந்தது, கண்ணீரையே பரிசாகப் பெற்றனர். ஏன் இந்த அவல நிலை? என்று இறைவனிடம் முறையிட்டனர். மிதியானியரிடம் மிகவும் சிறுமையுற்ற இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிட்டனர். (நீ.த. 6:6)

கெட்ட குடியே கெடும் பட்ட காலிலே படும், எரிகிற நெருப்பிலே எண்ணெய் ஊற்றுவது போன்ற நிலை, வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போன்ற நிலை.

கிதியோன் அந்த வேதனையின் உச்சத்தை வெளிப்படுத்தும் போது "ஆண்டவர் எம்மோடு இருக்கிறார் என்றால் ஏன் இவையெல்லாம் எமக்கு நேரிடுகின்றன?... அவரது வியத்தகு செயல்களெல்லாம் எங்கே? இப்பொழுது ஏன் ஆண்டவர் எம்மை இப்படிக் கைவிட்டுவிட்டார்?" (நீ.த. 6:13)

இத்தனை அலைகள் நடுவிலும் அமைதி அருளும் ஆண்டவர் உடனிருக்கின்றார். கரம் பிடித்து நடத்துவேன் என்று வாக்கு அளிக்கின்றார்.

இறைவாக்கினரை அனுப்பி அமைதிக்கு நேராக நடத்துகின்றார். ஆயத்தப்படுத்துகின்றார். தூதரை அனுப்பி அமைதியின் கருவியாக கிதியோனைச் செயல்படத் தூண்டுகின்றார்.

இன்றும் அதே இறைவன் நம்மையும் நடத்துவேன் என்று வாக்கு அருளுகின்றார். நம்முடைய பிரச்சனைகளை விட ஆண்டவர் பெரியவர் அவரிடம் செல்லுவோம். ஓயாத அலைகளின் நடுவிலும் அவர் நம்மை நடத்துவார்.

செங்கடல் முன்னே! பார்வோன் படைகள் பின்னே! ஆண்டவர் கைவிடவில்லை. (யாத். 14:14) அலைகளின் நடுவில் நடந்து செல்ல பாதையை ஏற்படுத்துகின்றார்.

கோலியாத் முன்னே! சவுலும் படைகளும் பயந்து சென்றனர் பின்னே!. தாவீது ஆண்டவரின் திருப்பெயரால் முன் சென்றார். ஆண்டவர் கைவிடவில்லை. (1 சாமு 17:11, 45)

கோலியாத் என்னும் அலையைத் தாண்டி பயணிக்க வழி நடத்துகின்றார்.

தலைக்கு மேல் வெள்ளம் வந்துவிட்டது இனிமேல் சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன? என்ற மனநிலையினால் அலைகளின்

**01-04-2014** 

# அமைதி அருளும் இறைவன்

நீ.த. 6 : 11-16

*‘அங்கே ஆண்டவருக்கு ஒரு பலிபீடம் கட்டி எழுப்பினார் அதை நலம் நல்கும் ஆண்டவர் என அழைத்தார்.’ (நீ.த. 6:24)*

1793-ஆம் ஆண்டு கல்கத்தாவிலுள்ள, செராம்பூரில் அடியெடுத்து வைத்த அருட்பணியாளர் வில்லியம் கேரி தன் தாய்நாட்டிற்குத் திரும்பிச் சென்றதே இல்லை. அருட்பணியை அரும்பாடுகளுடன் செவ்வனே செய்தார். அலைகள் போன்ற பிரச்சனைகளும், பாடுகளும் இவர் வாழ்வில் இணைந்தே நின்றன. தன் அருமை மனைவி மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்டார். குழந்தையும் சுகவீனத்தில் இறந்து போனது. சோதனைகள் சாதனைகளாக மாறியது. வங்காள மொழியில் திருமறையை மொழிபெயர்த்து வெளியிட்டார். ஏறத்தாழ 40-க்கும் அதிகமான மொழிகளில் திருமறை வெளிவரக் காரணமானார்.

அலைகள் போன்ற பிரச்சனைகள் நடுவில் அமைதி அருளும் இறைவனின் கரத்தைப்பற்றிக் கொண்டார்.

### 1. அலைகள் நடுவில் அமைதி

அலைகள் கடற்கரையில் ஆக்ரோஷமாக எழும்பிக் கொண்டிருந்தது. ஆயினும் அலைகளின் இரைச்சலின் நடுவிலும், ஆக்ரோஷத்தின் நடுவிலும் மிகவும் இலகுவாக படகைச் செலுத்தினார் மீனவர் ஒருவர்.

அலைகள் போன்ற பிரச்சனைகள் சூழும் போது நாம் மனம் பதறுகின்றோம். தடுமாறுகின்றோம். இஸ்ரயேலர் மீது மிதியானியர் என்ற அலைகள் மோதின போது அவர்கள் தடுமாறுகின்றார்கள். தங்கள் வாழ்வாதாரங்களையும், உயிரையும் காப்பாற்றிக் கொள்ள ஓடி ஒளிகின்றனர்.

தங்களைக் காத்துக் கொள்வதற்காக
மலைப்பிளவுகளையும், குகைகளையும்
கோட்டைகளையும் தங்கள் பதுங்கிடமாக
அமைத்துக் கொண்டனர். (நீ.த. 6 : 2).



**01-03-2014** 

# தேவைகளை நிறைவேற்றும் இறைவன்

தொ.நூ. 22 : 7-14

*‘“யாவேயிரே” என்று பெயரிட்டார்.... ஆண்டவர் பார்த்துக் கொள்வார்....’ (தொ.நூ. 22 : 14)*

வேதநாயகம் சாஸ்திரியார் திருப்பணியில் தன்னிடம் இருக்கும் பணத்தைப் பிறருக்குத் தாராளமாய்ச் செலவு செய்பவர். ஏழைகளுக்கு நிறைவாகக் கொடுத்தாலும், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தவர். நிறைவாக, நன்கொடைகள் வரும் பொழுது உடன் எழுத்தாளர்கள், பாடகர்கள், மளிகைக்கடை முதலியவற்றுக்குரிய கடன்களைக் கொடுத்துவிட்டு மனைவியின் கையில் இரண்டு, மூன்று நாள் தேவைகளுக்கான பணத்தை மட்டும் கொடுப்பார். குடும்பத்தினர் மற்றும் முப்பது பேருக்கும் குறையாத உணவளிக்கும் பெரும் பொறுப்பைப் பெற்ற சாஸ்திரியாரின் மனைவி வரோதயம்மாள், பிள்ளைக் குட்டிகள் இருக்கிறதே, கொஞ்சம் நெல், அரிசியாகிலும் வாங்கி வைக்க ஏதாகிலும் கூடக் கொடுங்கள் என்றார். அதற்கு அவர் பானையிலே அரிசி வைத்திருந்தால் பராபரன் பேரிலிருக்கும் நம்பிக்கைக் குறைந்து விடும். நாம் இப்போது கவலைப்படத் தேவையில்லை. நாளைக்கும் அவர் இருக்கிறார். அவர் நம்மை நடத்துவார் பட்டினியே போடமாட்டார் என்றார். இச்சூழலை நம்முடைய கீர்த்தனைகளில் 294 சிந்தனைபடாதே நெஞ்சமே என்ற பாடல் பிறக்கக் காரணமானது. ஆபிரகாம் தேவைகளை நிறைவேற்றும் ஆண்டவர் உடனுண்டு என்பதை வாழ்வில் எவ்வாறு சொந்தமாக்கினார் என்பதைத் தியானிப்போம்.

### 1. இறை நம்பிக்கையோடு பயணம்

ஆபிரகாம் இறை வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து பயணத்தை ஆரம்பிக்கின்றார். இந்தப் பயணத்தில் ஆபிரகாமுக்கு திசைக்காட்டியாக இறைவன் முன் செல்கின்றார். இதுவரை நல்ல சாலைகள் வழியாக அழைத்துச் சென்ற இறைவன் இப்போது கரடு முரடான பாதைகள் வழியாக நடத்துகின்றார்.

ஆபிரகாமை இறைவன் மோரியா என்ற கடினப்பாதைகள் வழியாக அழைத்துச் செல்கின்றார். மலைப்பாங்கான பகுதிக்குச் செல் என்று கூறுகின்றார்.

மலைப்பாங்கான பாதை கரடு முரடானது, முட்கள் நிறைந்தது, உயர்வு தாழ்வு நிறைந்தது. இப்பாதையினோடே அழைத்துச் செல்லும்

இறைவன், ஆபிரகாமிடம் ஒரே மகனைப் பலியாக வேண்டுமென்கின்றார். ஆபிரகாம் கடினப்பாதைகளின் நடுவில் இறை நம்பிக்கையோடு பயணிக்கின்றார். ஆபிரகாம் ஆண்டவர் மீதுள்ள நம்பிக்கையை அழகாக வெளிப்படுத்துகின்றார். ஆபிரகாமின் வேலைக்காரர்களிடம் கூறுவதிலிருந்து நாம் புரிந்து கொள்ள முடியும்.

நீங்கள் கழுதையோடு இங்கேயே காத்திருங்கள்
நானும் பையனும் அவ்விடம் சென்று வழிபாடு
செய்தபின் உங்களிடம் திரும்பி வருவோம். (தொ.நூ. 22:5)

செல்லும் பயணமோ ஈசாக்கைப் பலியிட, இறைநம்பிக்கையில் வெளிப்படும் வார்த்தைகளோ 'திரும்பி வருவோம்' என்பதில் நிகழ் காலத்தையும், எதிர்காலத்தையும் உள்ளடக்கிய விசுவாசப் பார்வை வெளிப்படுகின்றது. மகனின் உள்ளத்தில் எழும்பும் கேள்விக்கு, ஆபிரகாமின் பதிலில் இறைவன் மீதுள்ள முழுமையான நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றார்.

"எரிபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே? என்று வினவினான். அதற்கு ஆபிரகாம் எரிபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பொறுத்தமட்டில் கடவுளே பார்த்துக் கொள்வார் மகனே என்றார்" (தொ.நூ. 22:7,8)

ஆபிரகாமின் உள்மனதில் ஒரு விசுவாசத் தெளிவு, கரை சேர்வேன் என்ற நம்பிக்கை வெளிப்படுகின்றது.

காலங்கள் இறைவனுடைய கரத்தில் உள்ளது.

அவரே என்னை அழைத்தார். அவர் என்னை நடத்துவார், அவர் பார்த்துக் கொள்வார் என்று இறைவன் மீது முழு நம்பிக்கையும் வைக்கின்றார்.

நடுக்கடலில் தத்தளித்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்த தந்தையையும் 15வயது நிரம்பிய மகனையும் மீட்டுக் கரை சேர்த்தனர். 15 வயது நிரம்பிய சிறுவனிடம் பத்திரிகையாளர்கள், நீ உயிரோடு கரை சேர்வேன் என்ற நம்பிக்கை உனக்கு இருந்ததா? என்று கேட்டபோது, சிறுவன் பதிலாக என் தந்தை என்னோடு இருக்கும் போது எனக்குப் பயமே இல்லை என்றார்.

அபிரகாம் இறைவன் கரத்தில் தன்னை முற்றிலும் அர்ப்பணிக்கின்றார். இறைவனை சார்ந்து செயல்படுகின்றார். இறை ஆற்றலை வாழ்வில் பெற்றுக் கொள்கின்றார்.

## 2. இறை ஆற்றலோடு தொடரும் பயணம்

இறை நம்பிக்கையோடு 'திரும்பி வருவோம்' என்ற உறுதியான விசுவாசப் பார்வையோடு பயணித்த ஆபிரகாம் இறை ஆற்றலைப் பெற்றுக் கொள்கின்றார். ஆண்டவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கின்றவர். எங்கும் ஆளுகை செய்கின்றவர், எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கின்றவர், என்னை அறிந்திருக்கின்றவர் என்னைக் கைவிடமாட்டார் என்ற விசுவாசப்





பார்வை ஆபிரகாம் வாழ்வில் அனுபவமாகின்றது. ஆகவே, ஆபிரகாம் இறைவனுக்கு "யாவேயிரே ஆண்டவர் பார்த்துக் கொள்வார்" (தொ.நூ. 22:14) என்று பெயரிடுகின்றார்.

ஆபிரகாமின் வாழ்வில் சோதனை என்னும் தீயில் விழுந்த போது மனவலிமை இழக்கவில்லை. மனவுறுதியைப் பெற்றுக் கொள்கின்றார். யாக்கோபு ஆக்கியோனின் வார்த்தைகளில் இதை நாம் புரிந்துக் கொள்ளலாம்.

உங்கள் நம்பிக்கை சோதிக்கப்படும் போது மனவுறுதி உண்டாகும் என்பது உங்களுக்குத் தெரியும். (யாக். 1:3)

சாதாரண இரும்பு துண்டு ஒன்றை கொல்லன் அதிக சூடேற்றிய நெருப்பில் இட்டார். சுத்தியலால் ஓங்கி பல முறை அடித்தார். பின்பும் நெருப்பிலிட்டுச் சூடேற்றினார். சுத்தியலின் அடிகளையும், நெருப்பின் வலிகளையும் தாங்கிக் கொண்ட இரும்புத் துண்டு அழகிய மண்வெட்டியாக வடிவம் பெற்றது. அநேருக்கு பிரயோஜனமுள்ள ஒரு கருவியாக மாறியது. பேதுரு எழுதிய முதலாம் திருமுகத்தில் அழகாகக் குறிப்பிடுகின்றார்.

அழியக்கூடிய பொன் நெருப்பினால் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கையும் மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள். இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது அந்நம்பிக்கை உங்களுக்குப் புகழும் மாண்பும் பெருமையும் தருவதாய் விளங்கும். (1 பேதுரு 1 : 7)

ஆபிரகாம் இறைநம்பிக்கையோடு சென்ற மோரியா மலைப் பயணத்தில் ஆண்டவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கின்றவர், எல்லா தேவைகளையும் அதினதின் காலத்தில் நிறைவேற்றுகின்றவர் என்பதைச் சாட்சியாக அறிவிக்கின்றார்.

ஆம்! நாமும் இந்தப் புதிய மாதத்தில் நம்மைக் காண்கிற, தேவைகளை நிறைவேற்றுகின்ற ஆண்டவருடைய கரத்தில் நம்வாழ்வைத் தருவோம்.

மோரிய மலை என்ற கடினப்பாதையில் இறை நம்பிக்கையோடு சென்ற ஆபிரகாம் இறை ஆற்றலைப் பெற்று, தேவைகள் சந்திக்கப்பட்டு புதிய ஆற்றலோடு பயணிக்கின்றார். அன்று வனாந்தரப் பயணத்தில் மன்னாவைத் தந்தவர், பஞ்சகாலத்தில் காகத்தால் போஷித்தவர், வனாந்திரத்தில் திரளான ஜனங்களுக்கு உணவளித்தவர், இன்றும் நம்மோடு கூட உண்டு.

இறை நம்பிக்கையோடு பயணிப்போம். இறை ஆற்றலைப் பெற்றுக் கொள்வோம்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

நம்முடைய நம்பிக்கை, அரண், அடைக்கலம் அவரே. அவரைப் பற்றிக்கொள்வோம்.

ஆண்டவரை நம்பு; நலமானதைச் செய்; நாட்டிலேயே குடியிரு; நம்பத்தக்கவராய் வாழ்.............. உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு; அவரையே நம்பியிரு; அவரே உன் சார்பில் செயலாற்றுவார். (தி. பா. 37: 3 - 5) இறைவனில் நம்பிக்கை கொண்டு வாழ்வோர் துன்பத்திலும் வாழ்வு பெறுவர். 'ஆண்டவரில் நம்பிக்கை கொள்வோரை அவரது பேரன்பு சூழ்ந்து நிற்கும் (தி.பா 32:10)'

தானியேலும், நண்பர்களும் துன்பச் சூழலை இறைவன் துணையோடு எதிர் கொண்டனர் ஜெயம் பெற்றனர்!.

துன்பத் சூழல்கள் நடுவிலும் தொடக்கக்காலத் திருச்சபை ஒளிருகின்ற, வளருகின்ற திருச்சபையாக மாறியது. காரணம் இறைவனின் துணையையும், இறைவனையும் நம்பி வாழ்ந்தனர், உயர்வு பெற்றனர்!.

ஆம்! நாமும் உறுதுணையாக இறைவனைப் பற்றிக் கொள்வோம்.

## 2. வலிமையினால் வலுப்படுத்தும் இறைவன்

துன்பச்சூழலை எதிர் கொண்டு இறைவன் துணையோடு நாம் முன்னேறிச் சென்றாலும், சோதனை மேல் சோதனைகள் வேதனைகள் மேல் வேதனைகள் பெருகும் போது தளர்ந்து போய்விடுகின்றோம். ஏன் எனக்கு மாத்திரம் இத்தனை சோதனைகள் என்று தவிக்கின்றோம். 24.3.1820ல் நியுயார்க் நகரிலுள்ள புட்னம் கவுன் என்ற கிராமத்தில் பிறந்த பானி கிராஸ்பி, ஆறு மாதக் குழந்தையாக இருந்த போது தவறான சிகிட்சையால் கண்களில் பார்வையை இழந்தாலும், தன்னுடைய பெலவீனத்தில் பெலன் தரும் இறைவனுக்காக தன்னுடைய திறமைகளைப் பயன்படுத்தினார். பார்வையை இழந்ததால் தான் ஆன்மீகக் கண்களால் இயேசுவை தியானிக்க முடிகின்றது, தரிசிச்க முடிகின்றது, பாட முடிகின்றது என்றார். போற்றும், போற்றும் புண்ணியநாதரைப் போற்றும், இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன் என்று 9000த்திற்கும் அதிகமான பாடல்களை இயற்றியவர். Main extremity of weakness becomes God's oppurtunity to help மோசேயின் கைகள் தளர்ந்து போயின, வலுவிழந்து போயின, ஆயினும் கடவுளின் கிருபை தாங்கியது.

மோசேயின் கைகள் தளர்ந்து போயின. அப்போது அவர்கள் கல்லொன்றை அவருக்குப் பின்புறமாக வைக்க அவர் அதன் மேல் அமர்ந்தார். அவர் கைகளை ஆரோன் ஒரு பக்கமும், கூர் மறுபக்கமுமாகத் தாங்கிக் கொண்டனர். (வி. ப 17:12)





கடலின் கரையில் நீச்சல் அடிப்பது பாதுகாப்பானது. ஆனால் கடலுக்குள் சென்று நீச்சல் அடிப்பது சவாலானது. கிதியோனை ஆழத்திற்குப் பயணிக்க அழைக்கின்றார். வெற்றி சாதாரண சூழலில் வருவதில்லை, போராட்டங்களின் நடுவில் தான் பிறக்கின்றது என்று கிதியோனை அழைக்கின்றார்.

தயங்கினவர் இறைதிட்டத்தைப் புரிந்து கொண்டார். விசுவாச உறுதியோடு முன் சென்றார். ஆண்டவர் பானையையும், எக்காளத்தையும், தீப்பந்தத்தையும் பயன்படுத்தி வெற்றி கொடுக்கின்றார். அமைதியை அருளுகின்றார்.

நிச்சயமாக, விசுவாச உறுதியோடு அமைதி அருளும் ஆண்டவரின் கரத்தைப் பற்றிக் கொள்ளும் போது, புரண்டோடும் ஆறுகளை கடக்க வேண்டி வரலாம், வேகமாக ஓடும் ஆற்றின் நடுவே எதிர் நீச்சல் போட வேண்டி வரலாம், நெருப்பின் தழலோடு நடை பயில வேண்டி வரலாம். அமைதி அருளும் ஆண்டவர் நம்மோடு உண்டு அவர் நம்மை நடத்துவார். (எசா. 43: 2)

மிகப் பெரிய ஆற்றல்/ சக்தி உள்ள யானை, சிறிய சங்கிலியால், சிறிய குச்சியால் மட்டுப்படுத்தி /கட்டுப்படுத்தி வைக்கப்படுகின்றது. அது போல சில சூழல்களில் அலைகளையும், ஆழங்களையும் பார்த்து கலங்கிப் போய்விடுகின்றோம். விசுவாசமென்னும் ஆயுதம் நம்மிடம் உண்டு. அதைப் பயன்படுத்துவோம். இந்த நல்நாளில் அமைதி அருளும் ஆண்டவரின் கரத்தைப் பற்றிக் கொள்வோம். அவர் நம்மைக் கரம் பிடித்து நடத்துவார்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

# 01-05-2014

அருணோதயத் தொழுகை

# திசை காட்டும் இறைவன்

தொ.நூ. 16 : 9-16

*"...உன் வழி மரபினரை யாரும் எண்ண முடியாத அளவுக்குப் பெருகச் செய்வேன்."*

*தொநூ. 16 : 10*

புனித அகுஸ்தீன் என்பவர் தன்னுடைய இளமைப்பருவத்திலும், வாலிபப்பருவத்திலும் சிற்றின்பத்திலும், கேளிக்கையிலும், தீயபண்புகளிலும் நிறைந்து திசை மாறி பயணித்தவர். இவருடைய தாய் மோனிக்கா இவரை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சிகள் தோல்வியிலே முடிந்தன. இறுதியாக மோனிக்கா அவர்கள் இறைவனின் திருமுகத்தைக் கண்ணீரோடு நோக்கினார். இறைவனே திசையற்ற நிலையில் பயணிக்கும் என் மகனுக்கு திசைகாட்டும் என்று மன்றாடினார். ஒரு நாள் சிறுவன் ஒருவன் அகுஸ்தினிடம் திருமறையை எடுத்துப்படி என்றார். திருமறையில் உரோமையர் 13:12ஐ படித்தார். திசைகாட்டும் இறைவனின் கரத்தில் வாழ்வைத் தந்தார். திருச்சபைத் தந்தையர்களுள் சிறப்பான இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஆகாரின் வாழ்வில் திசைமாறி பயணிக்கின்ற போது திசைக்காட்டியாம் இறைவன், எப்படி திசைகாட்டுகின்றார் என்பதைத் தியானிப்போம்.

## 1. திசை மாறிய பயணம் :

கடலில் மீன்பிடிப்பதற்காக கன்னியாகுமரி கடலுக்குள் ஐந்து பேர் படகில் சென்றனர். நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இயந்திரம் பழுதாகி விடவே, காற்றின் வேகத்தை நம்பியே பயணிக்கத் தொடங்கினர். உணவின்றி, உறக்கமின்றி, மன அமைதியின்றி திசை மாறி பயணித்தவர்களின் படகு இறுதியில் குஜராத் மாநில எல்லையில் கரை சேர்ந்தது.

ஆகாரின் வாழ்விலும் பயணத்தின் போக்கு மாறிவிடுகின்றது. அடிமைப் பெண்ணாக தன் வாழ்வைத் தொடங்கியவரின் வாழ்க்கைப் பயணம் திசை மாறிவிடுகின்றது.





இஸ்ரயேல் ஜனங்களின் வனாந்திரப் பயணம் திருப்பங்களும், வேதனைகளும் நிறைந்த பயணமாகச் செல்லுகின்றது. ஒவ்வொரு சூழலைச் சந்திக்கும் போதும் முறுமுறுப்பு, ஏக்கம், கலக்கம், தவிப்பு வருகின்றன. சில சூழல்களில் இறைவனையே கேள்வி கேட்கின்றனர்.

இரபிதிமில் அமலேக்கியர் இஸ்ரயேலரைச் சூழ்ந்து நிற்கின்றனர். துன்பச் சூழலில் மோசே கலங்கிவிடவில்லை. இறை ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுகின்றார். துன்பச் சூழலில், தவிப்பின் நிலையில் இம்மானுவேலராம் இறைவன் நம்மோடு கூட உண்டு அவர் நம்மை நடத்துவார். துன்பச் சூழலை நாம் எதிர்கொள்ளுவோம் என்று அனைவரின் கரங்களையும் திடப்படுத்தினார்.

மோசே யோசுவாவை நோக்கி, "நம் சார்பில் தேவையான ஆள்களை தேர்ந்தெடு. நாளை நீ போய், அமலேக்கியரை எதிர்த்துப் போரிடு. நான் கடவுளின் கோலைக் கையில் பிடித்தவாறு குன்றின் உச்சியில் நின்று கொள்வேன்" என்றார். (வி.ப. 17:9)

மோசே இறைவனிடம் பரிந்து பேசுகின்றார். இறையாற்றலைப் பெற்றுக் கொள்கின்றார். இஸ்ரவேல் மக்களை ஆயத்தப்படுத்துகின்றார். வெற்றி நமதே என்று வெற்றிக்கான வழிமுறைகளை யோசுவாவிடம் கூறியவர். ஆரோன், கூர் என்பவர்களைத் துணையாக அழைத்துச் செல்லுகின்றார்.

தலைவலியும், பல்வலியும் வந்து விட்டாலே நாமும் நிலை குலைந்து நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் நிலை குலையச் செய்திடுவோம். இது மனிதப் பண்பு, ஆயினும் இறைப் பண்பு இறை ஆற்றல் நம்மோடு இருக்குமென்றால் நாம் எச்சூழலையும் எதிர் கொள்ள முடியும்.

கர்த்தர் நம் பட்சமாக இருக்கும் போது யார் நமக்கு எதிரக நிற்கமுடியும்? with God, Nothing is impossible ஆண்டவரே என் ஒளி; அவரே என் மீட்பு; யாருக்கு நான் அஞ்ச வேண்டும்? ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம் யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும்? (தி. பா 27:1) அவரே ஒளி, அவரே அடைக்கலம் அவர் கரத்தைப் பற்றிக் கொள்வோம்.

துன்பத்தழல்கள் சூழ்ந்த போது மோசே இறைவனை நோக்குகின்றார். இறைவன் துணை நமக்கு உண்டு என்று மக்களையும் திடப்படுத்துகின்றார்.

**01-07-2014** *அருணோதயத் தொழுகை*

# இன்னல்களில் உறுதுணையாகும் இறைவன்

வி.ப. 17 : 8-16

> *"மோசே பலிபீடம் ஒன்று கட்டி அதற்கு யாவேநிசீ என்று பெயரிட்டழைத்தார்."*
> *(வி.ப. 17:15)*

தாய்ப் பறவை தன் முட்டையினுள்ளிருந்து வெளி வந்த குஞ்சுகளுக்குத் தேவையான உணவை ஊட்டியது. குஞ்சுகள் வளர்ந்து பறக்கும் பருவம் அடைந்தன. தாய்ப்பறவை தன் கூரிய அலகினால் குஞ்சுகள் ஒவ்வொன்றையும் தூக்கி அநேகப் பாடுகளின் மத்தியிலும் அவைகளுக்குப் பறக்கக் கற்றுக் கொடுத்து வானில் மகிழ்ந்தாடச் செய்தது. ஆனால் ஒரேயொரு சிறிய குஞ்சோ இந்தப் பாடுகள் வேண்டாமென்றது. ஆயினும் தாய்ப்பறவை விடவில்லை வானில் பறக்கக் கற்றுக் கொடுத்தது. பலமுறை கீழே விழுந்தது, வலி தாங்க முடியாமல் ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய் என்று கதறியது. தாய்ப் பறவையே என்னைப் போலத் நீயும் வானில் பாடி ஆடி மகிழ வேண்டும், சத்துருவின் வாய்க்கு நீ தப்புவிக்கப்படவேண்டும், நான் உனக்குக் கற்றுத் தரும் பாடம் துன்பம் போல தோன்றினாலும் முடிவில் இன்ப நிலைக்கே என்றது. குஞ்சுப் பறவை பறக்கக் கற்றுக் கொள்ளும்போது, கீழே தவறி விழும் போது தன் முதுகினால் தாங்கியது. பயிற்றுவித்தது. பின்நாளில் குஞ்சுப் பறவை வானில் பறந்தது.

வாழ்வின் பயணத்தில் துன்பச் சூழலை நாம் சந்திக்கும் போதும் மனம் தளரும் போதும் நாம் கலங்க வேண்டாம், உறுதுணையாக இறைவன் நம்மோடு உண்டு.

## *1. துன்பத்தில் துணையாகும் இறைவன்*

துன்பச்சூழலை நாம் சந்திக்கும் போது யாராவது துணையாக நின்று நமக்கு உதவி செய்யமாட்டார்களா என்று ஏங்குகின்றோம். துன்பச் சூழல் தொடர்ந்து நம்மைப் பிடிக்கும் போது யார் என்னைத் தேற்றுவார்கள் என்று ஏங்குகின்றோம். நம்முடைய வாழ்வில் எப்படி துன்பச் சூழ்நிலைகள் மாறும் ? ஆறுதலும் சமாதானமும் எப்படி வரும்? என்று கேள்விகளோடு அமர்ந்திருக்கும் நேரங்கள் உண்டு. இழப்புகள், தோல்விகள், பிரிவுகள் வரும்போது எதிர்கால வாழ்வைக் குறித்த நம்பிக்கையின் நங்கூரங்கள் சிதைந்து நம் வாழ்வு முடிந்துவிடுமோ என்று அஞ்சுகின்றோம்.





ஆபிரகாமின் இல்லத்தில் அடிமைப்பெண்ணாக வாழும் ஆகாருக்கு சுயமாய்ச் சிந்திக்கும் ஆற்றல் இல்லை. அடிப்படை உரிமைகளான வீடு, உணவு, உறைவிடத்திற்குக் கூட எஜமானையே சார்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம். ஆகாரின் பணியை பவர் மொழியெர்ப்பு அடிமைப்பெண், பொது மொழிபெயர்ப்பு பணிப்பெண் என்று குறிப்பிடுகின்றது.

ஆகார் தன்னுடைய குடும்ப உறவுகளை விட்டு எகிப்திய குலத்தைவிட்டு தனிமை என்னும் சிறையில் வாழ்வை நடத்துகின்றார். எஜமானின் இல்லம் தூய்மை பெற குப்பைகளையும், எச்சில்களையும் ஏற்றுக் கொள்ளுகின்றார். எல்லாம் எதற்காக தன் ஒரு முழ வயிற்றுக்காகத் தான் இத்தனை போராட்டங்கள். இப்படியாக வாழ்வில் தனிமை, வெறுமையைச் சந்தித்தவரின் வாழ்க்கைப் பயணம் திசை மாறுகின்றது. மக்கட்பேறு இல்லாமல் பரிதவிக்கும் ஆபிரகாமின் வாழ்வில் துணை என்ற நிலையை அடைகின்றார். அடிமைப்பெண் வாழ்வினின்று துணை என்ற உயர்வைப் பெற்றுவிட்டார். அடிமையாய் வாழ்ந்தபோது பெற்ற மனநிறைவு, மகிழ்ச்சியை இப்போது இழந்து நிற்கின்றார். "இதற்குப் பின் சாராய் அவரைக் கொடுமைப்படுத்தினார். ஆகவே, ஆகார் சாராயிடமிருந்து தப்பி ஓடினார்". (தொ. நூ 16:6)

வசந்தகாலம் மறைந்து கோடைக்காலம் வருவது போன்று ஆகாரின் வாழ்விலும் அடிமைப்பெண் நிலையிலிருந்து மனைவி என்ற உயர்வுபெற்றும் வேதனைகள், பாடுகள், பாலைவனப் பயணத்தில் கானால் நீரோடைகளைப் பார்த்து உண்மையான நீரோடைகள் என்று நம்பி ஏமாற்றப்பட்டது போன்ற நிலை.

திசைமாறி பயணித்தும், திரும்பிய திசையெல்லாம் எதிர்காற்று, கொந்தளிப்பு ஏற்பட்டபோது சீடர்கள் அச்சமடைந்தது போன்ற நிலை.

உரிமைகள் இருந்தும் அதை அனுபவிக்க முடியவில்லை. உரிமைகளுக்காக குரல் எழுப்ப வாய்ப்பிருந்தும் மௌனமாக நிற்கும் நிலை. சுருங்கக் கூறினால் கண்களிருந்தும் காண இயலாதநிலை, வாயிருந்தும் பேச இயலாத நிலை, கை, கால்களிலிருந்தும் செயலாற்ற இயலாத நிலை.

ஆகாரின் வாழ்வில் பயணம் திசைமாறியதால் பாலை நிலத்தில் பயணிக்கின்றார் (தொ. நூ 16:7).

ஆம்! புதிய மாதத்தில் பயணத்தைத் தொடங்குகின்றோம், திசை

மாறி பயணிக்கும் நேரங்கள் உண்டு. திசை மாறி பயணித்து எந்த திசையில் இனிமேல் பயணிப்பது என்று மனம் பதறி நிற்கும் நேரங்களும் உண்டு. திசை மாறியப் பயணத்தில் திசை காட்டும் இறைவன் நம்மோடு உண்டு. அவர் கரத்தைப் பற்றி கொள்வோம்.

### 2. திசை காட்டும் இறைவன் :

நம்முடைய கரங்களில் தவழும் நவீன அலைபேசிகளில் திசை காட்டும் கருவி உள்ளது. இதைப் பயன்படுத்தி நாம் செல்லும் இடம், தூரம், சாலை வசதிகளை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

திசை மாறி பயணிக்கும் ஆகாருக்கு ஆண்டவர் திசை காட்டுகின்றார். ஆண்டவர் அவரின் பயணப் பாதை எது? எங்கே செல்ல வேண்டுமென்று திசை காட்டுகின்றார்.

அவர் அவளை நோக்கி, சாராயின் பணிப்பெண் ஆகார், நீ எங்கிருந்து வருகின்றாய்? எங்கே போகின்றாய்? என்று கேட்டார்

(தொ. நூ. 16:7)

வாழ்வின் கொடுமைகளை அனுபவித்து, இனிமேல் வாழ்வதில் அர்த்தமில்லையென்று வாழ்ந்தது போதும் என்ற மனநிலையில் பாலைவனத்தில் பயணத்தை ஆண்டவர் மாற்றுகின்றார்.

வாழும் நிகழ்காலத்தை தடுமாற்றத்தோடு எதிர்கொள்ளும் ஆகாருக்கு, காலங்கள் இறைவனின் கரத்தில் உள்ளது என்று கற்றுக்கொடுத்து நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நான் உன்னை நடத்துவேன் என்று ஆசி வழங்குகின்றார்.

ஆபிரகாமுக்குக் கொடுத்த அதே ஆசிர்வாதத்தை ஆகாரும், அவள் வம்சமும் சொந்தமாக்கிக் கொள்ளுகின்றது.

பின்பு ஆண்டவரின் தூதர் அவரிடம், ''உன் வழி மரபினரை யாரும் எண்ண முடியாத அளவுக்குப் பெருகச் செய்வேன்'' (தொ. நூல் 16:10, 17:20) என்கிறார்.

சீடர்கள் அக்கரைக்குச் செல்ல வேண்டும். படகில் பயணித்த போது எதிர்காற்று, பெரும் புயல் வீசிய போது கலங்கினார்கள். நம் வாழ்வு முடிந்து விடுமோ என்று அஞ்சினார்கள். போக வேண்டிய பயணப் பாதையின் திசை மாறிவிட்டதே என்று புலம்பினார்கள். திசை காட்டும் இறைவன் சரியான திசையில் பயணிக்க உதவுகின்றார். கரை சேர்க்கின்றார். (மாற். 4: 35 - 41)





சீமோன் பேதுரு மீன் பிடிக்கப் போகிறேன் (யோவா. 21:3) என்று திசை மாறி பயணிக்கின்றார். ஆண்டவர் திசை காட்டியாக நின்று புதிய திசையில் பயணிக்க உதவுகின்றார்.

ஆம் புதிய மாதத்தில் திசைகாட்டும் இறைவனின் கரத்தில் நம் வாழ்வைத் தருவோம். நாம் எப்படி பயணிக்க வேண்டுமென்று அவர் நம்மை நடத்துவார்.

இறைவனின் கரத்தில் தன்னைத் தந்ததால் ஆகாரின் பாலைவனப் பயணத்தில் வசந்தகாலம் பிறக்கின்றது. கண்ணீரின் வாழ்வு களிப்பாகின்றது. நிகழ்காலமும், எதிர்காலமும் உறுதி பெறுகின்றது. ஆகவே தான் என்னை காண்பவரை நானும் கண்டேன் என்று 'காண்கிற இறைவன் நீர்' என்று பெயரிடுகின்றார்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

இறைமகன் இயேசுவின் சிலுவைப்பாடுகள் மரணத்திற்கு பின்பு பூட்டிய அறைக்குள் ரோம அதிகாரத்திற்கு பயந்து கலங்கி நின்ற சீடர்களைப் பார்த்து உங்களுக்கு சமாதானம் என்றுரைத்த ஆண்டவர் நம்மோடு உண்டு. அவர் கரத்தைப் பற்றிக் கொள்வோம்.

**2. இறைவனோடு பயணியுங்கள் :**

ஆண்டவர் மோசேயிடம் இஸ்ரவேல் ஜனங்களை (வி.ப. 3:11) வழி நடத்தி விடுதலையின் பாதையில் நடத்த வேண்டுமென்று கூறும் போது மோசே தயங்குகின்றான். நான் யார்? இத்தகைய மிகப்பெரிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு என்று அச்சப்படுகின்றான். நான் நாவன்மை அற்றவன் (வி.ப 4:10) என்று கலங்குகின்றான். மோசே பணபெலம், ஆள்பலம், படைபலம் அற்ற நிலையில் எழும்பும் கேள்விகள் நியாயமானதே. ஆண்டவர் மோசேயின் பயத்தை அறிந்து கொண்டு தெளிவையும், தைரியத்தையும், தூரக்காட்சியின் தரிசனத்தையும் கொடுத்து திடப்படுத்துகின்றார்.

இறைமகன் இயேசுவின் பிறப்பில் செக்கரியாவின் பயத்தை அகற்றிய இறைவன் (லூக். 1:13) மரியாளின் பயத்தை மாற்றிய இறைவன் (லூக் 1:30), மேய்ப்பர்களின் பயத்தை மாற்றிய இறைவன் இன்றும் நம்மோடு உண்டு, சீடர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட பயத்தை மாற்றியவர் நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம் (யோவ 14:1) என் அமைதியையே உங்களுக்குத் தருகிறேன்...... நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம், மருள வேண்டாம் (யோவ 14:27) என்று நம்பிக்கையருளி வழிநடத்தியவர் நம்மோடு உண்டு. சிறுமந்தையான சீடர்களைத் திடப்படுத்தி உலகத்தைக் கலக்குகிறவர்களாக மாற்றிய ஆண்டவர் நம்மோடு உண்டு. ஆண்டவர் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார் (IIதீமோ 1:7)

இப்புதிய மாதத்தில் இறைவனைப் பற்றிக் கொள்வோம், சிறுமந்தையான காலேப்பையும், யோசுவாவையும் திடப்படுத்தியவர், தனி மனிதனாக நின்ற எலியாவிடம் ஏழாயிரம் பேர் உன்னோடு உண்டு என்றுரைத்தவர், ரோம அதிகாரத்தைக் கண்டு அஞ்சிய சீடர்களுக்கு சமாதானம் அருளியவர், மோசேயைத் திடப்படுத்தியவர் இன்றும் நம்மோடு வாழுகின்றார். ஆண்டவர் என் பக்கம் இருக்க நான் ஏன் அஞ்சவேண்டும்? மனிதர் எனக்கு எதிராக என்ன செய்யமுடியும்? (தி.பா 118:6) என்று இறைவனை நம்பி வாழ்ந்த பக்தனைப் போன்று நாமும் அவர் கரத்தைப் பற்றிக் கொள்வோம். அவர் நம் உள்ளத்தில் பயத்தை மாற்றி பலமும், அன்புமுள்ள தெளிந்த புத்தியை அருளுவார்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**





மோசேயின் அழைப்பில் ஆரோனை உடன் பயணிக்க வைத்த ஆண்டவர். அவரின் பெலவீனத்தில் உடனிருந்து ஆரோன் வாயிலாக உதவி செய்கின்றார். இது தான் இறைவனின் செயல். தளர்ந்து போன நிலையில் மனமடிவுற்ற நிலையில் இதயம் நொறுங்கிய நிலையில் யாராவது தேற்றமாட்டார்களா? என்று எங்கி நாம் கவலைப்பட வேண்டாம். அன்று மோசேயின் தளர்ந்த கைகளை திடப்படுத்தியவர் அவர் இன்றும் நம்மோடே கூட உண்டு.

இறைவன் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் கழுகுகள் போல்....உயரே செல்வர்..... களைப்படையார் சோர்வடையார் (எசா 40 : 31). அருட்பணியாளர் பவுல் அழகாகக் கூறுகின்றார். வலுவின்மையில் ஆண்டவரின் வல்லமை நிறைவாய் வெளிப்படும். (2 கொரி 12: 9, 10).

ஆம், நாம் எதிர்கொள்ளும் துன்பச்சூழலில், பெலவீனத்தில் நம்மை உடனின்று நடத்தும் இறைவனின் கரத்தைப் பிடித்துக் கொள்வோம். மோசே துன்பச் சூழலில் இறைவனை நோக்கினார், இறையாற்றலைப் பெற்றுக் கொண்டார்.

அன்று பசியோடு பரிதவித்த மக்களுக்கு உணவளித்தவர் நம்பிக்கையற்ற சூழலில் நடுக்கடலில் பவுலையும் உடன் பயணித்தவர்களையும் திடப்படுத்தியவர் (தி.ப 27: 20, 24) இன்றும் தளர்ந்து போன கைகளைத் திடப்படுத்துபவர் தள்ளாடும் முழங்கால்களை உதவிசெய்பவர் நம் உடன் உண்டு.

இப்புதிய மாதத்தில் துன்பத்தில் துணையாகும், பெலவீனத்தில் பெலன் தரும் இறைவனின் கரத்தைப் பற்றுவோம். 'யாவே நிசீ' 'கர்த்தர் நம் வெற்றிக் கொடி' நம்மோடு கூட உண்டு. அவர் நம்மை நடத்துவார்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

**01-08-2014**



# பாதை காட்டும் இறைவன்

எபி. 11 : 8-18

*"...தாம் எங்கே போக வேண்டும் என்று தெரியாதிருந்தும் அவர் புறப்பட்டுச் சென்றார்."*
*எபி. 11 : 8*

மனித வாழ்வில் பாதைகள் மிகவும் முக்கியமானவை. ஒற்றையடி பாதையானாலும், மாட்டு வண்டி செல்லும் பாதையானாலும், கனரக வாகனங்கள் செல்லும் பாதையானலும், பாதைகள் இல்லாவிடில் பயணம் இனிதாக அமையாது. இல்லங்கள், தொழில் நிலையங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள், அலுவலகங்கள் ஆகியன அமைப்பதற்கு நல்ல தரமான பாதைகள் உள்ள இடங்களைத் தெரிவு செய்வர். பாதைகள் மக்களை, மனங்களை ஒன்றிணைக்கின்றன. வேறுபாடுகளும் மறைந்து விடுகின்றன. ஆபிரகாமின் வாழ்க்கைப் பயணத்தில் இறைவன் எவ்வாறு அவரை நடத்தினார் என்பதைத் தியானிப்போம்.

## *1. பாதையற்ற பயணத்தில் பாதை காட்டுபவர்:*

தாம் எங்கே போகவேண்டும் என்று தெரியாதிருந்தும் அவர் புறப்பட்டுச் சென்றார் (எபி. 11:8)

ஆபிரகாமிடம் ஆண்டவர் செல் என்று கூறுகின்றார். ஆபிரகாம் கீழ்ப்படிகின்றார். தம் பயணத்தை ஆரம்பிக்கின்றார். எங்கே செல்ல வேண்டும்? எப்படிச் செல்லவேண்டும்? எதற்கு செல்லவேண்டும்? ஏன் செல்ல வேண்டும்? யாரிடம் செல்ல வேண்டும்? என்று கேள்விகளை எழுப்பாமல், கீழ்ப்படிதலோடு பயணம் செல்கின்றார். பாதைகள் எதுவென்று தெரியாதிருந்தும் தன்னை அழைத்த இறைவனைத் தெளிவாக புரிந்தும், தெரிந்தும் வைத்திருந்தார். ஆகவே தான் பாதைகளில் ஆண்டவரின் பாதுகாப்பையும், பராமரிப்பையும் பெற்றுக் கொள்கின்றார். ஆண்டவரை நம்பி விசுவாசத்தோடு பயணித்தவர் தம் சொந்த ஊரையும், உறவுகளையும் தியாகம் செய்கின்றார், ஆண்டவரைப் பற்றிக் கொள்ளுகின்றார். ஆண்டவருடைய திருச்சித்தம் இதுவென்று மிகுந்த பொறுமையோடு ஏற்றுக் கொள்ளுகின்றார். விளைவு விசுவாசிகளின் தந்தையாகவும், முற்பிதாக்களில் முன்னோடியாகவும் உயர்த்தப்படுகின்றார்.

பாதைகளை அறியாதிருந்தும், தன்னை அழைத்த ஆண்டவர் எப்படிப்பட்டவர் என்பதை அறிந்திருந்தால் தன் பயணத்தைத் துவக்கிய ஆண்டவர் உடனுண்டு அவர் நடத்துவார் என்று முழுமையாக நம்பினார்.



**01-10-2014**



# பயத்தை மாற்றும் இறைவன்

லூக். 12 : 22-32

*"சிறு மந்தையாகிய நீங்கள் அஞ்சவேண்டாம்." லூக். 12 : 32*

பயம் அல்லது அச்சம் என்ற உணர்வின் உச்சத்தில் பயணிக்காத மனிதர்கள் எவரும் நிச்சயமாக இவ்வுலகில் இருக்கமாட்டார்கள். சிலருக்கு நிகழ்கால வாழ்வின் சூழல்களை எண்ணி எதிர்காலம் எப்படி அமையுமோ என்ற பயம். சிலருக்கு நடக்காதவற்றை எண்ணியும், இப்படி நடக்கும், அப்படி நடக்கும் என்று காரணமில்லாத பயங்களும் தொற்றிக் கொள்ளும், நம்மை சுற்றி நடக்கும் விபத்துக்கள், அநீதிகள், வன்முறைகளைப் பார்த்து கலங்குபவர்களும் உண்டு. தீமைகள், அநீதிகள், குற்றங்கள் செய்துவிட்டு பிடிபட்டுவிடுமோவென்று பயப்படுபவர்களும் உண்டு. இத்திருமறைப் பகுதியில் இறைமகன் இயேசு கவலையினால், விசுவாசத்தில் குன்றி எப்படி வாழுவோமென்று நம்பிக்கையற்று நின்ற சீடர்களைப் பார்த்து கூறுகின்றார் சிறுமந்தையாகிய நீங்கள் அஞ்ச வேண்டாம் (லூக் 12:32)

## *1. இறைவனைப் பற்றிக்கொள்ளுங்கள் :*

சிறு மந்தையாகிய சீடர்களைப் பார்த்து இறைமகள் இயேசு கூறியது நீங்கள் பயம் கொள்ளவேண்டாம், இறைவனைப் பற்றிக் கொள்ளுங்கள். இறையரசு உங்களுடையதே என்றார்.

சாதகமற்ற சூழ்நிலைகளால் நம் உள்ளத்தில் பயம் குடிகொள்ளும். கானான் தேசத்தை வேவு பார்க்கச் சென்றவர்கள் சாதகமற்ற சூழல்களைப் பார்த்து பயத்தை வெளிப்படுத்துகின்றனர். பெரும்பான்மையான வேவுக்காரர்களோ நாம் அம்மக்களுக்கு எதிராக போகமுடியாது; ஏனெனில் அவர்கள் நம்மிலும் வலிமை மிக்கவர்கள் என்றனர். (எண். 13:31) ஆனால் சிறுமந்தையாகிய யோசுவாவும், காலேப்பும் விசுவாசக் கண்களால் சாதகமற்ற சூழலைத் தாண்டி சிந்திக்கின்றார். ஆண்டவரால் எல்லாம் கூடுமென்று திடமாய் நம்பினர். 'ஆண்டவருக்கு நம்மேல் நல்விருப்பு ஏற்பட்டால் பாலும், தேனும் வழிந்தோடும் இந்த நாட்டினுள் அவர் நம்மை அழைத்துச் சென்று அதை நமக்குத் தருவார்'. (எண் 14:8)

சாதகமற்ற சூழலால் எலியா தீர்க்கன் தனிமை உணர்வோடு வாழ்ந்து பயனில்லை என்று கதறும் போது ஆண்டவர் பயத்தை மாற்றி, தைரியப்படுத்துகின்றார். இன்றும் அதே ஆண்டவர் நம்மோடு கூட உண்டு. அவர் கரத்தைப் பற்றிக் கொள்வோம், அவர் நம்மை நடத்துவார்.

அவயவங்களும் கூடபாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூட சந்தோஷப்படும். இறை சித்தம், இறை விருப்பம் எது என்பதை உணர நம் வாழ்வை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். ஏனென்றால் கிறிஸ்து அதன் அதன் காரியங்களை நேர்த்தியாய் அமைத்துள்ளார். மேற்சொன்ன வசனத்தில் நாம் புரிந்துகொள்ளும் விதத்தில் நம் சரீர உறுப்புகள் சிறப்பாக ஒன்றுக்கொன்று இசைவாய் செயல்படுகிறது. இதுபோல நம் வாழ்வின் இன்றியமையாத தேவைகளை இறைவன் பூர்த்தி செய்வார் என்று இறைசித்தம் உணர்ந்து கிறிஸ்துவுக்குரியவர்களாக வாழ்வோம்.

அருள்திரு. S. **டேவிட் ஜோசப்ராஜ்**





புதிய மாதத்தில் பயணத்தைத் தொடங்கியுள்ள நாம், நம்முடைய பயணத்தில் இனிமையான பொழுதுகள், தனிமையின் அனுபவங்கள், வெள்ளம் சூழ்ந்த அனுபவங்கள் என்று வாழ்க்கைப் பயணம் எந்தச் சூழ்நிலையில் எப்படிப் பயணிக்கும் என்பதை நம்மால் கணிக்க இயலாது. ஆனால் உள்ளங்கையில் நம்மை வரைந்து வைத்திருக்கும் ஆண்டவரைப் பற்றிக் கொள்வோமானால் பாதைகள் தெரியாத நிலையிலும் அவர் பாதை காட்டுவார். நம் வாழ்வின் பயணத்தை அவரிடம் தருவோம். பொறுமையோடு அவரின் கரத்தைப் பற்றிக் கொள்வோம். அவர் நம்மை நடத்துவார்.

### *2. பாதை மாறிய பயணத்தில் பாதை காட்டுபவர்:*

ஆபிரகாம் சோதிக்கப்பட்ட போது ஈசாக்கைப் பலியிடத் துணிந்தது நம்பிக்கையினால்தான் (எபி 11:17)

ஆபிரகாமின் பயணத்தின் போக்கு மாறிக் கொண்டே செல்கின்றது. ஆண்டவரை நம்பி வாக்களிப்பட்ட நாட்டை நோக்கிப் பயணிக்கின்றார், குழந்தை செல்வம் கிடைக்குமா? என்று ஐயப்பட்ட வேளையில் ஆண்டவர் ஈவாக ஈசாக்கை அருளுகின்றார். பயணத்தில் முன்னேறிய போதும், மோரியா மலை சோதனையில், கரடு முரடான மலைப் பயணத்திலும், பயணத்தின் போக்கு மாறிவிட்ட நிலையிலும் விசுவாசத்தோடு பயணிக்கின்றார். ஆபிரகாம் ஆண்டவரை முழுமையாகப் பற்றிக் கொண்டார், ஆண்டவருடைய சித்தம் இதுதான் என்று புரிந்து கொண்டார், பாதைகள் மாறிய பயணத்தில் ஆண்டவர் உடனின்று ஆலோசனை கொடுத்து வழி நடத்துகின்றார்.

அக்கரைக்கு செல்ல பயணித்த பயணத்தின் போக்கு மாறுகின்றது, பெரும் புயல் வீசுகின்றது, அலைகள் படகின் மேல் மோதுகின்றது, நிகழ்காலமும், எதிர்காலமும் அசைக்கப்படுகின்றது, பயமும், திகிலும் மனதை ஆட்கொள்ளுகின்றது. சாகப்போகிறோமே (மாற். 4:38) என்று கவலை கொள்ளும் நிலையில் பயணத்தின் போக்கு மாறிவிட்ட நிலையில் சீடர்கள் ஆண்டவரை நோக்கிய போது, உடனிருந்து நல் ஆலோசனை நல்கி கரை சேர்க்கின்றார் (மாற். 4: 38,39)

புதிய மாதத்தில் நம்முடைய பயணத்தில் போக்குகள் ஒரு வேளை மாறலாம். சந்தோஷத்தை நோக்கிய பயணம், சஞ்சலத்தில் முடியலாம், தென்றலை நோக்கிய பயணம், எதிர்பாராத புயலால் திசைகள் மாறலாம். ஆனால் நம்முடைய வாழ்வின் பாதைகளை (Route Map) அறிந்தவர் நம்மோடு கூட உண்டு. அவருடைய கரத்தைப் பற்றிக் கொள்வோம். அவர் நம்மை நடத்துவார் பாதை காட்டி கரை சேர்ப்பார்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

**01-09-2014** — *அருணோதயத் தொழுகை*

# கிறிஸ்துவுக்குரியவர்கள்

1கொரி. 12 : 12-27

> *"நீங்கள் கிறிஸ்துவின் உடல், ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புகள்."*
> *1கொரி. 12 : 27*

கொரிந்து பட்டண திருச்சபை உருவான நாள் முதல், அதன் வளர்ந்துவரும் நிலையில் அநேக முரண்பட்ட கருத்துக்கள், போதனைகள், திருச்சபையின் ஆவிக்குரிய வளர்ச்சியை தடைபண்ணுவதாக அமைந்தது. இதைக் கண்டித்து, கிறிஸ்துவை முன்நிறுத்தி ஒன்றான இசைந்த இறைமக்களாக வாழ இத்திருமுகத்தை எழுதுகிறார். 1கொரி. 12 : 12-ல் "எப்படியெனில் சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப் பிரகாரமாக கிறிஸ்துவும் இருக்கிறார்" கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள், மொழியினால், கலாச்சாரத்தினால், இனத்தினால், பல்வேறு பின்னணியினால், அவயவங்கள் அநேகம் போன்று காணப்பட்டாலும், அனைவரும் கிறிஸ்துவுக்குரியவர்கள் என்பதை வலியுறுத்துகிறார். 1கொரி. 12 : 13-ல் நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக திருமுழுக்கு பெற்றுள்ளபடியால் அனைவரும் கிறிஸ்துவுக்குரியவர்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள இவ் அதிகாரத்தில் எழுதுகிறார். கிறிஸ்துவிடம் சீஷர்கள் "நம்மை பின்பற்றாதவன், உமது நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவதை கண்டோம்." அதற்கு கிறிஸ்து கூறியது, மாற். 9 : 41 நீங்கள் கிறிஸ்துவினுடையவர் களாயிருக்கிறபடியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்க கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற் போவதில்லை. ஆகவே கிறிஸ்துவுக்குரியவர்கள், கிறிஸ்துவின் நாமத்தின்படி செயல்படும்போது எண்ணற்ற இறை நன்மைகளால் நிரப்பப்படுவார்கள். நமது, செயல், வாழ்வின் வழியாக பிறரும் கிறிஸ்துவுக்குரியவர்களாக வழிகாட்டியாக, உப்பாக, ஒளியாக செயல்படுவோம்.





## 1. இறை வரங்களை நாடுங்கள் :

1கொரி. 12 : 31 இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள் என்று பவுல் கிறிஸ்துவுக்குள் வாழ்வுபெறும் இறை மக்களுக்கு அறிவுரை வழங்கினார். மிக முக்கிய இறை வரமாக 'அன்பை' மையப்படுத்துகிறார். அன்பு இல்லை என்றால் மனித வாழ்வில் முழுமை இல்லை. 1கொரி. 13:1-ல் நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். ஆகவே அன்பு என்ற இறை வரத்தை நாட பவுல் வலியுறுத்துகிறார். மூன்று இறை வரங்களை குறிப்பிடுகிறார். விசுவாசம், நம்பிக்கை, அன்பு இவைகளில் அன்பே பெரிது. ஆகவே கிறிஸ்துவுக்குரியவர்கள் வாழும் சூழலில் இறைவரங்களை நாட வேண்டும். இறைவரங்களை கிறிஸ்துவுக்குள் வாழ்வதினால் பெறலாம். பணத்தினால், நம் உலக பொருள், முயற்சியினால் பெற இயலாது (அப். 8 : 20).

## 2. இறையரசைச் சுதந்தரிப்போம் :

கிறிஸ்துவுக்குரியவர்கள், இறைவரங்களை நாடி தங்களுடையதாக்கி வாழும்போது இறை அரசின் தகவுகளை உலகில் வெளிப்படுத்துவர். பவுல், கொரிந்து திருச்சபை பின்னணியம், அவர்கள் சார்ந்த தீய வாழ்வு இன்றும் உலகின் மக்கள் கிறிஸ்துவுக்குரியவர்களாக அல்லாது உலகுக்குரியவர்களாக வாழ்கின்றனர். இத்தகையோர் இறை அரசை சுதந்தரிப்பதில்லை என்கிறார். 1 கொரி. 6 : 9,10 அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா ? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிகாராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுய புணர்ச்சிக்காரரும், ஆண் புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும், இறை அரசை சுதந்தரிப்பதில்லை. ஆகவே நாம் நம் வாழ்வு கிறிஸ்து தங்கும் ஆலயம், நாம் கிறிஸ்துவுக்குரியவர்கள் என்பதை உணர்ந்து இறை அரசின் தன்மைகளைப் பின்பற்றி வாழ்வோம்.

## 3. இறை சித்தத்திற்கு - ஒப்புக்கொடுப்போம் :

1கொரி. 12 : 25,26 - ல் சரீரத்தில் பிரிவினையுண்டாயிராமல் அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தை கொடுத்து, இப்படி சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா

விசுவாசிப்போர் தெய்வீக வாழ்வை அனுபவிப்பர். இயேசுவை விசுவாசிப்பவர்கள் கடவுளோடு ஐக்கியப்படுகின்றனர். அதனால் நிலை வாழ்வைப் பெறுகின்றனர். நிலை வாழ்வின் அருட்கொடை மீட்பு. இயேசு கிறிஸ்து உலகத்தில் வந்தது உலகைத் தண்டிப்பதற்கல்ல, பாதுகாப்பதற்கே. ஆகையால். கிறிஸ்தவர்களாகிய நாமும் அவர் போல் உலகையும், உலகத்தவர்களையும் பாதுகாக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

### 2. ஒப்புரவாக்குதல் (Reconciliation) :

ஒப்புரவாக்குதல் என்பது வேற்றுமை அகற்றிச் சமரசப்படுத்துதல். சண்டையிட்டுப் பிரிந்து நிற்கும் இருவரை இணைக்கும் பாலமாகத் திகழ்வது ஒப்புரவாக்குதல் எனப்படுகிறது. அந்த இருவரும் முன்னே எதிரிகளாய் இருந்தவர்கள். ஒருவரையொருவர் எதிர்த்தவர்கள். இவர்கள் ஒப்புரவாக வேண்டுமெனில் அவர்களுடைய பகை நீங்க வேண்டும். பகை நீங்க வேண்டுமென்றால் சண்டைக்கான காரணம் கண்டறியப்பட்டு அகற்றப்பட வேண்டும். வார்த்தைகள் காரணமாயின் மன்னிப்புக் கேட்பதும், கடன்பட்டிருப்பின் அதைத் தீர்த்துக்கொள்வதும் அவசியம். நீதி நிலை நாட்டப்பட்டாலன்றி அவர்களிடையே ஏற்படும் ஒப்புரவாகுதல் என்பது நல்ல உறவை ஏற்படுத்தாமல் பகைமையைப் போக்க மட்டும் பயன்படுத்துவதாகிவிடும். எனவே நீதியோடு ஏற்படும் ஒப்புரவாகுதலில் நிறைவாழ்வு உண்டு. திருப்பாடல் 85:10இல் பேரன்பும் உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும்; நீதியும் நிறைவாழ்வும் ஒன்றையொன்று முத்தமிடும் எனச் சொல்லப்பட்டுள்ளது.

பாவம் செய்கிறவர்கள் கடவுளின் விரோதிகள் எனத் திருவிவிலியம் காட்டுகிறது. கொலோ 1:21 முன்பு நீங்கள் இறைவனோடு உறவற்றவர்களாய் இருந்தீர்கள்; அவரைப் பகைக்கும் உள்ளம் உடையோராய்த் தீச்செயல்கள் புரிந்து வந்தீர்கள் எனப் பவுலார் கூறுகிறார். தீச்செயல்களால் பாவியானவர்களின் பாவம் நீங்க இயேசு சிலுவையில் மரித்து கடவுளுக்கும், மனிதருக்குமிடையே ஒப்புரவை ஏற்படுத்தினார். மனிதர் கடவுளிடம் திரும்பி வருவதற்கான பாதையை ஏற்படுத்தினார். மனிதரின் பாவம் பகைமைக்குக் காரணமாயிற்று. எனவே கடவுளுக்கும். மனிதருக்குமிடையே ஒப்புரவு அவசியமாயிற்று. 2 கொரி 5:20இல், கடவுளோடு நாம் ஒப்புரவாகுவதால் கடவுளின் கோபத்திற்கு நாம் தப்புகிறோம் கடவுளோடு நம்மை ஒப்புரவாக்குபவர் இயேசு கிறிஸ்து.



**02-11-2014** அருணோதயத் தொழுகை

# கண்ணீரைத் துடைக்கும் இறைவன்

2 அர. 20 : 1-11

***"...உன் கண்ணீரையும் கண்டேன். இதோ உன்னைக் குணமாக்குவேன்."***
*2 அர. 20 : 5*

புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் நாம் ஆண்டவர் நம்மோடு உண்டு என்பதை எசேக்கியா அரசரின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்ளலாம். யூதாவை ஆளுகை செய்த அரசர்களுள் சிறந்த முறையில் ஆட்சி செய்தவர் எசேக்கியா. இவர் 29 ஆண்டுகாலம் நன்முறையில் ஆட்சி செய்தவர் (2 அரசர் 18:2). இவர் மேடைகளை அகற்றி வெண்கலப் பாம்பை உடைத்து, ஆலயத்தின் தொழுகைகளையும், மக்களையும் ஒருங்கிணைத்து சிறப்பாகத் தொழுகை நடத்தியவர் (2 அரசர் 18:2-12; 18:22). இத்தனை சிறப்புகளோடு ஆளுகை செய்தவர் சுகவீனமடைகின்றார். இவரிடன் ஏசாயா இறைவாக்கினர் நீர் மரித்துப் போவீர் (2 அர. 20:1) என்றார். இச்சூழலில் எசேக்கியா என்ன செய்தார். இறைவன் அவருக்கு எங்ஙனம் பதிலுரைத்தார் என்பதைத் தியானிப்போம்.

### 1. கண்ணீரைக் காணும் ஆண்டவர்:

"உன் மன்றாட்டைக் கேட்டேன், உன் கண்ணீரையும் கண்டேன்" ( 2அரசர் 20:5) இவ்வுலகில் நாம் குழந்தையாக தவழும்போது பெற்றோரின் துணை, கல்விச்சாலைக்கு செல்லும்போது, நண்பர்கள், ஆசிரியர்கள் துணை, வேலைக்கு செல்லும் போது உயரதிகாரிகள் உடன் உழைப்பவர்கள் துணை, குடும்பத்தில்கணவனுக்கு மனைவி, மனைவிக்கு கணவன் துணை, இவ்வட்டத்திற்கு எல்லாம்மேல் நண்பர்கள், உறவினர்கள் என்ற துணை. இவ்வுலகில் பிறப்பு முதல் எல்லாவற்றிற்கும் ஏதாவது ஒரு துணையை பெற்றுக் கொள்ளும் நாம் மரணத்தை மட்டும் யாருடைய துணையுமின்றி சந்திக்க வேண்டும். இங்கே எசேக்கியா அரசன் பணபலம், ஆள்பலம், படைபலம் பெற்றவன், மரணத்தின் விழிம்பைத் தனியாகச் சந்திக்கின்றான், தெளிவாகச் சிந்திக்கின்றான், அழுகை நிறைந்த உள்ளத்தோடு

இறைவனின் முகத்தை நோக்குகின்றான், கண்ணீரை இறைவனிடம் ஊற்றுகின்றான், ஆண்டவருடைய சமுகத்தை நோக்கி கதறிய போது ஆண்டவர் கண்ணீரைக் கண்டார். (2 அரசர் 20:3,5) ஆகாரின் கண்ணீரின் குரலைக் கண்டவர் (தொநூ 21:16 19) அன்னாளின் அழுகையை கண்டவர் (1 சாமு 1: 8,10), நெகேமியாவின் அழுகையின் குரலைக் கேட்டவர் (நெகே. 1:4) குழந்தை மோசேயின் அழுகுரலை கேட்டவர் (விப. 2:6) பேதுருவின் அழு குரலை ஏற்றுக் கொண்டவர் (மத் 26:75), யவீரு இல்லத்தில் அழுகுரலை நிறுத்தியவர் (மாற் 5: 39), துயருற்று அழுது கொண்டிருந்தவர்களின் நம்பிக்கையைத் தூண்டியவர் (மாற் 16:10), மார்த்தாள், மரியாள் இல்லத்தில் அழுகையைக் கண்டு கலங்கியவர் இன்றும் நம்மோடு உண்டு. நம்மைக் காண்கின்ற, கண்ணீரைப் காண்கின்ற இறைவனின் திருக்கரத்தில் நம் வாழ்வைத் தருவோம்.

## 2. கண்ணீரைத் துடைக்கும் ஆண்டவர்

எசேக்கியா அரசன் கண்ணீரை இறைவனின் பாதத்தில் ஊற்றியபோது கிடைக்கும் பெலன் 15 ஆண்டுகாலம் ஆயுசு நீட்டிக்கப்படுகின்றது. மரணம் என்ற செய்தியைக் கொண்டு சென்ற ஏசாயா, ஆண்டவர் உன் கண்ணீரைக் கண்டார் என்ற செய்தியைக் கொண்டு செல்கின்றார், எளிய மருத்துவ முறையில் நீடிய ஆயுளையும், சுகத்தையும் பரிசாகக் கொடுக்கின்றார். நினிவே பட்டணத்தில் ஜனங்கள் உபவாசமிருந்து மூன்று நாள் மன்றாடினார்கள், ஆண்டவருடைய கரத்தினின்று பாதுகாப்பையும், வாழ்வையும் பெற்றுக் கொண்டனர் (யோனா 3:10). ஆகாரின் வனாந்திர யாத்திரையில் கண்ணீரை துடைத்து வழிநடத்தியவர் (அன்னாளின் கண்ணீரைத் துடைத்து களிப்பாய் மாற்றியவர் மார்த்தாள், மரியாளின் இல்லத்தில் அழுகின்றவர்களோடு நின்று அழுது கண்ணீரைத் துடைத்தவர் நம்மோடு உண்டு. உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள். ஏனென்றால், அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார் (1 பேது 5:7)

இப்புதிய மாதத்தில் காணும் கடவுள், கண்ணீரைத் துடைப்பவர் நம்மோடு உண்டு. அவருடைய பாதத்தில் கண்ணீரை ஊற்றுவோம். அவர் நம் கண்ணீரைக் களிப்பாய் மாற்றுவார்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**





T- இது தூய அந்தோணியாரின் சிலுவை

X- இது தூய அந்திரேயாவின் சிலுவை

+- இந்தச் சிலுவையில் இயேசு அடிக்கப்பட்டார்

இயேசு சிலுவையில் அறையப்படுதல் என்பது கடவுள் மனிதரிடம் காட்டும் அளவற்ற அன்பை வெளிப்படுத்துவதாகும். ஒருவருக்காகத் தன் உயிரைக்கொடுத்தல் அன்பின் உச்சநிலையாகும். மக்களின் பாவத்திலிருந்து அவர்களை விடுவிக்கவே இயேசு குற்றவாளியாக மரித்தார். பவுலார் கூறுகையில், கலா 3:13இல் மரத்தில் தொங்க விடப்பட்டோர் என்று எழுதியுள்ளவாறு நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார் என்கிறார்.

இஸ்ரவேல் மக்களின் வனாந்தரப் பயணத்தின் போது அவர்கள் பொறுமையிழந்து மோசேக்கு எதிராகப் பேசினர். அப்போது கொள்ளிவாய்ப் பாம்புகள் பலரைக் கடித்து அவர்கள் மாண்டனர். அப்போது மக்கள் மோசேயிடம் வேண்டிய போது, அவர் வெண்கலத்தில் கொள்ளிவாய்ப் பாம்பொன்றைச் செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்தினார். பாம்பினால் கடிக்கப்பட்டோரில் இதைப் பார்த்தவர்கள் உயிர் பிழைக்கும்படி செய்தார். அவர்கள் அந்த வெண்கலப் பாம்பை நோக்கிப் பார்த்ததினால் அல்ல கடவுள் பக்கமாய்த் திரும்பி குணமாக்கும் கடவுளின் வார்த்தைகளையும் அவரின் இரக்கங்களையும் நம்பியதால் அவர்கள் மரணத்தினின்று காக்கப்பட்டனர்.

இயேசுவில் விசுவாசம் வைப்போருக்கு நிலை வாழ்வு உண்டு. அதாவது பூமியின் கடைசி நாளில் மகிழ்ந்திருப்பர். அந்த வாழ்வுக்கு முடிவிராது. அந்த வாழ்வே மரணத்திற்குப் பின் உள்ள வாழ்வாக அறியப்படுகிறது. அது அழிவுக்குரிய வாழ்வல்ல. கடவுள் இயேசு கிறிஸ்துவின் மூலம் தம்மை உலகில் இணைத்துக் கொண்டார். உலகோரின் பாவம் போக்க இயேசு பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டார். இயேசுவில் விசுவாசம் கொள்ளாதோர் இப்போதும், முடிவிலும் தங்கள் வாழ்வை இழந்து விடுவர். கடவுள் தம் மகன் இயேசுவை உலகில் தந்ததால் மனுகுலத்துக்கு நிலை வாழ்வு உண்டு. அவரில் பற்றுதலாயிருந்து அவர் வழியில் செயல்படுவோருக்கு அழிவில்லை. இயேசுவை விசுவாசியாதவர்களுக்கும், அவர் காட்டிய நற்செயலை செய்யாதவர்களுக்கும் பயனில்லை.

# தவக்கால அருளுரைகள்

05-03-2014 சாம்பல் புதன்

## சிலுவை : ஒப்புரவாக்குதலின் சின்னம்
**THE CROSS : THE SIGN OF RECONCILIATION**

மீக்கா 2: 1 - 13 1 தெச. 4: 1 - 12
சங். 51 யோவா. 3 : 13- 21

*"...தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்."*
*யோவா. 3 : 17*

### *முகவுரை :*

கிறிஸ்தவர்களின் சின்னம் சிலுவை. ஆண்டவர் இயேசுவின் காலத்திற்கு முன்பே சிலுவை இருந்தது. இயேசு சிலுவை மரத்தில் அடித்துக் கொல்லப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டு, உயிருடன் எழுந்ததால் அச்சிலுவை இயேசு கிறிஸ்துவில் பற்றுதலாயிருப்போருக்கு வெற்றியின் சின்னமாயிற்று. ஆகையால் பவுலார், கலா 6:14ல் நானோ........... பாராட்டமாட்டேன் என்றார். ஒப்புரவு என்னும் வார்த்தை பொதுவாக நல்லுறவை ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படாமல் பகைமையைப் போக்கவே எடுத்தாளப்படுகிறது. சண்டையிட்டுப் பிரிந்து நிற்கும் இருவரை இணைக்கும் பாலமாக திகழுவது ஒப்புரவு. ஆகையால் இவ்வாண்டின் தவக்கால ஆரம்ப நாளிலேயே சிலுவை, ஒப்புரவு என்பவைகளைத் தெளிவாக அறிந்து கொள்ளுவதால் சிலுவையினால் ஒப்புரவாக்கப்படுவதின் உண்மை நிலைகளை நாம் புரிந்து கொண்டு நம் ஆன்மிகப் பயணத்தைத் தொடர முடியும்.

### *1. சிலுவை* (The cross)

இச. 21 : 23ல் சிலுவை மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர் என்று சொல்லப்பட்டது. அதை நம்பினோரும் பலருண்டு. சிலுவை தண்டனை கொடுப்பதற்கான மரமாய் அறியப்பட்டது. சிலுவையிலறையும் பழக்கம் Phoenicians, Carthaginiansமத்தியில் இருந்து நாளடைவில் ரோமருக்குள்ளும் பரவியது. சிலுவையில் அடிமைகளும், Provincials இழிவாகக் கருதப்பட்ட கிரிமினல் குற்றவாளிகளும் அறையப்பட்டனர். சில நேரங்களில் ரோமக் குடிமக்களும் சிலுவையில் தண்டிக்கப்பட்டனர். மூவகை சிலுவை மரங்கள் பயன்படுத்தப்பட்டன.



01-12-2014 அருணோதயத் தொழுகை

## நேர்மறை எண்ணங்களை அருளும் இறைவன்

எண். 13 : 25-33

*"நாம் அதை எளிதில் வென்றுவிட முடியும் என்றார்."* (எண். 13 : 31)

ஆப்பிரிக்க தேசமொன்றில் காலணிகள் விற்பனை நிலையம் அமைக்க ஒரு நிறுவனம் முடிவு செய்தது. அதற்கு முன்னோட்டமாக இரண்டு பிரதிநிதிகளை ஆய்வு செய்ய அனுப்பியது. இருவரும் ஆய்வு செய்து அறிக்கையைச் சமர்ப்பித்தனர். ஒருவரின் அறிக்கை இந்த தேசத்தில் ஒருவரும் காலணிகள் அணிவதில்லை, எனவே நாம் விற்பனை நிலையம் அமைப்பது வீணான செயல் என்றார். மற்றொருவரோ இந்த தேசத்தில் ஒருவரும் காலணிகள் அணியாதபடியால் நாம் விற்பனை நிலையம் அமைத்தால் வியாபாரம் நன்றாக இருக்குமென்றார். திருமறைப் பகுதியில் காலேப், யோசுவா உட்பட 12 பேர் ஒற்றர்களாக கானான் சென்று கொடுக்கும் அறிக்கையின் படி சூழ்நிலைகளை மையமாக வைத்து கலங்குகின்ற பத்து பேரின் அறிக்கையையும், ஆண்டவரை மையமாக வைத்து விசுவாசத்தோடு செயல்படும் இருவரின் அறிக்கையும் அடிப்படையாகக் கொண்டு தியானிப்போம்.

### *1. சூழ்நிலைகளைப் பார்த்துக் கலங்குபவர்கள் :*

மனித வாழ்வில் பாடுகள், துன்பத் தழல்கள், பிரச்சனைகள், நம்மைச் சுற்றி வரும் போது சாதகமற்ற சூழல்களைப் பார்த்து நாம் இதயம் நொறுங்குண்டு நம்பிக்கையிழப்பதுண்டு. என்னிடம் பணம் என்ற சூழ்நிலை, கல்வி என்ற சூழ்நிலை, உறவினர்கள் என்ற சூழ்நிலை சரியாக இருந்தால் எல்லாம் சரியாக அமைந்திருக்குமே என்ற சூழல்களைப் பார்த்து புலம்புவர்கள் நம்மிடையே உண்டு. சாதகமற்ற அசாதாரண சூழல்களை கண்டு எதிர்மறை (Negative) எண்ணங்களை மனதில் கொண்டு கலங்கி நிற்பவர்களும் உண்டு. இங்கே பத்துபேர் கொடுக்கும் அறிக்கை முழு ஜனக்கூட்டத்தின் நம்பிக்கையையும் சிதறடித்துவிடுகின்றது. நாம் அம்மக்களுக்கு எதிராக போகமுடியாது; ஏனெனில் அவர்கள் நம்மிலும் வலிமை மிக்கவர்கள் என்றனர். நாங்கள் கண்ட மனிதர் அனைவரும்

நெடிய உருவத்தினர். நாங்கள் வெட்டுக்கிளிகள் போன்றிருந்தோம். (எண் 13 : 31-33). இங்கு கூறப்படும் அறிக்கை மனித உணர்ச்சிகளின் அடிப்படையில் கொடுக்கும் அறிக்கை. இந்த அறிக்கையை கேட்ட மக்கள் கூட்டம் அழுது புலம்புகின்றனர் (எண் 14:1) எகிப்தின் வாழ்வே நலம் என்று எண்ணுகின்றனர் (14:2) தலைவர்களைக் கல்லால் எறிய உத்தேசிக்கின்றனர் (14:9) நிகழ்காலமும் தொலைந்துவிட்டது எதிர்காலமும் சிதைந்துவிட்டதென்று கலங்கினார்கள்.

நம்முடைய வாழ்விலும் இத்தகைய அனுபவங்கள் உண்டு. இழப்புகள், தோல்விகள், நஷ்டங்கள், ஏமாற்றங்கள், எதிர்பாராத உறவுச் சீர்குலைவுகள் ஏற்படும் போது இனி வாழ்ந்து பிரயோஜனமில்லையென்று எதிர்மறை எண்ணங்களோடு நாம் இருந்ததுண்டு. சாதகமற்ற சூழ்நிலைகளையும், பிரச்சனைகளையும் நம் முன்னிறுத்துவதால் பயந்து கலங்குகின்றோம். லாசருவின் இழப்பின் நடுவில் இறைமகன் இயேசுவை பார்த்து மரியாள் கேள்வி எழுப்புவது சூழ்நிலைகளால் கலங்கி நிற்கும் அனுபவம் தான். அண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான் என்றார் (யோவா 11:32) நகோமி வாழ்வில் சந்தித்த வேதனைகள் நடுவில் தன்னை கசப்பு என்று அழைக்கக் கூறினாள் (ரூத் 1:20).

### 2. இறைவனை நோக்கிச் செயல்படுபவர்கள்:

முழு ஜனக்கூட்டமும் எதிர்மறை எண்ணத்தோடு நிற்கும் போது, யோசுவாவும், காலேப்பும் ஆண்டவரை மையமாக வைத்து சிந்திக்கின்றனர். விசுவாசத்தோடு ஆண்டவரை நோக்கிப் பார்க்கின்றனர். ஆண்டவரால் கூடாத காரியம் ஒன்று உண்டோ என்று முழுமையாக நம்பி செயல்படுகின்றனர். நாம் எளிதில் வென்றுவிட முடியாது (எண். 13:30) ஆண்டவருக்கு நல்விருப்பு ஏற்பட்டால்... அவர் நம்மை அழைத்துச் சென்று அதை நமக்குத் தருவார். ஆண்டவர் நம்மோடு இருக்கிறார்; அவர்களுக்கு அஞ்ச வேண்டாம் (எண். 14 : 8,9) என்றனர். யோசுவாவும், காலேப்பும் விசுவாசப் பார்வையோடு பிரச்சனைகளைப் பார்க்கின்றனர். இம்மட்டும் கரம் பிடித்து உடனின்று நடத்தின இம்மானுவேலராம் ஆண்டவர் தொடர்ந்து நடத்துவார் என்று ஆண்டவரை நம்பிச் செயல்படுகின்றனர். சூழ்நிலைகளை அல்ல இறைவனைப் பார்த்தனர்.

எதிர்மறை எண்ணம் அகன்று நேர்மறை எண்ணம் பிறக்கின்றது. அந்தப் பார்வை அவர்களுக்கு தெளிவு, தைரியம், நம்பிக்கையைத் தருகின்றது. இப்புதிய மாதத்தில் நம்முடைய வாழ்வின் பயணத்தில் நமக்கு





எதிரிடையான சவால்கள், போராட்டங்கள், கரடுமுரடான பாதைகள் உண்டு. ஆயினும் நாம் அத்தகைய நிலைகளை எதிர்கொள்ளும் போது சூழல்நிலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் இருதயம் கொந்தளித்துவிடும். எனவே நாம் சூழ்நிலைகளைப் பார்க்காமல் இறைவனை நோக்குவோம். அவர் நமக்கு வெற்றியை அருளுவார்.

பார்வையற்ற பர்த்திமேயு இயேசுவின் வருகையை அறிந்து “இயேசுவே தாவீதின் மகனே, எனக்கு இரங்கும் என்று கத்தத் தொடங்கினார்” (மாற் 10:47). அநேகர் அவரை அதட்டினார்கள் பேசக்கூடாது என்று எச்சரித்தனர். சாதகமற்ற சூழல் ஆனால் பர்த்திமேயு கவலை கொள்ளவில்லை, கலங்கவில்லை, விசுவாசத்தோடு கூப்பிட்டார். விடுதலை பெற்றுக்கொண்டார். மரியாள் சூழ்நிலைகளைப் பார்த்து கலங்கியபோது கடவுளால் இயலாதது ஒன்றுமில்லையென்று (லூக் 1:37) திடப்படுத்தப்பட்டார். சூழ்நிலைகளைப் பார்த்து எதிர்மறை (Negative) எண்ணங்களோடு பயணிக்காதபடி, இறைவனை நோக்கி நேர்மறை (Positive) எண்ணங்களோடு பயணிப்போம். ஆண்டவராலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

இறை நம்பிக்கையுள்ளவர்கள் பிறரை ஏமாற்றுவதற்கு இடமில்லை. தற்காலச் சூழலில் பிறரால் ஏமாற்றப்பட்டும், நம்பினோரால் காட்டிக் கொடுக்கப்பட்டும். வெட்டப்பட்டும், தாக்கப்பட்டும், உயிரிழப்போர் பலருண்டு. நம்பினோரால் ஏமாற்றப்பட்டு தம் உடலில் ஏற்படும் காயங்களை விட மனதளவில் அவர்கள் அடையும் காயம் வேதனை மிக்கது. அதனால் உடல் நலன் குன்றி, ஆயுள் நாள்கள் குறுகிப் போனவர்களும் உண்டு. யூதாசின் துரோகச் செயல் இயேசுவைக் கலங்க வைத்தது. ஆயினும் தந்தையாம் கடவுளின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்துக் காயப்பட்டார். இயேசுவின் காயங்களால் நாம் குணமாகிறோம். அவரின் காயங்களினால் நம் பற்றுறுதியில் நாம் உறுதி அடைகிறோம். இயேசுவை நம்பும் அனைவரும் வாழுவர். அவருக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்துவோர் எவரும் ஏமாற்றமே காண்பர். ஆண்டவர் இயேசுவின் திருவிருந்து யூதாசின் கபட நாடகத்தை வெளிக் கொணர்ந்து இயேசுவின் அன்பை வெளிப்படுத்தியது. நம்பினவனால் ஏமாற்றப்பட்டு இயேசு அடைந்த காயத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் ஆண்டவருக்கு உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால் நாமும் அவருக்காகக் காயப்பட நம்மைக் கையளிப்போம்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**





உரோ 5:10இல், நாம் கடவுளுக்குப் பகைவர்களாயிருந்தும் அவருடைய மகன் நமக்காக உயிரைக் கொடுத்ததால் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம்.

***முடிவுரை :***

இயேசு சிலுவையிலறையப்பட்டது மனிதரிடம் அவர் காட்டும் அன்பை வெளிப்படுத்துகிறது. இயேசு நமக்காகப் பாவமாகி நம்மைக் கடவுளோடு ஒப்புரவாக்கினார். எனவே, இயேசு அறையப்பட்ட அச்சிலுவை இன்று வாழும் நமக்கு ஒப்புரவாக்குதலின் சின்னமாயிற்று. கிறிஸ்தவர்களின் சின்னமான சிலுவை ஒப்புரவாக்குதலின் சின்னம். அச்சிலுவையே நம் வாழ்வின் மேன்மையாகட்டும்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**

# உபவாசம்

சாம்பலிலிருத்தல், உபவாசித்தல் என்பன பற்பல சூழல்களில் ஆசரிக்கப்பட்டதற்கான சான்றுகள் திருமறையில் இடம் பெற்றுள்ளன. தவக்காலத்தின் முதல் நாளைச் சாம்பல் புதன் என்கிறோம். இவ்வாண்டிலும் நாற்பத்தைந்து நாட்களைத் தவக்காலமாக ஆசரிக்க உள்ளோம். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஆரம்பித்த தவக்கால ஆசரிப்பைக் கிறிஸ்தவர்களான நாம் இருபத்தோராம் நூற்றாண்டிலும் தொடருகிறோம்.

சாம்பல் - தாழ்மையையும், இழிநிலையையும் சுட்டிக்காட்டும்படி உவமானமாய்ச் சொல்லப்பட்டுள்ளது.

மனஸ்தாபப்பட்டவர்களும், துக்கம் அடைந்தவர்களும் சாம்பலில் உட்காருவார்கள். அல்லது அதிலே புரளுவார்கள். யோபு 2:8இல் யோபு சாம்பலில் உட்கார்ந்திருந்தார்.

நினிவேயின் அழிவுக்கு நாற்பது நாட்கள் மாத்திரமே உண்டு என்று யோனா சொன்ன போது நினிவே நகரின் மக்களும், ராஜாவும் சாம்பலில் உட்கார்ந்து உண்ணாமல் நோன்பிருந்தனர்.

யோனா 3:6 அவன் தன் அரியணையை விட்டிறங்கி அரச உடையைக் களைந்துவிட்டு, சாக்கு உடை உடுத்திக் கொண்டு சாம்பல்மீது உட்கார்ந்தான்.

எபிரேயர்கள் தங்களுக்குத் தோல்வி ஏற்பட்டபோதும், கொள்ளை நோய் தாக்கியபோதும், குடும்பங்களில் இடையூறுகள் ஏற்பட்டபோதும் சாம்பலையும், புழுதியையும் தங்கள் மேல் வாரியிறைத்தார்கள்.

II சாமுவேல் 13:19 அம்னோனால் தாமாரின் கற்புக்குக் களங்கம் நேரிட்டு, அநியாயம் இழைக்கப்பட்டபோது தாமார் தன் தலைமேல் சாம்பலை வாரிப் போட்டுக் கொண்டு சத்தமிட்டு அழுதார்.

## திருவிவிலியம் காட்டும் உபவாச அனுபவங்கள் சில

தாங்கள் உபவாசிப்பதால் கடவுள் அவர்கள் பக்கம் திரும்பி அவர்களின் வேண்டலைக் கேட்பார் என்று எண்ணினர். மோசே



**12-03-2014**



# நம்பினோரால் ஏமாற்றப்படுவதால் காயம்

மத்தேயு 26 : 20-25

*“...என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே என்னைக் காட்டிக் கொடுப்பான்.”*
*(மத். 26 : 23)*

இயேசுவின் சீடர்கள் அவருடைய விருப்பம் அறிந்து, அவர் கூறிய வழிகாட்டுதலின்படியே பஸ்கா விருந்தை ஒழுங்கு செய்தனர். அன்று மாலையில் இயேசு தாம் நேசித்த பன்னிரண்டு சீடரோடும் பஸ்கா விருந்தில் பந்தியிருந்தபோது.

**மத்தேயு 26:21 இல் உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் காடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

சீடருக்கு அதிர்ச்சி தரும் இந்த;த செய்தியை இயேசு பந்தியமர்ந்திருக்கையில் சொன்னார். உடனே சீடர்கள் மிகவும் வருத்தமடைந்து ஆண்டவரே, நானோ? என ஒவ்வொருவரும் இயேசுவிடம் கேட்கத் தொடங்கினர். நம்பினவரை ஏமாற்றும் யூதாசும் அவரிடம் நானோ? எனக் கேட்க **நீயே சொல்லி விட்டாய்** என்றார். இயேசு தன்னைக் காட்டிக் கொடுப்பவன் யார் என்பதை வெளிப்படையாய் சொல்லாதிருப்பினும் அவர் அறிந்திருந்தார். யூதாஸ் கபடமாக நானோ எனக் கேட்டு இயேசுவிடம் நாடகமாடினான். தன்னைக் காட்டிக் கொடுப்பவனை சீடர்கள் உறுதி செய்து கொள்ளும்படி சொன்ன போதிலும் கூட யூதாசோ இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படி தலைமைக் குருவிடம் முப்பது வெள்ளிக் காசுக்காக தான் பேசியிருந்த உடன்பாட்டை விட்டுவிட விரும்பாதிருந்தான். யூதாஸ் இயேசுவால் அழைக்கப்பட்டவன். அவரோடிருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும் அழைக்கப்பட்டவன். ஆனால் அவன் தன்னை நம்பிய இயேசுவை ஏமாற்றுகிறவனானான்.

லேவியராகமம் 25:17 உங்களுள் எவரும் தம் இனத்தாரை ஏமாற்றலாகாது

*தவக்கால புதன் தியானங்கள்*

# இயேசுவின் காயங்கள்

**WOUNDS OF JESUS**

காயப்பட்டோர் மிகுந்து வாழும் உலகில் நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காயப்படுத்துவோரால் அனேகர் காயமடையும்போது காயம் ஆற்றுவோர் யார்? என்கிற கேள்வி எழுகின்றது. திருமறையில்.

**எசாயா 53:5 இல் அவர் காயங்களால் நாம் குணமடைகின்றோம்** என்கிற பதில் தரப்பட்டுள்ளது. நம்முடைய பாடுகளை ஏற்று, நம் துக்கங்களைச் சுமந்து, நம் குற்றங்களுக்காகக் காயமடைந்து, நம் தீச்செயல்களுக்காக, நொறுக்கப்பட்டவரின் காயங்களால் நாம் குணமாகிறோம். ஆண்டவர் இயேசு நன்மை செய்தும் குற்றஞ்சுமத்தப்பட்டார். பல பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டு சிலுவை மரத்தில் அடிக்கப்பட்டார், காயப்படுத்தப்பட்டார். கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் இறைவாக்குனர் எசாயா முன்னுரைத்த பாடுபடும் தாசனின் பண்புகளுக்கு ஒத்ததாய் இயேசு அடைந்த பாடுகள் அமைந்திருக்கின்றன.

ஆகையால், உலகின் பாவம் சுமக்கும் செம்மறியாய் உடலிலும், உள்ளத்திலும் காயமடைந்த இயேசுவின் காயங்களால் நாம் ஆரோக்கியம் அடைவது உண்மையாகும். காயப்படுத்துவோர், ஒருவரின் உடல், மனம், உணர்வு, புகழ், மதிப்பு போன்றவற்றையும் காயப்படுத்துகின்றனர். காயம் அடைந்தோர் அனைவரும் தம் காயம் காட்டி தம்மில் பற்றுதல் கொள்ள அழைப்பவரிடம் வந்து ஆரோக்கியம் அடைவோம். நம்பினோரால் ஏமாற்றப்பட்டும், தங்கள் உணர்ச்சிகள் அடக்கப்பட்டும், தாங்கள் ஏற்க மறுக்கப்படுவதாலும், பிறரால் ஏளனம் செய்யப்படுவதாலும், கைவிடப்படுவதாலும் காயப்படுவோர் பலர் நாம் வாழும் இவ்வுலகில் இன்றும் உண்டு. இத்தனை காயங்களையும் தம்மில் தாங்கி பிறருடைய காயங்களை ஆற்றும் இயேசுவின் காயங்களைக் குறித்து நாம் தியானிப்போம்.





உடன்படிக்கைப் பலகைகளாகிய கற்பலகைகளைப் பெற்றுக் கொள்ள சீனாய் மலையில் ஏறியபோது நாற்பது நாள்கள் உண்ணா நோன்பு மேற்கொண்டார். (இணைச்சட்டம் 9:9). இறைவாக்கினர் எலியா ஈசபேலின் சூளுரை கேட்டதால் அச்சமடைந்து தம் உயிரைக் காத்துக் கொள்ளத் தப்பியோடினார். அவர் சாவை விரும்பும் அளவுக்கு மனப்போராட்டம் ஏற்பட்டதால் சூரைச் செடியின் அடியில் படுத்துறங்கினார். அவருக்குத் தைரியம் அளித்தல் என்பது தேவையாயிற்று. எனவே விண் தூதர் தோன்றினார். அவர் கொடுத்த அப்பத்தை உண்டு, தண்ணீரைப் பருகி நாற்பது நாள்கள் உண்ணாமலேயே நடந்து ஓரேப் என்னும் கடவுளின் மலையை அடைந்தார். இறைக்காட்சி கண்டார். அதோடு எலிசாவை அழைத்துத் தம்முடன் சேர்த்துக் கொண்டார்.

மோசே பத்துக் கட்டளைகளைப் பெற்றுக் கொள்ளவும், இறைவாக்கினர் எலியா இறைவாக்கைத் தைரியமாய்ச் சொல்ல ஆற்றலடையவும், நோன்பிருந்தனர். இயேசு நியாயப் பிரமாணத்தையும், தீர்க்கத்தரிசனங்களையும் நிறைவேற்றுவதற்கான ஆற்றலைப் பெற நோன்பு அவருக்குத் துணையாகியது. அர்ப்பணமுள்ள யூதர் பலரும் அடிக்கடி உபவாசித்தனர். சாலமோன் ராஜா எருசலேம் பேராலயத்தை அர்ப்பணம் செய்தபோது.

**1 அரசர்கள் 8:29 என் பெயர் இவ்விடத்தில் விளங்கும்** என்று இக்கோவிலைப் பற்றி நீர் சொல்லியிருக்கிறீர். இவ்விடத்தில் உம் அடியான் செய்யும் வேண்டுதலைக் கேட்டருள்வதற்காக இரவும், பகலும் உமது கண்கள் இதனை நோக்கி இருப்பனவாக என்று வேண்டினார். சாலமோனின் மன்றாட்டைச் சார்ந்தே அன்னாள் கடவுளின் ஆலயத்தில் காத்திருந்து, இறைவேண்டல் செய்து கொண்டிருந்தார். அதின் பலனையும் அடைந்தார்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**

07-03-2014 தவக்கால முதலாம் வெள்ளி

# அன்னாளின் உபவாசம்

லூக்கா 2 : 36-38

*"...அவர் கோவிலைவிட்டு நீங்காமல் நோன்பிருந்து மன்றாடி அல்லும் பகலும் திருப்பணி செய்து வந்தார்."* லூக். 2 : 37

அன்னாள் என்கிற பெயர் கிரேக்கத்தில் 'hanna' எனப்படும். hanna என்கிற கிரேக்க வார்த்தை ஆங்கிலத்தில் grace அல்லது favour எனப் பொருள்படுகிறது. ஆசேர் குலத்தைச் சார்ந்த பானுவேலின் மகள் அன்னாள். அவர் மணமாகி ஏழு ஆண்டுகள் கடந்த பின் விதவை ஆனவர். மறுமணம் ஏதும் செய்யாமல் இருந்தார். இஸ்ரவேலின் விடுதலை விரும்பியாய்க் காத்திருந்த பலருள் ஒருவராய்த் தீர்க்கத்தரிசியாய் இருந்தார். இறைவனின் ஆலயத்தில் காலை, மாலை வழிபாடுகளில் தவறாதிருந்து சாலோமோனின் இறைவேண்டலை நம்பி இரவும், பகலும் மீட்பை நாடி இறைவேண்டல் செய்தும் உபவாசித்தும் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தார். மேலும் இஸ்ரவேலின் மீட்புக்காகக் காத்திருந்தவர்களிடம் இயேசு என்னும் குழந்தையைக் குறித்தும் பேசிக் கொண்டிருந்தார். குழந்தை இயேசுவை அவருடைய பெற்றோர் எருசலேம் ஆலயத்தில் அர்ப்பணிக்கையில் சிமியோன் கடவுளைப் போற்றி இறைவாக்குரைத்தபோது எண்பத்து நான்கு வயதான அன்னாளும் அங்கு வந்து கடவுளைப் புகழ்ந்து கடவுளின் மீட்பு ஆரம்பித்ததை எருசலேமின் விடுதலைக்காகக் காத்திருந்த அனைவரோடும் பேசி கடவுளின் வாக்குறுதி இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியதற்காக அவரைப் புகழ்ந்தார்.

உபவாசத்தின் மெய்ப்பொருளின்றி மேற்கொள்ளப்படும் நோன்பைக் கடவுள் ஏற்பதில்லை. எரேமியா 14:11, 12. மோசே கற்பலகைகளைத் தம் மக்களுக்கும் பெற்றுத் தரும்படி உபவாசித்தார். எலியா இறைப்பணியை உறுதியாய் நிறைவேற்றும்படி உண்ணாநிலையில் நடை பயணம் செய்தார். இயேசு தம் காலத்தில் தன்னைத் திருப்பணிக்கென ஆயத்தம் செய்யவும் தாழ்மை, சேவை செய்தல், துன்புறுதல் இவைகளால் மேன்மையடைதலை



வெளிப்படுத்தவும் நோன்பிருந்தார். அன்னாள் கடவுளின் மீட்பை நாடி இறைவேண்டல் செய்தும், உபவாசித்தும், கடவுளுக்கு நன்றி சொல்லியும், இயேசு என்னும் குழந்தையைக் குறித்தும் பேசி கடவுளின் வாக்குறுதி நிறைவேறியதை உறுதி செய்தார். இவ்வாண்டின் தவக்காலங்களில் நம் ஆன்மிக முயற்சிகள் சுயம் சார்ந்தவைகளாய் அமையாமல், பொது நலன் சார்ந்து அமைய தூயாவியார் நமக்கு உதவுவாராக.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**

காயப்படும் பெற்றோர் பலருண்டு. தூரத்தில் நின்று ஏக்கத்தோடும், பெருமூச்சுகளோடும் தங்கள் பிள்ளைகளைப் பார்த்து கண்ணீரோடு திரும்பிச் செல்லும் பெற்றோருண்டு. தங்களை ஆளாக்கிய சகோதர, சகோதரிகளைப் பாராமுகமாய் விட்டுச் செல்லும் பலர் கிறிஸ்தவ சமூகத்தில் இருப்பது துயரமானது. உதவி செய்து தன்னைப் படிக்க வைத்தவர்களையும், விபத்தில் உதிரம் கொடுத்து உயிர் வாழ வைத்தவர்களையும் ஏற்க மறுப்போரால் இதயம் கனத்துக் காயப்பட்டோர் பலருண்டு. நம்ப வைத்து பின்னர், அறியேன் என எளிதில் சொல்லி விலகி விடுவோருமுண்டு. அவர்கள் ஏற்படுத்தும் காயத்தின் ஆழம் அறிய முடியாதவர்களே ஆவர்.

இயேசுவின் காயங்களுக்கொத்த காயமடைந்திருப்பவர்கள் காயப்பட்டவரிடம் வருவதே தகுதியானது. நாம் அடையும் வேதனைகள் இயேசு சிலுவையில் அடைந்த வேதனைகளுக்கு இணையானது அல்ல. ஆகையால் காயமடைந்தோர் அனைவரும் காயங்கள் ஆற இயேசுவின் காயங்களை நோக்குவோம். அவர்தம் காயங்களால் நாம் குணமாகின்றோம். நாம் குணமடைந்து மறுக்கப்பட்டவர்களை ஏற்றுக் கொள்ளுவோம்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**



**14-03-2014** *தவக்கால இரண்டாம் வெள்ளி*

# இயேசுவின் உபவாசம்

மத்தேயு 4 : 1-4

*“அவர் நாற்பதுநாள் இரவும் பகலும் நோன்பிருந்தார்.” மத். 4 : 2*

இயேசுவின் திருப்பணிக்கான பல ஆயத்தங்களை நற்செய்தி நூற்களில் நாம் காண முடிகிறது. இயேசுவின் திருமுழுக்கின் போது தூயாவியார் அவர் மேல் புறாவைப் போல் வந்தமர்ந்தார். மத்தேயு 4:1-4 வரை வாசிக்கையில் இயேசு சோதிக்கப்படுவதற்காகப் பாலை நிலத்திற்குத் தூயாவியாரால் அழைத்துச் செல்லப்பட்டார். அவர் அங்கே நாற்பது நாள்கள் நோன்பிருந்தார். உணவு கிடைக்காத இடத்தை இயேசு தெரிந்து கொண்டு அங்கே திருப்பணிக்கென அவர் தம்மை ஆயத்தப்படுத்தினார். அவரின் உபவாசம் கடவுளுக்கு அவர் கீழ்ப்படிவதை நமக்குக் காட்டுகிறது. இயேசுவின் நோன்பும், கீழ்ப்படிதலும் சுய பெருமைக்காகவோ, ஆற்றலையும் அதிகாரத்தையும் பெறுவதற்காகவோ அல்ல, மாறாக தாழ்மை, சேவை செய்தல், துன்புறுதல் இவைகளால் மேன்மை அடைதலை வெளிப்படுத்துவதற்கேயாகும். தாம் உபவாசித்ததைப் போல அனைவரும் உபவாசிக்க இயேசு எதிர்பார்த்தார். ஆனால் உபவாசிக்கும் போது மனிதரைப் பார்க்காமலும் அவர்களின் முறைமைகளைப் பின்பற்றாமலும் கடவுளையே நோக்கிப் பார்க்கக் கற்பித்தார். மத்தேயு 6:16-18.

அதவாது வெளித்தோற்றத்திற்காக மட்டும் உபவாசிப்பதல்ல, மாறாக உண்மையாய் கடவுளிடம் திரும்ப அறிவுறுத்தினார். மேலும் அவர் தம் ஆற்றலைக் குறித்த தவறான புரிந்து கொள்ளுதலை மறுத்தார். தூயாவியாரும் இயேசுவைத் திருப்பணிக்கென ஆயத்தமாக்கினார். வனாந்தரத்தில் அவர் சோதிக்கப்படும்படி அவரை நடத்தினார்.

மாற்கு 1:12, 13 இல் இயேசு திருமுழுக்குப் பெற்ற உடனே ஆவியாரால் வனாந்திரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே சாத்தானால் சோதிக்கப்பட்டார் என வாசிக்கிறோம். கடவுள் தம்

பிள்ளைகளை அவர்களின் சூழலில் சோதித்து அவர்களின் விசுவாசத்தை வலுப்படுத்துகிறார். அதனால் அவர்களின் பொறுமையைப் பெலப்படுத்தி, கிறிஸ்தவ நன்னடத்தையில் முதிர்ச்சியடையச் செய்கிறார். இயேசு உபவாசத்தைக் குறித்துக் கண்டனம் செய்ததில்லை. அவரும் உபவாசித்தார். வழக்கமானதும், கட்டாயப் படுத்தப்பட்டதுமான யூதரின் உபவாசம் இயேசு காட்டும் புதிய வாழ்வுக்கு ஏற்புடையதல்ல. லூக்கா 4:1-4 இல் நாம் வாசிக்கிறபடி இயேசு சுட்டிக்காட்டும் உபவாசம் உலகின் தீமைகளைக் கண்டு அஞ்சாமல் துணிவுடன், இறையாற்றலை உணர்ந்து தீமைகளை மேற்கொள்ளச் செய்து இறைப்பணியாற்ற நம்மைத் தூண்டுகிறது. அதனால் இறைச்சித்தம் நிறைவு பெறும். இயேசு காட்டும் உபவாசம் மனிதரை நோக்கிப் பார்க்கச் செய்யாமல் கடவுளை நோக்கிப் பார்க்க உதவுவதாகும்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**



**26-03-2014** *தவக்கால நான்காம் புதன்*

# ஏற்க மறுக்கப்படுவதால் காயம்

## THE WOUND OF DENIAL

மத்தேயு 26 : 69-75

"***...இம்மனிதனை எனக்குத் தெரியாது.***" *(மத். 26 : 72)*

பணிப்பெண்கள் இருவரிடம் இயேசுவைத் தான் அறியாதவன் என்றும் தன்னிடம் கேட்கப்பட்ட யாதொன்றும் தனக்குத் தெரியாது என்றும் சொல்லி இயேசுவை மறுதலித்து விட்டவர் பேதுரு. கூட்டத்தார் தன்னை இயேசுவைச் சேர்ந்தவன் என்றும், அவன் பேச்சு காட்டிக் கொடுப்பதாகவும் சொன்னவுடனே **மத்தேயு 26 : 74** இன் படி **இந்த மனிதனை எனக்குத் தெரியாது என்று சொல்லிச் சபிக்கவும், ஆணையிடவும் தொடங்கினார்.**

பேதுரு மறுதலிக்கப் போவதைக் குறித்து இயேசு முன்னறிவித்த போது **மத்தேயு 26:34** இல் **இன்றிரவில் சேவல் கூவும் முன் மும்முறை நீ என்னை மறுதலிப்பாய்** என்றார். அதற்கும் பேதுரு **மத்தேயு 26:35 இல் நான் உம்மோடு சேர்ந்து மரிக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒரு போதும் மறுதலிக்க மாட்டேன்** என உறுதியாய்ச் சொன்னது மட்டுமல்ல, **லூக்கா 22:33** இல் **ஆண்டவரே உம்மோடு சிறையிடப்படுவதற்கும் ஏன், சாவதற்கும் நான் ஆயத்தமாய் உள்ளேன்** என்று சொன்ன பேதுரு, இயேசுவைத் தம்முடையவர் என ஏற்க மறுத்துவிட்டார். கற்பாறை எனப் பொருள் கொள்ளும் கேபா என்னும் மறுபெயரை இயேசுவால் பெற்றிருந்தும் கூட இயேசுவை மறுதலித்துவிட்டார். ஏற்க மறுத்தல், காயம் ஏற்படுத்தும். தலைமைக் குருவின் வீட்டில் கைதியாய் நிறுத்தப்பட்டிருந்த போது பேதுரு இயேசுவை அறியேன் என்று சொல்லி அவரை ஏற்க மறுத்ததும் இயேசு **லூக்கா 22:61** இன் படி திரும்பி பேதுருவைக் கூர்ந்து நோக்கினார். காயப்பட்ட இதயத்தோடு பேதுருவே நீயா இதைச் சொல்கிறாய் என்கிற மனவேதனையோடு இயேசு அவனைப் பார்த்தார். தற்காலச் சூழலில் கருவில் சுமந்தும், ஈன்றெடுத்தும் பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி, கண் துஞ்சாமல் தன்னை வளர்த்தத் தாயையும், ஓடி ஓடி உழைத்தும், தோளில் சுமந்தும் வாழ வைத்த தகப்பனையும் ஏற்க மறுக்கும் பிள்ளைகளால்

இருந்தன. இவை திருச்சபைத் திருப்பணிகளில் பவுலின் அனுபவம் சார்ந்தவைகளாய்ச் சொல்லப்படுகின்றன. ஆதித்திருச்சபைக்குள் உபவாசத்தைக் குறித்து மிகுந்த நம்பிக்கை அதிகமாய்ப் பரவியிருந்தது.

**அப்போஸ்தலர் 9:8-11** இல் நாம் காணும் பவுலின் உபவாச அனுபவம் தற்செயலானது. அவர் எதிர்பாராதது. ஆனால் எதிர் கொண்டது. தமஸ்கு பயணத்தின் போது பட்டப்பகல் வேளையில் சாலையில் நடந்த நிகழ்வாகும். பவுலார் இறை அழைப்பைப் பெறும் அனுபவமாகும். சீறியெழுந்த பவுல் திடீரென வானத்திலிருந்து தோன்றிய பேரொளியால் தரையில் விழ நேர்ந்தது. தரையிலிருந்து எழுந்து கண் விழித்தார். ஆனால் பார்வையிழந்த நிலையை அவர் உணர்ந்தார். அவரோடிருந்தவர்கள் அவரின் கையைப் பிடித்து அவரைத் தமஸ்குவுக்கு அழைத்துச் சென்றனர். துணிந்து புறப்பட்டவர் தவித்து நின்றார். அந்நாள்களில் அவர் உண்ணவுமில்லை, குடிக்கவுமில்லை. இது அவருக்கு அதிர்ச்சியினால் ஏற்பட்டிருக்கலாம். அவரின் பார்வையிழப்பு அதற்கான அடையாளமாகிறது. அவர் அந்நாள்களில் அதிகமாய்த் துக்கப்பட்டதுமன்றி மனம் வெதும்பினார். தன் பாவங்களுக்காய் மனம் வருந்தினார். உணவும், தண்ணீரும் எடுத்துக் கொள்ள மனமின்றி இருந்தார். தன் கடந்த கால வாழ்வு, தன் கொடிய பாவச் செயல்கள், தன் எண்ணங்களில் ஏற்பட்ட திடீர் மாற்றங்கள், தன் கண் பார்வையிழப்பு, தன் பார்வையிழப்பினால் ஏற்பட்ட மனக்கவலை ஆகியன உணவு உண்ண விருப்பமின்மையை அவரில் ஏற்படுத்தியது எனக் கருதவும் இடமுண்டு. மேலும் அவர் அந்நாள்களில் இறைவேண்டல் செய்து கொண்டிருந்தார். இறையருளைப் பெற்றுக் கொண்டார்.

பவுல் தமஸ்குச் சாலை அனுபவத்தில் மேற்கொண்ட உபவாசம் அவருக்குண்டான அதிர்ச்சியையும், தாக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. மேலும் இந்நிலை மூன்று நாள்கள் மட்டுமே தொடர அனனியா அவரைச் சந்தித்து அவர் மீது கைகளை வைத்து ஜெபித்து மீண்டும் அவர் பார்வையடையச் செய்தார். அதைத் தொடர்ந்து அவர் திருமுழுக்குப் பெற்றதோடு உணவருந்தி வலிமை பெற்றார். சில நாட்களுக்குப் பின் இயேசுவே இறைமகன் என்று பறைசாற்றிக் கேட்போர் அனைவரையும் மலைக்கச் செய்து விட்டார்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**



**19-03-2014** *தவக்கால மூன்றாம் புதன்*

# உணர்ச்சிகள் அடக்கப்படுவதால் காயம்

## THE WOUND OF APATHY

மத்தேயு 26 : 36-45

*"...அவர் துயரமும் மனக்கலக்கமும் அடையத் தொடங்கினார்."*
*(மத். 26 : 37)*

பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய தமது அன்பான சீடர் மூவரோடு தம் வழக்கத்தின்படியே இயேசு கெத்சமனே தோட்டத்துக்குச் சென்றார். அங்கே இயேசு மனக்கலக்கமும், ஆழ்துயரமும் கொண்டிருந்தார் என **மத்தேயு 26:37, 38** இல் வாசிக்கிறோம். மனித உணர்ச்சிகளை நாம் அடக்குவதால் காயப்படுகிறோம். மனித உணர்ச்சிகள் பலநிலைகளில் வெளிப்படுகின்றன. கவலை, கடுங்கோபம், குற்ற உணர்வு, மனமடிவு, மன உளைச்சல், மனக்கவலை, பொறாமை, தனிமை, ஏமாற்றம், பயம், வெட்கம், இரக்கம், உணர்ச்சி வசப்படுதல், மகிழ்ச்சி, அன்பு, பகைமை இன்னும் பிறவாக அறியப்படுகின்றன. மனித வாழ்வில் ஒவ்வொருவரும் இவைகளால் காயப்படும் சூழ்நிலைகளில் காயம் ஆற்றுபவர் யார்? கெத்சமனே தோட்டத்தில் இயேசு உண்மையாகவே கலங்கினார். அவருக்கு நெருக்கமாயிருந்தவர்களின் உதவியை இயேசு அவ்வேளையில் நாடினார். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரைத் தம்மோடு கூட்டிக் கொண்டு போனவர் **லூக்கா 26:37** இல் நாம் வாசிக்கிறபடி **துக்கமடையவும், வியாகுலப்படவும் தொடங்கினார்.** கவலையும், மனஉளைச்சலும் அவரைக் காயப்படுத்தின. எனவே தம் அன்புக்குரிய சீடர்களைத் தம்மோடு தங்கியிருக்கவும், விழித்திருக்கவும் கூறினார். அவருடைய ஆத்துமா சாவுக்கேதுவான துக்கம் கொண்டிருந்தது. இயேசு சற்று அப்பால் சென்று முகங்குப்புற விழுந்து என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார். தன் தனிமை உணர்விலும், உதவியற்ற சூழலிலும் இயேசு கடவுளைச் சார்ந்து கொண்டார். இயேசு தம் சீடர்களிடமிருந்தும்,

ஏனையோரிடமிருந்தும் தாம் தனிமைப்படுத்தப்படுவதை உணர்ந்தார். தம் தனிமையுணர்வு இயேசுவுக்குப் பெருத்த வேதனையை ஏற்படுத்தியது. அன்பான சீடர்கள் என அறியப்பட்டவர்கள் கூட இயேசுவின் உணர்வைப் புரிந்து கொள்ள முடியாமலும், அவரின் உதவியற்ற சூழ்நிலையில் துணையாய் இருக்கவும் தவறிப் போயினர். தம் மார்பில் சாய்ந்திருந்த சீடனும் இயேசுவுக்குத் தூரமாகும் நிலை ஏற்பட்டது. ஆனால் அப்போது விண்ணகத் தூதர் அவருக்குத் தோன்றி அவரை வலுப்படுத்தினார்.

மனித வாழ்வில் நாம் மகிழ்ந்திருக்கையில் நம்மோடிருக்கப் பலருண்டு. ஆனால் நாம் அழ நேர்ந்துவிடின் தனித்தே அழ வேண்டும். யாருமே நம்முடன் கடைசி வரை வருவதுமில்லை, நிற்பதுமில்லை. காயப்பட்டு நிற்போருக்குக் காயம் ஆற்றும் அருமருந்தாக வேண்டியவை மனித உறவுகள். ஆனால் இன்று பல வகையான உணர்ச்சிகளால் மனித சமூகம் காயப்பட்டுள்ளது. எனவே உறவுச் சிதைவுகளும், முறிவுகளும் காணப்படுகின்றன. உறவு பிரிவாகிறது. நட்பு பகைமையாகிறது. மனிதர் காயப்படுகின்றனர். காயப்பட்ட இயேசு தம் ஐங்காயம் காட்டி காயமாற்ற நம்மை அழைக்கிறார். அவரின் தழும்புகளால் நாம் குணமாகிறோம். நாம் குணமாகுதலைச் சொந்தமாக்குவோம். பிறர் காயங்களாற்றும் அருமருந்தாவோம்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**



**21-03-2014** *தவக்கால மூன்றாம் வெள்ளி*

# பவுலின் உபவாசம்

திப. 9 : 1-9

***"அந்நாள்களில் அவர் உண்ணவுமில்லை குடிக்கவுமில்லை."*** *திப. 1 : 9*

திருவிவிலியப் பார்வையில் உண்ணா நோன்பு என்பது உணவும், தண்ணீரும் எடுத்துக் கொள்ளாமல் இருக்கும் நிலையைக் குறிப்பதாகும். அவ்வப்போது சூழல் சார்ந்து உண்ணா நோன்பு இருந்ததையும் நாமறிய முடிகிறது. தனி நபராகவும், மக்கள் கூட்டாகவும் உபவாசித்த அனுபவங்கள் உள்ளன.

**நீதித்தலைவர்கள் 20:26** இல் போர்க்காலங்களில் இஸ்ரவேல் மக்கள் கூட்டாகச் சேர்ந்து உண்ணா நோன்பிருந்தனர். பலிகளையும் செலுத்தினர்.

II **சாமுவேல் 12:22** இல் தாவீது அரசன் தன் மகன் நோயுற்றிருந்தபோது அவன் ஆரோக்கியம் அடைய விரும்பி எதிர்பார்ப்புடன் உபவாசித்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தபடி குழந்தை உடல் நலம் பெறவில்லை.

கடவுளின் அழைப்பை அசட்டை செய்து தன் சுயத் தீர்மானத்தோடு தர்ஷீசுக்குப் பயணித்த யோனாவும் மூன்று நாட்கள் உணவும் தண்ணீருமின்றி மீன் வயிற்றிற்குள்ளிருந்து கடவுளிடம் மன்றாடினார். கடவுள் அவரை விடுவித்தார். உபவாசித்து மக்கள் தங்களைக் கடவுளுக்கு முன் தாழ்த்தினர். இறை அழைப்பை அசட்டை செய்து சில விருப்பம் சார்ந்து செயல்படுகையில் கீழ்ப்படியாமையின் விளைவைச் சந்திக்க நேருகிறது. அதே வேளையில் அதைக் காணுவோர் இறையச்சம் அடைகின்றனர்.

பவுலார் தன் வாழ்வில் உண்ணா நோன்பிருந்தார் எனத் திருவிவிலியத்தில் நாம் காண்கிறோம்.

**II கொரிந்தியர் 6:5** இல் அவர் தாமாக உண்ணா நோன்பிருந்து தம்மைத் தாமே கிறிஸ்துவின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.

**II கொரிந்தியர் 11:27** இல் தன் உடன்பாடில்லாமல் அவர் பசியாயிருந்ததுண்டு. தாமாகவே உண்ணாமலிருந்த வேளைகளும்

தாழ்மையை வெளிப்படுத்துவதும் அல்லாமல் நாம் ஏறெடுக்கும் இறைவேண்டலுக்கு வலுவூட்டுவதாகவும் அமைகிறது.

சபை மூப்பர்கள் நியமனம் செய்யப்படுவதின் மூலம் இறைவேண்டலின் இன்றியமையாமை வெளிப்படுகிறது. அருட்பணியாளர்களோடு திருப்பணியில் இணைந்து உதவி செய்வதற்காக அவர்கள் மூப்பர்களாக நியமிக்கப்பட்டனர். நமக்கு அருமையானவர்களை விட்டு நாம் பிரியும் போது அவர்களை ஆண்டவரிடம் கையளிப்பதும் அவரோடு விட்டுச் செல்வதுமே சிறப்பாகும். அதுபோல திருத்தூதர்களும் அவர்களை விட்டுப் பிரிய நேர்ந்த போது சபையாரோடு சேர்ந்து அவர்கள் உபவாசித்து இறைவேண்டல் செய்தனர். திருச்சபை வளர்ச்சிக்காக மூப்பர்கள் ஒரு குழுவாக திருத்தூதர்களால் நியமிக்கப்பட்டனர். மீண்டும் அவர்களைப் பார்க்க முடியுமா என்கிற சந்தேகம் அவர்களுக்கு ஏற்பட்டபடியால் திருத்தூதுவர்கள் மூப்பர்களையும், திருச்சபையையும் கடவுளிடம் கையளித்தனர். ஆகையால் திருப்பணியராகவும், பொது நிலையினராகவும், கிறிஸ்தவ நண்பர்களாகவும் இணைந்து இணையறா உறவுக்கும், பாதுகாவலுக்கும் தங்களைக் கையளித்தனர். வளர்ந்து வரும் சபையில் அனுபவமற்றவர்களும், பெலவீனர்களும் அனேகர் இருந்தபடியால்எளிதில் பாதிக்கப்பட்டு விடக்கூடும் என்று எண்ணியதால் கடவுளின் கரத்தில் ஒப்புவித்தனர். உபவாசித்து இறைவேண்டல் செய்வதால் கடவுளின் சிறப்பான உதவி தங்களுக்குக் கிடைக்கும் என்று நம்பினர். திரித்தூதர்கள் மூப்பர்களை நியமித்தால் கூட இறையருளில்லையேல் பயனேதுமில்லை. சபைகள் நிறுவப்பட்டவுடன் மூப்பர்கள் நியமனம் செய்யப்படவில்லை. பொறுப்புகளுக்குத் தகுந்த நபர்களைத் தெரிந்தெடுக்கும் வரைக்கும் காத்திருந்து ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை நியமித்தனர். திருத்தூதர்களின் ஆலோசனைகளின்படியே உண்ணாநோன்புடன் இறைவேண்டல் செய்து அந்தந்தச் சபையால் மூப்பர்கள் தெரிந்து கொள்ளப்பட்டு திருப்பணியாற்றும்படி ஒப்படைக்கப்பட்டனர். திருச்சபை வளர்ச்சிக்கு மூப்பர்கள் ஒப்படைக்கப்படுவது அவசியமாயிற்று. அதனால் நிறைந்த பலனுண்டு.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**



**28-03-2014** ***தவக்கால நான்காம் வெள்ளி***

# திருச்சபையின் உபவாசம்

திருத்தூதர் பணி 13 : 1-3

***"...அவர்கள் நோன்பிருந்து இறைவனிடம் வேண்டினார்கள்."*** *திப. 13 : 3*

முதல் நூற்றாண்டு திருச்சபையில் இறைவேண்டல் செய்வதற்கு உபவாசம் பெரிதும் உதவியாய் இருந்தது என நம்பினர். உண்ணா நோன்பு குறித்த திட்டவட்டமான விதிமுறைகள் எதையும் திருத்தூதர் பணிகளில் காண முடியவில்லை.

யூதரின் முறைமைப்படி குற்ற நிவாரணத்திற்காக உண்ணாநோன்பிருப்பர். லேவியர் ஆண்டவரின் திருவுறைவிடத்தில் பணி செய்யவும், ஆண்டவரின் திருப்பெயரால் ஆசி வழங்கவும் பிரித்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவது போல தூதுரைப் பணிக்காக பர்னபாவும், பவுலும் பிரித்தெடுக்கப்பட்டனர். தாயின் வயிற்றிலிருக்கும் போதே பவுல் திருத்தூதராக அழைக்கப்பட்டவரும், நற்செய்திப் பணிக்கென தேர்ந்தெடுக்கப்பட்டவருமாவார். இருந்த போதிலும் பர்னபாவையும், பவுலையும் அந்தியோகியத் திருச்சபை வாயிலாக கடவுள் அழைத்து திருத்தூதுப் பணிக்காகப் பிரித்தெடுத்தார்.

**திருத்தூதர் பணி 11 : 24** இல் சொல்லப்பட்டிருக்கிறபடி பர்னபா நல்லவர். தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டவர். நம்பிக்கையுள்ளவர் என்றும் அறிகிறோம். இதைப் போன்ற அனுபவம் பவுலாருக்கும் இருந்தது. விசுவாசிகள் நோன்பிருந்து கூடி ஜெபித்த போது அருட்பணியாளர்கள் பிரித்தெடுக்கப்பட்டனர்.

அந்தியோகியாத் திருச்சபையில் நம்பிக்கைக்குரிய போதகர்களாகிய பர்னபா, நீகர் எனப்படும் சிமியோன், மனாயீன் ஆகியோர் உபவாசித்து இறைவேண்டல் செய்கையில் பர்னபாவையும், பவுலையும் பிரித்தெடுக்க தூயாவியார் பணித்தார். அவர்கள் கூடி இறைவேண்டல் செய்வதும், உபவாசிப்பதும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையது மட்டுமல்லாமல், இறை வெளிப்பாட்டைப் பெற ஆயத்தப்படும் அனுபவமாயிருந்தது. தூய ஆவியார் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட

இறைவாக்கினர்கள் மூலம் பேசினார். தூய ஆவியாரே அருட்பணிக்கு வழிகாட்டும் எழுப்புதலைத் தருகிறார். அந்தியோகியாவில் திருச்சபையார் கூடி உண்ணாநிலையில் இறைவேண்டல் செய்தபோது பர்னபாவும், பவுலும் கடவுளுக்குத் தேவை என உணர்வடைந்து தெரிந்து கொண்டனர். திருச்சபையில் விசுவாசிகள் அவர்களுக்காக இறைவேண்டல் செய்தனர். நல்ல பணியாற்ற நல்ல மனிதர்கள் போக முன் வந்தபோது உடன் சகோதரரும், உடன் பணியாளரும், உடன்போர் வீரருமானவர்கள் இறைவேண்டல் செய்வது அவர்கள் மேல் விழுந்த கடமையென உணர்ந்தனர். ஏனைய திருப்பணிகளைச் செய்வது போலவே அவர்கள் இணைந்து உண்ணாநிலையில் இறைவேண்டல் செய்தனர். இயேசு தாம் திருத்தூதர்களை அனுப்புகையில் முந்திய இரவில் இறைவேண்டலில் இருந்தார் என்பதும் காணக் கிடைக்கிறது. அந்தியோகியாவில் அனேகர் கூடி இறைவேண்டல் செய்கையில் தூயாவியார் அவர்களிடம் நான் அழைத்திருக்கிற பர்னபாவையும், பவுலையும் என் வேலைக்காகப் பிரித்தெடுங்கள் என்றார். ஆனால் அவர்களின் வேலையைக் குறித்து கடவுள் அப்போது குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பர்னபாவும், பவுலும் விருத்தசேதனமில்லாத யூதரல்லாதவர்களுக்கு நற்செய்தியைச் சொல்லும்படி கிறிஸ்து தம் ஆவியாரால் பின்பு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அவர்கள் கிறிஸ்துவின் சேவையை தூய ஆவியாரின் வழிகாட்டுதலோடு தந்தையாம் கடவுளின் திருப்பெயருக்கு மாட்சியாகச் செய்ய அழைக்கப்பட்டனர்.

அவர்கள் உயர்நிலையை அடைவதற்காக அல்ல, மாறாக பாடனுபவிப்பதற்கே பிரத்யேகப்படுத்தப்பட்டனர். ஏனெனில் போதிக்கிறவர்கள் கிறிஸ்துவின் போதனைகளைத் தங்கள் எதிர்காலத் தலைமுறையினரின் நலன் கருதி பற்றுறுதியும், போதிக்கும் ஆற்றலும் உள்ளவர்களிடம் ஒப்படைப்பது அவசியம். ஆதித் திருச்சபையில் இறைவாக்குரைப்பவர்களும், போதிப்பவர்களும் முக்கியத் தலைவர்களாயிருந்தனர். திருத்தூதர் வாழ்வில் தூயாவியார் புதியதொரு வளர்ச்சி நிலையாக பர்னபாவையும், பவுலையும் பிரித்தெடுத்து அவர்கள் மேல் கைகளை வைத்தனர்.

கைகளை வைத்தல் என்பது அருட்பொழிவிற்கான சமய ஏற்பாடாகும். மேலும் நியமனம் செய்யப்படுவதையும் குறிக்கிறது. அன்று அந்தியோகியாவில் கூடிய விசுவாசிகள் உண்ணா நோன்பிருந்து இறைவேண்டல் செய்தனர். நோன்பு என்பது தாழ்மைக்கும், சுய ஒறுப்புக்கும்





வெவ்வேறான பிரிவுகளைச் சார்ந்த ரோம சமயக் குருக்கள் திருச்சபையில் உள்ள அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கும் முறையில் தங்கள் தேர்தல்களை நடத்தினர். முக்கியமான இடங்களில் பொறுப்பெடுப்போர் ஆணையிட்டுப் பொறுப்பெடுத்தனர். லேவியர்கள் நியமனம் செய்யப்பட்ட போது லேவியர்மேல் தங்கள் கைகளை வைக்கும்படி இஸ்ரவேல் மக்கள் கட்டளை பெற்றிருந்தனர். மோசே யோசுவாவை நியமித்த போது தம் கைகளை வைத்து அதிகாரப்படுத்தினார்.

எண் 27:18 இன் படி அவர்மேல் ஆவியார் இருந்தபடியால் அவர் தெரிந்து கொள்ளப்பட்டார் என நாம் அறிகிறோம். ஆண்டவர் மோசேயிடம் கூறியது, யோசுவாவைத் தேர்ந்து கொள்ள; அவன் ஆவியைத் தன்னுள் கொண்டவன்; நீ அவன் மேல் உன் கையை வை என்றார்.

பவுலும், பர்னபாவும் தாங்கள் மீண்டும் சந்தித்த ஒவ்வொரு திருச்சபையிலும் மூப்பர்களைத் தேர்ந்தெடுத்து நோன்பிருந்து இறைவனிடம் வேண்டி தாங்கள் நம்பிக்கைக் கொண்டிருந்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தார்கள். அனேகர் கிறிஸ்தவ நம்பிக்கைக்குக் கொண்டுவரப்பட்ட போது அவர்களைக் கண்காணிப்பதும் அவர்களுக்கு வழிகாட்டிப் போதிப்பதும், அவர்களைப் பற்றுறுதியில் முழுமைபெறச் செய்வதும், அவர்களிடம் ஊழியக்காரர்கள் கரிசனையாய் இருப்பதும் அவசியமாயிற்று. கிறிஸ்தவப் பற்றாளர் ஒவ்வொருவரும் ஆண்டவருக்குத் தங்களைக் கையளிக்கவும், அவருடைய வழிகாட்டுதலுக்கும், பாதுகாவலுக்கும் தங்களைக் கொடுக்கவும் ஊழியர்கள் கரிசனையாயிருந்தனர். இறைப் பாதுகாவலைப் பெற கிறிஸ்தவப் பற்றாளர்களும், ஊழியக்காரர்களும் தங்களைக் கட்டாயம் அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும். அவர்கள் இறைவேண்டுதலினால் ஆண்டவருக்குத் தங்களைக் கையளிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து தம் இறைவேண்டலின் போது தம் சீடரைப் பிதாவிடம் ஒப்புவித்தார்.

**யோவான் 17:6 இல் அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள் அவர்களை எனக்குத் தந்தீர்** என்று இயேசு ஏறெடுத்த இவ்வேண்டல் நமக்கு ஊக்கமளிக்கிறது. நாம் பற்றாளர்களை ஆண்டவருக்கென்று ஒப்புக் கொடுக்கும் போது உபவாசத்தோடு இறைவேண்டல் செய்யக்கூடி வருவது நல்லது. அவ்விதமாய் ஆசரிக்கும் நோன்பு நமது பாவங்களுக்கான

**04-04-2014** *தவக்கால ஐந்தாம் வெள்ளி*

## உபவாசமும், மூப்பர்கள் ஒப்படைக்கப்படுதலும்

திருத்தூதர் பணி 14 : 21-28

***"...நோன்பிருந்து இறைவனிடம் வேண்டித் தாங்கள் நம்பிக்கை கொண்டிருந்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தார்கள்."*** *திப. 14 : 23*

பவுலும், பர்னபாவும் தெர்பைக்குச் சென்று திரும்பும் போது ஏற்கனவே தாங்கள் நற்செய்தியை அறிவித்திருந்த லிஸ்திராவுக்கும், இக்கோனியாவுக்கும், அந்திகோகியாவுக்கும் வந்தனர். பவுலும், பர்னபாவும் இக்கோனியாவில் அனேகரைத் தங்களுக்குச் சீடராக்கிக் கொண்ட போதிலும் தெர்பையில் அவர்களின் அருட்பணி மிகவும் சிறப்பானதாய்ச் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் தாங்கள் எண்ணியபடி நடந்தால் தாங்கள் வெளியே தள்ளப்பட்ட இடங்களுக்கும் சென்று அங்கேயுள்ள கிறிஸ்தவப் பற்றாளர்களைச் சந்திப்பது அவர்களுக்குக் கூடாததல்ல. ஆகையால் பவுலார் கூறுகையில்.

**தி.ப. 14:22 இல் நாம் பல வேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்பட வேண்டும்** என்றார். பவுலும், பர்னபாவும் தாங்கள் எதிர்பார்க்கும் தகுதியுள்ளவர்களை அவர்கள் திரும்பவும் சந்தித்த ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களாக நியமித்தனர். அந்தியோகியா சபையில் அவர்கள் தாங்கள் முடிக்க வேண்டிய கடினமான வேலைகளுக்காகப் பிரித்தெடுக்கப்பட்டது போல உண்ணா நோன்பிருந்தும், இறைவேண்டல் செய்தும் மூப்பர்களைப் பொறுப்புகளில் அர்ப்பணித்தனர்.

கிரேக்கர்களும், ரோமரும் தங்கள் அலுவலர்களைத் தெரிந்து நியமிக்கும் முறைமை காலப்போக்கில் திருச்சபைக்குள்ளும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கிரேக்கச் சமூகத்தில் ஆசாரியர்களும், நியாயாதிபதிகளும் குலுக்கல் முறையில் அல்லது இரகசிய வாக்கெடுப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களின் கல்வித் தகுதி கூர்ந்து ஆராயப்பட்டும், அவர்கள் சபதம் எடுத்தும் நுழைவுக்கான பலிகளைக் கொண்டு வந்தும் பொறுப்புகளில் நியமிக்கப்பட்டனர்.





வழி வகுப்பதாகும். கடவுளுக்குச் சேவை செய்வதற்கு உபவாசம் அவசியமாகும். சேவை செய்தலும், உண்ணா நோன்பிருத்தலும் தாழ்மைக்கும், ஒறுத்தலுக்கும் அடையாளமாயிருக்கின்றன. அந்தியோகியத் திருச்சபையார் பர்னபா, பவுல் ஆகியோர் மீது தங்கள் கைகளை வைத்து திருப்பணியில் அவர்களை அமர்த்தி, அவர்கள் உலகின் கடை எல்லை வரைக்கும் சான்று பகரும்படி முதல் தூதுரைப் பயணத்திற்கென அந்தியோகிய சபை சார்பில் அனுப்பி வைத்த போது அவர்கள் எதற்காக அழைக்கப்பட்டனரோ அந்த இலட்சியத்திற்காக அவர்கள் அந்தியோகியாச் சபையிலுள்ள பொறுப்புகளிலிருந்து அவர்களின் ஒப்புதலோடும், நன் மதிப்போடும் விடுவிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் அத்திருச்சபையார் பர்னபா, பவுல் ஆகியோரின் புதிய பொறுப்புகளின் ஆசீர்வாதத்திற்காகவும், கடவுள் அவர்களோடிருக்கவும், வெற்றியளிக்கவும், தங்கள் திருப்பணியில் அவர்கள் தூய ஆவியாரால் நிறைக்கப்படவும் இறைவனிடம் வேண்டினர். தங்கள் சமநிலையிலுள்ளவர்களும், தங்களிலும் முக்கியத்துவம் குறைந்தவர்களும் பர்னபா, பவுல் ஆகியோர் மேல் தங்கள் கைகளை வைப்பது இவ்விருவரின் மனத்தாழ்மையைக் குறிக்கிறது. பர்னபாவுக்கும், பவுலுக்கும் கொடுக்கப்பட்ட மரியாதைக்காக அவர்களோடிருந்தவர்கள் யாருமே பொறாமைப்படாமல், மனப்பூர்வமாய் இறைவேண்டல் ஏறெடுத்து மகிழ்ச்சியோடு கடற்பயணத்திற்கு அவர்களை அனுப்பி வைத்தனர்.

பர்னபாவும், பவுலும் ஏற்கனவே அருட்பணியாயிருந்த போதிலும் திருப்பணியில் இந்தப் பிரத்யேகமான திருப்பணிக்காக அவர்களுக்கும் புதிய நியமனம் அவசியமாயிற்று. ஆகையால் திருச்சபையின் இறைவாக்குரைப்பவர்களும், போதிக்கிறவர்களும் அவர்கள் மேல் தங்கள் கைகளை வைத்து அவர்களை நியமனம் செய்வதைக் கடவுள் தகுதியானதெனக் கண்டார். திருச்சபைக்குக் கொடுக்கப்பட்ட இந்த வழிகாட்டுதலின்படியே போதகர்கள் போதகர்களையும், இறைவாக்குரைப்பவர்களையும் அருள்பொழிவு செய்தனர். ஆனால் தற்காலத்தில் இறைவாக்குரைப்பவர்களை அருட்பொழிவு செய்வது எதிர்பார்க்கப்படவில்லை. ஆயினும் உபவாசம் மேற்கொள்வது திருச்சபைக்கு இன்றியமையாததேயாகும்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**

**02-04-2014** தவக்கால ஐந்தாம் புதன்

# ஏளனம் / பரிகாசம் செய்யப்படுவதால் காயம்

**THE WOUND OF MOCKERY**

மத்தேயு 27 : 27-31

*"...யூதரின் அரசே வாழ்க! என்று சொல்லி ஏளனம் செய்தனர்." மத். 27 : 29*

செதேக்கியா மன்னன் யூதாவை ஆண்ட நாட்களில் அவன் கடவுளின் பார்வையில் தீமையே செய்தான். ஆண்டவரின் பெயரால் பேசிய இறைவாக்கினர் எரேமியாவுக்கு முன் அவர் தன்னைத் தாழ்த்திக் கொள்ளவுமில்லை. கடவுள் மீண்டும், மீண்டும் தம் மக்கள் பால் கொண்ட இரக்கத்தால் தம் தூதர்களைப் பலமுறை அனுப்பியும் அவர்களை ஏற்காமல் ஏளனம் செய்து இறைவாக்கினர்களை இழிவுப்படுத்தினார். ஆகையால் கடவுள் அவர்களிடம் கோபமடைந்தார்.

**எண்ணாகமம் 36:16 அவர்கள் கடவுளின் தூதர்களை ஏளனம் செய்து, அவர்தம் வார்த்தைகளைப் புறக்கணித்து, அவர் தம் இறைவாக்கினர்களை இழித்துரைத்தனர். ஆதலால் அவர்கள் தப்ப முடியாத அளவுக்கு ஆண்டவரது சினம் அவர்கள் மேல் கனன்றெழுந்தது.**

ஏளனம் பண்ணுதல் புறக்கணித்தல், இழித்துரைத்தல், பரிகசித்தல் பாவமாகும். பரிகாசம் செய்யப்படுவர் யாராயினும் அவர் காயப்படுத்தப்படுகிறார். காயப்படுத்துவது எளிது. அதனால் வேதனையுண்டு. ஆனால் காயம் ஆற்றுவது எளிதல்ல.

**மத்தேயு 26 : 67, 68** இல் இயேசுவின் முகத்தில் துப்பி, அவரைக் கையால் குத்தினர். சிலர் அவரைக் கன்னத்தில் அடித்து உன்னை அடித்தது யார்? எனப் பரிகசித்தனர். இயேசு தம் சொந்த மக்களால், அவர்களின் அன்பற்ற செயல்களால் அவமதிக்கப்பட்டார். குற்றமற்ற இயேசு குற்றமாக்கப்பட்டார். தலைமைக் குருக்களும், மூப்பர்களும் கள்வன் பரபாசை விடுதலை செய்து இயேசுவைத் தீர்த்துக்கட்ட கூட்டத்தினரைத் தூண்டி விட்டனர். கொலைத் தீர்ப்பு பெற்றவராய்த் தம் எதிரிகளின் பிடியில் சிக்கிய இயேசுவை அவர்கள்





பிடித்து அவருடைய ஆடைகளை உரிந்து அவரை ஏளனப்படுத்தினர். கருஞ்சிவப்பு நிறமான அங்கியை அவருக்கு அணிவித்தனர். முள்முடி ஒன்றைப் பின்னி அவரது தலையின் மேல் வைத்து, அவருடைய வலக்கையில் கோலொன்றைக் கொடுத்து, அவர் முன் முழந்தாள்படியிட்டு, "யூதரின் அரசரே வாழ்க" என்று சொல்லி அவரை ஏளனம் செய்வதற்காகக் கொடுஞ்செயல்களால் துன்புறுத்தினர். யூதரல்லாத போர் வீரர்களால் இயேசு பரிகசிக்கப்பட்டு ஏளனத்துக்குள்ளானார்.

உலக மீட்பர், கடவுளின் அன்பு மகன் ஏளனத்துக்கும், பரிகாசத்திற்கும் உள்ளாகிக் காயப்பட்டு உலகுக்கு மீட்பை வழங்குகிறார். அவர் போன்று இன்றும் சொந்தமானவர்களின் அன்பற்ற செயல்களும், பரிகாசங்களும், கடுஞ்சொற்களும் தவறு செய்யாத பலரைக் காயப்படுத்தி இருக்கின்றன. காயப்படுவோர் பதில் செய்யாதிருப்பினும், காயப்படுத்துவோர் தண்டனைக்குள்ளாவர் என்பதை நாம் அறிந்து ஏளனம் செய்யும் பாவத்திற்கு விலகி வாழுவோமாக.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**

பிறப்பித்துப் பணிக்கிறார். இன்று வாழும் ஏரோதுகளுக்கும், அகிரிப்பாக்கும் அச்சுறுத்தல் கொடுக்கும் பணிவிடை செய்யும் ராஜாவைக் குறித்துச் சொல்லும்படிக்கு நமக்கு அறைகூவல் விடுக்கிறார். மக்களாட்சி என்கிற தோற்றத்தில் நாம் வாய்மையை மறைத்து செல்வாக்கில்லாதவர்களை மட்டம் தட்டி விடும் சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. இன்றைய அமைப்பு முறைகளில் பரபாஸ் போன்ற சமூக விரோதிகளும், கிளர்ச்சியாளர்களும் விடுதலையாகி ஒப்புதலும் பெற்று விடுவதுண்டு. நாம் குற்றவாளிகளாக்கப்படும்போது நம் அமைதி நம் ஆற்றல் என வெளிப்படும். ஆர்ச் பிஷப் ஆஸ்கர் ரொமேரோ கூறுகையில், இயேசுவைப் போல குற்றப்படுத்தப்படுவதும், வெறுக்கப்படுவதும் எத்தனை அருமையான அனுபவம் என்கிறார்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**



**09-04-2014** *தவக்கால ஆறாம் புதன்*

# கைவிடப்படுவதால் காயம்

## THE WOUND OF ABANDONMENT

மத்தேயு 27 : 45-48

*“…ஏன் என்னைக் கைவிட்டீர்.”* (மத். 27 : 46)

ஆண்டவர் இயேசு மூன்றரை ஆண்டுகள் கடவுள் விரும்பும் திருப்பணியாற்றி அனேகர் நன்மை பெறச் செய்தவர். தம் அன்புக்கரம் நீட்டி தொட்டும், தூக்கி எடுத்தும் வாழ்வளித்தவர் அவர். ஆனால் எல்லோராலும் அவர் கைவிடப்பட்டார். இயேசு சிலுவையில் அடிக்கப்பட்டும், காயமுற்றும் அடைந்த வேதனைகளை விட நன்மை பெற்ற சமூகம் அவரைக் கைவிட்டதால் அவர் பெரிதும் காயமடைந்தார்.

கெத்சமனே தோட்டத்தில் இயேசு தம் சீடரை விட்டு சற்று அப்புறம் போய் ஜெபித்தார். சீடர்களோ தூங்கி விட்டனர். வாள்களோடும், தடிகளோடும் வந்த பெருங்கூட்டத்தோடு யூதாஸ் வந்து, ரபி வாழ்க எனக் கூறி இயேசுவை முத்தமிட்டான். வந்தவர்கள் இயேசுவைப் பிடித்துக் கைது செய்தனர். அவ்வேளையில் இயேசு அக்கூட்டத்தினரிடம் கள்வனைப் பிடிக்க வருவது போல் வாள்களோடும், தடிகளோடும் என்னைக் கைது செய்ய வந்திருக்கிறார்கள். நாள்தோறும் கோவிலில் அமர்ந்து கற்பித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் என்னைப் பிடிக்கவில்லை. இறைவாக்கினர் எழுதியவை நிறைவேறவே இவை அனைத்தும் நிகழ்கின்றன என்றார். **மத்தேயு 26:56 இல் சொல்லப்பட்டுள்ளபடி அப்பொழுது சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்.** மிகுந்த பயத்தினால் ஆடையின்றி தப்பி ஓடின சீடனும் உண்டு. இச்சூழ்நிலை இயேசுவை அதிகமாய்க் காயப்படுத்தியது. இயேசுவின் அழைப்பை ஏற்றவர்களாலும், அவரைப் பின் தொடர்ந்தவர்களாலு ம், அவரோடு மகிழ்ந்தவர்களாலும், இயேசுவின் அருஞ்செயல்களைத் தங்கள் கண்களால் கண்டவர்களாலும் இயேசு கைவிடப்பட்டுக் காயமடைந்தார்.

திருப்பாடல்கள் **37:25 இல் இளைஞனாய் இருந்திருக்கிறேன். இதோ முதியவன் ஆகிவிட்டேன். ஆனால் நேர்மையாளர் கைவிடப்பட்டதை**

**நான் கண்டதில்லை; அவர்களுடைய மரபினர் பிச்சை எடுப்பதை நான் பார்த்ததில்லை** என்பதாக பொல்லார், நல்லார் முடிவு குறித்த பதிவுகளைப் படிக்கிறோம். அநீதியாய் கைவிடப்படுதல் என்பது தற்காலிகமானது. நீதிமான்கள் அதற்குரிய பலனை அடைவார்கள். அதே வேளையில் நேர்மையாளரைக் காட்டிக் கொடுத்தும், கைவிட்டும் காயப்படுத்தும் கொடியவர்கள் தண்டிக்கப்படுவார்கள். கொடியவர்கள் செழித்திருப்பதைக்கண்டு நீதிமான்கள் மனம் தொய்ந்து போகாமல் கடவுளை நம்பி அவருக்குப் பயந்து பணி செய்வது அவசியம். நீதிமான்களின் ஆசீர்வாதம் நிலைத்திருக்கும்.

**திருப்பாடல்கள் 37 : 28 ஆண்டவர் நேர்மையை விரும்புகின்றார்; தம் அன்பரை அவர் கைவிடுவதில்லை.**

வாழ்வில் பற்பல துன்பங்களால் நேர்மையாளர் துன்புறுத்தப்படுகிறபோது ஆண்டவரால் அவர்கள் மீட்கப்படுகின்றனர். நெருக்கடியான சூழ்நிலைகளில் அவர்களின் வலிமை கடவுளே.

**2 கொரிந்தியர் 4:9 இல்** பவுலார் எழுதுகையில் **துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை; வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போவதில்லை** என்கிறார். மனித வாழ்வில் பெற்றோரும், உடன் பிறந்தோரும், வாழ்க்கைத் துணையும், பெற்று வளர்த்த பிள்ளைகளும், நாம் அதிகமாய் அன்பு செய்தவர்களும் நம்மைக் கைவிடுவது உறுதி. ஆனால் நாம் காயப்படும்போது நம் காயம் ஆற்றும் ஆண்டவர் நமக்குண்டு. காயப்பட்ட தம் கரங்களால் காயங்களில் சிந்தும் தம் உதிரத்தால் நம் காயங்களை ஆற்றும் ஆண்டவரிடம் நாம் திரும்புவோம். அவர் நம்மைக் கைவிடமாட்டார்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**



**15-04-2014** *தூய வாரம் - செவ்வாய்*

# குற்றவாளியாக்கப்படும் கிறிஸ்து

மத்தேயு 27 : 11-26

***"...அவர் மீது குற்றம் சுமத்தியபோது அவர் மறுமொழி எதுவும் கூறவில்லை"***
*மத். 27 : 12*

இயேசு குற்றவாளியாக்கப்பட்டது அநீதியானதும், உண்மையற்றதுமான செயலாகும். இயேசு குற்றமற்றவர் என்கிற உண்மையைச் சொல்ல பிலாத்து முயன்றார். இயேசு வாய்மையை மாத்திரமே சொன்னபடியால் மிக உறுதியோடு தேவையற்ற ஒன்றும் சொல்லாதிருந்தார். இயேசுவின் அந்த அமைதி பேச அனுமதிக்கபடாதோருடன் தம்மை அடையாளம் காட்டும் செயலாயிருந்தது. இயேசு அநீதியாய் குற்றமாக்கப்பட்டார். பஸ்காப் பண்டிகையின்போது கைதி ஒருவர் விடுவிக்கப்படுவது வழக்கமாயிருந்தது. யூதர்களைத் திருப்திப்படுத்தும்படிக்கு ரோமருக்கு எதிராகக் கலகம் பண்ணியவர்களின் தலைவனான பரபாசை இயேசுவுக்குப் பதிலாக விடுவிக்க வேண்டியதாயிற்று. எனவே அவன் செய்த குற்றம் இயேசுவின் மீது சுமத்தப்பட்டது.

ஆனால் குற்றவாளியாக்கப்பட்ட இயேசுவுக்காக ஒரே ஒரு பெண் பிலாத்துவிடம் வாதாடினார். பேச அனுமதிக்கப்படாத அந்த இயேசுவுக்காகத் தம் குரலைப் பதிவு செய்து கொள்ளவும் தைரியமாய் முன் வந்தாள். அவள் பிலாத்துவின் மனைவியாவார். அநீதியினால் நாசம் விளைவிக்கும் செயலை அடக்கி ஆளத் தெரியாத தன் கணவனிடம் அதைத் தடை செய்யக் கோரும் தைரியம் அவளுக்கு இருந்தது. உண்மைக்காக நிற்கும் தலைவன் ஒருவனாக நாம் பிலாத்துவை இவ்விடத்தில் பார்க்கக் கூடுமானால் அவன் மனைவியோ உண்மையை ஆதரிக்கும் தலைவியாய் இங்கே அறியப்படுகின்றாள்.

அன்று குற்றவாளியாக்கப்பட்ட கிறிஸ்து இவ்வுலகு சாராத இறையரசுக்காக நாம் ஆதரித்து வாதாடும்படிக்கு நமக்கு ஆணை

மாடுகளையும் விரட்டினார். நாணயம் மாற்றுவோரின் சில்லறைக் காசுகளைக் கொட்டி விட்டு மேசைகளையும் கவிழ்த்துக் போட்டார். மேலும் 2:16 இல் என் தந்தையின் இல்லத்தைச் சந்தை ஆக்காதீர்கள் என்று கூறினார்.

யோவான் நற்செய்தியில் நாம் படிக்கையில் ஏனைய மூன்று நற்செய்தி நூற்களைக் காட்டிலும் மிக அழுத்தமாக வர்த்தகம் செய்து கொண்டிருப்பவர்களை இயேசு வன்மையாய்க் கண்டிப்பதாகப் பதிவாகியுள்ளது.

## ஆலயம் தூய்மையாக்கப்படுதல் :

இயேசு எருசலேம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தியது. இறைவாக்கின் நிறைவேறுதலாகும். மேலும் இது ஒரு குறியீட்டுச் செயலாகவும் அமைந்துள்ளது. இயேசுவின் இச்செயல் சுரண்டல்களிலிருந்து ஆலயத்தைத் தூய்மைப்படுத்துவதுமல்லாமல் யூதரல்லாதோருக்கும் திறந்திருக்குமிடமாக்கினார்.

அந்த இயேசு இன்றும் நம் திருச்சபைகளைக் கெடுக்கும் எல்லாவற்றினின்றும் தூய்மையாக்க நம்மை அழைக்கிறார். நாம் வாய்மைக்காய் நிற்க முன் வருவோமா? புத்தாக்கம் பெற்ற திருச்சபைகளின் நிலை குறித்து நாம் பேச விரும்புகிறோமா? இயேசுவை நம் வாழ்வில் அனுமதித்து நம் திருச்சபையின் ஆலயங்களைத் தூய்மையாக்க நாம் ஆயத்தமா? நாமும் நமது ஆலயங்களும் தூய்மையாயிருக்கும் போது மட்டுமே நாம் கடவுளின் திருப்பணியைத் தொடர்வோராய் இருக்க முடியும்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**



**11-04-2014** *தவக்கால ஆறாம் வெள்ளி*

# உபவாசத்தின் ஆற்றல்

மத்தேயு 17 : 14-21

*“இவ்வகைப் பேய் இறைவேண்டலினாலும் நோன்பினாலுமேயன்றி வேறு எதனாலும் வெளியேறாது.” மத். 17 : 21*

பிறர் பிழை பொறுத்தலும், மன்னித்தலும் எளிதல்ல. நம் பிழைகளை விண்ணகத் தந்தை நமக்கு மன்னிக்கிறார். அவர் நமது குற்றங்களை நமக்கு மன்னிக்க வேண்டுமெனில் நாம் நமக்கெதிராகக் குற்றஞ்செய்தவர்களுக்கு மன்னிப்பது நிபந்தனையோடு சொல்லப்படுகிறது. ஆண்டவர் இயேசு கற்றுத் தந்த இறைவேண்டலில் நாங்கள் எங்களுக்கெதிராகக் குற்றம் செய்துள்ளோரை மன்னித்தால் மட்டுமே எங்கள் குற்றங்களை மன்னியும் என்று விண்ணுலகத் தந்தையிடம் இறைவேண்டல் செய்ய இயேசு கற்பித்தார்.

நம்முள் ஒருவர் நமக்கெதிராகப் பாவம் செய்ய நேர்ந்து விடின் மக்கள் முன்னிலையில் அல்ல, அவர் தனித்திருக்கும் போது அவரின் குற்றத்தைச் சுட்டிக்காட்ட அறிவுறுத்தப்படுகிறோம்.

**மத்தேயு 18.15-20**

மனமொத்திருந்து வேண்டுவோரின் இறைவேண்டலுக்கு இறைவனிடமிருந்து கட்டாயம் பதில் கிடைக்கிறது. நம்பிக்கையுள்ள சமூகம் ஒருவருக்கொருவர் மன்னிக்கும் சமூகமாகும். இந்த நிலையில் மட்டுமே சபை ஆற்றலோடு இறை வேண்டல் செய்ய முடியும். தலையில் எண்ணெய் தேய்த்தல் மகிழ்ச்சியின் அடையாளம். உண்ணா நோன்பிருக்கும் நாள்களில் தலைக்கு எண்ணெய் தேய்த்தல் விலக்கப்பட்டிருந்தது. ஆனால் இயேசு நோன்பிருத்தலைப் பற்றிக் கூறுகையில்,

**மத்தேயு 6:17 நீங்கள் நோன்பு இருக்கும் போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து முகத்தைக் கழுவுங்கள்.**

**மத்தேயு 6 : 18 அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது** என்பது நீங்கள் உங்கள் வழக்கம் போல உங்கள் நடத்தைகளில் மாற்றமில்லாமல் நடந்து கொள்ளுங்கள். மணவாளன் இயேசு நம்மோடிருக்கும் மகிழ்ச்சி நம்முடன் இருக்கட்டும் என்கிறார். வெளிவேடக்காரர்கள் ஒவ்வொரு வாரத்திலும் திங்கட்கிழமையும், வியாழக்கிழமையும் உபவாசிக்கின்றனர். அவர்கள் நோன்பிருப்பதை மற்றவர்கள் பார்க்க விரும்புகிறார்கள். அதற்காகத் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஏனெனில் அவர்கள் நோன்பிருத்தலின் பொருளையே இழந்து விட்டனர். நாம் நோன்பிருத்தலின் ஆற்றலை நம் விசுவாச அனுபவங்களில் காண இயலும். மோசே, எலியா ஆகியோரும் நோன்பிருந்தனர். இயேசுவும் நோன்பிருந்தார். நியாயப் பிரமாணத்தையும் தீர்க்கத்தரிசனங்களையும் நிறைவேற்றும் ஆற்றலைப் பெற்றுக் கொண்டார். இயேசுவின் உபவாசத்தின் வலிமை கடவுளுக்கு அவர் கீழ்ப்படிவதை நமக்குக் காட்டுகிறது. தாழ்மைக்கும், சேவை செய்தலுக்கும், பிறர் வாழ்வடைய நாம் துன்புறுதலுக்கும் ஆற்றல் தேவை. இயேசு அதனை நோன்பிருந்து பெற்றுக்கொண்டார். எல்லாச் சூழலிலும் கடவுளை நோக்கிப் பார்க்கும் ஆற்றலைப் பெற்றார்.

நோன்பிருந்து இறைவேண்டல் செய்வோர் மறைவாய் உள்ளதைக் காணும் கடவுளை நம்புவோம். அவரே ஆற்றலளிப்பார். கைம்மாறும் தருவார். சொற்களின் மிகுதியினாலோ அல்லது அழகு மொழி நடையினாலோ அல்ல, நாம் கேட்கும் முன்னரே நமக்குப் பலனளிக்கும் கடவுளவர். ஆற்றலின்மையில் நமக்கு ஆற்றலளிப்பவர் என நம்பி அவரிடம் நோன்பிருந்து வேண்டி ஆற்றல் பெறுவோம்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**



**14-04-2014** *தூய வாரம் - திங்கள்*

# தர்க்கத்திற்குள்ளாகும் கிறிஸ்து

யோவான் 2 : 13-22

*"...நீர் காட்டும் அடையாளம் என்ன?"* யோவா. 2 : 18

ஆலய சுத்திகரிப்பைக் குறித்து நான்கு நற்செய்தி நூற்களிலும் சொல்லப்பட்டிருப்பினும் நற்செய்தியாளர் யோவான் இயேசுவின் திருப்பணியில் ஆரம்ப நிலையின் நிகழ்வாகச் சித்தரிக்கின்றார். ஆனால் மத்தேயு 21: 12,13 மாற்கு 11: 15 - 17, லூக்கா 19: 45,46 ஆகிய பகுதிகளில் இயேசுவின் திருப்பணியில் ஏறத்தாழ கடைசி கட்ட நிகழ்வாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதை நாம் காண முடிகிறது. நற்செய்தியாளர் யோவான் இறையியல் கண்ணோட்டத்தில் எருசலேம் ஆலயத்தில் தூய்மையாக்கும் நிகழ்வைத் தம் நற்செய்தி நூலில் முதல் பகுதியில் குறிப்பிடுவது பொருத்தமானது எனக் கண்டு கொண்டார். இயேசுவை யூதர்களின் சமய முறைமைகளை எதிர்ப்பவராக அல்ல, மாறாக அவைகளை மாற்றுருவாக்கம் செய்பவராகக் குறிப்பிடுகிறார். எருசலேம் பேராலயத்தின் நிலை குறித்து அதிகமான செய்திகளை யோவானின் நற்செய்தி நூல் நமக்களிக்கிறது. அதில் ஆலயம் தூய்மையாக்கப்படுவதும், ஆலயம் குறித்த தர்க்கங்களையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

## *எருசலேம் ஆலயத்தின் அன்றைய நிலைமை :*

ஆலயம் மக்களினங்கள் அனைத்திற்குமுரிய மன்றாட்டின் வீடாக இருக்கும்படி கடவுள் விரும்பினார். ஆனால் அன்றைய யூதர்கள் ஆலயத்தைத் தங்கள் ஆதிக்கத்திற்குள்ளாக்கியதோடு யூதர் அல்லாதோரை ஓரங்கட்டினர். மேலும் யூதர்கள் யூதரல்லாதவர்களுக்கென்று ஒரு நீதிமன்றத்தை ஏற்படுத்தியதோடு யூதனல்லாத ஒருவன் துணிந்து அதை மீறிச் செல்ல நேர்ந்தால் அவனைச் சாவுக்குத் தள்ளினர். யூதரல்லாதவர்கள் தங்கள் நாணயத்தைக் கொடுத்து வாங்கும் பலிப் பொருளை ஆலயத்தில் பலியாக்க அனுமதிக்கவில்லை. யூதர்களில் நாணயம் மாற்றுவோர் தங்கள் சுயநலனுக்காக யூதரல்லாதோரை அநியாயமாய் நடத்தினர். இத்தகைய சூழலில் யோவான் 2:15 இல் நாம் காண்கிறபடி இயேசு கயிறுகளால் ஒரு சாட்டை பின்னி அவர்களெல்லாரையும் கோவிலிலிருந்து துரத்தினார். ஆடு

அன்பை மானிடம் உணர, கிறிஸ்துவின் வாழ்வும், போதனையும், துணை செய்கிறது. மானிட மீட்பிற்காக கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறையன்பு சிலுவையில் தியாக மரணத்தால் மனுக்குலம் வாழ்வு பெற உதவியது. அனைத்துலகமும் வாழ்வு பெற்றது.

ரோமப் பேரரசன் திபேரியு காலத்தில் ஆண்டவர் இயேசு அவமானச் சிலுவையை ஏற்றுக் கொடுமையாய்க் கொல்லப்பட்டார். உலக மக்களின் குற்றங்களுக்காகப் பிறரது நல்வாழ்வுக்காக, விடுதலையிழந்த, உரிமையிழந்த மக்களின் உரிமை வாழ்வுக்காக நம் மீது அன்பு கொண்டு இறைவன் தனது திட்டத்தை நிறைவேற்றி முடித்தார். சிலுவை வழியாக வெளிப்பட்ட இறையன்பின் திருவெளிப்பாட்டு, ஆன்மிகத் தகவுகளை நம் வாழ்வில் சொந்தமாக்கி இறையன்பை வெளிப்படுத்துவோம்.

அருள்திரு. S.G. **பீபின்**



**16-04-2014** *தூய வாரம் - புதன்*

# தூய்மையாக்கும் கிறிஸ்து

யோவான் 13 : 1-20

*"...நீங்களும் தூய்மையாயிருக்கிறீர்கள்."* யோவா, 13 : 10

சேவை செய்தலுக்கும், பாதுகாப்பதற்கும் இயேசுவே எஜமானராய் இருக்கிறார். அவர் சேவை செய்கிறார். பாதுகாக்கிறார். இயேசு தம் சீடர்களின் கால்களைக் கழுவி சேவை செய்து சாக வேண்டிய அவர்களைப் பாதுகாக்க அவர் சிலுவையில் மரித்தார். இயேசு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவும் நிகழ்வு தம் மரணத்தை முன் குறிப்பதாகவும், எதிர்பார்ப்பதாகவும், அதின் பொருளை உணர்த்துவதாகவும் அமைந்திருக்கின்றது.

இயேசு இவ்வுலகை விட்டுப் பிரிந்து தம் தந்தையிடம் செல்லும்வேளை வந்ததை அவர் அறிந்திருந்தார். (யோவான் 13:1). இயேசுவின் வெளிப்படையான செயல்கள் அதை நமக்குக் காட்டுகின்றது. (யோவான் 13:4) இயேசு பந்தியிலிருந்து எழுந்தார். தம் மேலுடையைக் கழற்றி வைத்து விட்டார். ஒரு துண்டை எடுத்தார். அதை இடுப்பில் கட்டிக் கொண்டார். ஒரு குவளையில் தண்ணீர் எடுத்தார். சீடர்களுடைய காலடிகளைக் கழுவினார். இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைத்தார். இயேசு சீடர்களின் காலடிகளைக் கழுவுகையில் பேதுருவிடம் அவர் வந்தபோது பேதுரு அவரிடம் நீர் என் கால்களைக் கழுவ விடவே மாட்டேன் என்றார். பேதுரு தம் இயல்பான தன்மையின்படி முன்பின் ஆலோசிக்காமல் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்ட இயேசு, தெளிவான விளக்கம் கொடுத்தார். இயேசு தம் பாடுகளைக் குறித்துச் சொன்னபோது அதைப் பேதுரு எதிர்த்தார். எனவே இயேசு அவரைக் கடிந்து கொண்டு, பின்னாகப் போ சாத்தானே என்றார் என மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய நற்செய்தி நூற்களில் வாசிக்கிறோம். ஆனால் யோவான் நற்செய்தியாளர் இயேசுவின் செயல்கள் அவருடைய மரணத்தை வெளிப்படுத்தினபடியால் இயேசுவிடம் நீர் என் காலடிகளைக் கழுவ விடவே மாட்டேன் என எதிர்ப்புத் தெரிவித்தார் என்கிறார். அவ்வேளையில் இயேசு நான் உன் காலடிகளைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்குப் பங்கு இல்லை என்றார். நம்மில் பலரைப்போலவே பேதுருவும் நிகழ்வுகளைப் பார்த்தார். ஆனால் அவர்

புரிந்துகொள்ளவில்லை. முதலில் இயேசு தன் பாதங்களைக் கழுவ அனுமதி மறுத்த பேதுரு நான் உன் காலடிகளைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்குப் பங்கில்லை என்றதும் யோவான் 13:9இன்படி அப்படியானால் ஆண்டவரே என் காலடிகளை மட்டுமல்ல, என் கைகளையும், தலையையும் கூட கழுவும் என்றார். இயேசு சீடர்களின் காலடிகளைக் கழுவுதல் உருவகமாகச் சொல்லப்பட்டதாகும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவங்களிலிருந்து கழுவப்படுதலை விளக்குகின்றது.. நாம் இயேசுவால் கழுவப்படாமலும், அவரின் மரணத்தில் பங்கடையாமலும் இருப்போமானால் கடவுளோடுள்ள உறவிலும் நாம் பங்கடைய வழியில்லை. இப்பகுதியில் நிரந்தரமாகக் கழுவப்படுவதையும், உடலின் சில பகுதிகள் எப்போதும் அழுக்கடைவதால் தொடர்ந்து கழுவப்படுவதையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். தூய்மையாக்கப்பட்டவர்களுக்கும், மன்னிக்கப் பட்டவர்களுக்கும் கூட தினமும் மன்னிக்கப்படுவது தேவையாகிறது. நாம் இயேசுவிடம் வருவது ஒரு தொடக்கமாகி கழுவப்படுதல் நிரந்தரமாகிறது. நம் காலடிகள் ஒவ்வொரு நாளும் அழுக்கடைகின்றன. சில நேரங்களில் நம் கால்களில் அதிகமாக அழுக்கடைவதும் உண்டு. இன்னும் சில வேளைகளில் நாம் வேண்டுமென்றே அழுக்கில் இறங்குகிறதுமுண்டு.

ஆண்டவருக்குக் கீழ்ப்பட்டு வாழ்தல் என்பது தினமும் சுத்தமாவதும், அவருக்கு நம்மை அர்ப்பணிப்பதும், மறுபடியும் நம்மை மதிப்பீடு செய்வதுமாகும். நாம் திருச்சபையின் அங்கத்தினர்களாயிருப்பதால் நாம் கடவுளின் பார்வையில் சரியாய் இருக்கிறோம் என்று உறுதி செய்துவிட முடியாது. பிறர் காலடிகளைக் கழுவும் ஒரு சமூகமாகத் திருச்சபை அழைக்கப்பட்டுள்ளது. சேவை செய்வதில் உண்மையான ஆற்றல் அறியப்படுகிறது. யூத அடிமை ஒருவன் கூட தன் எஜமானனின் கால்களைக் கழுவும்படி கட்டாயப்படுத்தப்படவில்லை. சில சீடர்கள் மரியாதைக்கு அடையாளமாகத் தங்கள் குருக்களின் பாதங்களைக் கழுவியுள்ளனர். எனவே பேதுரு கூறுகையில் 1 பேதுரு 5:5இல் ஒருவர் மற்றவரோடு பழகும்போது எல்லாரும் மனத்தாழ்மையை ஆடையாய் அணிந்திருங்கள் என்றார். இயேசுவின் வாழ்வில் மனத்தாழ்மையையும், சேவை செய்தலையும் காண்கிறோம். இயேசு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவி தூய்மையாக்கும் நிகழ்வு மீட்பையும், சேவை செய்தலையும் அறிவிக்கிறதினால் நம்மையும் அவர் நற்செய்திப் பணிக்காகவும், சமூக சேவைக்காகவும் அழைக்கிறார் என்று உணர்ந்து நாம் அவரைத் தொடர்வோம்.

அருள்திரு. S. **எலியேசர் சுவாமிதாஸ்**





மனிதனும் ஓர் ஒன்றிப்பில் ஒருங்கிணைக்கப்படுகின்றனர். இத்தகைய முழுமையான அன்பை மனிதன் எவ்விதத் தடையுமின்றிச் சுதந்திரமாக ஏற்கவேண்டியது அவசியமாகிறது. ஆகவே இறையன்பின் உச்சம் சிலுவை என்றால் அது மிகையாகாது.

## 2. “இறையன்பு இயேசுவில் வெளிப்பட்டது ”

இறைவன் உலகத்தின் மீது அன்பு வைத்ததற்கு அடையாளம் தம்முடைய ஒரே மைந்தராகிய இயேசுவைக் கையளிப்பதில் வெளிப்படுகிறது, என யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார். இறைவன் தம் மகனையே அளிக்கும்போது அன்பின் தன்மையை அளிப்பவராக வெளிப்படுகிறார். இயேசுவுடனான தொடர்பின் நேரத்தில் மட்டுமின்றி அவரின் வழியாக அன்பு செயல்படுத்தப்படுகிறது. தமது வாழ்வின் வழியாக இயேசு, அன்பினுடைய செயல் முறையின் வெளிப்பாடாக உள்ளார். மனிதருக்கு அதற்கெனச் சான்று பகர்கின்றவரும் இயேசுவே

எப்படி எனில்

(i) மனித இனத்தின் முழுமையில் தமது அன்பை வாழ்ந்து காட்ட செய்தார்

(ii) அன்பினுடைய ஆர்வமிக்க வேண்டுகோளை நாம் புரிந்து கொள்ளச் செய்தார்.

இதனால் அவரது ஆள் தன்மையில் மனிதன், இறைவனை அன்பு செய்து, அவரால் அன்பு செய்யப்படுகிறான். இந்த இறையன்பு இயேசுவின் வாழ்வின் வழியாகவும், சிலுவையின் வழியாகவும் இவ்வுலகிற்கு வெளிப்பட்டது.

## 3. இறையன்பு மானிட வாழ்வில் வெளிப்பட்டது

மனிதனைப் படைத்த இறைவன் மனிதன் பாவத்திலும், சாபத்திலும் வீழ்ந்த போது அவனைப் புறக்கணித்துத் தள்ளி விடாமல், இதயப் பூர்வமாய் அவனை அன்பு செய்தார். மனிதனை மீட்கவும், அவர்களைத் தம் பக்கமாய்த் திருப்பிக் கொள்ளவும், இயேசுவை மனுவாய் அவதரிக்கச் செய்து சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். இதுதான் மானிட வாழ்வில் வெளிப்பட்ட மாபெரும் இறையன்பு ஆகும். விரும்பப்படத்தக்க ஒரு நல்ல மனிதனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்க முன் வரலாம். ஆனால் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே இறைவன் நம் மீது வைத்தத் தமது அன்பை வெளிப்படுத்தினார். இறைவனின் நிலையான

**18-04-2014** | **புனித வெள்ளி**

# இறையன்பின் திருவெளிப்பாடு

## REVELATION OF GOD'S LOVE

| | |
|---|---|
| எசா. 52 : 13-53 : 6 | 1 பேது. 3 : 13-22 |
| திபா. 22 | மாற். 15 : 22-41 |

***"கிறிஸ்துவும் உங்கள் பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார். அவர் உங்களை கடவுளிடம் கொண்டு சேர்க்கவே இறந்தார்."*** *1பேதுரு 3 : 18*

தமிழ்நாடு இறையியல் கல்லூரி பேராசிரியர்களுள் ஒருவரான அருள்பணி முனைவர் தாமஸ் தங்கராஜ் அவர்கள் பாடிய ஒரு பாடலின் வரி

''மற்றவர்கள் மனம் மகிழ மன்னவனே நீ மரித்தாய்'' என்பது ஆகும். இறையன்பு உன்னதமானது நாம் எந்த நிலையில் இருந்தாலும் நாம் மகிழ இறைவன் தம் அன்பை நம்மிடம் வெளிப்படுத்துகிறார் என்ற சிறப்பினை எடுத்து இயம்புகின்றார். தூய பேதுரு தனது முதல் நிருபத்தில் உங்களைக் கடவுளிடம் சேர்க்கவே கிறிஸ்து இறந்தார் என்று எழுதுகிறார். இறையன்பு என்பது மனிதனை மீட்பதற்காக மனிதன் மீது செலுத்தப்பட்ட அன்பு ஆகும். இந்த அன்பு ஆழமான இறை மனித உறவை ஏற்படுத்துகிறது. இந்த இறையன்பு சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் வழியாக இவ்வுலகிற்கு வெளிப்பட்டது.

### 1. "இறையன்பு சிலுவையில் வெளிப்பட்டது "

சிலுவையில் இறையன்பு தனது உச்ச அளவையும், நடைமுறையையும், உறுதியான முறையில் வெளிப்படுத்துகிறது. தமது தந்தைக்குரிய தமது கீழ்ப்படிதலையும், தமக்குரியவர்களுக்கு அன்பையும் வெளிப்படுத்த இயேசு துன்புறவேண்டியிருந்தது. கடுமையான மனிதத் தனிமையில் சோதனை முழுவதிலும் இறைவன் அமைதி சாதிப்பதாகத் தோன்றிய போதும், அவர் மன்னித்து அனைவரையும் ஏற்பவராக உள்ளார்.

சிலுவையினால் இறைவன் முழுமையாக மகிமைப்படுத்தப்படுகிறார். இயேசுவும் அவருடன் அனைத்து மனுக்குலமும் எவ்வித ஒதுக்கீடுமின்றி இறைவனால் அன்புச் செலுத்தப்படும் தகுதியை அடைகின்றோம். இயேசுவினுடைய இறுதி செபத்திற்கேற்ப இறைவனும்



**17-04-2014** | **வியாகுல வியாழன்**

# நன்றித் திருவிருந்து : நினைவுகூருதல்

## EUCHARIST : IN REMEMBERENCE

| | |
|---|---|
| ஓசே. 6 : 1-6 | 1கொரி. 11 : 23-26 |
| திபா. 116 | லூக். 22 : 7-40 |

***"...என் நினைவாக செய்யுங்கள்."*** *1கொரி. 11 : 25*

இன்று இயேசு மீட்புச் செயல்பாட்டிற்காகத் தம்மையே கையளித்த நாள். தம்மையே கையளிக்கும் முன் அன்பு கட்டளைகளையும், பகிர்தலையும் அறிமுகப்படுத்தினார். ஆண்டவரின் இறுதி இராவுணவு அன்பின் விழாவாக, பகிர்தலின் விழாவாக அமைந்துள்ளது.

இஸ்ராயேலரின் சமய விழாக்களில் பஸ்கா மிக முக்கியமான விழாவாகும் காரணம் எகிப்தின் அடிமைத்தன விடுதலையை நினைவு கூர்ந்து கொண்டாடினர். எருசலேமைத் தவிர்த்து பிற இடங்களில் வாழ்வோரும் இவ்விழாவைக் கொண்டாட எருசலேம் செல்வது அவர்களின் வழக்கம்.

இந்தப் பஸ்கா விழாவை இயேசுவும் கொண்டாடுகிறார். இங்கு உணவு பரிமாறப்படும்போது இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தைகள் மிக முக்கிமானாவைகள் ஆகும். ஏனெனில் இஸ்ரயேலர்கள் பஸ்கா விருந்து உணவு அருந்தும் போது, குடும்பத்தில் பெரியவர் கடந்த கால அனுபவம், அதாவது அடிமைத்தனம், விடுதலை, கசப்பான அனுபவங்களை அதாவது வரலாற்றைத் தங்கள் பிள்ளைகளுக்கு கூறி பின் உணவு அருந்துவர்.

ஆனால் இயேசு இங்கு கூறிய சொற்றொடர் புதுமையானது ஆகும். அப்பத்தை எடுத்து கடவுளைப் போற்றிவிட்டு, அதைப் பிட்டு சீடர்களுக்குக் கொடுத்து, '' இது உங்களுக்கான என் உடல்'' என்றார்.

பின்பு கிண்ணத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களிடம் கொடுத்து, ''இந்த கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக செய்யுங்கள்'' என்றார். (1 கொரி. 11: 25)

இன்று திருச்சபை இதனை ஒரு திருவருட்சாதனமாக ஏற்று பின்பற்றி வருகிறது. நாம் அதன் பொருள் உணர்ந்து இதில் பங்கு கொள்கிறோமா?

## 1. குடும்பத்தில் மகிழ்வு

இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் 430 ஆண்டுகள் அடிமைகளாக இருந்தனர் என்பது வரலாற்று உண்மை. இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க கடவுள் மோசே வழியாக செயல்பட்டார். விடுதலைக்கு முன் முதல் பஸ்காவைக் குடும்பமாகக் கொண்டாடினர். விடுதலை பெறப் போகிறோம் என்கிற மகிழ்ச்சியில் எல்லாக் குடும்பத்தாரும் கொண்டாடினர்.

இயேசுவும் தம் சீடர்களுடன் இணைந்து ஒரு குடும்பமாய் பஸ்காவைக் கொண்டாடினார். சீடர்கள் விருந்திற்கான ஆயத்தங்களைச் செய்தனர். இயேசு விருந்தில் தலைமை வகித்தார்.

திருவிருந்திலும் நாம் ஒரே குடும்பமாக இணைக்கப்படுகிறோம். கடவுளின் பிள்ளைகள் என்னும் கூட்டுக் குடும்பமாக இணைகிறோம். அதிலும் ஒரே பாத்திரத்தில் பங்கு பெறுகிறோம். ஆக இது ஒரு குடும்பக் கொண்டாட்டம் ஆகும்.

## 2. கூடிவருவதில் கொண்டாட்டம்

உறவினர்கள் கூடுகின்ற இடம் மகிழ்வாய் இருக்கும். (எ.கா திருமண இல்லம்). அதுபோன்று பஸ்கா முக்கிய விழாவாகும். மக்களை ஒன்றிணைக்கும் விழாவாகும். எருசலேமை விட்டு வெகுதூரத்தில் வாழ்ந்தாலும் பஸ்காவைக் கொண்டாட எருசலேம் வருவது அவர்களது வழக்கமாக இருந்தது. ஒருவரை ஒருவர் சந்திக்கவும், உறவை அன்பை பகிரவும், வளர்த்திடவும் வலுப்படுத்திடவும் உதவியது. (திபா. 133:1) ஆக பஸ்கா விழா மக்களை ஒன்று கூட்டியது.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிய மக்கள் ஒன்று கூடிய இடங்களில் (இல்லத்தினில்) அப்பம் பிட்டு திருவிருந்தைக் கொண்டாடினர். கூட்டுறவை வலுப்படுத்தும் விருந்தாக அது அமைந்தது (தி.ப. 2: 42)





இன்று நாம் திருச்சபைகளில் திருவிருந்திற்கு கொடுக்கும் முக்கியத்துவம் என்ன? எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பார், நானும் அவரின் நிலையான உறவில் நிலைத்திருப்பேன் என்றார் இயேசு கிறிஸ்து.

## 3. முன்மாதிரியுள்ள வாழ்வுக்கான கொண்டாட்டம்

இயேசு கிறிஸ்துவின் இறுதி பஸ்கா விருந்தைக் குறித்து யோவான் நற்செய்தி ஆசிரியர் விரிவான செய்திகளைத் தருகிறார் (யோவா. 13: 1-20) குருவாகிய இயேசு கிறிஸ்து தம் சீடர்களின் பாதங்களைக் கழுவுகிறார். உலகின் எல்லா ஆற்றல்களும், அதிகாரமும் தன்னகத்தே கொண்டிருந்தாலும் அதனை தமது தாழ்மையில் வெளிப்படுத்தினார்.

மானிட மகன் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், பலரை மீட்கும் பொருளாக தம் ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். (மாற் 10 : 45)

அடிமையின் சாயலை ஏற்று தம்மை வெறுமையாக்கினார் (பிலி. 2: 7). ஆக சீடர்களின் காலடிகளைக் கழுவி ஒரு முன்மாதிரியுள்ள தாழ்மையான வாழ்வுக்கு வழிகாட்டியானார். எப்படி கொண்டாடவேண்டும் என்று கூறிச் செல்லாமல், எப்படிக் கொண்டாட வேண்டும் என்பதைச் செயலில் காட்டி நமக்கு முன்மாதிரியானார்.

கிறிஸ்துவின் அன்பர்களே, உறவின் உச்சபட்ச இறுதி கட்ட வெளிப்பாடே இயேசு கிறிஸ்து தமது உடலையும், இரத்தத்தையும், நமக்கு கொடுத்தது ஆகும். பொருள் உணர்ந்து கொண்டாடுவோம். பிரிவினை, பகைமை, ஆகியன களைந்து சமுதாயத்தில் ஒரே குடும்பமாய் கூடி வாழ நம்மை அர்பணித்து திருவிருந்தில் பங்கு பெறுவோம்.

அருள்திரு. S. **அருள் ஜெபசிங்**

### 3. இறையாளுகைக்குள் பங்கேற்றார்

லூக்கா 23:43இல் மனந்திருந்திய குற்றவாளியிடம் “இன்று நீ என்னுடன் பரதீசில் அல்லது பேரின்ப வீட்டில் இருப்பீர்” என்று இயேசு கூறினார். நல்லவர்கள் பரதீசுக்கும் கெட்டவர்கள் பாதாளத்துக்கும் செல்வர் எனும் நம்பிக்கை யூதர்களிடம் இருந்தது. ‘பரதீசு’ என்பது பாரசீக வார்த்தை. பெர்சிய மன்னன் யாரேனும் ஒருவரை மதிப்பளிக்க விரும்பினால் அரசத் தோட்டத்தில் அவருடன் உலா வர (Companion of the Garden) அனுமதிப்பாராம். இதற்கு சுவர் எழுப்பப்பட்ட தோட்டம் (Walled Garden) என்றும் பெயர் உண்டு. இயேசு அழியாத நித்திய தோட்டமாகிய விண்ணில் (பரதீசில்) தம்முடன் வாழும் பாக்கியத்தை குற்றத்தை உணர்ந்து அறிக்கை செய்த குற்றவாளிக்கு வழங்குகின்றார். வெளி 2:7இல் வெற்றி பெறுவோருக்கு கடவுளின் தோட்டத்தில் உள்ள (பரதீசில்) வாழ்வு தரும் மரத்தினுடைய கனியை உண்ணக் கொடுப்பேன் என்று ஆவியார் எபேசு சபைக்குக் கூறுகின்றார். ‘ஆண்டவருடைய தெரிதலின் அருள்பாலிப்பு’ (The condescension of our Lord’s choice) எனும் நூலில் மனந்திருந்திய குற்றவாளி பரதீசுக்குள் செல்லும் நிகழ்வு விளக்கப்பட்டுள்ளது. பரதீசினுள் செல்லுகையில் ‘யார் இவர்’? என்று விண்ணிலுள்ளோர் ஆண்டவரிடம் கேட்டனராம். அப்போது ஆண்டவர் ‘எனது பாடுகளின் போது ஆறுதலாயிருந்தவர்’ என்று பதிலளித்தாராம்.

#### *முடிவுரை*

‘சிலுவைநாதர் இயேசுவின்
பேரொளி வீசிடும் தூய கண்கள்
என்னை நோக்கிப் பார்க்கின்றன தம்
காயங்களையும் பார்க்கின்றன’

குற்றவாளி ஒருவர் இயேசுவின் பார்வையால், காயங்களால் கவரப்பட்டு தன்னை அர்ப்பணித்து பரதீசுக்குள் சென்றார். நம் நிலை என்ன?

அருள்திரு. முனைவர் **ஆ. இராயப்பன் ஐசக்**



**18-04-2014**

## சிலுவைத் திருமொழிகள்

ஏ.ஜே. காசிப் என்பவர் கூறிய உண்மை நிகழ்ச்சியை வில்லியம் பார்க்கிளே எனும் திருமறை விளக்கவுரையாளர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ஜார்ஜ் ஆதம் சுமித் ஒரு நாள் இரயிலில் பயணம் செய்கையில் கத்தோலிக்கக் கிறிஸ்தவ குரு ஒருவரும் அவருடன் பயணம் செய்தார். அந்த இளங்குரு மேற்கு ஆப்பிரிக்காவுக்குத் திருப்பணி புரிய பயணித்துக் கொண்டிருந்தார். அக்காலத்தில் ஆப்பிரிக்காவில் ஒரு வெள்ளையரின் வாழ்வு ஓராண்டிற்கு மேல் நீடிக்காது. அதற்குள் அங்குள்ள மக்கள் அவர்களைப் பிடித்துத் தின்று விடுவார்கள். எனவே ஆதம் சுமித் அந்த இளங்குருவிடம் அங்கு செல்லாமல் வேறு ஏதாவது ஓர் இடத்திற்குத் திருப்பணி புரியச் செல்லும்படி அறிவுரை கூறினார். ஆனால் அக்குரு தனது உறுதியிலிருந்து சற்றும் நிலைகுலையவில்லை. பின்னர், இரயிலிலிருந்து இறங்குகையில் ஆதம் சுமித் மீண்டும் ஒருமுறை இளங்குருவைப் பார்த்து, “அங்கு போக வேண்டாம்” எனக் கெஞ்சும் குரலில் கேட்டார். அப்போது அக்குரு அவரைப் பார்த்து, தன்னிடம் வைத்திருந்த இயேசுவின் சிலுவையை உயர்த்திக் காண்பித்து “அவர் என்னிடம் அன்பு வைத்து எனக்காகத் தம்மையே சிலுவையில் அர்ப்பணித்தார். நான் அவருக்காக என்னை அர்ப்பணிக்க வேண்டாமா?” எனக் கூறி புன்முறுவலுடன் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

பால் பில்கீமர் (Paul Billheimer) எனும் இறையியலாளர் “ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியும் சிலுவைக்கே நியமிக்கப்பட்டுள்ளான். (Every Christian believer is destined for the cross). அவனுடைய பாதை சிலுவைப் பாதையே, அவன் அனுதினமும் சிலுவையிலேயே வாழ்க்கை வாழ வேண்டும். சிலுவையிலிருந்து எப்போது அவன் கீழிறங்குகிறானோ அன்று அவன் சாத்தானால் மேற்கொள்ளப்படுகிறான்” என்று கூறுகின்றார். சிலுவை கிறிஸ்தவ விசுவாசத்தின் முத்திரை (Badge of the Christian Faith), கிறிஸ்தவ விசுவாசத்தின் மையம் (Centre of Christian Faith) என்றெல்லாம் கருதப்படுகின்றது.

சிலுவையில் கொடிய குற்றவாளிகளை உரோமையர்கள் அடித்துக் கொலை செய்தார்கள். அந்தச் சிலுவை இழிவானதும், கீழ்த்தரமானதும்,

தண்டனை நிறைவேற்றும் கருவியாகவும் காணப்பட்டது. ஆனால் இயேசுவின் மரணத்தால் சிலுவை மீட்பின் சின்னமாக மாறியது. ஒவ்வொரு பெரிய வெள்ளியும் இயேசுவின் சிலுவைப் பாதையையும், சிலுவை மொழிகளையும் தியானிக்கிறோம். அது பாரம்பரியக் கடமையை நிறைவேற்றும் செயலாக அமையக் கூடாது. 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் நாள் அருட்பணியாளர் கிராகாம் ஸ்டூவர்ட் ஸ்டெயின்ஸ் அவர்கள் தம் இரு மகன்களோடு ஜீப்பில் எரிக்கப்பட்ட நிகழ்வை வெளியிட்ட ஆங்கிலப் பத்திரிகை ஒன்று "இயேசு மீண்டும் சிலுவையிலறையப்பட்டார் (Jesus is crucified Again)" என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டது. இயேசுவைச் சிலுவையிலறைதல் நிகழ்காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒன்றாக உள்ளது.

இன்று சிலுவை மொழிகளைத் தியானிக்கும் போது சிலுவை நமது பாவத் தன்மைகளை, தவறுகளை, அநீதிகளை, நீதியரை நாம் ஒதுக்குவதை, உடைந்த உறவுகளை நமக்கு வெளிப்படுத்தவும் அதே நேரத்தில் கடவுளின் விடுவிக்கும் அன்பினை நமக்கு உணர்த்தவும் நாம் தியானத்துடன் அமர்ந்திருப்போம்.

அருள்திரு. முனைவர் **ஆ. இராயப்பன் ஐசக்**





அனைத்து மாணவர்களும் பார்த்தனர். பின்னர் ஒவ்வொருவராக அவர்கள் பார்த்தது என்ன என்று வினவினார். ஒரு மாணவரைத் தவிர அனைவரும் தாங்கள் சுவரிலிருந்த கரும்புள்ளியைப் பார்த்ததாகக் கூறினர். இன்று மாணவர்களைப் போலவே நாமும் சிலுவையில்அறையப்பட்ட இயேசுவைப் பார்க்காமல் வேறு எவைகளையோ, எவர்களையோ பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே, பேரின்பப் பெருவாழ்வு வாழ முடியாமல் உலக வாழ்வில் மயங்கிக் கிடக்கிறோம்.

## 2. தன்னை உணர்ந்தார்

லூக்கா 23:39இல் ஒரு குற்றவாளி இயேசுவிடம் தன்னைக் காப்பாற்ற வேண்டுகிறார். ஆனால் லூக்கா 23:41இல் மற்ற குற்றவாளி நாம் தண்டிக்கப்படுவது முறையே என்று கூறுகின்றார். எனவே விடுவிக்கும்படி கேட்டவர் தனது குற்றத்தை உணரவில்லை என்றும் இரண்டாமவர் குற்றமற்றவர் தண்டிக்கப்படுகையில் தனது குற்றத்தை உணருகிறார் என்றும் நாம் அறியலாம். உரோமை அரசு குற்றவாளி என்று கூறிய போது அதனை அவர் ஏற்கவில்லை. ஆனால் இயேசுவைப் பார்த்த போது நாம் தண்டிக்கப்படுவது முறையே என்கிறார். தன்னை உணர்ந்தவர் வ. 42இல் நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னை நினைத்தருளும் என வேண்டுகிறார். எசாயா ஆலயம் வந்த போது ஆண்டவரைப் பார்த்தார். (எசா 6:1). ஆண்டவரைப் பார்த்தவர் தன்னை உணர்ந்தார். (எசா 6:5)

நாம் செய்யும் தவறு நம்மைப் பார்த்து உணராததே, இயேசுவைப் பார்க்கிறோம். அழுகிறோம், கவலை கொள்கிறோம், ஆனால் இயேசுவின் காயங்கள் நம்மைத் தாக்கம் செய்ய அனுமதியாமலிருக்கிறோம். திருச்சபை ஒன்றில் சில ஆண்டுகளுக்கு முன்பு பெரிய வெள்ளிக்கிழமை ஆராதனைக்குப் பின்பு கஞ்சி கொடுப்பதா, மோர் கொடுப்பதா என்பதில் இரு குழுவினருக்கு இடையே பெருங் குழப்பம் ஏற்பட்டது. இந்நிகழ்வு இயேசுவின் சிலுவை மரணம் விசுவாசியின் வாழ்வில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதையே காட்டுகின்றது. அருட்பணியர் ஒருவரிடம் ஆதிவாசி மனிதன் வந்து, "ஐயா நான் ஐம்பது ஆண்டுகளாகக் கொடிய பாவங்கள் செய்து வருகின்றேன். நீங்கள் கூறுகிறபடி இயேசுவின் இரத்தம் எனது ஐம்பது ஆண்டுகாலப் பாவங்களுக்கும் மீட்பு தர முடியுமா?" என்று கேட்டான் அதற்கு அருட்பணியர், "நீ பாவங்களை உணர்ந்து அறிக்கை செய்தால் உனது எத்தகைய பாவங்களையும் மன்னிக்க ஆண்டவர் ஆற்றல் பெற்றவராயிருக்கிறார்" என்று பதிலளித்தார்.

*இரண்டாம் திருமொழி*

# மனமுவந்து ஏற்கும் அங்கீகாரம்

***“நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்.”*** *(லூக். 23 : 43)*

லூக்கா 23:33இல் இயேசுவின் சிலுவையருகே இரண்டு குற்றவாளிகள் சிலுவைகளில் அறையப்பட்டனர் என்று கூறப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் பெயர் கெஸ்ற்றாஸ் என்றும் இன்னொருவர் பெயர் திஸ்மாஸ் என்றும் பாரம்பரியம் ஒன்று கூறுகின்றது. இவர்கள் இருவரும் பரபாசைப் போன்று அரசியல் குற்றவாளிகளாயிருக்கலாம் என வரலாற்றறிஞர் கருதுகின்றனர். சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளில் ஒருவர் இயேசுவைப் பார்த்து, இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும் என்றார். இவர் எந்தப் பக்கத்தில் தொங்கிக் கொண்டிருந்தவர் எனத் திருமறை குறிப்பிடவில்லை. ஆனால் இவர் இயேசுவுடன் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றார். இவரால் எப்படி பேரின்ப பெருவாழ்வைப் பெற முடிந்தது என்பதைத் தியானிப்போம்.

## *1. இயேசுவைப் பார்த்தார்*

இயேசுவின் சிலுவையின் மீது ‘நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்’ என்று எழுதியிருந்தது (யோவான் 19:19). அது எபிரேயம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டிருந்தமையால் யூதருள் பலரும் இந்த அறிக்கையைப் படித்தனர் (யோவான் 19:20). அவர்கள் இவ்வறிக்கையைப் படித்து கேலி செய்ய நினைத்தனரே (யோவான் 19: 21-22) தவிர இயேசுவைப் பார்க்க முன்வரவில்லை. இயேசுவுடன் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவனும் அவ்வாசகத்தைப் பார்த்து அவரைப் பழித்துரைத்தான் (லூக்கா 23:39). ஆனால் மற்றவன் அவனைக் கடிந்து கொண்டதோடு இயேசுவையும் நோக்கிப் பார்த்தான் (லூக் 23:40). இரண்டு பேருக்கும் ஒரே வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஒருவர் பயன்படுத்துகின்றார். மற்றவர் பயன்படுத்தத் தவறுகிறார். எனவே பேரின்பப் பெருவாழ்வுக்குள் அவரால் செல்ல முடியவில்லை.

“இயேசு இறந்தவரை உயிரோடு எழுப்பியதைக் கண்ணால் கண்ட யூதர்கள் அவரை மேசியாவாக ஏற்றுக் கொள்ள மறுத்தனர். ஆனால் சிலுவையில் தங்களோடு அறையப்பட்டு உயிர் விட்டுக் கொண்டிருக்கும் இயேசுவைக் கண்ட குற்றவாளி அவரை மேசியாவாக ஏற்றுக் கொள்ளுகிறான் எனத் தூய அகஸ்டின் கூறுகின்றார். ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம் அருகிலிருந்த வகுப்புச் சுவரைப் பார்க்கக் கூறினார்.



*முதலாம் திருமொழி*

# மன்னிப்பிற்கான மன்றாட்டு

***“தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை.”*** *(லூக். 23 : 34)*

இயேசு உரோமைக் காவலர்களால் கல்வாரிக்கு நேராக வழிநடத்தப்பட்டார். இரு கள்வர்கள் அவருடைய இருபக்கத்திலும் சிலுவையில் நிறுத்தப்பட்டனர். பாவமற்ற இறைமகன் வழிப்போக்கராலும், போர்ச்சேவகராலும் அவமானப்படுத்தப்பட்டு எள்ளி நகையாடப்பட்டார். இருப்பினும், வானத்துக்கு நேரே தம் தலையை உயர்த்தி முதலாம் திருமொழியைக் கூறினார். இவ்வார்த்தையில் வெளிப்படும் மூன்று உண்மைகளைத் தியானிப்போம்.

## *1. பாவத்தை உணர்த்துகின்றது*

வசனம் 34இன் பின்பகுதியில் இவர்கள் அறியாமல் செய்வதினால் தந்தை, இவர்களை மன்னிக்க வேண்டுமென்று ஆண்டவர் வேண்டுதல் செய்கின்றார். யார் அறியாமல் செய்தனர்? என்று கேள்வி எழுப்பினால் பல விடைகள் கிடைப்பதை நாம் அறியலாம். சிலுவையைச் சூழ்ந்து பலவித மக்கள் நின்று கொண்டிருந்தனர். மிக அருகில் அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள், உரோமைப் போர்வீரர்கள், மிகக் கொடிய வகையில் நடத்தியவர்கள் எனலாம். ஆனால் அவர்களுக்குக் கொடுத்த சிலுவையில் அறையும் பணியை அவர்களால் மீற முடியாதபடி மற்றவர்களால் தீட்டப்பட்ட சதித் திட்டத்தில் குறைந்த அளவிலேயே அவர்கள் பங்கு கொண்டனர். இன்னொரு வகையில் கூறினால் உரோமை ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்குக் கீழ்ப்படிய வேண்டிய கட்டாயத்தில் அவர்கள் இருந்தனர். அதை மீறும் பட்சத்தில் மரணம் கூட அவர்களுக்குக் காத்திருந்தது என்று நாம் கருதலாம். எனினும் ஆண்டவரைச் சிலுவையில் அறையும் நிகழ்வில் அவர்களும் பங்கு கொண்டார்கள் என நாம் உறுதியாகக் கூற முடியும். அறியாமல் செய்தனர் என்ற இயேசுவின் மன்றாட்டில் சமயத் தலைவர்கள், மறைநூல் அறிஞர், அவரைக் காட்டிக் கொடுத்த அவரது சீடர், அவரைச் சிலுவையில் அறையும் என்று கத்திய மக்கள் திரள், தான் காரணம் அல்ல என்று கைகழுவிய பிலாத்து, அவருடன் சுமார் மூன்று ஆண்டுகள் சுற்றி வாழ்ந்தும் துன்பத்தில் விலகி ஓடிய சீடர்கள், சனகரிம் சங்கத்தில் எதிர்ப்பு தெரிவிக்காமல் இறுதியில் மனம் நொந்து சேவை செய்த நிக்கொதேமு, யோசேப்பு போன்ற பலவகையான மக்கள் அடங்கியிருக்கலாம்.

மேற்கூறிய மக்கள் அனைவரும் தீவிரமாகவோ, மறைமுகமாகவோ இயேசுவின் சிலுவை நிகழ்வுக்குக் காரணமாக இருந்தனர். இவர்கள் அனைவரும் குற்றவாளிகள் எனப்பட்டாலும் திருமறையின்படி இவர்கள் அனைவரும் உலகிலுள்ள மக்களின் பிரதிநிதிகளே. ஏனெனில் உலகின் பாவமே இயேசுவைச் சிலுவையில் அறைந்தது. ஒவ்வொருவரும் அடுத்தவரைக் கைகாட்டலாம். நீக்ரோ சமயத் தலைவர் ஒருவர், இயேசு சிலுவையிலறையப்படும் போது நீ எங்கிருந்தாய், என்று கேள்வி எழுப்பினார். நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் சிலுவை மரணத்திற்குச் சம அளவில் பங்கு உடையவர்கள், நாம் செய்யும் தொடர் பாவங்களே இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொண்டிருக்கின்றது. நமது பாவ மன்னிப்புக்காக மன்றாடும் வார்த்தையே இம்முதல் வார்த்தையாகும்.

## 2. போதனையைச் சாதனையாக்குகின்றது

மத்தேயு 5:44இல் உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் என்றும் மத்தேயு 6: 14,15இல் மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார் என்று இயேசு சீடர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அப்போதனையை இயேசு இம்முதல் திருமொழியில் சாதனையாகக் காட்டுகின்றார்.

இயேசுவைப் போல அவரது சீடர்களும் போதனையை செயலில் காண்பிக்க வேண்டும் என ஆண்டவர் விரும்புகின்றார். ஸ்தேவான் முதல் கிளாடிஸ் ஸ்டெயின்ஸ் வரை பல கிறிஸ்தவ அடியார்கள் இப்போதனையைச் செயலில் காண்பித்தனர். எனினும் கிறிஸ்தவர்களுக்குள்ளே இன்று பழிவாங்கும் எண்ணம் அதிகரித்து வருகிறது. ஏ.டபிள்யூ. தாசர் என்பவர் தமது நூலில் ஒரு மாறிய ஆளுநரின் இரக்கச் செயலைக் குறித்து செய்தி ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவ இளைஞன் ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட போது அவனுக்க மன்னிப்பு வழங்க ஆளுநர் விரும்பினார். எனவே அத்தண்டனையின் முந்தைய நாள் ஒரு பாதிரியார் வேடத்தில் சிறைக்குச் சென்றார். அவனைச் சந்தித்து உரையாடுகையில் ஒரு வேளை உனக்கு மரண தண்டனையிலிருந்து விடுதலை கிடைத்தால் நீ என்ன செய்வாய், என்று கேட்டார். அதற்கு அவ்விளைஞன் நேரடியாகச் சென்று எனக்குத் தண்டனை வழங்கிய நீதிபதியின் தலையை வெட்டுவேன் என்று பதிலளித்தான். அதைக் கேட்ட ஆளுநர் மிகவும் சோகத்துடன் திரும்பினார்.

நாம் பிறருடைய குற்றங்களை மன்னிக்கவேண்டும் என்பதற்காகவே மத்தேயு 6:12இல் 'எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்' என்று ஆண்டவர் இயேசு நமக்கு இறைவேண்டல் செய்ய கற்றுத் தந்தார். பிறருடைய குற்றங்களுக்கு எதிராக வழக்கு மன்றம் செல்லுதல், அவமானப்படுத்துதல், கோபித்துக் கொள்ளதல், முகத்தைத் திருப்புதல் போன்ற செயல்களில் ஈடுபடும் நமக்கு முதலாம் திருமொழி அறைகூவலாக உள்ளது.





## 3. பாசத்தை வெளிப்படுத்துகின்றது

"சிலுவையில் அறையப்பட்டோர் பொதுவாக தாங்கள் பிறந்த நாளை, தம்மைப் பெற்ற தாயை, தமக்குத் தண்டனை தந்தோரைச் சபிப்பர், முன்னால் நிற்போரை உமிழ்வர்" என செனேகா (Seneca) எனும் வரலாற்றாளர் கூறுகின்றார். எனவே தேவைப்பட்டால் இத்தகையோரின் நாவை வெட்டிவிடும் வழக்கமும் இருந்தது என்று மற்றுமொரு வரலாற்றாளரான சிசெரோ (Cicero) குறிப்பிடுகின்றார். எனவே இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது என்ன செய்வார் என்ற எதிர்பார்ப்பு அருகில் நின்ற அனைவரிடமும் இருந்தது. அத்தகைய எதிர்பார்ப்பின் சூழலிலேயே இயேசு முதலாவது மொழியைக் கூறுகின்றார். லூக்கா 23:24ஆம் வாக்கியம் 'அப்பொழுது' என்று தொடங்குகின்றது. எப்பொழுது, என்று கேள்வி எழுப்பினால் 'மனிதன் தன்னால் செய்ய முடியும், அனைத்து செயல்களையும் செய்து முடித்த பின்பு' என்று பதில் கிடைக்கும். அத்தைகைய கொடிய செயல்களுக்குப் பின்பு இயேசு இவர்களை மன்னியும் என்று தந்தையிடம் வேண்டுவது அவரது அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றது.

I கொரிந்தியர் 13:4ஆம் வசனத்தில் அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது என்றும் 13:7இல் அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும் என்றும் சொல்லப்பட்டதற்கு இலக்கணமாக இயேசு சிலுவையில் அன்பை வெளிப்படுத்துகின்றார். ஜார்ஜ்விசர்ட் என்னும் ஆண்டவரின் ஊழியக்காரர் தூக்கிலிடப்படும் வேளையில் அதை நிறைவேற்ற வேண்டியவன் தயங்கினானாம். உடனே ஜார்ஜ்விசார்ட் அவன் அருகில் சென்று அவன் கையைப் பிடித்து முத்தமிட்டு இதோ நான் உன்னை மன்னிக்கிறேன் என்பதற்கு இதுவே அடையாளச் செயல் என்று கூறினார். பின்னர் அவன் தூக்குத் தண்டனையை நிறைவேற்றினான். கிறிஸ்துலின் சீடர்கள் அவரைப் போல அன்பு காட்ட அழைக்கப்படுகின்றோம்.

## முடிவுரை

ஆண்டவர் சிலுவையில் உரைத்த முதல் திருமொழி நமது பாவங்களை நமக்கு உணர்த்துகின்றது. ஆண்டவரின் வார்த்தைகளை நமது செயல்களில் காண்பிக்கவும், பிறரை அன்பு செய்யும் நம்மை அழைக்கின்றது.

அருள்திரு. முனைவர் **ஆ. இராயப்பன் ஐசக்**

### 2. இறைசித்தத்தை நிறைவேற்றுதல்

பவர் மொழிபெயர்ப்பில் வேத வாக்கியம் ‘நிறைவேறத்தக்கதாக’ தாகமாயிருக்கிறேன் என்றார். எனவே, இயேசு தாகமாயிருக்கிறேன் என்று உரைத்தது அவர் இறை சித்தத்தை நிறைவேற்றி முடித்தார் என்பதைக் காட்டுகின்றது. ஆதிப் பெற்றோர் ஆதாம் ஏவாளின் பாவம் வயிற்றுப் பசியினால் வந்தது. விலக்கப்பட்ட கனியை உண்பதற்குச் சுவையானது என்று கண்டு உண்டனர். இதனால் மனுக்குலம் முழுவதையும் பாவத்திற்குள்ளாக்கினர். அந்தப் பாவத்தைப் போக்குவதற்காக உலகில் வந்தவரே கிறிஸ்து. அவரும் ஆதிப் பெற்றோர் பசியடைந்தது போலவே தாகமடைகின்றார். அவருக்கு கசப்பு நிறைந்த காடி கொடுக்கப்பட்டது. இதனால் ஆதிப் பெற்றோர் செய்த பாவம் நிவிர்த்தியாக்கப்பட்டது என்பது சிலுவையில் அடையாளமாகக் காட்டப்பட்டது. விலக்கப்பட்ட கனியினால் வந்த பாவம் கசப்பு நிறைந்த காடியினால் பரிகாரம் செய்யப்பட்டது என்பதை அடையாளமாகக் கருதலாம்.

மனிதனைப் பாவம் செய்யத் தூண்டுவது அவனது மனமாகும். மனித மனம் இன்னும் வேண்டும், வேண்டும் (தா, தா) என்று அவனை அழைக்கிறது. அதற்கு உடன்பட்டுச் செல்லும் போது அவனது ஆன்மா கடவுளைக் காண தாகமடைகின்றது. இங்கு இயேசு மனித பாவங்களுக்காகத் தாகமடைந்து இறைசித்தத்தை நிறைவேற்றுகிறார். அவருடைய தாகத்தைத் தீர்க்க வேண்டுமானால் நாம் பாவம் செய்வதை நிறுத்தி இறைத்திட்டத்தைச் செயலாற்ற நம்மை அர்ப்பணிக்கவேண்டும்.

### 3. இறைத் தேவையை உணர்தல்

யோவான் 4:13,14இல் இயேசு இந்தத் தண்ணீரைக் குடிக்கும் ஒவ்வொருக்கும் மீண்டும் தாகம் எடுக்கும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது...... என்கிறார். இயேசு கூறிய ஐந்தாம் திருமொழி உலக மக்களின் தேவையை அடையாளப்படுத்தும் சொல்லாகும். மனிதர்கள் வாழ்வின் தேவைகளுக்காக நம்மைச் சுற்றிலும் அழுது கொண்டிருக்கிறார்கள். பசியினாலும், நோயினாலும், கொடுமைகளாலும் சாகின்ற மக்களை நேரடியாகவும், தொலைக் காட்சியிலும் பத்திரிகைகளிலும் பிற ஊடகங்களின் வழியாகவும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தாகமாயிருக்கிறேன் என்ற இயேசுவின்



*மூன்றாம் திருமொழி*

## மானிடப் பொறுப்பை நிறைவேற்றல்

*“இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம் ‘அம்மா இவரே உம் மகன்’ என்றார். பின்னர் தம் சீடரிடம் ‘இவரே உம் தாய்’ என்றார்.” (யோவா. 19 : 26, 27)*

இவ்வார்த்தையை அன்பின் வார்த்தை (Word of Affection) என்பர். இவ்வார்த்தை மூன்று பேருடைய மூன்று வகையான அன்பை விளக்குகின்றது. அவற்றைத் தியானிப்போம்.

### 1. பெற்றோரைப் பேணும் அன்பு

இங்கு பெற்றோரைப் பேணுபவர் இயேசு கிறிஸ்து. உன் தந்தையையும் தாயையும் மதித்து நட (விப. 20:12) என்பது பத்துக் கட்டளைகளில் ஐந்தாவது கட்டளையாகும். இயேசுவின் காலத்தில் வாழ்ந்த சமயத் தலைவர்களும் மக்களும் இக்கட்டளையைக் கைக்கொள்ளாமல் அதற்கு மாற்றாகக் கொர்பான் காணிக்கையைக் கடவுளுக்குச் செலுத்தினால் தங்கள் கடமை முடிந்து விட்டதாகக் கருதினர் (மாற்கு 7: 10 13). இத்தகு செயல்முறைக்கு எதிர்மறையாக இயேசு தம் தாயைக் கரிசனையாகப் பேணுகிறார். மதுரையிலுள்ள முதியோர் இல்லம் ஒன்றில் தன் தாயைப் பார்க்க மகன் ஒருவர் வந்திருந்தார். அவர் நிறைய பொருட்களை வாங்கி வந்து தாய்க்குக் கொடுத்தார். பணமும் கொடுத்தார். மகன் தாயை நலம் விசாரித்துப் பிரிந்து செல்கையில் தாய் மகனது கையைப் பற்றிக்கொண்டு மகனே, நான் உன் மனைவிக்குத் தொந்தரவாக நடந்து கொள்ள மாட்டேன். என்னை உனது வீட்டிற்கு அழைத்துச் செல். நான் இங்கு தனியாக இருக்க விரும்பவில்லை என்று கூறினார்கள். நாம் நம் பெற்றோரை மனம் வேதனைப்படாமல் அவர்களைப் பேண வேண்டும் என்பதை ஆண்டவரின் செயல் நமக்குக் காண்பிக்கின்றது.

### 2. ஆதரவற்றோரை ஆதரிக்கும் அன்பு

ஆதரவற்றோரை ஆதரிக்கும் அன்பை யோவான் வெளிப்படுத்துகின்றார். மத்தேயு 26:56இல் இயேசு கைது செய்யப்படுகையில் சீடர்களெல்லாரும் அவரை விட்டுவிட்டுத் தப்பி ஓடிப்போனார்கள். யோவான் 18:19இல் தலைமைக் குரு இயேசுவின் சீடர்களைப் பற்றி விசாரிக்கிறார். ஏனெனில் இயேசு விசாரிக்கப்படுகையில் அவரது சீடர்களைப் பற்றி விசாரிக்கிறார். ஏனெனில் இயேசு விசாரிக்கப்படுகையில் அவரது சீடர்கள் எவரையும் தலைமைக் குருவால்

காண முடியவில்லை. ஆனால், யோவான் 19:26இல் யோவான் இயேசுவின் சிலுவையருகே நிற்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. இவர் சாலோமியின் மகன். சாலோமி, இயேசுவின் தாய் மரியாளின் சகோதரி ஆவார். இயேசுவின் பன்னிரண்டு வயதுக்குப் பின்பு அவரது தந்தை யோசேப்பைக் குறித்து எந்தச் செய்தியும் திருமறையில் இல்லை. கானாவூர் திருமண வீட்டில் மரியாள் தனியாகவே கலந்து கொள்கிறார். மத்தேயு 13:55இல் இயேசுவுக்கு யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்னும் சகோதரரும் சகோதரிகளும் இருந்தனர் என நாம் அறியலாம். ஆனால் இயேசுவின் பின்னால் மரியாள் வந்ததால் அவரை அவர்கள் கவனிக்க மாட்டார்கள் என இயேசு எண்ணியிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இப்படி ஆதரவற்ற நிலையிலிருந்த மரியாளை யோவான் ஏற்றுக் கொள்கிறார் (யோவான் 19:27) நீண்ட நாள் அவரை எருசலேமில் வைத்துப் பாதுகாத்தார் என வரலாற்றாளர் குறிப்பிடுகின்றனர்.

மகனுக்குப் பதில் இன்னொருவரை மகனாக எப்படி ஒரு தாயால் ஏற்றுக்கொள்ள முடியும் எனச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். எனவே கத்தோலிக்கக் கிறிஸ்தவருள் சிலர் மூன்றாம் வாசகத்தை திருச்சபையுடன் உருவகப்படுத்துகின்றனர். இதிலும் ஓர் உண்மை பொதிந்துள்ளது. திருச்சபையைத் தாய் என்று கத்தோலிக்கர் கூறுகின்றனர். அதனடிப்படையில் திருச்சபைக்கு அதோ உன் மகன் என்போர் ஆதரவற்றோர், சேரிப்பகுதிகளில் வாழ்வோர் போன்றோராவர். அவர்களுக்கெல்லாம் தாய் திருச்சபையாகும். இன்று திருச்சபை யாருக்குத் தாயாக இருக்கிறது?

### 3. பாடுகளில் பங்கேற்கும் அன்பு

பாடுகளில் பங்கேற்பவராக மரியாளை நாம் புரிந்து கொள்ளலாம். யோவான் 19:25இல் சிலுவையருகே இயேசுவின் தாய் நின்று கொண்டிருக்கிறார். தன் மகன் சாகின்றபொழுது எப்படி ஒரு தாயால் தாங்கிக் கொள்ள முடிந்தது என்பது மிகவும் ஆச்சரியமானது. லூக்கா 1:29இல் தூதன் வாழ்த்தும் போது அவ்வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று மரியாள் மிகவும் கலங்குகின்றார். பின்னர் லூக்கா 1:38இல் நான் ஆண்டவருக்கு அடிமை என்று தம்மை முழுமையாக ஆண்டவரின் கரங்களில் அர்ப்பணிக்கிறார். ஆலயத்திற்கு இயேசுவைச் சுமந்து சென்ற போது அக்குழந்தையை கையில் வாங்கிய சிமியோன் உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப் போகும் (லூக்கா 2:35) என்று இறைவாக்குரைக்கிறார். ஆர்தர் ஜெ.பி. ரெவ் எனும் ஆசிரியர் தாயின் இதயம் எனும் தலைப்பில்



*ஐந்தாம் திருமொழி*

## மானிடத்திற்கான ஏக்கம்

*"தாகமாயிருக்கிறது."* (யோவா. 19 : 28)

கி.பி. 100ஆம் ஆண்டில் அறிவுநெறிக் கோட்பாட்டாளர் இயேசு ஒருபோதும் உண்மை உடலோடு வாழ்ந்ததில்லை. அவர் மனித உருவில் வந்த ஒரு கற்பனைத் தோற்றம். சிலுவையில் எவ்வித வேதனையையும் அவர் அனுபவிக்கவில்லை என்று கூறினார். தோற்றக்கொள்கையினர் (Docetic) 'சிலுவையில் இயேசு பாடுறவில்லை' என்றனர். இதனை வன்மையாக மறுக்கவும் இயேசு முழு மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்தார் என்பதை வெளிப்படுத்தவும் யோவான் தமது நற்செய்தியில் இயேசுவின் மனித உணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றார். "தாகமாயிருக்கிறேன்" என்ற ஐந்தாம் திருமொழி இயேசு உண்மையிலேயே மனிதனாக பாடுபட்டார் என்பதை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது. இவ்வார்த்தை நமக்குக் கற்று தரும் இயேசுவைக் குறித்த மூன்று உண்மைகளை நாம் தியானிப்போம்.

### 1. இறைவனைக் காண ஏங்குதல்

இயேசுவுக்கு அடிப்படையில் இறைவனைக் காணும் தாகம் இருந்தது. யோவான் 19:28ல் மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேற தாகமாயிருக்கிறேன் என்றார். யோவான் சங்கீதக்காரரின் இறைவனைக் காணும் தாகத்தையும் இயேசுவின் தாகத்தையும் ஒப்புமைப்படுத்துகின்றார். எனவே, மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேற என்று குறிப்பிடுகின்றார். திபா. 42: 1,2ல் கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பது போல் கடவுளே என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கின்றது. என் நெஞ்சம் கடவுள் மீது, உயிருள்ள இறைவன் மீது தாகம் கொண்டுள்ளது..... என்ற சங்கீதக்காரரின் தாகத்தைப் போன்று இயேசுவும் தாகமடைகின்றார். திபா. 63:1-லும் இத்தாகம் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறியாக இயேசு சிலுவையில் கைவிடப்பட்டதைப் போன்ற உணர்வைப் பெற்றார். எனவே பாடுகளையும் விட இறைவனைப் பிரிந்து நிற்கும் துயரத்தை உணர இயலும். கடவுள் மீது அன்பு கொண்ட இயேசு அவரது பிரிவைத் தாங்கிக் கொள்ளாமல் அவரைச் சேர தாகம் கொள்கிறார். இறைவனைக் காணவும் அவருடன் சேரவும் நாம் தாகம் கொள்கிறோமா?

'சிலுவையின் சாயல்கள்' எனும் நூலில் அறிவர் இஸ்ரேல் செல்வநாயகம் அவர்கள் நான்காம் வார்த்தைக்குப் பொருத்தமான சம்பவம் ஒன்றினைக் குறிப்பிட்டுள்ளார்கள். சிறுவன் ஒருவனது நோய் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். அவனது முதுகெலும்பிலிருந்து இரத்தம் எடுக்க வேண்டியிருந்தது. எனவே, மருத்துவர் அவனைத் தனி அறையில் அழைத்துச் சென்று இரத்தத்தை எடுத்தார். அப்போது வலியினால் துடித்த சிறுவன் பெற்றோரைத் தேடினான். அவர்களைக் காணவில்லை. வெளியே வந்த போது வாசலருகே அவனது பெற்றோர் அவனுக்காக ஆவலுடன் காத்திருந்தனர். அவர்களைக் கண்டதும் இங்கேதான் இருக்கிறீர்களா என அச்சிறுவன் கேட்டான். அதுபோன்று இறைவன் நம்மைக் கைவிடுவது போன்ற உணர்வு ஏற்படும் போதெல்லாம் இறைவன் நம்மீது அதிகக் கரிசனையோடு தமது பிரசன்னத்தைத் தருகிறார் என்று உணர நாம் அழைக்கப்படுகிறோம்.

### முடிவுரை

பிற சமயத்தவர் அறியாமையாலேயே நான்காம் திருமொழியை இயேசு கூறியிருந்தால் அவர் கடவுளில்லை என்கின்றனர். ஆனால். கிறிஸ்தவத்தின் ஆழமே இவ்வார்த்தையில் தான் அடங்கியுள்ளது. இவ்வார்த்தையைத் தியானித்து நாம் பாவம் செய்வதை நிறுத்துவோம் பக்தியில் வேரூன்றி இறைப் பிரசன்னத்தை உணர்வோம்.

அருள்திரு. முனைவர் **ஆ. இராயப்பன் ஐசக்**





யோவான் 19:25க்கு விளக்கம் எழுதுகின்றார். தலையில்முள்முடி, கைகளிலும் கால்களிலும் ஆணிகள், உடல் முழுவதும் காயங்கள், இரத்தம் வழியும் உடல் ஆகியவைகளுடன் வேதனையின் உச்சத்தில் இருக்கும் மகனைக் காணும் தாயே முதலில் சாக நிற்பாள். ஆனால், இயேசுவின் தாயாகிய மரியாளோ அனைத்தையும் தம்முள் தாங்கிக் கொண்டு இயேசுவின் பாடுகளில் பங்கேற்று தமது அன்பை வெளிப்படுத்துகின்றார். அவரைப் போல நம்மையும் இயேசுவின் பாடுகளில் பங்கேற்கும்படி அழைக்கின்றார். இயேசுவின் பாடுகளில் பங்கேற்றல் என்பது நமக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்து செயல்படும் போது வரும் பாடுகளை ஏற்பதேயாகும்.

### முடிவுரை

சிலுவையில் இயேசு மொழிந்த மூன்றாம் திருமொழி நம்மில் காணப்பட வேண்டிய மூன்றுவித அன்பை நமக்கு உணர்த்திக் காட்டுகின்றது. இயேசுவைப் போல பெற்றோரைப் பேணவும், யோவானைப் போல ஆதரவற்றோரை ஆதரிக்கவும் மரியாளைப் போல இயேசுவின் பாடுகளில் பங்கேற்கவும் நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. முனைவர் **ஆ. இராயப்பன் ஐசக்**

*நான்காம் திருமொழி*

# மானிடத்தோடு ஒன்றிணைதல்

*"என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத். 27 : 46)*

சமயங்களுக்கு இடையேயான உரையாடல்கள் நடைபெறுகையில் பிற சமயத்தவரால் புரிந்து கொள்ள முடியாத ஒன்று இயேசு சிலுவையில் உரைத்த நான்காம் திருமொழி ஆகும். இயேசு இவ்வாக்கியத்தைக் கூறியிருந்தால் அவர் கடவுளில்லை என்பாரும் உளர். கிறிஸ்தவரிலும் சிலருக்கு இதுபோன்ற கேள்விகள் எழுவதுண்டு. கடினப் பொருள் கொண்ட இவ்வார்த்தை வெளிப்படுத்தும் மூன்று பொருள்களைக் குறித்து நாம் தியானிப்போம்.

## 1. பாவத்தின் ஆன்மிக விளைவை வெளிப்படுத்துகின்றது

உரோமையர் 6:23இல் பாவத்தின் சம்பளம் மரணம் என்று கூறப்பட்டுள்ளது. பாவம் செய்யும் மனிதன் மூன்றுவித பாதிப்புகளை அடைகிறான். அவை 1. சரீரப் பாதிப்பு 2. மன அளவில் பாதிப்பு 3. ஆன்மிகப் பாதிப்பு ஆகியவைகளாகும். நமது மன அளவிலான பாதிப்பைப் போக்க ஆண்டவரின் வியர்வை இரத்தத் துளிகளாய் தரையில் விழுந்தது. ஆன்மிகப் பாதிப்பு என்பது கடவுளை விட்டுப் பிரிதல் அல்லது தனிமை எனலாம். அதனைப் போக்கவே மனுமகன் சிலுவையில் துன்பமடைகிறார். "உலகிலுள்ள மிகப் பெரும் மன வேதனை என்பது மனங்களும், ஆன்மாவும் இதயங்களும் கடவுளில்லாமல் இருப்பதேயாகும்" என புல்டன் ஜெ. ஷீன் எனும் இறையியலாளர் கூறுகின்றார். பாவம் செய்கையில் கடவுளை விட்டுப் பிரிகிறோம். இதனால் இறைவனின் சிலாக்கியங்களை இழக்கிறோம். புகழ் பெற்ற தத்துவ மேதையான வால்ட்டேர் (Voltaire) தமது மரணப் படுக்கையில் "நான் கடவுளாலும் மனிதனாலும் கைவிடப்பட்டேன்" என்று கூறி வேதனையோடு உயிர் விட்டார். ஆனால், மெதடிஸ்டு இயக்கத்தைத் தோற்றுவித்த ஜான் வெஸ்லி, தமது மரண வேளையில் "கடவுள் என்னோடிருப்பதால் நான் மகிழ்ச்சியுடன் கண்ணை மூடுகிறேன்" என்றார். மனிதராகிய நமது பாவங்களுக்காக கடவுள் அவரது மகனை உலகுக்கு அனுப்பி நமது பிரிவை அவர் ஏற்கும்படி செய்தார். இன்றும் கடவுளை விட்டுப் பிரிந்து நிற்கும் நாம் பாவங்களுக்கான விளைவை ஏற்காதபடி நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். இந்த அன்பை விடுத்து இன்னமும் நாம் பாவத்தில் வாழ்வதா?





## 2. பாடுகளின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது

இயேசு தமக்காகக் கூறும் முதல் வார்த்தை நான்காம் வார்த்தையாகும். முதல் மூன்று வார்த்தைகள் பிறர் மீது பாசம் காட்டும் வார்த்தைகளாகும். மத்தேயு 27: 39ஆம் வசன முதல் படிக்கையில் வழிப்போக்கர், தலைமைக் குருக்கள் மறைநூலறிஞர் மூப்பர் போன்றோர் பலவிதங்களில் இயேசுவைப் பரிகசிக்கின்றனர். வ.43இல் இயேசு உண்மையில் இறைமகன் என்றால் கடவுள் அவரை விடுவிக்கட்டும் என்று இகழ்ந்தனர். அதற்குப் பதிலாக வ.46இல் "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று இயேசு இறைவேண்டல் செய்வதை மத்தேயு பதிலாக நமக்குத் தருகின்றார். இயேசுவின் நான்காம் திருமொழி ஒரு யூத இறைவேண்டலாகும். இது துன்பச் சூழலில் இருக்கும் ஒருவர் செய்யும் இறைவேண்டல், இவ்வார்த்தையின் பொருள் இயேசுவின் சிலுவையைச் சுற்றி நின்றவர்களுக்கு, பரிகசித்தவர்களுக்கு நன்கு அறிமுகமான இறைவேண்டலாகும். இயேசுவுக்கும் இறைவனுக்கும் இடையேயான உறவு குறித்து சுற்றி நின்றவர்கள் கேள்வி எழுப்பிய போது, தம்மை இறைவன் கைவிடவில்லை, மாறாகத் தாம் இறைவனுடன் ஆழமான உறவில் இருப்பதாக இயேசு இவ்வார்த்தையின் மூலம் தெரியப்படுத்துகின்றார். நாம் நீதிக்காகத் துன்புறுகையில், எப்படி நடந்து கொள்கிறோம்? இயேசு துன்புறுகையில் நியாயமாகத் தீர்ப்பு வழங்குவோரிடம் தம்மை ஒப்படைத்தார் என்று 1 பேதுரு 2: 21 23 வரையுள்ள வாக்கியங்கள் கூறுகின்றன.

## 3. இறைப் பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது

கடவுள் ஒரு போதும் கைவிடுபவர் அல்ல. யோசுவா 1:5இல் 'நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை'. உன்னைக் கைவிடுவதுமில்லை என ஆண்டவர் கூறுகின்றார். எசா 54:10இல் 'மலைகள் விலகினாலும் குன்றுகள் இடம் பெயரினும் உன்மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது' என்ற இறைவன் இயேசுவைக் கைவிடுவாரா? கண்டிப்பாக இல்லை. அப்படியானால் இயேசு ஏன் இக்கேள்வியை எழுப்பினார்? இதே கேள்வியை நீதிக்காகப் பாடு அனுபவித்த பலர் திருமறையில் எழும்பியுள்ளனர். நியா 6:13இல் கடவுள் எங்களோடிருந்தால் ஏன் துன்பம்? என கிதியோன் கேள்வி எழுப்புகிறார். 6:14இல் கேள்வி எழுப்பிய அவரையே பலப்படுத்தி மீதியானியருக்கு எதிராகக் கடவுள் அனுப்புகிறார். யோபு 40இல் ஏன் தனக்குத் துன்பம் என கேள்வி எழுப்பிய யோபுவுக்கு தமது பிரசன்னத்தின் மகிமையை உணர்த்துகிறார். II கொரி 12:9இல் தமது நோய் நீங்க வேண்டுமென மூன்று முறை விண்ணப்பித்த பவுலுக்கு என கிருபை உனக்குப் போதும் என்கிறார்.

# அனைத்துலக மன்றாட்டு வாரம்

## கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுக்கான ஐக்கிய வார ஜெபம்

### மையப்பொருள் : கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?

**HAS CHRIST BEEN DIVIDED?**

*"கிறிஸ்து இப்படிப் பிளவுப்பட்டுள்ளாரா?" 1கொரி. 1 : 13*

2014-ஆம் ஆண்டின், மையப் பொருள் "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? திருத்தூதரான பவுல், மிக முக்கியக் கேள்விகளை எழுப்புகிறார் I கொரி 1:13-ல் 'கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?' (Has Christ been divided"). பிரிவினை, பிளவுகளினால், இன்று உலகம், சபை, குடும்பம் வாழும் சூழல் அமைதியிழந்து காணப்படுகிறது. கிறிஸ்துவின் இறைப்பணி காலம் முதல் இன்று வரை, சமயத்தின் பெயரில், அமைப்புகளின் பெயரில், திருச்சபைப் பிரிவுகளில், மொழியின் பெயரில், கலாச்சாரப் பின்னணியத்தில், இனத்தின் பெயரில் பல்வேறு பிரிவினைகள் பிளவுகள் பவுலின் இறைப்பணிகாலத்து, கொரிந்து திருச்சபையும் இத்தகைய பிரிவினைகளினால், ஆவிக்குரிய இறைமகிமையை இழந்து விட்டது. ஏனென்றால், இறைமக்கள் தாங்கள் விரும்பும் இறைபணியாளர்களைத் தெரிவு செய்து, அவர்கள் தான் இறை மீட்புக்கு முக்கியமானவர்கள் என்று கருதி கிறிஸ்துவை விட்டு விலகினார். இத்தகைய நிலையை பவுல் வன்மையாகக் கண்டித்தார். I கொரி 1:22-ல் "உங்களில் சிலர் நான் பவுலை சேர்ந்தவனென்றுட், நான் அப்போல்லாவை சேர்ந்தவனென்றும் நான் கேபாவை சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் இவர்கள் இறைமக்கள் மீட்புக்காக தங்கள் வாழ்வை கொடுக்கவில்லை. கிறிஸ்துதான் உலக மக்கள் மீட்புக்காக சிலுவை பரியந்தம் அன்பு செலுத்தி தம் வாழ்வைத் தந்து மீட்டுள்ளார். ஆகவே கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை நாமும் பிரிந்து காணப்படக்கூடாது என அறிவுரை தருகிறார்.

இந்தியாவில், மேற்கு வங்கத்தில் அருட்பணியாற்றிய வில்லியம் கேரி (1761-1834) அவர்கள், அருட்பணிக் காலத்தில், அருட்பணிச்சங்கங்கள், அருட்பணியாளர்கள் பல சூழலில் பிரிந்து காணப்பட்டனர். இதை





கூற்றிலும் தண்ணீர் இல்லாததால் அவர் தாகமாயிருக்கிறேன் என்று கூறவில்லை. அதிகாரம் பெற்றோரும் அவர்களுக்கு உதவ வேண்டியோரும் அலட்சியமாயிருப்பதாலும், அநீதி இழைப்பதாலும், சுரண்டுவதாலும் தாகமாயிருக்கின்றனர். இவர்களுடைய தேவையை உணர்ந்து இயேசு தாகமாயிருக்கிறார். தாகமாயிருக்கும் இச்சிறியோரின் தேவையை நிறைவேற்றினால் நாம் இயேசுவின் தாகத்தைத் தீர்க்கலாம் (மத்தேயு 25:40)

### *முடிவுரை*

தாகமாயிருக்கிறேன் என்ற ஆண்டவர் சிலுவையிலறையப் பட்டவராக நின்று கொண்டிருக்கிறார். பாவங்களை விட்டு இறைவனிடம் சேர்வதாலும், அவர் சித்தம் செய்வதாலும் தாகமாயிருக்கும் சிறியோருக்கு உதவுவதாலும் ஆண்டவரின் தாகம் தீர்க்க நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. முனைவர் **ஆ. இராயப்பன் ஐசக்**

ஆறாம் திருமொழி

# மாட்சிமைப் பணியின் நிறைவு

*“எல்லாம் நிறைவேறிற்று.”* (யோவா. 19 : 28)

‘முடிந்தது’ என்பதற்கான கிரேக்கச் சொல் டெட்டலஸ்தாய் (Tetelestai) என்பதாகும். யோவானைத் தவிர பிற நற்செய்தியாளர்கள் அனைவரும் இயேசு உரத்த குரலில் கத்தி உயிர் விட்டார் என்று கூறுகின்றனர். யோவான் மட்டுமே எல்லாம் நிறைவேறிற்று என்று இயேசு கூறியதைக் குறிப்பிடுகின்றார். டெட்டலஸ்தாய் அல்லது முடிந்தது என்ற சொல்லில் இருக்கும் மூன்று பொருள்களைத் தியானிப்போம்.

## 1. மனநிறைவின் வார்த்தை

டெட்டலஸ்தாய் என்ற வார்த்தையை எபிரேய வியாபாரிகள் பயன்படுத்தினர். பெரும் கடன்பட்டவர்கள் கடன் அடைத்து முடிந்ததும் கடைசியில் வைக்கப்படும் பத்திர முத்திரையில் இவ்வார்த்தை எழுதப்பட்டிருக்கும் Tetelestai = The debt is paid in full. இயேசு நமது கடன்களை முழுவதுமாகக் கொடுத்து முடித்தார் என்ற பொருளில் முடிந்தது என்றார். இவ்வார்த்தை இடம் பெறும் மற்றொரு இடம் எபிரேய அடிமையின் விலைப் பத்திரம் ஆகும். அடிமை கடனை உழைத்து தீர்த்தால் அல்லது மற்றொருவர் கடனை அடைத்தால் அடிமைக்கு விடுதலை என்பது இவ்வார்த்தையின் பொருள். இயேசு நம்மை நமது பாவங்களிலிருந்து விடுவித்தார் என்கிற மனநிறைவுடன் இதனைப் பயன்படுத்தினார். வேலைக்காரர் அவரது முதலாளி அவருக்குக் கொடுத்த பணியை முடித்து கணக்கு கொடுக்கும்போது மனநிறைவோடு எனக்குக் கொடுக்கப்பட்ட பணியைச் செய்து முடித்தேன் (I have completed the work assigned to me-Tetelestai) என்றனர். ஆசாரியர்கள் பலிக்கான ஆடுகளைப் பார்வையிட்டு அவைகள் பழுதற்றவை என முடிவு செய்தால் முடிந்தது என்பர். அதன் பின்னரே ஆடு பலியிடப்படும். இயேசு கிறிஸ்துவைப் போல ஒவ்வொரு நாளும் நம்முடைய பணியை மனநிறைவோடு முடிக்கவும், வாழ்வின் இறுதியில் முடிந்தது என்று கூறவும் நாம் அழைக்கப்படுகின்றோம்.

மகா அலெக்சாண்டர் முழு உலகையும் வெற்றி கொண்டு தமது ஆட்சியின் கீழ் கொண்டு வரத் திட்டமிட்டார். ஆனால் திட்டத்தை





என்று கூறினார். மற்றொரு முறை உடலைக் கொல்பவருக்கு அஞ்சாமல் ஆன்மாவையும் உடலையும் கொல்ல வல்லவருக்கு அஞ்சுங்கள் என்றார். யோவான் 14:1 முதல் உள்ள வாக்கியங்களில் நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்..........என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன என்று புதுவாழ்வு குறித்த எதிர்நோக்கைத் தம் சீடருக்குக் கற்பித்தார். இச்சிலுவை மொழியில் தமது ஆன்மா இறைவனிடம் கையளிக்கப்படுவதைச் செயல்முறையில் காட்டி உலகுக்குப் புதுவாழ்வு குறித்த நம்பிக்கையைக் கொடுக்கிறார். இவ்வுலக வாழ்வைப் புதிய வாழ்வுக்கான ஆதாரம், புதுவாழ்வுக்கான எதிர்நோக்கில் இவ்வுலக கடமைகளைச் செய்து நிறைவேற்ற ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

## முடிவுரை

ஒரு மனித வாழ்வு இவ்வுலகில் எவ்விதம் நிறைவுள்ளதாயிருக்க வேண்டும் என்பதை ஏழாம் திருமொழி வாயிலாக இயேசு காண்பிக்கிறார். ஒவ்வொரு நாளும் ஆன்மிகப் பயிற்சி செய்து இறுதியில் இறைவனிடம் செல்ல நம்மைத் தயார்படுத்தவும், ஆன்மாவைச் சாத்தான் கவர்ந்து விடாதபடி நம் ஆண்டவரின் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கவும் புதுவாழ்வு குறித்த நம்பிக்கையுடன் இவ்வுலகில் வாழவும் ஆண்டவர் நமக்குத் துணை செய்வாராக !

அருள்திரு. முனைவர் **ஆ. இராயப்பன் ஐசக்**

ஆணிகள், விலாவில் ஈட்டியினால் உண்டான காயங்கள், முதுகில் சாட்டையடிகள் எனினும் தந்தையே எனச் செல்லமாக அழைக்கிறார். துன்பத்தின் உச்சத்திலும் அவருடைய ஆன்மிகப் பயிற்சியால் மட்டுமே அவரால் இவ்வாறு செய்ய முடிந்தது என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

## 2. ஆன்மா குறித்த கரிசனை

திபா. 31:5இல் 'உமது கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்' எனத் திருப்பாடலாசிரியர் இறைவனிடம் மன்றாடுகின்றார். சவுலுக்குப் பயந்து தாவீது தப்பி ஓடிக்கொண்டிருக்கிறார். தனது ஆன்மா கடவுளின் கரத்திலேயே கொடுக்கப்பட வேண்டும். பகைவரின் கையில் சென்று விடக் கூடாது என்பதில் தாவீது தெளிவுடனிருந்தார். நமது ஆன்மாவைக் கவருவதில் சாத்தான் மிகவும் கவனமுடையவன். யோபுவைப் பாராட்டி கடவுள் பேசுகையில் சாத்தான் கடவுளிடம் 'நீர் யோபுவையும் அவனுக்குரிய அனைத்தையும் வேலியடைத்துக் காக்கவில்லையா' (யோபு 1:10) எனக் கூறுகின்றார். ஆண்டவருடைய அடியவரின் ஆன்மா அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை இது காட்டுகின்றது. யூதா 9ல் தலைமைத் தூதரான மிக்கேல், மோசேயின் உடலைக் குறித்து அலகையோடு வழக்காடுகின்றார். இதுபோன்ற திருமறையின் செய்திகளெல்லாம் நாம் நமது ஆன்மாவைக் குறித்த எவ்வளவு விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதை நமக்குத் தெரிவிக்கின்றன. நம் ஆண்டவர், அவரது உடலை நமது பாவங்களுக்காக உலகுக்குக் கையளித்தார். ஆனால். ஆன்மாவைச் சாத்தான் கவர்ந்துவிடாது இறைவனிடமே கொடுக்கவேண்டும் என்பதில் கருத்துடனிருந்தார். நமது ஆன்மாவைக் குறித்து நாம் கரிசனையுடையவர்களாயிருக்கிறோமா?

## 3. புதுவாழ்வைக் குறித்த நம்பிக்கை

தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன் என்ற இயேசுவின் மன்றாட்டு, புதிய வாழ்வுக்குள் அவர் அடியெடுத்து வைப்பதை நமக்குக் காட்டுகின்றது. இயேசு, இறந்த ஆன்மாவைத் தந்தையிடம் கையளிக்கவில்லை, மாறாக உயிருள்ள அவரது ஆன்மாவையே கடவுளிடம் அர்ப்பணிக்கிறார். கடவுள், மரித்ததோருக்கு ஆண்டவரல்ல, வாழ்வோருக்கே ஆண்டவர். இயேசு பூமியில் மனிதனாக வாழ்ந்த போது நித்திய வாழ்வைக் குறித்தே அதிகமாகப் போதித்தார். அவர் தமது போதனையின் போது, மனிதர் உலக முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார் (மத். 16:26)





நிறைவேற்றும் முன்னர் கப்பலில் சென்று கொண்டிருக்கையில் நோய்வாய்ப்பட்டு இறந்தார். இறக்கும் போது தமது இரு கைகளையும் வெளியே நீட்டியவாறே அடக்கம் செய்யச் சொன்னார். ஏனெனில் நான் இன்னமும் அடைய விரும்பினேன். ஆனால் நான் விரும்பியதை என்னால் அடைய இயலவில்லை (I am still trying to rech-out but not possessed what I wanted to possess) என்றார். நாம் ஒவ்வொரு நாளும் மனநிறைவுடன் தூங்கச் செல்கிறோமா?

## 2. அறைகூவலின் வார்த்தை

எப்போதுமே ஒன்றின் முடிவு இன்னொன்றின் தொடக்கமாக அமைகிறது. யோவான் 12:24இல் கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஒரு கோதுமை மணியின் வீழ்தல் பல கோதுமை மணிகளின் உருவாக்கத்திற்குத் துணைபுரிகின்றது. முடிந்தது என்ற இயேசுவின் திருமொழி, அவர் செய்த பணியை நாம் தொடங்க வேண்டுமென்று அறைகூவல் விடுக்கின்றது.

கடின எழுச்சி (The Hard Awakening) எனும் நூலில் பேராயர் டெல்கானி டப்ட்டி (Delgani-Tafti) எனும் ஈரான் நாட்டு ஆங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் பற்றி சொல்லப்பட்டுள்ளது. ஈரான் நாட்டில் கோய்மெனி என்ற சர்வாதிகாரி ஆட்சியில் பேராயர், அவரது குடும்ப, திருச்சபை ஊழியர்கள் போன்றோர் இஸ்லாமியரை கிறிஸ்தவராகச் சமய மாற்றம் செய்ததினால் தாங்கொணாத் துயரங்களை அனுபவித்தனர். பேராயர் பலமுறை கொலைவெறித் தாக்குதலால் காயமடைந்திருந்தார். பேராயரின் மனைவி துப்பாக்கிக் குண்டினால் காயம் கொண்டிருந்தார். இருபது வயதுடைய ஒரே மகன் கொல்லப்பட்டார். உடன் ஊழியர்களும் சிறைப் பிடிக்கப்பட்டனர் அவ்வளவு துன்பங்களை அனுபவித்த பேராயர் தமது வாழ்வின் இறுதியில் இயேசுவைப் போல ஈரான் நாட்டில் கடவுள் எங்களுக்குத் தந்த பணிகளை நானும் எனது குடும்பத்தினரும் செய்து முடித்தோம் எங்கள் பணிகளைத் திருச்சபையினர் ஈரான் நாட்டில் தொடர்ந்து நிறைவேற்றுவர் என்று கூறினார். இயேசு செய்து நிறைவேற்றிய பணிகளை நாம் தொடருகிறோமா?

## 3. எச்சரிப்பின் வார்த்தை

'முடிந்தது' என்று ஆண்டவர் யாரிடம் கூறினார் என்று கேள்வி கேட்டுப் பார்த்தால் பல விடைகள் கிடைக்கும். தொநூ. 3:15ல் 'அவர் உன்

தலையை நசுக்குவார்' என்ற இறைவாக்கின்படி சாத்தானைப் பார்த்து சாத்தானே! உன் ஆதிக்கம் முடிந்தது என்றார் எனலாம். பாவச் சேற்றில் மூழ்கி அதிலிருந்து கரையேற முடியாமல் தவித்த மனுமக்களைப் பார்த்து, உங்களை ஆட்டிப்படைத்த பாவத்தின் கொடுமை முடிந்தது என்றார் எனவும் கருதலாம். சிலர், யூத சமயத் தலைவர்களைப் பார்த்து எனக்கு எதிராகச் செய்த சூழ்ச்சியும், பொய்ச்சான்றும், அநியாயங்களும் முடிந்தன என்றார் என்கின்றனர். இன்னும் சிலர், தான் குற்றமற்றவர் எனக் கூறி மக்கள் முன் கை கழுவிய பிலாத்துவிடம் உன் கபட நாடகம் முடிந்தது என்றார் என்கின்றனர். சுருக்கமாகக் கூறினால் அநீதியானவை, சுயநலமானவை, வன்முறை போன்றவற்றிற்கு ஆண்டவர் 'முடிந்தது' எனும் சொல்லில் முடிவு கட்டி விட்டார். ஆகவே இச்சொல் இத்தகு தீயச் செயல்கள் செய்வோருக்கு ஓர் எச்சரிப்பு எனலாம். தீய செயல்கள் அனைத்தும் கண்டிப்பாக ஒருநாள் முடிவுக்கு வரும் என்பதில் ஐயமில்லை (திவெ. 1:7)

மேலும் மனித வாழ்வும் நிலையானது அல்ல. ஒரு முடிவுக்கு வர வேண்டிய ஒன்று என்பதையும் மனிதனுக்கு எச்சரிப்பு செய்வதாக இவ்வார்த்தை அமைந்துள்ளது. தவறான காரியங்களை விடுத்து இறைவனுக்கு உகந்த மக்களாய் வாழ இவ்வார்த்தை தரும் எச்சரிப்பு நம்மை அழைக்கின்றது.

### *முடிவுரை:*

'முடிந்தது' என்று மனநிறைவுடன் ஆண்டவர் தமது வாழ்வை இவ்வுலகில் முடித்தார். இன்று நாம் மரித்தால் அவரைப் போன்று எல்லாம் முடிந்தது என்று சொல்லும் மனநிறைவு நமக்கு உள்ளதா? இயேசு முடித்த பணியை நாம் தொடர்ந்து செய்து வருகிறோமா? நமது வாழ்வும் முடிவுக்கு வர வேண்டிய ஒன்று, என்ற சிந்தனையோடு செயல்பட்டு வருகின்றோமா?

அருள்திரு. முனைவர் **ஆ. இராயப்பன் ஐசக்**



*ஏழாம் திருமொழி*

# மலரும் புதுவாழ்வுக்கான ஒப்படைப்பு

"*தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்.*" (லூக். 23 : 46)

ஒருவர் எப்படி வாழ்ந்தார் என்பதைப் போன்று வாழ்வை எப்படி முடிக்கிறார் என்பதும் முக்கியமானது. எனவே, ஒருவருடைய வாழ்வின் இறுதியில் என்ன வார்த்தை கூறினார் என்பதை அறிவதில் ஆர்வம் கொள்ளும் வழக்கம் நம்மிடம் உள்ளது. பேரரசர் நெப்போலியன் தமது மரண வேளையில் 'எனது கடும் துன்பத்திற்கும் கிறிஸ்துவின் நிலையான அரசுக்கும் இடையே பெரும் இடைவெளி இருக்கிறது' என்றார். இங்கிலாந்தின் முன்னாள் தலைவர்களுள் ஒருவரான சர். தாமஸ் ஸ்காட், தமது மரண வேளையில், "இந்த நிமிடம் வரை கடவுளும் இல்லை நரகமும் இல்லை என்று நான் எண்ணினேன். ஆனால் இப்பொழுது அவை இரண்டும் உண்டு என்றும் நான் நரகத்திற்கே தண்டனைத் தீர்ப்பு பெறப் போகிறேன் என்றும் அறிந்து உணர்கிறேன்" என்றார். இயேசு கிறிஸ்து இறுதி வார்த்தையாகத் தம்மை அனுப்பிய தந்தையின் கரங்களில் தமது உயிரை ஒப்படைக்கிறார். இது ஒரு மன்றாட்டு. இந்த மன்றாட்டு இயேசுவைக் குறித்து மூன்று உண்மைகளை நமக்குக் கற்றுத் தருகின்றது.

### *1. ஆன்மிகப் பயிற்சி*

இயேசு சிலுவையில் மொழிந்த ஏழாவது வார்த்தை யூத குழந்தைகள் தூங்கச் செல்லும் முன்பு மன்றாடும் இறைமன்றாட்டாகும். இம்மன்றாட்டை இரவில் தூங்கும் முன்பும், துன்பத்தின் உச்ச வேளையிலும், மரண வேளையிலும் யூதர்கள் பயன்படுத்துவர். ஸ்தேவான், தூய அகஸ்டின், பேராயர் போலிகார்ப் ஆகியோர் மரண வேளையில் இந்த மன்றாட்டை ஏறெடுத்தனர். மார்ட்டின் லூத்தர் திரும்பத் திரும்ப மூன்று முறை இம்மான்றாட்டைச் சொல்லி தம் உலக ஓட்டத்தை முடித்தார். இவ்வுலகில் பிறந்த மனிதராகிய நாம் அனைவரும் மண்ணுக்குத் திரும்புவது உறுதியானது. நாம் உயிர்விடும் போது நமது வார்த்தைகள் நல்ல வார்த்தைகளாக வெளிவர வேண்டுமானால், உயிர் வாழும் போதே நாம் நல்ல வார்த்தைகளைப் பேசிப் பழகியிருக்க வேண்டும். இயேசு ஒவ்வொரு நாளும் செய்த ஆன்மிகப் பயிற்சியே அவரது இறுதி வேளையிலும் வெளிப்பட்டது. இயேசுவின் தலையில் முள்முடி, கைகளிலும் கால்களிலும்

### 1. இறைச் சாயலுடன் வாழ்தல் :

எபே. 4:22, 23, 24-ல் "முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாய், மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். இறைசாயலாக வாழும்போது அருட்கொடைகளைச் சுதந்தரிக்கலாம். இன்று மனிதர் இறைவன் விரும்பாத சாயல், தோற்றம், உடையவர்களாக வாழ்கின்றனர். இறைவன் விரும்பாத சாயலுடையவர், இறையருளை இழந்துபோவர். இறைசாயலுக்கு எதிரானவைகளைக் குறித்து எபேசி. 4:25-லிருந்து 32 வரை சொல்லப்பட்டுள்ளது. இறைச்சாயலாக வாழ்வோம் இறையருளைப் பெறுவோம்.

### 2. இசைந்த இறைமக்களாக வாழ்தல் :

எபே. 2:21 "அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு" எபே. 5:22 மனைவிகளே, ஆண்டவருக்கு கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். எபே.. 5:25, புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள். எபே. 6:1 பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்படியுங்கள். இறை ஆசீர்வாதங்கள் நமக்கு இறைவன் அருளிய உறவுநிலைகளில் நிறைவாக உள்ளது. நாம் இறைவன் அருளிய உறவுநிலைகளில் இசைந்த-இணைந்த அன்பினால் வாழும் இறைமக்களாக செயல்படும்போது இறையருளை நிறைவாகச் சுதந்தரிக்கலாம். திருச்சபைக்கு கிறிஸ்து தலைவராக இருப்பதுபோல, நாம் வழிபடும் இறை ஆலயத்தில், இறைப் பணிகளில், இல்லத்தில், சமூகத்தில் இசைந்த இறைமக்களாக வாழ்வோம். இறையருளை பெறுவோம்.

### 3. ஒப்புரவாக்கும் கருவிகளாய் வாழ்தல் :

எபே. 2:13,14,15,16 "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில் அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை





கண்ணுற்ற வில்லியம் கேரி அவர்கள், இப்படிப் பிரிந்து செயல்பட்டால் அருட்பணியில் தொய்வு, தோல்வி ஏற்படும். ஆகவே 1806-இல் அருட்பணித் தளத்தில் இணைந்து செயல்பட கூடிய துறைகள் குறித்தும், அருள்பணியாளர்கள் தங்கள் அனுபவங்களையும், இன்ப, துன்பங்களையும், இக்கட்டுகள், பாடுகளையும் பகிர்ந்துகொள்ளக்கூடிய உலகளாவிய அருள்பணியாளர்கள் மாநாடு, 1810-ல் அல்லது 1812-ல் தென் ஆப்பிரிக்க தன்னம்பிக்கை முறையில் கூட்ட ஆலோசனை கூறினார். அவருடைய கனவு, ஆலோசனை 1910-ல் எடின்பரோ நகரில் நாட்டப்பட்ட அகில உலக அருள்பணியாளர் மாநாடு மூலம் நிறைவேறியது. இந்த ஒன்றிப்பு முயற்சி இன்றும் தொடர்கிறது. இந்த வரலாற்று நிகழ்வு நமக்கு ஒரு அறைகூவல், நம் திருச்சபை, இல்லம், சமூகம், சமுதாயத்தில் பிரிந்து செயல்படாதபடி, ஒன்றாய் இசைந்து, புதிய ஆண்டில் இறைவனுக்குள் வாழ்வோம். I கொரி 1:9-இல் நாம் கிறிஸ்துவுடன் ஐக்கியமாக வாழ கடவுள் நம்மை அழைத்திருக்கிறார். பிரிவு, பிளவுக்கு துணை போகக்கூடாது, இணைவு, இசைவுக்கு துணை நின்று, ஒரே மந்தை, ஒரே மேய்பர் என்ற நிலையில் கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவில் வாழ்வோம்.

**நாள் : 1** *வார ஜெபம்*

# தூய மக்கள்

விப. 19 : 38 I பேது. 2 : 1-10

திபா. 95 : 1-7 மத். 12 : 46-50

*"...நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரசக் குருக்களின் கூட்டத்தினர். தூய மக்களினத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள்."* 1பேது. 2 : 9

இறைவாழ்வில் பிரிவினைகள் களையப்பட களங்கமற்ற மாசற்ற தூய வாழ்வு வாழ வேண்டும். திருத்தூதரான பேதுரு எழுதிய முதல் திருமுகம் முழுவதும் இறைமக்கள் தூய வாழ்விற்குரியவர்கள் அதற்கே அழைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். உபத்திரவங்கள், பாடுகளின் நடுவில் இறைமக்கள் தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளவும், விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்து நிற்கவும் கிறிஸ்துவை முன் மாதிரியாகக் கொள்ள வலியுறுத்துகிறார். I பேது. 1:15-இல் "உங்களை அழைத்தவர் பரிசுத்தராய் இருக்கிறதுபோல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்" ஆகவே உலகில் நமது சொல், செயல், சிந்தனை அனைத்திலும் தூய மக்களாக வாழ வலியுறுத்துகிறார்.

இன்று உலகில் சரீரத்தையும், ஆன்மாவையும் கறைபடியச் செய்யும் செயல்கள் நிறைந்துள்ளன. ஆகவே இறை அச்சமின்றி இறைவன் விரும்பாத தூய்மைக்கேடுகளைத் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்கின்றனர். இச்சூழலில் தூய மக்கள் இறைவனோடு இசைந்து வாழ்வர்; தூய்மையற்றோர் பிரிவினைக்கு கரம் கோர்ப்பர்.

### 1. தூய வாழ்விற்காக அழைப்பு :

I தெச:4:7 "கடவுள் நம்மை அசுத்தத்திற்கல்ல. பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்." Iபேதுரு:1:15 "உங்களை அழைத்தவர் பரிசுத்தர்." ஆகவே தூய வாழ்வு வாழ இறைவன் நம்மை அழைக்கிறார்.

### 2. தூய வாழ்வைப் பிரதிபலித்தல் :

Iபேதுரு:2:2,3 "சகல துர்க்குணத்தையும், சகல வித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு,



**நாள் : 3** *வார ஜெபம்*

# அருட்கொடை

யோபு 28 : 20-28 எபே. 4 : 7-13

திபா. 145 : 10-21 மாற். 8 : 14-21

*"கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப்பட்டுள்ளது."* எபே. 4 : 7

கிறிஸ்துவினுடைய பணியாளராகிய பவுல், எபேசுவில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான இறைமக்களுக்கு எழுதுகின்ற இத்திருமுகத்தில், கிறிஸ்து அவரை பின்பற்றுகிற அனைவருக்கும் அருட்கொடைகளை (Gifts) வழங்குகின்றார் என்கிறார். இதைப் பெற நம் வாழ்வு கிறிஸ்துவின் பார்வையில் தகுதியுடையதாக இருக்க வேண்டும். எபேசியர் 1:3-ல், "அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்." இறை ஆசீர்வாதங்கள் ஒவ்வொன்றும், இறைவன் நமக்கு தரும் விலையேறப்பெற்ற பரிசுகள் என்பதை நாம் உணரவேண்டும். இப்பரிசுகள் நம் வாழ்வின் ஆவிக்குரிய பரிசுகளாக நாம் எண்ணி, இவைகளை இழந்து போகாமல் சுதந்தரிக்க இறைவன் நம்மை அழைக்கின்றார். எபேசியர் திருமுகத்தில், கிறிஸ்து இந்தக் கொடைகளை நமக்கு அவருடைய விலையேறப்பெற்ற கிருபையாக தந்திருக்கிறார் என பவுல் எழுதுகிறார். எபேசியர் 2:4,5,6,7,8-இல் "கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (it is the gift of the God) ஆகவே, இறைவன் அருளும் ஆவிக்குரிய, ஆசீர்வாதப் பரிசுகளை சுதந்தரிக்க புதிய ஆண்டில் நமக்கு அழைப்பு தருகிறார். கல்லூரிகளில், பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள் கல்வியாண்டின் தொடக்க முதல் நிறைவு செய்யும் வரையில் சிறப்பாக படிப்பதில் கவனம் செலுத்தினால் வெற்றி, என்ற பரிசு அதுபோல விளையாட்டுத் துறையில் சிறப்பாகச் செயல்பட்டு, முதலிடம் வருபவர்களுக்கு சிறப்புப் பரிசு, பாராட்டுகள் உண்டு. அதுபோல இறைப் பரிசுகளை, இறைவனிடம் பெற ஒன்றாக இசைந்து செயல்படுவோம். அருட்கொடைகளை வாழ்வில் சுதந்தரிக்கவும், அவைகளை இழந்து போகாமல் பெற்றுகொள்ள மூன்று முக்கிய ஆலோசனைகள்.

உணவு, தண்ணீருக்கு கடினமுற்ற, பாலை நிலத்தில் இறைவன் உணவு, தண்ணீர், இறைச்சி அருளினால் அதில் திருப்தி கொள்ளவில்லை விளைவு அழிவைச் சந்தித்தனர். விப. 16:12-ல் ''நீங்கள் சாயங்காலத்தில் இறைச்சியை புசித்து, விடியற் காலத்தில் அப்பத்தால் திருப்தியாகி, ''இறைவன் வாக்குகொடுத்தது போல விப. 16:13,14-ல் உணவு அருளினார். விபா. 17-ல் தண்ணீர் அருளினார். அநேக சூழலில் இறை நன்மையை முழுமையாக சுவைத்தும் திருப்தி கொள்ளவில்லை. நாமும் இறைவன் அருளும் நன்மைகளில் திருப்தி கொள்ள வேண்டும்.

***மன்றாட்டு :***

1. பேராயத்துக்காக, பேராயர், சேகர ஆயர்கள், ஆயர்கள், சுவிசேஷகர்கள், திருப்பணிவிடையாளர்கள், அருட்பணியாளர்கள்.
2. இறையியல் கல்லூரிகளுக்காக, இறையியல் மாணவர்களுக்காக
3. திருச்சபை, இறைமக்கள், வேதாகமப் பெண்கள், சபை உதவியாளர்கள், கோயில்பிள்ளை, சபை மூப்பர்கள்.

அருள்திரு. S. **டேவிட் ஜோசப்ராஜ்**





நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாய் இருங்கள்'' அப்போது தூய வாழ்வை நாம் பிரதிபலிக்க முடியும்.

### 3. தூய வாழ்வோடு இறைவனைத் தரிசித்தல்

எபி:12:14 பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே'' திபா. 29:2, திபா. 96:9. ''பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்.'' விப. 2:8 ''ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.'' என்ற இறைக் கட்டளையும் இறைமக்கள் தூய வாழ்வோடு இறைவனைத் தரிசிக்க வலியுறுத்துகிறது.

இறை அழைப்பை உணர்ந்து, தூய வாழ்வு வாழ்ந்து, நமது சொல்லாலும் செயலாலும் தூய்மையைப் பிரதிபலித்து, இறைவனைப் பரிசுத்தமாய்த் தரிசிப்போம்.

***மன்றாட்டு :***

புதிய ஆண்டு நன்மை தருவதாய் அமைய
இறைமக்களிடம் தூய வாழ்வு தழைக்க
தூய்மைக்கு எதிரான போதை மற்றும் தகாத பழக்கவழக்கங்கள் களையப்பட.

அருள்திரு. S. **டேவிட் ஜோசப்ராஜ்**

| நாள் : 2 | வார ஜெபம் |
|---|---|

# நன்மைக்கு நன்றி பகர்தல்

| | |
|---|---|
| இச. 26:1-11 | பிலி. 1 : 3-11 |
| திபா. 100 | யோவா. 1 : 1-18 |

*"...கடவுளாகிய ஆண்டவர் உனக்கும் உன் வீட்டாருக்கும் செய்த அனைத்து நன்மைகளை முன்னிட்டு அக்களியுங்கள்."* இச. 26 : 11

புதிய ஆண்டில் பிரவேசித்துள்ள நம் வாழ்வில் இறையருள் நிறைவாகப் பொழியப்பட, இறைவன் அருளிய அனைத்து நன்மைகளுக்கும் நன்றி பகர்வதற்கு அழைக்கிறார். இஸ்ரவேலர் மக்கள் வாழ்வில், இறைவன் பாலும் தேனும் ஓடும் கானான் நாட்டை வாக்களித்து, அதைச் சுதந்தரித்துக்கொள்ளும் வரை இறைவன் அருளின நன்மைகள் ஏராளம். உண்ண உணவும், குடிக்க தண்ணீரும், பாதுகாப்பையும் நிறைவாக அருளி உள்ளார். இதை நன்குணர்ந்த, சங்கீத ஆக்கியோன் தாவீது கூறும்போது திபா. 103:1,2-ல், என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு, என் முழு உளமே அவரது திருப்பெயரை ஏத்திடு. என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே. மேலும் கூறும்போது, திபா. 34 : 1-இல் ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன். அவர் புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும். . எல்லாச் சூழலிலும் இறைவன் நன்மை அருளுவார் என்று இறை நம்பிக்கையுடன் நன்றி பகர அறிவுறுத்துகிறார். யோவான் நற்செய்தி நூலில், யோவா 1:16-ல் அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம். கிருபையும், இறை நன்மையும், மனிதர் வாழ்வில் நிறைவாக கிறிஸ்துவினால் அருளப்பட்டுள்ளது. இவ்வருட் கொடைகளுக்காக நாம் எப்போதும் நன்றி பகரவேண்டும். நன்றி மறப்பது நன்றன்று என்ற வாக்கை நினைவுகூர்ந்து புதிய ஆண்டின் இறை நன்மையை முழுமையாக பெற இதுவரையில் இறைவன் அருளின நன்மைகளை எண்ணி துதிக்கவும், ஸ்தோத்தரிக்கவும் இறைவன் நம்மை அழைக்கிறார்.





## 1. நினைவு கூர வேண்டும் :

இறைவன் அருளிய நன்மைகளுக்க நன்றி பகர, நினைவு கூர வேண்டும். அவரது அதிசய செயல்களுக்கும், அற்புத நடத்துதல்களுக்கும் இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் சொல்லொண்ணா வேதனையை கடினங்களை தங்கள் வாழ்வில் சந்தித்தனர், அத்தகைய சூழலில், மோசே, ஆரோன் என்பவர்களால் இறைவன் வாக்களித்த நாடான கானானுக்குச் செல்லும் முன் இறைவன் கூறுகிறார். விப. 12:14. அந்த நாள் உங்களுக்கு நினைவு கூருதலான நாளாய் இருக்கக்கடவது; அதை ஆண்டவருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களா; அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக் கடவீர்கள்? எஸ்தர் மூலமாக, யூதர்கள் வாழ்வில் இறைவன் பாராட்டின நன்மைகளுக்காக நினைவு கூரும் பூரீம் பண்டிகையை ஆசரித்தனர் (எஸ்தர் 9:28). கிறிஸ்து, நம் வாழ்வின் இறைமீட்புக்காக அருளப்பட்ட மாபெரும் ஈவு, அவர் வாழ்வு, தியாகம் நாம் நினைவுகூர, திருச்சபை நம்மை வழி நடத்துகிறது. (லூக். 22 : 19. I கொரி 11:25)

## 2. இறைப்பணியைத் தாங்க வேண்டும்

இறைவன் அருளிய நன்மைகளுக்கு நன்றிபகர, இறைப்பணியை, நம் வாழ்வாலும், பொருளாலும், தாங்க முன் வர வேண்டும். விப. 25:2-ல் இறை கட்டளை, "இஸ்ரவேல் புத்திரர் எனக்கு காணிக்கையைக் கொண்டு வரும்படி அவர்களுக்கு சொல்லு, மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்கு காணிக்கையை வாங்குவீர்களா? Iகுறிப். 16:29, திபா. 96:8-ல் இறைப் பணிகளுக்காக இறை இல்லத்தில் காணிக்கை படைக்கின்றனர். ஏழைக் கைம்பெண் படைத்த காணிக்கையைக் கிறிஸ்து பாராட்டினது போல இறைப்பணியைத் தாங்க முன் வரவேண்டும் (லூக்.21:1,4) தங்களுக்கு கொடிய தரித்திரம், வறுமையான சூழலிலும், இல்லாமையிலும், ஒன்றுமில்லாத சூழலிலும், இறைப் பணிகளுக்காக உதவி செய்த மக்கதோனியா நாட்டு சபை முன்னுதாரணம் (Iகொரி:1,2 IIகொரி 9)

## 3. திருப்தியடைய வேண்டும்

இறைவன் அருளிய நன்மைகளுக்கு நன்றிபகர, இறைவன் அருளிய நன்மைகளில் திருப்தி கொள்ள வேண்டும். இஸ்ரவேல் மக்கள்

இருக்கக்கடவன். கிறிஸ்து, சீஷர்களுக்கு பணிவிடைக்காரன் மாதிரியை செயல்படுத்தி, கால்களை கழுவும் மாதிரியை செயல்படுத்தினார் யோ. 13: 14,15, நான் உங்களுக்கு செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியை காண்பித்தேன் மாற் 10:45 "அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும் படி வராமல் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனை கொடுக்கவும் வந்தார்". கிறிஸ்து பணிவிடைக்காரக மாதிரியாக செயல்பட்டது போல நாமும் செயல்படுவோம்.

### 2. நன்மை செய்யும் மாதிரி

பணிவிடைக்காரன், பதவிகளை, உயர்நிலைகளை விரும்பாது, தன்னால் இயன்ற அளவு, நன்மை செய்யும் மாதிரியாக கிறிஸ்து விரும்புகிறார். அப்.10:38 "கிறிஸ்து நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றி திரிந்தார்". சங். 34:14 "தீமையை விட்டு விலகி நன்மை செய் என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்" இந்த சங்கீத வார்த்தைகளை அமைத்த தாவீது தன் உயிரை வாங்க நினைத்த சவுலுக்கு நன்மை பராட்டினார். ஆகவே சவுல் கூறும்போது I சாமு. 24:17 நீ எனக்கு நன்மை செய்தாய் நானோ உனக்கு தீமை செய்தேன். மேலும் கிறிஸ்து கூறும் போது மத். 44, லூக். 6:55, "உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்".

### 3. விசாரிக்கும் மாதிரி

தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்த்து, பணிவிடை செய்வதிலும், நன்மை செய்வதிலும், பிறரை தேவையோடிருப்போரை விசாரித்து உறவுடன் வாழ கிறிஸ்து விரும்புகிறார். மத். 25:35,36,43ல் நீங்கள் என்னை விசாரிக வரவில்லையென்பார். மத்.25:45-ல் மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள். யாக். 1: 27ல் திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவங்களை தவிர்த்து, தேவையில் இருப்பதை சந்தித்து விசாரித்து துயர் போக்குவோம்.

### மன்றாட்டு

1. பேராய அருட்பணி இயக்கம், D.M.P.B. யின் இறைப்பணிகளுக்காக
2. சுதேச அருட்பணி இயக்க அருட்பணிகளுக்காக
3. அருட்பணி அமைப்புகளின் மாற்றுருவாக்கப் பணிகளுக்காக

அருள்திரு. S. **டேவிட் ஜோசப்ராஜ்**





தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையை சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" இறைப் பரிசுகள் பெற, உலகில் நாம் அமைதி நிலைநாட்டும் எண்ணம், பிளவுகள், பிரிவுகளை, கசப்புகளை மாற்றி ஒப்புரவாக்கும் கருவிகளாக வாழ்வோம், அமைதி ஏற்படும்.

### மன்றாட்டு

1. பேராயத் திருப்பணிகளுக்காக, கிறிஸ்தவக் கல்விவளர்ச்சித்துறை, ஆன்மீக எழுச்சித்துறை, விடுமுறை, விவிலியக் கல்வி அருட்பணித்துறை, இளையோர் துறை, தொடர்புத்துறை, பெண்கள் ஐக்கிய சங்கம், ஆற்றுப்படுத்தும் இறைப்பணி, எளியோர் நல்வாழ்வுத் துறை
2. பேராய, அச்சகம், பேராயப் புத்தக விற்பனை நிலையம், பணியாளர்களுக்காக
3. மாற்றுத்திறனாளிகள், கொற்றிகோடு, ஆலன்கோடு, குளச்சல், ஐரேனிபுரம், சாந்தபுரம் மறுவாழ்வு மையங்களுக்காக

அருள்திரு. S. **டேவிட் ஜோசப்ராஜ்**

நாள் : 4

*வார ஜெபம்*

## இறை நம்பிக்கை

சஉ. 3 : 19-26 எபி. 10 : 19-25

திபா. 57 : 7-11 லூக். 1 : 67-75

***"நமக்கு வாக்களித்தவர் நம்பிக்கைக்கு உரியவர். எனவே, நாம் எதிர்நோக்கியிருப்பதைப் பற்றித் தயக்கமின்றி அறிக்கையிடுவதில் நிலையாய் இருப்போமாக."*** *எபி. 10 : 23*

இறைப் பற்றுறுதியில் அசைவில்லாமல் வாழும் இறைமக்கள் கிறிஸ்து வாக்குதத்தம் செய்துள்ள எண்ணற்ற நன்மைகளைப் பெறுவார்கள். எபிரேய திருமுகத்தை, பற்றுறுதியின் திருமுகம் என்று குறிப்பிடுகின்றனர். திருமறை இறையிலாளர்கள். ஏனென்றால், இறை நம்பிக்கையின், பொருள், விளக்கம் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இத்திருமுகத்தில், எபிரேயர் 11:1-இல் "விசுவாசமானது நம்பப்படுகிறவைகள் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. " அதினாலே இறைமக்கள் நற்சாட்சி பெற்றனர். உலகில் வாழும் இறைமக்கள், இறைவனிடம் நம்பிக்கை கொள்ளாது, படைப்புகளையும், தேவையற்ற உலகின் பொருட்களையும், தேவையற்ற உலக ஆலோசனையில் நம்பிக்கை கொள்கின்றனர். அதுதான் உயர்வுமிக்கது எனக் கருதுகின்றனர். அதுதான் மீட்பின் வழிகாட்டி எனவும் கருதுகின்றனர். வாழ்வோ, தாழ்வோ, உயர்வோ, பாடுகளோ எத்தகைய சூழலும் நம்மை இறைவனிடம் உள்ள பற்றுறுதியை விட்டு விலகச் செய்யும் காரணிகள். அதை முறியடித்து இறை நம்பிக்கையில் வேரூன்ற இறைவன் நம்மை அழைகின்றார். எபி 10:22-ல் "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்." இறைவனிடம் உறுதியான நம்பிக்கையோடு சேர்வோம். இறையாசி நிறைவாகப் பெறுவோம். எபி. 10:38-ல் "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்? ஆகவே இறை நம்பிக்கையோடு செயல்படுவோம்.



நாள் : 6

*வார ஜெபம்*

## வாக்குவாதங்கள்

நீத. 4 : 1-9 I கொரி. 1 : 10-15

திபா. 34 : 1-14 லூக். 22 : 24-30

***"...தங்களுக்குள்ளே பெரியவராக எண்ணப்பட வேண்டியவர் யார் என்ற விவாதம் அவர்களிடையே எழுந்தது."*** *லூக். 22 : 24*

இயேசுகிறிஸ்து ஐக்கியத்தையும், ஒருமித்த, ஒன்றான வாழ்வை விரும்புகிறார். கிறிஸ்துவின் இறைப்பணிக் காலத்தில், சீஷர்கள் மத்தியில் உயர் ஆசனங்களில் உட்காருவதற்கும், உயர் பதவிகளைப் பெறவும் வாக்குவாதம் ஏற்பட்டது. கிறிஸ்து, இப்படிப்பட்ட வாக்குவாதங்களை விரும்பவில்லை. இன்றைய உலகிலும், திருச்சபை, குடும்ப சமூகம் தேவையற்ற வாக்குவாதங்களினால் பிளவுபடும் நிலை, பிரிந்து போகும் சூழல் ஏற்படுகிறது. ஆகவே, வாக்குவாதங்கள் தவிர்க்கப்படவேண்டும். ஆன்மிக வளர்ச்சிக்கு உறுதுணையான இறைவேண்டல். இறை தியானங்கள் பகிர்தல் அதிகப் படுத்தவேண்டும். கொரிந்து திருச்சபைக்கு பவுல் முதல் திருமுகத்தை எழுதி, ஆலோசனை கூறும்போது, 1கொரி. 1:11ல் "உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள்" உண்டு என்பதை அறிந்து, அப்பா இருக்கலாகாது 1 கொரி. 1:30ல் மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரை குறித்தே மேன்மை பாராட்ட வேண்டும் என்கிறார். இறைபணிக்கு ஆயத்தப்பட்ட தீத்துவுக்கு, தீமோத்தேயுவுக்கும் அப்போஸ்தலர் பவுல் ஆலோசனை கூறும்போது II தீமோ. 2:14, தீத்து 3:9ல் "புத்தியீனமான தர்க்கங்களையும் வம்ச வரலாறுகளையும், சண்டைகளையும் நியாயப்பிரமாணத்தை குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு; அவைகள் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும்" மேலும் இப்படிப்பட்டவைகள் இறைபணியின் தடைகற்கள் என்பதை உணர்த்தினார். வாக்குவாதங்களை தவிர்போம் தாழ்மையின் கிறிஸ்துவின் மாதிரியை கைக்கொண்டு, அமைதியாக கிறிஸ்துவின் போதனைகளை பகிர்வோம்.

### *1. பணியாள் மாதிரி*

வாக்குவாதங்களை தவிர்த்து, தலைமைத்துவம், இறைபணிகளில் கிறிஸ்து காண்பிக்கும் மாதிரி, பணியாள் மாதிரி. லூக். 22:26 உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக் காரனைப் போலவும்

தேவாலயத்தல் அனுதினமும் தனித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடு கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி ஐக்கியமாய் வாழ்ந்தனர். (திபா 133:1) ஏசா, யாக்கோபு சகோதர உறவுகளில் ஐக்கிய குறைபாடு, பழிதீர்த்து கொள்ள விரும்புகின்றனர். (தொநூ 27:41) ஆனால் தங்கள் பகைமை உணர்வை மறந்து இணைந்தபோது ஐக்கியம் ஏற்பட்டது. தொ.நூ 33:4.

## 2. இறைவனுடன் ஐக்கியம்

உறவுகளின் ஐக்கியத்துடன் நின்றுவிடாது இறைவனுடன் ஐக்கியம் கொள்ள இறைவன் விரும்புகிறார். தொ.நூ 5:24 "ஏனோக் தேவனோடு சஞ்சரித்து கொண்டிருக்கையில் (walked with God) விப 33:11ல் ஆண்டவர் மோசேயோடு முகமுகமாய்ப் பேசினார். மேற்சொன்ன வார்த்தைகள், இறைவனுக்கும் இறைப்பணியாளர்களின் ஐக்கியத்தின் நிலையையும் நமக்கு உணர்த்துகிறது. கிறிஸ்து கூறும்போது, யோவான் 15:14ல் "கட்டளைகளைக் கைக்கொண்டு நடந்தால் என் நண்பராயிருப்பீர்கள். இறைவன் நமக்கு நண்பராக இருக்கின்றார். அவருடன் ஐக்கியம் கொள்ளும்போது. கொரி 10: 16,17 திருவிருந்து (திருமுழுக்கு, இறைவேண்டல், காணிக்கை படைப்பது) இறைவனுடன் உள்ள ஐக்கியத்தை உறுதிப்படுத்தும்.

## 3. ஐக்கியம் தரும் நன்மைகள்:

இறை உறவுகளில், இறைவனுடன் நட்புறவு கொள்ளும்போது எண்ணற்ற இறை நன்மைகளைச் சுதந்திரிக்கிறோம். மிக முக்கிய நன்மையாக, அன்புடைய இறைசமூகம் ஐக்கியத்தினால் உருவாகிறது. யோ. 15: 9,12 நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல் நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன். ....நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும் என்று கட்டளை கொடுக்கிறார். கிறிஸ்து இன்று ஐக்கிய குறைவினால் அன்பு மனிதரிடம் இல்லை பிரிவுகளும், பிளவுகளும், வன்முறையுடன், தீவிரவாதமும், ஒருவருடன் ஒருவர் ஐக்கியமாக வாழ்வோம் அன்பின் கூட்டமைப்பு உருவாகட்டும்.

### மன்றாட்டு:

1. இந்தியா, உலகநாடுகளின் சமாதானத்திற்காக, பிரதமர், ஜனாதிபதி, ஒவ்வொருமாகிய முதலமைச்சர்.
2. இந்தியாவின் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் வளர்ச்சிக்காக.
3. தென்னிந்திய திருச்சபை, வடஇந்திய திருச்சபை, அனைத்து இந்திய திருச்சபைகள் ஐக்கியம் கொள்ள.
4. அகில உலக திருச்சபை மன்றம், தேசிய திருச்சபை மன்ற (NCCI) ஐக்கிய முயற்சிகளுக்கு

அருள்திரு. S. **டேவிட் ஜோசப்ராஜ்**





## 1. கடினச்சூழலிலும் இறை நம்பிக்கை

எபிரேயர் 11:36, 27, 38-ல் வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் கவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள். பரீட்சை பார்க்க பட்டார்கள். குறையையும், உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்... சிதறுண்டு அலைந்தார்கள். இறைவனுக்காக, இறை நம்பிக்கையில் உறுதியாக வாழ, கடின சூழல் நம்முன் வைக்கப்படும்போது, பொறுமையாக ஏற்றுக்கொண்டு, புடமிடப்பட்ட பசும் பொன்னாக இறை நம்பிக்கையுடன் வாழ வேண்டும். தானியேல் இறைவனுக்காக, இறை நம்பிக்கையின் பொருட்டு சிங்க கெபியில் போடபட்டும், அற்புதமாக இறைவனால் மீட்கப்பட்டான். தானி 6:16,22 மேலும் எரியும் சூளையில் போடப்பட்ட சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ இறைவனால் மீட்கப்பட்ட, இறை நம்பிக்கைக்கு சான்று பகர்கின்றன. (தானி. 3 : 21, 22, 23, 24) (I பேதுரு 5 : 9)

## 2. இறை நம்பிக்கையுடன் செயல்படுதல்

யாக்கோபு 2:17-ல் "விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்... இறை நம்பிக்கை ஆழமாக நம் வாழ்வில் இருந்தாலும், செயல் மிக்க இறை நம்பிக்கையை இறைவன் விரும்புகிறார்.

பாரம்பரியம், நியமங்களை தாண்டி கானானிய ஸ்தீரி தன் மகள் வாழ்வு பெற, செயல்பட்டாள் இறை நம்பிக்கையுடன் மத். 15:27-ல் நாய்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிகளை கரை தின்னுமே என்ற வார்த்தையில் தன் தன் சூழலிலும் இறைவனுடன் செயல்மிக்க நம்பிக்கையை வெளிப்படுத்தி சுகம் பெற்றாள். மாற் 2:4:15-ல் திமிர் வாதக்காரன் சுகம்பெற, 4 பேர் விசுவாசத்துடன் செயல்பட்டனர். சுகம் பெற்றான் திமிர்வாதகாரன். நாமும் நம்பிக்கையுடன் செயல்படவேண்டும். எபிரேயர் 11-ம் அதிகாரம் முழுவதும் எப்படி இறைமக்கள் இறைநம்பிக்கையுடன் செயல்பட்டு உண்மை பெற்றனர் என்பதை நாம் அறிந்து கொண்டு இறைநம்பிக்கையுடன் செயல்படுவோம்.

3. இறை வருகையும் இறை நம்பிக்கையும்

எபிரே. 10:36,37-ல் "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு

வேண்டியதாயிருக்கிறது. வருகிறவர் இன்னும் கொஞ்சக்காலத்தில் வருவார். தாமதம் பண்ணார்''. இறை நம்பிக்கையுன் மிக முக்கிய சாரம்சம், இறைவருகையை எதிர்நோக்கிய நம் வாழ்வின் இறை எதிர்பார்ப்பாகும். ஏனென்றால், கிறிஸ்து விண்ணுக்கெழும்போது, இறை தூதர்கள் சீஷர்கள், இறைமக்களிடம் கூறினது ''அப் 1.11 உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியோ மறுபடியும் வருவார்.'' ஆகவே கிறிஸ்துவின் வருகையில் பங்குகொள்ள இறைநம்பிக்கையில் ஆழமாக வேரூன்றுவோம். (வெளி 22:11,12,20)

### மன்றாட்டு

1. பேராய, கல்வி நிறுவனங்களுக்காக, கல்லூரிகள், பள்ளிக் கூடங்கள், தாதியர் கல்லூரி, ஆசிரியர்கள், மாணவர்கள், மருத்துவமனைகள், மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவக்கல்லூரி
2. புரட்டு உபதேசங்கள் தடை செய்யப்பட

அருள்திரு. S. **டேவிட் ஜோசப்ராஜ்**



**நாள் : 5** *வார ஜெபம்*

## ஐக்கியம்

| | |
|---|---|
| எசா. 43:1-7 | I யோவா. 1 : 3-7 |
| திபா. 133 | யோவா. 15 : 12-17 |

***"...அவர் ஒளியில் இருப்பதுபோல நாம் ஒளியில் நடப்போமானால் ஒருவரோடு ஒருவர் நட்புறவு கொண்டிருப்போம்."*** *1யோவா. 1 : 7*

திருமறைக் காலம், கிறிஸ்துவின் இறைப்பணிக்காலம், இன்றைய காலம் அனைத்து சூழலிலும் மனிதர்கள், ஐக்கியத்துடன், இறைவனுடன், சகமனிதருடன், இறைபடைப்புகளோடு, சமூகச் சூழலில் வாழ வேண்டும் என்பது இறைவனின் விருப்பம். படைப்பில் மனிதனை இறைச்சாயலில் உருவாக்கினாலும், அவர்கள் தனிமையாக இருக்கக்கூடாது என்று கருதி ஏற்ற துணையை உருவாக்கினார். தொ.நூ 2:18 திருப்பாடலாசிரியர் கூறும்போது, இதோ சகோதர சகோதரிகள் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது என்கிறார் (திபா 133:1). குடும்ப வாழ்வில் கணவன், மனைவி ஒரே மாம்சம், இசைந்து ஐக்கியமாக வாழ கிறிஸ்து விரும்புகிறார் (மத். 19:1-9). தென்னிந்தியாவில் திருச்சபைகள் பிளவுப்பட்ட சூழலை நீக்கி, 1947ல் செப்டம்பர் 27ல் தென்னிந்திய திருச்சபை உருவானது. இதைப் பின் தொடர்ந்து வடஇந்தியாவில் வட இந்தியத் திருச்சபை நவம்பர் 29, 1970ல் உருவானது. இந்த ஐக்கிய முயற்சி பரந்தபட்ட நிலையில் பல்வேறு திருச்சபைகள் ஒன்றிணைத்து பாரதத்திருச்சபை என்ற ஐக்கியத் திருச்சபை உருவாக முயற்சிகள் நடைபெற்று வருகிறது. ஆகவே இறைமக்கள் உலகில் ஐக்கியமாக வாழ இறைவன் அழைப்பு தருவதால் திருச்சபையில் இல்லத்தில், வாழும் சூழலில் இறையரசின் தகவுகளைப் பிரதிபலிக்க ஐக்கியமாக வாழ இறைவன் அழைப்பு தருவதால் திருச்சபையில் இல்லத்தில், வாழும் சூழலில் இறையரசின் தகவுகளைப் பிரதிபலிக்க டீக்கியமாக வாழ்வோம். பிரிவினைகளைக் களைவோம். இணைவோம் ஒன்றாய் கிறிஸ்துவில் இறை நன்மைகளைப் பெறுவோம்.

### *1. இறை உறவுகளில் ஐக்கியம்*

நல்ல உறவுகளைத் திருச்சபையில், இல்லத்தில், சமூகத்தில் இறைவன் தந்துள்ளார். இந்த உறவுகளில் ஐக்கியம் கொள்ள இறைவன் விரும்புகிறார். ஆதித்திருச்சபை இத்தகைய உறவு நிலையில் ஐக்கியத்திற்கு சான்றாக விளங்குகின்றனர். திப 2: 46ல் அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்

இயேசுகிறிஸ்து தமது விண்ணேற்றத்திற்கு முன்பு கூடியிருந்த மக்களிடம் "தூய ஆவி உங்களில் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" என்றார் (திப. 1:8)

நம்பிக்கையின்மையால் தேங்கி கிடந்த சீடர்களை வன்மையாக கண்டித்து "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15)என்று கூறி இயங்கி கொண்டிருக்க கட்டளை கொடுத்தார். ஆக நற்செய்தி என்பது தேங்கி கிடக்கும் ஒன்று அல்ல. அது ஒரு இடையறாத இயக்கம் ஆகும். எனவே நாம் நற்செய்தியைப் பறைசாற்ற இடையறாது இயங்க இறைவனின் வார்த்தைக்குச் செவிமடுப்போம்.

### 2. அருட்பணி ஒரு மக்கள் இயக்கம்

"ஆனால் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர் அரசக் குருக்களின் கூட்டத்தினர். அவரது உரிமை சொத்தான மக்கள்.........செயல்களை அறிவிப்பது உங்கள் பணி" (I பேதுரு 2 : 9)

அருட்பணியை செய்வது யார்? ஆயர்கள் மட்டுமா? அருட்தொண்டர்கள் மட்டுமா? அல்லது ஆர்வமுள்ள ஒரு சிலர் மட்டுமா? இன்று அருட்பணிக்கு சிறு நன்கொடை கொடுத்து விட்டால் அது போதும் என்று எண்ணுகின்ற மனநிலை பெருகிவிட்டது. இது முழுமையான அருட்பணி ஆகாது. கடவுளின் மாட்சியைப் பிரதிபலிக்கும் புனித குருக்களாய் (ஆசாரிய கூட்டமாய்) கடவுள் நம் ஒவ்வொருவரையும் தெரிந்தெடுத்துள்ளார். I பேதுரு 2:9ல் இது நம் பணி என்று பேதுரு அழைப்பு விடுகின்றார்.

திருச்சபைகள் ஒற்றுமையின்றி மாறுபட்ட மனநிலையுடன் வெவ்வேறு கருத்துக்களுடன் வாழ்ந்து கொண்ட உலகை மாற்ற முயல்வது மாய்மாலம். இது அருட்பணி ஆகாது. ஆனால் அருட்பணி என்பது இணைந்து ஆற்றுகின்ற மக்கள் இயக்கப் பணி ஆகும். ஏனெனில் இயேசு கிறிஸ்து தம் சீடர்களை அருட்பணிக்கு அனுப்பும் போது இரண்டிரண்டு பேராக இணைத்தே அனுப்பினார் (லூக் 10:1)

இயேசு கிறிஸ்துவின் முதல் சீடன் பேதுருவும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஆழத்தில் வலை போட்டு அதிக மீன்களைப் பிடித்த போது மற்ற படவிலிருந்த கூட்டாளிகளை உதவிச் செய்ய வருமாறு செய்கை காட்டி அழைத்தார் (லூக். 5 : 5 - 7)

தூய பவுலார் சொல்லும் போது நான் நட்டேன் அப்பொல்லோ நீர் பாய்ச்சினார்; கடவுளே விளையச் செய்தார் (கொரி 3 :6) என்று அருட்பணி



**நாள் : 7** *வார ஜெபம்*

## இணைந்து நற்செய்தியை அறிவித்தல்

எசா. 61 : 1-4 I கொரி. 15 : 1-8
திபா. 145 : 1-7 லூக். 5 : 14-21

***"ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும்... அவர் என்னை அனுப்பியுள்ளார்."***
*லூக். 4 : 18,19*

இந்தியா, கிறிஸ்துவின் அன்பை, போதனைகளை, திருத்தூதரான தோமா வழியாகப் பெற்றுக் கொண்டது. ஐரோப்பாவின் பல நாடுகள் கிறிஸ்துவை அறிந்திராத காலத்திலேயே தூய தோமா இந்தியா வந்து சென்னை மைலாப்பூரில் இரத்த சாட்சியாக மரித்தார். இவருடைய இறைபணியின் விளைவாக எண்ணற்ற மக்கள் கிறிஸ்துவை பின்பற்றினார். இதனால் எரிச்சலுற்ற எதிர்பாளர்கள் அவரை கொலை செய்ய விரட்டி கொன்றனர். அப்போது சின்னமலை பகுதியின் குகை ஒன்றில் தஞ்சம் புகுந்தார். (சின்ன மலை என்னுமிடம் சென்னையிலுள்ள கிண்டி பகுதியில் உள்ளது). அந்த குகையின் மேல் கூரையிலிருந்த சிறு துவாரம் வழியாக தப்பி, பரங்கிமலை, தூய தோமா மலை உச்சியில் தாம் கட்டியிருந்த வழிபடும் தலத்தில் தஞ்சம் புகுந்தார். அங்கிருந்த கற்சிலுவை ஒன்றை தழுவி நிற்கையில், அவரைத் துரத்தி வந்த எதிர்பாளர் அவரை ஈட்டியினால் குத்தி கொன்றனர். பின்னர்அவரது சீடர்கள் வந்து, அவரது உடலை எடுத்துச் சென்று மைலாப்பூரில் கடற்கரையில் அடக்கம் செய்தனர். அப்பகுதி இன்று சாந்தோம் என்றழைக்கப்படுகிறது. அவருடைய காலம் முதல் இன்று வரை எண்ணற்ற அருட்பணியாளர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியை பறைசாற்றி வருகின்றனர். இவர்களில் பலர் கிறிஸ்துவுக்காக இந்திய மண்ணில் கோதுமை மணியாக விதைக்கப்பட்டனர். அருட்பணியாளர்கள் இணைந்து நற்செய்தியை அறிவித்த விளைவாக, கல்வி, மருத்துவம், சமூக, சமுதாய மாற்றுருவாக்கம் இந்தியா அடைந்தது. 1806ல் (கன்னியாகுமரி மாவட்டத்தில்) தென்திருவாங்கூர் மயிலாடியில் அருட்பணியாற்றிய உல்லியம் தொபியாள் ரிங்கல்தௌபே, மற்றும் வேதமாணிக்கம் இவர்களால், கன்னியாகுமரி மாவட்டம், எல்லா நிலைகளிலும் ஏற்றம் பெற்றது.

அருட்பணியாளர்கள் இணைந்து கிறிஸ்துவுக்கு நற்சான்ற பகர்ந்தனர். கிறிஸ்துவும் இணைந்து நற்செய்தியை பறைசாற்ற அழைப்பு தருகிறார்.

### 1. இணைந்து நற்செய்தியை அறிவிக்க அழைப்பு

மத். 4:19ல் என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன் கிறிஸ்து தம் சீஷர்களை இறைபணியில் இணைந்து நற்செய்தியை அறிவிக்க அழைப்பு கொடுத்தார். மத். 4:18ல் அவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வந்தனர். பேதுரு, அவன் சகோதர் அந்திரேயா, செபதேயுவின் மகன் யாக்கோபு, அவன் சகோதரன் இறைபணிக்கான அழைப்பை பெற்றனர். மேலும் மத். 4:25ல் திரளான ஜனங்கள் அவருக்கு பின் சென்றார்கள். எரிக்கிற மூட்செடி வழியாக, மோசே அழைப்பை பெறுகிறார். (யாத். 3:4)

### 2. இணைந்து நற்செய்தியை அறிவித்தல்

அப். 8:5 அப்பொழுது பிலிப்பு என்பவர் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்கு போய் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவை பிரசங்கித்தான். இறை அழைப்பை பெற்ற சீமோன் பேதுரு மற்றும் பிற சீஷர்க்ள இணைந்து நற்செய்தியை அறிவித்தனர். அப். 4:12 அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கும்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாம கட்டளையிடப்படவும் இல்லை?.

அப். 4:13 பேதுருவும், யோவானும் பேசுகிற தைரியத்தை கொண்டு அவர்கள் கிறிஸ்துவுடன் இருந்தவர்கள் என்று அறிந்துகொண்டார்கள். சரீரம் முழுவதும், பாதிப்புக்குள்ளான, சமுதாயத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட 4 இறைமக்கள் இரா 6:9ல் நாம் செய்கிறது நியாயமல்ல இந்நூல் நற்செய்தி அறிவிக்கும் நாள், நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியும் மட்டும் காத்திருந்தால், குற்றம் நம்மேல் சுமரும் நற்செய்தியை அறிவித்தனர். பஞ்சத்தால் சாலை எதிர்நோக்கின் மக்கள் வாழ்வு பெற்றனர். இணைந்து நற்செய்தியை அறிவிப்போம்.

### 3. அழியா மாட்சியைப் பெறுதல்

I பேதுரு 5:4ல் “அப்படி செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும் போது மகிமையுள்ள வடாத கிரீடத்தை பெறுவீர்கள்”. இறைபணியை இணைந்து நிறைவேற்றவும், இணைந்து நற்செய்தியை பகிரும்போது



**16-03-2014** H.M.S. ஞாயிறு

## அருட்பணியால் உருவாகும் திருச்சபை

| | |
|---|---|
| 1அர. 6 : 1-14 | 1பேது. 2 : 1-10 |
| திபா. 2 | லூக். 9 : 1-6 |

*“இறையாட்சி பற்றிப் பறைசாற்றவும் உடல் நலம் குன்றியோரின் பிணி தீர்க்கவும் அவர்களை அனுப்பினார்.” லூக். 9 : 2*

அருட்பணி திருச்சபையின் தாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அடையாளம். அருட்பணியால் எழுந்ததே திருச்சபை. அருட்பணியைச் செய்ய ஆண்டவர் தம் சீடர்களை அதிகாரப்படுத்தி அனுப்பினார். இவர்கள் விண்ணரசை அறிவிக்கவும், மக்களை விடுவித்து விண்ணரசுக்கு நடத்தவும் பணித்தார். இன்று திருச்சபை ஆற்ற வேண்டிய முக்கியப் பணி விண்ணரசை அறிவிக்கும் அருட்பணி ஆகும். இது இடையறாது செய்யவேண்டிய பணி. அவ்வப்போது நற்செய்தியை அறிவித்து சிலரை அருட்பணியாளர்களாக அனுப்பிவிட்டு நிறுத்தி விடுவது முறையன்று.

சுதேச மிஷனெறி சங்க நாளாக ஆசரிக்கும் இன்று அருட்பணி குறித்து மூன்று தலையங்கங்களில் தியானிப்போம்.

### 1. அருட்பணி ஒரு இடையறாத இயக்கம்

அருட்பணி என்பது தேங்கி நிற்கும் நிலையாக அல்லாமல் இடைவிடாமல் இயங்கி கொண்டிருக்கும் இயக்கமாக இருத்தல் வேண்டும். இன்று திருச்சபைகளில் ஒரு தேக்க நிலையே இருந்து வருகின்றது. கட்டடங்களைக் கட்டுவதும், கோபுரங்களை எழுப்புவதும் இவை வழியாக தங்கள் பெயர்களை நிலைநாட்டுவதும் திருச்சபைக்கு ஏற்பட்டுள்ள பெரும் சோதனை. எடுத்துக்காட்டாக பாபேல் கோபுர நிகழ்வைக் கூறலாம். “நாம் சிதறுண்டு போகாத படி வானளாவிய கோபுரம் கொண்ட நகர் ஒன்றை நமக்காகக் கட்டி எழுப்பி நம் பெயரை நிலைநாட்டுவோம் (தொ.நூ. 11:4) என்று சொல்லி தங்கள் பணியைத் தொடர்ந்தனர். இறைவன் மொழி குழப்பத்தை ஏற்படுத்தி அவர்களை சிதறப்பண்ணினார்.

சாலமோன் அரசர் பெரிய கோயிலைக் கட்டினார். அக்கோயிலைக் குறித்து இயேசுகிறிஸ்து மத்தேயு 24ல் கற்கள் ஒன்றின் மேல் ஒன்று இராதபடி எல்லாம் இடிக்கப்படும் என்றார். எனவே இன்றைய தேவை ஒரு வட்டத்திற்குள் தேங்கி நிற்கும் அல்லது முடங்கிக் கிடக்கும் பணி அல்ல. மாறாக இயங்கி கொண்டிருக்கும் அருட்பணி.

இயேசுகிறிஸ்து மாயக்காரருடைய இருதயத்தை அறிந்தார். இவர்கள் வேஷதாரிகள் என்பதை உணர்ந்தார். இறைமைந்தரின் திருப்பணிகளை அறிந்தவர்கள் இவரைக் கொல்ல வேண்டும் என்று நினைத்தனர். உண்மையுள்ளவர்களாய் நடந்தனர். ஆனால், கடவுள் இருதயங்களை அறிந்தவர். அவருடைய பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை (எபி. 4:13) அவர் நியாயம் விசாரிப்பவர் (தி.ப 17:31); அவர் இயேசுகிறிஸ்துவை கொண்டு நியாயம் விசாரிப்பார் (உரோ 2:16)

b. **எடுத்துக்காட்டுகிறார் :** (வ 15 - 16)

இயேசு கிறிஸ்து காசை எடுத்து இந்தப் படமும், எழுத்தும் யாருடையது என்று கேட்டார். அதற்கு சீசருடையவை என்றார்கள். அப்பணத்தில் அரசரின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அதோடு "Caesur, divine Augustus, son of God" என்று எழுதப்பட்டிருந்தது. இதில் உண்மை என்னவெனில் உலகத்தை படைத்தவரிடம் ஒரு பணம் கூட இல்லை. இதில் இரண்டு உள்ளம் இருக்கிறது நமக்காக இயேசு கிறிஸ்து ஏழையானார் (கொரி 8:9; மத் 8:20) இவ்வுலகத்தில் தூய ஆவியானவரால் நிரப்பட்டு வாழ்ந்தார் (மத் 6: 25 33; பிலி 4:19)

**c. எச்சரித்தார் :** (வ. 17)

மாயக்காரர் நினைத்தப்படி அவர்களுக்கு இயேசு பதிலளிக்கவில்லை. மாறாக, சீசருடையதை சீசருக்கு;ச் கொடுங்கள் என்றார். ரோம 13: 1 7படி நாட்டை ஆள்பவர்கள் யாராக இருந்தாலும் நாம் அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். (உரோ 13: 1 7) கடவுளுக்கு உரியதை கடவுளுக்குக் கொடுங்கள். எப்படியெனில் கடவுள் இவ்வுலகத்தைப் படைத்து இப்பூமியை ஆள நமக்குத் தந்துள்ளார். நாம் கடவுளின் திருஉருவில் படைக்கப்பட்டிருக்கிறோம் (தொநூ. 1: 26 27). நாம் நம்முடையவர்கள் அல்ல (1 கொரி 6: 19 20) உலகத்தின் படைப்புகள் அனைத்தும் அவருடையன. எனவே அவரில் அடிபணிந்து இவ்வுலகத்தை வளப்படுத்தி, நிறைவுடன் வாழ்வோம்.

திரு. S. **ஜாண் வினோராஜ்**





இறைவருகையால் கிறிஸ்துவின் அருள்பரிசை நாம் பெற முடியும். பேதுரு 5:2,3ல் இறைபணியை, இணைந்து நற்செய்தியை பகிர உற்சாக மனதுடனும், மாதிரியாகவும், கண்காணிப்பு செய்ய அழைப்பு தருகிறார்.

கிறிஸ்துவை அறியாத இருளிலும், அறியாமையிலும், வாழும் இந்தியாவில் வாழும் மக்கள் சந்திக்கப்பட இணைந்து நற்செய்தியை அறிவிக்க முன் வருவோம்.

***மன்றாட்டு:***

1. பெண் குழந்தைகள், முதியோர் வாழ்வு காக்கப்பட
2. இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட
3. நெகிழி (Plastic) பயன்பாடு தடை செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட

அருள்திரு. S. **டேவிட் ஜோசப்ராஜ்**

# சிறப்பு நாள்களுக்கான அருளுரைகள்

**26-01-2014** *குடியரசு நாள்*

## மக்களின் உரிமைகளும் நலனும்
**RIGHTS AND WELFARE OF THE PEOPLE**

நெகே 2 : 1-9 தி.ப. 15 : 1-21
திபா. 101 மாற். 12 : 13-17

*"நாட்டில் நம்பிக்கைக்குரியோரைக் கண்டுபிடித்து என்னோடு வாழச்செய்வேன். நேரிய வழியில் நடப்போரை எனக்குப் பணிவிடை புரியச் செய்வேன்." திபா. 101 : 6*

நம் நாடு விடுதலை பெற்றதைக் கொண்டாடுகின்ற நமக்கு இந்தியாவை வல்லரசாக்க உரிமையுண்டு. இதற்கு இறைவனை நோக்கி பார்க்கின்ற அனுபவம் தேவை. மாற்று 11:18ல் உள்ளபடி இயேசுகிறிஸ்வை கொலை செய்ய வகை தேடினர். இவரை எப்படி சிக்க வைப்பது? பரிசேயரும், ஏரோதியரும் இவரைப் பேச்சில் அகப்பட வைத்து மக்கள் மத்தியில் இவரது மதிப்பைச் சீர்குலைக்க நினைத்தனர். இத்திருமறைப்பகுதியில் உரிமைக்கான கேள்வி இருக்கிறது. நாம் யார்? நாம் யாருக்குப் பணிபுரிய வேண்டும்? இக்கேள்விகளுக்கு நாம் உலகத்தோடு இணைந்து ஆண்டவருக்குப் பணி செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று பதில் காண்பது பொருத்தமானது.

### *1. யூதர்களின் எதிர்ப்பு* (வ. 13:15)

**a) இரகசியமான திட்டமிடுதல்:** (வ. 13a)

பரிசேயரும், ஏரோதியரும் இரகசியமாகத் திட்டமிட்டு இயேசுவினிடத்தில் வந்தார்கள். பரிசேயர்கள் சமயவாதிகள், சட்ட திட்டங்களை மீறாமல் கடைப்பிடிப்பவர்கள், பிரிவினையை ஆதரிப்பவர்கள், உண்மையான இறைபக்தி அற்றவர்கள், ரோம அரசை எதிர்க்கக்கூடியவர்கள். ஏரோதியர்கள் ஏரோது அரசனுக்கு அனுகூலமானவர்கள் அனைத்து ரோமச் சலுகைகளையும் பெற்றவர்கள். இந்த இருபிரிவினரும் ஒற்றுமையுடையவர்கள் அல்லர். ஆனால் இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்ய ஒன்றாக இணைகின்றனர்.





**b. இரகசிய ஒப்பந்தம் :** (வ. 13b)

பேச்சில் இயேசுவை அகப்படுத்தும்படி பரிசேயரும், ஏரோதியரும் இரகசிய ஒப்பந்தம் செய்தனர். இயேசுநாதரை ரோம அரசுக்கு எதிராகவோ, அல்லது நாட்டு மக்களுக்கு எதிராகவோ மாற்றவேண்டும் என நினைக்கின்றனர். ரோம அரசுக்கு எதிராகச் சொன்னால் கலகக்காரன் என்று குற்றம் சுமத்தி ரோம அரசு தண்டனை கொடுக்கும். மக்களுக்கு எதிராகக் கூறினால் மக்கள் மத்தியில் தங்களுடைய நன்மதிப்பு கெட்டுப்போய் விடும் என்று நினைத்தனர். உண்மையான அன்பு இல்லாதவர்களாக வாழ்ந்தனர். உண்மையான அன்பு இருந்தால் இழிவானதைச் செய்யாமல் இருக்கவேண்டும் (1 கொரி. 13:5).

**c. இரகசியமாக வாழ்த்துதல்:** (வ. 14a)

பரிசேயரால் அனுப்பப்பட்ட ஏரோதியர் சாதுரியமாக இயேசுவிடம் பேசுகின்றனர். போதகரே என்று அழைத்து முகத்துதி செய்கின்றனர். இவர்கள் இயேசு கிறிஸ்துவை பற்றி கூறியதெல்லாம் உண்மை, ஆனால் இவர்கள் இயேசுகிறிஸ்துவை நம்பவில்லை. ஆனால் இவர்களுடைய மாயத்தை இயேசுகிறிஸ்து அறிகிறார். முகத்துதி செய்கிறவர்களை நம்பாதிருங்கள்.

**d. மீட்பருக்கு எதிரான அறைகூவல்:** (வ 14 : 15)

சீசருக்கு வரிக்கொடுக்கிறது நியாயமோ?இல்லையா? என்று கேட்டனர். ரோம அரசில் மூன்று வரிகள் உண்டு. அவைகளாவன 1. நிலவரி 2. வருமானவரி 3. தலைவரி. இங்கு சொல்லப்பட்டிருப்பது தலைவரி. தலைவரி இருபாலரும் செலுத்தவேண்டும். பரிசேயர் நினைத்தனர் சமயமே நாட்டைவிட மேலானது. ஏரோதியர் நினைத்தனர் நாடுதான் சமயத்தைவிட மேலானது. ஏரோதியர்கள் அரசுக்கு சாதகமாக இருப்பதால் வரிசெலுத்தமாட்டார்கள், பரிசேயர்கள் வரியை எதிர்ப்பவர்கள். ரோம அரசையும், ரோம பணத்தையும் எதிர்க்கக் கூடியவர்கள் வரி கொடுப்பது நியாயமா? என்று கேட்டனர். இதில் இரண்டு பதில்கள் உண்டு. 'ஆம்' அல்லது 'இல்லை'. 'ஆம்' என்றால் இவர் உலகத்துக்கு ஒத்துப் போகிறார் என்று நன்மதிப்பை இழப்பார். 'இல்லை' என்றால் ரோம அரசுக்கு எதிராக கலகம் செய்தார் என்று கைது செய்யப்படுவார். இது மீட்பருக்கு எதிரான அறைகூவல்.

### *2. யூதர்களுக்கு அரசரானவர்*

**a) என்னிடத்தில் கொண்டு வாருங்கள் :** (வ 15)

அநீதியான நிகழ்வுகளும், தவறு செய்யாதவர்கள் தண்டனைப் பெறும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றது. நம் நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்கள் தன்னலம் விரும்புகிறவர்களாய் இருந்திருந்தால் இன்று நாம் நாடு விடுதலைப் பெற்றிருக்க முடியாது. அவர்கள் தங்கள் நலன்களைத் துறந்து பொதுநலத்தோடு பாடுகள் அனுபவித்ததால்தான் நாம் இன்று சுதந்திரமாக வாழ்கின்றோம்.

லூக். 6:24ல் செல்வர்களே ஐயோ உங்களுக்கு கேடு ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்து விட்டீர்கள். சுயநலத்தோடு தவறான வழிகளில் செல்வம் சேர்த்து அநீதி செய்து வாழ்வோருக்கு ஐயோ என்று இயேசு கிறிஸ்து கூறுகின்றார். ஏனென்றால் இப்படிப்பட்ட மக்களிடமிருந்துதான் அடிமைத்தனம் உருவாகின்றது. வியாபார நோக்கோடு இந்தியாவில் வந்த ஆங்கிலேயர் நம் நாட்டின் செல்வங்கள் மீது ஆசைக்கொண்டு அவற்றை அடைவதற்காகவே நம்மை அடிமைப்படுத்தினர். இனறும் நமக்குள்ளும் இப்படிப்பட்ட எண்ணங்கள் வாழ்ந்துக் கொண்டுதான் இருக்கிறது. பிறர் நமக்கு கீழ் அடங்கி இருக்கவேண்டும் அவர்களை ஆளவேண்டும் என்ற இந்நிலை மாற சுதந்திர தினமாம் நன்னாளில் தன்நிலை உணர்ந்து பொது நலத்தோடு வாழ்வோம் என்று தீர்மானம் எடுப்போம். நீதியின் விடுதலை உலகில் உதயமாகும்.

அருள்திரு. S. **ஜேக்கப்ராஜ்**





இணைந்து செய்யும் மக்கள் இயக்கம் என்று குறிப்பிடுகின்றார். எனவே அருட்பணி திருச்சபையின் இணைந்த கூட்டு முயற்சியாக வேண்டும். அதற்கு நம்மை அர்ப்பணிப்போம்.

### 3. அருட்பணி கடவுளின் ஆற்றலைப் பகிர்ந்தளிப்பது:

“இயேசு பன்னிருவரையும் ஒன்றாக வரவழைத்து, பேய்களையெல்லாம் அடக்கவும் பிணிகளைப் போக்கவும் வல்லமையும் அதிகாரமும் அவர்களுக்குக் கொடுத்தார். இறையாட்சி பற்றி ......... அவர்களை அனுப்பினார்” (லூக். 9: 1, 2)

அருட்பணியில் வசதிகள், வாய்ப்புக்கள், பதவி, புகழ் போன்றவை முக்கியம் பெறலாகாது. தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்ளும் சுய நலவாதிகள், கடவுளின் ஆற்றலைப் பகிர்ந்தளிக்கும் பணியைச் செய்ய இயலாது. காரணம் அவர்கள் இறை ஆற்றலை இழந்தோராவர். கடவுளோடு ஒன்றித்து கடவுளின் அருளையும் ஆற்றலையும் பெற்று கடவுளின் துணையோடு செய்கின்ற பணியே அருட்பணி.

லூக்கா 9:1ல் படிக்கும் போது பேய்களை ஒட்டுகின்ற அதிகாரத்தை ஆற்றலை இயேசுகிறிஸ்து தம் சீடர்களுக்கு பகிர்ந்தளித்து அனுப்பினார். இன்று சுய கவுரவம், சுய ஆதாயம், பதவி, ஆசை, பண ஆசை இவைகளால் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்காது அடக்கி வைத்து அருட்பணியை சீரழிக்கின்ற அவலநிலை மலிந்து விட்டது.

இயேசு கிறிஸ்து அதிகாரத்தை ஆற்றலைப் பகிர்ந்தளித்து அருட்பணி செய்ய அனுப்பினார். அதே போல நாமும் அருட்பணி செய்ய நம்மை அர்ப்பணிப்போம்.

### நிறைவாக

இன்று நாம் வாழும் உலகில் இறை ஆற்றலை இழந்து அடிமைத்தனத்தில் சிக்கிக் கிடக்கும் மனுக்குலத்திற்கு விண்ணரசின் நற்செய்தியை அறிவிப்பதும், அடிமைத்தளையிலிருந்து விடுவித்து விண்ணரசுக்கு வழி நடத்துவதும் நமது தலையாய பணி என்பதை உணர்ந்து இறைமக்களாகிய நாம் ஒவ்வொருவரும் அருட்பணியின் வாயிலாக கிறிஸ்துவுடனும் திருச்சபையுடனும் இணைவோம்! தொண்டாற்றுவோம்! விண்ணரசை நிலைநாட்டுவோம் !

திரு. **R. டேவிட் ஜெபசிங்**

**08-06-2014** DMPB ஞாயிறு

# அருட்பணி

**MISSION**

எசா. 52 : 1-7 உரோ. 1 : 8-16
திபா. 15 லூக். 9 : 57-62

> ***"நற்செய்தியை அறிவிக்கவும்... வருவோனின் பாதங்கள் மலைகள் மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன." எசா. 52 : 7***

இந்தியா உலகில் மிகப்பெரிய ஜனநாயகநாடு என்பதில் நாம் பெருமைப்படுகிறோம். 122 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் சாதியாலும், சமயத்தாலும் மொழியாலும் பண்பாட்டாலும் குழுக்களாகப் பிரிந்து வாழும் இந்தியர்கள் சந்திக்கும் சவால்களோ பல. இச்சூழலில் அருட்பணியில் நாம் எதிர்கொள்ளும் சவால்களும் மிகப்பல.

200 ஆண்டுகளுக்கு முன் நமது முன்னோர்கள் சாதீயக் கொடுமைகளால் அடக்குமுறைக்கு ஆளாகினர். தாழக்குடி பகுதியில் வாழ்ந்தவள் மாடத்தி, நிறைமாத கர்ப்பிணிப்பெண்ணான அவள் நடக்க பெலனின்றி வீட்டில் உட்கார்ந்திருந்தாள். அன்று பண்ணையார் வயலில் வந்து பார்த்தார். மாடத்தி வேலைக்கு வரவேண்டிய நாள். வேலைக்காரர்களிடம் பிடித்து வரச்சொல்ல, பிடித்துக்கொண்டு வரப்பட்ட மாடத்தியை நுகத்தில் ஒருபக்கத்தில் கட்டிவைக்க, மறுபக்கம் மாடுகட்டப்பட்டது. மாடத்தியால் இழுக்க முடியவில்லை. அடிவிழுந்தது. மாடத்தி வயலிலேயே மாண்டுபோனாள். இது நமது முன்னோர்களின் வரலாறு. நமது முன்னோர்களின் வரலாற்றை நமது பிள்ளைகளுக்கும் நாம் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் பிரதான கற்பனையைப் பெற்ற சீடர்கள், தூய ஆவியாரின் ஆற்றலைப்பெற்று தங்கள் இயல்புக்கும், திறனுக்கும் அதிகமாக நற்செய்தியை அறிவித்தனர். இயேசுவாகிய நற்செய்தி நம்மையும் வந்து எட்டியது.

கடவுள் இஸ்ரவேல் மக்களின் மீட்புக்காக மோசேயைத் தெரிந்து கொண்டதைப்போல நமது முன்னோர்களின் மீட்புக்கு ஜெர்மன் தேசத்திலிருந்து கனம் றிங்கல்தௌபே ஐயர் அவர்களை அனுப்பித்தந்தார்.





ஒவ்வொரு மனிதரும் நான் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்காமல் நான் நல்லவனாய், நல்லவளாய் இருக்கவேண்டும் என்று நினைத்தால் உலகில் நீதிக்கான விடுதலை உதயமாகும். நீதிக்கான விடுதலையை நாம் ஒவ்வொருவரும் சுதந்தரிப்பது எப்படி என்பதை ஆய்வோம்.

### ***1. மனிதர் தன் நிலையை அறியவேண்டும் :*** விப. 23:9

தன்னைக் குறித்து சிந்திக்காத அறிந்துக் கொள்ளாத எந்த மனிதனும், மனுஷியும் நீதிக்கான விடுதலையைப் பெற்றுக் கொள்ளவும் பிறருக்கு வழங்கவும் இயலாது. எகிப்தில் அடிமைகளாய் இருந்த இஸ்ரவேலரை மீட்டு விடுதலை வழங்கிய கடவுள். இஸ்ரவேலர் பிறரை அடிமைப்படுத்தாமல் இருக்க தன் நிலையை உணர்ந்து வாழ கட்டளைக் கொடுக்கிறாள். அதாவது வாழ்வு எப்படி இருக்கும் என்பது தெரியும் அதன் கொடுமையை உணர்ந்து பிறரை அடிமைப்படுத்தாதீர்கள் என்று கூறுகின்றார்.

தன் நிலை அறிதல் என்பது ஒருவருக்கு ஒரு தீங்கு செய்தவற்கு முன் அந்த தீங்கு எனக்கு வந்தால் எப்படி இருக்கும். நான் எவ்வளவு வேதனை அடைவேன் என்று எண்ணிப் பார்ப்பது. (எ.கா) என் உடம்பில் அடி கொண்டால் வலிக்கும் என்பதை அறிந்தார் பிறரை அடிக்கமாட்டோம். நீதிக்கான விடுதலையும் இதை போன்றதே.

வி.ப. 23: 4,5ல் பகைவரின் மாடோ, கழுதையே வழி தவறிப் போகக் கண்டால் அதை அவனிடம் கொண்டுபோய் கொடு, பகைவனின் கழுதை சுமையோடு விழுந்துக் கிடந்தால் உதவி செய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பொருள் என்னவென்றால் அந்த மாடையும், கழுதையையும் உன்னுடையதாய் கருதி உதவ வேண்டும் என்பதுதான். இந்நிலை நம் ஒவ்வொருவரிலும் உருவாகும் போதுதான் நீதிக்கான விடுதலை உலகில் உதயமாகும்.

### ***2. பொதுநலத்தோடு வாழவேண்டும் :*** விபா. 23:8

கையூட்டு வாங்காதே கையூட்டு பார்வையுடையவரையும் குருடராக்கும். நேர்மையாளரின் வழக்கையும் புரட்டி விடும்.

நீதியின் விடுதலை உருவாக ஒவ்வொருவரும் தன்னலம் துறந்து பொது நலத்தோடு வாழவேண்டும். வி.ப 23 8ல் கையூட்டு வாங்குவது குறித்து சொல்லப்பட்டுள்ளது (அதாவது லஞ்சம்) கையூட்டு வாங்குகிறவர்கள் தன்னலப்பிரியர்களாய் இருப்பார்கள். அவர்கள் நீதியை விரும்புகிறவர்களாயோ நீதிக்கான விடுதலையை விரும்புகிறவர்களாயோ இருக்க முடியாது. இன்று கையூட்டு வாங்கும் மனிதர்களால்தான் உலகில்

**15-08-2014**

***இந்திய விடுதலை நாள்***

# நீதிக்கான விடுதலை

## FREEDOM FOR JUSTICE

விப. 23 : 1-9 கலா. 5 : 1-6

திபா. 18 : 16-24 லூக். 6 : 20-26

***"அன்னியரை நீ ஒடுக்காதே. அன்னியரது உணர்வுகளை நீங்கள் அறிவீர்கள். ஏனெனில் எகிப்து நாட்டில் நீங்களும் அன்னியராக இருந்தீர்கள். விவ. 23 : 9"***

அன்னியரை நீ ஒடுக்காதே. அன்னியரது உணர்வுகளை நீங்கள் அறிவீர்கள். ஏனெனில் எகிப்து நாட்டில் நீங்களும் அன்னியராக இருந்தீர்கள். வி.வ. 23:9.

விடுதலை வாழ்வை விரும்பாத எந்த மனிதனும், மனுஷியும் இருக்க முடியாது. எல்லா மனிதரும் விடுதலைப் பெற்று சுதந்திரமாக வாழ்வதையே விரும்புகின்றனர். நம் இந்திய நாடு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்தபோது அடிமை வாழ்வை விரும்பாத நம் முன்னோர் அடிமைத்தனத்திற்கு எதிராய் பல போராட்டங்களை நடத்தினார்கள். அதன் விளைவால் நாமும் நம் நாடும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து 1947 ஆகஸ்டு 15 நாள் விடுதலைப் பெற்று இன்று சுதந்திர தினத்தைக் மகிழ்வோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்நன்னாளில் நீதிக்கான விடுதலையைக் குறித்து சிந்திப்பது நம் ஒவ்வொருவரின் கடமை. விடுதலை என்பது தீங்கு செய்பவரிடமிருந்து தீங்கு அனுபவித்துக் கொண்டிருப்பவர் விடுவிக்கப்பட்டு புது வாழ்வு பெறுவது. ஆனால் நீதிக்கான விடுதலை என்பது நமக்கு தீங்கு செய்தவருக்கு தீங்கு செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்போது அடிமைப்படுத்தாமல் இருப்பது. அதாவது தீமைக்கு தீமை செய்யாமல் நல்மனதோடு அவர்களுக்கு வாழ்வு வழங்குவது.

(எ.கா) யோசேப்பு தன் சகோதரர் தனக்கு செய்த தீங்கை மனதில் வைத்து அவர்களை அடிமைப்படுத்தி இருக்கலாம். ஆனால் கடவுளின் பார்வையில் நீதியான செயல் அல்ல என்பதை யோசேப்பு நன்கு அறிந்திருந்தார். எனவேதான் அவர்களுக்குத் தீங்கு செய்யாமல் வாழ்வுக் கொடுகிறார். ஆதி. 45-ஆம் அதிகாரத்தில் இந்நிகழ்வைப் பார்க்கலாம்





கனம் மீட் ஐயரை அனுப்பித்தந்தார். தஞ்சாவூரிலிருந்து ஒரு குடும்பத்தை மயிலாடிக்கு கொண்டுவந்து வேதமாணிக்கம் தேசிகர் அவர்களை எழுப்பினார். இவர்கள் வழியாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது. தாழ்வில் மண்ணோடு மண்ணாக ஒட்டிக்கிடந்த நம்மை எல்லாம் உயர்த்தினார்.

இன்று நமது திருச்சபைகளும் நமது சமுதாயமும் மிகப்பெரும் வளர்ச்சிபெற்றுள்ளன. சொல்லி முடியாத அளவுக்கு ஆண்டவர் நம்மை உயர்த்தியிருக்கிறார். இன்று எத்தனை மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள், உயர் அதிகாரிகள் எனச் சொல்லிக்கொண்டே போகலாம்.

எசாயா 25:1-ல் "ஆண்டவரே நீர் ஒருவரே எங்களுக்கு ஆண்டவராயிருக்கிறீர், நான் உம்மைத் துதிப்பேன், ஏனெனில் எங்கள் வாழ்க்கையில் அதிசயங்களைச் செய்திருக்கிறீர் எனச் சொல்லி ஆண்டவரைப் புகழ்வதைப்போல நாமும் ஆண்டவரைப் புகழ்வோம்.

1962-ல் ஆரம்பிக்கப்பட்ட நமது DMPB அருட்பணியில் 419 அருட்பணியாளர்கள் பணிசெய்து வருகின்றனர். கல்வராயன் மலை, சேர்வராயன் மலை, கொல்லிமலை, வடஇந்தியாவில் ஒரிசா, சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களிலும் நமது பணிகள் நடைபெற்று வருகின்றன.

***1. அருட்பணி கடினமானது :*** (லூக். 9 : 57,58)

வேத பாரகர் ஒருவர் இயேசுவிடம் வந்து ஆண்டவரே நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றார். இவருக்கு ஒரு விருப்பம், இயேசுவைப் பின்பற்ற வேண்டும் என்று. சகேயுவுக்கு ஓர் விருப்பம் இருந்தது. இயேசுவைப் பார்க்க வேண்டும் என்று ஓடோடிச்சென்று காட்டத்தி மரத்தில் ஏறினார். இயேசுவைப் பின்பற்றிச் செல்வதற்கு நம் எல்லோருக்கும் விருப்பம் உண்டு. ஆனால் அதினால்வரும் இழப்புகளை, கடினப்பாடுகளை ஏற்றுக்கொள்ள மனமில்லை. இயேசு சொன்னார் ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுக்கவேண்டும் என்றார். 'பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்ற இயேசுபெருமான் 'ஓநாய்களுக்குள்ளே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல' உங்களை அனுப்புகிறேன் என சீடர்களிடம் அருட்பணியில் வரும் கடினப்பாடுகளை எடுத்துச்சொன்னார்.

எங்கே போனாலும் பின்பற்றிவருவேன் எனச் சொன்ன வேதபாரகரிடம் நரிகளுக்குக் குழிகள் உண்டு. ஆகாயத்துப் பறவைகளுக்கு கூடுகள் உண்டு. ஆனால் மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார். இதைக்கேட்ட வேதபாரகன் பின் செல்வதால் வரும் கடினப்பாடுகளை ஏற்க மனமில்லாமல் போய் விட்டார்.

பழிக்குபதில் பாசத்தையும், அடிக்கும் உதைக்கும் பதிலாக அன்பையும், தண்டனைக்குப்பதிலாக மன்னிப்பையும் வழங்குவது சாதாரண காரியமல்ல. நெருப்பிலும், சிங்கங்கள் மத்தியிலும், சிறைகளிலும் துன்பங்களைச் சகித்துக்கொண்ட ஆயிரமாயிரம் இரத்த சாட்சிகளால் சபை வளர்ந்தது.

21-ஆம் நூற்றாண்டிலும் நமது நாட்டில் கிறிஸ்தவர்கள் 4% மட்டுமே இருக்கிறோம் என்றால், வளராததற்கு காரணம் கிறிஸ்துவுக்காகத் துன்பம் சகிக்க மனமில்லை. அருட்பணி கடினமானது.

### 2. அருட்பணி அவசரமானது. (லூக். 95 : 59,60)

இயேசு 12 பேரை தமது சீடர்களாகத் தெரிந்து கொண்டார். தமது பணியின் அவசியத்தையும், அவசரத்தையும் விளக்கி தம் சீடர்களை அனுப்புகிறார். சீடர்களின் சீரிய உழைப்பு பல ஆயிரக்கணக்கான சீடர்களை உருவாக்கியது.

இயேசு ஒருவரை "என்னைப் பின்பற்றிவா" என அழைக்கிறார். இது அவசரமான அழைப்பு. அழைப்பைப் பெற்றவர், ஆண்டவரே! முதலாவது நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றார். இயேசு அதற்கு கூட சமயம் கொடுக்கவில்லை. இந்த அழைப்பு கடவுளின் இராஜ்யத்தின் விரிவாக்கப்பணிக்கான அவசர அழைப்பு. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் என்ற இயேசுடத;ஈ அழைப்பைப் பெற்ற மனிதரைப் பார்த்து மரித்தோர் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும் முதலாவது "நீ போய் தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி" என்றார். இன்று நமது திருச்சபைகள் பல கலைகளில் வளர்ந்து வருகிறது. ஆனால் முதலாவது தேடவேண்டிய கடவுளின் இராஜ்யத்துக்குத் கடைசி இடம் கொடுத்துவிட்டோமோ எனத் தோன்றுகிறது. இயேசு கிறிஸ்து தன்னைப் பின்பற்றிவர அழைத்த மனிதரிடம் அருட்பணி அவசியமானது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

### 3. அருட்பணி அகலமானது (லூக். 9 : 61,62)

தொடர் ஓட்டம் ஓடுகிறவர்களில் முதலாவது நிற்பவர்களிடம் ஒரு தீவட்டி கொடுக்கப்படும். அவர் அதைக் கொண்டு ஓடி அடுத்தவரிடம் கொடுப்பர். அவர் ஓடிச்சென்று அடுத்தவரிடம் கொடுப்பார். இப்படி தீவட்டி குறிப்பிட்ட எல்கையை வந்தடையும்வரை ஓடுவார்கள். இதுபோன்று அருட்பணியை ஆண்டவர் நமது கரங்களில் தந்துள்ளார். இது அகலமான பணி. நற்செய்தியாகிய தீபத்தைப் பெற்றுக்கொண்டவர்களாகிய நாம்





ஓடோடிச்சென்று அடுத்தவர்களுக்குக் கொடுக்கவேண்டும். கிறிஸ்துவின் வருகை வரை அருட்பணி நடைபெற்றுக்கொண்டேயிருக்கும்.

லூக். 9:61-ல் வேறொருவர் இயேசுவைப் பார்த்து, உம்மைப் பின்பற்றி வருவேன். ஆனாலும் முதலாவது நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுமதி பெற்றுவர உத்தரவு கொடுக்கவேண்டும் என்றார். இயேசு அவரைப்பார்த்து கலப்பையின் மேல் தன் கையை வைத்துவிட்டு பின்னிட்டுப் பார்க்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுடையவர்கள் அல்ல என்றார். அருட்பணி மிக வேகமாக செய்ய வேண்டிய பணி.

இயேசு சீடர்களிடம், பரலோக ராஜ்யத்துக்கு மக்களை ஆயத்தப்படுத்த உலகம் எங்கும் போங்கள் என்றார். லூக்.4:43-ல் தங்களை விட்டுப் போகக்கூடாது என்று கேட்ட திரள் கூட்ட மக்களைப்பார்த்து நான் மற்ற ஊர்களுக்கும் சென்று கடவுளின் இராஜ்யத்தைப் பிரசங்கிக்க வேண்டும். அதற்காகவே நான் வந்திருக்கிறேன் என்றார்.

அப்போஸ்தலராகிய பவுல் எல்லாருக்கும் (ரோ.1:14) நற்செய்தியைச் சொல்லுவதற்கு நான் கடன்பட்டிருக்கிறேன் என்கிறார். தீமோத்தேயுவைப் பார்த்து சமயம் கிடைத்தாலும் , கிடைக்காவிட்டாலும் சுவிசேஷத்தை ஜாக்கிரதையாகச் சொல்லு என்கிறார். கடவுள் நமது கரங்களில், கடினமான, அவசரமான அகலமான பணியைத் தந்துள்ளார். இது என்மேல் விழுந்த கடமை என்பதை மனதிற்கொண்டு நம்மை அர்ப்பணிப்போம். கடவுள் நம்மைப் பயன்படுத்துவாராக.

அருள்திரு. C. **தேவதாஸ்**

திருமறை குறிப்பிடும் எபிரேய அடிச்சொல் 'ஒஹேப்' 'அன்பு கூருபவர்' எனப் பொருட்படும் நண்பர் என்பதன் கிரேக்க (புதிய ஏற்பாட்டு)ச் சொல் 'அடெல்பே' என்பது பெற்றோரை குழந்தைகள், கணவன் மனைவி போன்ற உறவு சார்ந்த, உடன் படிக்கை அன்பு பகிருவோரையே சுட்டும். எ.கா இறைவன் ஆபிரகாம் மோசே (பாக் 2:23; யாத் 33:11), தாவீது யோனத்தான் (1சாமு 20:17), ரூத் நகோமி (ரூத் 1:16)

கிறிஸ்துவின் நண்பர்கள் அல்லது கிறிஸ்துவை நண்பராய் கொண்டு வாழும் நாம்:

1. இறைதந்தையாரின் திருவுளம் (சித்தம், திட்டம், எதிர்பார்ப்பு) அறிந்து, அதைப் பிறருடன் பகிருகிறோம் (வ.15) ஆண்டவர் தம் திருவுளத்தை திருவாக்கு (வசனம்) வழியாய் தெரிவிக்கிறார். அவர் திருவுளத்தைப் பற்றுடன் அறிந்துக் கீழ்ப்படியும் தம் சீடர்களை நண்பராய் கொண்டு, மறுதினம் சிலுவைமரம் வழியாகவும், இருமாதங்களுக்குள் 'பெந்தேகோஸ்து அனுபவம்' (தூய ஆவியார்) வழியாகவும் நிறைவேற்றவிருக்கும் தம் வாக்குறுதிகளையும், செயல்திட்டங்களையும் அவர்களுடன் பகிருகிறார்.

(i) நாம் தனியாள், குடும்ப, திருச்சபை வட்டங்களில் புத்தாண்டில் எ.கா. (வருகிற, ஒரிரு வாரங்களில் மாதங்களில்) செய்யவிருக்கும் திருப்பணித் திட்டங்கள் எவை? அவற்றை ஒருவருக்கொருவர் எவ்வகைகளில் பகிர்ந்துகொள்ளலாம்?......

2. இறையன்புடன் பிறர் வாழ்வு வளம்பெற நம் வாழ்வை அனுதினம் பிறருடன் பகிருவோம் (வ. 13). சிலுவை மரணம் வழி மட்டுமன்று, இணையற்ற நமது மாபெரும் நண்பர் கிறிஸ்து அனுதினம் சிலுவை போன்ற அறைகூவல்கள் நடுவேத் தம் வாழ்வை பிறர் (எதிரிகள், தீயவர், அயலார்) அனைவருடனும் பகிர்ந்தார். ஆம், அவரது நண்பர்களாகிய 'திருச்சபை என்பது இரத்தசாட்சிகளின் வித்து' மட்டுமன்று; அது வேதனை, தேவைகளிலிருப்போருடன் அனுதினம் தம் வாழ்வை அன்புடன் பகிர்ந்திடும் 'அனுதின வாழ்வு இயக்கமும்' ஆகும்.

3. இறை (கிறிஸ்துவின்) நண்பர்களனைவரையும் நம் நண்பராய் கொண்டு, இன்னும் பிறரை அவர் நண்பர்கள் ஆக்கிடுவோம் (வ.17). திராட்சைக் கொடி (திருச்சபை) என்பது துளிர், இவை மொட்டு, மலர், காய், கனிகள் பல இசைந்த ஒரு சமுதாயம் ஆகும். அது வாழ்வூட்டி வழி காட்டும் தலையாகிய கிறிஸ்துவுடன் இசைந்திணைந்து வளரும் தசை, நரம்பு, எலும்பு, உறுப்புகள்



**13-10-2014** N.M.S. ஞாயிறு

# அகிலமெங்கும் அருட்பணி

எசா. 42 : 1-9 கொலோ. 3 : 1-13
திபா. 19 மாற். 16 : 15-18

***"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."***
*மாற். 16 : 15*

சுவிசேஷத்தின் மிக இலகுவாக பொருள் அறிய நற்செய்தி அல்லது செய்தியை பாறைசாற்றுதல் அல்லது உலகமெங்கும் பிரகடனப்படுத்துதல் என்று கூறலாம்.

Mission என்ற ஆங்கில வார்த்தை லத்தீன் மொழியிலிருந்து தோன்றியுள்ளது. இந்த வார்த்தை கிரேக்க மொழியில் அப்போஸ்டலோ பெம்போ என்கின்ற பதத்திற்கு பொருத்தி பார்க்கும் போது அனுப்புதல் என்று மொழிப்பெயர்க்கபடுகிறது. திருமறை அருட்பணிக்கு அடித்தளத்தை மிகச் சிறப்பாக அமைத்துள்ளது. கடவுள் அருட்பணிக்கு அனுப்புகின்றவராக மட்டுமல்லாமல் தாமே செயல்படுகின்றவராகவும் இருக்கிறார். அருட்பணியின் தாக்கம் என்ன என்பதைத் தியானிப்போம்.

### 1. அருட்பணி அறியாமை என்னும் இருளை அகற்றுகிறது

அகிலம் அறியாமையினால் மூழ்கிக் கிடந்தது. வாழ்வு என்பது என்ன கல்வி என்றால் என்ன? என்பது அறியாதவர்களாய் வாழ்ந்த மக்களுக்கு அருட்பணியாளர்கள் வழியாய் உடை உடுக்க, மாலைநேரப் பள்ளிகள் துவங்கி கல்வி போன்றவைகளைக் கற்றுக் கொடுத்தது மட்டுமல்லாமல் ஆண்டவரின் வார்த்தையும் சொல்லப்பட்டது. அறியாமையினால் மங்கிக் கிடந்த மக்கள் இந்திய சுதேச அருட்பணி இயக்கத்தினரால் (N.M.S) மங்கி எரிந்த திரியைத் தூண்டிவிட்டபோது அணையாதபடி எரிய வைக்கிறார். அநேகருடைய வாழ்வு அருட்பணியால் ஒளிர்ந்தது. நெரிந்த நாணலை முறியார் மங்கி எரியும் திரியை அணையார். உலகம் இன்று மங்கிப் போனவர்களின் வாழ்வை அணைக்கத்தான் பார்க்கும். ஆனால் அருட்பணியாகிய கடவுள் நெறிந்த நாணலை முறியாமல் மங்கி எரியும் திரியை அணையாமல் காக்கிறார்.

## 2. அருட்பணி அர்ப்பணிப்பில் புத்துயிர் அளிக்கின்றது

லூக் 19 : 1-10

அருட்பணி மானிட வாழ்வை அர்ப்புக்கு நிலைப்படுத்தி புதிய வாழ்வைத் தருகிறது. சமூகத் தீமையில் வாழ்ந்த மனிதனை இனங்கண்டு பெயர்சொல்லி அழைத்தார். இன்று உன் இல்லத்திற்கு வருவேன் என்று சொன்னவர், சீக்கிரமாய் இறங்கி வா என்று சொன்னார். உன் அகந்தை வாழ்வைவிட்டு, சமுகத் தீமையை விட்டு, இறங்கி வா. அருட்பணியாளராகிய இயேசு கிறிஸ்து சகேயுவின் வாழ்வில் அக இருளை அகற்றி, பாவத் தன்மைகளை அகற்றி தன்னை முழுவதுமாய் அறிக்கையிட்டு அற்பணிக்கத் தூண்டுகிறார். சகோயு, புத்துயிராக்கப்பட்ட வாழ்வை அனுபவிக்கிறார். அருட்பணியினால் ஏற்படும் அற்பணிப்பின் வாழ்வு இன்றைய தீமையின் உலகத்துக்கு சவால் விடுக்கும் புத்துயிரான வாழ்வாகும்.

## 3. அருட்பணி வாழ்விழந்தோர்க்கு வாழ்வைத் தருகிறது.

மத் 25: 31 46

வாழ்விழந்தோர்க்கு வாழ்வை வழங்குவது அருட்பணியின் சாரம் ஆகும். சமுதாயத்தின் நிலையை உற்று நோக்கவும் இதில் காணப்படும் குறைகளைச் சுட்டிக்காட்டவும் தொடர்ந்து மக்களில் வாழ்வியல் மாற்றத்திற்காகச் செயல்பட திருச்சபை அழைக்கப்படுகின்றது. எல்லா மக்களினத்தாரும் கூடியிருக்கும் நிலையில் தம்முடைய வாழ்வை மற்றவர்களோடு பகிர்ந்தளிக்கும் மக்களின் அருட்பணியை இயேசு மெச்சுகின்றார். பாதிக்கப்பட்டவரோடு இயேசு இருப்பதையும் அவருக்குச் செய்த பணியானது கடவுளுக்குச் செய்த பணியாகவும் இயேசு கூறுகிறார். அருட்பணி மங்கி எரியும் திரியை அணையாதபடி காக்கிறது. அருட்பணி அற்பணிப்பில் புத்துயிர் தருகிறது. அருட்பணி வாழ்விழந்தோர்க்கு வாழ்வு கொடுக்கிறது. இத்தகைய வாழ்வை தெரிவு செய்த உலகில் வாழ்ந்து காட்டுவோம். அருட்பணியினால் ஒளி வீசச் செய்வோம்.

திரு. **J. பிரபின் செல்வமணி**





3. திருச்சபையின் முழுமுதற்நோக்கு கிறிஸ்துவின் வாழ்வில் பங்கெடுத்து, அதை பிறருடன் பகிருதல் ஆகும். அதுவே கனிகொடுக்கும் பெருவாழ்வு! திராட்சைக் கொடிகள் கனி தருவதற்கேயன்றி மற்றொன்றுக்கும் உதவாது. எ.கா அவற்றைக் கொண்டு கதவு, ஜன்னல்கள் செய்ய இயலாது; இவை நம் கையிலேயே ஒடியக்கூடியவை.

(i) நம் (தனியாள், குடும்ப, திருச்சபை) வாழ்வின் முழு முதல் நோக்கு என்ன?

(ii) சபைநாள் இன்று நம் முழு முதல் நோக்கை எவ்வகைகளில் பறைசாற்றலாம்? ஆகாத (ஆகக்கூடாத) காரியங்களை ஆகாத மனிதர்களைக் கொண்டு ஆகச் செய்வதில் அகமகிழ்கிறார் நம் ஆண்டவர்!

4. திருச்சபை தொடர்ந்து கனி தர ஒரே வழி இறை வாக்கால் தூய்மையாதலும் (வ. 2) இறைவாக்கில் நிலைத்திருத்தலும் ஆகும். என்றும் வாழும் இறைவாக்காம் இயேசுநாதரில் இசையச் செய்து நம்மை நாளும் தூய்மையாக்கும் 'ஆவியின் கத்தி'யே திருமறை (எபி. 4:12) நமது அனுதின வாழ்வுச் சூழலைச் சார்ந்து உரிய வளம் மற்றம் நீர் போலும் இறைவாக்குகளை தூயாவியாரிடம் பெறுவதால் மட்டுமே நாம் தொடர்ந்து கனிதர இயலும் (யோ. 15:7) அத்தகைய முறையில் அனுதினம் அவர் விருப்பமறிந்து அதன்படி வாழ்வதே உண்மையான 'ஜெப வாழ்வு' ஆகும். (மாறாக, நம் சுயவிருப்பை நிறைவேற்ற அவரை பலவந்தம் செய்வது ஜெபமன்று).

(i) திருமறை (இறை) வாக்குப்படி, இச்சபை நாளில் நமது எந்த மனப்பான்மை, மரபு, முன்னுரிமைகளை விட்டுவிட வேண்டும்? எவற்றை புதிதாய் ஏற்று, செயல்படுத்தலாம்?

(ii) இறைவாக்கில் நிலைத்திருந்து இன்றைய நமது தேச, மாநில் அரசியல் பொருளாதார சமூக பண்பாடு வாழ்வுச் சூழல்களில் நாம் எவ்வகைகளில் கிறிஸ்துதரும் வாழ்வு கனி பகிரலாம்?....

## 2) கிறிஸ்துவின் நண்பர்களாவதால் தொடரும் கனிநிறைந்த வாழ்வு (யோவா. 15 : 11 - 17)

இறைவன் (மனுவுருவேற்ற, அருட்பெருக்கால் நம்மிடை வாழும் கிறஸ்து) நம்மை அவரில் நிலைத்து வாழும் கொடிகளை) "நண்பா", "நண்பர்கள்" என்றழைப்பது என்னப் பெரிய பேறு? (வ. 15) குறிப்பாக, அவரது வாக்கிலும், அதுதரும் இறையன்பிலும் நாம் வளருகையில் அவர் நம்மைத் தமது நண்பர்களாய் கொள்கிறார் (வ. 13). நண்பர் என்பதற்கு

இன்னமும் சில மணி நேரங்களுக்குள்ளே சிலுவை மரணமே வந்திடினும் இறைத்தந்தைக்கு எவ்வளவு உண்மையுள்ள மெய்திராட்சையாய் ஆண்டவரேசு உள்ளார் என இணைத்துப் பார்க்க தொடங்கினர். துன்பங்கள், இழப்புகள் நடுவிலும் 'வாழ்வூட்டும் அப்பம்' (யோவா 6:35) அல்லது தம் சொந்த வாழ்வையே ஈந்து வழிநடத்தும் நல் ஆயர் (10:7,9,11,14) அவர் ஒருவர் மட்டுமே மெய்யான திராட்சைச் செடி (இஸ்ரவேலர்) ஆக முடியும் என உணரத் தொடங்கினர். அவரைப் பின்பற்றும் தங்களை எதிர்ப்புகள் மற்றும் நம்பிக்கைத் தகர்த்திடும் சூழலிலும் எப்படி கனிதரும் அவரது வாழ்வு (திராட்சை) கொடிகள் (புது இஸ்ரேலராய்) தங்களை உருவாக்குகிறார்கள் என அறிந்திட அற்பணத்துடன் முன்வந்தனர்.

### *1. கிறிஸ்துவில் நிலைத்திருப்பதால் தொடரும் கனியுள்ள வாழ்வு* (யோ 15 : 1-10)

யோவான் நற்செய்தியாளர் தன் 15ஆம் அதிகாரத்தில் 'நிலைத்திரு' எனும் வாக்கை ஏழு வாக்கியங்களில் (வ. 4-10) எட்டுமுறை பயன்படுத்துகிறார். திராட்சைக் கொடியின் சிறப்புத் தன்மையும், அது தரும் கனியின் சுவையும் அது கொடியில் எப்படி நிலைநிற்கிறது என்பதையொட்டியே அமையும். நிலைத்திருத்தல் என்பதற்குரிய திருமறையின் மூல எபிரேயச் சொல் எமுனா என்பது 'முற்றிலும் உண்மையே' என பொருட்படும் ஆமென் என்ற வேர்ச்சொல்லிருந்து வருகிறது. அதுபோன்று மூல கிரேக்கச் சொல் பிஸ்ட்டிஸ் என்பது 'எத்தடுமாற்றமும் இன்றி நிலையாய் தொடருதல்' என பொருட்படும். எனவே, நமது:

1. திருச்சபையின் அடித்தளம் உடன்படிக்கையன்பில் முழுப்பங்கேற்றல் ஆகும். இயேசு நாதரை அனுதின வாழ்வின் ஆண்டவராகவும், மீட்பராகவும் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட சீடர்களிடம் மட்டுமே அவர் 'நான் மெய் திராட்சை நீங்கள் கொடிகள்' என்கிறார். எனவே தான் அவ்வுடன்படிக்கையன்பை மறு உறுதி செய்ய நமக்கு அவர் அன்பழைப்பு விடுக்கிறார்.

2. நமது தனியாள், குடும்ப, மற்றும் நம் திருச்சபை கூட்டுவாழ்வு, தொழுகை, திருப்பணிகளில் நம்மை முன்னின்று நடத்துவது யார்? அது, ஆண்டவர்தானா, இல்லை அவற்றை நமது சுயவிருப்பப்படி நடத்தத் துடித்து, அழிவை வரவழைக்கிறோமா?.......



*சிறப்பு நாள் அருளுரை*

## சபைநாள் விழா கொண்டாட்டம்

| | |
|---|---|
| உபா. 32 : 1-12 | 1கொரி. 3 : 1-16 |
| திபா. 136 : 1-23 | மத். 16 : 13-19 |

தரிசு நிலங்களாய் காட்சி தந்த இடங்களில் தரிசன பார்வையால் கரிசன வாழ்வால் தரிசன சுடராய் ஒளிவீசிட சபைகள் உருவானது. சபை ஓர் அரிய களஞ்சியம் ஆள் நடமாட்டம் இல்லாத பின்தங்கிய கிராமங்கள் பட்டணங்களாய் காட்சி தருகிறது. அரிய களஞ்சியமாய் திருச்சபை உருவானதால் என்பது வரலாற்று சுவடுதரும் செய்தி. திருச்சபை என்பதன் கிரேக்க சொல் எக்ளேசியா என்பதாகும். திருச்சபையானது விசுவாசத்திலும் வழிப்பாட்டிலும் இணைக்கப்பட்ட உலகில் மனித தன்மைக்க அப்பாற்பட்டு இறைவனின் வெளிப்பாடு மறைப்பொருளாக இருக்கிறது என்பதை திருச்சபை விவரித்து காட்டுகிறது. சபை நாள் கொண்டாட்டத்தை கொண்டாடும் நாம் இறைவனால் கூட்டிணைக்கப்பட்ட வாழ்வை நினைத்து உணர்ந்து பகிர்ந்து கொண்டாடுகின்றோமா? இறைவனின் வெளிப்பட்ட கரிசனை நம்மில் இணைத்து பொருள் பொதிந்து கொண்டாடுகின்றேமா என்பதை சிந்திப்போம்.

### *1. நினைந்து கொண்டாடுவோம்* (இச. 32:7)

இஸ்ரயேல் மக்கள் பாலைநிலத்தில் நெடும்பயணம் கடந்த நாற்பது ஆண்டுகளில் நிறைவேறிய சிறப்பான நிகழ்ச்சிகளை மக்களுக்கு மோசே நினைவுப்படுத்து பாலை நிலத்தில் எவ்வாறு வழிநடத்தினால் என்பதையும் நினைப்பூட்டுகிறார். வாக்களிக்கப்பட்ட நாட்டில் இஸ்ரவேலரின் வாழ்க்கை தடமாக இருக்க வேண்டிய சட்டங்களை நினைப்பூட்டி அவர்களோடு கடவுள் செய்து கொண்டுள்ள உடன்படிக்கை நிறைவுறுத்தி அதன் நிபந்தனைகளை அவர் நிறைவேற்றுமாறு அவர்களை அழைக்கிறார். மோசேயில் பாடல் வரிகள் பண்டைய நாட்களை நினைத்து பார் தலைமுறையினங ஆண்டகள் கவனித்து பார் தந்தையிடமும் பெரியோரிடமும் கேள் அவர்கள் உனக்கு செல்வர். சபைநாள் விழாவை கொண்டாடும் போது நம் திருச்சபை கடந்து வந்த பாதைகள் நினைத்து பார்த்து கவனித்து பார்த்து நாம் கொண்டாடுவோம்.

### *2. உணர்ந்து கொண்டாடுவோம்* (திபா. 136:23)

தாழ்வுற்றிருந்த நம்மை நினைவு கூர்ந்தவர்க்கு நன்றி செலுத்துங்கள்.

அரிய களஞ்சியமாம் திருச்சபை உருவானதை எண்ணி நன்றி செலுத்தி சபைநாள் தினத்தை உணர்ந்து கொண்டாடுவோம்.

ஓர் கைம்பெண் தன் மகனை நீச்சல் சாதனையாளளாக்க வேண்டும் என்று ஆவல் கொள்கிறார். நீச்சல் போட்டிக்காக பயிற்சி கொடுக்க பயிற்சிக்கு அனுப்பினார். ஓர் சர்வதேச நீச்சல் போட்டி அறிவிக்கப்பட்டது. அதற்காக மகனை அனுப்பி வைக்கிறார் போட்டி இடத்தில் சென்ற மகனுக்கோ தயக்கம் பல பதக்கங்களை பெற்ற நீச்சல் முன்னோடி வீரர்ள் மத்தியில் கலந்து கொள்வதா எந்த தயக்கம். அம்மாவில் லட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற முனைப்புடன் போட்டியில் கலந்து கொள்கிறான். முதலாவதாக லக்கை அடைந்து விடுகின்றான். கடந்து வந்த பாதையை திரும்பி பார்க்கிறான். நான் இவ்வளவு தூரம் கடந்து வந்தேனா என்று பார்த்து கடவுள்கு நன்றி சொல்லி பதக்கங்களை பெற்றான். நமது திருச்சபை வாழ்வில் கடந்து வந்த பாதையை எண்ணிப் பார்த்து உணர்ந்து கடவுளுக்கு நன்றி சொல்லி கொண்டாட அழைக்கப்பட்டுள்ளோம். தாவீது தனது வாழ்வில் தாழ்வுற்றிருந்த நிலையில் நினைத்து பார்த்து கடவுளுக்கு நன்றி சொல்கிறார். உணர்வுடன் கூடி வந்தவர்களை சபையிலே சேர்த்து கொண்டு வந்தார் திப. 2-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். அன்பர்களே நாமும் நன்றி உணர்வுடன் சபைச் கூருவோம் கொண்டாடுவோம்.

### 3. பகிர்ந்து கொண்டாடுவோம் (1கொரி 3 : 1-16)

சபை கிறிஸ்துவின் உடல், உடலின் உறுப்புகள் நாம். சபைநாள் கொண்டாடும் நமக்கு கிறிஸ்து தன்னையே பகிர்ந்து நம்மை மீட்டிருக்கின்றார். அந்த மீட்பை பெற்றிருக்கும் நாம் வாழும் திருச்சபை வாழ்விழந்தோர்க்கு வாழ்வழிவிக்க பகிரப்பட வேண்டும். யோ 3:16 இறைவன் தம் திருமைந்தர் வழியாக அன்புகூர்தலின் பகிர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்.

நாமும் கொண்டாட்டத்தில் அன்பை பகிர்ந்து வாழ வேண்டும். யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெருக என்பது வள்ளவரின் வாக்க யாம் பெற்றிருக்கும் திருச்சபை இன்பத்தை பகிர்ந்து நற்செய்தியில் சாரம் வெளிப்பட வேண்டும். இந்த சிறியரில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்ற கிறிஸ்துவின் வார்த்தை ஏற்று வாழ்வாக்கி சபைநாளை நினைத்து, உணர்ந்து, பகிர்ந்து கொண்டாடி இறையரசின் பங்காளிகளாய் வாழுவோம்

**J. பிரபின் செல்வமணி**



**27-09-2014** *தென்னிந்தியத் திருச்சபை நாள்*

## இறையவரில் நிலைத்து, கனிதரும் திராட்சைக் கொடிகள்

| | |
|---|---|
| எச. 5 : 1-7 | யோவா. 15 : 1-17 |
| திபா. 126 | 1கொரி. 12 : 4-7, 27 |

*"நானே மெய்யான திராட்சைச் செடி, நீங்கள் அதன் கொடிகள்..." யோவா. 15 : 5*

'ஆண்டவர் நமக்கு அளப்பெரிய காரியங்களைச் செய்துள்ளார், இதனால் நாம் மகிழ்ந்துள்ளோம்' (சங் 126:3) என மேல்வீட்டறையில் இராவிருந்தினபோது பாடிய இனிய பாடல் இன்னமும் இதயத்தில் ஒலித்துக்கொண்டிருக்க, இயேசுநாதரின் சீடர்கள் 'ஆண்டவர் ஏன் திராட்சைப்பழச்சாறை தமது புது உடன்படிக்கையின் இரத்தம் எனக் கூறவேண்டும்' என்று சிந்திக்கத் தொடங்கினர். அவர்கள் கீதரோன் பள்ளத்தாக்கு வழியே, ஒலிவமலையோரத்து கெத்சமனே தோட்டத்துக்கு நேராக ஆண்டவரைப் பின் தொடர்ந்தனர். வழியில், எருசலேம் திருக்கோயில் தூண்களில் தொங்கும் நாற்பது அடி உயர பொன் திராட்சைக் கொடிகளும், பக்கத்துத் தோட்டங்களில் அழகாய் கனிந்துப் படரும் திராட்சைக் கொடிகளும் அவர்களை மிகவும் கவர்ந்தன. அவ்வமயம் ஆண்டவர் திராட்சைச் செடியொன்றைச் சுட்டி, 'நானே மெய்யான திராட்சைச் செடி, நம் இறைத் தந்தையார் தோட்டக்காரர், நீங்களோ எனந் உடன்படிக்கையன்பில் உருவாகித் தழைக்கும் திராட்சைக் கொடிகள்' என உருவகமொழியில் பேசத் தொடங்கினார்.

தங்கள் மரபுப்படி, 'திராட்சைச் செடி' என்பது இஸ்ரவேல் நாட்டாரைச் சுட்டும் அடையாளம் என சீடர்கள் நன்கறிவர். எனவே இயேசுநாதரின் திராட்சை பற்றிய செய்தியை இஸ்ரவேலரைப் பற்றி கி.மு. எட்டாம் நூற்றாண்டில் இறைவாக்குநர் எசாயா எழுதிய 'திராட்சை கவிதையை' (5: 1 7) நினைவுகூர்நதனர். நிறைந்த கனிதரும் நற்குல திராட்சையாய் தேர்ந்து, நட்டுப் பராமரித்த பின்னர் இஸ்ரேலர் இறைத் தந்தையாராகிய தோட்டக்காரருக்கு உண்மையற்றவர்களாகி விட்டனர் எனத் தம் கடந்த கால வாழ்வைத் திருப்பிப் பார்த்து வருந்தினர். ஆனால்

கடவுளைத் தேடி, அவரை அறிந்து கொள்ளுகின்ற போது, வாழ்க்கையில் எல்லாம் வல்ல இறைவனைச் சார்ந்து நாம் செயல்படுகின்ற போது, நமக்கு முன்பாக இருக்கின்ற தடைகள் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அது தகர்ந்து போவதைக் காண முடியும்.

கடவுளை அறிந்தவராகச் செயல்பட்ட ஆபகூக் தீர்க்கதரிசி, அத்திமரம் துளிர்த்து அரும்பாமல போயினும் .......... நான் ஆண்டவரில் களிகூர்வேன்....... என்று கூறுகின்றார். ஆபகூக் 3: 17, 18

சூழ்நிலைகள் நமக்கு சாதகமில்லாத சூழலில் நாம் கலங்கி தவிக்க அவசியமில்லை. கடவுளுக்குப் பயப்படுகிறவர்கள் மனிதனுக்கு முன்பாக நிமிர்ந்து நிற்க முடியும். சிப்பிராள், பூவாள் என்ற மருத்துவ தாதியர் கடவுளுக்குப் பயந்ததினால், தீமையான அரசக் கட்டளைக்குப் பயப்படாமல் செயல்பட்டார்கள். கடவுள் அவர்கள் குடும்பங்களைத் தழைக்கும்படி செய்தார். கடவுள் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். ஆகவே நாம் கடவுளை நம்பி வல்லமையும், அன்பும், கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தைப் பெற்றுக் கொண்டு செயல்பட நம்மை ஒப்படைப்போம்.

திருமதி. S. **ராஜலின் ஜெயம்**





பல சேர்ந்த அவரது ஒரே உடல் ஆகும். (1கொரி 12:27). எனவே திருச்சபை உறுப்பினர் ஒருவருக்கொருவர் நண்பர்கள் எனவே பற்றுறுதி, தூய்மையாதல், தூயாவியாரது அருட்பொழிவு அனுபவங்கள், ஜெபித்தல், திறமைகளை கண்டறிந்து வளர்த்தல், அவற்றைத் திருப்பணிகளில் பயன்படுத்துதல் அனைத்திலும் தொடர்ந்து ஒருவருக்கொருவர் கரங்கொடுப்போம்.

(i) பல் சமய சூழலில் கனிதரும் கிறிஸ்துவின் திராட்சைக்கொடிகள் (நண்பர்கள்) நாம் எவ்வகைகளில் பிறசமய நண்பர்களுடன் திருப்பணிகளில் ஈடுபட்டு கிறிஸ்துவில் கனியும் பெரு (நிறை) வாழ்வைப் பகிரலாம்?..........

அறை கூவல்கள் நடுவிலும் அதிக வாய்ப்புகளும் ஆற்றலும் அனுதினம் அளித்து நம்மை மற்றொரு இனிய சபைநாளைக் கண்டுமகிழச் செய்யும் வாழ்வு (மெய்) திராட்சையாம் ஆண்டவரேசுவை உளமாரத் துதிப்போம். தொடர்வது அவரில் நிலைத்து நின்று, அருட்பெருக்கால் அவர் நம் வாழ்வில் கூட்டிச் சேர்க்கும் நண்பர்கள் அனைவருடனும் அவரது திராட்சைக் கொடியென கரங்கோர்த்து உயர்ந்து அவர் தரும் நிறைவாழ்வை கனியென நம் கரமேற்போம். அனுதினம் அதனைப் பாரெங்கும் பகிர்ந்து மகிழ்வோம்.

அருள்திரு. அறிவர். **செ. டொனால்டு சாமுவேல்**

# ஆண்டுவிழா அருளுரைகள்

ஞாயிறுப்பள்ளி ஆண்டுவிழா

## சிறுபிள்ளைகளைப் போலாகுங்கள்

மத். 18 : 1-5

*"நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்..." மத். 18 : 3*

சிறுபிள்ளைகளை இறைவனுக்கு நேராக வழிநடத்தும் ஞாயிறுப் பள்ளியின் சீரிய பணி சிறப்புமிக்கது. சிறுபிள்ளைகளைச் சிறந்த இறைமக்களாக மாற்றும் இந்தப் பணியில் திருமறைப்பள்ளி கொடுக்கும் ஊக்கம் மிகவும் பாராட்டுதலுக்குரியது. ஒருவருட காலமாக இப்பணியில் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உறுதுணையாக, உதவியாக, வழிகாட்டியாக இருந்த இறைவனுக்கு நன்றி செலுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.

சிறுபிள்ளைகளுடைய சிறப்பைப் பற்றி திருமறை தெளிவாகக் கூறுகிறது. பிள்ளைகள் கர்த்தர் நமக்கு தயவாய் தந்த ஈவு (தொநூ. 33:5). பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம். கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் (திபா. 127: 4-5). பிள்ளைகள் ஓங்கி வளரும் ஒலிவ மரக்கன்றுகள் (திபா. 128:3) இறையரசின் நற்சான்றுகள், பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடம். பிள்ளைகள் இறையாற்றல் பெற்றவர்கள் (திபா. 8:2). பிள்ளைகள் பரலோகத்தின் பங்காளிகள் (மாற்கு 10: 14). சிறுபிள்ளைகளைப் போல மாறவேண்டும் என்று இயேசு கிறிஸ்து மத். 18:2ல் அழைப்பு விடுக்கிறார். நாம் எப்படி சிறுபிள்ளைகளைப் போல் மாறவேண்டும் என்று சிந்திப்போம்.

### *1. மனம் திரும்ப வேண்டும்* (மத். 18:3)

பரலோக ராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று சீடர்கள் இயேசுவிடம் கேட்டபோது இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி, அவர்களுக்கு அந்தப் பிள்ளையைக் காண்பித்து, மனம் திரும்பிப் பிள்ளைகளைப் போலாகாவிட்டால் இறையரசில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று சொன்னார். மனந்திரும்புதல் என்பது ஒரு நிலையிலிருந்து அதாவது பாவத்தின்





இயேசு உலகத்தில் வாழ்ந்த போது, திரளான ஜனங்கள் சாப்பிட ஒன்றும் இல்லாதிருந்த போது சீடர்களிடம் இவர்கள் மூன்று நாளாய் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள் என்று கூறினார் (மாற். 8:2) அப்பொழுது சீடர்கள் இந்த வனாந்திரத்திலே இவர்கள் எங்கிருந்து அப்பத்தைக் கொண்டு வந்து இத்தனை பேரை திருப்தியாக்கக் கூடும் என்றார்கள். இயேசு அவர்களிடம் உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். சீடர்களிடம் ஏழு அப்பங்களும் சில சிறு மீன்களும் இருந்தன, இயேசு அவைகளை ஆசீர்வதித்து சீடர்களிடம் பரிமாறும் படி கொடுத்தார். அற்புதம் நிகழ்ந்தது. பஞ்சங்களும், இயற்கையின் சீற்றங்களும் வரும்பொழுது எல்லாம் வல்ல இறைவனை நம்பியிருக்கின்ற பொழுது பயப்பட அவசியமில்லை.

கவியரசர் சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன். (திபா 23:4) என்று தன் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார்.

### *3. நாம் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்ற நிலையை உணரும் போது பயப்படவேண்டாம்.* (மாற். 16:6)

**"Fear not when yopu feel, you are worthless"**

"திகிலுற வேண்டாம்; சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள் அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்; அவர் இங்கே இல்லை

சில பெண்கள் இயேசுவை அடக்கம்பண்ணின பின்பு வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையில் கல்லறையினிடத்திற்கு வந்தார்கள். கல்லறையின் வாசலில் இருக்கிற கல்லை எவன் புரட்டித் தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டிருந்தார்கள். கல்லைப் புரட்டித் தள்ளுவதற்கான பலம் அவர்களிடம் இல்லை. தங்களால் ஒன்றும் முடியாது என்று கலங்கி இருந்த வேளையில் கல்லை ஏறிட்டுப் பார்த்தார்கள். அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள். கல்லறைக்குள்ளிருந்த வெள்ளையங்கி தரித்த வாலிபன் அவர்களைப் பார்த்து பயப்படாதிருங்கள், அவர் உயிர்த்தெழுந்தார். சிலுவையிலறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் உயிர்த்தெழுந்தார் என்ற நற்செய்தியை அறிவிக்கின்றார்.

வாழ்க்கைப் பயணத்தில் பல தடைக்கற்கள் நம் முன்னால் இருக்கின்றன, வைக்கப்படுகின்றன. இயேசுவை உண்மையாகத் தேடுகின்ற போது தடைக்கற்களைத் தாண்டி நிறைவான பகுதிக்கு நேராகச் செல்ல முடியும். வாழ்க்கைத் தடை ஓட்டம் போன்றது (Hurdle Race)

பிள்ளையின் அழுகைச் சத்தத்தைக் கேட்டு கலங்கி பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன் என்று எதிராக அம்பு பாய்கின்ற தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுகிறாள். கைவிடாத கடவுள் ஆகாரே என்ன நிகழ்ந்தது, பயப்படாதே என்று தேற்றுகிறவராகவும், பிள்ளையைப் பெரிய இனமாக தோன்றச் செய்வேன் என்று வாக்குத்தத்தம் கொடுக்கிறவராகவும் செயல்படுகின்றார்.

தாய் தந்தையை இழந்ததினால், கணவனை இழந்ததினால் தனிமைப்படுத்தப்படுவதால், கைவிடப்பட்ட நிலையை உணர்ந்து அழுகின்ற பொழுது, கடவுள் பயப்படாதே என்ற தேற்றுகிறவராக இருக்கின்றார்.

இயேசு சீடர்களை நோக்கி ''திடன் கொள்ளுங்கள் நான் தான் பயப்படாதிருங்கள்'' என்று கடல் காற்றில் தத்தளித்துக் கொண்டிருந்து கைவிடப்பட்டு கலங்கியபோது கூறுகின்றார். தனிமை, கைவிடப்பட்ட நிலையில் கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்ற தைரியத்தோடு செயல்பட அழைக்கப்படுகின்றோம்.

## 2. இயற்கைச் சீற்றங்கள், பஞ்சங்கள் வந்தாலும் பயப்படவேண்டாம்

"Fear Not when Natural Calamities such as Famine Strike, The place you Live in"

எலியா இறைவாக்கினரின் காலத்தில் மழை இல்லாததினால் தேசத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது எலியா கடவுளின் வார்த்தையின்படி சாரிபாத் என்ற ஊருக்கு போனார். அங்கு ஒரு கைம்பெண் விறகு பொறுக்கிக் கொண்டிருந்தார். அவரிடம் தண்ணீரும் அப்பமும் எலியா கேட்கின்றார். அதற்கு அந்தக் கைம்பெண், பானையில் ஒரு பிடி மாவும், கலசத்தில் கொஞ்சம் எண்ணெயுமேயல்லாமல் என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்றும், நானும் என் மகனும் சாப்பிட்டு செத்துப் போக அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்.

அப்பொழுது எலியா அவரிடம் அஞ்சவேண்டாம், போய் நீ சொன்னபடியே செய்......... (1 அர. 17:13) அந்தக் கைம்பெண்ணும் அந்த வார்த்தையின் படி செயல்பட்ட போது அற்புதம் நடந்தது.

இயற்கை நமக்கு எதிராக இருக்கின்ற சூழ்நிலைகளிலே நாம் கலங்கிப் போகிறோம். எல்லாவற்றையும் படைத்த கடவுளை நாம் நம்புகிற வேளையிலே அற்புதங்களைச் செய்ய வல்லமையுள்ளவராக இருக்கின்றார்.





பிடியிலிருந்து மீண்டு நல்ல நிலைக்குத் திரும்புதல் என்பதாகும். மனம் திரும்புதல் என்பதை மனம் மாறுதல் எனவும் கூறலாம். மனம் திரும்பி பிள்ளைகளைப் போலாகாவிட்டால் என்று இயேசு கிறிஸ்து கூறுவது பிள்ளைகளின் குணாதிசயங்களைப் பெறவேண்டும் என்பதாகும். சிறு பிள்ளைகள் கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் கொண்டவர்கள். சூது வாது இல்லாதவர்கள். அவர்களைப் போல மாற நம்முடைய குணங்கள் மாற வேண்டும். இளையகுமாரன் மனம்திரும்பி தன் தகப்பனிடத்திற்கு வந்தபோது அவனுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது. (லூக்கா 15: 11-22). சகேயுவினுடைய வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து வந்தபோது மனந்திரும்பி, மனமாற்றம் ஏற்பட்டு அவனுடைய வாழ்க்கையே தலைகீழாக மாறியது (லூக்கா 19:8). மனந்திரும்புபோது குழந்தைகளைப் போல சிறுபிள்ளைகளைப்போல அவர்களுடைய மனம் மாறுகிறது. அநியாயமாய் வரிவசூலித்தவன் இப்போது நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துவேன் என்கிறான். மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோசம், மனமகிழ்ச்சி உண்டாயிருக்கும் என்று இயேசு சொன்னார் (லூக். 15 : 7). மனம் திரும்பும்போது நம்முடைய உள்ளங்கள் சிறுபிள்ளைகளைப் போலாகிறது. திறந்த மனதுடையவர்களாக, வெள்ளை உள்ளமுடையவர்களாக மாறவேண்டும்.

## 2. மனத்தாழ்மையாயிருக்க வேண்டும் (மத். 18:4)

மனந்திரும்பும் அனுபவம் ஏற்படும்போது மனத்தாழ்மை தானாக வருகிறது. பிள்ளைகளைப் போல தன்னைத் தாழ்த்தவேண்டும் என்று சிறு பிள்ளையின் குணாதிசயத்தை அவர்களுக்கு உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார். பிள்ளைகளிடம் பகட்டு இருக்காது. எளிமையானவர்கள். இந்த உலகத்திலே பிள்ளைகள் பிறக்கும்போது நல்லவர்களாகவே பிறக்கிறார்கள். ஆனால் குடும்ப, சமுதாய, திருச்சபை சூழ்நிலைகளிலிருந்து, பிறரிடமிருந்து பெரியவர்களாகும்போது மற்றவர்களைப் பார்த்து கற்றுக் கொள்கிறார்கள். யார் பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்ற போட்டிமனப்பான்மையுடன், சீடர்கள் கேட்ட கேள்வியை, அதனுடைய உள் அர்த்தத்தை அறிந்து கொண்டவராய் அந்தச் சிறு பிள்ளையை முன்னிலைப்படுத்தி விளக்கம் கொடுக்கிறார். சிறுபிள்ளைகளுக்கு அக்கால சமுதாயத்தில் முதன்மையிடம், முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. உதாரணமாக, இயேசு கிறிஸ்துவிடம் சிறுபிள்ளைகளை அவர்களுடைய பெற்றோர் கொண்டு வந்தபோது அவர்களை சீடர்கள் தடுத்தார்கள். இயேசுவோ, அவர்களை அணைத்து முத்தமிடுகிறார். சமுதாயத்தில் கடைநிலையில், கண்டுகொள்ளப்படாத, ஒதுக்கப்பட்ட நிலையிருந்த இந்த பிள்ளைகளின் தாழ்மையை சீடர்களிடம் விளக்கிக் காட்டுகிறார். சிறுபிள்ளையை நடுவே நிறுத்தி

மையப்படுத்துவதிலிருந்து அவர் சிறுபிள்ளைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். பூலோகத்தில் தன்னைத் தாழ்த்துகிறவன் பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான். இறைவன் நம்முடைய மனத்தாழ்மையை எதிர்பார்க்கிறார். (மீகா 6:8). தன்னைத் தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் (லூக். 14 : 11). இறைவன் தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையளிக்கிறார் (நீதி. 3:34). தாழ்மைக்கு இலக்கணமாயிருந்தவர் இயேசு. அவருடைய பிறப்பிலிருந்து இறப்பு வரை தாழ்மையாயிருந்தார். பிலி 2:8ல் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்து, தம்மைத்தாமே தாழ்த்தினார் என்று பார்க்கிறோம். எனவே சிறுபிள்ளைகளைப் போல மனத்தாழ்மையாயிருக்கும்போது நாமும் இறையரசின் பங்காளிகளாக, பெரியவர்களாக மாறுவோம் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

### 3. மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும்

மனந்திரும்பி பிள்ளைகளைப் போல ஆகவேண்டும். இந்தப் பிள்ளையைப் போல மனத்தாழ்மையாயிருக்க வேண்டும் எனப் போதித்த ஆண்டவர் சிறுபிள்ளைகளை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு கோரிக்கை விடுக்கிறார். அதோடு சிறுபிள்ளைகளை ஒருவன் ஏற்றுக்கொள்ளும்போது இறைமகன் இயேசு கிறிஸ்துவையும் அவன் ஏற்றுக்கொள்கிறான் என்றார். பிள்ளைகளை நாம் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் பால்மணம் மாறாப் பச்சிளம் குழந்தைகள் பரமனின் பரிசு. சிறுபிள்ளைகளான அரும்புகளை விரும்பி அள்ளி அன்பின் கரங்களினால் அரவணைத்தார் நம் அருமை நாதர் இயேசுகிறிஸ்து. இறைவன் சிறுபிள்ளைகளை நேசிக்கிறார். அவர்கள் மேல் கரிசனை கொள்கிறார். எல்லாப் பிள்ளைகளையும் இறைவன் ஏற்றுக்கொண்டது போல நிறம், மொழி, இனம், சாதி, சமய வேறுபாடின்றி நாமும் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். பாகுபாடு, பாரபட்சம் காட்டக்கூடாது. அதோடு குழந்தைகளைத் தொழிலாளர்களாக, கொத்தடிமைகளாக, விளம்பர, வியாபார, மோகப் பொருட்களாக, பணம் ஈட்டும் கருவிகளாகப் பயன்படுத்தும் நிலையை வன்மையாகக் கண்டிக்க வேண்டும். பரமனின் பரிசான, மனுக்குலத்தின் மகுடமான சிறுபிள்ளைகளின் மதிப்பினை உணர்ந்து பிள்ளைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே மனந்திரும்பி சிறுபிள்ளைகளைப் போலாகி மனத்தாழ்மையைத் தரிக்கும் போது இறைவனும், மற்றவர்களும், நம்மை ஏற்றுக்கொள்வார்கள். நாம் சிறுபிள்ளைகளைப் போலாகி பரலோக ராஜ்யத்தின் பங்காளிகளாவோம்.

திருமதி **சோபனா கின்சன்பெல்**



*பெண்கள் சங்க ஆண்டுவிழா*

## வலிமையுறும் பெண்கள்

2திமொ. 1 : 1-11

> ***“கடவுள் நமக்குக் கோழையுள்ளத்தினை அல்ல வல்லமையும், அன்பும், கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார்.”*** *2திமொ. 1 : 7*

திருமறையில் பலவிதமான ஆவிகளைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. அவற்றில் சில ஞானத்தின் ஆவி, உணர்வைத் தரும் ஆவி, உற்சாக ஆவி, நியாயத்தின் ஆவி, தாழ்மையின் ஆவி, மேட்டிமையின் ஆவி, கனநித்திரையின் ஆவி, பொய்யின் ஆவி இன்னும் பல. கடவுளை நம்புகிறவர்களுக்கு கடவுள் தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொடுக்க வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

பயம் வாழ்வில் எந்தச் சூழ்நிலையிலும் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. வாழ்வைப் பற்றி, முன்னேற்றம் பற்றி, எதிர்காலம் பற்றிய நினைவுகள் பயததை ஏற்படுத்துகின்றன. Eric Hoffer என்ற அறிஞர் “The Passionate State of Mind” என்ற புத்தகத்தில் “Fear comes from Unvertainty” நிலையில் இருந்து வருவது பயம் என்று குறிப்பிடுகிறார்.

திருமறையில் “பயப்படாதே” என்று கடவுள் நம்மை ஆற்றுகிறவராக, தேற்றுகிறவராக செயல்படுகிறதைப் பல இடங்களில் காண்கிறோம். வாழ்வில் நம்பிக்கை ஏற்பட கடவுள் பேரில் நம்பிக்கை அவசியம். எச்சூழலிலும் கடவுள் நம்மோடு இருக்கின்றார். “பயப்படாதே” என்ற வார்த்தையை மூன்று தலைப்புகளில் பார்ப்போம்.

### 1. தனிமையை கைவிடப்பட்ட நிலையை உணரும் போது பயப்படாதே “Fear not when you feel deserted and lonely”

வாழ்வின் பல சூழ்நிலைகளில் தனிமையைக் கைவிடப்பட்ட நிலைமையை உணரும் போது “பயப்படாதே” என்று கடவுள் ஆற்றுகின்றார், தேற்றுகின்றார்.

தொ.நூ 21:17ல் ஆகார் உனக்கு நிகழ்ந்தது என்ன? அஞ்சாதே ........ ஆகார் ஆபிரகாமால் கைவிடப்பட்ட நிலைமையில் பெயர்செபாவின் வனாந்திரத்திலே அலைந்து திரிகின்ற பொழுது, தண்ணீர் தீர்ந்து போய்

ஆண்டுவிழா அருளுரை

C.E. ஆண்டுவிழா

# இளமையின் இன்றியமையாமை

*"நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத் தாழ்வாகக் கருதாதிருக்கட்டும்."*
1திமொ. 4 : 12

வாழ்க்கையில் வெறுப்படைந்த இளைஞன் ஒருவன் அறிஞர் ஒருவரைக் காணச் சென்றான். எனக்கு நிம்மதியில்லை, நான் சாக வேண்டும் என்றான்.

சதுரங்கம் விளையாடுவதைத் தவிர இந்த உலகில் வேறெதுவும் எனக்குத் தெரியாது. நான் வாழ்வதற்கு அருகதையற்றவன் என்று கூறினான்.

அறிஞர் ஒரு சதுரங்கப் பலகையைக் கொண்டு வரச் சொன்னார். அந்த இளைஞனோடு சதுரங்கம் விளையாட தன் இளம் சீடர் ஒருவரையும் அழைத்தார். அந்தச் சீடரிடம் அறிஞர் சொன்னார், நீ எனக்காக உயிரையும் கொடுப்பேன் என்றாயல்லவா? இப்போது அதற்கான நேரம் வந்துவிட்டது.

இந்தப் போட்டியில் யார் தோற்கின்றீர்களோ அவர் சாகவேண்டும். இருவருமே சாகத் துணிந்து வந்திருக்கிறீர்கள் என்றார். அந்த இளம் சீடருக்கோ சதுரங்கம் என்றாலே என்னவென்று தெரியாது.

உன் சீடர்கள் இந்த விளையாட்டை வருத்தத்தோடே பார்க்கத் தொடங்கினர்.

இளைஞன் மிக நன்றாக விளையாடினான். திடீரென இளம் சீடரின் முகத்தை உற்றுப் பார்த்தான், அவர் முகத்தில் எளிமை, சாந்தம், பணிவு, கீழ்ப்படிதல், கருணை, எதற்கும் தயாரான நிலை ஆகியன வெளிப்பட்டதைக் கண்டான். இப்படிப்பட்ட உருவர் எனக்காகச் சாவதா? என எண்ணிய இளைஞன் தாறுமாறாக விளையாட ஆரம்பித்தான்.

இளைஞரிடம் இந்த மாற்றத்தைக் கவனித்த குரு, சதுரங்கப் பலகையைக் கவிழ்த்துவிட்டு வெற்றி தோல்வி இலலை என அறிவித்தார்.

இப்போது இளைஞரிடம் குரு சொன்னார். தம்பி. உன் மன ஒருமைப்பாட்டைக் கவனித்தேன். முழுமையாக ஆட்டத்தில் மூழ்கிப் போனாய். இருப்பினும் அந்த இளம் சீடருக்காக உயிர்த்தியாகம் செய்ய முடிவு செய்து தாறுமாறாக விளையாட ஆரம்பித்துவிட்டாய்.



ஜெபக்குழு ஆண்டுவிழா

# வாழ்வு தரும் இறைவேண்டல்

யோவா. 14 : 7-15

*"நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன்."* யோவா. 14 : 14

மானிட வாழ்வில் இறைவேண்டல் வாழ்வோடு ஒன்றித்திருக்க வேண்டும். அது நமது ஆண்டவரோடு உரையாடி மகிழ்ச்சியை கண்டடைவது மட்டுமல்ல அதுவே பெரும் பேறாகும். தீர்க்கர்கள் ஜெபிக்கும் பண்பு உடையவர்களாக இருந்தார்கள். மக்களின் துன்பங்களைத் தங்கள் துன்பங்கள் போல் எண்ணி மன்றாடினார்கள். (எஸ்றா 9 : 6-15, நெகே. 1 : 4-11) எஸ்றா, நெகேமியா போன்றவர்கள் தங்களுக்காகவும், மக்களுக்காகவும் ஒரே நேரத்தில் ஜெபித்தனர். ஜெபிப்பதின் மூலம் கடவுள் நம் அருகில் இருக்கிறார் என்ற உணர்வு ஏற்படும். நமது உடல், ஆன்மா, ஆவி ஆகிய அனைத்து நிலைகளிலும் இறைத் துணையை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் (திபா. 102 : 1-6). தாவீது கூக்குரலிட்டு அழைக்கிறார். நாம் எவ்வாறு வேண்டுதல் ஏறெடுப்பது?

## *1. அக இருளகற்றி வேண்டுதல் :*

நமது வேண்டுதல்கள் இறைவரின் பார்வையில் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். ஆனால் பல நேரங்களில் ஊனியல்புக்குக் கொடுக்கிற முன்னுரிமையால் இறையுறவை விட்டு விலகிச் செல்கிறோம். நாமாக நம்மை இருளின் பாதிப்புக்குள் தள்ளி விடுகிறோம். கடவுளற்ற இந்தச் செயல் தொடராமலிருக்கவே ஏசாயா இறைவாக்கினர் வழியாக வாருங்கள். இப்பொழுது நாம் வழக்காடுவோம் என அழைக்கிறார். (ஏசா. 1 : 18). இறையவர் தங்குமிடமாகிய உள்ளம் கறைபிடித்துள்ளது. ஆகவே பாவங்களுக்காக, மனம்திரும்புதலுக்காகப் போராடி ஜெபிக்க வேண்டும். எஸ்றா ஜெபித்தார் (எஸ்றா. 10 : 1) பாவத்தால் கறைப்பட்ட மக்கள் மறுமலர்ச்சி அடைந்தனர் (லூக். 18 : 9-14). ஆயக்காரன் தவறுகளை எண்ணி மனம் வருந்தி ஜெபித்தார். தன்னைத் தாழ்த்தி ஜெபித்தபடியினாலே ஆண்டவர் அங்கீகரித்தார் (ரோமர் 15 : 32, கொலோ. 4 : 12) பவுல் அடிகளார் ஏறெடுக்கும் மன்றாட்டுக்களில் போராடினார். நம்மைச் சரி செய்ய, பரிசுத்த வாழ்வு வாழ ஜெபத்தில் போராட வேண்டும். (திபா. 139 : 24, 25) தாவீதின் மன்றாட்டு வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்ற

பார்த்து நித்திய வழியில் என்னை நடத்தும். ஜெபிப்பவன் எப்படியும் வாழலாம் என்றல்ல. (ஏசா. 59 : 1,2). நமது பாவங்கள் ஜெபத்திற்கு வரும் பதிலைத் தடுத்து விடுகின்றன. அவரது முகத்தை மறைத்து விடுகிறது. ஆகவே போராடி ஜெபிக்க வேண்டும் (ஆபகூக் 1 : 13). நாட்டில் பாவம் பெருகினபோது ஆபகூக் தீமையைப் பார்க்காத சுத்த கண்ணனாகக் கண்டு கண்ணீர் விட்டு போராடி ஜெபித்தார் (யாக். 5 : 16) குணமடைய குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கை செய்து ஜெபிக்க வேண்டும்.

வில்லியம் பான்ஸ் என்ற ஜெபவீரர் கடை வீதிக்குச் சென்றபோது அழ ஆரம்பித்தார், அருகில் சென்று கொண்டு இருந்த தாயார் ஏன் அழுகிறாய்? என்று கேட்டபோது இத்தனை மக்கள் நரகத்திற்கு செல்கிறார்களே என்பதை நினைத்தபோது அழ ஆரம்பித்தேன் என்றாராம். இவரது ஜெபத்தின் வழியாக ஏராளம் மக்கள் மனம் மாற்றம் அடைந்தார்கள். ஜெபவீரர் தான் எழுப்புதலைக் கொண்டு வரமுடியும்.

## 2. அகத் தெளிவுடன் வேண்டுதல் :

...சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள். (மாற். 14 : 38). இறைவேண்டல் உணர்வுகளை ஒன்றிணைத்து உன்னதரோடு உரையாடும் ஓர் இனிய அனுபவமே. அந்த அனுபவமே அக தெளிவுடன் இறையரசுப் பணியில் நம்மைச் செயல்படுத்துகிறது. அகத் தெளிவால் அலகையை வென்றிடலாம். இயேசு கிறிஸ்துவும் நாற்பது நாட்கள் பாலைவனத்தில் நோன்பிருந்து ஜெபித்தார். தீயவன் மேற்கொள்ளவிடாமல் வெற்றி கண்டார். இன்று மனித வாழ்வில் பலவித சோதனைகள் குறுக்கிடுகின்றன. சோதனையை அறிந்து கொள்ள, ஜெயிக்க வழி ஜெபமே. நம்மை சோதித்தறிய நமக்குள் விழிப்பு அவசியம். விழிப்போடு காரியங்களைப் பகுத்துணர ஜெபிக்க வேண்டியது கட்டாயம் 2கொரி. 1 : 11 ல் பவுல் அடிகளார் கொரிந்திய சபைக்கு விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று கேட்கின்றார். உபத்திரவங்கள் வரும்போது ஆறுதல் வேண்டும். பாடுகள் அனுபவிக்கிறபோது அவைகளைச் சகித்துக்கொள்ள வேண்டும். பலத்திற்கு அப்பாற்பட்ட பாரங்கள் வருகிறபோது நம்பிக்கையில் பலப்பட வேண்டும். 1பேது. 4 : 7 ல் பேதுருவும் இறைவனிடம் வேண்டுதல் செய்யுமாறு கட்டுப்பாட்டோடும் அறிவுத் தெளிவோடும் இருங்கள் என்கிறார்.

(மாற்கு 10 : 46-52) பர்த்திமேயு என்ற பார்வையற்ற மனிதரின் அகத் தெளிவே அவரது விடுதலைக்குரிய ஊடகமாக மாறியது. இயேசு சாலை வழியாகச் செல்கிறார் என்று கேள்விப்பட்ட உடனே தன் சத்தத்தை உயர்த்தி தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாய்க்





நாமும் கடவுளிடம் வரும்போது நமது மனநிலைகள் கடவுளால் அங்கீகரிக்கபடுகின்ற அளவில் அமையவேண்டும். எரே 14: 12இல் அவர்கள் நோன்பு இருப்பினும் நான் அவர்களின் குரலைக் கேட்கமாட்டேன். அவர்கள் எரிபலிகளையும் தானியப்படையல்களையும் அளிப்பினும் அவற்றை ஏற்கமாட்டேன். நாம் கடவுளின் சமூகத்தில் வரும்போது, நமது நன்றிப் படையல்களை படைக்கும்போது ஆபேலை போன்ற மனநிலையோடு படைப்போம். கடவுள் நம்மை அங்கீகரித்து வழிநடத்துவராக.

இவ்வளவு மேலான உணவு மீந்ததை பிச்சைக்காரருக்குக் கொடுக்கிறோம் அல்லது வெளியே கொட்டி விடுகிறோம். இன்று நாம் கடவுளிடம் அன்பு செலுத்துகிறோம் என்று அதற்கு அடையாளமாக படைக்கின்ற நன்றிப் படையல்கள் எவ்வண்ணமாக அமைந்துள்ளன என்பதைச் சிந்திப்போம்.

ஆண்டவராகிய இயேசு ஏழைப் பெண்மணியின் காணிக்கையை மெச்சிப் பேசுகின்றார் லூக் 21:6 இல் இவரோ தமக்கு பற்றாக்குறை இருந்தும் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார் என்றார்.

மாற் 14: 1 - 9 வரை பகுதியில் ஒரு பெண்மணியை குறித்து கூறப்பட்டுள்ளது. அவள் விலையுயர்ந்த நறுமண தைலத்தை இயேசுவின் தலைமேல் ஊற்றினார். முந்நூறு தெனாயிரத்துக்கு மேலாக விலை மதிப்புள்ளது. முந்நூறுதெனாரியம் என்று சொல்லும்போது ஒரு மனிதன் ஒரு வருடம் முழுவதும் உழைக்கின்ற உழைப்பின் ஊதியம். இந்தப் பெண்மணி இந்த நல்ல செயலைச் செய்கின்ற சூழல் மிகவும் குறிப்பிடத்தக்கது. மறைநூல் அறிஞர்களும், தலைமைக்குருக்களும் இயேசுவைக் கொலை செய்யவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்த வேளையில் இந்த நற்செயலைச் செய்கிறாள். இச்செயல் அவள் இயேசுவின் மீது வைத்திருந்த அன்பை வெளிப்படுத்துகிறது.

நாம் கடவுளுக்கு படைக்கின்ற நன்றிப்படையல்கள் இயேசுவின் மீது வைத்திருக்கின்ற அன்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதா? என்பதைச் சிந்திப்போம்.

### 3. கடவுளால் அங்கீகரிக்கப் படுகின்ற நிலையில் அமையவேண்டும் (மத் 5 : 24)

அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப் போய் முதலில் அவளிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்.

கடவுளின் சமூகத்தில் நன்றிப் படையல்களை படைக்கின்ற நமது மன நிலைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். கடவுளால் நமது செயல்கள் அங்கீகரிக்கப்பட நமது மன நிலைகள் தூய்மையாக அமைய வேண்டும். அதி 4: 4b

“ஆண்டவர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் கனிவுடன் கண்ணோக்கினார்”.





கூப்பிட்டான் என்று பார்க்கிறோம். பார்வை அடைந்து இயேசுவை நம்பிக்கையோடு பின்பற்றினான். இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அகத் தெளிவடைந்து, மன்றாடும்போது பதில் பெற்றுக்கொள்கிறோம்.

### 3. அழியா வாழ்வை எதிர்நோக்கி வேண்டுதல் :

ஆகையால் நிகழப் போகும் அனைத்திலிருந்தும் தப்புவதற்கும் மானிட மகன் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கும் எப்பொழுதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள் (லூக். 21 : 36). இவ்வுலகில் அழிந்து போகின்ற செல்வம், செல்வாக்கு, பதவி, அழகு, சுகம் இவைகளுக்காக மட்டும் அல்ல. அழியாத வாழ்வுக்காக ஜெபிக்க வேண்டும். ஒரு நாள் உண்டு. நித்திய நியாயாதிபதிக்கு முன்பாக நிற்க வேண்டிய நாள். நமது அந்தரங்க வாழ்வு வெளிச்சத்துக்கு வரும். நாம் செய்த நன்மைகளாவது, தீமைகளாவது நம்மோடுகூட வரும். யாரும் நம்மைத் தப்புவிக்கவே முடியாது. அந்த நாளில் நமது நிலைமை துக்கம் அடைந்து விடாதபடிக்கு நம்மை இவ்வுலக வாழ்வில் இறை விருப்பப்படி வாழ்ந்து காத்துக்கொள்ள வேண்டியது அவசியம். சீடர்கள் ஜெபித்து தங்கள் வாழ்வில் இறை சமூகத்திற்காகத் தங்களைத் தயாரித்துக் கொண்டனர். (வெளி. 5 : 6 முதல்) அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவாகிய அரசருக்கு முன்பாக நிற்க காண்கின்ற காட்சி. உலக அரசர்களோ, சமயத் தலைவர்களோ, வழக்கறிஞர்களோ பரிந்து பேச இடமில்லை. வாருங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என்று அழைத்து நித்திய காலமாக குருத்தோலைகளைப் பிடித்து ஓசன்னா பாடும் கூட்டத்தில் நாமும் பங்குபெற வேண்டும். அதற்காக இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் இடைவிடாத ஜெபத்தில் தரித்து இருக்க அழைக்கப்படுகிறோம்.

நாம் ஜெபத்தில் வெற்றியுள்ள வாழ்வு பெற ஒவ்வொரு நாளும் அக இருளகற்றிடும் என அறிக்கை செய்து போராடி வேண்டிக் கொண்டு இரட்சிப்பை உறுதி செய்ய வேண்டும். இன்று நாம் வாழும் சூழலை உற்று நோக்கி, நம்மைச் சுற்றிலும் நடைபெறுகின்ற தீமைகளில் இருந்து நாம் விடுபட அகத் தெளிவுடையவர்களாக ஜெபிக்க வேண்டும். ஜெபத்தில் அழியா வாழ்வை எதிர்நோக்கி வேண்டுவோம். நடுத்தீர்வு செய்து நிலை வாழ்வு தர நீதி அரசராக வரவிருக்கும் இயேசு கிறிஸ்துவோடு என்றென்றும் வாழும் பெரும்பேறு பெற்றிட ஆயத்தத்துடனும் விசுவாசத்துடனும், ஒப்படைப்புடனும் முன்னேறுவோம்.

அருள்திரு. T. **ஜாண் பீற்றர்**

*சிறப்பு விழா அருளுரை*

# சங்கவிழா

| | |
|---|---|
| விப 3 : 14-26 | 2 கொரி. 9 : 1-9 |
| திபா. 24 | லூக். 21 : 1-4 |

***"ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும். மன வருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ கொடுக்க வேண்டாம். முக மலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்."** 2கொரி. 9 : 7*

"பொதுவாக நமது திருச்சபைகளில் வருடத்திற்கு இரண்டு முறை சங்கப் பண்டிகை கொண்டாடுகிறோம் (ஏப்ரல், அக்டோபர்) வழக்கமாக நிலங்களை வருடத்திற்கு இரண்டுமுறை பயிரிடுவது உண்டு. நிலங்களில் கிடைகின்ற விளைச்சலை எண்ணி கடவுளுக்கு நன்றி செலுத்துகின்ற ஒரு பண்டிகை தான் அறுடைப் பண்டிகை. இஸ்ரவேல் மக்களின் வாழ்க்கையிலும் கடவுள் மோசே வழியாக பல பண்டிகைகளைக் கொண்டாடவேண்டும் என்று கட்டளை கொடுத்திருக்கிறார் (விப. 23:16,17; விப. 34 : 22) இப்பண்டிகை தலைமுறைதோறும் செய்யப்படவேண்டிய கட்டளையாக லேவி 23: 10 14 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றும் திருச்சபை தொன்றுதொட்டே கொண்டாடுகிறது.

இப்பண்டிகைகளை நாம் ஏன்? எப்படிக் கொண்டாட வேண்டும் என்பதைக் குறித்துச் சிந்திப்போம்.

### *1. கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டியது நமது கடமை:*

திபா. 24 : 1

"மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்".

நாம் வாழ்கின்ற உலகில் வாழ்வதற்காகப் பயன்படுத்தும் வாழ்வாதரங்கள் (காற்று, நீர், நிலம்) அனைத்தும் கடவுளுடையன. லேவி 25:23 "நிலத்தை அறுதியாய் விற்றுவிட வேண்டாம். ஏனெனில் நிலம் என்னுடையது. நீங்களோ என்னைப் பொறுத்த வரையில் அன்னியரும் இரவற்குடிகளுமே".





கடவுள் ஒவ்வொரு நாளும் நம்மைப் பாதுகாத்து, உழைக்க பலன் தந்து வழி நடத்துகிறார் (திப. 14 : 17).

இஸ்ரவேல் மக்களுக்கு கடவுள் கொடுத்த கட்டளைகளுள் ஒன்று அறுவடைப் பண்டிகையைக் கொண்டாடுதல். ஏனெனில் அவர்களின் வாழ்க்கையில் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்தபோது எகிப்தியர்களின் நிலங்களைப் பயிரிடுகிறவர்களாக இருந்தனர். உழைப்புகேற்ற பலனைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. கடும் வேலையால் அவர்களை ஒடுக்கி அடிமைகளாகச் (விப. 1 : 11) செயல்படுத்தினார்கள். இப்படி அடிமைகளாக இருந்த மக்களுக்கு கடவுள் மோசே வழியாக விடுதலை வாழ்வைக் கொடுத்து, கானானுக்குள் வழி நடத்துகிறார். கானானில் தங்களுக்கென விளை நிலங்களைப் பெற்றுக்கொண்டனர். தங்கள் உழைப்பின் வழிய பெற்ற நன்மைகளை எண்ணி கடவுளுக்கு நன்றி செலுத்தினர்.

நாமும் கடவுளுக்கு நன்றிப்படையல் படைக்க கடமைப் பட்டுள்ளோம். குமரி மாவட்டத்தில் நமது முன்னோர்கள் அடிமைகளாகவே வாழந்தனர். உயர்ஜாதி மக்கள் எல்லாவற்றையும் அனுபவித்தார்கள். மேனாட்டு மிஷனெரிகளால் கிறிஸ்துவாகிய நற்செய்தியைப் பெற்று சுதந்தரமாக வாழ்கின்றோம். இதை எண்ணி கடவுளுக்கு நன்றிசெலுத்த கடமைப்பட்டுள்ளோம்.

### ***கடவுளுக்கு எப்படிக் கொடுக்கவேண்டும் ?*** லூக் 21:3

"இந்த ஏழைக் கைம்பெண் எல்லாரையும் விட மிகுதியான காணிக்கை போட்டிருக்கிறார் என உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்".

கடவுளுக்கு கொடுப்பது என்பது கொடுப்பதின் மூலம் நமது தேவைகளில் எதையாவது குறைத்தும் கொள்ளும் அளவிற்கு கொடுப்பது. நமது தேவைகளுக்குப் போகக் கொடுப்பது என்பது ஈகை அல்ல. அது பிச்சை. கடவுள் நம்மிடம் பிச்சை கேட்பவரல்ல. திருப்பாடல் 50: 12 "எனக்குப் பசியெடுத்தால் நான் உங்களைக் கேட்கப் போவதில்லை".

நமது வீட்டிற்கு ஒரு சிறப்பு விருந்தினர் வருகிறார் என்றால் சிறப்பான உணவுகளைச் சமைத்து, எவ்வளவு சிறப்பான வரவேற்பு கொடுக்கமுடியுமோ அவ்வளவு சிறப்பாகக் கொடுக்கிறோம். நமது சக்திக்கு மேலாக உபசரிக்க ஆசைப்படுகிறோம். ஏனென்றால் நாம் அவர்மீது செலுத்தும் அன்பிற்கு அடையாளம்.

வாழ்க்கை என்றால் என்ன என்பதும், எது பயனுள்ள வாழ்க்கை என்பதும் உனக்குப் புரிந்து விட்டது. உன் மனம் பக்குவநிலைக்கு வந்துவிட்டது. உன்னை நீ அடையாளம் கண்டுகொண்டாய்.

உயிரையே பிறருக்காக தியாகம் செய்யத் துணிந்து விட்ட நீ இனி ஒருபோதும் நான் எதற்கும் பயனற்றவன் என்று சொல்லாதே எனக் கூறி இளைஞரை அனுப்பி வைத்தார்.

மனத் தெளிவுடன் அவ்விளைஞர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

வாழ்க்கையின் வசந்தமே இளமைப் பருவம் ஆகும். ஒரு மனிதனுடைய முழுவாழ்வும் அர்த்தப்படுத்தப்படுவது இளைமைப் பருவத்தில்தான் என்றால் மிகையாகாது. அத்தகைய வலிமைமிகு இளமைப் பருவத்தில் இளையோர் எப்படித் தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வேண்டும்? எந்தெந்த தகவுகளில் தங்களைத் தரப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை அறிந்திருந்து அதை நோக்கி வாழ்வைச் செலுத்தினால் இளமை பொருளுள்ளதாக விளங்கும்.

தூய பவுல் தன் உடன் பணிவிடைக்காரராகிய தீதோத்தேயுவுக்கு ஆலோசனையாக இளமைப் பருவத்தினன் என்று யாரும் உன்னைத் தாழ்வாகக் கருதாத படி நற்றகவுகளில் வளர ஆலோசனை கூறுகிறார்.

பொதுவாக, யூத, கிறிஸ்தவ அமைப்புகளில் தலைவர்கள் முதியவர்களாகவே இருந்தனர். அப்படிப்பட்ட சூழலில் இறைப் பணியில் ஈடுபடும் இளைஞரான தீமோத்தேயு மாதிரியாக விளங்கவேண்டும் என்கிறார் பவுலார்.

***1. பயிற்சி பெறு :*** (I திமொ. 4:7)

“உலகப் போக்கிலான புனைகதைகளையும் பாட்டிக் கதைகளையும் விட்டுவிலகு. இறைப் பற்றில் நீ வளரப் பயிற்சி செய்”.

வீர விளையாட்டுகளுக்கும், போட்டிகளுக்கும் பேர்போன கலாச்சாரம் கிரேக்க, உரோமைக் கலாச்சாரங்களாகும்.

சிலவேளைகளில் குற்றம் புரிந்தோருக்கு வழங்கப்படும் தண்டனை வீரவிளையாட்டுகளில் பெறும் வெற்றியைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

இதை அடிப்படையாக வைத்து பவுலார், ஒருவன் விளையாட்டில் வெற்றிபெற முறையான பயிற்சி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே போன்று கிறிஸ்தவ சான்றிற்கு, இறைப்பணி முன்மாதிரிக்கு இறைப்பற்றில் வளருவதற்கான பயிற்சி இன்றியமையாதது என்கிறார்.

கிரேக்க, உரோமைக் கலாச்சாரம் பழம்பெரும் புராணங்களையும், இதிகாசங்களையும் புனைவுகளையும் உள்ளடக்கியதாகும். இப்படிப்பட்ட புனைகதைகளையும் பாட்டிக்கதைகளையும் விட்டு விலக அறிவுரை வழங்குகிறார்.

இப்படிப்பட்ட நிலையைத் தற்காலத் திருச்சபையிலும் நாம் காணமுடியும். இன்று சபைகளில் பாட்டிக்கதைகள் இல்லாவிட்டாலும் போட்டிக்கதைகள் பெருகி வருவது கவலைக்குரியது.

இப்படிப்பட்ட தீமைகள் இளையோரைப் பாதிக்காதவாறு அவர்கள் திருமறைப் படித்தல், தியானித்தல், முன் மாதிரியாக வாழ்தல், ஜெபித்தல் போன்ற நற்பண்புகள் வாயிலாக இறைப்பற்றில் வளர்வதற்காக பயிற்சியைப் பெறமுடியும்.

***2. வளர்ச்சி பெறு :*** (திமொ. 4:6)

"…..நீ பின்பற்றி வருகிற விசுவாசக் கோட்பாடுகளாலும் நற்போதனைகளாலும் வளர்ச்சி பெறுவாய்".

திருத்தூதுவர்களுடைய காலத்திற்கு பிறகு எழும்பிய சில கள்ளப் போதகர்கள் விசுவாசத்திலிருந்து மக்களை இடறிப் போகச் செய்தனர்.

திருமணம் தடைசெய்யப்பட்டது. சில உணவுகளைத் தவிர்க்க கட்டாயப்படுத்தப்பட்டனர். உடல் தீயோனிடமிருந்து வருகிறது. ஆன்மா கடவுளிடம் இருந்து வருகிறது. குழந்தைப் பேறு என்பது தவறானது என்று போதித்தனர். (I திமொ. 4: 1-5)

இப்படிப்பட்ட கள்ளப் போதககங்களால் திருச்சபையில் குழப்பம் நிலவியது. கடவுளின் மேன்மைமிகு படைப்புத் திட்டத்திற்கு எதிரான இந்த கள்ளப் போதகத்தை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்பது பவுலின் அவாவாகும்.

இப்படிப்பட்ட குழப்பங்களைப் போக்க திருமறையில் சொல்லப்பட்டுள்ள கடவுளின் படைப்புத் திட்டத்தை எடுத்துக் கூறி விசுவாசிகளை வலுப்படுத்த பவுல் ஆலோசனை கூறுகிறார்.

அப்படி விசுவாசிகளை வலுப்படுத்த வேண்டுமென்றால் நீயும் அந்த இறைக்கோட்பாடுகளிலும் நற்போதனைகளிலும் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்கிறார் (I திமொ. 4:6)

பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டது. பேச்சு வார்த்தையின் பலனாக அனைவரும் ஒருமைப்பட்ட பின் எல்லா போதகர்களும் பேராயர் ஆளுகை முறையான போதகாபிஷேகம் பெற வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்குமுன் வேறு பாரம்பரியங்களின்படி போதகாபிஷேகம் பெற்றவர்கள் நியாயமான போதகர்கள் என ஒப்புக் கொள்ளப்படல் வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

1930-இல் வெஸ்லியன் மெதடிஸ்ட் தலைமைச் சங்கம் ஐக்கியத் திட்டத்திற்கான சம்மதம் அளித்தது. எனவே 1943-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மெதடிஸ்ட் சபை முதன் முறையாக ஒருமைப்பாட்டுக்கு இசைந்தது.

1944-இல் தென் இந்தியாவிலுள்ள ஆங்கிலிக்கன் சபைகள் ஐக்கியத்தை ஆதரித்தன. 1945-இல் பொது ஆலோசனை மன்றம், தென் இந்தியாவிலுள்ள நான்கு பேராயங்கள், இந்தியா, பர்மா, இலங்கை சபைகளிலிருந்து பிரிந்து ஐக்கிய சபையில் சேர அனுமதித்தது. தென் இந்திய ஐக்கிய சபை 1946-இல் ஐக்கியத்தில் சேர உடன்பட்டது. ஆகவே 1947 செப்டம்பர் 7-இல் சென்னையிலுள்ள புனித ஜார்ஜ் பேராலயத்தில் தென் இந்தியத் திருச்சபை உருவானது.

இப்போது தென் இந்தியத் திருச்சபையில் கோயம்புத்தூர் டோர்ணக்கல். கிழக்கு கேரளா, கார்பிளா, கன்னியாகுமரி, கரிம்நகர், மத்திய கர்நாடகா தென் கர்நாடகா, வடகர்நாடகா, கிருஷ்ணா கோதாவரி, மத்திய கேரளா, சென்னை, மதுரை ராம்நாடு, மேதக், நந்தியால், வடக்கு கேரளா, ராயலசீமா, தென் கேரளா, திருச்சி தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாசரேத், வேலூர் ஆகிய இருபத்தி இரண்டு பேராயங்கள் உள்ளன.

தென் இந்தியத் திருச்சபையின் உதவியில் மார்த்தோமா சபையும் வட இந்தியத் திருச்சபையும் உள்ளன.

தென் இந்தியத் திருச்சபையின் திறவுகோல் சொற்கள்

| ஒருமைப்பாடு | நற்செய்திப் பணி | சாட்சி |
|---|---|---|
| Unity | Service | Witness |

அருள்திரு. **எஸ். ஐசாயா**





### 3. கருத்தாயிரு : (Iதிமொ. 4:16)

“உன்னைப் பற்றியும் உன் போதனையைப் பற்றியும் கருத்தாயிரு; அவைகளில் நிலைத்திரு”.

இளைஞனாகிய தீமோத்தேயுவின் இன்றியமையாத பணி என்ன என்பதை பவுல் I திமொ. 4:13-16 வரையிலுள்ள வசனங்களில் வரையறுக்கின்றார்.

மறைநூலைப் படித்துக் காட்டுதல், அறிவுரை வழங்குதல், கற்பித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தவும் இவற்றில் கருத்தாயிருக்கவும் ஆலோசனை வழங்குகிறார்.

வயது மூப்பின் காரணமாகவும், உடல்நிலை காரணமாகவும், பணிப்பளு காரணமாகவும், விசுவாசிகள் திருமறை வாசிப்புக்கு முக்கியத்துவம் தருவதை விட்டு விடுவதுண்டு.

அத்தகையோர்க்கு திருமறையைப் படித்துக் காட்ட இளையோர் வலியுறுத்தப்படுகின்றனர்.

பவுல் அழுத்தமாகச் சொல்வது உன்னைப் பற்றியும் உன் போதனைகளைப் பற்றியும் கருத்தாயிரு.

இந்த இரண்டும் இறைப்பணியில் இன்றியமையாதவை என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

இளையோரே இளைமைப் பருவம். இறைவன் நமக்கு அருளிய கொடை. இப்பருவத்தில் இறைப்பற்றில் வளரப் பயிற்சி பெற்று இறைவார்த்தையின் வாயிலாக பற்றுமையில் வளர்வு கண்டு அவற்றை நிறைவேற்ற படிப்பிக்கக் கருத்தாயிருப்போம்.

திரு. A. **கால்வின் தேவநேசன்**

# தென்னிந்தியத் திருச்சபை தொடக்க வரலாறு

20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அனைத்து உலகத் திருச்சபைகளிலும் மிஷனரி இயக்கங்களிலும் சபைகளின் ஐக்கிய உணர்வு உருவாகியது. இதற்கு 1910-ஆம் ஆண்டு எடின்பரோவில் நடைபெற்ற மிஷனரி சங்க ஆலோசனைக் கூட்டத்தின் உணர்வு பூர்வமான சிந்தனைகள் ஆகும். அதில் பங்குபெற்ற இந்திய போதகர்களான K.T. பால் V.S. அசரிய ஆகியோருடைய எழுச்சிமிக்க பேச்சுக்கள் அனைத்துலக திருச்சபைகளிலும் சபை ஒருமைப்பாட்டுணர்வை உருவாக்கிற்று. அமொரிக்காப் பல சபைகள் இணைந்து 1957-இல் கிறிஸ்துவின் ஐக்கிய சபை (United Church of Christ) என ஐக்கியம் உருவாயிற்று.

1832-இல் இங்கிலாந்தில் சபை ஆட்சியாளர்கள் ஒன்றிணைந்து வேல்ஸ் சபை ஆட்சி ஒருமைப்பாடாக Congregational Union of England and Wales என்ற ஐக்கியம் உருவாயிற்று.

1941-இல் ஜப்பானில் ஜப்பானிய மூப்பர் ஆளுகை சீர்திருத்த சபையும் ஜப்பானிய மெதடிஸ்ட் திருச்சபையும் ஒருமைப்பட்டு ஜப்பானில் கிறிஸ்து சபை (The Christ Church of Japan) என்ற ஐக்கியம் உருவானது.

1900-ஆம் ஆண்டு ஸ்காட்லாந்தில் ஐக்கிய சுயாதீன சபை (Union Free Church of Scotland) உருவாயிற்று.

1946-இல் பிலிப்பையின்ஸ் தீவுகளிலுள்ள மூப்பர் ஆளுகை சபை, சபை ஆளுகை சபை, ஐக்கிய சகோதரர் சபை, கிறிஸ்துவின் சீடர் சபை, கிறிஸ்துவின் ஐக்கிய சபை, மெதடிஸ்ட் சபை, சுயாதீன் மெதடிஸ்ட் சபை, வேறு சில சபைகளும் சேர்ந்து பிலிப்பையின்ஸ் இவாஞ்சலிக்கன் சபை (Evangelican Church of Philypeans) என உருவாயிற்று.

தென் இந்தியாவில் சபை ஆட்சி, மூப்பர் ஆட்சி, பேராயர் ஆட்சி, ஆகிய பாரம்பரியங்கள் உள்ள சபைகள் ஒருமைப்பட்டது இந்திய திருச்சபையின் வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாகும். இங்கு சபை ஒருமைப்பாடு பல்வேறு வகைகளில் வெளிப்பட்டது. இந்தியாவில் பல மிஷன்கள் பணி செய்து வந்தன. S.P.G. (Society for propagatting Gospel) CMS (Church Mission Service) முதலிய மிஷனரி சங்கங்கள் கல்கத்தா, பம்பாய், சென்னை, திருநெல்வேலி ஆகிய பட்டணங்களிலும் வெஸ்லியன் மிஷனரி சங்கம் திருச்சிராப்பள்ளியிலும், ஸ்காட்லாந்து





மிஷனரி சங்கம் இந்தியாவில் முக்கிய பகுதிகளிலும் அமெரிக்கன் மிஷன் பம்பாய், மதுரை, இலங்கை ஆகிய இடங்களிலும் பேசிப் மிஷன் மங்களூரிலும் வேலை செய்தன. இவ்வாறு பல மிஷன்களின் பாரம்பரிய அடிப்படையில் கிறஸ்தவர்கள் தனித்தனி இயக்கங்களாக செயல்பட்டு உருவாக்கப்பட்ட சபைகள் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற எண்ணம் அதிகரித்தது.

இதனால் சபைகள் ஒன்றோடு ஒன்று ஒத்துழைப்பு கொடுக்கவும் நெருங்கிய ஒருங்கிணைப்பும் தேவை என உணர்ந்தன. இந்த ஒருமைப்பாட்டு உணர்வின் அடிப்படையில்.

1901-இல் ஸ்காட்லாந்து சுயாதீன சபையும், அமெரிக்காவின் மூப்பர் ஆளுகை சீர்திருத்த சபையும் தென் இந்தியாவில் ஒருமைப்பட்டன. அதன்பின் இந்தியாவிலுள்ள மூப்பர் ஆளுகை சபைகள் 1904-இல் ஒருமைப்பட்டன.

1906-இல் சபை ஆளுகை நிலையிலுள்ள லண்டன் மிஷன் சபைகளும், மதுரை அமெரிக்கன் மிஷன் சபைகளும் ஒன்றாய் சேர்ந்தன.

1908-இல் தென் இந்திய ஐக்கிய சபை SIUC (South Indian United Church) ஏற்பட்டது.

1910-இல் இவ் ஐக்கியத்தில் தென் இந்தியாவிலுள்ள ஸ்காட்லாந்து சபையைச் சார்ந்த இரு சபைகளும் 1919-இல் மலபாரிலுள்ள பேசில் இவாஞ்சலிக்கல் மிஷன் சபைகளும் சேர்ந்தன.

1919-இல் S.P.G (Society for propagating Gospel) மற்றும் CMS(Church Mission Society) ஆகிய சபைகளுடனும், இந்திய, பர்மா, இலங்கை சபைகளுடனும் (Church of India Burma and Ceylon) தென் இந்திய ஐக்கிய திருச்சபை ஒருமைப்பாட்டுக்கான ஒப்பந்தங்களை செய்ய கலந்தாலோசித்தன. ஆஸ்திரேலிய சபையிலிருந்தும், தென் இந்திய ஐக்கிய சபையிலிருந்தும் 33 உறுப்பினர்கள் தரங்கம்பாடியில் கூடினர். அவர்களில் ஒரு அமெரிக்கரையும், ஒரு ஐரோப்பியரையும தவிர ஏனையோர் அனைவரும் இந்தியர்களாகவே இருந்தனர். அவர்களில் தோரணக்கல் பேராயர் V.S. அசரியா இடம் பெற்றிருந்தார். அவர்கள் தரங்கம்பாடியில் கூடி ஒருமைப்பாட்டிற்கான ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டனர்.

1920-ஆம் ஆண்டு முதல் தென் இந்திய ஐக்கிய சபையிலும் ஆங்கிலேயர்கள் சபையிலுள்ள பிரதிநிதிகள் ஆண்டுதோறும் கூடி ஐக்கியத்திற்கான திட்டத்தை ஆய்வு செய்து வந்தனர். 1925-இல் தென் இந்தியாவிலுள்ள வெஸ்லியன் மெதடிஸ்ட் சபையும், ஐக்கியத்திற்கான